பிசுமில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
30 MAY 1927

இஃது.

# இறவுசுல்கூல் படைப்போர்

## வசன காவியம்.

காயற்பட்டணம்

கண்ணகுமது மகுதூம்பிள்ளையவர்கள் குமாரர்

### மகுதூமுகம்மதுப் புலவர்

அவர்களாலியற்றியது.

இதன் காப்பிரைட் அதிகாரத்தை
ஷெ மக்தூம்புலவர் அவர்களின் சந்ததியார்களிடம் கிற
யம் பெற்றிருந்த லிவாவுல்இஸ்லாம் ஷேய்க்மீரா
முகியித்தீன் ஆலிம்சாகிபிடம் 22-3-27-யில்
மொ. அ. ஷாஹுல்ஹமீது லெப்பை
கிறயம்பெற்று.

தனது.

ஷாஹுல்ஹமீதிய்யா அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப்பதிப்பு.

ஒன்பதாம் பதிப்பு.

1927

இதன் விலை] Registered Copy Right [ரூ. 1—8

# விளம்பரம்.

(மார்க்க ஒழுக்கங்கள்)

| | | | |
|---|---|---|---|
| அல்மகர்முல் முஸ்லிமீன் தக்மிலாஉடன் | | | |
| ஷாபீயீ | 0 | 10 | 0 |
| ஷை ஹனபீ | 0 | 10 | 0 |
| அதபுமாலை சுத்தப்பதிப்பு | 0 | 10 | 0 |
| இஸ்லாத்தின் சிறப்பு | 0 | 10 | 0 |
| இரத்தின விலாசம் | 0 | 10 | 0 |
| கியாமநாள் விசகளம் | 0 | 6 | 0 |
| கீமியாயெ ஸஆதத் 1-வது வால்யம் | 1 | 8 | 0 |
| ஷை 2.வது வால்யம் | 1 | 12 | 0 |
| ஷை 3-வது வால்யம் | 1 | 14 | 0 |
| ஷை 4வது வால்யம் | 2 | 0 | 0 |
| ஷை 4-பாகங்களும் சேர்ந்த லெதர் கலிகோ பைண்டு | 7 | 0 | 0 |
| கீமியாயெ ஸஆதத்து அரபுத்தமிழ் 1-வது வால்யம் | 3 | 4 | 0 |
| குலிஸ்தானென்னும் பூங்காவனம் கிளேஸ் காகிதம் | 1 | 8 | 0 |
| தரீகத்துல் இஸ்லாம் தரீகுன்னஜாத் ஹனபீ | 1 | 0 | 0 |
| தரீக்குல் ஜன்னு | 0 | 14 | 0 |
| நஸீகத்துல் இஸ்லாம் ஹனபீசுத்தப் பதிப்பு | 0 | 8 | 0 |
| ஷை ஷாபீ சுத்தப்பதிப்பு | 0 | 8 | 0 |
| நஸ்ஹுல் ஹமீது வபத்ஹுல் மஜீது | | | |
| கலிகோ பைண்டு | 4 | 0 | 0 |
| ஷை தோல் பைண்டு | 4 | 8 | 0 |
| ஷை 80-பவுன் தோல் பைண்டு | 5 | 0 | 0 |

78641

பெற்றுக்கொள்ளுமிடம்:—

எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு சன்ஸ்,

ஹமீதிய்யா பில்டிங்க்ஸ். நெ 20. ஹைரோட்.

திருவல்லிக்கேணி மதராஸ்.

# சரித்திரம் வந்தவழி

சிறப்புப் பொருந்திய முகம்மது நபியவர்கள் மக்காநகரில் நின்றெழுந்து மதீனாநகரிற் போயிருந்து தீனுல்லிசுலாமென்னும் மெய்மார்க்கப் போதனைசெய்து இராஜ பரிபாலனம் நடத்திக்கொண்டு வருங்காலத்தில் நடந்த இந்தச் சரித்திரத்தை முதலில், செய்யிதவும சென்னு மகாபெரியோர்கள் அறபுப் பாஷையிற் செய்தார்களதனைக்,

கல்வியிலே தேர்ந்தவர்களான முகம்மதிபுனு சுஹறாக்கென்பவர்களும் இபுனு அப்பாசென்பவர்களும் திடப்படுத்தினார்கள். பின்னாதனைக் கல்வியிற் சிறந்த செய்யிதபுல் ஹசனுல் புஹாரியென்னும் பெரியோர்கள் அவ்வறபுப் பாஷையாலேயே பைத்தென்னுங் கவிதையாகச் செய்தார்கள். பின்னர் மேற்சொல்லிய செய்யுட்கள் யாவையும் பார்த்து சில கனவான்கள் ஆலிம்களென்னும் வேதசாஸ்திரிகள் தமிழ்ப்பாஷையில் மொழிபெயர்த்தார்கள்.

அந்த மொழிபெயர்ப்புரையையும் மலையாள மண்டலம் பூவாற்றில் வசித்திருந்த குஞ்ஞாமுசு லப்பையாலிம் புலவர் ஹாஜியாரவர்கள் பாடியிருந்த புராணத்தையும் பரிசோதித்து மூமின் முசிலிமான நமது நேசர்கள் யாவரும் இலேசாக வாசித் தறிந்துகொள்ளும் பொருட்டு ஹிஜ்ரி 1295ஷு றமலான் மாதம் காயற்பட்டணம் கண்ணகுமது மகுதூமுகம்மதுப் புலவர்வர்களால் செய்யப்பட்ட இறவுசுல்கூல் வசனகாவியம்.

பிசுமில்லா ஹிர்றஹ்மா நிர்றஹீம்.

# அச்சிட்ட வரலாறு.

தானேதானாகத் தனக்கோர் இணையுந், துணையும், இறப்பும், பிறப்பும், பெண்டும், பிள்ளையும், ஊணும், உறக்கமும், அசதியும், மறதியும், ஆணும், பெண்ணும், அலியும், உறவும், கிளையும், இன்பமும், துன்பமும் எப்போதுமில்லாத துப்புராவாகிய ஒப்பற்ற றப்பில் ஆலமீனான அல்லாகுத் தஆலாவென்னும் வலியகடவுள் தன்னொளி பினாலுண்டாக்கி முத்தாகவும் கிந்தீலென்னும் விளக்காகவும் மபிலாகவுந் தெரிசித்த தாஜுல் அன்பியா ஹபீபுறப்பில் ஆலமீன் நபியுற்ற றகுமத்து முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இலட்சத்திருபது நாலாயிரம் நபிமார்கட்கும் முந்நூற்றுப் பதின்மூன்று முறுசலான நபிமார்கட்கும் காத்திமுல் லன்பியாவாக நபி இபுறுஹீம் அலைகிஸ்ஸலாமவர்கள் வங்கிஷவழியாய் அதுனான் கிளையில் அப்துல்முனாபு அவர்கள்மகனார் ஹாஷிம் அவர்கள்மகனார் அப்துல் முத்தலீபு அவர்கள் மகனார் தத்துவகலைக்கியான வுத்தமாகிய அப்துல்லா அவர்கள் புத்திரசிகாமணியாய்.

உத்தமபத்தினி ஆமீனாவர்கள் கருவிலமைந்து திருமக்கமாநகரில் அனேக காரணத்துடனே யமைந்து கூறுல்ஹீன்களும்ஆசியாமறியமென்ற இரண்டு கன்னிகைகளான கற்புநாயகிகளும், மருத்துவமுதலிய ஏவற்பணிவிடைசெய்யச் சுன்னத்துஞ்செய்து தொப்புளுமறுத்துத் துடக்கொன்று மில்லாமற் றப்புரவாக இடதுகையினால் மாணியை மறைத்தும் வலதுகையை முழந்தாளிற்கு மேலே சுட்டுவிரலென்னுங் கலிமாவிரலை நீட்டிச் சுஜூதிட்டும் அண்டகோள மெண்டிசையும் ஒளிபிரகாசிக்கத்தகாத காதவழி கஸ்தூரிகமகமென்று மணக்கப் பிறந்தபோது உடனே அல்லாகுத்த ஆலாவினுத்தரவின் பிரகாரம் ஜிபுரீலலைகிஸ்ஸலாமவர்கள் சுஜூதெடுத்துக் கொண்டுபோய் ஈரேழு பதினாலுலோகங்களுஞ் சுற்றிப்பார்த்துச் சொர்க்கலோகத்தாற்றில் நீராட்டித் தலைக்கி நெய்யிட்டுக் கண்ணுக்குச் சுறுமாவிட்டு ஆமீனாவர்களுக்கு உபகாரமாக வருந்திப் பணிவிடைசெய்துக்கொண்

டிருக்கும் ஸப்பாவென்னும் தாயின் மடிமிசை வைத்துப் போயினபின் னர் ஹனென்னுமூரிலுண்டான பஞ்சத்தாற் கனவுகண்டு திருமக்க மாநகரத்திற்குவந்த அலிமாபாலுண்டு வளர்ந்து அனேககாரணத்து டனே நாற்பதாம் வயதிலே புறுக்கான் வேதமுங் கிடைக்கப்பெற்று அன்பத்துமூன்றும் வயதிலே திருமதீனமா நகர்போய்க்காபிரீன்க ளென்னும் இருளையோர்சூரியப்பிரகாசமாகஅறுத்தொதுங்கி அரசியல் புரிந்துவருங்காலத்தில் நடந்த சரித்திரங்களனேகமுண்டும் அவைகளி லொன்றாகிய இந்த இரவுசுல்கூலின் படைப்போரை முன்னோர்களால் அறபுப்பாஷையி லிருந்தவைகளைத் தமிழால் மொழிபெயர்த்திருந்த வுரைகளைக் கொண்டும் குஞ்ஞுமூசு லெப்பையாலிம் புலவர்காஜியார வர்கள்பாடி நாமச்சிட்டுப் பிரசுரஞ் செய்த புராணத்தைக்கொண்டும்,

நமது உடற்பிறந்தார்களாகிய மூமின் முசிலிமான சகலருக்கும் மிகவுமிலேசாக விளங்கும்பொருட்டு வழக்கத் தமிழினலே வசனகா வியமாக்கித் தரவேண்டுமென்று சிலகனவான்களுந் தனவான்களு மிகவு நட்புற்றுக் கேட்டுக்கொண்டமையால் ஹிஜுறத்து 1295ஞ றமலான்மாதம் காயற்பட்டணம் இபுறுகீம்சாகிபவர்கள் குமாரர் அகு மது மீராசாகிபவர்கள் மருதூ முகம்மதவர்கள் குமாரர் கிலுறு முகம் மதவர்கள் நயினாமுகம்மதவர்கள் குமாரர் சாகிபுத் தம்பியவர்கள், மீராத்தம்பியவர்கள், முகம்மதலியவர்கள், காலங்குடியிருப்பு உசைன் குட்டி அகுமதுமீரா அவர்கள் குமாரர் பக்கீர் முகியித்தீனவர்கள் ஆகிய இவர்கள் அன்புற்றுச்செய்த பொருளுதவியைக்கொண்டு அவர்களுக்கோர் பதிப்பு அச்சிட்டுக்கொடுத்த பிறிதியிற்போன்றவை களைச் சீர்திருத்தி அல்லாகுத்தஆலாவின் அருளுதவியினாலும் முகம் மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் கிருபாகடாட்சத்தினாலும் முகியித்தீனப்துல்காதிரு சாகிபாண்டவர்கள் துஆப்பேற்றினாலும் மற்று மூமின் முசிலிம்க ளனைவோர்களின் துஆப்பறக்கத்தினாலும் ஆறுமுறை சென்னை இட்டா-பார்த்தசாரதிநாயுடு செய்த பொருளுத வியைக்கொண்டும் கொழும்பிற் புத்தகவியாபாரஞ் செய்யும் நெ. வா. காதிறுநெயினாலெவ்வை அவர்கள்கேட்டுக்கொண்டமையாலும் ஹிஜு றத்து 1315ஞ ஷாபான்மீ அச்சிட்டனம். அல்லாகுத்தஆலா எல்லாருக்கும் நற்கிருபை றகுமத்துச்செய்வானாகவும் ஆமீன், ஆமீன், யாறப்பல் ஆலமீன்.

## அவையடக்கம்.

—(*)—

இரட்டை யாசிரிய விருத்தம்.

பொற்பூ ஷணத்திலே பொடியிடுதல் போலுமூண்
போசனமதற் குப்பினைப்
போடுவது போலுமுயர் பட்டோடும் வெண்ணூற்
பொருத்துவது போலுமிக்க
விற்பாவு வயிரத்தி னொடுபளிங் கினைவைத்து
விலைமதிக் கின்றபோலும்
விவேகஸ்த ரோடுமூடர் வாயாடல் போலுமா
வேங்கையி னிரைச்சன் முன்னே
கற்பாரி னின்றுநரி யூளையிடல்போலுமே
காண்கினும் மெனது புன்சொற்
காளமே கக்குடையி னீளொளி பரப்பவார்
முகம்மது சரிதா மதனுற்
செற்போ தனைத்திறமை வித்தையா டம்பாச்
சுசனைக ளுள்ள புலவோர்
துதியோடு கொள்வரெனு மாசை பெரி தாகித்
தொகுத்துரை வகுத் தனனரோ.

இங்ஙனம்,

காதிரி-சென்னை முகம்மதிய புத்தகபரிபாலனத்தலைவர்

காதிரி, கண்ணகுமது மகுதூ முகம்மதுப்புலவர்.

# இறவுசுல்கூல் படைப்போர் வசனகாவியம்

## சருக்க அட்டவணை


| பக்கம். | சருக்கம். |
|---|---|
| 2 | பாயிரம். |
| 5 | முதியாள்வந்த சருக்கம். |
| 17 | அறுவாய்ம்மைச்சருக்கம். |
| 41 | வகிவரு சருக்கம். |
| 49 | அலியார் பிரயாணச் சருக்கம். |
| 51 | சுபைறு சிறைபடு சருக்கம் |
| 63 | அப்துலாத் தீமான்கொண்ட சருக்கம். |
| 75 | சுஹைறுல்ஆமி றீமான்கொண்ட சருக்கம். |
| 89 | அலியார் மழையழைத்த சருக்கம். |
| 100 | ஜின் விருந்திடு சருக்கம். |
| 103 | சுந்தலத்து வதைச் சருக்கம். |
| 119 | உக்காசு வதைச் சருக்கம். |
| 129 | முகல்கீல் போருக்கெழுந்த சருக்கம். |
| 151 | றகுஹுல்லா படைவந்த சருக்கம். |
| 163 | அறம்மிபுனுவதையான் வருசருக்கம். |
| 174 | அறம்மிபுனுவதையான் போர்புரி சருக்கம். |
| 179 | அறம்மிபுனு மகுதீக்கரீபுவரு சருக்கம். |
| 183 | அஷறபத்து சிறைபடு சருக்கம். |
| 185 | அறம்மிபுனுவதையா னீமான்கொண்ட சருக்கம். |
| 191 | அஷறபத் தீமான்கொண்ட சருக்கம். |
| 193 | அகிழ்கடந்த சருக்கம். |
| 201 | சுகைறுல் ஆமிறைவெட்டுமெப்துத்தாறுவதைச் சருக்கம். |

பக்கம். சருக்கம்.

205—குசுஆவரு சருக்கம்.
214—வுாரிதை அம்றுவதைத்த சருக்கம்.
218—அலியாரும் இறவுசுல்கூலும் போர்புரிசருக்கம்.
228—கடந்ததச் சருக்கம்.
231—முக்ல்கி லீமான்கொண்ட சருக்கம்.
241—அம்றும், அப்துல்லாவும், சுபைறை, பர்ரூசைக் கொணர்ந்த சருக்கம்.
262—சிலாஜிலீமான்கொண்ட சருக்கம்.
265—இபுலீசுபுத்து கொணர்ந்த சருக்கம்.
271—புத்துபடைக்குப்போன சருக்கம்.
279—சல்காபுறப்படு சருக்கம்.
290—சல்காபோர்புரி சருக்கம்.
308—ஜின்வதைச் சருக்கம்.
321—இக்கிரிமத்தும், ஐறுதீனு மீமான்கொண்ட சருக்கம்.
327—சதியெழுத்துச் சருக்கம்.
336—துஹாமத்து சிறைபடு சருக்கம்.
344—அலியார் கோட்டைபுக்கு சருக்கம்.
349—துஹாமத்து வதைபடு சருக்கம்.
352—இறவுசுல்கூல் வதைச் சருக்கம்.
348—றசூலுல்லா கோட்டைபுக்கு சருக்கம்.
369—றசூலுல்லா மதீனம்புக்கு சருக்கம்.

ஆகச் சருக்கம்-42.

சருக்க அட்டவணை-முற்றிற்று.

இந்த இறவுசுல்கூல்படைப்போர் வசனகாவியத்தை முன்னர் மும்முறை அச்சிட்ட பிரதிகளிற் போந்தவைகளைச் சுத்தமாக்கியும் சருக்கங்களின் வரலாறு சொல்லப்பட்ட ஒவ்வோர் விருத்தங்கட்கு வசனஞ்செய்தும் ஒழுங்காக அச்சிட்டிருக்கின்றனம்.

பிசுமில்லா ஹிர்றஹ்மா நிர்றஹீம்.

இஃது

நபிமுகம்மது சல்லல்லாகு

அலைகிவசல்லமவர்கள்
திருமக்கமா நகரில் நின்றெழுந்தருளியாகித்
திருமதீனமா நகரினுற்றுத், தங்கள் தீனில்லிசுலாம்
என்ற மெய்ம்மார்க்க அரசியல் நடாத்தி
வருகையில் நடந்த

# இறவுசுல்கூல் படைப்போர்

## வசன காவியம்.

முன்னர் அரபுப்பாஷையால்
செய்யிதி தவுமசு றலியல்லாகு அன்குஅவர்கள் கோத்த
கோவையை, முகம்மதிபுனி சுஹாக்கு றலியல்லாகு அன்குஅவர்
களும், இபுனு அப்பாசுறலியல்லாகு அன்குஅவர்களும்
முற்றுவித்தார்கள்.

---

அதைச் செய்யிதிஅபுல் அசனுல் பஹாரி றலியல்லாகு அன்குஅவர்கள்
பயித்தென்னுங் கவிதையாகச் செய்தார்கள், பின்னரிவை
கீழ் நோட்டமிட்டுச் சில கனவான்களான ஆலிம்க
ளென்னுங் கல்விமான்கள் தமிழில் மொழிபெயர்த்
திருந்த வுரையையும், குஞ்ஞமூசு லப்பை
ஆலிம்புலவர் ஹாஜியாரவர்கள் பாடிய
புராணத்தையும் பரிசோதித்து

---

மூமின், முசிலிமாகிய நமதுடற்பிறந்தான்மார்கள்
இலேசாகப் படித்தறிந்து கொள்ளும்பொருட்டு
கண்ணகுமது, மகுதூம்பிள்ளை யவர்கள் குமாரர்

**மகுதூமுகம்மதுப் புலவரவர்களால்**

வழக்கத் தமிழினுல் வசனகாவியமாகச் செய்யப்பட்டது.

### காப்பு.

### கலி விருத்தம்.

பூவும் வாசமும் போலெவ் வுயிரினு
மேவு மெந்த வினையினு மேவியார்
காவ லாளன் கருணை யெக்காலமு
மாவுலாவும் வளமரு ளல்குமே.

பிசுமில்லா ஹிற்றஹ்மா நிர்றஹீம்.

இஃது

# இறவுசுல்கூல் படைப்போர்

## வசன காவியம்.

## பாயிரம்.

### காப்பு.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

பூவுல கும்பர் மற்றும் புகழ்நபி முகம்மதன்பர்
தாவியல் றவுசுல்கூலின் றளமறுத் தவனை வென்ற
மாவியற் படைப்போர்தன்னை வசனகா வியமாய்ச் செய்யக்
கோவிய லெவைக்கு மேலாங் கொற்றவர் பணிதல்செய்வாம்.

### இதன் பொருள்.

பூலோகம், வானலோகமுதலிய மற்றெவ் வெவைகளும் புகழும் நபி முகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் அன்பாராகிய அசுஹாபிமார்கள், குற்றமாகிய செய்கையையுடைத் தான இறவுசுல்கூலென்னு மிராஜனுடைய படைகளையெல்லாம் வெட்டிக் கருவறுத்து, அவ்விராஜனையும்வென்ற மாட்சிமையுற்றுக் கீர்த்தி பெற்ற படைப்போரைக், குஞ்ஞுமூசுலப்பை ஆலிம்புலவரவர்கள் செய்தபுராண விருத்தச்செய்யுட்களை மொழிபெயர்த்து, யாவரும் இலேசாக விளங்கிக்கொள்ளும்பொருட்டு, வழக்கத்தமிழினால் வசன காவியமாகச்செய்ய, இராஜ ரீகங்களுக்கெல்லா மேலாம்பரமான இராஜரீகத்தையுடைய வெற்றியான அல்லாகுத்தஆலாவை வணங்குகின்றோம்.

### சரித்திர வசனம்.

எல்லா வுலகங்களையு முயிர்களையும்படைத்து நான்கு புகழுக்கு முரித்தாகி யரசாட்சிசெய்யும், வல்ல காரணனாகிய அல்லாகுத்தஆலா வுடைய வொளியிலுண்டாகி, நபிஆதம் அலைகிஸ்ஸலா மவர்கள் ஆண் மக்கள் மக்கள் வழியாகவந்த, நபி இபுறாகீம் அலைகிஸ்ஸலாமவர்கள் மகனார், நபி இசுமாயீல் அலைகிஸ்ஸலாமவர்கள் கோத்திரத்திலுற்ற, அதனான்கிளையில் அப்துல்முனாபு அவர்கள்மகனார்ஷாஹீம், அவர்கள்

மகனார் அப்துல் முத்தலிபு, அவர்கள்மகனார் யுத்தகளத்திலெதிர்த்த சத்துருக்களைக் கொத்திப்பிளந்து வெற்றிகொள்ளும் வாளாயுதமேந்திய அப்துல்லா, அவர்களினெற்றியில் முத்தொளியாயிலங்கி அவ்வப்துல்லாவின்மனைவி கற்பு, பொறுமை, கல்வி முதலிய எல்லாநலனுமுள்ள கன்னிகையாகிய ஆமீனாவவர்கள் வயிற்றைக் கருவிலுற்றுப் பொருந்தி, முன்பின் அனேககாரணத்துடனும், பூரணமதிபோலவுதயஞ்செய்து தோற்றிய தோன்றலான நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள், தங்களுக்கு, இருபத்தைந்தாம் வயதில், மருமொய்த்த கூந்தலுந், திருமொய்த்தமேனியுமுடைய குருபத்தினி கதீஜா நாயகியைக் கலியாணஞ்செய்து, தையிபுதாகிறு, இபுறாகீம் என்ற ஆண்பிள்ளைகள் மூன்றுபேரையும், றுக்கையா, ஸைனபு, உம்முகுல்தூம், பாத்திமத்துஸ்ஸுகுறா காத்தூனே ஜன்னாவென்னும் பெண்பிள்ளைகள் நான்குபேரையும்பெற்று, நாற்பதாம் வயதில் நபிப் பட்டமும், புறுக்கானென்னும் வேதமும் பெற்று வாழ்ந்திருந்து, தங்கள் பிராட்டியார், கதீஜா நாயகியவர்களிவ்வுலகத்தைவிட்டுச் சுவர்க்கலோகத்திற் கெழுந்தருளியான பின்னர், ஐம்பத்துநான்காம் வயதில், அல்லாகுத்த ஆலாவென்னும் கடவுளுடைய வொளி இடைவிடாமல்இறங்குந்தலமாகியும், மலாயிக்கத்துகளென்ற வானவர்கள் காவலாக நாளொன்றிற்கு, எழுபதினாயிரம் பெயர்களிறங்கி வலம், இடஞ் சுற்றிவரும் தலமாகியும், மனுடஜனனாதியர்கள் செய்தபாவம் நிவர்த்தியாகப் பிரதக்கணஞ்சுற்றிவருந் தலமாகியும், வானத்திலிருக்கும் பயித்துல் மகுமூரென்னும் பள்ளிவாயிலுக்கு நேராகியும், பூமியில் ஆதிமுதலிலுண்டாகிய தலமாகியும் விளங்கும், திருக்கருபத்துல்லா வென்னும் பள்ளிவாயிலுமிருக்கப் பெற்றுப், பூமிக்கெல்லா நடுத்தலமாகியும் பெருமையுற்றிருக்கும்.

திருமக்கமாநகரை விட்டெழுந்தருளியாகி, அறபுதேசத்திற்கோரரசாகியும், சிரசாகியு, முகமாகியுந், திலதமாகியுந் தன்னைச்சூழ்ந்த தண்ணீர்த்தடாகங்களுள்ள பூங்காவிகளில் இறங்குமேகத்தைக்கண்டமயிலினங்களாடக், குயிலினங்கள்காளமூத, வண்டினங்கள் தேனுண்டல கிரியிஞவிராகசங்கீதம்பாட, மற்றக்குருகினங்கள் சிரமசைத்துக் கேட்டிருக்க, ஆகிய இவ்வளம் பொருந்திச்சொர்க்கத்திற்கொப்பாகிய திருமதீனமாநகரத்திற்போயிருந்து, தங்கள் தீனில் விசுலாமென்னுமெய்ம்மார்க்க மெங்கும்பாவச்செய்து, பூரணசந்திரனுக்கொப்பாய்ச், சிரசில் அணியும்பாகையில் நட்சத்திரமொன்றிருந்து பிரகாசிக்கப்,

புரடியில் இலாஞ்வனையென்னுந்திருமுத்திராங்கம், எதிர்த்தவர்கண்களைக் கூசச்செய்யு மொளிவுபத்திபாய, மேகங்குடையிட்டுவர, முன்கண்டாரம் பின்னுங்காண, இராஜானுவாகுவென்ற முழங்காலுக்குங்கீழே நீண்ட வலதுகையும், சடலத்திற்கமழுங் கஸ்தூரிவாசனைத்துதும், ஏழுவானத்தை யூடுருவிப்பாய்ந்து அறுவைத்தொட்ட சிரசும், ஏழுபூமியையும் ஊடுருவிப் பாதலத்திலூன்றியபாதமும், புழுப்பூச்சொட்டாத பொற்பிரகாசமான மேனியும், மலஜலாதிகள் பிறர்காணுமலுமாகிய காரணமுதலான, அனேககாரணங்களோடு நவரத்தினராசிபதித்து, ஜெகமுற்றும் விலைகொள்ளும் சிங்காசனத்தில், அபூபக்கர் சித்திக்கு, அம்றிபுனுகத்தாபு, உதுமானிபுனு அப்பான், அலியிபுனு அபீத்தாலிபு, இந்நான்குகலீபாக்களென்ற முதன்மையரோடும், தல்ஹா, சுவிபர் அப்துர்றகுமான், சாது, சஹிது, அபூவுபைதா, இவ்வாறுபேரோடும், ஆகிய அஷறத்தமுபஷரீன்களென்ற பத்துமந்திரியார், பிரதானியர், படைத்தலைவர், அணித்தலைவருஞ் சூழ்ந்திருக்க, அம்றிபுனுவுமையத்துல்லமீரி, அப்துல்லா இபுனுசுல்சுகுனியென்ற இரண்டு தண்டற்றலைவரும் பாராக்கிரமஞ்சொல்லி நிற்க;

தாய், தந்தையாகிய இருகிளையினத்தாரும், ஒருமனமாகவொத்திருக்கப், படைகளான நாற்பத்தீராயிரம் அசுஹாபிமார்களென்ற தோழன்மாருஞ்சொல்லிக் கொழுகிநடக்க, வேங்கைப்புலியு, மானுங்கூடியொருதுறையில் மேய்ந்து நீருண்டு நிற்க, கூறுல்கீனென்ற தேவகன்னியர்கள் வெண்சாமரம் வீச இருந்து, நீதிசெலுத்திவரும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் தாங்கள் நடத்திவரும் நபிவளமைபோலோர்நாள், ஆண்டவனை வணங்கசெய்வித்த, அழகிய பயித்துல்லாவென்னும் பள்ளிவாயலில், விதியாக நாளொன்றிற்கு ஐந்துதரஞ் செய்யுங்கடனாகிய தொழுகையில், சுபுகுத்தொழுகையென்னுங் காலைநேரத்துக்கடனாகிய தொழுகையைத் தொழுதுமுடித்தபின்னர் அப்பள்ளிவாயிலின் வெளிமுகப்புத் தளத்திற்சாய்ந்திருந்து, தங்கள் தோழன்மார்களில் முதன்மையராகிய; அபூபக்கர் சித்திக்கு றலியல்லாகு அன்கவர்களும், உமறிபுனுகத்தாபு றலியல்லாகு அன்கவர்களும், உதுமானிபுனு அப்பான் றலியல்லாகு அன்கவர்களும், அலியிபுனுயபீத்தாலிபு றலியல்லாகு அன்கவர்களும், மற்று முஹாஜிரீன்களென்ற மக்கத்தாரார்களும், அன்சாரீன்களென்ற மதீனத்தாரார்களும், அறபிகளும், குறைஷிகளும் இனத்தார்களும், இன்னுமற்ற முசிலிமாகிய உடற்பிறந்தான்மார்கள யாவர்களுங், கடற்போலே சூழ்ந்திருக்கக், காலையிலெழுந்து பிரகாசிக்கும் வாலசூரியன்போன்ற நபிநாயகந் தங்கள் கற்பூரவாடை கமழும்,

பொற்பாகிய வாயைத்திறந்து வேதபோதனை செய்து கொண்டிருக்கையில், அவ்விடத்தில் வந்த முதியாளாகிய ஓர் கிழவியினால் நடந்த காரணங்களைச் சொல்ல ஆரம்பிக்கின்றோம்.

பாயிர-முற்றிற்று.

---

# முதியாள்வந்த சருக்கம்

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மதியினை யிருளினம்ம வாசைா வழைத்துப் பேசு
மதிமுகம் மதரும்பள்ளி வாயிலிற் றோழ ரோடுங்
கதிமொழி யோதி யாருங் காலத்தோர் கிழவி வந்தங்
கெதிரினி லிரங்கிச் சொன்ன யாவையுந் தொகுத்துச் சொல்வாம்

## இதன் பொருள்.

பூரணச்சந்திரனை, இருளையுடைய அமாவாசையிரவில் இந்தவுலகத்தில் யாவரும் அறியும்படியாயழைத்து, அதனோடு மெதிர்த்துப்பேசிய புத்தியில் மிக்கான, நபிமுகம்மதுமுஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லம், தங்கள் தோழன்மார்களான அசுஹாபிமார்களோடும், ஆண்டவனை வணங்கும் பள்ளிவாயிலிலிருந்து, மோட்சகதிக்கு வழிகாட்டும் புறுக்கான் வேதவாக்கியத்தை யோதிப் பொருட்சொல்லிக் கொண்டிருக்கும் போது ஓர், வயதுமுதிர்ந்த கிழவிவந்து அவ்விடத்தில் நின்று, நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களோடும் அழுது சொன்னவைகளை யெல்லாம் விபரமாகச் சொல்லுகின்றோம்.

## சரித்திர வசனம்.

நபிநாயக முகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வேதபோதனை செய்துக்கொண்டிருக்கிற அந்த பள்ளிவாயி லுக்கெதிரே, மிகுதூரத்திற் செம்மேகம்படர்ந்து வருவதுபோ

லே தூசி படர்ந்து வரக்கண்டு, அங்கிருந்த யாவரும் அவ்விடத்தைப் பார்த்தவர்களாக இருந்தார்கள். அப்போது, கொஞ்சநேரத்திற்குள்ளே பள்ளிவாயிலை யடுக்க ஓர் செவந்த வொட்டகத்தின்மேல் முதிர்ந்தவயதும், திரைந்த மேனியும், வளைந்தமுதுகும், நரைத்த கூந்தலுமாக இராஜவுடை யுடுத்த ஓர் கிழவியும், அவளுக்குப் பின்னாலே பத்துக் குதிரைகளின் மேல் இளம்வாலிபர்கள்பத்துபேரும், முகத்தழகுகெட்டு அவயவாதி துடிதுடித்தவர்களாக வந்து, தங்கள் வாகனுதிகளை விட்டுக் கீழிறங்கிக், கிழவிமுன்னும், மற்றவர்கள் பின்னுமாகப் பள்ளிவாயிற் சுற்று மதில்களுக்குட் புகுந்தார்கள்; புகுந்தவர்களிற் கிழவியானவள், கடற்போ லங்கிருக்கும் ஜனக்கூட்டத்தைப் பார்த்து, மரியாதை யொழுங்குடனே வாய்திறந்து சலாம் சொல்லி மூன்று லோகத்திற்கும் ஆண்டைகையாகித் தீனுக்கும், எனக்கும் பாத்திரமாகிய நபிமுகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களெங்கே யிருக்கிறார்களென்று மிகுந்த விருப்பத்துடனே கேட்டாள்.

அதற்கந்தக் கூட்டத்திலொருவ ரொழுங்காக வலதுகைச் சுட்டுவிரலாலே, அதோ இருக்கிறார்களென்று சுட்டிக்காட்டினார். காட்டினவுடனே கிழவி, நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை நெருங்கி யுற்றுப்பார்த்தபோது, நபிநாயகத்தின் கஸ்தூரிவாடை அவளுடைய நாசியிலும், இலாஞ்சனை யொளிவு கண்களிலும் பாய்ந்ததால், அவைபொருமற் பிரமித்து மூர்ச்சை கொண்டவளாகக் கீழே விழுந்தாள். அப்போதவள் முந்தானையிலிருந்து இரத்தம் புரண்ட பத்துக்கொண்டை முடியும் விழுந்தன

இபுனு அப்பாசுறலியல்லாகு அன்கவர்கள் சொற்படிக்கு இரண்டரை நாழிகைக்குப் பின்னர் கீழேவிழுந்த கிழவி தெளிவுண்டாகியெழுந்து தன்னிடத்திலிருந்து கீழேவிழுந்துகிடந்த பத்துக்கொண்டை முடியையுங் கையிலெடுத்துக் கொண்டு மிகுந்த சஞ்சலத்துடனே, விம்மி விம்மி இரண்டுகண்களிலுந் தாரை தாரையாகக் கண்ணீரொழுக அழுதாள். இவ்விதங் கிழவியழுங் கடூர அழுகையைக்கண்டு, அங்கிருந்த கூட்டத்தார் யாவருங் கண்ணீர் கால்நனைக்க அழுதார்கள். அதுகண்டு நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுமழுதார்கள். அப்போது கிழவி கவலை தணியாத அழுகையுடனே வாய்பொத்திக், கைகட்டி மரியாதை யொழுங்குடனே யொதுங்கி நின்று வாய்திறந்து புகழ்ந்து சொல்லத் தொடங்கினுள். அஃதென்னெனில்;

கிழவி நபிநாயகமவர்களின் திவ்வியமுகத்தைப் பார்த்துக், கர்த வழி கஸ்தூரிவாடைகமழும் பொற்பிரகாசமான திருமேனியையுடையநபியே! மலாயிக்கத்துகளென்னும் வானவர்கள் இரகசியத்தாலும், பாரசியத்தாலும் வந்திறங்குந்தலமாகிய நபியே!! மனுடர்களுக்குநேர் வழியைக்காட்டித் தீனில் லிசுலாமென்னு நன்மார்க்க வழியிலாக்க அல்லாகுத்த ஆலா நபிப்பட்டத்தைக் கொடுக்கப்பெற்று வந்த நபியே!!! மகுஷறென்னு மறுமைநாளையிற் றங்களும்மத்தான பேர்கள் சகலருஞ்செய்த பாவங்கள் அடங்கலுந்தீர ஆண்டவனிடத்தில் மன்ருடிச் சொர்க்கபதி சேர்க்கு நபியே, கனவிலும் நினைவிலு முண்மையைத்தவிராத நபியே, ஹல்க்குகளென்னு மனிதஜனஞதியர்கள் யாவரிலுந்தெளிவுள்ள நபியே, தௌறுத்து, சபூர், இன்ஜீல், இம்மூன்று வேதத்திலுமேலான புறுக்கானென்னும் வேதத்தையுடைய நபியே, எதிராகிய சத்துருக்கள் எங்கும்படியாய் வெட்டி ஜெயித்துத் தீன் பயிர், விளைக்கு நபியே, அடியார் மனக்கவலை பொடியாகச்செய்யும் நபியே, ஆளமென்னும் பூலோகமெல்லாஞ் சிறந்தநபியே, இலட்சத்திருபத்து நாலாயிர நபிகளுக்கும், முந்நூற்றுப் பதிமூன்று முறுசலாகிய நபிகளுக்கும் காத்திமுல்லன் பியாவென்னும் அரசாகியநபியே, பட்சம்வைத்து ஏழைகள் அச்சந்தீர்க்கு நபியென்று மிகவும் புகழ்ந்து போற்றி இந்தத் துன்பத்தையுடைய அடியாள் சலாந் தேவரீர் தங்கள்பேரி லுண்டாவதாகவுமென்று சொல்லி இன்னுஞ் சொல்லுகின்ருள். அஃதென்னெனில்,

அந்தக்கிழவி, நபிநாயகத்தைப் பார்த்து இந்த ஏழையாகிய நானே மிகுதூரத்திலிருந்து தங்களைத்தேடி, மலை, வனம், வனாந்திரம், காடு, கரை, ஆறருவி, நாடு, நகர்கள், அனேகங்களைக் கடந்து வந்தேன், ஆதலால், என்னைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள், தாங்களே யெனக்குக் கனவிலும், நினைவிலு மொர்துங்குந் தலமாயிருக்கும், என்னை இரட்சித்துக் கொள்ளுங்கள், எனக்குதவி செய்யுங்கள், என்னுடைய நாயகமே என்னைத்தொட்ட, கிரகாசாரத்தினுல் எனக்கு அனீதஞ்செய்த பகையரின் பேரில் அடர்ந்து பகையைத் தீர்க்க விரைந்து கொள்ளுங்கள், அஞ்சாத நெஞ்சையுடைய பஞ்சமாபாதக துரோகிகளான காபிர்களில் நின்றும், மிஞ்சியகொடூரம் புத்தமான முறடன் ஒருவன் என் மக்களை யெல்லாம் வெட்டிப்போட்டான்; என் குடும்பத்தாரை யெல்லா மழித்துப் போட்டான்; என் கூட்டத்

தாரை யெல்லாந் தூரத்திப்போட்டான்; என் வீடுவாசல் மாடமாளிகை கூடகோபுரங்களெல்லா மிடித்துப்போட்டான்; என் பொற்பொருள், நிதி, மணி, தூசு காசெல்லாங் கொள்ளைகொண்டான்; எனக்கு நீங்காத துயரத்தையும் வியாகூலத்தையும் ஆகாரமாக வூட்டிவைத்தான்; எனக்கவன்செய்த பாதகங்களைச் சகித்திருக்கக்கூடாம லிறந்துபோகலாமென்றாலும், தேவரீர் தங்கள் திருப்பொற்பாத கமலாசனத்தைக்கண்டு முறையிட்டால், நான்கொண்ட துன்பங்கள் நீங்கி, இன்பங்கள் பெறலாமென்ற விருப்பத்தினால் ஜீவித்துவந்தேன். அல்லாகுத் தஆலாவுடையசலாம் தேவரீர் தங்கள் பேரிலும், தங்கள் அல் அவுலாதுகளென்ற வுறமுறையார்கள பேரிலும் மின்வெட்டி மறையுங்காலமட்டும், மாடப்புறாக் கூவிக்கொண்டிருக்குங்காலமட்டு முண்டாவதாகவுமென்று துயரத்துடனே, விம்மி விம்மி அழுதுசொல்லி நின்றாள்.

இபுனு அப்பாசு றலியல்லாகு அன்கவர்கள் சொற்படிக்கு, விருத்தி யாப்பியாசத்தோடு தள்ளாடித் தள்ளாடிக் கிழவி சொல்லிய சொற்களனைத்தையுங்கேட்ட நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்க ளுயிர்களின்பேரிற் கிருபையுடைய நாயகமாகையாற், றங்களு மிரங்கி யழுதார்கள். இவ்விதம், நபிநாயகம் அழுதகதைக் கண்டிருந்த, சபையோர்களான அசுஹாபிமார்கள் யாவருமழுதார்கள். அப்போது நபிநாயகம் அந்தக்கிழவி அழுகையை அமர்த்தி யவளைப் பார்த்துக் கற்பூரவாடை கமழும் பொற்பாகிய தங்கள் வாயைத்திறந்து உன்குலமும், பெயரும், தகப்பன் பெயரும், இருக்குமூரும், அந்தப் பகைஞனூரும், அவன் பெயரும், எனக்குத் தெரியும்படியாகச் சொல்லுமென் றின்பமாகக் கேட்டார்கள். அதற்கந்தக் கிழவியானவள் உடனே நபிநாயகத்தி னடிபணிந்து கவிதைகளாற் புகழ்ந்து போற்றிச் சொல்லுகின்றாள்.

எங்களூர் எமன் ராச்சியத்தைச்சேர்ந்த மலைகளிலோர் பெரிய மலையடிச்சார்பு, நானதிலிருக்கும் பனீயெறுநூக்கென்னுங் கிளையில் அறிவுமிகுந்த குபுறத்துஸ்ததாமென்றஅரசன் வாப்பிரசாதத்தினாலே பெற்றெடுத்தமகள், அந்தக் குபுறத்துஸ்ததா மென்கிற என்தகப்பன் இனத்தார் முதலிய யாவருக்கு மோர்தலைமை நிலையைச் செலுத்தி, மாடா மொட்டகை, நிரைகளும், நிதிமணிப் பொருள்களு மிகுதியாய், நன்னீதி, செலுத்தி யரசாட்சி செய்துவந்தார் அப்படி

யவர் அரசாட்சிசெய்து வருங்காலத்தில், எங்களுக்குப் புறத்தே, பத்துக்காத வழியிலிருக்கும் பத்தூர்களுக்கப்புரம், ஓர் பெரிய பிரமாண்டமாய் வானத்தையளாவிய மலையடிச்சார் பிலுண்டாயிருக்கும் வாதில் சுகுருவென்னும் நகரத்திலே கதுவம்மிக்கிளையில், ஜஹாவென்னும் பெயருடையஓர் அரசன் வலுத்தநெஞ்சுடைய காலாட்படையும் யானைப் படையுங், குதிரையையும், தேர் படையும் வைத்து நீதிநெறிதவறிக் கொடுங்கோல் செலுத்திக்கொண் டிருந்தான். அவனுக்குப் பஞ்சபாதகந்திரண்டுவமைந்தது போலமைந்துவந்த மகாயுக்கென்னும் பெயருடைய ஒரேமகனிருந்தான். அவனுடைய பட்டப்பெயர் இறவுசல்கூல். அவனோ, காட்டிலெதிர்த்தமிருகஜாதினங்களை யெண்ணமற் பாய்ந்து பட்சணம்செய்யும்கூரியநகங்களையுடைய புலியைப்போலவே, போக்குவரத்தாக இருக்கும் பாட்டைசாரிகள்மேலே யாதொரு காரணமுமில்லாமற் பாய்ந்துவெட்டி யவர்கள் பொருளைக் கொள்ளையடிப்பதும், புறதேசங்களிலிருக்கும் சிற்றரசர்களை வெட்டிப் பிளந்து அவர்களை மனைவி மக்களைச் சிறை வாரி நிதிமணிகளையுங் கொள்ளையடித்துச் ஜெயபேரிகை கொட்டுதலுங், கற்புடையபெண்கள்கற்பையழித்தலுங், கன்னிகைப் பெண்களைக் கெடுத்தலும், பெரியவர்களுக்கு மரியாதையில்லாம லெதிரே நடத்தலுஞ், சிறியவர்களுக்கிறங்காது க்ஷேமங்கெடுத்தலும், யுத்தகளத்தி லெதிர்த்தவர்களைவெட்டி யிரத்தத்தைக் குடித்தலும், பொய்யையுறவாகவுங்,கொலையைத்தொழிலாகவுங்,கெடுதியைச் சிநேகமாகவுங், குடியைத் தனதாகவுங்கொண்டு தீனில் விசுவாமானபேர்களைக் கண்ணிலுங் காணவொட்டாமற் கடிந்து, சினந்து, கருவங் கொண்டே யுருகித், திருக்கி, நாளுக்குநாட்கொடூரபாதக வுத்தண்ட மெத்தவுஞ் செய்வான்.

இவ்விதம், அவன்செய்வதைக் கண்டுங், கேட்டுங், திடுக்கிட்டு அஞ்சிப்பயந்த புறமன்னிய இராஜர்களுங் குடிகளும், ஊரைவிட்டும், வீட்டைவிட்டும், விளையுங் காட்டைவிட்டும், வலசை வாங்கித் தூரதேசம் போவார்கள். அப்படிப் போகிறவர்களை யவன்பின் றொடர்ந்து சண்டைசெய்து வெட்டிப் பெண்டுபிள்ளைகளைச் சிறைவாரித் தண்டுதடிகளைக், கொள்ளையாடிக் கொண்டுவருவான். இவைகளைக் கண்ணாரக் கண்டுங், காதாரக் கேட்டுமிருந்த, என் தகப்பன் அந்தப்

பாவி இறவுசுல்கூல் செய்யும் பாதகநெருப்பு நம்மையும், நம்மூரையுங் கொளுத்துமுன்னே விலகித் தூரதேசத்திற்குப் போவதேநன்மையென்றெண்ணித், தம்முடைய பரிவாரத்தோடு மூரைவிட்டு மெழுந்தருளியாகி நடந்துபோகும்போது, வேவு காரர்களாலே கேள்விப்பட்டுப், பாதகஞ் செய்யும் பாவியான இறவுசுல்கூல் படைகளுடன் எதிர்வந்து சண்டைசெய்து, என்தகப்பனையும், தலைவர்களையும் பரிவாரத்தோடு சென்ற சேவகர்களையும் வெட்டிப் பிளந்து கொள்ளையெடுத்துப் போயினன், அதனால் நாங்களுஞ் சிதறிக், காட்டு முட்கள் காலிலேதைக்க வோடிவந்து ஊர்சேர்ந்தோம், அப்படி நாங்கள் ஊர்சேர்ந்ததின் பின்னர், என்கிளைஞரு மற்றவர்களுஞ் சபைகூடி நாளுக்குநாள் ஆலோசித்து நல்லகுணத்தோடும், தகப்பனிருந்த தலத்திலே தலைப்பிள்ளை நீயேயிருவென்று, என்னைத தலைமையாக்கி வைத்தார்கள். அன்றுமுதல் நான், எவர்களையும் அன்போடும் ஆதரித்துத், தஞ்சமென்றோர்களைத் தடையில்லாது காத்துக் குடியிறையைக் கோணாது வாங்கிவந்தேன்.

அதுகண்டு யாவரும், என்தகப்பனுக்குச் செய்யும் சங்கை, மரியாதை, தயவு, தாட்சண்ணியத்திற் கதிகமாய்ச் செய்து, என்னுடைய சொல்லுக் குட்பட்டு நடந்துவந்தார்கள். அப்படி நடந்துவருங்காலங்களில், நான் பெற்ற பெண்மக்கள் நான்குபேர்கள், கார்மேகம் போன்ற கூந்தலும், பூரண சந்திரன் போன்ற முகமும், செண்பகப் பூப்போன்ற மேனியுமாய்க் கல்வி முதலிய விற்பனசவுந்தரிகளாயிருந்தார்கள், அவர்களுக்குக், கல்வியைமுயன்று கருத்துத் தெளிந்து, சொல், விற்பனஞ், சுயங், தீரங், கொடி, கணிதந்தெளிந்து மன்மதனைப்போன்றிருக்கும், அழகிய நான்குபேர்களை, என் குலத்திலேயே தெரிந்தெடுத்துக் கலியாணமுஞ் செய்துவைத்துக் காம்பீரமாக வாழ்ந்துவருங் காலத்தில், அல்லாவுடைய றசூலே, ஆலநபியே, தேவரீர் தாங்கள் பிறந்த புதுமையும், வளர்ந்த புதுமையும், தங்கள் தீனுடைய மேலாம் பாத்தையும், அந்தத்தீனிற் சேர்ந்தபேர்களின் துசிகாந்துப்புரவும் ஒழுங்கு, ஆகிய இவ்விதநன்னடத்தையையும், வேதப் பிரசங்கத்தையுஞ் சதாநித்தநித்தங் கேட்டுக், கல்பென்னுமனதிலே தீனில் விசுலாமென்னு மார்க்கத்தில் நாமுஞ்சேர்ந்துதுப்புரவாக வேண்டுமென்ற வெண்ணம் பெரிதாயிருக்கையில்,

ஓர்நாளிரவில் நானித்திரைசெய்யும் சப்பிரமஞ்சமெத்தையின்மேலே சயனித்துக் கண்மூடிக்கொண்டு இருக்கும்போது, என்னிரண்டு

கண்ணுக் கிடையிலுள்ள புருவமத்திக்கும், ஆகாயத்திற்கு மொரே
நேராய்க் கோடிசூரிய னொளிவுக்கும் அதிகமாக வோர் குளிர்ந்த
வொளி பிரகாசித்தது. அவ்வொளிவுக்கு முன்னாலே கண்ணைத்திறக்
கக்கூடாமற், கண்ணைச்சிக்கென மூடினவளாய் நானிருக்கும்போது
அவ்வொளியில் நின்றுமோர் சப்தம்பிறந்தது. அச்சப்தமென்னவெ
னிற், றெளிவான முதிய அரசாக்கினியே நீ நாடியிருக்கிற நன்மார்க்
கத்தைக் கைக்கொள்ளுவாயாகவென்று, அச்சொல்லோடு லாஇலாஹ
இல்லல்லாஹு, முகம்மதுர் றசூலுல்லாகி என்ற இந்த அவ்வல்க்கலி
மாவின் வாக்கியமும் பிறந்தது, உடனே, அக்கலிமா என்மனதில்
முன்னரெழுதிய எழுத்துப்போல மனனமாகி வாயால் வழங்கலா
னேன். பின்னர், நானுமென்சரீரமும் இலேசாக இருக்கக்கண்டு, கா
லையிலெழுந்து, கை, கால், முகங்களைக் கழுவிக்கொண்டு பரிசுத்த
வுடைவுடுத்தி முன்னடந்த ஆசூச நடைகளையும் விலக்கினவளாய்
இருக்குந் தானத்தில் வந்திருந்தேன். அப்போது; வழமைபோலே
யென் சபைக்கு வருகின்ற இனத்தார் முதலிய கூட்டத்தார் யாவ
ரும் வந்திருந்தார்கள். அவர்களுக்கு இரவையிற் நடந்த காரணங்
கள் யாவையும் நான் கனிவாகச் சொல்லி, அவ்வல்க்கலிமா வென்
னுந் திருமந்திரத்தையு மோதிக் காட்டினேன், அதுகேட்டவர்
கள், மனமுகங் கோணமல், அக்கலிமாவை யோதித் தீனில் விசு
லாமார்க்கத்தி லாயினார்கள். அதுபோ லூரிலுள்ள சிறியோர் பெரி
யோரான, ஆண்பெண்ணடங்கலும், கலிமாச்சொல்லித்தீனில்யிசுலா
மாகிப் பரிசுத்த மானார்கள். பின்னர், நாங்களெல்லோரும் தொழு
கைமுதலிய நடத்தைகளிற் பழகிப், புத்துக னென்னும் விக்கிரகங்க
ளைத் தகர்த்துக் கோயில்களை யிடித்துப் பள்ளிவாசற்கள் கட்டிக்
கட்குடி கடைகளைவிலக்கி மஸ்துகளை நீக்கிச் சொஸ்தமாக வாழ்ந்
திருந்தோம்.

இப்படி யிங்கு நடப்பதைத் தப்பிலித்தனஞ் செய்துக்கொண்
டிருக்கும். அல்லாஹுதஆலாவுடைய பகைவனான இறவுசுல்கூலென்
பவன் கேள்விப்பட்டு, உடனே, சில தலைவர்களையும், காலாட்சேனை,
களையு மெங்களூரிற்சென்று, எங்களைச் சைத்தானுடைய மார்க்கத்தி
லுள்ள, புத்துக்களை வணங்கும் படியாய்க் கட்டளைசெய்யச் சொல்லி
யனுப்பினான். அத்தலைவர்களும் படையோடுவந்துஎங்களூரை வளைந்
துட்புகுந்து, என்னையழைத்து, ஓகே! பெண்பிள்ளையே இப்போது

நீங்கள், விசுவதித்திருக்கும், அந்த முகம்மதுடைய தீனில் விசுலா மென்னு மார்க்கத்தை விட்டுநீங்கி, இதற்குமுன்னுங்கள் தாய்தகப் பன், உறமுறையார், விசுவதித்துச் செய்து நடந்துவந்த மார்க்கத் தைத் தொடர்பிடியாகச்செய்து நடந்துவாருங்க ளென்று சொன்ன ர்கள். அதுகேட்டுடனே, என்னுடைய ஜடலாதித்தமுந்துடி துடிக்க, நெஞ்சம் பதைபதைக்கக், கண்களிலே கோபாக்கினிப்பொறி தெறி தெறிக்கப், பற்களைநெறநெறென்று கடித்து நாகப்பாம்பைப்போலே சீறி, அவர்களைப்பார்த்து, ஓகே! தலைவர்களே நீங்கள் பொய்மையா ன வைஷத்தானுடைய மார்க்கத்தை விட்டுநீங்கி மெய்ம்மையான அல் லாஹு தஆலாவுடைய திருத்தூதாங்கர் முகம்மது சல்லல்லாகு அலை கிவசல்ல மவர்களுடைய பரிசுத்தமான தீனிலி லிசுலாமென்னுமார்க் கத்தி லாகுங்களென்று சொன்னேன்.

அதுகேட்டந்தச், சொற்சுவை யறியாத பஞ்சமாபாதக துரோ கிகளெளவம் புந்தும்புமாக ஏசினார்கள். அப்போது என்னுடைய மனஞ்சகிக்காமல் முன்கொண்ட கோபத்திலு மதிகமாகக் கோபங் கொண்டவளாய்ப், பக்கத்தி லிருந்த கூரிய வாளாயுதத்தை யுருவி அவர்களிலே சிலபேர்களைச் சின்னபின்ன மாகும்படிவெட்டினேன் இச்செய்தியைத் துட்டனதுரோகியா யுயிர்களின்மேலே கிஞ்சித் தும் பட்சமில்லாத, அந்த, இறவுசுல்கூலென்னும் பாவியறிந்து, கோபங்கொண்டு குதிகுதித்துச் சில தலைவர்களையும் படைகளையும், என்னுட்டையும், வீட்டையும் அழித்துக் கொள்ளை கொண்டு என் னைப் பிடித்துவரும்படியா யனுப்பினான், அவர்களும் இருளடர்ந்த இராவுகாலம் நடுச்சாமத்தில், அகஸ்மாத்தா யென்னூறுக்குள்ளே புகுந்து, ஆங்காங் கயர்ந்து நித்திரையி லிருக்கும். ஆண்பிள்ளைகளை யெல்லாம் வெட்டிப்போட்டுப், பெண்பிள்ளைகளை யெல்லாஞ் சிறை யழித்துக் கொள்ளையடிக்கொண்டு பின்னர், என்னரண்மனை புகுந் துழக்கினார்கள் அப்போது அங்கேயிருக்குங் காவற்குடித்தன ஆட வர்களிலே சிலர், வா-முகம்மதாஃ, வா-முகம்மதாஃ, என்றசொல் லோடு சண்டைசெய்து அவர்களும் வெட்டுப்பட்டிறந்தார்கள்.

பின்னர், பாவிகள் கொள்ளையாடிய எங்கள் பரிவாரங்களோடு குடும்பத்தார் யாவரையும் சிறைகொண்டார்கள். அதிலே, சிலபெண் கள் வா-கைத்தாஃ என்று சொல்லினார்கள் இன்னுஞ் சில பெண்கள் எங்க ளாண்பிள்ளைகளே, எங்க ளாண்பிள்ளைகளே யென்று கூவி

யாற்றினார்கள், இப்படிக் கடைபிடியாயிருக்கையில், அந்தப்பாவிகள் எங்கள் கைக்குங், காலுக்கும் இரும்புத்தொடர்களினாற் றளையிட்டுச் சரீரம் புண்ணாயுலையும்படியாகச் செய்தார்கள். அவ்வருத்தத்தாலே கண்ணீ ரருவிபாய அழுதுசலிக்கு மெங்கள்பேரிலே கடுகளவு மிரக்க மில்லாது முட்செறிவு, காற்காடு பரவிக்கிடக்கும் வழியிலே யெங்கள் காலங்களி லிரத்தமொழுக இழுத்துக்கொண்டு பத்துக்காதவழியும் நடாத்திக் கொண்டுபோய்ப் பவுசிகெட்ட இறவுசுல்கூல் முன்னிலே விட்டார்கள்.

உடனே யந்தப்பாதகன் எங்களைப்பார்த்து யாவரும் அஞ்சிப்ப யந்து நடுநடுங்குவதாக, மேகங் கெர்ச்சிப்பதுபோலே கெர்ச்சித்துஇடி விழுவதுபோலே நீடிலென்று எங்கள்முன் குதித்து விழுந்துவாளை யுருவி யசைத்து வற்புறுத்தி என்னைத் தவிர மற்ற என்பரிவார ஆண் பிள்ளைகளையும், பெண் பிள்ளைகளையுங் கொரோமான சிறைச் சாலை யிற் கொண்டுபோய்ப் போடச் சொல்லி ஏவலாளர்களை யேவினான். அவர்கள் அப்படியே செய்தபின்னர், அந்தப்பாவி இறவுசுல்கூல் என் னைப்பார்த்து, எடிகிழவி! யுனக்குவந்த கேடென்ன, நூதனமாய் மக்க த்திலே பிறந்த எளியமுகம்மதின் மார்க்கத்திலாகிய வழமையைக்கெ டுத்தாயே ஆதலாலுன்னை வெட்டவேண்டும், நீ பெண் பிள்ளையாயும் விருத்தியாப்பியாசத்தை யுடையவளாயும் பிள்ளைகளைப்பெற்ற குடும் பாஸ்திரியாயு மிருப்பதால், உன்னை மன்னித்தேன் ஆதலாற், சீக்கிர மாக இதோ இருக்கின்ற கோயிலுக்குள்ளே புகுந்து, ஆங்கிருக்கும், பர்முசென்ற தெய்வத்திற்கு நீயும், உன்னைச் சேர்ந்தவர்களும் சாஷ் டாங்கஞ்செய்து எங்கள் முன்னோர்கள் தாய்தகப்பன் மார்களும், உங் கள் முன்னோர்கள் தாய் தகப்பன் மார்களும் செய்த வணக்கத்தைச் செய்யென்றான்.

அதுகேட்டு, இந்தச் சிற்றடியாளாகிய நான், அல்லாவுடைய றசூலே,முகம்மதே,அகுமதே, முஸ்தபாவே, தேவரீர் தங்கள் பொற் பாத கமலாஸனத் துதிகளோடு கொஞ்சமேனு நெஞ்சம்அஞ்சாமலும் அவனேவிய ஏவலைச் செய்யாமலும் நின்றேன், பின்னுமவன் என்னை ப்பார்த்து நெஞ்சிளகலாய், ஒகே! கிழவியே என்சொற்போலேகேட்டு நடந்தாயாகிற் பணங்காசு பொற்பூடணாதி முதலிய செல்வங்கள் அநே கந்தந்து உன்பெண்மக்கள், மருமக்கள்மாரோடுமூரிற் போய் முன் னிலு மும்மடங்கா யாசாக்கினி வாழ்க்கை யிலிருக்கச் செய்வேன்,

அல்லாதிருக்கில், என் கோபநெருப்பை யுங்கள்பேரிற் கொளுத்தி விடுவேனென்றுன்.

அதுகேட்டு நான், இருதயத்திற்கொண்ட வுறுதியோடும், இகபரம் படைத்தாளும் ஏகபெரிய நாயகனினுண்மைத் தூதரான முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய வுதவியுண்டும் பதவியுண்டும்; ஆதலால், உயிரழிந்தாலும் அழிவதே யல்லாமல் இந்தவழி கேடன் சொல்லைக்கேட்டு நடப்பது கூடாதென்று தீனைப்பிடித்த சிந்தையோடும்அவனைப்பார்த்து, ஒகே! இராஜாவேநாகந்த முகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லத்துடைய தீன் மார்க்கத்தி லிருப்பதில் உனக்கென்ன கேடுவந்தது? நீயும். உன் தாய் தந்தைமாரும் கூட்டத்தாரும், ஷைத்தானுடைய மார்க்கத்தா ராகையால், ஓயினென்னும் ஓடைநரகம் உங்களுக்கா யிருக்கும், யானுமென் கூட்டத்தாரும், அல்லாஹுதஆலாவுடைய வுண்மைத் தூதாங்கானமுகம்மது சல்லல்லாஹுஅலைகிவசல்லமவர்களும் அவர்களுடையபுறக்கான்வேதமும் உண்மையென்று விசுவாசங் கொண்ட மனவுறுதியோடு நாவினுலே திருமந்திரமான கலிமாஷகாதத்தை விண்ணப்பஞ்செய்து பிருதவு சென்னுஞ் சொர்க்கபதவியை வேண்டி யிருக்கிறேம்,ஆதலால், வல்ல நாயகனை அல்லாஹுதஆலாவுடைய அதாபுக்குப் பாத்திரமாகிய குபிர் மார்க்கத்தை யொப்புக்கொள்ள மாட்டோமென்று றுதியாய்ச் சொன்னேன்.

இவ்விதம், நான்சொன்ன சொற்க ளனைத்தையும் அந்தப் பஞ்சமாபாதக துரோகியான இறவுசுல்கூல்கேட்டு, மகாகோபங்கொண்டு மீசைகள் துடிதுடிக்கக், கண்களிற் கோபாக்கினி தெறி தெறிக்கக் கூவியாற்றிச் சிறைச்சாலையிலிருக்கும், என்கூட்டத்தாராகிய கைதிகளைக் கொண்டுவரச்செய்து, உடனே என்னீரலுங், குலையுந் துடிக்கும்படியாக, என் பெண்மக்கள் பேரிலும், மருமக்கள் பேரிலும் புலியைப்போலே பாய்ந்து இரத்தந் தூரத்தெறிக்க வெட்டிவிட்டு என்னைப்பார்த்து, எடிகிழவி! உன்னையும் இதுபோல் வெட்டுவேன் அதற்கு முற்பட முகம்மதுடைய தீனில் விசுவாமென்னு மார்க்கத்தை விட்டுவிட்டு உலாத்து உஸ்ஸா, குபலெஆனு மிம்மூன்று தெய்வங்களுக்கு நீ வணக்கஞ்செய்து கொண்டிருந்தால் நன்றென்றுன், அதுகேட்டு நானவனைப்பார்த்து, எடா! ஷைத்தானே, அல்லா வுடைய பகைவனே யுனக்கென்னகேடு வந்தது, நீ யென்னை யென்னசெய்ய

வேண்டுமோ அதைச் செய்துகொள். அதே தவிர அல்லாவுடையறசூ
லுமாய், ஆலத்துக் கெல்லாம் நபியுமாய்த், தூண்டாமணி விளக்குச்
சுடருமாய் வந்த ஆண்டகை நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்
மவர்களின் தீனைவிட்டும் பிசகமாட்டே னென்று சொன்னேன்

அதுகேட்டுப், பாவி இறவுசுல்கூல் உடனே என் கைகாலைவிட்ட
தளைகளை யவிழக்கச்செய்து கொண்டைமுடியை வாளினா லறுத்தான்
அப்படியறுத்த, கொண்டையை யென் கழுத்திலிட்டு என்பெண்மக்கள்
தலையில் அறுத்த கொண்டையையும், அவர்கள் மக்கள் தலையில் அறு
த்த கொண்டையையும் என்மடியிற் கட்டிப் பின்னர் அப்பெண்களை
வெட்டிய தலைகளையும், மருமக்கள்மார்களை வெட்டிய தலைகளையும்,
இதோநிற்கிற ஒட்டகத்தின் கழுத்திலே தூக்கி என்னையதின்மேலே
வலுவந்தமாகப் பிடித்திழுத்து ஏற்றி என்னைப் பார்த்து எடிகிழவி! நீ
அந்த அப்துல்லாவுடைய மகன் முகம்மதிடத்திற்போய்ச் சொன்னை
யேயானால், அவன் புலிக்கு நிகரான திறத்த சுத்தவீரியர்களை யனுப்பி
யென்னோடு சண்டை செய்து என்னுடைய பழிக்கு பதிற்பழி வாங்
கித்தருவான் சீக்கிரங் காலதாமத மில்லாமலோடிப்போய்ச் சொல்
லென்று துரத்திவிட்டான். பிறகு நான் அந்தப் பாவிப் பயலுடைய
கோட்டையை விட்டுவியாகூலக்கடலிலே குளித்தவளாகியும், எண்ணந்
தட்டழிந்தவ ளாகியுந், தன்னந் தனியாய்க் காட்டுப் பாதையில் ஒட்ட
கத்தை நடத்திக் கொண்டு வரும்போது, அந்தக் காட்டுவழியில் எங்
களூர்க் கலகத்திலே சிதறியோடிய இந்த மக்களாகிய இளம் வாலிபர்
பத்துப்பேரும், அங்கேபதுங்கிக்கிடப்பதைக்கண்டு நானொட்டகத்தை
விட்டுக் கீழிறங்கிப்பட்ட பாடுக ளத்தனையுஞ் சொன்னேன்.

அதுகேட்டு, இவர்களும், சொல்ல முடியாத வியாகூலப்பட்டு
இறைந்துகூவியழுதார்கள், பின்னர்; நானவர்கள் அழுகையையமர்த்தி
மக்களே! மனதைத்தேற்றி நமக்குஞ் சிபாரிசிருக்கிறது, ஆதலால்,
பழிக்குப்பழிவாங்கித் தருகிவார்களென்று, தேவரீர் தங்கள் திருநா
மத்தையுஞ் சொல்லிக் காட்டி யென்னூருக்கிவர்களைக் கூட்டிவந்து,
அங்கே யென்னுடைய அரண்மனையினுட்புகுந்து பார்க்கும்போது,
தெறிபட்டோடிய குதிரைகளில் இந்தப் பத்துக் குதிரை தவிரமற்றொ
ன்றேனு மில்லாது பாழாய்க்கிடந்தது; அதையும் பார்த்துப்பொறு
மைசெய்துகொண்டு, அக்குதிரைகளி லிவர்களைச்சவாராக்கியுடனே

மண்டு மணகளையுங், குண்டுகுழிகளையுங் கடந்து, கரடி, புலியானைசிங் கமுதலிய வலுத்தமிருகங்களிருக்கும் அண்டமளாவிய மலைகளையும், ஆறருவிகளையுங்கடந்து வடவாமுகாக்கினிவிளையாடிக்கொண்டிருக்குந் தலமாகிக், கானற்பறந்தகரிந்து, கற்கள்பொரிந்து,கட்டைகள்வெந்து துட்டர்மனம்போலத் துடிதுடித்துப்பாம்பினங்கள் செத்துகிடக்குஞ் சிறியசிழலிற் காரெலி யொதுங்கிக்கண் துடிதுடிக்கும்பாலைவனங்க ளும் பதனமாய்க் கடந்து, மாடாடுமேய்ப்பவர் ஊது மூங்கிற்குழ லோசையும், மோர்கடையு மத்தி னோசையும், நிதநித முழங்கும், வெண்ணெய், நெய்மணம் வெகுதொலை வீசுமிடைச்சேரிகளையுங்கட ந்து, பண்ணைகள் சூழும் பலவிடமும் கடந்து இரவும்பகலும், இலை, தழை, கிழங்குகளைத் தின்று நித்திரை யில்லாது தசுபிகோதிக்கொ ண்டு இங்கேவந்து தேவரீர்! தங்கள் பாதாரவிந்தத்தைக் கண்டேன், கண்டபோதே, எனது துன்பங்களெல்லாந் துண்டுதுண்டாகச் சிதறி போடியது; இனியெனக்கு வேறே யாதாமோ ராசையுமில்லை நீங்களே தஞ்சம்அல்லாவுடைய றசூலே ஹபீபே, அகுமதே, முகம்மதே, முஸ் தபாவே, பெண்மானின் வருத்தந்தீரப் பிணைநின்ற நாயகமேயென்று அநேகம் புகழ்ந்து சொல்லிநின்றாள்.

இபுனு அப்பாசு றலியல்லாகு அன்கவர்கள் சொற்படிக்குக், கிழ விசொன்ன சொற்களனைத்தையும் நபிநாயகங்கேட்டு, அவர்களுடைய மனமுருகிக் கண்ணீர் புசியும்படியாயெப்போதுங்கொள்ளாத வியாகூ லங்கொண்டு சஞ்சலித்து, அக்கிழவியைப் பார்த்துறகுமானுடைய றகுமத்துக்குப் பாத்திரமாகிச்சொர்க்கபதவியைக்கைவிலைக்கு வாங்கி யமூப்பியாரே! அல்லாஹுதஆலா எல்லாத்துக்கும் போதுமானவன், இளைத்தவர்களிளைப்பைநீக்குகிறவன், வலுத்தவர்கள் வலுவைத்தணி க்கிறவன், ஆதலால், அந்நாயகன் உமக்கும், நமக்குந் தீனுக்கும், பகைசெய்த பகைஞரை நாசமாக்குவானென்று சொல்லியவள் மன தைத்தேற்றிப் பின்னர், அங்கிருக்குந் தங்கள்காரியஸ்தர்களில் ஒரு வரை யழைத்து இவ்வம்மையாரைக் கூட்டிக்கொண்டுபோய், ஓலங் காரமானவீட்டிலிருக்கச்செய்து, பால்பழாதிஅன்னமுதலான ஊண்தி னறுசுவையோடு இடைவிடாமல் கொடுத்துவாருமென்றுசொல்லிக் கிழவியை யனுப்பிவைத்தார்கள்.

முதியாள்வந்தசருக்க-முற்றிற்று

ஆகச்சருக்கம்-1-க்குப்பாயிரமுள்படத் திருவிருத்தம்-3,

---

# அம்றுவாய்மைச் சருக்கம்.

கலிவிருத்தம்.

செம்பொ னம்பர் றிரேசமு கம்மது
வெம்பு பாவ விழலன் றவுசல்கூல்
வம்பு செய்கை வழக்கம் வினவவாங்
கம்று சொல்லிய வாய்மை யறைகுவாம்.

## இதன் பொருள்.

செழுமை பொருந்திப் பொறற்பிரகாசஞ் செய்யுந் திருமேனியிடத்தில்அம்பர்,கஸ்தூரிகமழு முகம்மதுமுஸ்தபா றசூல் சல்லல்லாஹு அலைகிவசல்லமவர்கள், வெம்பி நாற்றங்கொண்டு நாகலோகஞ் சேர்ப்பிக்கும் பாவச்செய்கையையுடைய வீணனை இறவுசல்கூலென்பவனுடையவம்பாயுள்ள செய்கையின் வழக்கங்கள் யாவையும். சபையிலிருப்பவர்களோடு கேட்பதைக் காதுற் றறிந்து, அந்தத்திருச் சபையிலிருந்த அம்றிபுனு வுமையத்துல்லமீரியென்னும் பெயரையுடைய சுத்த வீரியரெழுந்து சொன்னவாய் மொழிகள்யாவையும் சொல்லுகின்றாம்.

## சரித்திர வசனம்.

ஷபீகுல்முதுனபீன், ஹபீபுறப்பில் ஆலமீன், முகம்மது சல்லல்லாஹு அலைகிவசல்ல மவர்கள் சொல்லியவையெல்லாங்கேட்டுக்கிழவியானவள் மிகுந்த மனமகிழ்ச்சியாய் ஆனந்தமுற்று, நபிநாயகமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் முதலியசபையார்கள் யாவருக்குந்தாழ்ச்சியுடன் சலாஞ்சொல்லிக்கொண்டு போன பின்னர், நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள், தங்களைச்சூழ்ந்திருக்கும் அசுஹாபிமார்கள் சகலரையும்பார்த்து ஓகே! முசிலீமானகூட்டத்தார்களே, என்னுடைய தோழன்மார்களே, அல்லாகுதஆலாவுடைய றகுமத்துப்பெற்ற அந்தக் கிழவியானவள் சொன்ன கெடுதோஷியான இறவுசல்கூலென்னும் பாவியாகிய மல்

கூலைக் கண்டறிந்த பேர்களிந்தச்சபையில் யாரேனுமுண்டுமோவென் றுகேட்டார்கள் அதற்கவ்வசுஹாபிமார்க ளொருவரேனு மெதிர் விடை யளிக்காதிருந்தார்கள். பின்னர் கொஞ்சநேரம் பொறுத்தந் தச்சபையிலிருக்கிற அம்றிபுனு வுமையத்துல் லமீரியென்னும் பெய ரையுடைய அசுஹாபியானவ ரெழுந்து நின்று நபிநாயகத்தைப் பார்த்து, யாறசூலுல்லாவே, யெனக் கந்தப்பாவியாகிய இறவுசுல் கூலும், அவனூரும், அவன்கோட்டைகளும் அவர் படைகளும் அவனடத்திகளும், இப்போது சபையில் வந்து முறையிட்ட மூப் பியாரையும், அவனூரையும், மற்றசெய்கைகள் யாவையும் நன்றாக நானறிவேனென்று சொன்னார்.

அதுகேட்டு, நபிநாயகம் அவ்வம்றென்னும் சுத்தவீரியரைப் பார்த்து, யா-அம்றே! யுமக்கு அல்லாஹுதஆலா இந்தத் துனியா விலும் அந்த ஆகிறத்திலும் நல்லுதவி றகுமத்துச் செய்வா ருகவு மென்றுதுஆச்செய்து, பின்னர் அம்றிபுனுவுமையத்துல் லமீரிய வர்களைப்பார்த்து, அந்தமல்கூனை இறவுசுல்கூலுடைய செய்திகளை நீர் கண்டறிந்தவைகளை யெல்லாமெனக்கு நன்றாகத் தெரியும்படி சொல்லுமென்றார்கள், அதுகேட்டு, அம்றிபுனுவுமையத்துல்லமீரிய வர்கள் நபிநாயக முகம்மது சல்லல்லாஹுஅலைகிவசல்லமவர்களை மிக வும் போற்றிப் புகழ்ந்துசொல்ல ஆரம்பித்தார், அஃதென்னெனில்

அம்றிபுனு வுமையத்துல்அமீரிநபிநாயகமவர்களைப் பார்த்துநபி மார்களுக்கெல்லாங் கிரீடாதிபதியாகவும், தீனில்லிசுலாமானவர்களு க்கெல்லாம் வாரீஸ்தாரகவும் விளங்கும் நாயகமே, நான்தேவரீர் தங்க ளுடைய தீனில் இசுலாமென்னு மார்க்கத்திலாகமுன்னே ஜாகிலாக இருக்கும்போது, கலால், ஹறுமின்னதென்றறியாமல் மனம்போன போக்காகவேநடத்துகிறதும் வழமையாகஇராஜாக்களுடைய அரண் மனைகளிலே தந்திரமாகப் புகுந்து களவுசெய்கிறதும், குதிரைகளைத் திருடுகிறதும், அறபிகளுடைய வீடுகளிலே கன்னக்கோல் வைத்துப் பணங்காசி யுடைமைகளைக்கொள்ளையாடுகிறதும், ஊரூராகச் சுற்றித் திரிகிறதும், வழிகளில் வாத்துப்போக்கான பாட்டை சாரிகளையடித் தவர்களுடமைகளை யெடுத்துக் கொள்ளுகிறதும், காடுகளிலே பல விதமான வேட்டையாடி நல்ல மிருகங்களை வதைத்துத் தின்னுகிற துமே தொழிலாகத்திரிந்தேன், இவ்விதந்திரியும் நாட்களி லோர் நாள் ஓர்மலையடிவாரத்தில் நான் வேட்டைபார்த்துத் திரியும்போது,

யானையைக்கொல்லும்படியான வோர் பெரிய வேங்கைப் புலியான தென்னைக்கண்டு அதன்வாலைநிமிர்த்து, முதுகை வளைத்து, நெஞ்சை யெழுப்பிக்கொண்டு என்னைப்பாய வந்தது. அதுகண்டு நான்பதறித் திடுக்கிட்ட நெஞ்சனாகியோடும்போது வாதில்சுகுரூவென்னும் பெயருடையவோரோடக் கரைபோய்ச் சேர்ந்தேன்.

அவ்விடங்களெல்லாம், தானியம் விளையும் பூமியாகவும், அப்பூமியை அடுத்திருக்கிற வூர்கள் மிகுந்தசிறப்புஞ் செல்வமும் பொருந்தினதாகவு மிருக்கின்றன. அவ்வூர்க்காடுகளெல்லாம் ஆணும்பெண்ணுமாக நிரம்பி யிருக்கின்றார்கள், அவர்கள் நிறமோ, கண்ணுக்கிடுங்கரியமையிலு மதிக கறுப்பாக இருக்கின்றது. அவர்கள் சரீரமெல்லாம் உரோமமாகவு மிருக்கின்றன. அவர்கள்பலமோ, வேங்கைப்புலிபலத்திற்கொப்பாக இருக்கிறது, அவ்விடங்களில் மேய்க்கப்படும் ஆடு, மாடு, ஒட்டைகளோ, எண்ணிக்கையி லடங்காதவைகளாக இருக்கின்றன.

இவைகளையெல்லாங்கண்டு நான் ஆச்சரியமுள்ளவனாக அங்கு நிற்குமோர் ஆடுமேய்ச்சியை யடுத்து, அவனோடு நல்லவசனம்பேசி நெருங்கிச் சிநேகஞ் செய்துக்கொண்டு, சிலநாளவனுடைய ஆதரிப்பின்பேரிலிருந்து, பின்ன ரொருநாள் அவன். சந்தோஷ மறிந்து கிட்டநெருங்கி இந்தக்கோட்டை யாருடையதென்று கேட்டேன். அதற்கவன், ஜகாவென்றுசொல்லும் இராஜனுடைய கோட்டைஅவ்விராஜன் கதுவம்மிக்கிளையாருக்கெல்லாம் நாயகமானவன், அந்தக் கதுவம்மிக் கிளையாரோ, அறபிகளில் நின்று மெத்தப்பலசாலிகள்; நெருப்பைப்போன்ற கொடூரமான கோபத்தையுடையவர்கள்; சிப்பாய்த்தனத்தில் மிகுந்த சுத்தவீரியர்களென்று சொல்லியுடனே யென்னைப்பார்த்து நீர்யார்? எந்தவூர்? எங்கேயிருந்து எங்கேபோக வந்தீரென்று கேட்டான்.

அதற்கு நான், அறபிகளில் நின்று முயர்ந்த வங்கிஷத்தி லுள்ளவன், மிகவுஞ் செல்வத்தை யுடையவன், இப்போது காலவிரோதத்தினாலுண்டாகிய கிரகாசாரமென்னைத்தொட்டதால் நானிந்தக்கோலமாகினேன்; மேலு மெனக்கு வேறே யாதாமொரு தஞ்சமுமில்லை, யாதலால், இவ்வூரில் இராஜபரிபாலனஞ்செய்யும் நீசொல்லிய கதுவம்மியினத்திலுள்ள ராஜாவே யாதரவுவைத்துத் தேடிவந்தேனென்று

சொன்னேன். அதுகேட்டவன், என்பேரில்மிகுந்த கிருபையுள்ளவ னுகியென்னைப்பார்த்து மிகுந்தசந்தோஷத்தோடும் நானும்மைஇரா ஜனிடத்திற் கூட்டிக்கொண்டுபோய் விடுகிறேன், உலாத்து. உஸ்ஸா குபலென்னுந் தம்பிரானகள்கிருபையினல் இராஜாவர்லேயெதுவேனு முமக்குக் கிடைக்கும் பெற்றுக்கொள்ளுமென்று சொல்லித் தரு மைப்பார்த்து இராஜனிடத்திலென்னை கூட்டிக்கொண்டுபோய் விட் டான். அப்போது நான் இராஜனைக்கண்டு தெண்டனிட்டுச் சாஷ் டாங்கஞ்செய்ய எழிந்துநின்று, அவனைப்பார்த்து மகாராஜாவே! நீ ரெங்களுக்கெல்லாம் நாயகத் தனமாகியும், எதிர்த்த சத்துருக்களுக் குச் சிங்கேறுபோலாகியும், ஏழையெளியோர்கட்குக் கற்பகத்தரு வைப்போலாகியு மிருக்கின்றவுமக்கென்னுடைய சலாம் பெரிதாகவுண் டாவதாகவும், நானேரெம்பவு மேழையாகியவோர் பரதேசி யான வன். மேலும், எனக்கு யாதாமொரு வுதவியுமொத்தாசையுமில்லா தவன். ஆதலால், நானெதுங்குந்தலம் தேவரீர் தாங்களாகவே யிருக் கும், உலாத்து உஸ்ஸா, குபலென்னுந் தம்பிரான்கள் மேலாணை யாக நானும்மையே நம்பிவந்தேனிரட்சித்துக்கொள்ளும் இராஜாக் கள் நெற்றித் திலதமானவரே! யென்று புகழ்ந்து சொன்னேன். அது கேட்டந்தச் சஹாபுராஜ னென்பேரில் மிகுந்த கிருபையாய் முக மலர்ந்தவனுகி, யுடனே யவனுடைய அரண்மனையிலேயே யுண்டியும், திண்டியும், யுடுப்பும், படுக்கையுங் கொடுத்து வைத்துக்கொண் டான். அப்போது, நானவனைக் கதிசெய்யவேண்டுமென்கிற என் ணமே யுள்ளவனுகக் காலம் பார்த்துக்கொண்டே யிருந்தேன் அப்போதில்,

அங்கு நடந்த காரணம் யாதெனில், அந்தஜஹாபென்னுமிராஜ னுக்கு ஒரே யாண்மக னிருந்தான். அவன்பெயர் மஹாரிக்கென்று சொல்லப்படும், அவனே, பருத்ததலையன், கொழுத்தமேனியன், திர ண்டதோளன், உருண்டகையன், கருகியநிறத்தன், காளவாயன், நீள வுடலன், புலிநகத்தன், கொடும் பாதகன், கோள், களவு, பொய், நிந்தனை, உருட்டுப், புரட்டு, கெடுதி, கேடு, வம்பு, தும்பு மாறுட்டம் கோள், குண்டுணி, ஊடி, வெறி, கோபம், மஸ்து, விண்விபசாரம், கற் பழித்தல், ஊர்க்குடிகெடுத்தல், முதலாகிய துற்செயல்களையெல்லாம்

அஞ்சாமல் செய்யும் நெஞ்சையுடையவன், இன்னும் அல்லாஹு தஆலாவுடைய கிருபைபெறாதவன், பெரியோரைப் பேணி நடக்காதவன், சிறியோரைச் சினப்பவன், வழமையாக மனுடருடைய இரத்தத்தைக் குடிப்பவன், வெட்கமான மில்லாதவன், இவ்விதமான அந்தப்பாதகன் தன் தகப்பனுன, ஜஹுறாபென்ற இராஜனை யடுத்து நின்று ஒய் தகப்பனே! நீரோ மிகுந்த கிழவர், அதிலுமோ கோழைநெஞ்சையுடையவர், ஆதலால், உம்முடைய படைபண்டாரத்தாரும் வும்முடைய சொல்லுக்கஞ்சாமல், மீறி நடக்கிறார்கள், அஃதெனக்குப்பார்த்துச் சகித்திருக்கக் கூடவில்லையே, யுமதரசாட்சியையும் எனக்குத் தருகிறீரில்லையே, அப்படி யிருப்பதால் யும்மை வெட்டிப் போட்டாவது நானவர்களை யடக்கி யாள்வேனென்று சொல்லுகிறதே தொழிலாயிருந்தான்.

இவ்விதங் குறும்பாகநடக்கின்ற மகனை மஹாரிக்கென்பவனை யடக்கியாளத்தனக்கு முடியாமல் அந்தஜஹுறாபுராஜன் மந்திரியர், பிரதானியர்களிடத்திலிச்செய்திக ளனைத்தையுஞ்சொல்லித் துக்கித்து அழுத கண்ணுக, அவர்களைப்பார்த்து நீங்களேனு மோர் யோசனை செய்து என்மகனுடைய பாதகனை துஷ்டத்தனங்க ளென்னைவந்தணுகாமற் செய்யுங்கள், அப்படிச் செய்தபேர்களாரோ அவர்களுக்குப் பொருள், நிதி, பூமியிவைகளை யினும்கொடுப்பேனென்றுன்.

இவ்விதம் நடக்கும் நாட்களி லோர்நாள், ஊராரடங்கலும் மஹாரிக்கென்ற துட்டனன்செய்கையை பொறுத்திருக்க முடியாமல், அவன் தகப்பனுன ஜஹுறாபென்னு மிராஜனிடத்தில் ஒரே கூட்டமாகக் கூடிவந்து ஆசாரஞ் செய்திருந்துவறுமித்த நெஞ்சராய் ஒருமித்துவாய்திறந்து, இராஜாவே "வேலி பயிரைக்காக்கும், இராஜநீதி யுயிரைக்காக்கும்" இதுவே லோகத்தில் முறைமையாக நடந்துவருகிற வழக்கம். அஃதின்றி யிப்போ திந்தவூரில், எந்தமுறைமையுந் தப்பிப்போயினது, ஆனதால், * உமது பெண்சாதி யுடைய மகன் மஹாரிக்கென்பவனுரிலுள்ள ஏழையெளியகுமாரர்களின் கற்பையழித்தும்மானேஸ்

---

* உமது பெண்சாதி மகனென்றது, கானீன்னென்றது இவ்வாக்கியம் ஹறும் புறந்தவனென்றறியக் கானீன்னென்று மறைத்துச் சொன்னார்களென்று காண்க.

திரிகளுடைய யானபிமானமழித்துந் திரியுகின்றான், அஃதெங்களுக்குப் பொருத்திருக்க முடியவில்லை யாதலால், இவ்வூரை விட்டு உமது கண்ணிலும் விழிக்காம லெங்கேயாவது பிறதேசங்களுக்குப்போய்விடுகிறோமென்று வருத்தத்தோடு சப்தித்து முறையிட்டார்கள்.

இவ்வித முறையிட்ட வூரவர்களைப் பார்த்துச் சஹாபுராஜன்சலிந்தவனாக, ஓகே என்னூரவர்களே! குடித்தனத் தவர்களே!! நீங்கள் சொன்னதெல்லா முண்மைதான், அந்தப்பாதகனாலே எனக்குமிருந்த மனப் பயங்கரமுண்டாய், என்னமுங் கருத்துமழிந்தவனாக இருக்கின்றேன். ஆதலாற் பூண்ட மனத்தோடு முங்களி லாராவது துணிவுகரத்துடனே அந்தப்பாவிப்பயலைக் கொலைசெய்யக் கூடுமானாற் றடையில்லாமற் கொலைசெய்துபோடுங்கள், நானதைக்குறித்து யாதாமொரு பொல்லாங்கும் நினைக்கமாட்டேன், தண்டனைசெய்யவுமாட்டேனென்று சொன்னான்.

இச்சொல்லைக் கேட்ட ஊரவர்கள், இஃதென்ன "கிணறுவெட்டப்போன இடத்திற் பூதம் வெளிப்பட்டதுபோ லிருக்கின்றது" நாம் இராஜனிடத்தில் வந்து அவருடைய பொல்லாதபிள்ளைசெய்யும் பாதகங்களான துட்சணங்களை நீக்கும்படியாகச் செய்யுமென்றுவந்துமுறையிட்டால், அவர் பழியை நமதுபேரிலேபோடுகிறார் இதுநல்ல காரியந்தானென் றொருவருக்கொருவர் பேசிக்கொண்டு ஜஹாபென்ற இராஜனைப்பார்த்து, இராஜாவே யும்முடைய மகன்செய்யும் துஷ்டதனத்திற்குத் தகுதியாக, முன்னர் மஹாரிக்கென்று விட்டபெயரை மாற்றி இறவுசுல்கூலென்று பேரிடவேண்டுமென்றார்கள், அதுகேட்டுச்சபையோர்கள் யாவரும் இந்தப்பெயரவனுக்குத் தகுதியானபெயர்தானென்றொப்புக்கொண்டார்கள். இப்படியிருக்கச்சே, ஊரவர்கள் சபையை விட்டுச்சரேலென்றெழும்பி இராஜாவேவருகிறோமென்று மவுனமாகப் போய்விட்டார்கள். அதுகண்டு, இராஜா ஓகோ! ஊரவர்கள் நமதுபேரிலுங் கோபங்கொண்டவர்களாய்ப்போகிறார்கள் போலே தோன்றுகிறதே, இதற்கு நாமென்னசெய்வோம், பாவி மகனாலே வந்து விளைந்திருக்கிற சம்பவிப்பு இப்படி யெல்லாம் வரும்படி யாச்சுதேயென்று வியாகூலமுற்றிருக்கச்சே,

இங்கே, சபையில்நடந்த பேச்சுகளை யாரோவொரு கோளினால் அந்தப்பாவி மஹாரிக்சென்பவன் அறிந்து சரேலென்று வெளியிலே

பிரயாணமாகி யொருமானுடன் தலையை வெட்டித் தூக்கிக்கொண்டு தகப்பனிருக்கும் அரண்மனையிற் சென்று ஓய்! தகப்பனே இதோ பாரும் தலையை, யுமது தலையையு மிதுபோலதான் வெட்டுவேன், அஃதேனென்றால், நீர்ஊரவர்கள் மேலன்புகொண்டு அவர்கள் கூடி வந்து சொன்னசொல்லைக்கேட்டு என்னை வெட்டும்படி திட்டஞ்செய் தீரல்லவா? அதுவந்தவிர, மஹாரிக்கென்றபெயரைமாற்றி இறவுசுல் கூலென் றழைக்கவேண்டுமென்றதையு மொத்துக்கொண்டீரல்லவா? அந்த இறவுசுல்கூலுடைய செய்கையைப் பாருமென்று அகங்காரத் துடனே வாளையசைத்து இடியைப்போலே, ஓர் சத்தங் கர்ச்சித்து முழக்கிக்கொண்டு கிட்ட முடுகினான். அதுகண்டு, அங்கிருக்கு மந் திரிமார்கள் முதலான சமஸ்தருங் கெடிகலங்கித் திடுக்கிட்டுப் பயந் தார்கள். அவர்களில் நின்று மும்மடங்காக இராஜனாகிய ஜகாபு பயந்தவனாயிருந்தும் இராஜனாதலால், தான் கொலையைத் தப்பிக் கொள்ளும்படியானவோருத்திசெய்து அக்கத்துஷ்டனைப்பார்த்து என்கண்மணியானமகனே! உயிருக்குயிரே!! ஈரற்கொழுந்தேயென்று கட்டியணைத்து முத்திமுகந்து வாழ்த்திப்போற்றி அடாமகனே! என்னுடைய இராஜரீக முனக்கேயல்லாது யாருக்கு நான்கொடுப் பேன். அப்படிக்கொடுக்க வுன்னைத்தவிர வேறே மக்களுமில்லையே நெருங்கியே வாரீஸ்தார்களுமில்லையே.

இவையெல்லாந் தெரிந்திருந்தும் நீயென்னோடு வெறுப்பை யடைந்திருக்கிறாய், பெற்ற பிள்ளைகளுக்குத் தாய்தகப்பன்மார் புத்தி சொல்லுகிறதுமுண்டும், அவர்கள் செய்யுங் குற்றத்தைப் பொறுக் கிறது முண்டும், ஆனால், அப்படித் தாய் தகப்பன்மார் பொறுப்பது போலே ஊரார்களும் பொருப்பார்களோ, அவர்களை நாமே பாது காத்து நெஞ்சிரக்கம்வைத்து மானமரியாதையுடனே யாட்சிசெய்ய வேண்டுமே. அப்போதுதானே, அவர்கள் யாவரும் அஞ்சிபயந்து குடியிறை முதலான மற்றெந்த தண்டனைக்கு முட்படிந்து நடப்பார் கள். அதை விட்டுவிட்டு, இராஜ குமாரனாயிருக்கிற நீயேயூரிற் றுந்தறைசெய்தா லூரார்கள், எங்கேபோய் முறையிடுவார்கள்? இப்போது ஊருக்குக் கர்த்தனாக இருக்கிற என்னிடற்றிற்றானேவந்து முறையிடுவார்கள், நீஊர்க்கர்த்தனாகியிருந்தாலுன்னிடத்தில் வந்து முறையிடுவார்கள் அப்படிமுறையிடுங் குடிகள் மனத்தைத் தேற தலையாக்கவேண்டுமா வேண்டாமா?என் சிரோமணியான மகனே நீயே சொல்லென்று மனத்திலோர் குபாடத்தை நினைத்து வெளிக் குத் தோற்றாமற் சொன்னான்.

இவ்விதஞ்சொன்ன, தகப்பனுடைய வுருக்கத்தையும், தாழ்ச்சியையும் நிசமென்று நம்பிச் சந்தோஷங் கொண்டவனாகி மஹாரிக்கு பதிற்பேசாமலிருந்தான் அந்நேரத்திற் பசியாற இராஜனுக்குக் கோதும்பை ரொட்டியும், சுவைப் பதார்த்தங்களும், முந்திரிகைச் சாராயமும் வந்தன. அதுகண்டுடனே இராஜன் மகனை யுபசாரணையாக அழைத்துக் கூட இருத்தித் தின்னென்று கொஞ்சங் கையிலெடுத்து மூட்டினன். ஆனால் "ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டென்பது போலத்" தகப்பன் கொண்டிருக்கு முள்ளெண்ணந் தெரியாமல் அப்போதவன் செய்த பாசாங்குத் தனமான பசப்புக்கும், உபசாரணைக்கும் புத்திமருண்டவனாகிச் சந்தோஷ மிகவுங்கொண்டு பால் பழாதிகளைக்கூட இருந்து புசித்துக் கொண்டிருக்கையில் தகப்பன் றன்கையினாலே மிகவுமஸ்தாகியசாராயத்தை மட்டாகக் கிண்ணத்திலூற்றித் தான் குடித்தப்பின்னர், அதிகமாக வூற்றி யூற்றி மகனுக்குக் கொடுத்தான், அவனு முடக்கு முடக்கென்று கொடுத்ததையெல்லாங் குடித்து முடித்தான்.

இப்படி யிருவருமுண்டு தின்றுகுடியுங்குடித்தபின்னர் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டு மிருக்கையில், மஹாரிக்கு அதிக குடிகுடித்ததினல் வெறிதலைக்கேறி கண்சிவந்து வாய்நீர்வற்றி வாட்சைகொண்டவனாகி வாயிற்போகிற ஈயெறும்புந்தெரியாமற் றன்னைமறந்து நித்திரை செய்தான். அதுகண்டு அவனுடைய தகப்பனான ஜஹா பென்னும் இராஜன் நாம் நினைத்தபடி முடிக்க அது நல்லதருணமென் றெழும்பி முடிக்கயிற்றினாலே மகனுடைய கையிரண்டையுஞ் சேர்த்து முழிபிதுங்கப் பின்கட்டாகக்கட்டிக், காலுக்கு விலங்கிட்டுருட்டிக் காவலாளர்களையழைத்து இந்தப்பாவிப்பயலைத் பதனமாகச் சிறையிலிட்டுக் கடிதானகாவற் செய்யுங்களென்றேவினன்.

அக்காவற் காரர்களும் அதுபோற் சிறைச்சாலையிற் கொண்டு போய்ப் போட்டுக் காவற்செய் திருக்கையில் இறவுசுல்கூல் வெறி தெளிந்து பார்த்தபோதவனுடைய கையிற் கட்டும் காலிற்பூட்டுமாக இருக்கக்கண்டு ஆ! ஆ! இஃதென்ன மோசமாக இருக்கின்றது, என்தகப்பனெனக்கு இவ்விதஞ்செய்தானல்லவாவென்று முக்கினன்.

முனங்கினான். கோபத்துடனே பல்லை நெறநெறென்று கடித்துக் கட்டோடுங், காலிலிட்ட விலங்கோடு முருண்டுபுரண்டெழும்பப் பார்த்தான், அப்படியுமெழும்ப எலாமையால், அங்கிருந்த காவலாளரைப் பார்த்து, ஒகே! அருமையான காவற்காரர்களே யெனக்கிட்டிருக்குந் தளைகளைத் தட்டிவிடுங்களென்று தருணத்துக்குத் தக்கபடி கெஞ்சிக் கெஞ்சிச் சொன்னான்.

அதுகேட்டு, அந்தக்காவலாளர்கள் இராஜனுடைய கட்டளைக்குப் பயந்து இறவுசல்கூலைப்பார்த்து, ஒகே! இராஜபுத்திரனே அந்தவேளை யொன்றுமாத்திர மெங்களாலே முடியாதென்று சொன்னார்கள். அது கேட்டு இறவுசல்கூல் தன்வருத்தம்பொறுமற் கூக்குரலிட்டு என் தகப்பனே தகப்பனே யென்றரற்றினான்; இவனிப்படிச் சிறைச்சாலையிலே கடபிடி செய்வதை யறிந்தவன் தகப்பனான ஜஹாபென்னுமிராஜன் வந்து பார்த்தபோது, மகனான இறவுசல்கூல் மிகவுங் கெஞ்சிக்கெஞ்சி யழுது என்னைச்சிறையைவிட்டும் நீக்கிவிடும், நான் சாகப்போறேனே தெரியவில்லையா என்னுடைய அருமையான தகப்பனே யென்று சொன்னான்.

அதுகேட்டுத் தகப்பனான ஜஹாபென்னுமிராஜன் தன்மகன் இரவுசல்கூலைப்பார்த்து, அடாமகனே "அடாதுசெய்தவர்கள், படாதுபாடுபடுவார்களென்ற" பழமொழியுனக்குத்தெரியாதோ, நீயென்னைக் கூடிய சபையிலேவாளை யுருவிக்கொண்டு கொஞ்சமேனு நெஞ்சமஞ்சாமல் நெருங்கிவெட்டவந்தாயே, இப்போது நானுன்னை வெட்ட இலேசாயிருந்தும், இதுவரைக்குமேல் வெட்டாமலிருக்கிறேனென்றால் "பெற்றமனம்பித்தும், பிள்ளைமனங்கல்லுமென்ற" பழமொழிப்படிக் கென்மனத்திலிரக்க முண்டாயிருக்கிறபடியாலேதான், இனி நீ இச்சிறையிலேயே கிடந்துன்னுடைய மதமெல்லாந்தீர்ந்து நாளுக்குநாள், தானாயிளைத்துச்செத்துப்போவென்று தீர்ப்பாகச்சொல்லிப் பின்னர், அங்கிருக்குங் காவற்றலைவர்களைப்பார்த்து நீங்களிவனை மிகுந்தபயங்காத்துடனே கெட்டியாகக்காவல்செய்து, இவனுக்கு மிகுந்தவருத்தத்தையு முண்டாக்குங்களென்று சொல்லிவிட்டுத்தன்னிடத்துக்கு வந்துவிட்டான்.

பின்னர்,சிறைச்சாலையிற்கிடந்துவருத்தப்படுகிறஇறவுசல்கூல் நான்சாகிறேனே, சாகிறேனேயென்று கூக்குரலிட்டு அங்கிருக்குங்காவ

லாளரை கெஞ்சிக்கெஞ்சி, நீங்களெனக்கிந்தநோமுதவி செய்வீர்களானாலுங்களுக்கனேகவெகுமதிகள் பணங்காசுகள் தருவேன் ஆகையால் என்னுடைய கைக்கட்டைமாத்திரங் கொஞ்சம்நெகிழ்த்துவிடுங்கள், என்னால்வருத்தம் பொறுக்கக் கூடுதில்லையே யென்று சொல்வான், அதுகேட்டு, அந்தக் காவற்காரர்கள் எங்களால் முடியாதென்று தீர்ப்பாகச்சொல்வார்கள்.

இவ்விதமாகப்பாவி இறவுசல்கூலென்பவன், கல்விமான்களுடையசாபத்தினாலே பிதுங்கக்கூடாத துன்பத்திலேகிடந் துழல்பவர்கள் போலேதகப்பனிட்ட சிறையிலேதுன்பப்பட்டுக் கொண்டுகிடக்கச்சே, அவனுக்குப்பள்ளிக்கூடத்துத்தோழமையாயும், உயிருக்குயிராயும், உற்றஇரகசியங்களைச் சொல்லியோ சிக்குந்தனதாயுமுள்ள மகீசக்கென்றொருதோழனிருந்தான், அவன், தன்றோழனான மஹாரிக்கு விஷயத்தில்நடந்த கெடுதிகளையெல்லாங்கேள்வியுற்றுப் பதறிநெஞ்சயர்ந்து அன்றிராவுகாலத்திலேயே சரேலென்று சிறைசாலைமதிலை நெருங்கிவந்து, அங்கிருக்கும் ஜன்னல்களிலொரு ஜன்னலின் புறத்தில் நின்றுகொண்டு, ஓய்தோழனே, தோழனே, மஹாரிக்கே யென்று கூப்பிட்டான்.

அதுகேட்டு, இறவுசல்கூல்தன்னுடைய தலையைத்தூக்கி நிமிர்ந்துபார்த்தான், அப்போதங்குகூப்பிட்டவன் தன்றோழன் மகீசக்கென்றுதெரிந்து, ஏங்கியேங்கி விம்மிவிம்மி யழுது நானிந்தவருத்தத்துடனே சிறையிலேகிடப்பதை நீயெவ்விதமேனு மோர்தந்திரஞ் செய்து நீக்கமாட்டையாவென்று சொன்னான், அதுகேட்டு, அந்தமகீசக்கென்பவன், ஆ,ஆ,இந்த நேரத்திலே தானமதுதோழனை இச்சிறையைவிட்டும்வெளியில்வர எதுவேனுமோருபாயதந்திரஞ் செய்யவேண்டுமென்று, ஓர்குபாடயோசனையைக்கருத்திலெண்ணிக்கொண்டு சரேலென்று ஜஹாபென்னுமரசனிடத்திற்குவந்தான், அப்போதந்தச் சஹாபென்னுமிராசன்தன்னுடைய அரண்மனையில் நித்திரைசெய்தான், அதையிவனறிந்து காவலாளிகளாலே தான் அங்குவந்து நிற்பதைத் தெரிவித்து, உள்ளே சென்றுஇராசனோடு சிலநல்வசனங்களை வசனித்திருந்து பின்னர், அவனுடைய அழகிய முகத்தைப்பார்த்து தேவரீர் தாங்கள் நல்லவேலை செய்தீர்கள தங்களுடைய, மகனைக்கொண்டு மிப்போது தான் ஊர்க்கலகம் இல்லாதிருக்கிறது, வெகுபேர்களுங்களைப் புகழுகிறார்கள், அடங்காத மகனை யடக்கிப்போட்டீர்களே, உங்கள் வல்ல

மையே வல்லமை, என்ருலும் ஒருவேளை அவனென்ன விதத்திஞ லும் சிறையை விட்டுத் தப்பிவந்துங்களைக் கொன்றுபோடவும் போதும்.

அஃதெனக் கெப்படித்தெரியுமென்ருலோ தாங்களவனைச் சிறை யிலிட முன்னமே என்னேடு மிதுகாரியத்தைக் குறித்து மிகவும் பூணிப்பாகப்பேசினுன். அதற்கு நானவனைப்பார்த்து, அப்பா தகப் பனுச்சுதே யென்று பல தரஞ்சொல்லியுந் தங்கள் கொலையை மறக் காமலே பேசிவந்தான். இப்போது, நான் வந்த காரியமேதெனில், நீங்களேழைக்கருத்தையு மிரக்கத்தையு முடையவர்களாச்சுதே, ஒரு வேளை யிரங்கியவனை விட்டு விடுவீர்கள், அல்லது, அவன் சிறையை விட்டுத் தப்பிவந்தாலும் கொலைபாதகஞ்செய்து விடுவானேயென்று பயந்து தங்களுக்கு அவன் மனக்கருத்தை யறிவித்து அவனை யென் காவலிலாக்கி இரகசியமாகக் கொன்றுபோடலாமென்று வந்தே னென்று சொன்னுன்.

அதுகேட்டு, சஹாபென்னுமிராசன் முன்பின் மகனுலேநடந்த சங்கடங்களும், அவனைக் கொலைசெய்யத் தனக்குப்பிள்ளை யென்ற விருப்பத்திஞல் மனம் வாாமலிருப்பதும், இந்த மகீசக்கென்பவன் மகனுக்குத் தோழனுதலா லிவனிடத்தில் அவனம்மைக் கொல்ல வேண்டுமென்று சொன்னது நிசமென்றும் பலதையும் யோசித்து, அந்த மகீசக்கைப் பார்த்து, ஒகே! மகீசக்கே, நீ நாடினபிரகாரஞ் செய்யென்று சொன்னுன்; அதுகேட்டு மகீசக்கென்பவன் இராஜா வைப் பார்த்துப் போற்றிப்புகழ்ந்து, அவனிடத்திலே, தான் சிறை சாலைக்குள்ளே போகவும், அங்கிருப்பவர்கள் இறவுசுல்கூலைத் தன் னிடத்தி லொப்புக்கொடுக்கவும் தேவரீர் தங்களுடைய முத்திரையா கிய மொகர்வைத்த காயிதந் தாருங்களென்று கேட்டான். உடனே ஜஹாபென்னும் இராஜன் "வரும்விதி இராத்தங்காதென்ற" பழ மொழியைப்போலே, தனக்கு வருகிறகொலை இவ்விதமென்று தெரி யாமலும், மகீசக்குடைய குபாடந்தெரியாமலும், அவன் கேட்ட பிரகாரம், காயிதமெழுதி மொகரும் வைத்துக்கொடுத்தான்.

அக்காயிதத்தைக் கொண்டுடனே மகீசக்கென்பவன் தான்றுடி வந்த காரியம் "தேடிப்போன முசல், காலடியிலே கிடைத்ததென்ற" பழமொழிபோலே கிடைத்தது. இனி நமது தோழன் மஹாரிக்கு தப்பிப் பிழைத்துக்கொண்டானென்று சந்தோஷமுண்டாகி ஆனந்தக்

கூத்தாடினவனுகச் சிறைச்சாலையை யடுத்துக் கதவைத் தட்டினுன். உடனே, காவலாளர்கள் கதவைத்திறந்தார்கள். அக்காவற்காரர்களி டத்திற் சொல்லிக் காவற் றலைவர்களிடத்திலே தான் கொண்டு போன காயிதத்தைக் காட்டினுன். அவர்க ளதைப்பார்த்து, ஒகே! மகிசக்கே!நீர் நல்ல வுத்தரவு பெற்றுக்கொண்டு வந்தீர், இந்த இராஜ குமாரனுலே எங்களுக்கும் பெரிய சள்ளையாகத் தானிருந்தது இனி நீராச்சுது அவராச்சுது பார்த்துக் கொள்ளுமென்று சொன்னுர்கள்.

அது கேட்டவுடனே மகிசக்குச் சிறைச்சாலைக்குள் நுழைந்து, நித் திரை செய்கிற மஹாரிக் கென்பவனைத் தட்டியெழுப்பித் தவனந் தீர்த்துக் கட்டையவிழத்துக் காற்றழையையும் நீக்கினுன். உடனே இறவுசல்கூ லுடலைவிட்டுப் போனவுயிர், அவ்வுடலில் மீண்டு வந்த வரை யொப்பாய்ப், புலியைப்போலே குதித்துத் தோழனுகிய மகி சக்கு செய்த வுபாயதந்திரங்களை யறிந்தவனை மிகவுமெச்சினுன். அப் போது பாவி மகிசக்கென்பவன் இறவுசுல் கூலைப்பார்த்து ஓய்! தோழ னே நீயென்னை மெச்சுகிற தோர் பக்கத்திலிருக்கட்டும், பொழுதுவிடி ந்தாலுன் தகப்பனுலே யுனக்குமெனக்கு மென்னகெடுதி வருகிறதோ தெரியாது ஆதலால், விடியமுதலிற் சுரோலென்றுபோய் உன் தகப்ப னைக்கொன்று போட்டாற்றுன் யாதாமொரு சள்ளையும் வராது சீக்கி ரம் விரைந்துபோவென்றுன். அதுகேட்டு, இறவுசுல்கூலென்ற கொ டும்பாதகன் தன்னிருப்பிடத்திற்குப் போய் ஒரு வாட்கத்தியை யெடு த்துக்கொண்டு, தன் தகப்பன் படுத்து நித்திரைசெய்யும் இடத்திலே புகுந்து அவனைத் தட்டியெழுப்பி வுன்னுடைய காலங்குறுகினது சா வடுத்துக் கொண்டதென்றுன். அதுகேட்டு, இராசன்திகில்கொண்டெ ழுந்து, எடா பாவிப்பயலே!புன்னையார் தழைதறித்து விட்டார்களெ ன்றுன், அதற்கு இறவுசுல்கூல் யாதாமொரு ஜவாபும் சொல்லாமற் றன்கையிலிருந்த வாளைக்கொண்டு தகப்பனுடைய கழுத்திலோர் வீச் சுவீசினுன். அதனுல் அவனுடைய வுடல்வேறு, தலைவேருகத்தெறித் துவிழுந்தன, அதுகண்டு, இறவுசுல்கூல் சந்தோஷமாகத் தகப்பன ணிந்திருந்த உணையாழி முத்திரை மோதிரத்தையும், கிரீடத்தையு மெடுத்தணிந்துகொண்டு சூரியோதயத்திற்கு முன்னே சிங்காதனத் திற்கு வந்து வெட்டுப்பட்டதலையை மறைத்து வைத்துவிட்டுத் தான் பதினுறடி வேங்கைப் புலியைப்போலிருந்தான். இவனிவ்வித மிருக் கச்சேசூரியனு முதயமானுன்.

அப்போதங்கே, வழக்கப்படி ஜஹாபென்னும் இராஜனுடைய் சபைக்குவாப்பட்ட சேவகர் யாவரு மொழுங்காக வந்துபார்க்கும் போது, பசுவிருந்த இடத்திலே புகுந்தப்பசுவைக் கொலைசெய்து விட்டுப் பதினறடி வேங்கைபுலி யிருப்பதுபோல கொடூர பாதக ஞகிய இறவுசுல்கூலிருப்பதைகண்டு, அவர்கள் யாவரும் பதைபதைத்து, நெஞ்சயர்ந்து; உடலுழப்பிணங்களெல்லாம் நடுநடுங்கியாடும் பாவைகளைப்போல மூலைமூலைடக வொதுங்கி நின்ருர்கள்.

அப்படி நிற்கின்றவர்களை இறவுசுல்கூல்பார்த்து. ஏன்பதுங்குகிறீர்கள்? ஏன் பயப்படுகிறீர்கள்? நேறெல்லாம் இந்தப் பதுக்கம் பயமெங்கேயிருந்தது, வாருங்கள் வாருங்களென்று கிட்ட வரவழைத்துத், தான்வெட்டியதகப்பன்தலையையெடுத்துக்காட்டி; இந்தத் தலையாருடைய தலை தெரியுமா? வென்று கேட்டான்; அதற்கவர்கள், இறவுசுல்கூலைப் பார்த்து, இந்தத்தலை தேவரீர் தாகள் தகப்பனருடைய தலையென்று சொன்னர்கள். அப்போது இரவுசுல்கூல் அலங்காரத்துடனே அச்சேவகர்களைப் பார்த்து ஏகே! சேவர்களே யுங்களில் யாராவது என் சொல்லுக்குட்படாமற் பிசகிநடந்தா லிதுபோலே தானுங்கள் தலைகளையும் வெட்டுவேனென்று பயங்கம்வரும்படி யுறக்கிச்சொன்னன் அதுகேட்டுச், சேவகாடங்களும் நடுக்கங்கொண்டு வாயுலர்ந்தவர்களாகி, இறவுசுல்கூலைப்பார்த்து! இராசராசாக்கள் திலதம்போன்ற எங்களிராசாவே! தேவரீருங்கள் சொற்போலேகேட்டு நடந்து வருகிறேம், இனிநீங்களே எங்களுக்குத் தஞ்சம், ஆதாலால் இரட்சிக்கவும், பட்சிக்கவு முங்களாலே கூடுமான தாகையால் உங்க ளேவற்படிக்கு நாங்கள் நடக்கிறேமென்று சொன்னர்கள்.

அதுகேட்டு இறவுசுல்கூலென்ற பாதகன், அச்சேவகர்களி லொருசேவகனையழைத்து, இதோவிருக்கிறசெங்கோல்முத்திரையைநீகையி லெடுத்துக்கொண்டு முதன்மந்திரி யிடத்திற்போய் வேறே யாதாமொன்று மவனிடத்திற்பேசாமற் காண்பிவித்து, இராஜனும்மைச் சீக்கிரத்திலழைத்துக்கொண்டுவரச்சொன்னரென்றுசொல்லி யவனையழைத்துக்கொண்டுவாவென்று சொல்லியனுப்பினன். அதுபோல் அச்சேவகன் போய்ச் செங்கோலைக் காட்டி முதன்மந்திரியை யழைத்தான் அவன் இராசசெங்கோலைக் கண்டமாத்திரமே தாழ்ச்சியுடன் சரேலென்றெழுந்து இராசாவினரண்மனைக்குட்புகுந்து, சிங்காதனத்தைப் பார்க்கும்போது, அங்கே தன்னுடைய இராசன் ஜஹாபென்பவனை

க்காணுமற் பாதகனை இறவுசுல்கூ லிப்படைதக்கண்டு; இவன் பண் டுக்கொடுத்த பாதகனைச்சுதே, இவனெப்படிச் சிம்மாசனம் வந்தேறி னான்! இங்கேநடந்த காரணம்யாதோ தெரியவில்லையே யென்று மன த்துள்ளே நினைந்து பயந்து நடுநடுங்கிவெருகை நின்ருன். அப்படிநிற்கி ன்ற மந்திரியைப்பார்த்து இறவுசுல்கூலென்றபாதகன் யாதும் பேசா மல் முன் இவனுலேதா னமதுதசப னம்மை வெறுத்திருந்தா னென்ற கோபம் பெரிதாகி வாட்கதியினுலே யவனை யொரே விச் சாக வீசினன், அவ்விச்சினுல் மந்திரியுடைய தலைவேறு, உடல் வேருய் விழுந்தன.

பின்னர், இறவுசல்கூல்சிறைச்சாலையிலிருக்கிற பெரியகாவல்விரி யர்களையும், மந்திரியையழைக்கவிட்டது போலேயழைக்க ஆள்கள் விட் டான். உடனே அவ்வாட்கள்போய் சிறைக்காவலாளர்களை யழைத் தார்கள், அப்போது "170" பெயர்கள் பழமையாக ஜஹாபென்னு மிராசனுடைய சபைக்குவருவது போலே யாதாமொரு ஆயுதமுமில் லாதவர்களாய் வந்தார்கள். அப்பட வந்தவர்களைப்பார்த்து இறவுசுல் கூல், இவர்கள் யாப்சிறையிலே அவஸ்தைப்பட்டு அழுதழுதுகெஞ்சு ம்போது நெஞ்சிரக்கமில்லா விருந்தபேர்க ளல்லவாவென்று கோபங் கொண்டு, அந்த நூற்றெழுபது பேரையு மொரே யொழுங்காக நிறு த்தி, மான்கூட்டத்திற் புலி பாய்ந்ததுபோல பாய்ந்துவெட்டினன்.

பின்னர், பொழுதுவிடிந் நேழரைநாழிகைக் குள்ளே மற்றச்சே வர்களும், சின்னமந்திரிமார்களனேகரும், பிரியாது செய்திருக்கிறவர் களும், செய்யவேண்டியவர்களு மின்னுமற்றவர்களி யாவரும்சிங்கா சனமிருக்கு மிராசகொலு மண்டபத்திற்கு வந்தார்கள். அங்கேஜஹா பென்கிற இராஜனில்லாமல் இறவுசுல்கூ லென்றபாதகன் 'கூட்டத்தா ர் குடிகெடுக்குங் கொள்ளிவாய்ப் பேயைப்போல்' இருக்கக்கண்டு பயந்து நடுநடுங்கி யொருவர்முகத்தை யொருவர் பார்த்துப் பேசாம லெழுதும்சித்திரப் பாவையைப்போ லுணர்வற்றவர்களாகவொதுங்கி நின்றூர்கள். அப்படிநிற்பவர்களைப் பார்த்து இறவுசுலகூல் சிங்கநாத மிட்டு ஓகே! சனங்களே! நீங்களேதுகாரியத்திற்காக இருக்குமிடங்க ளிலிராம லச்சங்கொண்டவர்களாக நிற்கிறீர்கள்? அப்படி நிற்கவேண் டாம், என்முகதாவில் வாருங்களென்று சொன்னன்.

அதுகேட்டவர்கள் அஞ்சியொஞ்சி வந்தார்கள், அப்படி வந்தவர் களையெல்லாம் இறவுசல்கூல் பார்த்தவர்களை யணியாக நிற்கச்செய்

து, முன்வெட்டுண்ட தன்தகப்பனுடைய தலையை அவர்களுக்கெல்
லாந் தூக்கிக்காட்டி, ஓகே! சனங்களே இதுயாருடையதலையென்று
கேட்டான், அதுகண்டவர்கள்யாவரும் "இடிக்குமே விடிவிழக்கண்ட
மயில்கூட்டத்தைப்போலாகிப்" பயந்து இறவுசுல்கூலுடைய காலெ
திரே விழுந்து சாஷ்டாங்கஞ்செய் தெழுந்து வாய்பொத்திக்கைகூப்பி
யொழுங்காகநின்றவனைப்பார்த்து எங்களரசே!இந்தத்தலை தேவரீருங்
களுடைய தகப்பனார்தலையாச்சுதே, இவ்விதங் கொலைபாதகஞ்செய்த
வர்கள்யார்? அவர்களைத்தாங்க ளெங்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.
அப்படித் தேவரீர்தாங்கள் தெரிவித்தாலிப்பழிக்குப்பழியா யொருத
லைக்கு இலக்ஷந்தலைகளை மிகுசிக்கிரத்தில் வெட்டிக்கொண்டுவருகி
றோம் இராசாதிராசனேயென்று புகழ்ந்துசொன்னார்கள்.

அதுகேட்டு, இறவுசுல்கூல் அந்தச் சனங்களைப்பார்த்து ஓகே!
சனங்களே நானிருக்கும்போ தென்னையல்லாமல், என் தகப்பன்
தலையை வெட்ட வேறேயொரு சுத்தவீரியர்களுமிருக்கிறார்களா? அப்
படியில்லை, நானே யென் தகப்பன் தலையை வெட்டினேன், ஆதலால்,
இன்றுமுதல் நானுள்ளவரையி லுங்களிலாவது, ஊரவர்களிலாவது,
என் கூட்டத்தார் குடும்பத்தார்களிலாவது, மந்திரி பிரதானியர்களிலா
வது யாரேனு மென்னையிரகசியத்திலேனும்,பாரசியத்திலேனும், நித்தி
ரையிலே னும், அசதிமறதியாய் இவைகளைக்குறித்து நிந்தித்தாலும்,
என்சொல்லுக்குக்கீழ்ப்படியாமல் நடந்தாலுமுடனே யவர்களை யிது
போலே தலையைவெட்டி,யுடலைப்பிளந்து, சதையைவகிர்ந்து,காகங்கள்,
கழுக்கள்,நாய்கள், நரிகள் கொண்டாடிக்கொண்டாடித் தின்னும்படியாக
இரைபோடுவேன், என்சொல்லுக்குட்பட்டுக் கனிவாய்நடந்துவரப்பட்
டவர்கள் யாரோ, அவர்களை நான் மிகவுநன்றாக ஆதரித்துக், காணி,
பூமி, பணம், காசு, யுத்தியோகந், தலைமைத்தனமிவைகள் தாராதாப்
படி கொடுத்து நடப்பித்துவருவேனென்று சொன்னான்.

அதுகேட்டவர்களெல்லாரும் பெற்றவளர்த்தபிதாவை இந்தப்ப
ழிசெய்தவன், நம்மையெல்லாம் பழிசெய்கிறது இவனுக்கொருவரவு
செலவா? மேலும், இவன்சிறுபோதிலேயேயிருந்து கொலைபாதஞ்செய்
கிற துட்டனாச்சுதே, அப்பேர்ப்பட்டவ னிப்போது, இராசகொலு
விலுத்தண்டத்துடனேயிருக்கப் பெற்றுக்கொண்டான். அதனாலினியி
வன் "அற்பருக்குப் பவுசிவந்தா லர்த்தராத்திரியிற் குடைபிடிப்பா

ரென்பதுபோலே" செய்வான், இவனுடைய கெடுதிக்கிந்த மட்டும் பொறுமையாகச் சொன்னதே யோர்பெரிய காரியமென்று அவரவர்கள் மனத்தில் நினைத்தவர்களாக நின்றார்கள்.

அப்போ தந்தக்கூட்டத்திலே ஜகாபென்னு மாசனுக்கு இனத்திலுள்ளவனுமாய், பலத்த சத்த விரியனுமாய், வயதில் முதிர்ந்தவனுமாய், நெருப்பைப்போலே கோபத்தை யுடையவனுமாய் நின்றவொருவன்; இறவுசுல்கூல் தன்தகப்பனைச்செய்த பழியைக்கண்டும், அவன் அலங்காரமாகச்சொல்லுஞ் சொற்களைக்கேட்டு மனஞ் சகித்திருக்கமுடியாமல் சர்ப்பராசனைப்போலே சீறிச் சடலாதிக்கமும் துடிதுடிக்கும்படியாய் முன்னேறி, இறவுசுல்கூலைப்பார்த்து; எடா! இறவுசுல்கூலே நீயென் னவேலைசெய்தாய்,பயித்தியக்காரனே பெற்றதகப்பனை இம்மாதிரியானகொலைபாதகஞ் செய்தாயே

இதுபோல் முன்னுள்ள இராசகுமாரர்களேனும், மற்றமனுடர்களிற் சிறியவர்கள் பெரியவர்களேனும், அப்பேர்க்கொத்த கொடூரமான கொலைபாதகஞ் செய்திருக்கிறார்களென் றுன்காதிலே கேள்விப்பட்டிருக்கிறாயா? மேலுமுன்பனதுக்கேஇஃதொத்ததாகயிருக்கிறதா? நீசெய்தவேலை தானம், பூமி, புற், பூடு, மாமட்டை, அஃறிணை, இழிதிணை, உயர்திணை, முதலானவைகளும்பொறுக்கக்கூடாதவேலையாகவல்லோ செய்துபோட்டாய்? ஆ-ஆ, உலாத்து, உஸ்ஸா, குபலென்கிற இம்மூன்று தேவதைகளின்பேரில் சத்தியமாக எனக்கொத்தாசையுதவிக்கு ஆட்களிருக்குமேயானால், இப்போதே யுன்தகப்பன் பழிக்குப் பதிற்பழியாக வுன் சிரசையறுத் துயிரை யந்தரலோகத்திற்குச் செல்லவிடுவேனென்று சொன்னான்.

அதுகேட்டு, இறவுசுல்கூலென்னும்பாதகதுரோகிபெருங்கோ கொண்டு மீசைதுடிதுடிக்கத், கண்களிற்கோபாக்கினிதெறிதெறிக்கப் பற்களைநெறநெறத்து வண்டுறுக்கிக், கர்ச்சித்து அந்தக் கிழவனைப்பார்த்து எடாகிழவா! வுன் சுத்தவீரியத்தை பார்ப்போம் வாடாவென்று சிம்மாசனத்தில் நின்று வாளையுருவிக்கொண்டு கீழே குதித்துப் பாய்ந்து அந்தக்கிழவனுடைய வுச்சியின்மே லோர்வெட்டு வெட்டினான். அவ்வெட்டினாலே கிழவனுடல் தென்னங் கீற்றுக் கிழிந்ததுபோலே இரண்டுபிளவாகக் கிழிந்து கீழேவிழுந்தது.

அதுகண்டு, அங்குநின்ற மந்திரியர், பிரதானியர், சிற்றரசர், தலைவர், சேவகர் முதலிய மற்றவர்கள் யாவருங் கொண்ட பயங்கரத்தினாலவர் களுச்சிதொடுத் துள்ளங்கால்வரையிலும் வியர்வை சிந்தினவர்களாய் இராஜாளிப் பறவையைக்கண்ட மற்றப்பறவைகள் தங்களிறக்கைகளை விரித்துக் கீழேவிழுவதுபோலேவிழுந்து சாஷ்டாங்கஞ்செய் தெழு ந்துகைகளைக் குவித்துத் தெண்டனிட் டெழுந்து இறவுசுல்கூலைப் பார்த்து இராஜாதி ராஜனே! நீரெங்கள்பேரில் இப்பேர்கொத்த கோபமொருகாலமுங் கொள்ளாமற் கிருபையா யிருக்கவேண்டும். நீர் சிறும் நகங்களும் சிற்றுக்கடவாமல் நடந்துவருகிறோமென்று சொன் ஞர்கள் அதுகேட்டுப், பாபி இறவுசுல்கூல் அங்கேதாள்ச்சி யென்று நின்ற யாவரையும்பார்த்துங்களை யென்னுடைய இராஜரீகக்கிரிகைக் காக வேண்டிய செய்கைகளை நடாத்தி வருவதற்கான வுத்தியோகஸ் தர்களாக நியமித்துக்கொண்டேனென்றுசொல்லி முன்னர் தன்னு டைய தகப்பன் கொடுத்த சம்பளங்களுக்கு மிரட்டிப்புச்சம்பளங்க ளும், ருங்கிகளும் அவர்கள் தாரதரப்படி கொடுத்துச் சில வெகும திகளுஞ் செய்தான், செய்தசந்தோஷத்தினல்.

மந்திரியர், பிரதானியர், தலைவர், சேவகர்முதலிய யாவரும்இற வுசுல்கூலுடைய சொற்போலும், ஏவற்போலும்,மனம்போலும், நடந் துவந்தார்கள், பின்னர், இறவுசுல்கூல்சிற்றூர்கள் பட்டணங்களுக்குப் போய் அங்குள்ள சுத்தவீரர்களைத் தெரிந்தவர்களுக் கிரட்டிப்புச்சம் பளங்கொடுத்து உத்தியோகத்தில் வைத்துக்கொள்வேனென்பதாகச் சொல்லி வருகிறவர்களுக்குமுன்னீடுபணங் கொடுத்தனுப்புங்களென் றுஅனேகந் திரவியத்தையுங் கொடுத்து யுத்தியுள்ள தலைவர்கள்சேவ கர்களையனுப்பினன். அதுபோலே, தலைவர்கள், சேவகர்களைசிற்றூர் கள், பட்டணங்களுக்குப் போய் எங்களிராஜா இறவுசுல்கூலென்பவர் மற்றராஜாக்கள் கொடுக்குஞ் சம்பளங்களுக்கிரட்டிப்புக் கொடுப்பார். அதற்காகவரப்பட்டவர்களுக்கு நாங்கள்முன்னீடுபணங் கொடுப்போ மென்றுசொல்லித் திரிந்ததின்பேரில், அறபுராச்சியத்தாரனேகர் கூட் டங்கூட்டமாகக்கூடி, இலட்சங்குதிரைவீரியர்களும், இலட்சங்காலா ட்களும், ஐம்பதினுயிரம்பெரியதனக்காரர்களும் வந்தார்கள் அவர்களை இறவுசுல்கூல் கண்டுமகா ஆதரவுடனேதன்னூரிலே பெரிதாகக்கட்டி யிருக்கும்சிபாய்மண்டபங்களிலிருக்கச்செய்து அவர்களுக்குச்சில ஏற்

பாடுகளையுமேற்படுத்திகொடி, குடை; கூடாரம் இரதங்கள் முதலான விருதுகளும், பலபல ஆயுதங்களுங்கொடுத்துண்டி தின்றிகளுக்குமாகுமான சாமக்கிரியைகளுங் குறைவில்லாமல் நாட்கடோறுங்கொடுத்துத் தன்சொற்போலே சம்பளங்களும் அதிகங்கொடுத்துவந்தான்.

இவ்விதத்தில் அந்தவாதில் சுகுறுவென்ற இறவுசுல்கூலுடைய ஆரானது வந்தாருலும், வரத்தாருலும், வியாபாரங்களினுலும், புதிதாகக்கட்டிய மாடமாளிகைகளாலும், கூடகோபுரங்களாலும் இரதகஜதுரகபதாதிகளாலும் முன்னர்ஜஹாலென்ற இருசனிருக்குங்காலத்திலிருந்ததில் நின்றும் நூறுபங்கதிகமாக இருந்தன. இவைகளைக் கண்டு இறவுசுல்கூல், தன்மனத்தில்மிகவு மகிழ்ச்சிகொண்டு, நூதனமாக வோர் ஏற்பாட்டை யேர்ப்படுத்த வேண்டுமென் றெண்ணங்கொண்டான். அஃதியாதெனில், முன்னர் தன்தாய்தகப்பன், பாட்டன், பூட்டன் ஒட்டன் ஒப்பட்டன்மார்கள்வைத்து வணங்கிவந்த உலாத்து உஸ்ஸாகுபலென்ற இம்மூன்று புத்துஹான்களான தேவதைகளையும் விலக்கிநாம் புதிதாயொரு தேவதையை யுண்டாக்கியதனுலே சில தந்திரங்கள்செய்து யாவரையும் அதற்குப் பணியும்படி செய்து வைப்பதேநன்றென்று தன்னிடத்திற் சம்பளம் வாங்கித் தின்றுக்கொண்டிருக்கிற சில சிப்பி சாஸ்திரிகளையும் வேலைக்காரர்களையுமழைத்து அவனுடைய ஐந்தாங்கோட்டையில் நல்லவேர்மைதானியில் தான் வந்திருந்து கச்சேரிசெய்கின்ற எல்லைக்கெதிரே கொஞ்சந் தொலையில் மிகுந்த அழகாயும், உயர்த்தியாகவும் அகலம் நீளமாகவும் சந்திரகாந்தக் கற்களாலுஞ் சூரியகாந்தக்கற்களாலும் வாசல்களுக்கு நவரத்தினங்கள் பதித்தும், கற்றூண்கள் கடைந்து வைத்தும் ஓர் கோயில் மண்டபமும் அதற்குள்ளே பொன்னினுலும், இரத்தினங்களாலும் அலங்கார மானகொலு வாசனம் அந்தக் கொலு வாசனத்திற்குள்ளே சந்தனப் பலகையாலோர் பீடமும் அதற்கெதிரலே யானைத் தந்தத்தினுல் இறக்கவோராசனங்கட்டியிடங்களெல்லாம் பளிங்கியினுலே சரவிளக்குகள் நிலைவிளக்குகள் சுவர்விளக்குகள், லாந்தர்கள், கண்ணுடிப்படங்கள், இரத்தினக் கம்பள விரிப்புகள் சரிகைகின்காப்பு வில்லூரிப்பட்டு இவைகளினுலே திரைகளும் வைத்துச்சித்திரஞ் செய்யும்படியாய் அனேகந்திரவியங்களையெடுத்துக் கொடுத்தான் அதையவ்வேலையாளர்கள் சந்தோஷத்துடனே வாங்கிக்கொண்டு அவனிடத்தில் விடையும் பெற்றுக்

கொண்டுபோய்ச் சிலநாளைக்குள்ளே இராஜன் இறவுசுல்கூல் மனம் பூரணமாகும்படி கோயில்மண்டபமும், அதிலுள்ளறைகளுந், கொலு மண்டபமும், பீடமும் இருப்பதற் காசனமும் ஆகிய இவைகள் முதலான எவைகளும் கட்டிமுடித்தார்கள்.

அதுகண்டு இறவுசுல்கூல் மனம்பிரியமாகியவரவர்களுக்குத்தகுந்தபடி வெகுமதிகளுங் கொடுத்தும் பின்னர் பச்சை மரகதத்தினலோர் பெரிய வுருவமாகச் சிலையுஞ்செய்து அந்தச் சிலைக்குக் கண்கள் சிவந்த மாணிக்கத்தினுல் வைத்து ஒன்பது ரத்தினதியினுல் மற்றச் சோடிப்புகளுஞ் செய்து,தனக்குத்தெரிந்த,சூ,சூ. மந்திரங்களினுலே சில வுருவுமேற்றிப் பர்ருசென்ற பெயருமவைத்துத் தன் கூட்டத்தார் படை பண்டாரங்கள் யாவரையு மழைத்துக்கொண்டு மேளதாளத்துடனே பூசை புனற்காரமுஞ் செய்து மணங்கு மணங்காய்ச் சாம்பிராணி, சந்தனக்கட்டை, யாடுகள்மாடுகள், ஒட்டகங்கள் ஆயிரம் ஆயிரமாகப்பலிகொடுத்துக் கைமணி,மத்தளம்,வீணை,கிண்கிணி, முதலிய இராக சங்கிதத்தோடு கோயில்மண்டபத்தி லிருக்கும் கொலு வாசனத்திலே கொண்டுபோய் உள்ளே பணிசெய்தியற்றிய சந்தன பீடத்தில் வைத்து முதலில் இறவுசுல்கூல் தானே ஒதியமரம் விழுந்ததுபோலே கும்பிட்டு நெஞ்சாங்கிடையாய் முகங் குப்புற விழுந்து கிடந்து கொஞ்சம்நேரஞ் சென்றெழுந்து குடிவெறி மதுபானங்களெல்லாருக்கும் வழங்கச் செய்துபின்னர்

அங்கேகூடிய யாவரையும்பார்த்து ஒகே!என் கூட்டத்தார்களே! யினத்தாார்களே-சேவகர்களே-தலைவர்களே இன்றுமுதல் நீங்களென்றைக்கு மிதுவேதெய்வமாக ஆண்பெண்ணடங்கலும் வணங்கிவாருங்கள் பழைய தெய்வங்களான - உலாத்து-உஸ்ஸா - குபல்என்ற தம்பிரான்களைத் தள்ளிப்போடுங்களென்று சொன்னுன். அதுகேட்டியாவருமிகுந்த சந்தோஷங் கொண்டவர்களாக வொத்துக்கொண்டுடனே அந்தப்பர்ருசென்ற புத்துஹானுக்கு நேரே பலமரங்களானவைகள் அடியோடு சாடிவிழுவதுபோலே கீழேவிழுந்து சாஷ்டாங்கஞ் செய்தெழுந்தார்கள். அதுகண்டு இறவுசுல்கூல் நமதுஎண்ணம் நன்ருய் நிறைவேறினதென்று மனதில்மிகுந்த சந்தோஷங்கொண்டவனு

இக் கோயில் மண்டபத்துக்கு அன்றன்றுடு நடக்குமான பூசைபுனற் காரங்களுக்குவேண்டிய,பால் - பழம்-சீனி, கற்கண்டுமுதலிய காமக் கிரியைகளுக்குந் தேவையான தொகையும், மேள தாளசங்கீதஞ்சே விப்பர்களுக்குச் சம்பளமும், காவற் காரர்களுக்குச் சம்பளமும், தீபதூபங்களுக்குத் தேவையான தொகையும், நைவேத்தியஞ் செய் பவர்களுக்குச் சம்பளமுமேற்படுத்தி ாபிராப்பகலறுபது நாழிகையுங் கலியாணவீடு போல் வாசனை யலங்காரமாக இருக்கும்படி செய்வித் தான்.

இவ்விதங், கோயிலிலிரவும்பகலும் இடைவிடாமல் நடந்துவரு வதைக்கண்டியாவரு மனமகிழ்ந்து நிதநிதம் இரவிலும்பகலிலும், பரூசென்னும் புத்தகானைக் கூப்பிட்டுக் குப்புறவிழுந் தெழுந்து போவார்கள், வருவார்கள், ஆனால் இறவுசுல்கூலொருவன், மாத்திர மெட்டுநாளைக்கொருதரங் கோயிலுக்குவருவான் அவன்வரும்போது மிகுந்த அலங்காரஞ்செய்து மல்லிகைமுல்லிகைஇருவாட்சிபிச்சி முத லிய பூக்களாலே ஜோடித்து வைப்பார்கள், அவன் பரூசிருக்கிற கொலுமண்டபத்தைத் திறந்து, ஆடு-மாடு-ஒட்டகமிவைகளைப்பலி கொடுத்துக் கீழேவிழுந்து கும்பிட்டு அங்கிருப்பவர்களுக்கு வெகு மதியுங் கொடுத்துத்தாக்கீது செய்து விட்டுப்போவான், அதுகண்டு மற்றவர்கள் பயபக்தியுடனே இறவுசுல்கூல் சொல்லுக்குமாறுசெய் யாமற் கோயிலிற் புகுந்து அர்ச்சனைசெய்வார்கள், இவ்விதஞ் தன்னு டைய கட்டுப்பாடு நடந்தேறிவருவதைக்கண்டு இறவுசுல்கூல்மனமகி ழ்ந்து, புஜம்பூரித்து உரோமம் புளகிதங்கொண்டு மதமீறித்திறத்த சேவர்கள்-சிபாய்கள்அனேகரைக் கூடச்சேர்த்துக்கொண்டு வழிக ளில்நின்று வெட்டிப்பறிக்கிறதும், அறபிலிருக்கும் சிற்றரசர்களையெ திர்த்து சண்டைசெய்து அவர்களுரைப் பிடித்துக்கொள்ளை யெடுக் கிறதும், சிறை ஆட்களையுங் தன்னூறுக் கனுப்புகிறதுங் தன்சொற் கேளாதவர்களை வெட்டிப்போடுகிறதுமாகயிருந்தான்.

இவ்வித மூர்க்கத்தோடுமிறவுசுல்கூலிருக்கும்போது, அவனூரில் நின்றுங்கொஞ்சந்தொலைதூரத்தில் அம்பரினலே சிறியவோர் கேட் டையும், அதற்குத் [illegible] சோரும், ஆளடிமைகளும் வைத்து

க்கொண்டு அறபிவம்சத்திலுள்ள இராஜனொருவனிருந்தான். அவனூரிலும் இறவுசுல்கூல்படைகளோடு போய்க் கலகஞ்செய்து கோட்டையைவளைத்து முற்றிகைபோட்டுக் கொண்டிருந்தான். அது கண்டவ்வறபிராஜன் தன்சேவகரி லெழுநூறுகுதிரை வீரர்களைக்கொண்டு கோட்டைக்கு வெளியேவந்து தீர்க்கமாக நின்றுசண்டை செய்யும்போது, இறவுசுல்கூல் ஒருயுக்தியை நினைத்து தன்சேவகர்களைப்பார்த்திந்தவூரிலுள்ள ராஜனையுங்களில் யாருக்காவது தெரிந்திரிக்கில், அவனிந்தப்படையில் நின்றால், எனக்கவனைபின்னுனென்று காண்பிக்கவேண்டுமென்று சொன்னான், அதுகேட்டு ஒருசுத்தவீரியன் இறவுசுல்கூலைப்பார்த்து அதோகுதிரைப் பதாதிகளினடுவிலே மஞ்சட்பட்டுடையுடுத்திய புருவமத்தியிலே சிவந்தமாணிக்கச் சுட்டிப் பட்டமுமணிந்து, கையிற்கொடியும் பிடித்துக்கொண்டு நிற்கிறானே யவன்றானென்று சுட்டிக்காட்டினான்.

அதுகேட்டு இறவுசுல்கூல் தான் வழமையாக வைத்தகுறிப்புத்தப்பாமலெய்து ஜெயங்கொள்ளும் வில்லைவளைத்து. அதில் நாணேற்றி யம்பைத்தொடுத்து, அந்த அரபிராஜனுடைய புருவமத்தியைப்பார்த்து இலக்காகயெய்தான்; அந்த அம்பானது சுட்டிப்பட்டத்தின் மாணிக்கக் கல்லையுமுடைத்து சிதறிவிட்டு, உள்ளேநுழைந்து பிறடிவழியாகப் புறப்பட்டோடிற்று. அவ்வம்புக் காயத்தினுலிரத்தஞ்சிந்தசிந்தப்பட்டவ்வரபிராஜன் கீழே விழுந்திறந்தான். அது கண்டவனுடைய படைகளெல்லாஞ்தெறிந்து முறிந்தோடிக்கோட்டை போய்ச்சேர்ந்தார்கள்.

அதுகண்டு, இறவுசுல்கூல்மிகுந்த சந்தோஷமாகித் தன்படைகளைக்கொண்டு கோட்டை வாசலிற்போய் வளைந்துநின்று அங்கேயோடிப்போகிறவர்களைக் கைப்பிடியாகப் பிடித்துச் சிறையிலாக்கிவிட்டுக் கோட்டைக்குட்புகுந்து ஜெயபேரிகை முழக்கித் தன்கொடியையேற்றி எவ்விடங்களிலும் காவற்போட்டுப்பின்னர், அறண்மனைகளிலிருந்த பணங்காசிபிரத்தின முதலிய பல சாமக்கிரியைகளையுங்கொள்ளைகொண்டு தன்னுடைய மந்திரிகளிலொருவனை யங்கு தலைமையா யேற்படுத்திவிட்டுத் தன்னூர்வந்து சேர்ந்தான் அந்தஇரவுசுல்கூலிடத்திலிருக்கிற வாட்கத்தியானது கருப்பத்துல்லாவிலிருந்த வாட்கத்திகளேழு மெவ்விதமாகவோ வெளியாகிப் பூமியிலேழெல்கையிலிருக்கின்றன. அக்கத்திகளி லொன்றுயிருக்கும், அதனுடைய நீளம்

எழுசாண், அகலம்ஒன்றரைச்சாண் அதின்ருெவைச்சவிடிவாளைப் போலிருக்கும். அந்த வாட்கத்தியை மலைக்கல்லின்மேல் மெதுவாய் வைத்தாலும் வெண்ணைக்கட்டியிலிறங்குவது போலிறங்கிவிடும் அது போலுள்ள வாட்கத்தியொன்று அம்றிபுனு மகுதீக்கரீபிஸ ஸ்பீ தியபி என்பவரிடத்திலு மிருக்கக்கண்டேன். இப்போர்க்கொத்தகத்தியோடு மவன் மகிழ்ச்சியாயிருந்து இராஜபரிபாலனஞ் செய்துவருங்காலத் தில், ஓர றபிசெவந்த நிறமும், ஐந்துகதியும், மூன்று வேகமுள்ள ஒரு அழகான குதிரையைக்கொண்டு, அனேக இராஜாக்களிடத்திற்போய் விலைகாட்டினுன் அவர்கள் யாவருங் குதிரையின் மேலேயாசை வை த்து அவன் சொல்லும் விலையதிகமாதலால் விட்டு விட்டார்கள், பின் னர் அவ்வறபி வாதில்சுகுருவென்கிற இறவுசுல்கூலுடைய ஆருக்குக் கொண்டுவந்து கடைவீதியில் விலைகாட்டினுன். அக்குதிரையைக் கண்டுஅனேகந்தலைவர்களுந், திரவிய ஸதர்களும், மந்திரிகளும்தீர்மான மான விலைகேட்டார்கள். அதற்கறபி யோரொட்டகஞ்சுமக்கும் பார மானபொன் விலைதந்தாற் குதிரையைத் தருவேனென்று சொன்னுன்.

அதுகேட்டு யாவருந் தொகையதிகமாயிருக்கிறதென்றுசொல்வி ப்போவார்கள், இன்னுஞ்சிலர் நல்லகுதிரை நல்ல குதிரைவாங்கினுலி தையே வாங்கவேண்டுமென்று வருவார்கள் அறபிசொல்லுகிற விலை யைக் கேட்டுவிட்டு வாய் பேசாமற் போவார்கள். இவைகளையெல்லாம் அந்த இறவுசுல்கூலென்னுமிராஜன் கேள்விப்பட்டுத் தானும்வந்து அந்தக் குதிரையினிறம் சுழியெடுப்பு,கழுத்துநெரிப்பு,காதடிப்பு,காற் குரம் இவைகளின் லட்சணத்தைக்கண்டு மகிழ்ந்து விலையைக் கேட் டான். அறபி வழமைப்படிக்கு ஓருெட்டகை சுமக்கும் பாரப்பொன் னென்ருன் அதுகேட்டு, இறவுசுல்கூல், எடா இதற்கிவ்வளவு விலையா வென்று கோபங்கொண்டு சண்டாளபாதக துரோகி, அவ்வறபியைப் பார்த்துனக்குத்தருகிற விலையிஃதாயிருக்குமென்று தனது வாளை யுருவியவனை வெட்டிப்போட்டுக் குதிரையைத் தன்லாயத்திற்கொண் டுவந்து கட்டிவைத்தான் அல்லாவுடைய றசூலே யெங்கள் நாயகமே! நானிந்தச் செய்தியையறிந்து அந்தக் குதிரையைத் திருடவேண்டு மென்று குதிரைலாயத்திலிருக்கிற வேலைக்காரரைச் சினேகித்து ஒன் பது நாளாகத்தருணம் பார்த்துத்திரிந்தேன். பத்தாநாளிரவு தருணங் கிடைத்தபோது லாயத்திற்சென்று குதிரையை அவிழ்த்து வெளி

யிற்கொண்டுவந்து அதினுடைய கடிவாளத்தைப் பிடித்துக் கைநடை காட்டிப் பின்னர், முதுகின்மேலே குதித்தேறி இறைன்சைப் பலவந்தமாயிழுத்துக் காலணைத்துத் தட்டினேன், தட்டினபோது, அந்தக் குதிரை யெம்மட்டுக் கடங்காமல் மின்வெட்டிப் பாய்ந்ததுபோலே சுமார் இருகாதவழித்தூர மிரண்டொரு நாழிகைக்குள் வந்தது அப்போதங்கு - சூரியோதமாய் நிலந்தெளிந்திருந்தது, அவ்வழியினிடத்தில் இறவுசுல்கூலாலே வைக்கப்பட்ட பத்துக் காவல்களுமிருந்தார்கள்.

அங்கே குதிரையைவிட்டு நான் கீழிறங்கிச் சிலநாளிருந்து அக்குதிரையை நன்றாகப்பழக்கி வால்மயிர்களைக் கொய்து பிரடியிலே கேசபந்தி முடிகளைப்பின்னி, அதினுருவத்தை மாற்றி வேறு குதிரையைப்போல தோற்றச்செய்து கொண்டுவந்து அதனை அந்த இறவுசுல்கூலுக்கே தகுதியான விலைக்குவிற்றுப் பொன் வாங்கிக்கொண்டேன், ஆனால் என்னை யதுவரையிலும் இறவுசுல்கூலுக்கு இன்னானினியானென்று தெரியாது. ஆதலால் இன்னுமிந்தக் குதிரையைத் தானே களவுசெய்ய வேண்டுமென்று தன்கூட்டைவிட்டகலாத வண்டுபோலே அவ்வூரைவிட்டு மகலாமற் றருணம்பார்த்துத் திரிந்து ஒருநாள் தருணங்கிடைத்தபோது லாயத்துள்ளே சென்று பழகின குதிரையாதலால் பயமில்லாம லதனையவிழ்த்து மேலேறி நடாத்திக் கொண்டுபோய் அந்த, இறவுசுல்கூலுடைய படைத்தலைவன் முற்றத்துடைய மகன் மாலீக்கென்பவனிடத்தில் விலைகாட்டி விற்றுப் பொன் வாங்கிக்கொண்டு சிலநாளங்கிருந்து லாயத்தின் காவலாளிகளைச் சினேகித்துத் தருணம்பார்த்தக் குதிரையைத் திருடிக்கொண்டு வேஷமாற்றி மறுபடியும் இந்த இறவுசுல்கூலிடத்திற் கொண்டுபோய் விற்றுப் பொன்வாங்கினேன். இவ்விதம் அறுபதுவிசை அக்குதிரையைக் களவெடுத்து ஒவ்வொருவர்க்கும் விற்கிறதுந் திரும்ப அங்கிருந்து களவெடுத்துக் கொண்டுவந்து இறவுசுல்கூலுக்கே விற்கிறதுமாகத் திருகுதாளஞ் செய்துக்கொண்டு சிலகாலமங்கிருந்து பின்னர் இருப்பிடத்துக்கு வந்துவிட்டேன்.

அப்படி நானிறவுசுல்கூலைவிட்டுவந்து இருபதுவருஷ மாச்சுது, இப்போது இறவுசுல்கூல் நாளுக்குநாள் தணிவில்லாத திரவியத்துடனும் படைபண்டாரக் கூட்டத்துடனும், தனக்கொருவரும் நிகரில்லையென்பதாக மதாமஸ்துக் கொண்டவனாக இருக்கிறான்; வாதில்சுகுருவென்னு மவனூர் ஏழுசுற்றுக் கோட்டையையுடையது அதிவிதுபரி

யந்தம் ஒரு இராஜாக்களும் போய்ச்சண்டைசெய்து வெற்றிக்கொண்டவர்களில்லை. அந்த இறவுசுல்கூலுடைய படைபண்டாரங்களும் ஆயுதச்சாலைகளும், ரஷ்துகளான வுண்டிகின்றி முதலியவைகள் வைக்குஞ் சாலைகளும், பணக்களஞ்சியங்களும், யானைச்சாலை குதிரைச்சாலைகளும், இரதச்சாலை விருதுச்சாலைகளும் தன்னுடைய புழக்கம் அதிகமும் ஐந்தாவது கோட்டையிலேயே யிருக்கின்றன. அவனுக்கு எழு ஆண்மக்கள் பதினாறடி வேங்கைப் புலிபோலிருக்கிறார்கள், அவர்களொவ்வொருவர்களை யொவ்வொரு கோட்டைக்குத் தலைவர்களாக அனேகஞ் சுத்தவீரியர்களைக் கொடுத்து வைத்திருக்கிறான்; அவ்வாண்மக்கள் தவிர அவனுக்குக் கல்வியிலும் நற்குணத்திலும் கற்பிலும் யானை குதிரையேற்றத்திலும் உத்தாயுதபரீட்சைகளிலும், இனி இவனைப்போல இல்லையென்று தெளிவு தேர்ச்சியையுடைய மிகுந்த அழகானவோர்பெண்மகளு மிருக்கிறார்கள் இவ்விதம் பலபல மகிழ்ச்சியின்பேரில் அந்த இறவுசுல்கூலென்னுமிராஜன் மாதமொருதரம் பெருந்திருவிழா நடாத்திக்கொண்டு பெண்டுபிள்ளைகளுடனே கோயிற்குள்வந்து அந்தப் பர்றுசென்ற புத்துகானுக்குத் தாழ்ச்சிசெய்வான். அவன் தாழ்ச்சி செய்யும்போது இபுலீசு லகினத்துல்லா அந்தப் பர்றுசுடைய வாயிலே புகுந்துகொண்டு இவன்மனம் போலே கேட்ட கெள்விக்கெல்லாம் ஜவாபுசொல்வான்; இன்னுஞ் சிலவேளை தன்னிச்சையாய் அவனுக்கு வரப்போகிற கெடுதிகளையுஞ் சொல்லுவான்.

அதுகேட்டு, இறவுசுல்கூல் சந்தோஷமாகி யுடனே யனேக ஆடு மாடு ஒட்டகங்களை யறுத்துப் பலிகொடுத்து அவைகளின் இரத்தத்திலுங் கொஞ்சமெடுத்துப் பர்றுசுடைய வாயிலூற்றித் தீபதூபமுங் காட்டிப் பயத்தோடு சாஷ்டாங்கமுஞ் செய்வான். இதுபோல் மற்றவர்களும் சாஷ்ட்டாங்கஞ் செய்வார்கள், இவ்விதம் இறவுசுல்கூல் கோவிலுக்கு வரும்போதெல்லாம் அங்கு திருவிழாக் கூட்டமாகவே பன்னீர் அத்தர் இடங்களெல்லாங் கசிந்துகொண்டிருக்கும் அந்த இறவுசுல்கூலாகிய துட்டனன் செய்யுங் கெட்டசெய்கைகள் யின்னும் அனேகமுண்டு. அவைகளிலே சில திப்போதென் கியாபகத்திற் கெட்டாமலு மிருக்கின்றது அல்லாவுடைய றசூலே, முகம்மதே எங்கள் நாயகமான நபியே! என்று மிகவும் புகழ்ந்து அம்றிபுனு வுமையத்தில் அமீரி றலியல்லாகு அன்கவர்கள் சொன்னார்.

அம்றுவாய்ச்சருக்க - முற்றிற்று.

# வகிவருசருக்கம்

அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

திங்களு நிகரொவ்வாத திருநபி முகம்ம தெங்கள்
சங்கைநா யகரின்பாலிற் றனிமுதல் வகியினேடுந்
துங்கவா னவர்கள் யார்க்குந் தோன்றலார் ஜிபுரீல்வந்து
மங்கள மாகச்சொன்ன வண்மையை வழுத்து வாமே.

## இதன்பொருள்.

எமக்கெல்லாம் சங்கைபொருந்திய நாயகமாகியும், பூரணசந்திரனைதும் நிகரில்லாத அழகையுடையவர்களாகியும் விளங்கும் நபிமுகம்மது சல்லல்லாஹு அலைகிவசல்லமவர்களிடத்தில்ஒப்பற்ற அல்லாசுபுஹானஹு த்தஆலாவின் எவலாகிய வகியென்னுங் கட்டளையோடும், மேலாம்பரமான வானவர்கள் யாவருக்கும் இராசராகிய ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் வந்து மங்களவாக்கியமாகச்சொன்ன சிறப்புகள் யாவையுஞ் சொல்லுகின்றும்.

## சரித்திரவசனம்.

இபுனு அப்பாசு றலியல்லாஹு அன்கவர்கள்சொற்படிக்கும்அம்றிபுனு வுமையத்துல் லமீறி றலியல்லாஹு அன்கவர்கள்சொல்லியசொற்கள் யாவையும், நபிநாயகமுகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள்கேட்டுத்தங்கள் நெஞ்சத்திற்கொஞ்சங் கவனமாய் இரண்டரைநாழிகைநேரம் எப்பேச்சும், எப்பிராக்குமொழிந்து தலையைக்கவிழ்த்துபூமியையுற்றுப்பார்த்தவர்களாகயிருந்து பின்னர்(வலாஹெளல வலாக்கூவத்த இல்லாபில்லாகில் அலீயுல் அலீமென்ற) இந்தக்கைசேதவாக்கியத்தோடுந்தலையையுயர்த்தி அங்கேசூழ்ந்திருக்குந்தோழன்மார்களுடைய அசுஹாபிமார்களனைவரும்பார்த்து அல்லாகுத்தஆலாவுடையறகுமத்திற்குப் பாத்திரமாகியமுசிலிமானவர்களே! இந்தச்சபையினிடத்தில் நமக்குத்தெரியவந்தபாதகனை அந்தஇறவுசுல்கூல் விஷயத்திற் செய்யவேண்டிய செய்கைக்கு யுத்திசொல்லுங்களென்று கேட்டார்கள். அதற்கு, அவ்வசுஹாபிமார்கள் யாவரும் நபிநாயகமவர்களைப்பார்த்து, மூன்றுலோகத்துக்குமஆண்டகையாகவும், எங்களுயிருக்குயிராகவும்வந்தநபிநாயகமே!வேதரீர்தங்களுடைய திருப்பொற்பாத கமலங்களை நாங்கள் இடைவிடாது தெரிசித்து, உங்களேவலை

ப்பார்த்தவர்களாக இருக்கிறோம், ஆதலால் தேவரீர் தாங்களெங்களை யெவ்வித ஏவலைக்கொண்டு மேவுகிறீர்களோ அவ்வித ஏவல்களைப்பின்னிடாமற்செய்யக் காத்திருக்கிறோம், அதேதவிர வுங்களுக்குயுத்தி யோசனைசொல்ல எங்களாலேகூடுமா அல்லாவுடையறசூலேயென்று சொன்னார்கள். அகேட்டுநபிநாயகமவர்கள், அவ்வசுகாபிமார்களைப்பார்த்துஎன்னுடையதோழன்மார்களே!அசுஹாபிமார்களே!நான்அல்லாகுத்தஆலாவுடையஏவலன்றியென்னிச்சையாகவொன்றைச்சொல்லவுமாட்டேன்செய்யவுமாட்டேன். ஆதலால்அல்லாகுத்தஆலாவுடையவுத்தாவு எப்படிவருகிறதோஅப்படி நடப்போம்,இப்போது, உங்களுங்களிருப்பிடத்திற்குபோங்களென்று சொல்லியாவரையும் அனுப்பிவிட்டுத், தாங்களும்பள்ளிவாசலை விட்டெழுந்து வீட்டுக்குப்போனார்கள்.

அன்றுபோய் மறுநாள் விடிவேளுகுங்காலையில் வழமைப்படி பள்ளிவாயலிற்சென்றுநபிநாயகமுன்னிலையாய், மற்றஅசுஹாபிமார்களெல்லோரும் பின்னிலையாய், உலுவென்னுஞ்சுத்தியுடனேசுபுகுத்தொழுகையாகிய காலைநேரத்தின் கடனைக்கழித்துபின்னர், நபிநாயகமவர்கள் அவ்வசுகாபிமார்களைப்பார்த்து, நாமிப்போது ஊருக்குப்புரத்தேபோய் ஓர் பூங்காவினிடத்திலிருந்து, அல்லா சுபுகானகுத் தஆலாவினால் நமக்குவருகிற வகியையறிந்துவருவோம் வாருங்களென்று சொல்லியெழுந்து, தாங்கள்முன்னிலையாய் நடந்தார்கள். மற்ற அசுஹாபிமார்கள்யாவரும் (லாஇலாகாஇல்லல்லாகு,முகம்மதுர்ற சூலுல்லாகியென்றும்) சுபுகானல்லாகி வல்ஹம்துலில்லாகிவலா இலாக இல்லல்லாகு வல்லாகு அக்குபர், அல்லாகு அக்பர் வலில்லாகில் ஹம்தென்றும் இவ்விதந் தக்பீறுச்சப்தத்தோடு, தக்குலீலுச் சப்தமுமுழங்கிக்கொண்டு பின்னாலேநடந்துபோய், ஓர் பூங்காவனத்தில் மிகமகிழ்ச்சியாக இருந்தார்கள். அப்போது நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள், அல்லாகுத் தஆலாபாத்தாலே தங்களுக்குவகிவருகிற நாட்டத்தி லிருந்தார்கள், அதுகண்டு யாவரும் வாய்பொத்தினவர்களா யிருந்தார்கள்.

அப்போது, ஜிபுரீல்லைகிஸ்ஸலாமென்ற தேவதூதர், எப்போதுமொப்பற்ற நபிநாயகத்தின் திருமுகதாவில் வகிகொண்டு வருவதுபோலில்லாமல், வேறே பயங்கரங் கொள்ளத்தக்கதாகிய ரூபத்தோ

டும், அகோரகோரமாக ஆறுயிரஞ்சிரகும், அச்சிரகொவ்வொன்றிற்கு ஆறுயிரந்தலையும், அத்தலையொவ்வொன்றிற்கு ஆறுயிரமுகமும். அம்முகமொவ்வொன்றிற்கு ஆறுயிரம்பாஷையும், அப்பாஷைகளால்அல்லாஹுதஆலாவைப்புகழ்ந்து, ஏழுவானத்தையுமுருவிப்பாய்ந்ததலையும், ஏழுபூமியையு முருவிப்பாய்ந்தபாதமுமாக, நபிநாயகத்தின் கிட்டநெருங்கிவந்தார். இவ்விதமவர்கள் வந்த கோலத்தைக்கண்ட நபிநாயகந் திடுக்கிட்டுப்பயந்து கண்களைமூடி மூர்ச்சையில்லாதவர்கள் போலேகீழே விழப்போகிறதை ஜிபுரீலலைகிஸ்ஸலாமவர்கள்கண்டு மகாசீக்கிரத்திலே தங்களுடைய இறகுகளைக்கொண்டு நபிநாயகமவர்களை வாரியெடுத்து நெஞ்சோடு நெஞ்சணைத்து, அவர்களின் புருவமத்தியிலே முத்திமுகந்து முகத்திலே சொர்க்கலோகத்திலுள்ள குளிர்ந்த தண்ணீருங் கொண்டுவந்து தெளித்தார்கள்.

அதனுடனே நபிநாயகமவர்களுக்குத் தெளிவுண்டாக்கிக் கண்ணைவிழித்துப் பார்க்கும்போது மலாயிக்கத்துகளென்ற வானவர்கள் ஆயிரங்கூட்டமாகத் தங்களைவளைந்து நின்றுக்கொண்டு (சுபுஹான லல்லாஹிவல்ஹம்துலில்லாஹி, வலாஇலாகஇல்லல்லாகுவல்லாகு அக்குபர், வலாஹௌலவலாக்கூவத்த இல்லாபில்லாகில் அலீயுல்அலீமென்று) தசுபீகுசெய்தவர்களாகவும் அவர்களுக்குமுன்னிலையான ஜிபுரீலலைகிஸ்ஸலா மவர்கள்கையில் (நசுறும்மினல்லாகி வபத்துகுன்கரீபு, என்றெழுதியவுதவிக் கொடியொன்று பிடித்தவர்களாயுமிருக்கக்கண்டார்கள். அப்போது ஜிபுரீலலை கிஸ்ஸலாமவர்கள், நபிநாயகமவர்களைப்பார்த்து யாமுகம்மதே யுங்களுக்கு அல்லாஹுதஆலாசலாஞ்சொன்னுன், சங்கையைக்கொண்டும், காணிக்கையைக் கொண்டும் உங்களைத் தனதாக்கிக் கொண்டான். ஆதலால் நீங்கள் பயப்படவேண்டாம், சலிக்கவேண்டாம் அல்லாகுதஆலாவுங்களுடனே மிகுந்த கிருபைக்கொண்டு என்னிடத்திலே சொல்லியனுப்பினதாவதுயாதெனில், இந்தட்சணமே அந்தவாதில்சுகுறுவென்ற ஆரையாளும் ஜஹாபுடையமகன் இறவுசுல்கூலென்னு மல்கூனிடத்தில் உங்கள் தூதர்களிலொருவரையனுப்பி. மேலானவுங்கள் தீனில்லிசுலாமென்னுமார்க்கத்தைப்போதித்து ஒழுங்கானநன்னடத்தைக்காகக் கிடைக்குஞ்சொர்க்கலோகத்துடைய மகிழ்ச்சியையுந் தீமையான துன்னடத்துக்காகக்கிடைக்கும் நரகவேதனையையும் விபரமாகச் சொல்லிக்காட்டி அவன் மனதைத்தேற்றும்படியாகச் செய்விக்கவேண்டுமென்று சொல்லிவிட்

டுச் ஜிபுரீலலைகிஸ்ஸலாமவர்கள் தங்களிருப்பிடமாகிய வானலோகம் போனார்கள்.

பின்னர் நபிநாயகமுகம்மது சல்லல்லாகுஅலைஹிவசல்லமவர்கள் அங்கிருக்கும் அசுஹாபிமார்களைப்பார்த்து, என்னுடைய வுயிருக்குயிரானதோழன்மார்களே! என் கூட்டத்தார்களே!! இப்போது அல்லாஹுதஆலா பாதத்தில்நின்றுமெனக்குவகி வந்ததுயாதெனில், ஜஹாபுடையமகன் இறவுசுல்கூ லென்னு மல்கூனிடத்தில் நம்மில் நின்றுமொருவரைத்தூதாக அனுப்பித் தீனில்லிசுலாத்தில் அவனை யழைக்கவும், சொர்க்கலோகத்து நடத்தையைக்கொண்டு இச்சைபூட்டவும் நரகலோகத்து நடத்தையைக்கொண்டு அச்சம்பூட்டவும் ஜிபுரீலலைகிஸ்ஸலாமவர்கள் வந்து சொல்லிவிட்டுப் போனார்கள், ஆதலால் அந்த இறவுசுல்கூலென்னு மல்கூனிடத்திலே போய்போதித்து வரவுங்களில் தீரவீரத்தையுடையவர்களிருந்தாலெழுந்துவரலாம். அப்படியெழுந்து வருபவர்களுக்குச் சொர்க்கலோகத்தில் ஒரே முத்தினாலே யலங்கரிக்கப்பட்டிருக்குமொரு மாளிகைகிடைக்கும் அதற்கு நாம்பிணையென்று சொன்னார்கள்.

அதுகேட்டு, அங்கிருப்பவர்களில் யாரேனுமொருவர் நான்தான் போய்வருகிறேனென் றெழுந்து வராமலிருந்தமையால், மறுபடியும் நபிநாயகமவர்கள், அவ்வசுஹாபிமார்களைப் பார்த்து, நான்சொன்னபடிக்கு இறவுசுல்கூவிடத்திலே போய் வருபவர்களுக்குச் சொர்க்கலோகத்திலோர் முத்துமாளிகை கிடைக்கும். அதற்கு நாம்பிணையென்று சொன்னார்கள். அப்போதும் ஒருவராகிலுமெழுந்து நான்போய் வருகிறேனென்றுசொல்லி எழுந்துவராமையால், இவ்விதம் மூன்றுவிசை யொப்பற்ற நபிநாயகமவர்கள் சொல்லிக்கேட்டும், ஒருவரேனுமெழுந்து நான்போய் வருகிறேனென்று சொல்லிவராம லிருக்கச்சே கொஞ்சநேரம்சென்று அப்துல்லா இபுனு அபீசுல்சுருணி றலியல்லாகு அன்குயென்ற பெயரையுடைய அசுகாபியானவரெழுந்து நபிநாயகமவர்களைப்பார்த்து, அல்லாவுடைய றசூலே, எங்கள்நாயகமே நானந்த இறவசுல்கூவிடத்திற்போய் தேவரீர் தாங்கள் வாய்மையைச்சொல்லி வருகிறேனென்று சொன்னார் அதுகேட்டு, நபிநாயக மவரைப்பார்த்து ஓகே அப்துல்லாவே அல்லாஹுதஆலாவுமக்கு றகுமத்துச் செய்வானாகை நீரிருந்த யிடத்திலேபோய் சும்மாயிருமென்று கையமர்த்தினார்கள் அதுபோலவரு மிருக்குமிடத்திற்போயிருந்தார்.

பின்னர் கொஞ்சநேரம்பொருத்து நபிநாயகம் அசுஹாபிமார்களைப்பார்த்து என் தோழன்மார்களே! உங்களில் யாராவது அந்தஇறவுசுல்கூலென்னு மல்கூனிடத்திற்போய் வரப்பட்டவர்களுக்குச்சொர்க்கலோகத்திலோர் முத்துமாளிகை கிடைக்கும் அதற்கு நாம்பிணையென்று சொன்னார்கள். அப்போதும் யாரேனு !மொருவரெழுந்து நான்போய் வருகிறேனென்று சொல்லிவராமையால், மறுபடியும் நபிநாயகம் அசுஹாபிமார்களைப் பார்த்து ஓகே! முசிலிமானவர்களே! கிருபையுடையவர்களே யுங்களில் யாராவது அந்த இறவுசுல்கூலிடத்திற்போய் அவனுக்குத் தீனில் இசுலாமார்க்கத்தைப் போதித்து ஈமானை இசுலாத்திலே கொளுகவைத்து சொர்க்கப்பதவி இன்னதென்றும் நரகவேதனை இப்பேர்க்கொத்த பயங்கரத்தை யுடையதென்றும், அல்லாஹு தஆலாவுடைய கோபத்தைக்கொண்டும் அவனுடைய, றகுமத்தைக்கொண்டும் விளக்கமாகச் சொல்லிக் காண்பித்து, அவன் சொல்லுகிற சொர்க்களின்னதென்றதனை என்னிடத்தில் வந்துதெரிவிப்பவர்களுக்கு அல்லாஹு தஆலாவாலே சொர்க்க லோகத்திற்கிடைக்கு முத்துமாளிகைக்கும் கூறல்கினென்ற தேவகன்னிகைப்பெண்களாயிரர்களுக்கும் நாமேபிணையாக இருப்போமென்றுஞ்சொன்னார்கள், அதற்கு மொருவரேனு மெழுந்து நான்போய்வருகிறேனென்று சொல்லாமற் சும்மாயிருக்கும்போது கொஞ்சநேரம்பொருத்து, அம்ரிபுனுவுமையத்துல் லமீரியென்னும் பெயருடைய அசுஹாபியானவ ரெழுந்து நபிநாயகத்தைப் பார்த்து அல்லாவுடைய றசூலே! எங்கள்நாயகமே!! நானந்த இறவுசுல்கூலிடத்திலேயேபோய்த் தேவரீர் தாங்கள் சொல்லிய சொற்களைப்போதித்து, அதற்கவன் சொல்லுகிற சொற்களைத் தங்களிடத்தில் வந்து விண்ணப்பஞ்செய்கிறேனென்று சொன்னார். அதுகேட்டு நபிநாயகமவர்கள் அந்த அம்றிப்னுவுமையத்துல்லமீரியைப் பார்த்து ஓகே! அம்றே அல்லாஹு தஆலாவுமக்கு றகுமத்துச் செய்வானாக நீரிருந்த இடத்திலேயே போய்ச் சும்மாயிருமென்று கையமர்த்தினார்கள், அதுபோலவரும் தாமிருக்குமிடத்திற்போயிருந்தார்.

பின்னர், நபிநாயகமவர்கள் அசுஹாபிமார்களைப்பார்த்துசற்றே வருத்தப்பட்டவர்களுக்கு மிகுந்த இன்பமும் சுகமும், அல்லாஹு தஆலா கொடுப்பானென்று சொன்னார்கள். இவ்விதம் றசூல்சல்லல் லாஹு அலைகிவசல்லமவர்கள் பலதரஞ் சொல்வதையும் அச்சொற் கேட்டு ஒவ்வொருவராக இரண்டு அசுஹாபிமார்களெழுந்து இறவு

சல்கூலிடத்தில் நாங்கள்போய் வருகிறோமென்றதற்கு; அவர்களைப் பார்த்து நபிநாயகமவர்கள் நீங்களிருக்குந் தலத்திற்போ யிருங்க ளென்று சொன்னதையுங் கேட்டுக்கொண்டந்தச் சபையிலிருந்து அஷறத்து முபஷரீன்களிலொருவராகிய சுபைறிபுனுஹவ்வாம் றலி யல்லகுா அன்ஹு வென்கிற பெயரையுடையவர் நாமுமெழுந்து இற வுசுல்கூலிடத்திற்போய் அவனுக்கு நான் தீனிலிசுலா மார்க்கத்தைப் போதித்துவருகிறேனென்று நபிநாயகமவர்களோடுஞ் சொன்னால் முன்னர் இரண்டுபேர்க ளொவ்வொருவரா யெழுந்து சொன்னதா லவர்களைப்பார்த்து, நபிநாயகஞ் சொன்னதுபோ லொருவேளை நம்மையுமிருமென்று சொல்வார்களாகில், நாமதற்கென்ன செய்கி றது, அல்லாகுத் தஆலாவாலே கிடைக்கிற வரிசைகள் பெரிதாயிருக் கின்றதே, யாதலால் நாம் நபிநாயகமவர்களிடத்திற் சொல்லிக்கொள் ளாமல் இறவுசுல்கூலிடத்திற்குப் போவதே கருமமென்றெண்ணி, மெதுவாகச் சபையைவிட்டெழுந்து தங்களுடைய வீட்டுக்குவந்து, மனைவி மக்களுக்கும் யாதொன்றுஞ் சொல்லாமல் நானிங்கே யெம னென்னு மூர்வரையிலே போய்வருகிறேன். அதனை நீங்கள் யாருக் குஞ் சொல்லாதீர்களென்றச்ச முறுத்திவிட்டுத் தங்களுடைய கை வாளை யெடுத்து இடையிலேசேர்த்துக் கட்டிக்கொண்டு ஓர் ஒட்ட கத்தின் மேலேறி யொருதுணையுமில்லாமற் றனித்தவராகச்சரேலெ ன்று ஊருக்குவெளியாகி இராப்பகலென்றும் பாராமற் காட்டுவழி யாக வனம் வனாந்திர மலை கெவிகளைத் தாண்டிப்போனார்.

இபுனு அப்பாசுறலியல்லாகு அன்கவர்கள் சொற்படிக்கு நபி நாயகமுகம்மது சல்லல்லாஹு அலைகிவசல்லமவர்கள் அசுஹாபிமார் களைப் பார்த்துக் கேட்ட கேள்விக்கெல்லாம் அவர்கள் யாதாமொரு பதிலுத்தரஞ் சொல்லாமலிருக்கும்போது ஜிபுரீலலைகிஸ்ஸலாமவர் கள் வகிகொண்டு வானத்தில் நின்றும் கீழிறங்கிவந்து நபிநாயகத் தைப் பார்த்து முகம்மதே அல்லாகுத் தஆலாவுங்களுக்குச் சலாம் சொன்னான். இப்போது சுபைறிபுனுஹவ்வாம் தனித்தவராக வுங்க ளுக்குத் தெரியாமற் பாதகனான இறவுசுல்கூலிடத்தை நாடிப்போகி றார் ஆதலால் அல்லாகுத் தஆலாவுடைய வுத்தரவாயிருக்கிறது. சுபைறிபுனுஹவ்வாமுக்கும் பின்னாலே சீக்கிரமாக அசூத்தாலிபுடை யமகனான அலிறலியல்லாகு அன்குவை யனுப்பும்படியாகத்தா னென்று சொல்லிவிட்டு வானலோகம் போனார். பின்னர் நபிநாயக

முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அசுஹாபிமார்களைப்பா ர்த்துச் சிபுரீலலைகிஸ்ஸலாமவர்கள்வந்து சொல்லிவிட்டுப்போன சமா சார மடங்கலையுஞ் சொல்லிக்காண்பித்தார்கள்.

காண்பித்துப்பின்னர், அங்கிருக்கும் சல்மான்பாரிசென்னும் அசு ஹாபியானவரை யழைத்தார்கள்.வுடனேலெப்பைக்கும் யாறசூலுல்லா யவர் அடிபணிந்தேனென்றுவந்தார், அப்படி வந்த சல்மான்பாரிசை நபிநாயகமவர்கள் பார்த்து, ஒகே! சல்மான்பாரிசே சீக்கிரத்தில் நீர் போய் என்பெரியதகப்பனார்மகனாரான அலியாரையிங்கே கூட்டிக் கொண்டு வாருமென்றுசொன்னார்கள் அதுகேட்டந்த சல்மான் பாரிசு அலிறலியல்லாகு அன்கவர்களிருக்கு மிடத்திற்போய் அவர்களைக்க ண்டு சலாமுஞ்சொல்லி நபிநாயகந்தங்களைக்கூட்டிவரச் சொன்னார்க ளென்றுசொன்னார். அப்போது அலிறலியல்லாகு அன்கவர்களுக்கிரு க்கிற கொடூரமான காய்ச்சலினாலே தங்கள் தலையையுயர்த்திப்பார்க்க வும் அதிகம்பேசவுங்கூடாமையாக இருந்ததினால் அவர்கள் சல்மான் பாரிசைப்பார்த்து ஒகே சல்மானே!நீர் சீக்கிரம்போய் நபிநாயகமவர்க ளுக்கென் காய்ச்சலுடைய அகோரத்தையும் அதனாலே நானிருக்கிற மெலிவையும் சொல்லிப் படுத்தஇடத்தைவிட்டு மென்னாற் பெயர்ந்து வரமுடியாதென்று சொல்லுமென்றனுப்பினார்கள், அப்போதுடனே சல்மான்பாரிசுநபிநாயகமவர்களிடத்தில்வந்துஅலிறலியல்லாகுஅன்கவ ர்களிருக்கிற கூருபாட்டைச் சொன்னார்.

அதுகேட்டுடனே நபிநாயகமவர்கள் தங்கள்தோழர்களான அசு ஹாபிமார்களெல்லாரையும் அவரவர்களிருப்பிடம் போகும்படியாய் விடைகொடுத்தனுப்பிவிட்டுத் தாங்கள்சரேலென் றெழுந்தருளியாகி, அபூபக்கர் சித்தீக் றலியல்லாகு அன்கவர்களோடுந் தங்கள்திருமக ளாரீவிபாத்திமத்துஸ்ஸுகுறாகாத்துனே ஜென்னா அவர்களிருக்கிற வீட்டுக்குவந்தார்கள்; வந்தபோது அலிறலியல்லாகு அன்கவர்கள் நபி நாயகத்தைக்கண்டு சங்கைசெய்ய வேண்டுமென்று படுக்கையை விட் டெழும்பினார்கள், எழும்பக் கொஞ்சமேனுந் தங்களுக்கு சக்தியில் லாமையினாற் படுத்துக்கொண்டார்கள் அதுகண்டுநபிநாயகமவர்கள் அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து அல்லாவுடைய அறுஷுப் புலியே, என்னுடைய அலியே!உமக்கிப்போது அப்படியிருக்கிறதென் று தங்களுடைய கற்பூரவாடைகமழுந்திருவாயைத்திறந்துகேட்டார் கள், அதற்கு அலிறலியல்லாகு அன்கவர்கள்நபிநாயக மவர்களைப்

பார்த்து அல்லாவுடையறசூலே எங்களுயிராகியநாயகமே அல்லாகுத்தஆலாவுடைய வுதவியினாலே நல்லா யிருக்குதென்று சொன்னார்கள் அதுகேட்டுநபிநாயகமவர்கள்அலிறலியல்லாகுஅன்குஅவர்களோடும்ஜிபுரீலலைகிஸ்ஸலாம் வந்துமுற்படச்சொல்லியவகியும், அவ்வகியைக்கேட்டுத் தாங்கள்சூழ்ந்திருந்த அசுஹாபிமார்களோடுசொன்னசொல்லும் அதற்கவ் வசுகார்பிமார்களாலே நடந்தசங்கதியும் பின்னர் ஒருவருக்குந்தெரியாதுதனித்தவராக சுபைறிபுனுஹவ்வாம்பாவி இறவுசுல்கூலிடத்தை நாடிப்போகிறதும் அதற்காகப் பின்னர்ஜிபுரீலலைகிஸ்ஸலாமவர்கள்வந்து அந்தச் சுபைறிபுனுஹவ்வாம்தனித்தவராகப் போரபடியால் அலியாரைச்சீக்கிரமாக அனுப்பிவையுங்களென்றுசொன்னதும் ஆகிய இவைகளனைத்தையும்சொல்லிக்காட்டிய அலியே அல்லாவுடையவுத்திரவின்படிக்கு நீரேதான் போகவேண்டும் ஆகலால் உமதுசரீரத்திலேபோர்த்திருக்கிற துணிகளைதூரவிலக்கிவிடுமென்று சொன்னார்கள். அதுபோலே அலிறலியல்லாகு அன்கவர்கள் போர்வையை நீக்கினார்கள் உடனே நபிநாயகமவர்கள் ஓர்பாத்திரத்தில் நன்றாய்க்குளிர்ந்த தண்ணீர்கொண்டுவரச்செய்து அந்தத்தண்ணீரிலே தங்கள்வலதுகைவிரலையுந்துவைத்தெடுத்து பிசுமில்லைச்சொல்லி அலிறலியல்லாகு அன்கவர்கள்மேலேதெளித்துத்தடவினார்கள். அப்போது அலிறலியல்லாகு அன்கவர்களுடைய காய்ச்சல்சூரியனைக்கண்டபனிநீங்குவதுபோல் நீங்கிப்போய் அன்னக்களையுந்தீர்ந்து எப்போதையும்போலே திடபிடியாயினார்கள்.

அப்போது,நபிநாயகமவர்கள்.அலிறலியல்லாகுஅன்கவர்களைப்பார்த்து யாஅலியே! இப்போது வுமக்கெப்படியிருக்கிறதென்று கேட்டார்கள். அதற்கு அலிறலியல்லாகு அன்கவர்கள் நபிநாயகமவர்களைப்பார்த்து, அல்லாவுடையறசூலே எங்கள்நாயகமேவுங்கள் கைபறக்கத்தினாலென்னுடலினுள்ள வருத்தமெல்லாம் போய்ச்சந்தோஷகரமும், பலமும் வந்திருக்கின்றன ஆகையாலிப்போது தேவரீர் நீங்கள் என்ன பணிவிடையை செய்யும்படி என்னை யேவுகிறீர்களோவவுங்கள், அந்தப் பணிவிடையை நான்செய்துவருகிறேனென்று சொன்னார்கள். அதுகேட்டு நபிநாயகம் அலியாரவர்களைப்பார்த்து, யாஅலியே!சுபைறிபுனுஹவ்வாம் போகிறவழியில் அவரைதேடிப்போமென்றுசொல்லிவிட்டுத் தங்கள் வீட்டுக்கு வந்தார்கள்.

வகிவருசருக்க-முற்றிற்று.

# அலியார்பிரயாணச் சருக்கம்.

கலிவிருத்தம்.

ஒலிகடல் சூழிய வுலக மீதினின்
மலிபுகழ் முகம்மதின் மருக ராகிய
அலிபிர யாணத்தி னுருங் காரணப்
பொலிவுகள் யாவையும் புகலு வாமரோ.

## இதன்பொருள்.

சப்தித்து அலைமையெடுத்து விசிறியடிக்கும் கடற்சூழ்ந்த பூமியிடத்தில் மிகுந்த புகழைப்பெற்றமுகம்மதுமுஸ்தபா றசூல் ஸல்லல்லாகு அலைகிவ சல்லமவர்களின் மருமகராகிய அலிபிபுனு அபீத்தாலிபு றலியல்லாகு அவர்கள் பிரயாணத்திற்பொருந்தியகாரண அதிகரிப்புகள் யாவையுஞ் சொல்லுகின்றும்.

## சரித்திரவசனம்.

நபிநாயகம் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் தங்களுடைய திருமனைக்கு வந்தபின்னர் அலிறலியல்லாகு அன்கலர்கள் வழமையாகத் தாங்கள் பிடிக்கும் வெற்றிக்கொடியை யெடுத்துக் கையிலேபிடித்து, வீரவாளை யரையிலே சேர்த்துக் கட்டி, துல்துலென்கிற குதிரையின்மேலேறிக்கொண்டு திருமதீனமாநகரத்திராஜவீதிகளிற்சென்று பின்னர், சாமக்கிரியைகள், கொள்ளல் விற்றலினுற் கடற்போ லெப்போதுஞ் சப்தம் நீங்காமல் முழங்குகின்ற கடைவீதிகளையுங் கடந்துபோகச்சே, தங்கள் திருவாயினலே சிலபயித்துகளென்ற கவிதைகளைப் பாடிக்கொண்டு போயினார்கள். அக்கவிதைகளின் பொருள் யாதெனில் ஒகே! கருவம்மிக்கிளைபி லுள்ளவர்களே, அல்லாஹுதஆலாவுடைய பகைஞர்களே, இபுலீசுடையகூட்டத்தார்களே, இப்போது அல்லாஹுதஆலாவுடைய அறுவில்மித்திரையாளி மோதிரம் பெற்றதுடனே, திருமக்கமாநகரத்திலிருக்கும் கத்தீமென்கிற தானத்திற்கும், ஸம்சமென்கிற தானத்திற்கு முரித்தாகிய வேங்கைப்புலியானது தானிருக்குந்தானத்தைவிட்டு மெழுந்தருளி

யாகி வருகின்றது, ஆகையால் எதிர்த்தவர்கள்யாவர்கள் மிருந்தாலு முயிர்தப்பிப் பெண்டுபிள்ளைகள் மண்டுமனைகளோடு போயிருந்து வாழமாட்டார்கள் இதைநன்றாக அறிந்துக்கொள்ளுங்களென்றுமலை கள்சிதற, மேகங்கள் கதறப்பெரியசத்தமிட்டுக்கொண்டுபோனார்கள்.

இபுனு அப்பாசு றலியல்லாகு அன்கவர்கள் சொற்படிக்கு அலி யிபுனு அபீத்தாலிபு றலியல்லாகு அன்கவர்கள் இவ்விதஞ் சத்தமிட் டுக்கொண்டு மூன்றுநாள் இரவும்பகலுமாக, அன்னமாகார மில்லா மற்குதிரையை மறைவான காட்டுவழியாக நடாத்திக்கொண்டுபோய் நாலாநாட் காலையி லெமன்ராச்சியத்தைச் சேர்ந்தவாதுறுன் ஆறென் னுமோரோடைக்கரை யருகிற்போய்ச்சேர்ந்து, அவ்விடத்திலிருக் கிறதண்ணீரின் சிறப்பைக்கண்டு குதிரையைவிட்டுக் கீழிறங்கித்தகை யாறிக் கொண்டிருக்கச்சே, அந்த எமன்ராச்சியத்திற்கு வியாபாரஞ் செய்யப்போயிருந்த திருமதீனமா நகராரான அன்ஸாரிமார்களிற் சிலபேர்க ளவ்வோடைக்கரையில் வந்திருந்தார்கள். அவர்கள் யாவரும் அலிறலியல்லாகு அன்கவர்களைக் கண்டார்கள். கண்டு, மிகுந்த சந் தோஷமாகக் கிட்டநெருங்கி யவர்களுக்குச் சலாஞ்சொல்லி யவர்க ளுடைய இரண்டுகைகளையும்பிடித்து முகத்தில்வைத்துமுத்தி யிட் டுக்கொண்டு மகாதாழ்ச்சியுடனே சங்கைசெய்து நின்றார்கள்.

இவ்விதம் நின்ற அன்ஸாரிமார்களை அலிறலியல்லாகு அன்க வர்கள்பார்த்து, ஓகே, அன்ஸாரீன்களே! வரிசைபெற்றவர்களே நீங் கள் வந்தவழியில் சுபைறிபுனு ஹவ்வாமை யெவ்விடத்திலேனும் போகக்கண்டீர்களாவென்று கேட்டார்கள், அதற்கவ் வன்ஸாரீன் கள், அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து, யா அபுல்அசனே! நாங்கள் அந்தச் சுபைறிபுனு ஹவ்வாமை மறுஹசென்று சொல்லுந் தலத்திலே கண்டோம், அவரிதுவரையிலுமெமன் ராச்சியத்துக் குள்ளேபோய்விடுவார், ஆதலால் தேவரீர் தாங்களவரை வழியிலே காண மாட்டீர்களென்று சொன்னார்கள்; அதுகேட்டு அலிறலியல் லாகு அன்கவர்கள் யோசனையாய்நின்று பின்னர், அவ்வன்ஸாரிமார் களை வழியனுப்பிவிட்டுச் சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன் கவர்களை தேடியவ்விடத்தைவிட்டுப்போனார்கள்.

அலியார் பிரயாணச்சருக்க முற்றிற்று.

———

# சுபைறு சிறைபடு சருக்கம்.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

முத்தொளி வானவள்ளன் முகம்மது நபியுல் லாதம்
முத்தா மின்றி யேகு முயர்புகழ் சுபையி றென்போர்
குத்திரன் றவுசுல் கூலின் கொடுஞ்சிறை மீதிலாகித்
துத்தியவருத்த மெல்லாந் தொகுத்தினிச் சொல்லுவாமே.

## இதன்பொருள்.

ஆதிகாரணனாகிய அல்லாஹுதஆலா முதலில் ஓர், முத்தொளியால் அமைக்கப்பட்ட வள்ளலான நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய வுத்திரவில்லாமற் பிரயாணமாகி வழியிற்போம் உயர்ந்த புகழையுடைய சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்கள், பஞ்சமாபாதக துரோகியான இறவுசுல் கூலின் ஆக்கினையினாற் கொடுமைபொருந்த வைத்திருக்குஞ் சிறைசாலையிடத்திற்பட்ட வருத்தமெல்லாந்தொகுத்து விபரமாகச் சொல்லுகின்றோம்.

## சரித்திர வசனம்.

சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்கள் நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கும், வீட்டார்களுக்குஞ், சிநேகிதர்களுக்குந் தாங்கள்கொண்ட கருத்தை யின்னதென்று சொல்லாமற் றிருமதீனமா நகரத்தைவிட்டு மெழுந்தருளியாகி யிரவு பகலாக நடந்து காடு, கரை, மலை, வனம், வனாந்திரங்களைக்கடந்து அந்த இறவுசுல்கூலென்னும் பாவியுடைய முதற்கோட்டையை யடுக்கப்போய்ச்சேர்ந்து பார்க்கையில், அவ்விடங்களெல்லாந் தண்ணீர்த் தடாகங்களும், மேகமடை கிடக்கின்ற பெருமரச் சோலைகளுமாக இருக்கக்கண்டு தங்கள் மனத்தில் மிகுந்த சந்தோஷமுண்டாகி அவ்விடத்திலேயே காற்றுச் சுகத்திற் கிருக்கலாமென்று, அல்லாஹுதஆலாவைப் புகழ்ந்தவர்களாய்ஏறிப்போன வாகனமாகியகுதிரையை விட்டுக் கீழிறங்கியிருந்தார்கள், அப்போதங்கே சில வியாபாரிகள் நூதனமாகத் தாவளத்தோடும் வந்திறங்கினார்கள், அவர்களோடு சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்கள் சிநேகமாய்க் கலந்து பேசிக்கொண்டிருக்கும்போது, அவர்க ளிவர்களைப் பார்த்து நீங்கள் யாரென்று கேட்டார்கள்.

அதற்குச் சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்க்வர்கள் நாமொருவேழையாகிய அறபி, என்றாலும், நான் செய்த வியாபாரத்திலே நஷ்டப்பட்டுக் கடன்காரனாகிக் கைமெலிந்துபோனேன், அதனாலே, ஒன்றுஞ்செய்யாமற் சும்மாயிருந்தாலுங் கடன்காரர்களென்னைச்செய்கிற இம்சையினாலே, இந்தக் கோலமாய் ஊரைவிட்டும் பிரயாணமாகி வந்துவிட்டேன், அஃதேதெனெனில், என்னுடைய ஏழைமைத் தனத்தையும், வறுமையையும், கடன்காரர்செய்கிற வுபத்திரவத்தையும் இவ்வூரையாளும் ஜஹறாபென்னு மிராஜனுடைய குமாரன் இறவுசுல்கூலென்று சொல்லு மாசனிடத்திற் போய்ச்சொல்லி, துனியாவென்னும், இந்த லோக சவுக்கியத்திற்காக ஏதுவேனும் பெற்றுக் கொள்ளலாமென்ற வெண்ணத்துடன் மிகுந்த ஆசைகொண்டவனாக வந்தேனென்று சொன்னார்கள். அதுகேட்டு, வியாபாரிகளிவர்கள்மேலே மிகுந்த கிருபை கொண்டவர்களாய் ஒகே, ஏழையான அறபியே! எங்களோடு நீரும்வாரும், அந்த இராஜன் இறவுசுல்கூலிடத்திற் கொண்டுபோய் விடுகிறோமென்று சொல்லி அழைத்துக்கொண்டவ் விடத்தைவிட்டு நீங்கிப்போய் முதற்கோட்டை வாயிலிற் புகுந்தார்கள்.

அப்போதக்கோட்டை வாயிலிலிருக்குங் காவற்காரர்கள் வியாபாரிகளை யெப்போதும் வழமையாய் அறிந்தவர்களாதலால், அவர்களைமாத்திரமுள்ளேபோகவிட்டுச் சுபைறிபுனுஹவ்வாம் றலியல்லாகு அன்கு அவர்களை யுள்ளே போகவேண்டாமென்று தடைசெய்தார்கள். அதுகண்டு அவ்வியாபாரிகள் அந்தக் காவற்காரருக்குச் சொன்னார்கள், இவர் வறுமையை யுடையவோர் ஏழையான அறபி, அதினுமோ, வியாபாரத்திலே மிகுந்த நஷ்டப்பட்டுக் கடன்காரர் செய்கிற அவஸ்தை பொறுக்கமாட்டாமல் மிகுதூரத்திலிருந்து வந்திருக்கிறார், மேலும் நல்லமரியாதையான சங்கைவான்கள் கூட்டத்திலுள்ளவர், இப்போது, இவருக்கிருக்கிற கஷ்டத்தினாலே நம்முடைய இராஜனிடத்திற்போய் ஏதாகிலும் பெற்றுக்கொள்ளலாமென்று வந்தார். ஆதலால், நீங்கள் அவரைத் தடைசெய்யாது விட்டுவிடுங்கள் உங்களுக்கனேக புண்ணியமுண்டுமென்று சொல்லிச் சிலசில ஆகமங்களையும் போதித்துக்காட்டினார்கள். இவ்விதம், வியாபாரிகள் சொல்லுந் தாழ்மையினாலும், கெஞ்சுதலினாலும், அந்தக்காவற்காரர்கள் மனதில் மிகுந்த கிருபைகொண்டவர்களாகி யுடனே சுபைறிபுனுஹவ்வாம்

றலியல்லாகு அன்கவர்களைக் கோட்டைக்குள்ளே போகும்படியுத்தி ரவு கொடுத்தார்கள், அதனாலே சுபைறிபுனு ஹவ்வாம்றலியல்லாகு அன்கவர்கள் மனதிற் பெரிய சந்தோஷமாகி, அவ்வியாபாரிகளுக்கு நல்ல மொழிசொல்லி யனுப்பிவிட்டுக் கோட்டைக்குள்ளே போகும் போது அவ்விடங்களெல்லாமுயர்ந்த பூமரச்சோலைகளும், மாடமாளி கைகளும், கூடகோபுரங்களுந், தண்ணீர்த் தாடகங்களும் கடலைப் போலோர் அகழியுமிருக்கக்கண்டார் கண்டு,

மனமகிழ்ந்து நன்று யவ்விடங்களைச் சுற்றிப் பார்க்கும்போது அகழியிலே சங்கு முத்துகளும், தாமரைமுத்துகளும், பிரகாசித்துக் கொண்டிருப்பதுடனே, மகரமீன்கள், வாளைமீன்கள், எழுப்பிக்கரை களிலே நிற்கும் வாழைமரங்கள், பலாமரங்கள், மாமரங்களிற் பா ய்ந்து கனிகளைபிகுத்தி, இன்னுமேலேபாய்ந்து கமுகம் பாளைகளைக் கீறிக்கொண்டு கீழேவிழுஞ் சிறப்பையுங் கண்டு, அங்கேயுதிர்ந்து கிடக்கிற கனிகளைப் புசித்துக்கொண்டு வலுப்பமாகிய ஆண்டவனைப் புகழ்ந்தவர்களாகப் பின்னுங்கொஞ்சந் தூரம்நடக்கச்சே, சிலசுத்த வீரியர்களைக் கூட்டங் கூட்டமாகக்கண்டு ஆச்சரியப்பட்டுக்கொண்டு போய், ஓரிடத்திலடர்ந்த பெருங்காட்டிலே தாங்களேறிப்போன வொட்டகத்தை மேயவிட்டுவிட்டு அவ்விடத்திலோர் குழியைக்கெல் லித் தங்கள் கையிலிருக்கும் பெரியவாளையும் புதைத்துவிட்டு ஓர் சிறிய குத்துவாளை மாத்திர மொருவருக்குந் தெரியாமற் றங்களரை யிலே சேர்த்துக்கட்டிக்கொண்டு பாதசாரியாகப் போகச்சே, ஐந்து கோட்டைக்கு முள்ளே நடக்குமதிசயங்களைக்கண்டு ஆச்சரியமுற்று அப்பால் இறவுசுல்கூலென்றபாதக னுத்தண்டத்தோடிருக்கு மே ழாங்கோட்டைக்குள்ளே போகும்போது,

அங்கேயிருக்குந் தெருவீதிகளையும், இராஜவீதிகளையும், கொ டிக்கூட்டங்களையும், உயுத்தபரீட்சையிடங்களையுங்கண்டு மனதிலே திகிலடைந்து திரும்ப ஆருக்குப் போகலாமாவென்று எண்ணங் கொண்டார்கள். அவ்வெண்ணத்தை அறிவென்னுந்தோழன் தடுத்த தினால் மனதில் ஓகோ! இஃதென்ன நாம்கொண்டஎண்ணம் சரியல் லவே எவ்வளவுதூரந் தொலைவுவந்தும், அந்தஇறவுசுல்கூலைக்கண்டு எதுவேனும் வன்மனபாகங்களையறிந்து, நபியாயகத்துக்குத் தெரி

விக்காமற் றிரும்பிப்போவதைக்காண இறந்துபோவது நன்றென்று மனதிலுறுதிகொண்டு நடக்கும்போது, ஓர்பெரிய அரசமண்டபஞ் சுற்றுக்கட்டாக இருக்கக்கண்டு, அதற்குள்ளே புகுந்து பார்க்கும்போது அங்கேபொற்கலசங்கள்வைத்துத் தங்கத்தகடுகளிழைத்துப் பணிசெய்த மேன்மாட கூடமொன்றிருக்கக் கண்டதினுள்ளே தாங்கள் நுழைந்துபார்க்கும்போது அவ்விடத்தில் நான்குபக்கங்களிலு முருவிய கத்தியுடனே முறுக்குமீசை தனியாத சுத்த வீரியர்கள் நான்காயிரம்பேர்கள் நிற்கவும், அவர்களுக்கு நடுவிலே நவரத்தினராசிகளினலலங்கரிக்கப்பட்டவோர் சிம்மாசன மிருக்கவும் அதைச்சூழ,

மேகத்தை வென்றகூந்தலும், கடலைவென்ற கண்களும், பதினாலாம் நாட்பிறையைவென்ற முகமும், கமுகைவென்ற கழுத்தும், மூங்கிலைவென்ற தோள்களும், தாமரையைவென்ற கைகளும், பொன்மாலையைவென்ற தனங்களும், வல்லிசாரக் கொடியை வென்ற இடையும், வாழைத்தண்டைவென்ற துடைகளும், ஊதுகாளத்தை வென்ற கணைக்கால்களும், பஞ்சுப்பந்தைவென்ற குதிக்கால்களும், மதனநூலெழுதும் புத்தக அடியைவென்ற புறந்தாள்களும், மாந்துளிரை வென்ற வுள்ளங்கால்களும், சண்பகப்பூவைவென்ற மேனியுடைய சிலகன்னிப் பெண்கள் வெண்சாமரை வீசவும், வெள்ளிச்சரிகையினாலாகிய மேற்சட்டை, காற்சட்டையணிந்து தங்கப் புடியிழைத்த வாட்களையுருவி யசைத்துக்கொண்டு முன்னும், பின்னும், ஆயிரஞ் சுத்தவீரியர்பராக்கிரஞ் சொல்லிநிற்கவும், நவரத்தினம் பதித்த மகுடபந்தனம், வாகுவலயங்கள், உதரபந்தனமிட்டதோடு கைகளிலே வயிரக்கடகமும், கால்களிலே வீரகண்டாமணிகளும், பிரகாசிக்கப், பதினாறடி வேங்கைப்புலியைப்போலந்த இறவுசல்கூலென்ற இராஜனிருக்கவுங்கண்டு, இவர்கள் நெஞ்சந்திடுக்கிட்டு (வலஹௌல்வலாக்கூவத்த இல்லாபில்லாகில் லலீயுல்லலீம் என்ற) இந்தக்கைசேத வாக்கியத்தை மனதிலோதினவர்களாக அவ்விடத்தை விட்டும் கொஞ்சதூரத்தே விலகிப்போய்ச் சிங்காசனத்துக் கெதிராயிருக்குமோர்பெரிய கற்பொதும்புக்குள்ளே நுழைந்திருந்து பின்னர், இராவானபோது அவ்விடத்திலேயே படுத்து நித்திரை செய்தார்கள்.

இவ்விதம்சுபைறிபுனு ஹவ்வாம்றலியல்லாகு அன்கவர்கள் போயிருந்த இடம், மனுடர்கள் புழக்கமில்லாத மலைக்குகை யானதாலும், தாங்கள் தனித்தவர்களானதாலும், வயிற்றிற்காகாரமில்லாததாலும்.

சத்துருக்களி னென்ன மனத்திற் கொண்டிருப்பதினாலும், நித்திரை வாராமல்கண்விழித்தவர்களாய் அங்கே இராஜகொலுவில் நடக்கிறஆச்சரியங்களை யெதிராலே பார்த்தும் புதுமையாகி யோசனை செய்துகொண்டிருக்கும்போது, வனத்திலிடியிடித்து விழுந்ததுபோலே யொரு பெரியசத்தங் கடகடவென்று சப்திக்கக்கேட்டார்கள்; அந்தச்சப்தத்தினாலே, பூமியும் அவ்வூரும், இராஜ மண்டபமுங்கிடுகிடென் றசைந்தன. அதுகேட்டு, இறவுசல்கூ வென்ற பாதகன் தன்னைச்சூழ்ந்திருக்குங் காவல்வீரரோடும், இஃதென்ன சத்தமென்று போய்ப்பார்த்தறிந்துவந் தென்னோடு சொல்லுங்களென்று சொன்னான். அதுகேட்டு ஏவலாளர்கள் சரேலென்றோடிப் போய்ப்பார்த்துவந்து இறவுசல்கூவுக்குச்சாஷ்ட்டாங்கஞ்செய்துஎங்கள்இராஜரே நாங்கள் போய்ப்பார்த்ததில் நம்முடைய நாயகரான பர்ருசென்னுந் தேவர் ஒருகாலத்திலுங்கொள்ளாத பெருங்கோபங் கொண்டவராக வாயினால் நெருப்புப்புகை பாத்தினவராக இறைந்து சத்தமிட்டு இரண்டுகண்ணுங் கோவைப் பழத்தைபோற் செவப்புக்கொண்டவராக இருக்கிறாரென்று சொன்னார்கள்.

அதுகேட்டடனே, இறவுசல்கூவென்னுமிராஜன் திகில்கொண்டு நெஞ்சயர்ந்து நடுநடுங்கினவனாகத், தனதுமந்திரி முதலாகியபேர்களையுமழைத்துக்கொண்டு சரேலென்று நடந்துபோய்பர்ருசென்கிற புத்திருக்குங்கோயிலையடுத்துக் கூடப்போனவர்களை வெளியேநிற்கச்செய்து தான்மாத்திரந் தனித்தவனாசக் கோயிலுக்குள்ளே நுழைந்து பர்ருசிருக்குந் தானத்திற்குப்போய் அதின் முன்னாலே ஒதியமரமடித்து விழுந்ததுபோலே சாஷ்ட்டாங்கமாக அடித்துவிழுந்து தெண்டனிட்டெழுந்து மரியாதை யொழுங்குடனே வாய்பொத்திக் கைகட்டியொதுங்கி நின்றுக்கொண்டு மகாதாள்ச்சியுடனே வலுப்பமாகிய எங்கள் நாயகனேயென்று கூப்பிட்டுத் தேவரீருமுடைய கோபத்தைக் கொண்டும் வலுப்பத்தைக்கொண்டும், வேதனையைக்கொண்டுங் காவற்றேடுகிறேன், ஊரையடக்கியாளுகிற இராஜாக்களெல்லாமுமக்குத் தெண்டனிடுகிற மேலானநாயனுச்சுதே ஆதலால் நீர் எங்கள் பேரிலே இப்பேர்ப்பட்ட கோபங் கொண்டீரேயானால் வேறேகிருபை செய்பவர்கள் யாரிருக்கிறார்கள். உம்மைவிட எங்களுக்கு வேறே ஆதாரமில்லையே, ஆதலால் இப்போது அடியேன் மனந்தேறுகிறதற்

குத் தேவரீர் திருவாய்மலர்ந்து நல்லுத்திரவு தாவேண்டுமென்று கேட்டான், அப்போதுடனே இபுலீசு லருனத்துல்லா அந்தப் பார்ரு சென்னும் புத்துகானுடைய வாயில் நுழைந்திருந்துகொண்டு,

ஆ-ஆ, இறவுசுல்கூலே!யுங்களுக்கென்ன கேடுவந்தது, வின்காரியத்திலும் விளையாட்டிலும், சரீர இருமாப்பிலும், இராஜரீகத்தின்பெருமையிலு முழன்று, யாதாமொரு கவலையுமில்லாம லிருக்கிறீர்களே உங்களின்மேலேயடர்ந்தேறி வஞ்சனை மாயத்தையுடைய முகம்மதென்பவர் வாஇருக்கிருர், அதற்கு முதலிலே யுளவுபார்த்து வருகிறதற்கு அவருடைய மாமிமகன் சுபைறியுனு ஹவ்வா மிப்போது நீயிருக்கிற சிங்காதனத்திற் கெதிர்நோக்க இருக்கிற யிடத்தில்வந்து பதுங்கிக்கொண்டிருக்கின்ருன், அதனோடும் உன்னையு மறவிலே கண்டவனுக யிருக்கிருன், இனிமேல் அந்தமுகம்மதுன்பேரிலெதிராக அனேகம் படைவீரர்களையனுப்புவார், ஆதலால் நீ அந்தச்சுபையென்ற வுளவாளியைப்பிடித்து வெட்டிப்போடாம விருப்பையேயானல் நானுன்னாசையும் வர்ழ்வையு மழித்து போடுவேனென்று சொன்னுன். அதுகேட்டு இறவுசுல்கூல் மிகுந்த கோபங் கொண்டவனுகச் சரேலென்று கோயிலைவிட்டு வெளியேவந்து தன்னுடைய வாளையுறைவிடுத்துக் கையிலேந்திப்பிடித்தான், அதுகண்டு வெளியிலேநின்றவர்கள் இறவுசுல்கூலைப்பார்த்து எங்களுடைய இராஜரே! தேவரீர் தாங்கள் நமது நாயகனிடத்திலே போனதற்கு அவருடைய வுத்தரவென்னவுண்டாயிற்று சொல்லுங்களென்று கேட்டார்களதற்கு இறவுசுல்கூல் பார்ருசுசொன்ன சொற்களையெல்லாஞ் சொல்லி மாயமுகம்மதுடையதூதன் சுபைறிபுனு ஹவ்வாமென்பவன் கோட்டைக்குள்ளே வந்துபுகுந்து ஒருவருக்குந் தெரியாமலொளித்துக் கொண்டிருக்கிருனும், அதனல்நம்முடைய ஈயானுனபார்ருசென்பவர் கோபங்கொண்டு சப்தமிட்டாரென்று சொன்னுன். அதுகேட்டுப் பக்கங்களிலே நின்ற சுத்த வீரியர்க ளுருவிப்பிடித்த வாளாயுதங்களோடு மொருபக்கத்திலும், இறவுசுல்கூலொருபக்கத்திலுமாகச் சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்களைத் தேடித்திரிந்தார்கள்.

இவ்விதம் இங்கே நடந்த காரணங்கள் யாதொன்றுந் தெரியாமல், சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்கள் தாங்கள்படுத்

திருந்த இடத்திலேயே நித்திரைவாராமல்விழித்து வெளியைப்பார்த்தவர்களாகயிருந்தார்கள். அப்போது, இவர்களைத் தேடிவருகிற சுத்தவீரியர்கள் அந்தக் கற்பாறைப் பொதும்படியில் வந்து நின்றொருவருக்கொருவர் பேசிக்கொண்டதாவது யாதெனில், ஓகே வீரர்களே! முகம்மதுடைய தூதன் சுபைறென்பவன் ஒருவேளை யிந்தக் கற்பொதும்புக்குள்ளே யொளித்திருக்கவும்போதும் ஆதலால் அதை யெடுத்துப் பார்ப்போம் வாருங்களென்றழைத்தார்கள்; இவ்விதம்மவர்க ளழைக்கும் சப்தம் சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்கள் காதிற்கேட்டுத் தங்கள் நெஞ்சக் திடுக்கிட்டு (வலாஹௌல) வலாக்கூவத்த இல்லாபில்லாகில் வலீயுல்லலீம் என்னு மிந்தக் கைசேத வாக்கியத்துடனே, ஆ, ஹா! இஃதோர் மோசகாரணமாக இருக்கிறதேயென்று யோசித்து, அந்தக் கற்பொதும்பை விட்டெழுந்து, அதற்கருகாமையாக இருக்கு மலைப்பொதும்புக் குள்ளே போய்ப் புகுந்தங்கோ ரிடத்தி லொளித்திருந்தார்.

இபுனு அப்பாசு றலியல்லாகு அன்கவர்கள் சொற்படிக்குச் சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்களைத் தேடித்திரிந்த மகா சுத்தவீரியர்கள்; அந்தக் கற்பொதும்புக்குள்ளே நுழைந்துபார்த்தார்கள். பார்க்கச்சே அங்கே சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்க ளில்லாமையால் வெளியில் இனியெங்கே தேடுகிறதென்று சடைவாகி இறவுசல்கூவிடத்தில் வந்து, எங்களிராச சேகரியே நாங்களெங்கு மிடைவிடாமற் றேடினோம், அந்தச் சுபைறிபுனு ஹவ்வாமைக் காணோமென்று சொன்னார்கள். அதுகேட்டு இறவுசல்கூல் நம்முடைய நாயன் பாரூசென்பவர் ஒரு காலத்திலும் பொய்சொல்ல மாட்டாரே, ஆதலால் நீங்களின்னும் நன்றாகத் தேடிப்பார்க்கவேண்டுமென்று சொன்னான். அதுகேட்டுச் சில சுத்தவீரியர்களெங்குமோடியோடித் திரிந்து பார்த்தார்கள்; பார்த்தும் எவ்விடங்களிலும் சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்க ளில்லாமையினாலவர்கள் திகைத்து நிற்கும்போது அவ்விடத்தில் இறவுசல்கூலென்கிற இராசன்வந்து காரியத்தை யறிந்து சுத்தவீரியர்களை யழைத்து நீங்கள் இதோ யிருக்கிற நெருக்கமாகிய மலைப்பொதும்பிலே போய்ப் புகுந்துபாருங்கள் இதைவிட இவ்வூரில் வேறே யொளிக்கத் தகுந்த இடமொன்றுமில்லை யாதலால், என் கருத்திற்கும் அந்தச்சுபைறிபுனு ஹவ்வாம் இதிலேயே யொளித் திருப்பானென்று தோன்றுகிற

தென்று சொல்லிவிட்டுப் போயினன், அது கேட்டுடனே, அந்தச் சுத்தவீரியர்கள் அம்மலையை யடுக்கப்போ யங்கிருக்கும் பொதும்புக்குள் நுழையப் பார்த்தால் ஒருவருக்கு மேலே யுள்ளே நுழையக் கூடாத நெருக்கமாக இருக்கக்கண்டு அதிலொரு சுத்தவீரியனுள்ளே நுழைந்தான்; அதுகண்டு சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்கள்.

(வலாஹௌல வலாக்கூவத்த இல்லாபில்லாகில் லலியுல்லலீம்) என்ற இந்தக்கைசேத வாக்கியத்தை மனத்துள்ளே நாடி இவ்விடத்தில் மவுத்தேபுண்மையென்று நெஞ்சைத் திடப்படுத்திக் கொண்டு, கைவாளையெடுத்துத் தம்மைப்பிடிக்க வுட்குகையில் நெருங்கினவனை இருட்டிடமாதலால் ஜாடைதெரியாம லொருகுத்தாகக் குத்திக்குடலைச் சரித்தார்கள். இதுபோலே, அந்தச் சுத்தவீரியர்க ளொருவருக்கும் பின்னொருவராகப் பத்துப்பேர்கள் குகைக்குள்ளே நுழைந்தார்கள் நுழைந்த அப்பத்துப் பேர்களையும் வாளின்கூடுதனிய முன்னே குத்திக்குத்திக் குடலைச் சரித்தார்கள். அதுகண்டு வெளியில் நின்ற சுத்தவீரியர்கள் மலைக்குகையை யிடித்துப் பெரிதாக்கியனேகர்களுள்ளே நுழைந்தங்கிருக்கும் சுபைறிபுனுஹவ்வாம் றலியல்லாகு அன்கவாகளைப் பிடித்துப்பின் கட்டாகக்கட்டிக் குத்துகுத்தென்று குத்தி வெளியே கொண்டுவந்து முகங்குப்புறக் கீழேவிழுத்தாட்டி யிழுத்துக்கொண்டுபோய் இறவுசுல்கூலென்னும் பாதகனிடத்தில் விட்டார்கள். விட்டபோது,

பாதகனுள அவ்விறசுல்கூலென்பவன் சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்களைக்கண்டு ஆ! ஆ! வென்று மாடமாளிகைகள் குலுங்கும்படியாய்ப் பெருமூச்சிட்டறி மிகுந்த கோபங்கொண்டு நூறுசுத்தவீரியர்களான முறட்டுச் சேவகர்களையழைத்து இந்தக் கைதியை இன்றிரவும் பகலுமுங்கள் காவலில்வைத்து நன்றாகக்குத்து குத்தென்று குத்தியிடித்து நாளைய காலைநேரத்தி லென்னிடத்திற் கொண்டு வாருங்களென்று சொல்லினன். அதுபோல் அந்த நூறுகாவலாளர்களும் சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்களையடித்து முகங்குப்புறப்போட்டிழுத்துக்கொண்டு சிறைச்சாலையிற்கொண்டுபோய் அவர்களுடைய காலுக்கும் கைக்கும்விலங்கிட்டுக் கழுத்துக்கும்பிடிப்புக்கும் இரும்புச் சங்கிலிபூட்டி, யந்தச்சங்கிலியைப் பெரிய கல்லுத்தூணில் மாட்டிவைத்துக் கொஞ்சநேரத்திற் கொருதரம் அந்தப் பாவிப்பயல்கள் வந்து குத்துகுத்தென்று குத்துவார்கள்.

இவ்விதம், பாவிப்பயல்கள்குத்தும் வேதனைபொறுக்கக் கூடாமல் சுபைறிபுனுஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்கள், அழுதழுது புலம்பி, ஆ இலாகிறெப்பில் ஆலமீனே! நானிந்தவருத்தப் படுவதை யாரறிந்து நபிநாய்கமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்குத் தெரிவிப்பார், அப்படித் தெரிவித்தால், என்வருத்தமும் வேதனையும், துன்பமுந் தீரும்படியாய் நபிநாயகமவர்களெனக் குதவிக்காளனுப்பி யென்னையிந்தச் சிறைச்சாலையைவிட்டும் நீங்கச்செய்வார்களே, இப்போதிந்தப் பாவிகள் நேரத்துக்கு நேரம் வருத்த மதிகமாகும்படி செய்கிறார்களே, என்னுடைய அழுகையைக்கண்டும், சப்தத்தைக்கேட்கும் கடுகளவு மனமிரங்காத ஈனர்களா யிருக்கிறார்களே சகல லோகங்களையும் படைத் தரசாட்சிசெய் துயிர்களை யிரட்சிக்கும் வல்ல காரணனாகிய ஆண்டவனே! உனக்குமறைவானகாரிய மொன்றுமில்லையேயாதலால், நானுன்னுடைய அடைக்கலம், என்னை யிந்தக் காபிரீன்களுடைய வருத்தத்தில்நின்றும் எளிதாகும்படி நீயே கிருபைசெய்யவேண்டு மென்பதாய்த், துஆக் கேட்டுக்கொண்டே யிருந்தார்கள் இருக்கச்சே,

மறுநாட் காலையி லிறவுசுல்கூலென்ற பாவியானவன் தன்னுடைய ஏவலாளர்களி லொருவனை யனுப்பிச் சிறையிலிருக்கிற சுபைறிபுனுஹவ்வாம் றலியல்லாகு அன்குவைக் கொண்டுவரும் படிக்குக் காவற்காரர்களுக்குச் சொல்லச்சொன்னான், உடனே யந்த ஏவலாளனோடிப்போய்ச் சிறைச்சாலை காப்பவர்கட்குச் சொன்னான், அதுகேட்டங்கிருந்த நூறுபேரு மகாசீக்கிரத்திலே சுபைறிபுனுஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்களைச் சங்கிலியைவிட்டுங்கழட்டி முகங்குப்புறவாக்கிக் கீழேகிடத்தி யிடையிலிருக்குஞ் சங்கிலியைப்பற்றிப் பறபறென்றிழுத்துக்கொண்டுவந்து இறவுசுல்கூலென்ற பாவிப்பயலிருக்கிற அரண்மனையில் அவனுக்கெதிரில் விட்டுச் சுற்றிலுங் கெட்டியாகக் காத்து நின்றார்கள்.

இவ்விதஞ், சூரியோதயத்திற்கு முன்னாலேயே கொண்டுபோய் விட்ட சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்களைப் பார்த்து இறவுசுல்கூல் யாதாமொன்றும் பேசாம லிருமாப்புடனே யிருந்து பொழுதுசாய்ந்த அசறுடைய நேரத்திலே குனிந்ததலையைக் கொஞ்சமேலேயுயர்த்தி யேறிட்டுப் பார்த்தான். இதுமட்டில், இடிமேலிடி விழுந்த வருத்தம்போ லொருபகலு மிரவும் காவற்காரப் பாவிகள்

செய்த வருத்தம் போதாதென்று. இறவுசுல்கூலென்கிற பாவியும் நிறகச்செய்தான். அதனாலே சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்களுக்குக் காலுமிடுப்புங்கடுகடுத்தவருத்தம் ஆண்டவனறிவானே தவிர மற்றொருவருக்குந் தெரியவராது. இவ்விதத்தி லவர்களுடைய கால்களிரண்டும் இரத்தஞ்சுரந்து வீங்கி மரம்போல் மறத்துப் போயின. அப்போதில் எறிட்டுப்பார்த்த இறவுசுல்கூல், சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து எடாமிசிக்கினனவனே! வறுமையாளனே தரித்திரம் பிடித்தவனே யென்று கூப்பிட்டு நீ யார்? இங்கே என்வந்தாய்? சொல்லென்று அதட்டிக்கேட்டான். அதற்குச் சுபைறிபுனு ஹவ்வாம்றலியல்லாகு அன்கவர்கள் இறவுசுல்கூலைப் பார்த்து மிசிக்கீனனவனும், வறுமையாளனுந், தரித்திரம் பிடித்தவனும்யாரென்றால் எல்லாம் படைத்தாளுகின்ற வல்லநாயகனை அல்லாஹுதஆலாவுக்கு மாறுசெய்து அவன்கிருபையைவிட்டும் விலகியிருக்கிறானே அந்தத்தோஷிப்பயலாக இருக்கும் அதேதவிர நானல்ல என்னுடையபேர் ஹவ்வாமுடைய மகன் சுபைறுயிருக்கும்.

நானிங்கேவந்த காரியமாகிறது உன்னுடைய ஜனங்களிலுள்ளவோர் வயதுமுதிர்ந்த கிழவியானவள் சில சனங்களுடனே எங்கள் நபிநாயக முகம்மது சல்லல்லல்லாஹு அலைகிவசல்லம் அவர்களிடத்தில் வந்து அவளெங்களுடைய தீனில் விசுலாமார்க்கத்தி லானதற்காக நீ படைகளை யனுப்பி அவளுடைய வூரையழித்துக் கொள்ளைவாரி ஆண்பிள்ளைகளை வெட்டிப் பெண்பிள்ளைகளைச் சிறைவாரிவாச் செய்து உன்னிடத்திற்கு வந்தபோது நீயவளைச்செய்த அலங்கோலத்தையெல்லாஞ்சொல்லி யழுது முறையிட்டாள். அந்த முறைப்பாட்டை நபிநாயக மவர்கள்கேட்டு மிகவும் வியாகூலப் பட்டவர்களாகிப் பின்னருனக்கு நல்லறிவு சொல்லும்படியாய் என்னை யனுப்பினார்கள் ஆதலால் நான் சொல்வதைக்கேளு மகாராசாவே இன்றுமுதல் நீ புத்தை வணங்குகிறதை விட்டுவிட்டோர் பொருளாகிய ஆண்டவனை வணங்கு அந்த ஆண்டவன் எப்பேர்க்கொத்தவனென்றால்,

உன்னையும், என்னையும் மற்றெந்த வஸ்துவையும் படைத்து ஆளுகின்றவன்; இன்னும் நமக்கு இராஜரீகத்தையும் வாழ்வையுந் தீரத்தையுந் தந்தவன்; இன்னும் அவனே ஆக்கவும் அழிக்கவும் வல்லபத்தை யுடையவன்;இன்னும் அவன் நபிமூசா அலைஹிஸ்ஸலாம், நபிஈசா அலைஹிஸ்ஸலாம், நபிமுகம்மதுர்றசூலுல்லாகி ஆகிய இவர்களோடு

மெதிரிலே பேசினவன் இன்னுமவன் முகம்மது நபிசல்லல்லாகு அலை கிவசல்லத்தை மற்ற இலட்சத்திருபத்து நாலாயிர நபிமார்களுக்கும் முந்நூற்றுப் பதின்மூன்று முறுசலாகிய நபிமார்களுக்கு மேலாம்பர மான காத்திமுல் லன்பியாவாகவாக்கி அவர்களுக்கு தீனில் விசுலாமா கிய மார்க்கத்தையும் புறுக்கான்வேதத்தையுங் கொடுத்தவன் இன்னு மவன் கண்ணின்றிப்பார்ப்பவன், காதின்றிக்கேட்பவன், ஊணுறக்கம் அசதிமறதி அன்னசுற்றமில்லாதவன், இன்னுமவன் சலத்தையு மடக் கியாள்கிறவன், பூர்வீகமானவன், எல்லாமறிந்தவன், வல்லமைக்கெல் லாம் வல்லமையானவன், இணைதுணையில்லாதவன், எவ்வுலகங்களையும் ஒருகுடையில் யாள்கின்றவன், மந்திரியோசனைக் காரர்கள் தனக்கரு கிலில்லாதவன், இன்னுமவனுடைய காரணங்களை யொருவனுக்குஞ் சொல்லி முடிக்கக்கூடாதவன் ஆதலால் அப்பேர்க்கொத்த நாயகனை நீவணங்கென்று சொன்னார்கள்.

இவ்விதம் சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்கள் சொன்னதுகேட் டந்தச் சைத்தானை இறவுசுல்கூலென்றபகையன் கடுகடுத்த முகத்தோடும் சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்க வர்களைப்பார்த்து எடா சுபைறே! நீசொன்னசொல் லொன்றுமென்கா திலே நுழையவில்லை இனிநீ அதிகமாகப் பேசவேண்டாம் அந்தமுகம் மது உண்ணத்தின்ன இல்லாமல் மிகவுந் தரித்திரப்பட்ட மிசுக்கீனாக யிருந்துஇப்போது குவைலீதுடையமகள் கதிஜாவே கலியாணஞ்செய் ததின்பேரிலே கொஞ்சந் தலையெடுத்துப் பின்னர்திருமக்கமா நகரத் தைவிட்டுந் திருமதீனமா நகரத்துக்குவந்து அங்குள்ள பதவியாட்க ளைத் தன்மார்க்கத்திலே சேர்த்துக்கொண்டு அப்பதவிகளாலே சுற்று நாடுகளைக் கொள்ளையாடிச் சில்லுண்டி ராசர்களைச் சண்டைசெய்து செயித்து மிகுபேர்களை மாருட்டஞ் செய்து அவர்களுடைய பொருள் களை அனீதமாக எடுத்துக்கொண்டாரே யல்லவா. அதுபோல நம்மை யும் இலேசாக நினைத்துப் பர்ருசென்கிற பெரியதம்பிரானையும் அவரு டைய பூசைபுனற்காரத்தையும் விட்டுநீங்கியந்த மாயமுகம்மது தன் னுடைய பொய்யான மார்க்கத்தி லென்னை யழைக்கும்படியாக வுன் னையனுப்பி யிருக்கிறாரல்லவா இருக்கட்டும்.

ஆனால் சுபைறே! நீ கொஞ்சமேனும் அஞ்சாமல் என்னூருக்குள் வந்துபுகுந் தொழித்திருந்ததுந் தவிர, உன்னைப்பிடிக்கவந்தவர்களிற்

பத்துபேர்களையுங் கொன்றுயல்லவா? அந்தப்பழிக்காக நானுன்னை யிந்தக்ஷணமே வெட்டவேண்டும். அப்படி வெட்டுகிறது காரியமில்லை அஃதேனென்றால், உன்னை இங்கேயனுப்பிவைத்த முகம்மதுக்கு நீ மாமிமகனுதலால், நன்றாகவுன்னை வருத்தப்படுத்த வேண்டும் அந்தவருத்தத்தில் நீகிடந்து கசங்கவேண்டும், அதை அந்த முகம்மதுவந்து பார்த்து உன்னைத் திருப்பக்கூடுமானுற் திருப்பிக்கொண்டுபோகவேண்டும், அதேதவிர இப்போதுன்னை வெட்டிப்போட்டாலுன்னுயிர் இலேசாகப்போய்விடும். ஆகையால் வெட்டமாட்டேன் வருத்தமே செய்துவிப்பேன் பாரென்றுசொல்லிப் பாதகதுரோகியானவன், அங்கேசூழ்ந்துநிற்கும் நூறுகாவற்காரரையும் பார்த்து, இந்தப்பயல் சுபைறுடையதலைமேலும், இடைமேலுமிருக்கிற துணிகளைக்களைந்து வெற்றுடம்பாக்கி யிரத்தம்பீறிட் டோடும்படியா யடியுங்களென் றேவினுன். அதுகேட்டுடனே, அந்தப்பாவிகள், அவனேவலுக்கிரட்டிப்பாகச்செய்து அடித்தார்கள், அப்படியவர்க ளடிக்கும்போதுசுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்கள் (யாதுயாதல் முஸ்தகீம்) என்றசொல்லோடும் இறவுசுல்கூலைப்பார்த்து அல்லாகுத்த ஆலாவுடைய பகையனே, எங்கள் நபிநாயக மவர்களுடைய பகையானே நல்லகாரியஞ் சொல்லவந்த என்னையே னிப்போர்க்கொத்தவருத்தப்படுத்த லவிப்பார்த்துக்கொண்டிருக்கிறு யென்று சொன்னுர்கள்.

இபுனு அப்பாசு றலியல்லாகு அன்கவர்கள் சொற்படிக்குச் சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்களுடைய சொல்லைக்கேட்டு இறவுசுல்கூலென்றபாதகன் மிகுந்தகோபங்கொண்டவனுகி அந்தக், காவற்காரப்பாவிகளுக்குச் சொன்னதாவது, இந்தப்பயல் சுபைறுடைய சடலாதிக்சமுந் தண்ணீர் பிழிகிறபஞ்சைப்போல இரத்தஞ்சுரக்கும்படியாக அடித்துக் காலையிலோர் ஒட்டகத்தை யறுத்து அதின்றோலைச் சவ்வுடனேயுரித்து, அடிபட்டிரத்தமொழுகிற இவன் சரீரத்திலே பொதிந்து வெயிலில்விட்டுக் காயவைத்து, அது நன்றுகக் காய்ந்து சரீரத்தோடு மேவிப்போன பிறகு, அந்தி நேரத்திலே தோலைமாத்திர முரித்துவிட்டுப் பின்னர், இவன்கால்கைக்குத் தளையிட்டுக்காவலிலே பந்தோபஸ்தாக வையுங்கள், இவ்விதம், சூரியனுதயமாகி அஸ்தமாகிறவரைக்கும் நிதநிதஞ் செய்யுங்களென் றேவினுன், அதுகேட்டு, அந்த நூறுப்பயல்களும் நல்லதென்று சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்களைச் சிறைசாலையிலேகொண்

டுவந்து, தளையிலே பூட்டிக் காலையிலே தளையைவிட்டுந் தூரக் கொண்டுபோய் அடித்துச்சதையெல்லா மிரத்தவூற்றுக் கண்ணுனதின் பிறகு ஒட்டகையையறுத்துத் தோலையுரித்துச் சவ்வுடனே மேலேபொதிந்து வெயிலிலே காயவிட்டார்கள் (சுபுஹானல்லா)

அந்தத்தோல் காயக்காயச் சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்களுடனே யிருக்கும் எலும்பும், நரம்பும் நெறநெறன்று நெருங்கச்செய்தது. அந்தவருத்தம்பொறுமல் சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்கள் (யாதுயாதுல் முஸ்தகீ மென்றும், யா அறுக மர்ருகிமீனென்றும்) சொல்லிக்கொண்டே யிருப்பார்கள், பின்னர், அந்திநேரமானபோது பாவிப்பயல்களான் காவற்காரர்கள் சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்கள்மேலே பொதிந்து வெயிலிற்காயவிட்டிருக்கு மொட்டகத்தோலை ஆட்டுக்கிடாய்க்குத் தோலுரிப்பதுபோலே, யுரிப்பார்கள். அந்த வருத்தம் பொறுமல் சுபைறு றலியல்லாகு அன்கவர்கள் நெருப்பிலே புழுச்சுருண்டு விழுவதுபோலே தறையில் விழுவார்கள் அதையும் பாராமல், அவர்களை யிழுத்துச் சிறையிலிட்டுச் சங்கிலிபூட்டி வருத்தப் படுத்துவார்கள் இவ்விதம், சுபைறிபுனுஹவ்வாம் றலியல்லாகு அன்கவர்கள் சிறையில் வருத்தப்பட்டுக் கொண்டிருக்க, இவர்களைத்தேடி அலிறலியல்லாகு அன்கவர்கள் மிகுவிரைவாக வழியில்நடந்துபோகும்போது நடந்த காரணத்தை யினிச்சொல்லுகிறோம்.

சுபைறு சிறைபடுசருக்க முற்றிற்று.

---

# அப்துலாத்தீமான்கொண்டசருக்கம்

—(:*:)—

கலி நிலைத் துறை.

மக்கமீ தபீகுபைசு மலையினி லிபுலீ சோதும்  
பக்குவ் முணர்ந்தவ் வூரிற் பலருஞ்சேர்ந் தலியார்தம்மை  
விக்கினஞ் செய்யவிட்ட மூவரி லப்துலாத்து  
மிக்குய ரீமான்கொண்ட வியப்பினை விளம்புவாமே.

## இதன் பொருள்.

திருமக்கமா நகரத்தில் அபீகுபைசு மலையின்பேரிற்போய் நின்றுகொண்டு, காடகும்பனாகிய இபுலீசு லகினத்துல்லாசொல்லும் பக்குவமான வார்த்தையை அங்குள்ள காபிரீன்கள் யாவருமுயர்ந்தொன்றுசேர்ந்துகூடி அலிறலியல்லாகு அன்கவர்களை கொலைசெய்ய வேண்டுமென்று பேசித்தீர்மானித்து அதற்காக அனுப்பின மூன்று காபிரீன்களில், அப்துலாத்தென்னுஞ் சுத்தவீரியன் மிகுந்த வுயர்த்தியையுடைய தீனில்லிசுலாமார்க்கத்திலாகி ஈமான்கொண்ட மேலாம்பரத்தைச் சொல்லுகின்றாம்.

## சரித்திரவசனம்.

இபுனு அப்பாசு றலியல்லாகு அன்கவர்கள்சொற்படிக்கு, இபுலீசுலகினத்துல்லா திருமக்கமா நகரத்திலிருக்கும், ஆபீ குபைசென்னும் பெயருடைய மலையின்மேலே யோரிராத்திரி நடுச்சாமவேளையிலேறி நின்றுக்கொண்டு, மேகங்கதறுவதுபோலே க்கதறிப் பெரியசப்தமிட்டு, ஒகே திருமக்கமா நகரத்திலுண்டான சுத்தவீரியர்களே! தலைவர்களே!! சிறப்பாகிய மனுடர்களே நீங்கள் நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள், அஃதென்னெனில் திருமதீனமா நகரத்திலிருந்து அபீத்தாலிபுடைய மகன் அலியென்பவர் ஜஹாபென்கிற இராசனுடையமகன் இறவுசுல்கூலைத் தேடித்தனித்தவராகப் போகிறார், இது நல்லதருணம். ஆனதால், அந்த அலியைக் கொலைசெய்கிறதற்கு நீங்கள் வெகுநாளாக நினைத்திருக்கிற பழியை நிரைவேற்ற யாரேனுஞ் சீக்கிரமாக வோடிப்போங்களென்று சொன்னான். அதுகேட்டுத் திருமக்கமா நகரத்திலுள்ள காபீரீன்களுந், தலைவர்களு மற்றவர்கள் யாவருந்நித்திரையைநீக்கிக் கண்விழித்து ஒருவர்க்கொருவர் சாவியெழுப்பிக்கொண்டு சிறப்பானகருபாவின் ஹறத்தில்வந்து சேர்ந்தார்கள்.

அப்போது, அந்தக்கூட்டத்திலொருவனாக வந்திருந்த அபாசுபியான் கூடியபேர்களைப் பார்த்து, இப்போது, நடுச்சாமத்திலோர்பெரிய சப்தமுண்டாயினதே, அதுயார் சப்தித்தார்கள் தெரியுமாவென்று கேட்டான். அதற்கவர்கள் எங்களுக்குத் தெரியாதென்று சொன்னார்கள், அதிலொருவன்மாத்திரம் அபாசுபியானைப் பார்த்து அந்தச்சத்தம் பிறந்தகாரணமின்னதென் றென்யோசனைக்குத்தெரியவருகின்றதென்றுசொன்னான், அதுகேட்டு, அபாசுபியான் அவனைப்பார்த் துன்யோசனையிலே தெரிந்ததைச் சொல்லென்று சொன்னான். அதற்கவன், நமக்குயர்த்தியாகியநாயகனான் குபலென்ற

தம்பிரானிட்ட சப்தமாயிருக்கும் அவரிவ்விதம் எதுகாரியத்திற்குச் சப்தமிட்டாரென்றால், அபீத்தாலீபுடைய மகன் அலியென்பவன், நம்மிலுள்ள தலைவர்களனேகர்களை வெட்டிக்கொள்ளையாடி யிருப்பதால்' அதற்குப் பழிக்குப்பதில்பழிவாங்கத் தருணம்பார்த்து நமக்கறிவித்தார். ஆதலால் இப்போது அலிபோகிறவழிக்கி யாராவது துணிவுகாத்துடனே இரண்டு மூன்றுபேர் சீக்கிரம்போனால், அந்த அலியென்பவனை வெட்டி நமதுபழிக்கு பதிற்பழியெடுக்கலாம் எடுத்தால் நமது தேவாகிய குபலுடைய கிருபையும் நமர்கள்பேரி லுண்டாயிருக்குமென்றுஞ் சொன்னான். அதுகேட்டந்தக்கூட்டத்தி லிருந்தசுத்தவீரியர்களிலே தெரிந்தெடுக்கப்பட்டவனாகிய அப்துலாத்தென்பவனொருவனென்றான், அதின் பிறகு முக்காவிலென்பவனொருவ னென்றான், அதின்பிறகு அபாசுபியானுடைய மகன்கந்தலத் தென்பவனொருவனென்றான்.

இவ்வித மொப்புக்கொண்ட மூன்றுபேரையும் அபாசுபியான்பார்த்து, ஆ! ஆ! இந்தத்திருமக்கமாநகரத்தி லிவர்களைவிடத் திறத்தவர்கள் யாருமில்லையென்று மெச்சிக்கொண்டது மல்லாமல், இவர்கள் போகிறவேலையை முடிக்காமல் வரமாட்டார்களென்றுஞ் சொல்லிஅம்மூன்றுபேருக்கு மூன்று இருக்குதேசத்திலுள்ள உயர்ந்த குதிரையுங் கொடுத்துப், பின்னரவர்களைப்பார்த்து, ஒகே! சுத்தவீரர்களே, நீங்கள் சீக்கிரம்போவீர்களாகில், அந்த அலியை வழியிலே காண்பீர்கள்; கண்டவுனே மறுசோலிபாராம லவனைவெட்டிப்போடுங்கள். அப்படி வெட்டினாற்றான்நமதினத்தாருடையசங்கடங்களெல்லாந்தீரும்,நாமும் கலக்கமில்லாமல் ஆயியாயிருக்கலாம், மேலும் நீங்கள்செய்யப்போகிற நன்மைக்கு நம்முடைய குபலென்ற நாயனுடைய வுதவியுங்கிருபையுமுண்டாயிருக்கும்போங்களென்றுசொல்லியனுப்பினான், அனுப்பப்பட்ட அந்தமூன்றுபேர்களுங் குதிரையேற்றத்தில் மிகவும் வல்லமைசாலிகளாதலால், எனக்குமுந்தினதுனக்குமுந்தினதென்று குதிரையைப் பறவையைப்போற் பறக்கும்படியாய்ச் சாரிவிட்டு அலிறலியல்லாகு அன்கவர்களைத் தேடிக்கொண்டுபோனார்கள்இ துநிற்க,

இங்கே திருமக்கமாநகரத்தி லிவ்விதம் நடந்தசெய்திகளையெல்லாம், அப்பாசுறலியல்லாகு அன்கவர்களறிந் தவர்கள் நம்முடையவுடற்பிறந்தாருடைய மகனான அலியை வெட்டும்படிக்கு இந்தத்திருமக்க

மாநகரார்கள் ஆளனுப்பியிருக்கிறார்களே அந்தப்பாவிப்பயல்கள்போய் ஒருவேளை அவருடைய அசதிமறதியிலே வெட்டிப்போடவும்போகு மே, ஆதலால், இந்தச்செய்தியை நாம் அறிந்திருந்தும் அவருக்குத் தெரியப்படுத்தாம லிருப்பது தப்பிதமென்று பெரிதாக எண்ணங்கொண்டு, தங்களுடைய அடிமையான மசீதென்பவனை யழைத்தவனோடும், ஓகே! மசீதே நீயெனக்கொரு வொத்தாசை செய்வையேயானால், நானுன்னையுரிமை விடுகிறதுந்தவிர, சூமாரியத்தென்ற வங்கிஷத்திலோர் பெண்ணையுமுனக்குக் கலியாணஞ்செய்துந் தருவேன், அதுவுந்தவிர இருபதுகளஞ்சித் தங்கமுந் தருவேனென்றுசொன்னான்.

அதுகேட்டந்த மசீதென்பவன் ஆனந்தமாகி, அப்பாசுறவியல்லாகு அன்கவர்களைப்பார்த்து, நாயகமேநல்லதென்று அடிபணிந்து தாங்கள் நாடியநாட்டத்தை யென்னிடஞ்சொல்லுங்க ளதுபோல்நான் முடித்து வருகிறேனென்றுசொன்னான். அதுகேட்டு அப்பாசுறவியல்லாகு அன்கவர்கள் மிகுந்தசந்தோஷங்கொண்டு, அந்தமசீதென்பவனைப் பார்த்து, ஓகே! மசீதேஇந்தத்திருமக்கமா நகரத்தைவிட்டு மூன்றுகுதிரை வீரியர்கள்புறப்பட்டிருக்கிறார்கள்; அவர்களாகிறது அறபு தேசத்துச் சைத்தானுக இருக்கும், அப்பேர்க்கொத்த ஷைத்தான்கள், என்னுடற்பிறந்தார் அபீத்தாலிபுடையமகனான அலியார் பிரயாணமாகப்போகிறவழியில் அவரைக்கண்டுபிடித்துக்கொலைசெய்யவேண்டுமென்று போகிறார்கள். அதைநினைக்குந்தோறு மெனக்கு மிகவும்பயமாக இருக்கின்றது, ஆதலால், நீநானேறுகிறஅதிகமென்கிற குதிரையின்மேலே சாவாராகிச்சீக்கிரம், அந்தமூன்று பேருக்குந் தெரியாமற் றந்திரமாகப்போய் அலியாரைக்கண்டு இதுகாரியங்களைத்தெரிவித்து அவரை யொதுங்கும்படிசொல்லி உன்சலாமுஞ்சொல்லிவிட்டு வாவென்று சொன்னார்கள் அதுகேட்டு மசீதென்பவனுடனே அப்பாசுறவியல்லாகு அன்கவர்களின் பாதம்பணிந்தவர்களி னுத்தாவுபோல், அதிகமென்கிற குதிரையின் மேலேறி விசையாகத்தட்டினான்.

அக்குதிரையுடைய கடியநடையினாலோட்டங்கொண்டு வழிதப்பியோர்காட்டுவழியாகப் போயினது, அவ்வழியிலேகுதிரைபோகும் போது சில மிருகங்க ளிருக்கக்கண்டமசீது வேறேவழியிலேகுதிரையைத் திருப்பியோரிடத்தி லிறங்கியிருந்து பின்னர் குதிரைமேலேறி நடத்தலாமென்றெழுந்தபோது கடியநடையினாலே குதிரையியர்த்த

மூன்றி ேற்கிறநிலையையுந், தனக்கிருக்கிற வருத்தத்தையும் ஆலோசித்துக்கொஞ்சநேரம் படுத்துறங்கிக்கண்விழித்தெழுந்து சவாராகினல்நன்றென்றெண்ணிக் குதிரையினுடைய றைன்சைத் தன்காலிலே கட்டிக்கொண்டு அந்தவழியிலேயேபடுத்து நித்திரைசெய்தான். அப்போது, தன்னுடைய சரீரவருத்தத்தினல் நித்திரைவாராமற் கண்களை விழித்துகொண்டிருந்தான், இருக்கச்சே, அப்பாசுயலியல்லாகு அன்கவர்கள் சொல்லி யனுப்பியசொற்களையெல்லாம் நினைத்து வாயினுற் கவிதைபாடினவனுக இருந்தான், அந்தக் கவிதைகளின் பொருளாவதுயாதெனில்.

நாம் ஐடலவருத்தத்தைப் பார்த்துக்கொண்டிங்கே யிருந்தால் நாம் தேடிவந்தநாயகரான அலிறலியல்லாகு அன்கவர்கள் நமதுகண்ணுக்கெட்டாமற் போய்விட்டார்களானல் நல்லதல்லவே மேலும் இது இருட்டிராகவு மிருக்கிறதே, அறபுதேசத்துச்சைத்தான்களான மூன்றுபேர்கள், அவர்களைக் கொலைசெய்யவேண்டித் திருமக்கமாநகரத்தில் நின்று மெழுந்துபோகிறுர்கள், அதற்குமுற்படநீபோய், அலியாரவர்களுக்கு இதுகாரியத்தைத் தெரியபடுத்தென்று நமதுநாயகரான அப்பாசுறலியல்லாகு அன்கவர்கள் நமக்குச்சொல்லியனுப்பினுர்களே, அப்படியிருக்கப் பாவியுடம்புமிகவுமிளைப்பாக இருக்கிறதே இதுமட்டிலும் அந்தமூன்றுபேய்களான அப்துலாத்தும், முக்காவிலும், கந்தலத்தும் அலிறலியல்லாகு அன்கவர்களைக் கண்டுபிடித்து வெட்டிப்போட்டார்களோ, அல்லவோ வென்றேதுகாரியமுந் தெரியாமல் நாமிங்கே இருந்தால் நமதுநாயகத்திற்கு என்னவுத்தரவு சொல்கிறதென்று தன்னைத்தா னெந்தவனுகப் படுத்துக்கொண்டே பேசினவனுகக்கிடக்கச்சே, அலிறலியல்லாகு அனகவர்கள் அந்தவழியாலேநடந்து வரும்போது, மசீதென்பவன் தன்னிச்சையாகப்பேசும் பேச்சுத் தங்கள்காதில் விழுந்து, இங்கேயொருமனுடன் குரலோசை கேட்கிறதே, அப்பேச்சு இன்னதென்றறிந்து போகலாமென் றோரிடத்தில் மறைவாகநின்றுகேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்போது, மசிதுசொல்கிற சொற்களெல்லாந் தங்களைப்பற்றியபேச்சாக இருக்கிறதுதெரிந்து, பேசுபவன்யாரென்று யோசிக்கையில் இக்குரல் மசிதுடைய குரலாயிருக்கிறதென்று வரையற அசிந்து, அம்மசீதையடுத்து நின்றுகொண்டு, எடா,மசீதே! அல்லாகுத்தஆலா

வுடைய வுதவியினாலே நீயொன்றுக்கும்பயப்படாதே, நானாகிறவன்
எதிர்த்தசத்துராதிகளுடைய வுச்சியைக் கைவல்லையத் தினாலேபிளந்
து மூளையைத் தெறிக்கவைப்பேன், அதுவுந்தவிர, நபிநாயகமவர்களி
னுத்திரவைக் கொண்டும் வழிகளில் நான்மறதியாய் நடக்கவில்லை மே
லும், இருட்டாகிய இராவுகாலத்தில் வழிகளில் நித்திரையைக்கொண்
டும்நான்நடாமாட்டேனென்று சொன்னார்கள். அதுகேட்டுமசீதென்
பவன், றலியல்லாகு அன்கவர்களென்றறியாமல், நமதுபேச்சுக்கு
இந்த இராவுகாலத்திலே கிட்டநெருங்கிப் பயப்படாமல் ஜவாபுசொல்
கிறது யாரென்று வாளையுருவிக்கொண்டு என்பேச்சுக்கு எதிராக
ஜவாபுகொடுக்கிற சுத்தவீரியன் யாரென்றுபாய்ந்தான், அதற்கு,அலி
றலியல்லாகு அன்கவர்கள், எடாமசீதே! நீபடித்தபயத்தினாலே பெ
யர்சொல்லி யெங்கேயென்று தேடினையே யவனாகஇருக்கும் நான்.
இன்னும், பனீகாதிபுக் கிளையிலுள்ளே வேங்கை புலியாயிருக்கும்,
இன்னும், அபீத்தாலிபுடைய மகனாகிய அலியாயிருக்கும் இன்னும்,
முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுவந்த மருமகனாக இருக்
குமென்று சொன்னார்கள், அதுகேட்டு, மசீதென்பவன் இவர்கள்
தான் அலியாரென் றறிந்து பயந்து நடுநடுங்கி யவர்கள் கிட்டவந்து
என்னாயகமேயென்று பாதத்தில் விழுந்து முத்தியிட்டெழுந்து சொ
ல்லத்தொடங்கினான்.

அஃதாவது அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து, மசீதென்
பவன், என்னுடையநாயகமே நான் தான் தங்கள் சிறியதகப்பனார்,
அப்பாசுறலியல்லாகு அன்கவர்களுடைய அப்தென்னும் அடிமைக
ளில் நின்றுந் தேவரீர் தாங்கள்சொல்லிய மசீதென்னும்பெயரையுடை
யவன்றான், என்னையந்த நாயகமானவர்கள் தங்களிடத்தில்வந்து சில
செய்திகள் சொல்லும்படியா யனுப்பினார்கள். அந்தச் செய்திகளா
வது யாதெனில், திருமக்கமா நகரத்தில் நின்றும் அறபு ராச்சியத்
துப் பேய்களான அப்துலாத்து, மூக்காவில், கந்தலத்துஆகிய இம்
மூன்றுபேர்களுந் தேவரீர் தங்களை வழியின்பேரில்வந்து வெட்டுகிற
தற்காக அதிதீவிரமாக வருகிறார்களாம், நீங்களந்தப் பாவிகளுடனே
எர்த்துக்கொள்ளாமலொதுங்கிக் கொள்ளவேண்டுமென்றுசொல்லி
யவர்களுடைய சலாமுஞ்சொல்லச் சொன்னார்களென்று திருமக்கமா
நகரத்தலே நடந்த காரியங்களனைத்தையும் சவிஸ்தாரமாகச் சொன்
னான்.

அதுகேட்டு, அலிறலியல்லாஹு அன்கவர்கள், அந்த மசீதைப்பார்த்து, ஒகேமசீதே! கொஞ்சநேரத்திற்குச் சும்மா என்கூடநின்று பார்த்துக்கொண்டிரு நீசொன்ன அந்த மூன்றுபேரும் இந்தவழியிலிதுமட்டிலும் வரவில்லை, மேலும், இந்த வழியைவிட வேறுவழியுமில்லை, யாதலால், அவர்கள் பிரயாணமாயிருக்கிற கணக்கைப்பார்த்தால், இன்னங்கொஞ்ச நேரத்தி லிவ்விடத்திலேயே வரவேண்டுமென்று சொல்லிக்கொண்டு நிற்கும்போது, குதிரைகளுடைய காற்குளம்படி தரையிற்படுகிற சப்தம் சடசடென்றுகேட்டான், அப்போது, அலிறலியல்லாஹு அன்கவர்கள் மசீதைப்பார்த்து, ஒகே, மசீதே! நீசொன்ன மூன்றுபேர்களும் பேசிக்கொண்டுவருகிற சப்தம் என்காதுக்குக் கேட்கிறதென்று சொல்லியோர் பெரியமரத்தடியிலொதுங்கிநிற்கச்சே, அங்கேகுதிரைகளின்பேலேறிவருகிற, அப்துலாத்தும், முக்காலிலும், கந்தலத்தும் அலிறலியல்லாஹு அன்கவர்கள் நிற்கிற மரத்துக்குங் கொஞ்சந்தூரத்தில் முடிகிவந்து இவர்கள் நிற்கிறது, காலையிருளானதாற் றெரியாமற் சிலபேச்சுகள்பேசினார்கள். அஃதென்னெனில், அப்துல்லாத்தென்பவன் மற்ற இருவரையும் பார்த்து, ஒகே! என்சினேகிதர்களே, என்கருத்திலே தோன்றுகின்றது ஒருவேளையந்த அலியென்பவர், இதோநிற்கிறபெருமரத்தடியில் இருக்கவும்போதும், ஆதலால் நீங்கள் போய்ப்பார்த்து வாருங்களென்று சொன்னான், அதுகேட்டு, அவ்விருவரிலே முக்காலிலென்பவன் அப்துலாத்தைப்பார்த்து, உன் சொற்படிக்கு அலியா ரங்கிருந்தாலச்சுது. அல்லாதிருக்கில், இந்தக் கத்தியினாலுன்னைவெட்டிப் போடுவேனென்று வாளையுறையைவிட்டுங் கழட்டிக் காட்டினான்.

அதுகேட்டு அப்துல்லாத்தென்பவன் தன்னைப்பயந்து அந்தப் பேச்சைத் தாண்டாமற் சறுக விட்டுவிட்டு நீ போகாதுபோனால் நல்லதாச்சுது, இப்போது நாம் வெகுதூரத்திலிருந்து ஒரே சவாராகவருகிறபடியால் என் சரீரமிருந்த அலுப்புஞ் சடைவுமாக இருக்கின்றது, ஆகையால், பாதையை விட்டுக்கொஞ்சந் தூரவிலகியொருசோலையிலிறங்கிச் சடைவுதீரச்சற்றே நித்திரைசெய்து மயக்கந்தீர்ந்து நேரம்நன்றாய் வெளுத்த பின்னரெழுந்து, அலியார்பாட்டையிலே போகிறாரா, அல்லது, நமக்குப்பிந்தி வருகிறாராவென்ற விசாரணையோடும் போவோம் வாருங்களென்று சொன்னான். அதற்கவ்விருவரு மிசைந்தார்கள், உடனே மூன்றுபேரும் அலிறலியல்லாஹு அன்கவர்கள் நிற்கிற மரத்தடிக்கு மப்பாலேகிட்ட இருக்கிற மலையடிவாரத்திற்போ யிறங்கி

யிருந்தார்கள். இருக்கக்சே, அவர்களிலொருவனம்மிடத்திலிருக்கிற தீனைக்கொஞ்சந் தின்று பசிக்களைப்பைத் தீர்த்துக்கொள்கிறது நன்றென்று தீனையெடுத்துப்பாத்திருன். அந்தநேரத்தில்அலிறலியல்லாஹு அன்கவர்கள் மசீதைப்பார்த்து ஒகேமசீதே! இங்கேவந்த மூன்றுபேர்களுடையஆரம்பத்தைக்காணும் ஒருவேளை இந்த மலையடிவாரத்திற் போயிருப்பார்கள், ஆதலால் நம்போய்ப்பார்க்கலாம் வாவென் றழைத்துக்கொண்டுபோய்ப்பார்க்கும்போது,

அவர்கள் மூன்றுபேரும் தீன் தின்னமுடிகியிருக்கக்கண்டு அவர்களுக்குத்தெரியாமல் அலிறலியல்லாகுஅன்கவர்கள் விலகிநின்றுகொண்டுமசீதைப்பார்த்து, ஒகே,மசீதே, நீயிந்தஇடத்திலேயே நில்லு, நான் அல்லாகுத்த ஆலாவுக்கும், அவனுடைய தூதாங்கர் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு மாறுசெய்கிற அந்தப்பயல்களையென்ன வேலைசெய்கிறேன் பாரென்று சொல்லியுடனே, தாங்கள் இப்போப்பட்ட காலங்களில் வழமையாக அணியப்பட்டகாங்குக் காற்சட்டையை யெடுத்துடுத்துக்கொண்டு தலையிலிருந்த பாகையையுங் கழட்டி மற்ற வுடுப்புடனே மசீதுகையிற்கொடுத்துவிட்டுத் தலைமுடியை விரித்துவிட்டுக் கையில் துல்புக்கனென்ற வாளையெடுத்துக்கொண்டு மலையின்மேலேறிநின்று பார்த்தார்கள், அப்போதுதான், அப்துலாத்துலாத்து அன்னத்தையள்ளிவாயில்விடக் கையை யுயர்த்துகிருன் அதுகண்டு, அலிறலியல்லாஹு அன்கவர்கள் ஒருகல்லையெடுத்து மெதுவாக இரண்டுகாலுக்குமிடையிலேபார்த்து எறிந்தார்கள். அந்தக்கல்லானது தீமென்று வந்து அப்துல்லாத்து முன்னிலையிற்போய் விழுந்தது. அதுகண்டு, அப்துலாத்து திடுக்கிட்டுப்பயம் பெரிதாகி அவயவாதி நடுக்கங்கொண்டான், அதினாலே, கைச்சோறு வாய்க்குப் போகிறது தவறிக் கீழேவிழுந்தன, அதுகண்டு மற்ற இரண்டுபேருங் கொண்டபயத்தினலவர்களுடல்வியர்த்து, நெஞ்சு கெத்கெத்தென்று துடிதுடித்தவராகி வாய்பேசாதிருந்தார்கள்.

அப்போது, அப்துலாத்து அவ்விருவரையும் பார்த்து, ஒகே! சினேகிதர்களே என்ன வுசும்பாம லிருக்கிறீர்கள் இவ்விடத்திலேதுட்டமிருகங்கள், பேய், பிசாசி, பூதங்கள்மிகவு மிருப்பதுபோலே தெரிய வருகிறது. அவைகள் தானமதுபேரில் இந்தக் கல்லெறிந்திருக்கும், ஆதலால், அப்போப்பட்ட பேய்பிசாசை, நாம் போய்ப்பார்த்து வருவோம் வாருங்களென்று அழைத்துக்கொண்டுபோய், அவ்விடங்க

ளிற்சுற்றிப்பார்த்தான், அதுகண்டு அலிறலியல்லாகுஅன்கவர்கள்மலையுச்சியின்மேலேறி நின்றுகொண்டு, தங்கள்தலை முடிகுலுங்கக்குதித்துவிளையாடிக்கொண்டு அங்கு கிடக்கும் பெரியகற்களைக்கீழேயுருட்டினார்கள். அதுகண்டந்தமூன்றுபேர்களில் மூக்காவிலும், கந்தலத்தும், ஆ! ஆ! இந்தக்கெட்ட ஷைத்தான் ஆடுகிற கூட்டத்தைப்பார். இதுதானல்லோ நம்மைப் புசிப்பெடுக்க வொட்டாமலாக்கினது, பார்த்தால் மிகவும் பொல்லாத வம்புத்தனமான ஷைத்தான்போலே யிருக்குதென்றுசொன்னார்கள். அப்போது, அப்துலாத்து அந்தச்சைத்தானுடைய வம்பைக் கொஞ்சநேரத்திற் பாருங்கள் நான்போய் வெட்டிவிட்டு வருகிறேனென்று மிகுதீரமாக மலையின்மேலேறினான், அது கண்டுஅலிறலியல்லாகு அன்கவர்கள் பறந்துஓடுகிறவர்களைப்போலே அவன் கண்ணுக்கு மறையவோடினார்கள் ஓடுவதை,

அப்துலாத்துப் பார்த்துச் சைத்தானோடிப்போச்சுதே இனியிங்கே நயக்கென்ன இருக்குதென்றெண்ணிச் சரேலென்றுமலையை விட்டுக் கீழிறங்கிமற்ற இரண்டுபேர்களையும் பார்த்து, ஓகே! கூட்டாளிமார்களே ஷைத்தானென்னைக்கண்டு பயந்து வெருண்டோடிவிட்டது, ஆனால் நாம் ஊரைவிட்டு அபீத்தாலிபுடையமகன் அலியை வெட்டவந்தோமே யல்லாமல் வழியிலே பேய்பிசாசுகளை வெட்ட வரவில்லையே, யாதலால் வாருங்களென் றழைத்தான், அதற்குமுக்காவிலென்பவன் மிகுந்த கோபங்கொண்டவனாகி நானந்தப்பேயைத் தேடி வெட்டாமலிந்த விடத்தைவிட்டுப் பெயரமாட்டேனென்று சொல்லிக்கொண்டு கோபத்துடனே சரேலென்று மலையின்மேலேறினான். அதுகண்டு, அலிறலியல்லாகு அன்கவர்கள் பழயவிடத்திலேயே நின்றுகொண்டு குதித்துக்குதித்து விளையாடினார்கள். அது கண்டு முக்காவில், ஓகே! மூரியாட்டத்தை யுடையபிசாசே நீயல்லவா எங்களைபுசிப்பெடுக்க விடாமற்கல்லெறிந்தாய், உன்னைவிடுகிறேனா பாரென்று கிட்டநெருங்கினான், அப்போது, அலிறலியல்லாஹு அன்கவர்கள், ஆடிய ஆட்டத்தோடும் அந்தமுக்காவில் மேலேபாய்ந்து விழுந்து மேய்கிற கோழிக்குஞ்சியைப் பருந்து வருவதுபோலே வாரி மூன்றுதரஞ் சுழட்டித்தூக்கி மலைக்கல்லின் பேரிலேயடித்தார்கள், அவன் செத்து நரகஞ்சேர்ந்தான்.

இவ்வித முக்காவில் அலிறலியல்லாகு அன்கவர்களாலேதூக்கிமலைக்கல்லி லடிக்கப்பட்டிறந்தசெய்தி மற்ற இரண்டுபேருக்குந்தெரியா

மலிருக்கச்சே, கந்தலத்து அப்துலாத்தைப்பார்த்து, என்ன அப்துலாத்தே. முக்காவிற்போய் வெகுநோமாச்சுதே, ஒருவேளையவன்பேயோடு சண்டைசெய்ததின்பேரில், அப்பேயானது அவனையடித்துக்கொன்றுபோட்டதோ, அல்லது, என்ன சுணக்கமென்று சீக்கிரம்நீ போய்பார்த்துப் பேயைக்கண்டாலுடனே யதைவெட்டித்தலையையென்னிடம்கொண்டுவந்துகாட்டு, அல்லாதிருக்கில், குபல்உலாத்து, உஸ்ஸாவென்ற தம்பிரான்மார்கள் பேரிற்சத்தியமாகநானுன்தலையைவெட்டுவேனென்றுசொன்னன். அதுகேட்டுஅப்துலாதுச்சரேலென்று பயப்படாமல் முன்னர் நம்மைக்கண்டோடிய பேய்தானேயென்று மலையின்மேலேறினன். அதுகண்டு; அலிறலியல்லாகு அன்கவர்கள் குதித்துக்குதித் தாடிய ஆட்டத்தோடு, சரேலென்றுபாய்ந்து அப்துலாத்துடைய விலாப்பக்கத்தெலும்பைக் கையினலே கொளுகப்பிடித்து இரண்டுதடவை குலுக்கினர்கள்; அதனலவனெலும்பெல்லாம் நெக்குவிட்டன; அப்போதவன், இவர் அலியாயிருக்க வேண்டுமே தவிரவேறில்லையென்றறிந்து வாய்விட்டலறி ஒகே! அல்லாவினுணை நீராகிறது பேயல்லப்பேயல்லச் சுத்தவீரியர்களை வெட்டிஜெயித்து இராஜாதிராஜாக்களுடைய கிரீடங்களைத் தண்டாயுதங்கொண்டு தகர்த்தெரியுகிறவர், இன்னும் ஹாஷிமிக்கிளையில் மிகவும் பெருமையையுடையவர், பதினறடிவேங்கைப் புலியைப்போன்றவர் அபீத்தாலிபுடைய மகனராகிய அலியாயிருக்குமென்று மிகப்புகழ்ந்து போற்றி யுங்கள் மாமனர் முகம்மது நபிநாயகத்தின்பேரிலாணையாக என்னைவெட்டாதீர், அடிக்காதீர், நானிதே கலிமாச்சொல்லுகிறேனென்றுடனே (அஷ்ஹது அன்லாக, இல்லல்லாகு, வஅஷ்அது அன்னமுகம்மதன் அப்துகு வறசூலுகு) என்ற ஹாதத்துக்கலிமாவைச்சொல்லி தீனிலிசுலாமானர், அப்போது அலிறலியல்லாஹு அன்கவர்கள் அப்துலாத்தைக்கிழேவிட்டு மற்றவனிடத்திலேபோமென்றார்கள்.

உடனே அப்துலாத்து அலிறலியல்லாகு அன்கவர்கள் பாதம் பணிந்து மலையைவிட்டிறங்கிக் கந்தலத்திடத்திலேவந்து, ஒகே! கந்தலத்தே நான் அந்தச் சைத்தானிடத்திலே போய்ப் பேசிப் பார்த்தேன், அதினுடையகிளையாரு மெங்கள்கிளையாரு மிகவுநேசங்கொண்டவர்களாதலால், நானிதற்குமுன் அதையறிவேன், அதுவுமென்னையறிந்திருக்கிறது. அதனலேயிப்போது என்னைவிட்டுவிட்டது. எனக்கு மதைவெட்ட மனம்வரவில்லை, நம்மள் கூட்டாளி முக்காவில்

என்னவிதமானாரோ தெரியவில்லை, யாதலால் கந்தலத்தே நீர்போய் அந்தப்பேயை வெட்டிவிட்டுக் கூட்டாளியையும்பார்த்து வாருமென் றுசொல்லிப் பின்னரும், ஒருவேளை பேயைவெட்ட ஏலாமற்போனால் அதைத்தோழமையாக்கிக் கொண்டு அபீத்தாலி புடையமகன் அலியை வெட்ட நீ யொத்தாசையா யிருவென்று கேட்டுறுதி வாங்கிக் கொண்டுவாருமென்றுசொன்னான். அதுகேட்டுக்கந்தலத்து நல்லதென் தென்று மலையின்மேலே அதிகவிரைவாக ஏறினான் ஏறுவதை அலி றலியல்லாகு அன்கவர்கள் கண்டுசும்மா வுசும்பாமல் நின்றார்கள்.

அப்போது கந்தலத்து மெய்யாகப்பே யென்றெண்ணிக்கிட்ட முடுகப்பயந்து தூரநின்றுக்கொண்டு அலிறலியல்லாகுஅன்கவர்களைப் பார்த்துஏபேயே!நீவந்த வழியைப்பார்த்துக்கொண்டுபோ அல்லாதிரு க்கில்அபீத்தாலிபுடையமகன் அலிஎன்பவனைநாங்கள் வெட்டவந்தோ ம் அதற்குநீயுதவியாகஇருக்கிறேனென்றோ ருறுதிசொல் அஃதேனெ னில் அந்தஅலி எங்களினங்களிலநேக சுத்தவீரியர்களையுந்தலைவர்களை யும்வெட்டிப்பொருள்களையுங்கொள்ளை யெடுத்திருக்கின்றான். அதுவுந் தவிர நாளுக்குநாளடங்காத எதிரித்தனமுஞ்செய்கிறான் ஆதலால் நீ யெங்களுக்குதவியாயிருந்துநாங்கள்நாடினவேலையை முடித்துத்தரவே ண்டுமென்று கேட்டான். அதற்கு அலிறலியல்லாகு அன்கவர்களோர் பெரியசப்தம் இடிபிடித்து வீழ்வதுபோலே சப்தித்தார்களதனாலே கந்தலத்துமயங்கிப்பூமியில் விழுந்தான், விழுந்தவனை அலிறலியல்லாகு அன்கவர்கள் நெருங்கிப்புலியானது ஆட்டுக்கிடாயைபிடித்ததுபோலே புரடியிலொரு பிடிபிடித்தழுத்தி, எடா அல்லாவுக்கும் அவனுடைய றசூலுக்குமாறுகொண்டவனே, இப்போதுநீசொன்னையே அந்தலியா கிறது நானென்றார்கள் இவ்விதம், அலிறலியல்லாகு அன்கவர்கள் பிடித்தபிடிஇரும்புக்கிட்டிகழுத்தை நெருக்கிக்கொண்டிருப்பதுபோ லிருந்தது, அதனோடவர்கள், சொன்னசொல். நெருப்பிற்காய்ச்சியவே லாயுதத்தை நெஞ்சிலேகுத்தினதுபோலிருந்தது அதனாற்கந்தலத்து மதிமயங்கி யிருந்துகொஞ்சநேரத்திற் றனக்குத்தெளிவுவந்தபோது, அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து ஒகே நானும்மோடுசிலவச

னம்பேசவேண்டி யிருப்பதினாலேசற்றே கழுத்துப்பிடியைமாத்திரம் இறக்குமென்று சொன்னான்.

அதுகேட்டு, அலிறலியல்லாகு அன்கவர்கள் கந்தலத்தைப்பார்த்துஎடா! அல்லாவுடையலகனத்துப்பெற்றவனே அஃதென்னவசனம்சொல்லென்று கேட்டார்கள், அதற்குக்கந்தலத்து அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து, ஒகே! அலியேயும்மையிங்கே நான் வெட்டுவதில் யாதுங்காரியமில்லை, ஆதலாற் சிறையாக்கிக்கொண்டு திருமக்கமா நகரத்திற்போய், உலாத்துஉஸ்ஸா, குபலென்னுந் தம்பிரான்கள் முன்னிலையில் வெட்டுவேனென்று சொன்னான். அதற்கு அலிறலியல்லாகு அன்கவர் குஞ்சிரிப்புக்கொண்டு, தங்கள்கையைவிட்டுவிட்டுக் கந்தலத்தைப்பார்த்து எடாகந்தலத்தே!யுன்னாலென்னையென்னசெய்யப்பிரியமாக இருக்கிறதோ அதைச்செய்யென்றுசொன்னார், அதுகேட்டுக்கந்தலத்து, ஆ! ஆ! அலியார்நம்மிடத்தில்வந்து சிக்கிக்கொண்டாரென்று பிடிக்கநெருங்கும்போது, அலிறலியல்லாகு அன்கவர்களோர் பாய்ச்சற்பாய்ந்து அவனுடைய காலிரண்டையும் தலைகீழாகத்தூக்கி மலைப்பொதும்பிலேபுகுத்தி யோரிழுப்பிழுத்தார்கள், அதனால், அவனுறுப்பிணங்கள் துண்டுதுண்டாகிச் செத்து நரகலோகஞ்சேர்ந்தான்.

பின்னர்,அலிறலியல்லாகு அன்கவர்கள்மலையைவிட்டுங்கீழிறங்கி மசீதுநிற்கிற இடத்திற்கு வந்தபோது, மசீது நடந்த காரணங்களைக் கண்டு சந்தோஷமாய்ச்சிரித்தமுகமாகநின்றான். அவனை அலிறலியல்லாகு அன்கவர்களழைத்து மசீதே நீயெங்கள் சிறிய தகப்பனாகிய அப்பாசுறலியல்லாகு அன்கவர்களிடத்திற்போய் இங்கேநடந்த காரணங்களைநல்விபரமாகச்சொல்லி என்னுடையசலாமுஞ் சொல்லென்றுசொன்னார்கள், அப்போது தீனில்விசுலாமான அப்துலாத்தென்பவர், அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து நாயகமானவர்களே நானுந்திருமக்கமாநகருக்குப்போகவேண்டும் அஃதெதினாலெனில் நான் தீனில்விசுலாத்திலான செய்தி காபிரீன்களறிந்தபின்னர், நானங்கே போய்என்பெண்டு பிள்ளைகளையுமவர்கள்தொந்தறை செய்வார்களாதலாலவர்களுக்குத் தெரியுமுன்னமே திருமக்காநகரத்திற்குப்போய், அங்கிருக்குங்காரியங்களைச் சீக்கிரமுடித்துக் கைவசமாக்கிப்பெண்டு

பிள்ளைகளையுங்கூட்டிக்கொண்டு திருமதீனமாநகரத்தில் றசூல்சல்லல் லாகு அலைகிவசல்லமவர்களிடத்திற்போய்ச் சேருகிறேனதற்காகவுத் திரவுதாருங்களென்று கேட்டார் அப்போது அலிறலியல்லாகு அன்க வர்கள் அப்துலாத்தென்பவரைப்பார்த்து நீர்செய்தயோசனை மிகவும் நல்லயோசனைதானென்று அவரைமிகவுமெச்சிப் பின்பு உடனேயனு ப்பினர்கள் அப்போதுமசீதும் அப்துலாத்தென்பவரும் அலிறலியல் லாகு அன்கவர்களுடைய பாதம்பணிந் தெழுந்துபோற்றிப்புகழ்ந்து தங்கள் தங்களாயுதத்தையு மெடுத்தணிந்து குதிரையின்மேலேறிக் கொண்டு திருமக்கமாநகரைநோக்கி நடந்தார்கள் பின்னர் அலிறலியல் லாகு அன்கவர்களொருநாளிரவும்பகலும் அவ்விடத்திலிருந்து மற் றநாள் சுபைறிபுனு ஹவ்வாம் றலியல்லாகு அவர்களைக் காணவேண் டுமென்று வாதில்சுகுறுவென்னும் எல்கையைநாடி மிகவிரைவாக நடந்தார்கள்.

அப்துலாத் தீமான்கொண்டசருக்க-முற்றிற்று.

## சுகைறுல் ஆமிறீமான்கொண்ட சருக்கம்

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

வாரண வரசர் போற்று முகம்மதர் மருகர் கல்விப்
பூரண ரலியுல் லாதாம் புக்குபாட் டையினி லுற்ற
வேறணி சுகைறுல் ஆமி றின்பமார் கவிமாவோதிச்
சீரணி யீமான் கொண்ட செய்திகள் யாவுஞ்சொல்வாம்

### இதன் பொருள்

யானைப்பதாதிகளுடைய இராஜர்களும் போற்றிப்புகழும் நன மையடான முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் மருமகரு மாய்க்கல்வியில் நிரப்பமானவர்களுமாய் விளங்கும் அலிறலியல்லாகு அன்கவர்கள் போகும்பாதையில்வந்த அழகியசுகைறுல் ஆமிறென் னும் பெயரையுடைய சுத்தவீரியன் இன்பம் பொருந்திய கவிமாச் சொல்லிச் சிறப்புப் பொருந்தியிருக்கும் ஈமான்கொண்டிருலாத்தி லான செய்திகள் யாவையுஞ் சொல்லுகின்றோம்.

## சரித்திரவசனம்

இபுனு அப்பாசுறலியல்லாகு அன்கவர்கள்சொற்படிக்கு அலிறலியல்லாகு அன்கவர்கள், சுபைறிபுனுஹவ்வாம்றலியல்லாகு அன்கவர்களைத் தேடிவிரைந்து நடக்கும்போது, திருமதீனமாநகரத்தில் நபிநாயகமவர்களிடத்திலே, ஜிபுரீலலைகிஸ்ஸலா மவர்கள்அல்லாகுத்தஆலாவுடைய வுத்தரவின்படி ஓதிக்கொண்டுவந்து அல்லாவுடைய சலாமுஞ்சொல்லி, சுபைறிபுனுஹவ்வாம் இறவுசுல்கூல் இடத்திலே சிறையாக அகப்பட்டுப்படுகிறவருத்தத்தையும், திருமக்கமாநகரத்தில் ஷைத்தான் சப்தித்து அலியார்தனிவழியே போகிறார் அவரை நீங்கள்போய் வெட்டிப்போடுங்களென்று சொன்னதையும், அச்சொற்கேட்டுத், திருமக்கமாநகரார்கள் திரண்டு அப்துலாத்து, முக்காவில் கந்தலத்துஆகிய இம்மூன்றுபேரையுமனுப்பி அலிறலியல்லாகு அன்குவைவெட்டச் சொன்னதையும் அதற்காக அவர்கள்மூன்றுபேரும் போனதையும், அதையறிந்து அப்பாசுறலியல்லாகு அன்கவர்கள் மசிதையனுப்பி அலிறலியல்லாகு அன்கவர்களுக்குத் தெரிவித்ததையும் திருமக்கமாநகரத்தி லிருந்துபோன மூன்றுபேர்களில், இரண்டுபேரை, அலிறலியல்லாகு அன்கவர்கள் கொன்றுபோட்டதையும், அப்துலாத்தென்பவர் தீனில்லிசுலா மானதையும்சொல்லி, முகம்மதே அலிறலியல்லாகு அன்கவர்களுக் குதவிக்காகச்சீக்கிரம் ஆளனுப்பவேண்டுமென்றுஞ் சொல்லிவிட்டுப் போனார்கள்.

அதுகேட்டுடனே, நபிநாயகம்பிலால் முஅத்தீனை யழைத்து அசுஹாபிமார்களை யெல்லாம்பள்ளிவாயலிற்குச்சீக்கிரம்வந்துசேரும்படியாகச் சொல்லிக்கூட்டிவாருமென்று சொன்னார்கள். அதுபோலபிலால்முஅத்தீனும்போய் அசுஹாபிமார்கள் சகலருக்குஞ்சொன்னார்கள், அதுகேட்டுடனே, அவ்வசுஹாபிமார்களுங் கூட்டங் கூட்டமாகப் பள்ளியில்வந்துசேர்ந்தார்கள், அதுகண்டுநபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மனமகிழ்ந்து பள்ளிவாயிலில்வந்து, அங்கிருக்கு மின்பறென்னு மேடைமேலேறிநின்று, அல்லாகுத்த ஆலாவைப் பலபுகழாலும் புகழ்ந்து குத்துபாவோதிப் பின்னர் தீனில்லிசுலா முடைய நடபடியொழுங்குகளையும் விபரமாகப் போதித்துக் காட்டிப்பின்னர், யாவரு மறியும்படியாய் ஜிபுரீ லலைகிஸ்ஸலாமவர்கள்வந்து சொன்ன ஓதியையும் விளக்கமாகச் சொல்லி காட்டிக்

சபையோர்களைப்பார்த்து அல்லாகுத்த ஆலாவுடைய றகுமத்துப்பெற்றவர்களே முசிலிமானவர்களே என்னுடையதோழன் மார்களேயென்றுகூப்பிட்டு இப்போது வழியிலே தனித்தவராகப் போகிற அலியாருக்குதவிக்குச் சனங்களனுப்ப வேண்டுமே யதற்கென்னயோசனை சொல்லுகிறீர்க ளென்றுகேட்டார்கள் அதற்கு ஆமிறுடைய மகனார் சதீதென்பவர் அச்சபையி லெழுந்து நின்று நபிநாயகமவர்களைப்பார்த்து மூன்றுலோகத்திற்கு மாண்டகையாகியநாயகமே எங்களுயிருக்குயிரானவர்களே நானொன்றை நினைக்கிறேன் தேவரீருங்களுடைய திருவாக்கினு லென்னைச்சொல்லும்படிவுத்தரவு செய்வீர்களாகிற் சொல்லுகிறே னென்றுசொன்னார் அதுகேட்டு நபிநாயகம் அவரைப்பார்த்து ஒகே! சகீதிபுனு ஆமிறே சொல்லுமென்று சொன்னார்கள் அப்போது சகீதிபுனு ஆமிறு றலியல்லாஹு அன்கு சொன்னார்கள். புலீவிபுனு அப்பாசுமிருந்த வல்லமைசாலியதிலும் எதிரிகளுடைய தந்திரத்தை யறிவார் ஆதலால அவருடனே ஆயிரங்குதிரை வீரியான அசுஹாபிமார்களையனுப்பி யலியிபுனு அபித்தாலி பவர்களுக்குதவியாகும்படி செய்தால் நன்மையாயிருக்குமென்று சொன்னார்.

அதுகேட்டு நபிநாயகமவர்கள் சந்தோஷமாகி யாசகீதேயென்றவரைக்கூப்பிட்டு நீர்சொன்னயோசனை மிகவுநல்லயோசனை தானென்று மெச்சிக்கொண்டு அல்லாகுத்தஆலாவைப்புகழ்ந்தவர்களாக மின்பறைவிட்டுக்கீழிறங்கி யிருந்துகொண்டு புலீவிபுனு அப்பாசுறலியல்லாகு அன்கவர்களையழைத்து அவர்களை அமீருக்கிக் கொடியுங்கொடுத்தவர்கூட ஆயிரங்குதிரை வீரர்களான அசுஹாபிமார்களையுஞ் சேர்த்துச் சொல்லவேண்டிய கருமங்களெல்லாஞ் சொல்லியலியாருக்குதவிக்காகப் போங்களென்றனுப்பினார்கள் உடனேயவர்கள் யாவரும் படைஆயுஸ்துகளையணிந்து ஆயுதசன்னத்தராய்க் குதிரைகளின் மேலேறி அல்லாகுத்தஆலாவையும் நபிநாயகமவர்களையும் புகழ்ந்து தசுபீகுதகுலீலுதகுபீறென்ற இம்மூன்று வாக்கியமுழக்கத்துடனே புலீவிபுனுஅப்பாசு றலியல்லாஹு அன்கவர்கள் முன்னிலையாய் மற்றவர்கள் யாவரும் பின்னிலையாகப்போனார்கள பின்னர் நபிநாயகந்தங்கள் தண்டற்காரர்களாகிய அம்றிபுனுவுமையததுல் லமீரியென்பவரையும் அப்துல்லா இபுனு சுல்சுகுனி யென்பவரையு மழைத்து நீங்களிரண்டுபேர்களும் இந்தப் புலீவிபுனு அப்பாசுடைய கூட்டத்தாருக்கு முன்னாலே மிகு

சீக்கிரத்திற்போய் அலியாரைக்கண்டு அவருக் கென்னுடைய சலாமுஞ் சொல்லி அல்லாபாத்தால் வந்த வகியையுஞ்சொல்லி புலேலிபுனு அப்பாசுடனே ஆயிரம் அசுஹாபிமார்களை யனுப்பியிருக்கிறதையுஞ்சொல்லி அந்தப் புலேலும் அசுஹாபிமார்களும் அங்கேவந்தவுடனேயுங்களோடு மெல்லாருமொன்றுகச்சேர்ந்து போகும்படிசொல்லுங்களென்றனுப்பினுர்கள்.

அதுகேட்டவுடனே யவ்விருவருந் திடபிடியாகிய குதிரையின்மேலேசவாராகிச்சூராவளிக்காற்றைப்போலும்மேட்டிலிருந்து பள்ளத்தில் விரைந்துவழியுந் தண்ணீரைப்போலுங் குதிரையைநடாத்தியன்றுபோய்மற்றுநாள் மஹரிபுடையநேரத்தில் அலிறலியல்லாஹு அன்கவர்கள் கண்டவுடன் சந்தோஷங் கொண்டவர்களாகி நபிநாயகத்துடைய வுவப்புமீறிய தண்டர்க்காரர்களே என்னசெய்திகொண்டுவந்தீர்களென்று கேட்டார்கள். அதற்கு அம்றிபுனுவுமையத்துல் லமீரியும் அப்துல்லா இபுனுசுல்சுகுனியும் நபிநாயகமவர்களுக்கு அல்லாகுதஆலாவகியனுப்பினன் அந்தவகியின்செய்தியையும் தங்கள்சலாத்தையுமுங்களுக்குச் சொல்லச் சொல்லியும் எங்களையுங்கள்கூட வுதவிக்குச் சேர்ந்துவரும்படிக்குஞ் சொன்னுர்கள். அப்போதுஅலிறலியல்லாஹு அன்கவர்கள் வகியுடையகாரிய மென்னவென்றுகேட்டார்கள் அதற்கவர்கள் சுபைறிபுனுஹவ்வாம் றலியல்லாஹு அன்கவர்கள் இறவுசுல்கூலிடத்திற் கடுஞ்சிறையில் அகப்பட்டுப்படுகிறவருத்தமும் திருமக்கமாநகரத்தில் இபுலீசுலகினத்துல்லா சப்தித்ததும் அதின்பேரில்மூன்றுபேர்கள் தங்களைக்கொலைசெய்யவந்ததும்அஃதறிந்து அப்பாசுறலியல்லாஹு அன்கவர்கள் மசீதையனுப்பினதும் அம்மசீதுவந்து தங்களுக்குத் தெரிவித்ததும், பின்னர் திருமக்கமாநகரத்திலிருந்து வந்த மூன்றுபேர்களில் முக்காவிலேயும் கந்தலத்தையுந்தாங்கள் கொன்றதையும், அப்துலாத்தென்பவர் தீனில்லிசுலாமானதையும் சொல்லித் தாங்கள் தனித்துவருவதால் உதவிக்கு ஆளனுப்பும்படியாயும் வகிவந்தது அதற்காக நபிநாயகம் புலேலிபுனு அப்பாசுடனே ஆயிரம் அசுஹாபிமார்களை யனுப்பியிருக்கிறுர்களென்று சொன்னுர்கள்.

அதுகேட்டு, அலிறலியல்லாஹு அன்கவர்கள் புலேலிபுனு அப்பாசுறலியல்லாகுஅன்கவர்கள்வருகிறுர்களென்றசந்தோஷத்தினுலேஅந்த

இடத்திலே ஓரிரவும் பகலுமிருந்து புலேவிபுனு அப்பாசுவருவாரெ ன்று பார்த்தார்கள் அவர்கள் வாரதனிலே அவ்விடத்தைவிட்டு மெழுந்து அம்றிபுனுவுமையத்துல் லமீரியுடனும் அப்துல்லா இபுனு சுல் சுகுனியுடனு நடந்து பூஞ்சோலேயுந் தின்னும் பழவர்க்கமரங்க ளனேகங்களும் தண்ணீர் தடாகங்களுமிருக்கு மகுறஜென்கிற தலத் தில் வந்திறங்கி அவ்விடத்தினு மோரிரவும்பகலுமிருந்து புலேவிபுனு அப்பாசுறலியல்லாகு அன்கவர்கள் வருவார்களென்று பார்த்தார்கள் அங்குமவர்கள் வாரதினல் அலிறலியல்லாகு அன்கவர்கள் அத்த லத்தில்நின்று மெழுந்தருளியாகி நபிநாயகத்தின் றண்டற்காரர்களா கிய இரண்டுபேருடனும் நடந்தார்கள் அப்படி நடந்துபோகச்சே ஒருபாதையாகப் போனது இரண்டு பாதையாகப்பிரிந்தன. அதுகண்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் நபிநாயகத்தின் தண்டற்காரராகிய அம்றிபுனு வுமையத்துல் லமீரியவர்களேப்பார்த்து ஒகே அம்ரே! இந்த இரண்டு பாதையிலே எந்தப்பாதை அந்த மல்கூன் இறவுசுல் கூலிருக்கிற வாதில்சுகுராவுக்குப் போகிறபாதையென்று கேட்டார் கள் அதற்கு,

அம்றிபுனு வுமையத்துல்லமீரி வலதுபக்க மிருக்கிறவழி எமன் ராச்சியத்திற்குப் போகிறவழி யந்தவழியால் வாதில் சுகுறுவுக்குப் போகிறது கிட்ட ஆனல் கல்லு, முள்ளு, காடு, மேடு, மலே இவைகள நிகமிருக்கும். அதனேடு தண்ணீருங் கிட்டக்கிடையாது இடதுபக்கமி ருக்கிறவழி மெத்தவும் சுற்றுவளேந்தவழி மெத்தவும் சுற்றுவளேந்த வழி தண்ணீர் முதலானதுந் தட்டில்லாம லிருக்குமென்று சொன் ஞர். அதுகேட்டு எந்தவழிபோகலாமென்று மூன்றுபேரும் யோசித் துக்கொண்டு நிற்கும்போது தங்களுக்கெதிரிலேதூசியானது மேகம் படர்ந்து வருவதுபோல வரக்கண்டு இம்மூன்றுபேர்களும் அந்தத் தூசிவரும் வழியைப் பார்த்தவர்களாக நிற்கும்போது அலிறலியல் லாஹு அன்கவர்கள் மற்ற இரண்டுபேர்களேயும் பார்த்து நீங்களிந்த இடத்திலேயே நில்லுங்கள் நானந்தத் தூசியெழும்பி வருகிறகாரண மென்னவென்று பார்த்து வருகிறேனென்று சொல்லிவிட்டுத் தூசிவ ரும்வழியை நாடிநடந்துபோய் பார்க்கும்போது,

அங்கே செவந்தபட்டினல் அங்கிதரித்து நவரத்தினத்தினலே கிரீடந் தலேக்கிட்டுச் சரிகையினு லிழைத்தவாகுவலயம் பூட்டி முத் துக்குஞ்சங்கட்டிய வுத்தரீகம்போட்டு வைரக்கடகம்,கைக்கிட்டு ரத்

தின அரைஞாணிடையிலெபூட்டி வீரகண்டை காலிலணிந்து வலது பக்கத்தில் வயிரப்புடியிழைத்த வாளுங்கட்டி, நீண்டவல்லயமுங் கையிலேபிடித்துக் காக்கைநிறம்போன்றவோர் கறுப்புக் குதிரையின் மேலொருவன்வரவும் அவனுக்குப்பின்னுலொரு கறுத்த ஹபசிப்ப யல் ஒருகுதிரையிலிருந்து ஒருவொட்டகத்துடைய நாசிவடத்தைப் பிடித்து இழுத்துக்கொண்டுவரவும் அந்தவொட்டகத்தின் கழுத் தில் ஒரு ஆட்டுக்கிடாயை யறுத்துரித்துத் தூக்கியிருக்கவும் ஒட்ட கத்தின் முதுகின்மேல் நவரத்தின ராசிகளைத் தங்கத்தி லழுத்திச் செய்யப்பட்ட பாரியானவோர் கிளிக்கூண்டிருக்கவுங் கண்டார்கள். அப்போது அங்குவந்த சுத்தவீரியன் அலிறலியல்லாகு அன்கவர்க ளுக்குச் சலாம்சொல்லி யவர்களுக்கெதிரே குதிரையைவிட்டான் அது கண்டு அலிறலியல்லாகு அன்கவர்களிவன்மிகவும் பெரியகனத்தை யுடைய இராஜனுக இருக்குமென்றெண்ணித் தங்கள் குதிரையை யவனுக்கெதிரே விடாமற் றூரவிலக்கியோரிடத்திலே யொதிக்கிவிட் டுக்கொண்டு நின்றூர்கள்.

அப்போது, அந்தசுத்தவீரியன் மீசையிலே கையைபோட்டுச் சூருவளிக்காற்றுனது என்குதிரையினுடைய காலுக்குப்பயப்படும், இன்னும், என்னுடைய குதிரைகோட்டைக்குமேற் கோட்டையானு லும் பாய்ந்துதாண்டிவிடும், அதுவுந்தவிர, என்வல்லயமானது எதிர்த் தவர்களுடைய வுயிரையுரிஞ்சி வாங்கிக்கொள்ளும்; இன்னும் என்னு டைய வாளாயுதத்தின் கீர்த்தி யெவ்விடத்திலும் பரந்திருக்கின் றன, அதனுல், என்னுடைய எதிரில்வர எப்பேர்ப்பட்ட இராஜாக்க ளும் பயப்படுவார்கள், மேலும், நான் வருவதுகேட்டால், அங்கங் கிருக்கிற இராஜாக்கள்பயந்து கெடிகலங்கி வூரைவிட்டோடிக்காட்டுக் குப்போய்விடுவார்களென்ற சொல்லுடனே குதிரையைவிட்டுக் கீழிற ங்கியோரிடத்திலிருந்துகொண்டு, ஒட்டகை, நாசினூலைபிழுத்துவரு கிறதன்பயலேய்யழைத்து, ஒட்டகத்தைப் படுக்கவைத்துக்கொண்டு அதின் கழுத்திலேதொங்குகிற ஆட்டிறச்சியைத்தின்னச்சுட்டுக்கொண் டுசீக்கிரமாகவாவென்றுசொன்னுன் அதுகேட்டு, அந்தப்பயல் ஒட்ட கத்தைப்படுக்கவைத்துவிட்டு இறச்சியைச்சுட விறகுதேடினபோது அங்கே யோர்பிரமாண்டமாகியமாங்காய்ந்து கட்டையாய்நிற்கக்கண்டு உடனேயவன்பத்துப்பேர்கள்தூக்கும்பாரமாகிய ஒர்பெரியகல்லைத்தூக் கிஅந்தமரத்தின்பேரில் இரண்டுமூன்றடியடித்துத்துண்டு துண்டாக்கி

அந்தவிறகையோர் கல்லுப்பாறையிலேயடுக்கித்தன்னிடத்திலிருந்தசக்கிமுக்கி கல்லைத்தட்டி நெருப்புண்டாக்கி, ஒட்டகைக் கழுத்திலிருந்ததோலுரித்த ஆட்டுக்கிடாயை யவிழ்த்து நெருப்பின்மேல் வைத்து, நன்றாகப்புட்டுப்பழம்போலே சுட்டுப் பாசினென்னும் பாத்திரத்தில் வைத்துத் தன்னாயகன்கிட்டக் கொண்டுவந்துவைத்தான். இவைகளையெல்லாம் அலிறலியல்லாகு அன்கவர்கள்பார்த்து புதுமையாகி அம்றிபுனு வுமையத்துல்லஃமீரியும், அப்துல்லா இபுனுசுல்சுகுனியும் நிற்குமிடத்திற்கு வந்தான்.

பின்னர், அங்கேபயல்சுட்டுவைத்த இறைச்சியைக்கண்டவுடனே அந்தச் சுத்தவீரியன் கிளிக்கூண்டிலிருக்குந் தன் பெண்ஜாதியையழைத்தான், உடனே யவளிறங்கிவந்தாள், அப்போதவளுமிவனுமிறைச்சியை நன்றாகத் தின்றுகொண்டிருக்கச்சே, அவன் பெண்ஜாதி தனக்குப் போதுமென்ற மட்டிலும் தின்றுபின்னர் தண்ணீருங்குடித்து வாய்கழுவிக்கொண்டு கிளிக்கூண்டிலேபோய்ப் புகுந்திருந்தாள். அப்போது சுத்தவீரியன் கொஞ்சநேரந் தின்றுகொண்டிருந்த பின்னர் பயலையழைத்து முந்திரிகைச் சாராயத்துருத்தியைக் கொண்டுவரச்செய்து, அதைக்கிண்ணத்திலூற்றி முடக்குமுடக்கென்றுகுடித்தான், இங்கே குடிக்கிற சப்தம் அலிறலியல்லாகு அன்கவர்கள் நிற்கிற இடத்திலுங்கேட்டதென்று அம்றிபுனு வுமையபத்துல் லஃமீரிசொன்னார், இவ்விதம், சுத்தவீரியன்தின்று குடித்ததில் மீந்த இறச்சியைமாத்திரம் அந்தப் பயலைப்பார்த்து நீ தின்னென்று கொடுத்தான். உடனேபயலு மவ்விறச்சியைத் தின்று தண்ணீருங்குடித்தெழுந்து நின்றான், அப்போது புலைவிபுனு அப்பாசுறலியல்லாகு அன்கவர்களும் ஆயிரங் குதிரைவீரர்களாகிய அசுஹாபிமார்கள் கூட்டமும் வந்து அலிறலியல்லாகு அன்கவர்களைக்கண்டு சலாம்சொன்னார்கள். அதற்கு அலிறலியல்லாகு அன்கவர்கள் பிரத்திசொல்லிப் புலைவிபுனு அப்பாசுறலியல்லாகு அன்கவர்களுடைய நெஞ்சோடுந் தங்கள்நெஞ்சையணைத்துத் தழுவிச்சந்தோஷமாகப் பேசிக்கொண்டுநின்றார்கள். இதைக்கண்ட அந்தச் சுத்தவீரியன் தன்பயலையழைத்துஎடா! நீ கையிலே வாளையெடுத்துக்கொண்டு, அதோகூடிநிற்கிற கூட்டத்திலேபோய் அவர்கள்யார், எங்கேயிருந்து எங்கேபோக வந்தார்களென்று விபரமாக விசாரித்துக்கொண்டு வாவென்றனுப்பினான், அதுபோல், அந்தப்பயல் கூட்டமாகநிற்கிற அசுஹாபிமார்கள் முன்னாலேபோய் நீங்கள யார்? எங்கேயிருந்து எங்கேபோக இங்கேவந்

தீர்கமென்று கேட்டான், அதற்கு அம்றிபுனு வுமையத்துல் லமீரி
யவர்கள் அந்தப்பயலைப் பார்த்து, நாங்கள் மறையாத நட்சத்திரக்
கூட்டங்களாகவும் வெட்டுகின்ற கூரியவாளாகவும், ஈமானுடையவர்
களாகவும் அதுனான்கிளையிலுள்ள செய்யிதான நபிமுகம்மது முஸ்
தபா சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய தோழன்மார்களாக
வும் இருக்குமென்று சொன்னார்.

அதுகேட்டந்தப்பயல் இவர்களைவிட்டுந் திரும்பிப்போய்த் தன்
னாயகனைப் புகழ்ந்து, அந்தக்கூட்டமாகிய ஜனங்கள் முகம்மது நபி
யுடைய கூட்டத்தாரென்று சொன்னான், அதற்கந்தமகா சுத்தவீரி
யன் மிகுந்த கோபங்கொண்டு கண்களிரண்டுஞ் செவப்பாகித் தன்ன
டுமைப்பயலைப்பார்த்து நீ இந்தட்சணம்போய், அந்தமுகம்மதுடைய
ஜனங்களைவெட்டி ஹதஞ்செய்துவிட்டு வாவென்று சொன்னான்.
அதுகேட்டுப் பயல், உடனே அசுஹாபிமார்கள் நிற்குமிடத்திற்கு
வந்து, தானேறிய குதிரையை இடசாரிவலசாரிவிட்டு என்னோடு
சண்டைக்கு வாருங்களென்று வலிய அழைத்தான். இப்படிப்பயல்
வலிச்சண்டைக் கழைப்பதைக்கண்டு, செய்யிதுடைய மகன் இனா
னென்னு மசுஹாபியானவர் கடிந்தகோபத்துடனே போய்ப்பயலை
யெதிர்த்து வாளினாலேவீசினார், அந்தவீச்சைப் பயல்தடுத்துத் தன்
வாளினால் இனானென்பவருடைய வலதுகை யிரண்டாகத் தென்னங்
கீற்றுபோற்கிழியும்படியாய் ஒருவெட்டு வெட்டினான். அந்தவெட்
டினா லினானென்பவர் குதிரையில்நின்று மயங்கிக்கீழே விழுந்து ஷகீ
தாகிச்சுவர்க்கஞ் சேர்ந்தார். அதுகண்டு நவுபலென்னும் அசுஹாபி
யானவர் கடூரமாகிய கோபத்துடனே பயல்முன்னாலே குதிரையை
விட்டு எதிர்த்து வாள்வீசினார், அப்போது பயல் தந்திரமாக அவரு
டைய வாள்வீச்சைத் தடுத்துக்கொண்டு கிட்டமுடுகி நவுபலுடைய
இடையைப்பற்றிக் குதிரையைவிட்டுக் கீழேயிழுத்துப்போட்டுக்கட்
டினான், அந்தக்கட்டிலேயே அவர் ஷகீதாகிச் சுவர்க்கஞ்சேர்ந்தார்
அதுகண்டந்த நபலுடைய நாயனார் மிகுந்த கோபத்தோடுந் தானே
றியிருக்குங் குதிரையைத் தட்டிவிட்டுக்கொண் டந்தப்பயல் முன்
போயெதிர்த்து நின்றார், இவரைப்பார்த்துப் பயல் கிட்டநெருங்கிப்
பாய்ந்து விலாவைப்பிடித்துக் கீழேயடித்தான், அதனாலவரும் ஷகீ
தாகிச் சுவர்க்கஞ் சேர்ந்தார். அதுகண்டு ஆமிறுடைய மகனார்ஷகீது
கடுங்கோபத்துடனே குதிரையைத்தட்டி நடாத்திக்கொண்டு, அந்
தப் பயல் முன்போயெதிர்த்து வாள்வீசினார், அதற்குப்பதிலாகப்
பயலும் வாள்வீசிக்கிட்டநெருங்கி, யவர்கழுத்திலே யிலக்காகவோர்

வெட்டுவெட்டினன், அந்தவெட்டினலவரும் ஷகீதாகிச் சுவர்க்கஞ் சேர்ந்தார்.

இவ்விதம், பயலுடனே ஒவ்வொருவரா யெதிர்த்த அசுஹாபிமார்கள் நான்குபெயரையும் அந்தப்பயல் கொன்றுவிட்டு, இன்னுமென்னுடனே எதிர்த்துச் சண்டைசெய்ய வருகிறவர்கள் வாருங்களென்று அழைத்துக் குதிரையைச் சுலாவுட்டுக்கொண்டு திரிந்தான். அதுகண்டு, நக்குமானென்னும் பெயருடைய அசுஹாபியானவர் மிகுந்தகோப தீரத்துடனே குதிரையை அம்புவிசையாய் நடாத்தி அக்கினி வேகத்துடனே போயெதிர்த்து அப்பயலின்சிரசுக்கு நேரிலக் குப்பார்த்தோர் வெட்டுவெட்டி யிரண்டாகப் பிளந்துபோட்டார், அதனலவனும் நரகஞ்சேர்ந்தான். இவ்விதம், பயல் வெட்டுப்பட்டிறந்ததை அவனுடைய நாயனை யுத்தவீரியன் கண்டுடனே, துடிதுடித்துத் தலையையசைத்துப் பார்பாரென்று தனதுகுதிரையின் மேலேறிக்கொண்டு, அசுஹாபிமார்கள் நிற்குமிடத்தில் வந்து இடியிடித்துபோலோர் சத்தம்சப்தித்து, ஓகே, அறபிகளே! நீங்களோருவரு மென்னுடைய கத்தியைவிட்டுந் தப்பிபோகமாட்டீர்கள், உங்களுக்கெல்லாஞ் சாவடுத்துக்கொண்டது பாருங்களென்று குதிரையைவலசாரியிடசாரிவிட்டுப் பாய்ந்து நக்குமானென்னும் அசுஹாபியைக் குதிரையில்நின்றும் விலாவைப்பிடித்திழுத்து சுழட்டிவீசினன். அந்தவீச்சினலவர் அப்துல்லாவென்னுமோர் அசுஹாபி மேலே போய்விழுந்து இரண்டுபேரும்ஷஹீதாய்ச் சுவர்க்கஞ் சேர்ந்தார்கள், பின்னரந்தச் சுத்தவீரியன் மற்ற முசிலிமானபேர்களுடனேவந்தெதிர்த்தான், அதுகண்டு அசுஹாபிமார்கள் யாவரும்பயந்து பின்னிடைந்தார்கள், அப்போது அவ்வசுஹாபிமார்களுக்குத் தலைவாகிய புலிபுனு அப்பாசுறலியல்லாகு அன்கவர்கள், மூமினைவர்களுக்கெல்லாம் இராஜாவாகியும் எங்களுக்கெல்லாம் நாயகமாகியும் விளங்கும் யா அலியே இந்தக் குதிரைமேலேறி யெதிர்த்துவருகிற சுத்தவீரியனைத் தடுத்துக்கொள்ளுங்கள், அப்படித் தாங்கள் தடுக்காதவரையில் முசிலிம்கள் கலவரப்படுவார்களென்று சொன்னார்கள்.

அதுகேட்டு, அலிறலியல்லாகு அன்கவர்களேறிநிற்கிற துல்துலென்னுங் குதிரையை மனவேகமாக நடாத்திக்கண்களிலே அக்கி

ணிப்பொறிதெறிக்க கோபங்கொண்டு வந்து, அந்தச்சுத்தவீரியனை
எதிர்த்தார்கள்; அப்போதுறலியல்லாகு அன்கவர்களுடைய வர்சனை
யாகிய முகம்வியர்த்து நீர்சிந்திற்று. அந்தவேர்வை மணம்வாடாமல்
லிகைப்பூமணம்போலிருந்தது, இவ்விதமெதிர்த்துவந்த அலிறலியல்
லாகு அன்கவர்களைப்பார்த்து, அந்தச்சுத்தவீரியன் சப்தித்து நீயார்?
நல்லவாலிபனாக இருக்கிறாயே என்னைநீமற்ற இராஜாக்களைப்போ
லெண்ணித்தெரியாதபுத்தியினாலுன் குதிரையை நடாத்திக்கொண்டு
நெருங்கிக்கிட்டவந்துவிட்டாய், என்றாலும் (சிறியாற்செய்தகுற்றம்
பொறுப்பது பெரியோர்க்கடனே,) என்னும் நீதிவாக்கியத்தினால் நீ
செய்தகுற்றத்தை நான்பொறுத்துக்கொண்டேன், இப்போதுன்னு
யிரைத் தப்பித்துக்கொண்டு போவென்று சொன்னான்.

அதுகேட்டு, அலிறலியல்லாகு அன்கவர்கள் அந்தச் சுத்தவீரி
யனைப்பார்த்துக் கடுங்கோபங்கொண்டு அல்லாவுக்கும் அவனுடைய
றசூலுக்கும் பகையாது பாவகன்மம்பொருந்திய சுத்தவீரியனே,
நான்பனிகாலிபுக்கிளையி னுண்டானபுலி, இன்னும், அபீத்தாலிபு
டைய மகனாகிய அலியாயிருக்குமென்று சொன்னார்கள். அந்தச்சுத்
தவீரியன் அலியென்றசொற்காதிலே கேட்டமாத்திரத்தி லிடியிடித்
ததுபோலே சப்தமிட்டு அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து,
ஓகே! மனுடனே நீரெம்பவும்பேசாதே வாயைமூடென்றுசொல்லி
யுருவிய வாளோடுபாய்ந்தான், உடனே, அலிறலியல்லாகு அன்கவர்
களுந்துல்புகமிறன்றவாளோடும் பாய்ந்தார்கள். இவ்விதம், இரண்டு
பேர்களுங் காலையிலிருந்து பொழுதிச்சத்தைவிட்டுஞ் சாய்ந்த னுக
றுநேரம்வரையில் வெட்டுந்தட்டுமாக நின்றுவிடாத சண்டைசெய்தார்
கள், இவ்விதஞ் சண்டைசெய்ததிலே, அந்தக்சுத்தவீரியனுடைய
குதிரைநடையயர்ந்து இளைத்தது, அதுகண்டவன், அலிறலியல்லாகு
அன்கவர்களைப்பார்த்து, ஓகே, அபீத்தாலிபுடைய மகனாகிய அலி
யேயென்னுடைய குதிரையிளப்பாயிருக்கிறதாகையால், நான்வே
றோர்குதிரைமேலேறி யுன்னுடனே சண்டைசெய்கிறேன், அதுமட்
டினுங் கொஞ்சம்பொறுத்து நில்லுமென்றுசொன்னான்.

அதுகேட்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் அந்தச்சுத்தவீரி
யனைப் பார்த்துன்மனம்போற்செய் யென்றுசொன்னார்கள். உடனே

யவன் தன்னிடத்திற்கு வந்துவேறோர் குதிரை மேலேறிச் சீக்கிரத்திற் சண்டைத்தலத்தில்வந்து நின்றுகொண்டு, ஒகே, அலியே! நீயென்னையறியமாட்டாய் போலிருக்கிறது, நானாகிறவன் பெருங்கீர்த்தியையுடையவன், அனேக இராஜாக்களுடைய கோட்டைகளைபிடித்துப் படைகளையெல்லாம் வெட்டிக் கருவறுத்தவன், ஆதலால் நீ யெனக்கெம்மாத்திரம் போபோவென்றுசொன்னான். அதுகேட்டு, அலிறலியல்லாஹு அன்கவர்கள், அந்தச்சுத்தவீரியனைப்பார்த்து, ஒகே! தன்னைப்பெருமையாகப் பேசுகிறவனே, உன்னுடையபேரென்னவென்றுகேட்டார்கள், அதற்கவன் என்பெயர் சுகைறுல் ஆமிறென்றுசொன்னான். அதுகேட்டு, அலிறலியல்லாஹு அன்கவர்கள், அந்தச்சுகைறுல் ஆமிறைப்பார்த்து நீசுத்தவீரியன்தான், அதற்குக் குறைவில்லை, என்றாலுமிப்போ துன்னுடைய சுத்தவீரியத்தையும், உயிரையுமிழந்துபோடாமற் கலப்பறுதலான (லாஇலாக இல்லல்லாகு முகம்மதுர்றசூலுல்லாகி) என்னுந் திருக்கலிமாவைச் சொல்லுவையே யானால், உனக்குப் பெருமையுங் கீர்த்தியுமுண்டாகுமென்று சொன்னார்கள்.

அதுகேட்டுச் சுகைறுல்ஆமிறு மிகுத்தகோபங்கொண்டு அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து, ஒகேஅலியே!உன்னைப்போலனேகர்களை நான் பார்த்திருக்கிறேன், ஆதலால், உன்னுடைய மாருட்டத்துக்கு நானாளல்லே, அதற்குவேரேயாரையேனும் பார்த்துக்கொள். நீரெம்பச்சாமார்த்தியம்பேசவேண்டாம் வாயைமூடிக்கொள்ளென்றுசொல்லிப்பாய்ந்தான். அதுகண்டு, அலிறலியல்லாகு அன்கவர்கள், இவன் என்னசொன்னாலுந் தீனில்விசுலாமாகிறது கஷ்டமென்று நினைத்து மிகவும் கொடூரமான கோபங்கொண்டு இடியிடித்ததுபோலோர் சப்தமிட்டுக் குதிரையின்மேலிருந்து, ஓர்குதிகுதித்து அந்தச் சுகைறுல் ஆமிறுடையஇடைக்கட்டோடு பிடித்துக்குதிரைகல்லணையை விட்டுக்கீழே யிழுத்துச்சுழட்டி அங்குநிற்கிற புலேலிபுனு அப்பாசையடித்து, அவர்களிடத்தில் இவனைக் கடுங்காவலில் வையுமென்று வீசினார்கள் உடனே புலேலிபுனுஅப்பாசு றலியல்லாஹு அன்கவர்கள் அந்தச்சுகைறுல் ஆமிறை தளைபிட்டுக் காவலில் வைத்தார்கள்.

இவ்விதம், இங்கேநடந்த காரணங்களையெல்லாம், அந்தக்கிளிக்கூண்டிலிருந்த, சுகைறுல் ஆமிறுடைய பெண்சாதிகண்டு, அக்கூண்டைவிட்டுஞ் சரேலென்று கீழிறங்கி, இனிப்புருஷனுக்குப் பின்னாலே

நமதுயிரைவைத்திருந்தினாற் காரியமென்னவென்று யெண்ணிக் கடுங்கோபத்துடனே வாளையுருவிச் சுழற்றிகொண்டு, வாவரத்திலேயே முசிலிமானவர் கூட்டத்தில்விழுந்து ஒரு அசுஹாபியைவெட்டினாள். பின்னுமதுபோலே குதித்துப்பாய்ந்து ஒவ்வொருவராகமூன்று அசுஹாபிமார்களை வெட்டிவிட்டுவாளையசைத்து நின்றுகொண்டு, ஒகே முகம்மதுடைய கூட்டத்தார்களே என்புருஷனை நீங்கள் சிறைசெய்ததற்கு உங்களை யிலேசாகவிடமாட்டேன், என்னைப்பெண்பிள்ளை யென்று நீங்கள் மெதுவாக எண்ணவேண்டாம், நானாகிறவள் ஆண்பிள்ளைகளான அனேகஇராஜாக்களைவெட்டி, அவர்கள்படைகளையும் வெட்டி வெற்றியைப்பெற்றவளாகயிருக்கும், இன்னும்ஊர்பதிகளைக், காட்டையூர்பதிகளாக்கினவளாகஇருக்கும், ஆதலால், என்னுடனே யெதிர்த்துவருகிறவர்கள் வாருங்களென்று சப்தமிட்டாள். அதுகண்டு, அலிறயல்லாஹு அன்கவர்கள் இவள் பெண்பிள்ளையாதலால், நாமெதிர்த்துச் சண்டைசெய்யக்கூடாதென்று தங்கள்கிட்டநின்ற சபுவானென்கிற பெயரையுடைய அசுஹாபியைப்பார்த்து நீர்போய்ச் சண்டைசெய்யுமென்று சொன்னார்கள், அதுகேட்டு, உடனேசபுவானுங் கோபங்கொண்டு அந்தப்பெண்பிள்ளையோடு மெதிர்த்துச் சண்டைசெய்தார் அவளும் பாய்ந்து சபுவானைவெட்டினாள், அவரும் அந்த வெட்டினால் ஷகீதாகிச் சுவர்க்கஞ்சேர்ந்தார், அதுகண்டு, சபுவானுடைய வுடற்பிறந்தார் கோபங்கொண்டு, அந்தப்பெண்பிள்ளை யுடனே யெதிர்த்துச் சண்டைசெய்தார், அவரையும் அவள்வெட்டினாள், அவரும் அந்தவெட்டினால் ஷகீதாகிச் சுவர்க்கஞ்சேர்ந்தார், அதுகண்டு, அலிறலியல்லாஹு அன்கவர்கள்வந்து இவளைப் பெண்பிள்ளையென்று சும்மாவிட்டாற்காரியங்கெட்டுப்போகும் என்றாலும், இவளை வெட்டப்படாதென்றெதிர்ததுத் தங்கள் கையிலிருந்த வாளுடையபுடியினால், அவளையொருதட்டுத் தட்டினார்கள், அந்தத்தட்டிலே யவள்தடுமாறிக் கீழேவிழுந்தாள்.

இவ்விதம், விழுந்தவளை வாளின்பிடியினால் அலிறலியல்லாகுஅன்கவர்கள் அமிழ்த்துக்கொண்டுநின்றார்கள். அவளெழும்பப்பார்த்தாள், எழும்பவலாமல் வருத்தமுண்டானவளாகியுடனே அலிறலியல்லாஹு அன்கவர்களைப்பார்த்து, ஒகே! எற்றவாட்டமில்லாத சுத்தவீரியரே நான் பெண்பிள்ளையானதா லென்னையொன்றுஞ் செய்யவேண்டாமென்ற சொல்லோடு (அஷ்ஹது அன்லா இலாக இல்லல்லாகு வ

அஷ்ஹது அன்னமுகம்மதுர்ற ரூலுல்லாகி) என்னுமிக்தஷஹாதத்துக் கலிமாவைச்சொன்னாள், உடனே அலிறலியல்லாகு அன்கவர்கள் சந்தோஷங்கொண்டு அவளைவிட்டுவிட்டார்கள், அவளுமெழும்பிநின்றுகொண்டு, அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து அனேகம் புகழ்ந்து சுத்தவீரியரே நான் மிகவும்தாராதரமான குடித்தனத்திலுள்ளவள், என்னுடைய காலப்பிசகினால் இவ்விதம் வந்துசம்பவித்தது, இனியுங்களுடைய அடைக்கலமானேன், ஆதலால் என் புருஷனை யொன்றுஞ் செய்யாமல் விட்டுவிடுங்களென்று சொன்னாள்.

அதுகேட்டு அலிறலியல்லாகு அன்கவர்கள், உடனே சிறையிலிருக்கிற சுகைறுல் ஆமிறை அழைத்து, ஒகே சுகைறுல் ஆமிறேயுமது பெண்ஜாதி கலிமாச்சொல்லி தீனில்விசுலாமாகியிருக்கிறான் ஆதலால், நீரும் அதுபோலே கலிமாச்சொல்லி தீனில்விசுலாமாகிப் பெண்சாதியுடன் கூடிவாழும், அல்லாதிருக்கில் அவளைத்தலாக்கென்னும் பிரிவினையாக்கிப்போடுமென்று சொன்னார்கள், அதுகேட்டுச்சுகைறுல் ஆமிறு அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து யாஅலியே யுங்கள் கையை நீட்டுங்கள்கலிமாச் சொல்லுகிறேனென்று சொன்னார் உடனே அலிறலியல்லாகு அன்கவர்கள் தங்களுடைய முபாறக்கான கையை நீட்டினார்கள் அக்கையைச் சுகைறுல் ஆமிறுபிடித்து (அஷ்ஹது அன்லா இலாக இல்லல்லாகு வஅஷ்ஹது அன்னமுகம்மதுர்ற ரூலுல்லாகி) என்னுமிந்த ஷஹாதத்துக்கலிமாவைச்சொல்லி தீனில் விசுலாமாய்க், கைகட்டுங், காற்கட்டு மவிழ்க்கப்பெற்றுச்சிறையைவிட்டும் நீங்கினின்றார்.

இவ்விதஞ், சுகைறுல் ஆமிறும், அவருடையபெண்சாதியுங்கலிமாச்சொல்லி தீனில்விசுலாமானதின்பேரில் அலிறலியல்லாகு அன்கவர்கள் மிகுந்த சந்தோஷங்கொண்டார்கள் மற்றமுசிலிமானவர்கள் யாவருஞ் சந்தோஷங்கொண்டார்கள் அப்போது, சுகைறுல் ஆமிறென்பவர் அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து யாஅலியேநீங்களெங்கேபோகவந்தீர்களென்று கேட்டார், அதற்கு அலிறலியல்லாகு அன்கவர்கள் ஜகாபினுடையமகன் இறவசுல் கூலென்பவனிருக்கு மூருக்குப்போக வந்தோமென்றார்கள் அதுகேட்டுச் சுகைறுல்ஆமிறென்பவர், அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து அசனுடைய தகப்பனு

ரே சீக்கிரம்வாருங்கள், நாங்களும் அவனூரைத்தானுடிவந்தோம், ஆதலால், 'உங்களுடனே, நாங்களும் துணையாக வருகிறேமென்று சொன்னர், அதுகேட்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் சுகைறுல் ஆமிறைப்பார்த்து நீரங்கேயேன் வருகிறீரென்று கேட்டார்கள் அதற்குச், சுகைறுல் ஆமிறென்பவர் அலிறலியல்லாகு அன்கவர்களைப் பார்த்து, மூமினுனவர்களுக்கு இராஜவான யாஅலியே! என்பெண் சாதியான • இவள் என்சிறியதகப்பனுருடையமகள், இவள்பேர் கிந்தென்று அழைக்கப்படும், இவளுக்கு ஒரேயுடற் பிறந்தா னுண்டும். அவனை அந்த இறவுசுல்கூலென்றபாதகன் சிறைபடுத்தியிருக்கிருன், ஆதலால், இறவுசுல்கூலென்பவனைவெட்டி அவன் ஜெனங்களையும் வெட்டிவிட்டு என்னுடைய மைத்துனனைச் சிறைச்சாலையைவிட்டுமீட்டுக்கொண்டு வரவேண்டுமென்றுவந்தேன், அப்படியவனை நான்சிறை மீட்டாமலிருந்தால், என்பெண்சாதி என்னைவிட்டும் நீங்கிக்கொள்வாள், ஆதலால், மிகுதீவரத்துடனே வந்தேன், வருகிற இந்தவழியிலே தேவரீர்தங்களைக்கண்டு நேர்வழிபெற்றேனென்றுசொன்னர்.

அதுகேட்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் மிகுந்த சந்தோஷமாகிச் சுகைறுல் ஆமிறைப்பார்த்து நீர் என்னுடைய வலதுகையாயிருக்கும் ஆதலால், வாரும் இறவுசுல்கூலுடையவூருக்குப் போய் உமது மைத்துனனைச்சிறையைவிட்டு மீட்டிக்கொண்டு வரலாமென்று சொன்னர்கள் இப்படிப்பேசிக்கொண்டு யாவரும், அவ்வழியிலே யிராத்தரித்திருந்து காலையிலெழும்பி அலிறலியல்லாகு அன்கவர்கள் மாமானவர் முன்னிலையாகவும் மற்றவர்கள் ஜமர்த்தானபின்னிலையாகவும்நின்று, அல்லாகுத்தஆலாவைத் தொழுதெழுந்து வாதில் சுகுருவுக்குப்போகிற வருத்தமான குருச்சுவழியில், அலிறலியல்லாகு அன்கவர்கள் சிங்கத்தைப்போல் முன்னிலையாகவும், மற்றவரும் புலிகள்போலே பின்னிலையாகவும் நடந்துபோனர்கள்.

சுகைறுல் ஆமிறீமான்கொண்ட சருக்கம்.

முற்றிற்று.

# அலியார் மழையழைத்த சருக்கம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

மாக நிறைந்த புகழிறசூல் மருகாலியார் பாலையிலே
தாக நிறைந்த மெய்ம்மையவர் தகைமை யறிந்தோ ரிறையவன்பால்
வாகு நிறைந்த கரமேந்தி வருந்தி யிரந்து துஆக்கேட்டு
மேக நிறைந்த மழையழைத்தமேன்மை யெவையும் விளம்பிடுவாம்.

## இதன்பொருள்.

ஆகாயத்திலும் நிறைந்தபுகழையுடைய றசூல்நாயகமவர்களின் மருமகனான அலிறலியல்லாஹு அன்கவர்கள், பாலைநிலத்திலேதாகம்நிறைந்த மெய்ம்மையுடையவர்களான அசுஹாபிமார்களின் தன்மையையறிந்து ஒப்பற்ற அல்லாகுத் தஆலா இடத்தில், அழகுநிறைந்த தங்களிருகைகளையுமெடுத்தேந்தி மிகவும்வருந்துதலாக இரந்து துஆக்கேட்டு, மேகத்தில் நிறைந்திருக்குமழையை யழைப்பித்தமேன்மைகள் யாவையுஞ் சொல்லுகின்றோம்.

## சரித்திரவசனம்.

அலிறலியல்லாகு அன்கவர்கள் முன்னிலையாயு மற்றவர்கள்பின்னிலையாயும், இரவும்பகலு மொரேநடையாக நடந்து நாலாநாள் பூமிகபாலங்கபாலமாகவெடித்துக்கானற்பறக்கும்பாலைநிலத்திலானபோது தண்ணீர்த்தட்டின லசுஹாபிமார்களுக்கும், அவர்களேறிப்போகும் வாகனாதிகளான குதிரைகளுக்கு மிகவுந் தாகமுற்றிருக்கும் வருத்தத்தினால், அலிறலியல்லாஹு அன்கவர்களிடத்திலே சிலபேர்கள்போய் மரியாதை யொழுங்குடனே சலாம்சொல்லி யடுத்து நின்று போற்றிப்புகழ்ந்து நாயகமானவர்களே! எங்களுக்கும், எங்கள் வாகனாதிகளுக்குந் தண்ணீரில்லாம லிருப்பதால் வருத்த மிகவுமுண்டாயிருக்கிறதே, இப்படியிருந்தால் நாங்களும் எங்கள் வாகனாதிகளுந் தாகத்தினாலிறக்குந் தன்மையாவோமென்று சொன்னார்கள். அதுகேட்டு, அலிறலியல்லாஹு அன்கவர்கள் அந்தவழியி னிடங்கள் யாவும்நன்றாய்த் தெரிந்தவரான அம்றிபுனு வுமையத்துல் லமீரியையழைத்து இவ்விடத்தின் பேரென்னவென்று கேட்டார்கள், அதற்கவர், அலிறலியல்லாஹு அன்கவகர்ளைப்பார்த்து, நாயகமே இந்தத்தலமாகிறது லகுவானென்று

சொல்லப்பட்ட தலமாயிருக்கும், இங்கே காடுகளிலிருந்து வழிதப்பி யானை, புலி, கரடி, மான், முசல்,உடும்பு, இவைபோலுள்ள மற்றெந்த வுயிர்ப்பிணமாகிலும் வருமேயானாற் சூட்டினாலே வெந்திறந்து கரிந்துபோகுங்கள் அதுவுந்தவிர, இவ்விடங்களிலே பேய்பிசாசு, பூதகணங்களே குடியாயிருந்துவிளையாடிக்கொண் டிருக்குமென்றுஞ் சொன்னார். அதுகேட்டு, அலிறலியல்லாஹூ அன்கவர்கள் அம்று றலியல்லாஹூ அன்குவைப்பார்த்து நல்லதுதான் யாஅம்றே இப்போது அசுஹாபிமார்களுடைய தாகந்தீரும்படியாகத் தண்ணீர்வேண்டுமே யதற்கெப்படி யென்றுகேட்டார்கள்.

அதற்கு, அம்றிபுனு வுமையத்துல் லமீரி அலிறலியல்லாகு அன்கவர்களைப் பார்த்து நாயகமே இங்கே கொஞ்சந்தூரத்திலே பனியீசுக் கிளையாருக்கு ஒரு தண்ணீர்த்தடாக முண்டும், அதிலே யிப்போது தண்ணீரிருக்கிறதோ இல்லையோவென்றுபோய்ப் பார்த்தாற் றெரியுமென்று சொன்னார், அதுகேட்டு, அலிறலியல்லாகு அன்கவர்கள் அம்று றலியல்லாகு அன்குவைப்பார்த்து; யாஅம்றே! நீர்போய் அவ்விடத்திற் றண்ணீரிருக்கிறதா இல்லையாவென்று பார்த்துக்கொண்டு சீக்கிரம் வாருமென்றுசொன்னார்கள். அதுகேட்டுடனே அம்றிபுனு வுமையத்துல்லமீரி சூறுவளிக் காற்றைப்போல் விரைந்து நடந்து தடாகத்தைநெருங்கிப் பார்க்கும்போது, அங்கே தண்ணீர் கொஞ்சமேனு மில்லாமற் றடாகங் காய்ந்திருக்கக்கண்டு, இன்னங் கொஞ்சதூரம்போய் எங்கேயாவது தண்ணீரிருக்குந்தானத்தைக்கண்டுதான், நாம் அலிறலியல்லரகு அன்கவர்களிடத்திற்குப் போகவேண்டுமென் றெண்ணங்கொண்டவராக நிற்கும்போது,

அந்தத்தடாகத்தையடுத்த காட்டிலிருந் தோர்பலத்தசுத்தவீரியன் குதிரையின்மே லேறிக்கொண்டு அவ்விடத்திற்கு வந்தான்; வந்தவன், அங்குநிற்கும் அம்றிபுனு வுமையத்துல் லமீரியைக் கண்டு ஓகே! வயதாளிகளில் மிகுந்தவரே நீர்யார்? எங்கேயிருந்துவந்தீரென்றுகேட்டான். அதற்கு அம்றிபுனுவுமையத்துல்லமீரி அவனையின்னா னென்றுதெரிந்துகொள்ளாமல், நான்முசிலிமானபேர்களில் நின்றுமொருவன் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய அசுஹாபியென்றுஞ் சொன்னார், அப்போதவன் முன்னா லிவருடைய குணங்குறி செய்கை முதலியவைகளைக் கேட்டிருக்கின்றான், என்

ருலும் ஆள்மாத்திர மின்னாரென்று தெரியாது, அப்படியிருந்தாலும்
இவருடைய தடாரிக்கமான பேச்சினால், இவர் அம்றிபுனுவுமையத்
துல் லமீரியாகத்தானிருக்கவேண்டுமென்று தீர்மானித்து, இவர்பே
சில் மிகு சந்தோஷங்கொண்டவனைப்போல் மனத்திலொரு குபாடத்
தை யெண்ணி யக்குபாடத்தை வெளிக்குக் காட்டாமல் மறுஹபா
மஹறுஹபாவென்று அம்றிபுனு வுமையத்துல்லமீரியைப் பார்த்துயா
ஷெய்கேயென் றழைத்து, நீர்நபிநாயகத்தை யெப்படிவிட்டுவிட்டு வந்
தீரென்று கேட்டான். இவ்விதங் கேட்டவனுடைய குபாடத்தை அம்
றிபுனு வுமையத்துல்லமீரி யறியாமல், இவனம்மை யறிவான்போலி
ருக்கிறதென்றெண்ணி அவனைப்பார்த்து நானபிநாயகத்தை கைருபி
யத்தாக விட்டுவிட்டு வந்தேனென்று சொல்லிப்பின்னருமவனோடும்
நீ ரெந்தக்கூட்டத்திலுள்ளவரென்றுகேட்டார்.

அதற்கந்தக் காபிரானவன், தான்கொண்ட கெடுதியைமுடிப்ப
தற்குப் பொய்யாக நான் பனீயித்துபான் கிளையிலுள்ளவன், நானு
மென்கிளையார்கள் யாவரும் ஈமானைப்பற்றிப் பிடித்தவர்களாக இருக்
கிறோம், உம்முடைய பெயரென்ன கிழவரே யென்று கேட்டான்
அதற்கிவர் என்பெயர் அம்றிபுனுவுமையத்துல் லமீரியென்றுசொன்
னார். அதற்குக் காபிரானவன், நானிதற்குமுற்பட வும்முடையபெயர்
குணம் குறிகேட்டிருக்கிறேன், என்றாலு மும்மைக் கண்டதில்லை,
இப்போது அல்லாகுத் தஆலாவுடைய கிருபையினா லும்மைக்கண்டு
கொள்ளும்படியாகவந்ததே அதுதானெனக்குபோதுமானது ஆனா
ல் நீரிப்போதிந்தக் காட்டிற் றனித்தவராக என்னகாரியத்தைநாடிவ
ந்தீரென்று கேட்டான். அதற்கு அம்றிபுனுவுமையத்துல் லமீரி அவ
னைப்பார்த்து, அபீத்தாலிபுடையமகனார் அமீறுல் மூமினீன் அலிற
லியல்லாகு அன்கவர்களும் ஆயிரம் அசுஹாபிமார்களும் நானும் இற
வுசுல்கூலென்ற இராஜனுடைய கோட்டைக்குப் போகவந்தோம், வழி
யிலே தண்ணீர்த்தட்டினாலே ஜனங்களுக்கிருக்கிற வருத்தத்தைப்
பற்றித் தண்ணீர்தேடவந்தேனென்று சொன்னார்.

அதுகேட்டுக் காபிரானவன் (தேடியமுசல் காலடியில் வந்து
சிக்கினதுபோலே) அம்றுக்கிழவ னம்மிடத்தில்வந்து சிக்கிக்கொண்
டானென்று பெரியவெண்ணங்கொண்டு, அம்றிபுனு வுமையத்துல்
லமீரியைப்பார்த்து, ஓகே ஷெய்கே! கொஞ்சதூரத்திலே போய்ப்பார்
த்தாற்றண்ணீர் கிடைக்குமென்று சொல்லிவிட்டுத் தானேறிவந்த

குதிரையை வாயுவேகமாக நடாத்திக்கொண்டு, தன் கூட்டத்தாரிருக்கு மிடத்தில்வந்து அவர்களை, ஓகே! என்கூட்டத்தார்களேயென்று சத்தமிட்டு அவசரமாக அழைத்துச் சொன்னதாவது, அப்துல்லாவுடைய மகன் முகம்மதின் தண்டற்காரனை அம்றுக்கிழவன் காட்டிலே தனித்தவனாகத் தண்ணீர் தேடிவந் திருக்கிறுன், நானவனைக் கண்டு இணக்கமாகப் பேசினதால் அவனென்னோடும், மலைக்குப்பின்னாலே அபித்தாலிபுடைய மகன் அலியும் ஆயிரம்பேர்களும் வந்து தண்ணீர்த் தாகத்துடனே வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்களென்றுசொன்னான். ஆதலால், அந்த அம்றுக்கிழவன் சொன்னதைப் பார்த்தால்,

அவர்கள் எப்படியும் தாகத்தி லிறந்துபோவார்களே தவிர வேறில்லை. ஆனதால், அதை நாம் கவனிக்காமல் அந்த அம்றுக்கிழவன் அலியுடைய கூட்டத்திலே போய்ச் சேருகிறதற்கு முன்னே அவனைத் தேடிப்பிடித்துக்கொண்டு வாருங்கள். நானும் வரும்போதவனைத் தாப்புக்காட்டித் தண்ணீர்கிடைக்குங் கொஞ்சந் தூரத்திற்போய்த் தேடுமென்று சொல்லிவிட்டு வந்தேன், ஆதலாற், சீக்கிரம்போங்களென்று சிலபேர்களைத் துரத்தினான். அதுகேட்டு, அந்தப்பாவிகளான காபிரீன்களும் சரேலென்றுவந்து அம்றிபுனு வுமையத்துல்லமீரி தண்ணீர்தேடும் பராக்கிலே திரியும்போது, அகஸ்மாத்தாய் நெருங்கி மேல்விழுந்து பிடித்துப் பின் கட்டாகக்கட்டிக் காலுக்குங் கைக்குந் தழையிட்டு அவரைப்பார்த்து, எடா கெட்டவனுடைய மகனே! நீயனேகநாளாகத் திருகுதாளஞ்செய்துகொண்டு ஒருவனுடையகையிலும் அகப்படாமலே தப்பித்திரிந்தாயல்லவா, அப்பேர்ப்பட்ட நீயிப்போது பறவையானது கண்ணியிற் சிக்கினதுபோல் எங்கள்கையில்வந்து சிக்கிக்கொண்டாயே, இனியுன்னை நாங்கள் இலேசில் விடுவோமா? சித்திரவதைசெய்து கொன்றுபோடுவோம் பார்பாரென்று சொல்லிக் குதிரைக் கசையினலடித்து, முகங் குப்புறக் கீழேதள்ளி வழியிலேகிடக்கிற கற்களும், முட்களு மவருடைய சரீரத்தைக்குத்திக்கிழித்து இரத்தமோடும்படியாக இழுத்துக்கொண்டுபோய்த் தங்கள் கூட்டத்தா ரிடத்தில் விட்டார்கள்.

அதுகண்டு, அங்கிருக்கும் பாவிகளான காபிரீன்கள் அம்றிபுனு வுமையத்துல் லமீரியைக்கண்டபோது கெக்கைபோட்டுச் சிரித்து, எடா! அம்றுக்கிழவாவந்தையா, வாவென்று தூஷணத்துடனே

யிந்தக் கிழவனுக் கிவர்கள் செய்துக்கொண்டுவந்த நோவினை போதா தென்றுசொல்லி, அவருடைய கழுத்திலும், இடுப்பிலும் இருப்புச் சங்கிலிகளைப் பூட்டி யங்கிருக்குமிடங்கள்தோறு மிழுத்துக்கொண்டு போய்விட்டு, அவருடைய சத்தம் வெளிக்குக்கேட்காமற் பறமேளத் தைக் கொட்டிக்கொண்டு சசைகளினு லடிப்பார்கள், அந்த அடி யின் வருத்தம் பொருக்கக்கூடாமல் அம்றிபுனு வுமையத்துல் லமீரீ (வலாஹவுல வலாக்கூவத்த இல்லாபில்லாகில் லலீயுல்லலீம் என்றும் இன்னு லில்லாகி வாயின்னு இலைகி ருஜூஊருன்) என்றுமிந்தக்கைசே தவாக்கியங்களைச் சொல்லி அல்லாகுத்த ஆலாவைத் திக்கிறுசெய் தவராய், அப்பாவிப் பயல்கள்செய்யு மகாதெண்டனைக்கு ளகப்பட் டுக்கொண்டிருந்தார். இதுநிற்க,

இங்கே, லகுவானென்னுந் தலத்திலிருக்கிற அலிறலி யல்லாகு அன்கவர்கள், அம்றிபுனு வுமையத்துல் லமீரிபோய் வெகுநேரமாச்சு தே இதுவரையுமவர் வரவில்லையே யென்று யோசனையாயிருக்கும் போது, அசுஹாபிமார்கள், தங்களுக்கிருக்கிறதண்ணீர்த்தாகம் பொ றுக்கக்கூடாமல் வருத்தங்கொண்டதிற் சிலபேர்கள் விரைவாகவந்து அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து எங்கள் நாயகமே யென்று போற்றிப் புகழ்ந்து, இப்படித் தண்ணீரில்லாத விடங்களில் நபிநாய கமுகம்மதுசல்லல்லா கலைகிவசல்லமவர்கள், அல்லாகுத்த ஆலாவிடத் திலேகையெடுத்துத் துஆக்கேட்டு மழைபெய்யும்படியாகச் செய்திரு க்கிறுர்களே, அதுபோல, தேவரீர் தாங்களும் இந்தத்தருணத்தில் அல்லாகுத் தஆலாவிடத்திலேகையேந்தித் துஆக்கேட்டால், அந்த நாயகன்முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பொருட்டினுல் எங்களனைவோர்களுடைய தாகந் தீரும்படியாய் மழைபெய்யவைக் கமாட்டானு? ஆதலால், நீங்கள் துஆக்கேளுங்களென்று சொன்னுர் கள்.

அதுகேட்டு, அலிறலியல்லாகு அன்கவர்கள், அல்லாகுத்தஆ லாவைநாடி மிகவுமனமுருகி யாது யாதல்முஸ்த கில்தியானவனே நீசகலகருமமும் அறிந்தவன், அடியார்களை யிரட்சிக்கிறவன், நாடி யகாரியத்தை முடிக்குந்தத்துவத்தையுடையவன், ஆதலால். உன்கி ருபையினுல் என்னைச்சூழ்ந்தவர்களுடைய, தாகத்தைத் தீர்த்துவை யென்று, தங்களழகான இரண்டுகையையும் நெஞ்சிக்கு நோயுயர் த்தி விருப்பத்துடனே துஆக்கேட்டு நிற்கும்போது, தங்கள்தலைக்கு

மேலாக வானத்திலோர் கருமேகம்வந்து வளைந்து பெருமிடிகளுட னே விடாமழையாகப் பெய்தது, அதனாலே அவ்விடங்களெல்லாம் வெள்ளம்புரண்டுகடலைப் போலே தண்ணீரோடினது, அதுகண்டு, அங் கிருக்கும் அசுஹாபிமார்களெல்லாம், அல்லாகுத் தஆலாவை மிகமி கப்புகழ்ந்து போற்றி மனமகிழ்ச்சிகொண்டு, தாங்களுந் தண்ணீர் குடித்தார்கள், குளித்தார்கள் வாறுதிகட்குந் தண்ணீரூட்டிக் குளுப் பாட்டிப் பின்னர், தங்களிடத்திலிருந்த தோலுத் துருத்திகளிலெல் லாந் தண்ணீரை நிரப்பியுங்கொண்டார்கள்.

இவ்விதம், யாவருந் தண்ணீர்தாகந் தீர்த்து சந்தோஷத் துட னே இருக்கும்போது சூரியனடைந்தான், அவ்விராவையிலே செய்ய வேண்டிய கிரியைகளைச்செய்து யாவரும் நித்திரைசெய்தார்கள், அப் போது, அலிறலியல்லாகு அன்கவர்கள் அம்றிபுனுவுமையத்துல்ல மீரிவாரதஇனல் வியாகூலமிகுந்தவர்களாக நித்திரை யில்லாதுகண்வி ழித்திருந்து விடிவேறுனவுடனே, எல்லோர்களுடனு முன்னிலை யாக நின்று அல்லாகுத்த ஆலாவைப் பஜிர்தொழு தெழுந்தபின்னர் தாங்கள் அப்துல்லா இபுனுசுல்சுகுனி யென்பவரைப்பார்த்து ஒகே நபிநாயகத்தின் றண்டற்காரராகிய அப்துல்லாவே, அம்றிபுனுவுமை யத்துல்லமீரி நேற்றையதினந் தண்ணீர் தேடிப்போனவ ரிதுவரை யினும் வரவில்லையே யதை யோசித்துப்பார்க்கில், அவரொருவேளை சத்துருக்கள் கையிலகப்பட்டுக் கொண்டாற்போலுந் தோன்றுகிறது நீரிந்தவழிகள் நன்றாகத் தெரிந்தவராதலாற் சீக்கிரம்போய் அவ ரைப் பார்த்துவாரும், அப்படி நீர் போகுமிடங்களில் சத்துருக்க ளிருக்கில், அவர்களிடத்தில் நின்றுந் தந்திரமாக நீங்கிக்கொள்ளு மென்று சொன்னார்கள்

அதுகேட்டு, அப்துல்லா இபுனுசுல்சுகுனியென்பவர் சூறுவளி க்காற்றுந், தன்னுடைய நடைக்கும் பிந்தும்படியாய் மனவேகத்துட னேகடந்து எவ்விடமும் பார்த்துக்கொண்டு முன்னர், அம்றிபுனு வுமையத்துல்லமீரி தண்ணீர்தேடிப்போன தடாகத்தையடுக்கப்போய் நின்று நான்கு பக்கங்களையுஞ் சுற்றிப்பார்க்கும்போது அங்கே ஓர் திசையிலே தூசியானது மேகம்போலேபரந்துவருவதுடனே குதிரை களின் காற்குழம்படி சடசடென்ற சத்தமுங்கேட்டார், அப்போது தன்மனதிலிந்த ஆரபாரமாக வருகிற குதிரைக்காரர்கள் சத்துருக்க

ளாகவே யிருக்குமென்றெண்ணி மனதில் யோசித்தார் வருகிறவர்கள்மெய்யாகச் சத்துருக்களாக இருந்தால் நம்மை யிலேசாகவிடமாட்டார்கள், அதற்கு முன்னதாக நாமொருதந்திரஞ் செய்துகொண்டிருக்கில் அவர்களைவிட்டுத் தப்பியுயிர்பிழைக்கலா மென்றெண்ணிநினைத்துடனே, தானுடுத்திருந்த வுடைகளைச் சீக்கிரங்களைந்து சுருட்டியங்கே பூமியிலோர் குழியைக்கெல்லி, யக்குழியி லப்பிடைவைகளைப் புதைத்துக் கபுறுபோல் மண்ணைக் குவித்துவைத்துப் பின்னர், தாம் பழங் கந்தத்துணிகளையும், பழயகறுப்புக் கம்பளத்தையுங் கட்டிக்கொண்டு ஒரு பெரியகல்லை யெடுத்துத் தன்தலையிலடித்து இரத்தம் பீர்விட்டோடும்படியா யுடைத்து முழங்கால், முழங்கைமேலெல்லாம் வரிசையாய் இரத்தம்பிசியும்படி கிழித்துப் புழுதிமண்ணை யள்ளித் தலைமேலும், உடல்மேலும் யோட்டுக் கூட்டிய கபுறின்றலை மாட்டிலிருந்து கண்களிற்றுரை தாரையர்கக் கண்ணீரொழுகும்படி பெருங்குரவிட்டு விதியோயிதுவென்று விடாவழுகையுடனே யேங்கியேங்கியழுதுக்கொண்டிருந்தார்.

அப்போது, இவர்யோசித்தகுதிரைக்காரரான காபிரீன்கள், அவ்விடத்தில் நெருங்கி இவரைப்பார்த்து, ஓகே, பெரியவயதையுடையவரே! நீரிந்தவிடத்தி லிப்பேர்க்கொத்தகோலத்துடனே காயப்பட்டவராகப்பரிதாபத்தோடு மழுகிறவரலாரென்ன நீர்யார்?எந்தவூரென்று? கேட்டார்கள், அதற்கு அப்துல்லா இபுனு சல்சுகுனி, நான்பனீகுதைபாக்கிளையில் மிகவுஞ் சிறப்பையுடையவன், என்னிடத்தில் அநேகதிரவியங்களும், ஆடு மாடுகளும்; ஒட்டகங்களும் பணிவிடைசெய்கிறஏவலாட்களும், கூட்டத்தார் குடும்பத்தார்களுமுண்டாகி, அவைகளோடும் நான்சிறப்பாக இருந்துவாழும்போது, திரு மதீனமா நகரத்திலிருக்கிற மாயமுகம்மது சிலசுத்தவீரியர்களுடனே யென்னெல்கையில்வந்துபுகுந்து அங்கிருக்கும், ஆடுமாடு, பணங்காசுமுதலாகிய சகலசம்பத்தையுங் கொள்ளையாடிக் கொண்டுபோனதால் நான்மிகுந்ததரித்திரியவானுகி வருத்தப்பட்டுப், பனீதியாசுக் கிளையினுடையதலைவனிடம்போய் என்னுடைய புண்பாட்டையும், வறுமை வருத்தத்தையுஞ் சொன்னதின்பேரிலே யவர்மிகவு மிரக்கங்கொண்டு ஐந்து குதிரையும் பத்துஒட்டகையும், கொஞ்சந்திரவியமுந்தந்தார், அவைகளையெடுத்துக்கொண்டு சந்தோஷத்துடனே நானும், எனக்கிளையவுடற்பிறந்தானு மிந்தவழியாக தரும்போது, அபீத்தாலிபுடையமகன்

அவியும், அவனோடு சிலசுத்தவிரியர்களும் வந்து விழுந்து தம்பியை வெட்டிப்போட்டு, என்னைத்தலைகாலுடைத்து இரத்தஞ்சிந்த அடித்துச் சில சாமான்களையும் பணங்காசு, குதிரை, யொட்டகங்களையுங் கொள்ளையடித்துக்கொண்டுபோனார்கள்.

அதினாலே, இந்த இடத்திலிறந்துபோன தம்பியைப் புதைத்துப்போட்டு, என்விதியைநினைத்து அழுதுக்கொண்டிருக்கிறேனென்று கூடக்கொஞ்சம் பெரிய சத்தமிட்டு எங்கி எங்கி யழுதார். அந்தக்காபிரீன்கள் அப்துல்லா இபுனு சுல்சுகுனியிருக்கிற தந்திரந் தெரியாமல் அவருடைய கோலத்தையும், அழுகிறதுக்கத்தையும், தலைகாலுடைந்திருக்கிறவிதத்தையுங்கண்டுமிகவுமனமிரங்கி ஒகே, கிழவனாரே (வாராதுவாராது என்னபட்டும், வருவதுபோகாது நம்மைவிட்டும்) என்றபழமொழி யறியமாட்டீரோ; ஆனதாற் போனதுவாராது போகட்டும், நீரழுகையைவிடு மும்க்கு வேண்டுமானபணங்காசு கொடுக்கிறோம் எங்கள் கூட்டத்தாரிருக்குமிடத்திற்குப் போகலாம் வாருமென்றழைத்தார்கள், அதுகேட்டு அப்துல்லா இபுனுசுல்சுகுனி மனதிலேநாம்செய்த தந்திரத்துக்கு நல்லவாய்ப்புவந்து கிடைத்ததென்றெண்ணியுள்ளுள்ளே, அல்லாகுத்தஆலாவைப் புகழ்ந்தவராக இருந்தவிடத்தைவிட்டும், எழும்பக் கூடாதவர்கள் போல மெள்ளமெள்ள எழுந்திருந்து கொஞ்சங்கூனிக்கூனிக் கொஞ்சங்கிந்திக்கிந்தி நடந்து கீழேவிழுந்துக்கொள்வார், அதுகண்டு அந்தக்காபிரீன்களி லொருவனோடிவந்து கீழேவிழுந்த இவரை தூக்கி மேலேயொட்டியிருக்கிற தூசிமண்ணைத் துடைத்துக் கைத்தாங்கலாக நடாத்தக்கொண்டுபோவான்.

இவ்விதம், போகிற போதும் இன்னும் கொஞ்சம் வீணுக்கு அப்துல்லா இபுனுசுல்சுகுனி நழுவினாப் போலே கீழே விழுவார் அதுகண்டு இன்னுஞ்சில காபிரீன்கள்வந்து தூக்கித்தாங்கிக் கொண்டுபோவார்கள்' இவ்விதத்தி லப்துல்லா இபுனு சுல்சுகுனி யழுதகண்ணோடும் (கிழவன்கூற்றென்ற) பழமொழிபோலே யந்தக் காபிரீன்களுடனே நடந்து, அவர்களுடைய கூட்டத்திலே போய்ச் சேர்ந்து, அவ்விடங்களிற் கண்ணோட்டமாகச் சுற்றிப்பார்க்கும்போது, அம்றிபுனுமையத்துல்ல லமீரியைக்கைகாலுக்குத் தளையிட்டு இரும்புச் சங்கிலியைக் கழுத்திற்பூட்டி யோரிடத்திற் போட்டுக்கட்டி யிருக்கக்

கண்டு அப்துல்லா இபுனு சல்சுருனி யானவர் பதறாமற் றெரியாதவர் போல் அங்கிருக்குங் காபிரீன்களைப்பார்த்து புண்ணியவான்களே, இதோகட்டிலேகிடக்கிறவன் யாரென்றுகேட்டார். அதற்கவர்கள், ஒகே! கிழவரே இவனும்முடைய பகைஞன் முகம்மதுடைய தண்டற்காரனை அம்றிபுனுவுமையத்துல் லமீரியென்றுசொன்னார்கள். அப்போது அப்துல்லாஇபுனு சல்சுருனி கதறிக்கதறி யழுது கீழேகுனிந்து ஒரு கல்லை வாரியெடுத்துக்கொண்டு, அந்த அம்றிபுனுவுமையத்துல் லமீரியைப்பார்த்து, எடா, அம்றே! உலாத்துஉஸ்ஸாகுபலென்ற தம்பிரான்கள்பேரிலாணையாக நானுன்னைக்கொன்று சதையைத்தின்று இரத்தத்தைக்குடிப்பேன், உன்னுடைய எஜமான் முகம்மதுசெய்த அநீதத்தினாலல்லவா நானிந்தக் கோலமானே னிப்போதுன்னை மீட்டுக்கொள்ள அந்தமுகம்மதை வரக்காணேமேயென்று கையிலிருக்குங் கல்லை யவர் பேரி லோங்கியடித்து வாய்க்குவாதவம்புந் துன்புமாகப்பேசி, யதுவும்போதாதென்று, அங்கேயொருவனிடத்தி லிருந்தகுதிரைச் சவுக்கைவாங்கிக் கோபங்கொண்டு அடியடியென் றடித்தார்.

இவ்விதம் அப்துல்லாஇபுனுசல்சுருனி அம்றிபுனுவுமையத்துல்லமீரியைச்செய்கிற செய்கையையும்,கடூரத்தையுமந்தக்காபிரீன்கள் கண்டுசந்தோஷமானார்கள். அதுகண்டு அப்துல்லா இபுனுசல்சுருனி யிந்தப்பயல்கள் நமது எமாற்றலிலே அகப்பட்டுக் கொண்டார்களென்றெண்ணி, அல்லாகுத்தஆலாவைப் புகழ்ந்து அக்காபிரீன்களைப்பார்த்து,எனக்குபகாரஞ்செய்கிறபுண்ணியவான்களே இன்றையஇராத்திரிமட்டுக்கு மிந்தத் தந்திரகாரனை அம்றுவை என்வசத்தி லொப்பிவியுங்கள், அப்படி யொப்பிவித்தால் அந்த அலியென்னை இந்தகோலமாக்கி யென்தம்பியைக்கொன்ற பழிக்குபதிற்பழி நானிவனையெடுப்பேன், அதற்காக நீங்களொருவருமென்கிட்ட வாராமலிருங்கள், அஃதேனெனில், நான்பார்த்தபார்வையில் நீங்கள்மிகுந்த இரக்கத்தையுடையவர்களாக இருக்கிறீகள், ஆதலால்ஒருவேளை இரங்கிவிடச்சொல்வீர்கள், அதனாலேதான் நீங்கள்வரக் கூடாதென்றேன், எவ்விதத்திலும் நான்விடிவதற்கு முன்னேயிந்த அம்றுக்கிழவனை யடித்துவேதனை செய்து கொன்றேயல்லாம லுங்களெதிராலே வரமாட்டேனென்று சொன்னார். அதுகேட்டுக் காபிரீன்கள் அப்துல்லா இபுனு சல்சுருனியுடைய தந்திரம் தெரியாம லவரைப்பார்த்து. ஒகே, முதியவரே! பேச்சிலழகானவரே யும்முடைய மனம்போலே அம்றுவை யொப்பிவித்

13

தோம், இனி இார்மட்டுக்கும் சோச்சுது, அவனுச்சுது, செய்வதைச் செய்துகொள்ளும் விடிந்தாலுமக்கு வேண்டிய பணங்காசு குதிரை யொட்டகமிவை முதலாகிய சகலவைகளும் நாங்களுமக்குத் தந்தனுப் புகிறோமென்று சொன்னார்கள்.

அதற்கப்துல்லா இபுனு சுல்சுகுனி யந்தக்காபிரீன்களைப்பார்த்து மிகவு முபசாரமானவர்களே, எனக்குக் குதிரை, யொட்டகம் அதிக பணம்வேண்டாம், அஃதேனெனில், ஒருவேளை வழியிலே போகும் போது அந்தஅலிகண்டால் முன்போலேவந்து பாய்ந்து விழுந்து பறித்துக்கொள்வார்கள். ஆதலால் நூறுதங்கக்காசு மாத்திரந் தந்தாற் போதுமானதென்றுசொன்னார். அதுகேட்டுக் காபிரீன்கள் நல்லதப் படியே யுமது மனம்போலே தருகிறோம். இந்தத் தந்திரவாதியான அம்றுக்கிழவனை விட்டுவிடாதீர். ஒருவேளை யும்மையு மேமாற்றிப் போட்டோடிப்போவான், அப்படியவ னோடிப்போனு லும்முடைய எண்ணமும் நிறைவேறாது, எங்களுக்கு மனவருத்தமாகும் ஆதலால் அவனைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளுமென்று, அம்றிபுனுவுமை யத்துல் லமீரியை,அப்துல்லாஇபுனு சுல்சுகுனியிடத்தி லொப்புக்கொடுத்தார்கள். அப்போது சூரியனுமடைந்து இராவுகாலமாச்சுது அந்த இராவுகாலத்திலே காபிரீன்கள்யாவரும் பார்த்துச் சந்தோஷங்கொள்ளும்படியாயும், ஆச்சரியப்படும்படியாயுங், கடுகளவு மிரக்கமில்லாமல் அப்துல்லா இபுனுசுல்சுகுனி அம்றிபுனு வுமையத்துல் லமீரியை நன்ருக அடியடியென் றடித்தார். அதுகண்டு, காபிரீன்கள் இதுநல்லவேலையென்று மெச்சிக் கொஞ்சநேரங் கண்விழித் திருந்து சாமமான போது கட்குடித்த வெறியோடும் நித்திரையுங் கண்ணை மயக்குவதால் இருந்த இருந்த இடத்திலேயே மூச்சுமூசென்று பெருங்குறக்கைவிட்டு நித்திரைசெய்தார்கள். இவ்விதம் அக்காபிரீன்கள் நித்திரைசெய்வதை யத்துல்லாஇபுனு சுல்சுகுனிகண்டு பயல்களெல்லாம் குடிவெறி நித்திரை மயக்கத்தினுலேபிணம்போலே மயங்கிக்கிடக்கிறார்கள், இதுதான் நல்லதருணமென்று நினைத்து அம்றிபுனு வுமையத்துல்லமீரி கிட்டப்போயவருடைய கைகால் கழுத்திலிருந்த கட்டுகளை யவிழ்த்து ஓகே அம்றே! பயப்படாதீர் அல்லாகுத்தஆலாவுடைய வுதவியுமக் குண்டாய்விட்டது.

நானுகிறது, அப்துல்லா இபுனு சுல்சுகுனியா யிருக்குமென்று சொன்னார், சொன்னதை, அவ்வம்றிபுனு வுமையத்துல் லமீரி கேட்

டவுடனேயுடலைவிட்டும் போனவுயிர் மீண்டு முடலில்வந்து சேர்ந்தவர்கள்போலாகி மிகுந்தசந்தோஷங்கொண்டார் அப்போது அப்துல்லா இபுனுசல்சுகுனிசரேலென்றுஅந்தக்காபிரீன்கள் கூட்டத்திற்குத் தலைவனானவன் படுத்திருக்குங் கூடாரத்தில்போய் நுழைந்துபார்க்கும் போது அவனுமுசுமுசென்று மூச்சுவிட்டு நித்திரைசெய்கிறான் அது கண்டு இவர் இதுவும் நல்லதருணமென்றெண்ணி அவன்கழுத்திற் கிடந்தபொன்சரப்பளி மாலையைத் தந்திரமாகக்கழட்டித்தன்கழுத்திலிட்டுக்கொண்டு, அங்கிருந்தரொக்க முதல்களிலுந் தமக்குப்போதுமென்றமட்டிலேகொஞ்சமெடுத்துக்கொண்டு திரும்பிவெளியில்வந்து அம்றிபுனுவுமையத்துல் லமீரியையுங்கூட்டிக்கொண்டு அங்கேயடித்திருக்குங் கூடாரங்களின்முளைகளை அனேகம் பிடுங்கிவிட்டு, எடா காபிரீன்களே! நீங்கள் யாவரும் அறிந்துக்கொள்ளுங்கள் உங்களுடைய தலைவன்கழுத்திலேயிட்டிருந்த தங்கச்சரப்பளிமாலையையும் ரொக்கமுதலிற் சிலவற்றையுமெடுத்துக்கொண்டு, அம்றிபுனு வுமையத்துல் லமீரியையுங் கூட்டிக்கொண்டுபோகிறேன், நானாகிறது நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய தண்டற்காரனான அப்துல்லா இபுனுசல்சுகுனியா யிருக்குமென்று பெரியசப்தமாகச் சப்தமிட்டு, நீங்கள்திறத்த ஆண்பிள்ளைகளானால் எங்களை வந்து பிடித்துக்கொள்ளுங்களென்றுசொல்லி, அவ்வம்றிபுனு வுமையத்துல் லமீரியுடனே நடையோட்டம் பிடித்தார்.

அதுகேட்டுக் காபிரீன்கள் யாவரும் திகில்கொண்டு நித்திரைக் கண்ணுடனே தடால்புடாலென்று எழும்பிக் குதிரைகளின்மேலேறிச் சிலர், உனக்கு முந்தினது, எனக்குமுந்தினதென்று குதிரைகளையோட்டிக்கொண்டு வந்தார்கள் இவ்வளவுஜல்தியாகக் காபிரீன்கள் குதிரைகளின் பேரில்சவாராய்வந்தும்கால்நடையாகநடக்கிற அம்றிபுனுவுமையத்துல்லமீரியையும் அப்துல்லா இபுனுசல்சுகுனியையும்பிடிக்கவலாமற்கைகால்களையுதறி, அடாவென்றுதிகைத்து நின்றுவிட்டார்கள் இவ்விதம், குதிரைகளோட்டமும், பின்னிடும்படியாக அம்றிபுனுவுமையத்துல்லமீரியும், அப்துல்லா இபுனுசல்சுகுனியுமோடிவரும்போது அந்தவழியில் அலிறலியல்லாகு அன்கவர்கள், அம்றுவைத்தேடிப் பார்த்துவரும்படி அனுப்பின அப்துல்லாவையுங்காணோமேயென்று யோசனையாய்நான் குதிக்கையுஞ் சுற்றிப்பார்த்த கண்ணுங் நிற்கிறதைக்கண்டு அவர்கள் கிட்டநெருங்கிச் சலாம்சொல்லி அமீறுல்முமினான

நாயகமேயென்று போற்றிப்புகழ்ந்து நடந்த சங்கதிகளை யெல்லாஞ் சொல்லிக்கொண்டு நிற்கும்போது மற்ற முசிலிமான பேர்களும் அவ்விடத்தில்வந்து கூடினார்கள். அப்போது அலிறலியல்லாகு அன்கவாகள் அப்துல்லா இபுனு சல்சுகுனியைப்பார்த்து ஒகே, அப்துல்லாவே நீர் இன்னஞ்சொஞ்சநேரம் வாராதிருக்கில் நான் அங்கேவந்து விழுந்து அந்தக்காபிரீன்களையெல்லாஞ் சின்னபின்னமாக வெட்டி ஹதஞ்செய்துபோடுவேனென்று சொல்லிப்பின்னர், தங்கள் கூட்டத்தார்கள் யாவரையும் பார்த்துப் பிரயாணமாகுங்களென்று சொன்னார்கள்.

அலியார் மழையழைத்த சருக்க முற்றிற்று.

---

# ஜின் விருந்திடு சருக்கம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

பதிபல ரிறைஞ்சிப் போற்றும் பார்த்திப ரீறலுல் மெச்சு
மதிவல ரலியா ரேகும் வழிமிசை யொருஜின் வந்து
துதியுடன் பணிந்து மேலாஞ் சுந்தர வசனங் கூறி
விதிமுறை யவர்க்கு மின்ப விருந்திடுஞ் செய்திசொல்வாம்.

## இதன்பொருள்.

பலதேசத்தார்களும் பாததாமரையில்வந்து பணிந்து போற்றி செய்யும் இராஜரூன நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மெச்சும் புத்தியில் மிக்கான பலத்தையுடைய அலிறலியல்லாகு அன்கவர்கள் போகின்ற பாதையிடத்தில், ஒரு ஜின்னுனும்வந்து, அவர்களைத் துதியோடு பணிந்துமேலாம்பரமான அழகிய வார்த்தைபேசி, அல்லாகுத்தஆலாவின் விதியாகிய ஏவலையெடுத்து நடக்கு முறைமையுள்ள மூமினனவர்கள் யாவர்க்கும் விருந்துகொடுத்த செய்தியை சொல்லுகின்றோம்.

## சரித்திரவசனம்.

அலிறலியல்லாகு அன்கவர்கள் சொன்ன வுடனே அசுஹாபிமார்கள் யாவரும், புலைலிபுனு அப்பாசுறலியல்லாகு அன்கவர்களும்

8… N27



அம்றிபுனு வுமையத்துல்லமீரியும் அப்துல்லா இபுனுசுல்சுகுனியும்
ஆகிய இவர்கள் முன்னிலையாகப் பிரயாணமாகி யோர்பகலும், இரா
வும் நடந்துசெவந்த பூமியினிடத்திற்போய்ச் சேர்ந்து, தங்கள் தங்
களுடைய வாகனாதிகளை விட்டிறங்கி விடுதிசெய்து சந்தோஷமாக
இருக்கும்போது அங்கே இடிஇடிப்பதுபோ லோர்பெரிய இரைச்ச
லான சப்தமுண்டாயிற்று. அதுகேட்டு அசுஹாபிமார்கள் யாவரும்
பயந்து நடுநடுங்கினார்கள். அதுகண்டு அலிறலியல்லாகு அன்கவர்
கள் பயந்திருக்கும் அசுஹாபிமார்களைப் பார்த்து ஒகே, அசுஹாபி
மார்களே நீங்கள் பயப்படாதீர்கள். இந்தச்சப்தமானது மனுடர்க
ளுடைய சப்தமல்ல ஜின்களுடைய சப்தமாக இருக்கவேண்டும் ஆத
லால் நான்சப்தம் வந்தவழியை நோக்கிப்போய் அறிந்துவருகிறே
னென்று சொல்லிவிட்டு நடந்துகொஞ்சதூரம்போகும்போது,

அவர்கள்முகத்துக்கெதிரிலோர்கிழவன் தாடிநரையுடனேகையிற்
பிடித்த தடிக்கொம்பைப் பூமியிலூன்றி நடந்துவந்து அலிறலியல்
லாகு அன்கவர்களுடைய கையிரண்டையும் பிடித்து முத்தியிட்டுப்
பின்னர் காலில்விழுந்து சாஷ்டாங்கஞ்செய்தெழுந்து அன்புடனே
நின்று தன்வாயைத் திறந்து நபிநாயகத்தின் மனமகிழ்ச்சியான மரு
மகனாரே, அல்லாகுத்த ஆலாவுடைய அறுஷின் புலியானவர்களே,
தேவரீரிந்தவிடத்திலே செந்தாமரைக் கொப்பாகிய வுங்கள் திருப்
பாதங்களை மிதித்து நடந்துவந்ததாலெங்க ளெல்கைகளெல்லாம்
அதிக பிரகாசமாய்விட்டது மேலாம்பரமான ஹாவியிங்கிளையிலுள்ள
வர்களே முடிவுகாலத்திலே பூமியிலுள்ளன வெல்லா மகிழ்ந்துபோன
பிறகு சூரியனைப் பூமிக்குமேலொரு பனையுயரத்தி லிறங்கும்படியாக
அல்லாகுத்தஆலாகட்டளைசெய்யும்போது, அந்தச் சூரியனின் கொடூ
ரமான சூட்டினாற் றறையுருகிச் செவந்தநிறமாகிய பெருவெளியிலே
சகலமனுடரையும் அல்லாகுத், ஆலா எழுப்பி நிறுத்திக் கேள்வி
கணக்குக் கேட்கும்போது அந்நிலக்சூடுபொறுமல் மனுடரெல்லாந்
தயங்கும்போது முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பரத்
தால் மூமின் முசிலிமான சகலருக்கும் (லிவாவுல்ஹம்தென்னும்)
கொடியை நிழலாதரவுக்காக மருவுளிலே விடிக்கப்பட்டவர்களென்று
மிகமிகப்புகழ்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது அம்றிபுனுவுமை
யத்துல்லமீரியென்பவர் நமது நாயகமான அலிறலியல்லாகு அன்கவர்
கள்போய் மிகுநேரமாச்சுதே இதுமட்டிலும் வரக்காணோமே ஆத
லால் நாம்போய் அவர்களென்ன செய்கிறார்களென்று பார்த்துவரு

7864

வோமென்றெண்ணி நடந்துகொஞ்சதூரம்போகும்போது அங்கே அலிறலியல்லாகுஅன்கவர்களும் அந்தக்கிழவனும்பேசிக்கொண்டு நின்றார்கள். அதுகண்டிவர் கிட்டநெருங்கிப்போய் நின்றார் அப்போது அலிறலியல்லாகு அன்கவர்கள் அந்தக்கிழவனைப்பார்த்து நீர்யாரென்றுகேட்டார்கள் அதற்குக்கிழவன் நானுகிறது ஜின்கள் கூட்டத்திலே தலைமையான அதுமினென்கிற பெயருடையவர் அருமையாகப் பெற்றமகன், சம்றா ஹாயிருக்கும்நாயகமே தாங்களெனக்கொருவுத்தாவு தயவுகூர்ந்தருளவேண்டுமென்று மிகுவிருப்பத்துடனே கேட்டார்.

அதற்கு அலிறலியல்லாகு அன்கவர்கள் அக்கிழவவரைப்பார்த்து மக்கென்ன வுத்தரவுவேண்டும் அதனைச் சொல்லுமென்றுகேட்டார்கள். அதற்குக்கிழவர் அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்துத்தேவரீர்தாங்களும் தங்களுடனே வந்திருக்கிறவர்களும் இன்றிராவைக்குமாத்திரம் இவ்விடத்திலிருந்து மிசிக்கினுகியநான்கொடுக்கிறவிருந்துண்டு போகவேண்டும் நாங்களு முங்கள் துஆப்பேறுபெற்றுக்கொள்ளவேண்டுமென்று சொன்னர். அதுகேட்டு அலிறலியல்லாகு அன்கவர்க ளக்கிழவனைப்பார்த்து ஒகே முதிர்ந்த வயதையுடையவரே நாயனுகிறதுறசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய ஏவலை நிறைவேற்ற வந்தவனுதலால் இவ்விடங்களிலெல்லாம் நின்று காலதாமதஞ்செய்யக்கூடாதேயென்று சொன்னர்கள் அதுகேட்டுக் கிழவர் அலிறலியல்லாகு அன்குவைப்பார்த்து நாயகமாகிய யாஅலியே றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்பேரில் ஆணையாகத்தேவரீர் தாங்களென்னுடைய நாட்டத்தை நிறைவேற்றிவிட்டுத்தான் போகவேண்டுமென்று சொன்னர். இவ்விதங்கிழவர் நபிநாயகத்தின் பேரி லாணையிட்டதினல், அலிறலியல்லாகு அன்கவர்கள் கிழவரின் கருத்துக்கிசைந்து விருந்துண்ணச் சம்மதமாயினர்கள் அப்போது அவ்விடங்களிலே யுயர்ந்த இரத்தின கம்பளங்களினுலுள்ள விரிப்புகள் பரமதானைகள் முதலானவைகளை விரித்து அதின் பேரிலே பொன்வினழுத்துகளினலாகிய பீங்கான்களிலே மிகுஇரஞ்சிப்பாகிய பழங்களும், நல்லமதுரமாகிய ஹலுவாக்களும் வாசனைப்பதார்த்தங்களும் இனிமையான அன்னமும் பால், சீனி, கற்கண்டு முதலான தீன் சாமான்களைகங்களுங் கொண்டுவந்து பரப்பி வைத்துக் கிழவர் நின்றுபசரணையாக வுண்ணுங்க ளுண்ணுங்க ளென்று மகா விருப்பமாகச் சொன்னர்கள் அதனல் அலிறலியல்லாகு

அன்கவர்கள் மனமகிழ்ந்து அசுஹாபிமார்கள் யாவரையுமழைத்து, அவர்களோடு தாங்களுமிருந்து போதுமென்றமட்டும் புசித்தபின்னர் கிழவர் சபையில்நின்று கைகழுவத் தண்ணீருக்குப் பதிலாகப் பனிநீர்வார்த்துச் சந்தனம், அத்தர் அடைகாயிலை கொடுத்துச்சிறப்பித்தார் இவ்விதம் விருந்துண்டயாவரும் அல்லாகுத்த ஆலாவைப் புகழ்ந்தார்கள் அப்போது அலிறலியல்லாகு அன்கவர்கள் கிழவருக்குச்சில நசிஹத்தென்னும் உபதேசமுஞ் சொல்லியவரிடம் பிரயாண விடையும் பெற்றுக்கொண்டு அவ்விடம்விட் டெழுந்தருளியாகி அசுஹாபிமார்களோடு மகா சிறப்பாக நடந்துபோர்கள்.

ஜின்விருந்திடுசருக்க முற்றிற்று.

——(:*:)——

# சுந்தலத்துவதைச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மந்தரப் புயத்தின் வள்ளல் முகம்மதர் மருகராலி
புந்தியின் வேவு பார்த்துப் பருமென வனுப்புமம்று
தந்திர மாகச் சென்று சாற்றிடும் றவுசுல் கூல்சேய்
சுந்தலத் தவனை வெட்டித் தோன்றிய வாறு சொல்வாம்.

## இதன்பொருள்.

மலைபோன்ற தோள்களையுடைய வள்ளலான முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் செல்வமருமகனான அலிறலியல்லாலாகு அன்கவர்கள்திருவாயைத் திறந்து புத்தியாக வேவுபார்த்து வாருமென்று அனுப்பிய அம்றிபுனு வுமையத்துல் லமீரி யென்பவர் மகா தந்திரத்தோடும் போய்ச்சொல்லுகின்ற இரவுசுல்கூலுடைய குமாரனை சுந்தலத்தென்பவனை வெட்டிவிட்டுவந்த வரலாறுகளைச்சொல்லுகின்றாம்.

## சரித்திரவசனம்.

நன்மையான அசுஹாபிமார்களுடனே அலிறலியல்லாகு அன்கவர்கள்நடந்து போகும்போதவர்கள் அம்றிபுனுவுமையத்துல் லமீரியையழைத் தவரோடும் ஒகே அம்றே! நாம்வழியில் மிகுநாட்சுகமாகிவிட்டோம் இனிமேலப்படிச் சுணக்கமாகுவதிலே காரியமில்லை, ஆதலால் நீர்சீக்கிரம்போய் வழிகளுடையநேர்பாடும், பகைஞனை இறவுசுல்கூலுடைய நேர்பாடும்அவன்படைகளுடையநேர்பாடும், நாம் அவ்விடம் போயிருந்து கோட்டைக்குள்ளே புகுதுகிறதற்குச் சறுங்கமாகிய இடமும் பார்த்துவாருமென்று சொன்னார்கள், அதுகேட்டு, அம்றிபுனு வமையத்துல்லமீரி, அல்லாகுத் தஆலாவையும், அவன் றூதாங்கான நபிநாயகத்தையும் புகழ்ந்து, அலிறலியல்லாகு அன்கவர்களிடத்திலே பிரயாணவிடையும் பெற்றுக்கொண்டு, இரவும் பகலுமாக நடந்து, காடு, கரை, வனம், வனந்திரம், ஆறருவி, மலைகளைக்கடந்து இறவுசுல்கூலுடைய முதற்கோட்டைவாயிலை யடுக்கப்போய் ஓர்குளிர்ந்த சோலையிலிறங்கினர். அப்போது அந்தச்சோலையிலொருவன் ஈச்சமரத்தி லேறிக்கனிகள் பிய்த்துக்கொண் டிருக்கக்கண்டு, அம்றிபுனு வுமையத்துல் லமீரி, தமது பசியினுடைய அகோரத்தினலே கனிபிய்ப்பவனையழைத்து நீமிகுந்தநற்குணத்தையும், அழகையுமுடைய பிள்ளையாகயிருக்கிருய் ஆதலால் எனக்கு நீயொருபகாரஞ் செய்யவேண்டு மென்று சொன்னர்.

அதுகேட்டுக் கனிபறிக்கும் வாலிபனிவரைப்பார்த்து ஒகே பெரியவரே, அஃதென்னவுபகாரஞ் சொல்லுமென்று கேட்டான். அதற்கு அம்றிபுனு வுமையத்துல் லமீரி நான் கொண்டுவந்த இராஸ்துகள் வழியிலே தட்டிப்போச்சுது, இப்போது ஒன்றுமில்லாமற் பசிதாகத்துடனே வந்திருக்கிறேன், ஆதலால் நீதானிப்போது என்பசியடங்கும்படியாக ஏதாகிலுந் தரவேண்டுமென்று கேட்டார்.

அப்போது கனிபறிக்கும் வாலிபனிவர்பேரிற் கிருபையாகி ஒரு குலை ஈத்தங்கனி பறித்துக்கொண்டு மரத்தைவிட்டு கீழிறங்கிவந்து அம்றிபுனுவுமையத்துல் லமீரீயைப்பார்த்து, ஒகே பெரியவரே! தின்னுமென்று அருமையாகக் கொடுத்தான், அதைவாங்கி அம்றிபுனுவுமயத்துல் லமீரிமுழுவதையுந்தின்றார், அதுகண்டு கனிகொடுத்தவாலிபன் அம்றிபுனுவுமையத்துல் லமீரியைப்பார்த்து, ஒகே பெரியவரே

யுமது முகவாட்டம் தெளியவில்லையே, ஆதலால் இன்னுங்கொஞ்சங் கனிதின்றாற்றான் பசியடங்கி நன்றாக முகந்தெளியும்போலிருக்கிறது, ஆதலால் இன்னுங் கனி வேண்டுமாவென்று கேட்டான்.

அதற்கிவர், வாலிபனே கனிகொடுவென்றுசொன்னார். உடனே யந்தவாலிபன் மரத்திலேறி யோர்பெரிய குலையாகப்பார்த்துப் பியத்துக்கொண்டுவந்து கொடுத்தான், அந்தக்குலைக்கனி முழுமையும் அம்றிபுனுவுமையத்துல்லமீரி தின்று தண்ணீருங்குடித்துத் தமது மனத்துள்ளே அல்லாகுத்தஆலாவைச் சக்கூறுசெய்துகொண்டு, அந்தவாலிபனைப்பார்த்து, ஓகே, நற்குணத்தையுடைய வாலிபனே யுனக்குப் பாருசென்னுந் தம்பிரானுடைய கிருபாகடாட்சத்தினால் ஆயுள்நீடித்திருக்குமென்று வாழ்த்தினார். அதுகேட்டு, வாலிபன் அம்றிபுனுவுமையத்துல் லமீரிபேரிலே மிகுந்த சந்தோஷமாய் அவரையோர் நிழலடர்ந்த மரத்தடியிற் கூட்டிக்கொண்டுபோய் வைத்து, ஓகே ஷைகே நீர் யார்? எங்கேயிருந்து எங்கே போகிறீரென்று கேட்டான்.

அதற்கு, அம்றிபுனு வுமையத்துல்லமீரி வாலிபனைப்பார்த்துமெதுவாகவாயைத்திறந்து, ஓகே, வாலிபனே, நற்குணமுடையவனே, நானாகிறது, ஆமிறுடைய மக்களில்நின்று மொருவன் மேலும், நான் மிகுந்த பணத்தையுடையவனாகத் தத்துவத்துடனே பெலத்த வியாபாரஞ்செய்துகொண்டிருந்தேன், இருக்கையிற், சிலகாலத்திற்குப்பின்னரவ்வியாபாரத்தில்வந்த நஷ்டத்தினாற் பணங் காசுகள் போனதுடனே, என்னவாலிபமுங் கழிந்துபோய், இப்போதிந்தக் கோலமாகியூரை விட்டுப்புறப்பட்டேன், அஃதேதெனனில், ஜஹறாபுடையமகன் இறவுசுல்கூலென்கிற இராஜனிடத்திற்போய் அவர்பேரிற் செற்சுவை, பொருட்சுவை, கற்பனை, யலங்காரத்துடனே சில சித்திரக்கவிதைகளைப் பாடியெதுவேனும் பரிசுபெற்று வறுமையைத் தீர்க்கலாமென்று வந்தேனென்றுசொன்னார், அதுகேட்டு வாலிபன், அம்றிபுனுவுமையத்துல் லமீரியைப்பார்த்து, ஓகே, கிழவனாரே இப்போது நீர் சொன்ன இராஜா இரவுசுல்கூலுக்கு ஒரு பிரஸ்தாபம் வெளிப்பட்டிருக்கிறது, அஃதென்ன பிரஸ்தாபமென்றால், வஞ்சனைமாயத்தையுடையமுகம்மது சண்டைக்குவருகிறதாக, அதனால், ராஜாவுடைய மனது கொஞ்சங்கடபிடியாய்க் கலங்கிக்கொண்டிருக்கிறாரென்றுசொல்லி, அவருடைய முகத்திற்கெதிராகக் கிட்ட நெருங்கியுற்றுப்பார்த்துச்சொன்னான். ஓகே! கிழவரே, யும்மைப்பார்த்தால் என் சரீரம் நடுநடுங்குவதுடனே மனஞ்ச

ந்தேகங் கொள்கிறது; அதை யோசித்தால், நீர் புலவனுமல்ல, இறவுசுல்கூல் இராஜனைநாடிப் பாடவரவுமில்லை, ஆனால் முகம்மதுடைய காரியத்தின்பேரில் வேவுபார்க்க வந்தவராகத்தோன்றுகிறது. அப்படியல்லாமல நீர் மெய்யாய்ப் புலவராக இருக்கில் நான்சொல்லுகிற முறைமைப்படி சற்பனை யலங்காரத்துடனே இருக்கில் நான்சொல்லுகிறமுறைமைப்படி கற்பனை யலங்காரத்துடனே இந்தப்பூங்காவின்பேரி லொருபாட்டுப்பாடினால், நானுமதுசொல்லை யொப்புக்கொள்வேனென்று சொன்னான். அதுகேட்டு அம்றிபுனுவுமையத்துல் லமீரியுடைய மனதி லிவனென்னமுறைமையாகப் பாடச்சொல்லுவானோ அதனாலென்னவந்து சம்பவிக்குமோவென்று கொஞ்சம் பயங்கரமுண்டாய், அல்லாகுத் தஆலாவைநாடி முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை மனத்துள்ளேபுகழ்ந்து, தமது சுயப்ரசன்ன சம்ப்ரதாயத்தினால் அந்த வாலிபனைப்பார்த்து, எடாதம்பி யுனக்கென்ன முறைமையாகக் கவிதை பாடவேண்டுமென்றுகேட்டார், அதற்கவன், பூங்காவிற்கும், அதிலுள்ள தண்ணீர்த்தடாகங்களுக்கும், மரங்களுக்கும், பழங்களுக்குந்தனித்தனி கற்பனையுடனே பாடவேண்டுமென்று சொன்னான்.

அதுகேட்டடனே, அம்றிபுனுவுமையத்துல் லமீரி, மங்களம் பொருத்தம்பார்த்து, இந்தப் பூங்காவானது பூமியிலுள்ள மற்றப்பூங்காவுகளுக்கெல்லா மேலாம்பரமானது, இதிலுள்ள தடாகங்களிலிருக்குந் தண்ணீரானது முத்தினிறம்போன்றது, மரங்களானதுகொடை கொடுக்கும் புண்ணியவான்களுடைய புகழைப்போலொன்றுக்கொன்றேற்றவாட்டமில்லாது வளர்த்தியையுடையது இம்மரங்களின் பூங்கொத்துகள் நன்மையைச் செய்பவர்களுடைய கிளைகளைபோற்றழைத்து விரித்திரிவையுடையது, பழங்களினுடைய நிறமானது கல்விமான்களின் மனத்தைப்போற்சிவந்து வெண்ணெய்க் கட்டியைப்போல் மெதுவும், தேவாமிர்தத்தைப்போ லின்பத்தையுமுடையது, இந்தப் பூங்காவில் வீசுந்தென்றற்காற்றினாலிறந்துபோன வுயிர்ப்பிணங்களுமுயிருண்டாகும். இந்தப்பூங்காவில்லாதிருக்கிற பறவைஜாதிகள்மகிழ்ச்சியடையாதென்றும் இன்னுஞ்சில அலங்காரத்துடனுமெட்சகந் திரிவு, மகுடம் பொருந்தச்சிறப்பாகப்பாடினார், இந்தப்பாட்டை யந்தவாலிபன்கேட்டுமிகுந்தசந்தோஷமுண்டாகிப் பெருமகிழ்ச்சியுடனே சிரித்துக்கொண்டு அம்றிபுனுவுமையத்துல்லமீரியை, ஓகே, ஷெய்கேயென்று கூப்பிட்டு, அவரைப்பார்த்து நானுங்கொஞ்சம் வாசிக்கத்தெரிந்த

வன்றான், என்றாலும் என்னுடைய ஆயிசுபரியந்திர மிப்பேர்க்கொத்த புலவர்களையும், பாடல்களையும் நான்கண்டதுமில்லை, கேட்டதுமில்லை யாதலால், இதற்குத்தியாகமாக என்னுடைய வுடற்பிறந்தானில் நின்று மோர்த்தங்கச்சவடி வாங்கித்தராமல் நானும்மைச்சும்மா வனுப்பமாட்டேன், ஆனதால், நீரிவ்விடத்திலேயே இரும், இந்தப் பூங்காவுக்கு எஜமானனானவன் இறவுசுல்கூலிராஜனுடைய மந்திரியுக்காசு அவரிந்த முதற்கோட்டைக்கு அதிகாரி, அவரும் புலவோர்கள்பேரிலும், இப்பேர்க்கொத்த மதுரமான பாடல்கள்பேரிலு மிகவிருப்பமுடையவர், நன்றாய்க்கொடுக்குந் தியாகியானவர்; அவரிடத்திலேயும்போ யும்முடைய பெருமைகளை நான்சொன்னாற் சந்தோஷமாயு மழைப்பார், அவராலுங்கிடைக்கிறதை நீர் பெற்றுக்கொள்வதோடு நீர் நாடிவந்தபடிக்கு இராஜனிடத்திலும் யாதாமொரு வருத்தமுமில்லாமற் போகக்கூடுமென்றுஞ்சொன்னான், அதுகேட்டு அம்றிபுனு வுமையத்துல்லமீர் யவனைப்பார்த்து எடா தம்பி உனக்கும், அந்த வுக்காசென்கிற மந்திரிக்கும் பரூசுடையகிருபை யுண்டாகும் ஆதலாலுன் மனம்போலே செய்யென்று சொன்னார்.

அதுகேட்டுடனே, வாலிபன் சரேலென்று றுக்காசு மந்திரியிடத்திற்போய் அவனைக்கண்டு மரியாதை செய்துநின்று, வாய்திறந்து இராஜாதிராஜாக்களும் மெச்சிக்கொள்ளும் புத்தியுத்தியுஞ் சிறந்த கல்வியுமுடைய மந்திரியானவர்களேயென் றவ்வுக்காசு மந்திரியைப் புகழ்ந்து, நானின்றையதின மொருகாலத்திலுங் காணாத பெரிய காட்சியொன்றைக் கண்டேன். அக்காட்சி யென்மனத்தை மிகவும் ஆச்சரியமாக்கிவைக்கிறதென்று சொன்னான் அப்போதவனைப் பார்த்து, உக்காசு மந்திரி அஃதென்ன காட்சியென்று கேட்டான், அதற்கு,வாலிபன் முதற்கோட்டைவாசலிலிருக்கிற நமதுபூங்காவிலிருந்த வயதையுடையவோர் புலவர் வந்திருக்கிறார் அவரைப்போலே கவிதைபாடப்பட்ட வல்லமைசாலிகளை நான் என் ஆயிசுபரியந்திர மெங்குங் கண்டதில்லை அவருக்கு நான் பசியாற்றிவைத்து நம்முடைய பூங்காவின் பேரிலே பாடச்சொன்னேன், அவரும், உடனே பாடினார், அப்பாட்டினுடைய நேர்பாகத்தைப் பாருங்களென்று நன்றாய் ராகசங்கீதத்துடனேபாடினான் அதுகேட்டு, மந்திரி தன்சிரசை யசைத்துக்கொண்டேயிருந்தான் இவ்விதம் வாலிபன் பாட்டைப் பாடிமுடித்துப் பின்னருமந்திரியைப் பார்த்து இந்தப்புலவர் நம்முடைய இராஜாவை நாடிவந்திருக்கிறார்.

ஆதலால், அவருக்குத்தங்கள் கிருபை அனுக்கிரகத்தினால் இராஜாவுடைய நேசங் கிடைக்கவேண்டுமென்று சொன்னான் அதுகேட்டு மந்திரி, வாலிபனைப்பார்த்து, இந்தப்பாட்டினுடைய கவிச்சாதுரியத்தைப்பார்த்தால் நீசொன்னபடிக்குக் கெட்டியானபுலவர்தான். ஆதலாலவரை நீசீக்கிரம்போய் இங்கே கூட்டிக்கொண்டு வாவென்றுசொன்னான், அதுகேட்டு வாலிபன், உடனே அம்றிபுனு வுமையத்துல்லமீரியிடத்தில்வந்து, புலவரே இராஜா இறவுசுல்கூலிடத்திற்கு நீர்போக நல்லபாட்டை கிடைத்துக்கொண்டது ஆதலாற், சீக்கிர மென்கூட வாருமென்றழைத்தான், அதுகேட்டுடனே, அம்றிபுனுவுமையத்துல்லமீரி தடிக்கொம்பையெடுத் தூன்றிக்கொண்டெழுந்து அவனோடு போகும்போது, கொஞ்சத்துக்குக்கொஞ்சங் கீழேகுந்துவார், பின்னெழுந்து நடப்பார், இவ்விதமாகக் கிழவன் கூற்றென்பது போலகூற்றுக்காட்டிக்கொண்டு நடந்துக்காசு மந்திரியுடைய வீட்டுத்தெருத்திண்ணையிற் போயிருந்தார் இவ்விதம், அம்றிபுனுவுமையத்துல்லமீரி வந்திருப்பதை யந்தவாலிபனுக்காசு மந்திரியிடம் போய்ச்சொன்னான், அதுகேட்டு, மந்திரி புலவரையுள்ளேகூட்டிக்கொண்டுவாவென்று சொன்னான், சொன்னவுடனே வாலிபன் அம்றிபுனு வுமையத்துல்லமீரீயையழைத்துக் கொண்டுள்ளேபோனான்.

அங்கே செஞ்சந்தனக் கட்டையினாற் செய்யப்பட்டவோர் ஆசனத்தின்பேரி னுக்காசுமந்திரியிருக்கவும், அனேகஜனங்களவனைச் சூழ்ந்திருக்கவும்,எதிரிலொருபார்ருசென்ற புத்துகான்வைத்திருக்கவும் இறவுகல்கூல் பேரெழுதிய ஓர்கொடிபறக்கவுமாக இருக்கிற சிறப்பை அம்றிபுனுவுமையத்துல்லமீரிகண்டு, தமதுமனதிலென்னமோ வேதாவென்ற அச்சங்கொண்டவராக நிற்கும்போது, உக்காசுமந்திரிசரேலென்று அம்றிபுனுவுமையத்துல்லமீரிக்குமுன்னால்வந்து வாரும்புலவரே என்றழைத்தான். அப்போது, அப் றிபுனு வுமையத்துல்லமீரிமந்திரியைப்பார்த்துச் சங்கைமரியாதைசெய்து இராஜாதிராஜாக்களெல்லாமகிழும் புத்தியுத்தியையுடைய மந்திரியானவரே இந்தவேழைப்புலவன்பேரிலேகிருபையாக இருமென்றுசொல்லி மிகவும்புகழ்ந்து போற்றினார், அதுகேட்டு மந்திரிகிட்ட நெருங்கிக்கையைபிடித்து நடத்திக்கொண்டுபோய்த்தானிருக்குமிடத்திற் பக்கத்திலிருத்திப்புலவரேயும

துவாலாறென்னவென்று கேட்டான் அதற்குஅம்றிபுனு வுமையத்துல் லமீரி யுக்காசைப்பார்த்து மந்திரிமார்கள் திலதமே நான்கொம்ப வும் செல்விகரமா யாளடிமைகள் அனேகருடனேவாழ்ந்து பெரியவி யாபாரஞ் செய்துக்கொண்டிருந்தேன், அந்த வியாபாரத்தில்வந்த நஷ் டத்தினுலிந்தக்கோலமாகி யாரிடத்திற் போனுற் சவுக்கியம் பெறலா மென்று யோசித்தபோது, என் புத்திக்குத் தட்டுப்பட்டது, இராஜா திராஜருமாய்ச், சுத்தவீரியத்தை யுடையவருமாய்க், கிரீடாதிபதியு மாயிருந்து பரிபாலனஞ் செலுத்துகிற இராஜா இறவுசுல்கூலிடம் போனுற்ருன் சவுக்கியமுண்டென்பதாகத் தெரிந்துவந்தேன், அதற் குப் பகரமாகப் பர்ருசென்ற தம்பிரான்தா னும்முடைய சினேகங் கிடைக்கும்படியாகச் செய்தாரென்று சொன்னுர்.

அதுகேட்டுமந்திரி, அறபுப்பாஷையினுலே மிகுநேரம் நல்லநல் லசுலோகங்களெல்லாங்கேட்டான் அதற்கெல்லாம் அம்றிபுனுவுமைய த்துல் லமீரி துலக்கமாகச் சவாபு சொல்லிக்கொண் டிருக்கும்போது அனேகஞ்சனங்கள்வந்து இவருடைய நாகரீகமான பிரசங்கத்தைக்கே ட்டுச் சந்தோஷங் கொண்டவர்களாக நின்ருர்கள் அதுகண்டு அம்றிபு னுவுமையத்துல்லமீரீ இந்தக்கூட்டத்திலாராவது நம்மையின்னுனென் றுதெரிந்தவர்கள் வந்துநின்ருற் பொட்டுத்துலங்கி வெளியாகிவிடுமெ ன்றெண்ணி மந்திரியைப்பார்த்துச், சிறப்பானமந்திரியே நானென் பெண்சாதி பிள்ளைகளை விட்டுவிட்டுவந்து மிகுகாலதாமதமாகி விட் டது, அவர்கள் பசியினுல்வாடி வதங்கிப்போவார்களே யென்ற வெண் ணம் பெரிதாயிருக்கின்றன, ஆகையால், நீர்சீக்கிரம் என்பேரிலே தய வுவைத்து இராஜாவுடைய சமுகத்திற் கொண்டுபோய் விடுமென்று சொன்னுர். அதுகேட்டவுடனே மந்திரி அம்றிபுனுவுமையத்துல் லமீரி யையழைத்துக்கொண்டு இராஜன் இறவுசுல்கூலிருக்கு மாளிகைக்குப் போய் முன்கட்டில் நின்றுகொண்டு மந்திரி அம்றிபுனுவுமையத்துல் லமீரிலைப்பார்த்து, ஒகே, புலவரே நீரிந்தமுன்கட்டிலேயே சற்றுநே ரம் நில்லும் நான்பின்கட்டிற்குள்ளே போய்வருகிறேனென்றுசொல்லி விட்டுப்போய் இறவுசுல்கூலைக்கண்டு அவனுக்கு வழமைபோலே கீழே விழுந்து சாஷ்டாங்கஞ்செய்தெழுந்து மரியாதை யொழுங்குடனே யோரிடத்தில் நின்றுகொண்டவனைப் பார்த்துக் கீர்த்தியாகிய இரா

ஜாவே நானின்றையதினத்திலோரழகான புதுமைகண்டேன் அதைத் தங்களுக்கு தெரிவிப்பதற்கு வந்தேனென்று சொன்னான்.

சொன்னவுடனே, இறவுசுல்கூல் மந்திரியைப்பார்த்து அஃதென்னபுதுமையென்றுகேட்டான், அதற்கு மந்திரி இராஜாவே நானிருக்குமிடத்தில் மிகுந்த வயதாளியுமாய் அனேகநூல்கள் வாசித்தவருமாய் இக்காலத்திற்றேடிக் காணக்கூடாத ஒரு புலவர்வந்தார் அவருடைய பேச்சும் பாட்டும் ரெம்பவும் நன்றாயிருக்கின்றன ஆனாற்றரித்திரத்திற் றலைமையானவராயிருக்கிறார் அதனாலேமிகுதூரந்தொலையிலிருந்து தேவரீர்தங்களிடத்தில்வந்து எதுவேனும் பெற்றுக்கொண்டு போகலாமென்று பெண்டுபிள்ளைகளை யோரிடத்தில்வைத்துவிட்டு வந்திருக்கிறாரென்றுசொன்னான். அதுகேட்டுஇறவுசுல்கூல் மந்திரியைப்பார்த்து அந்தமனுடனை இங்கே கூட்டிக்கொண்டுவாவென்றுசொன்னான் சொன்னவுடனே, மந்திரி வெளியில்வந்து அம்றிபுனு வுமையத்துல் லமீரியைப்பார்த்து ஓகே கிழவரே! யுமக்காக இராஜனிடத்திற் சிபாரிசு செய்து நல்லவுத்திரவு பெற்றுக்கொண்டு வந்தேன், வாருமென்று கூட்டிக்கொண்டு போகும்போது, அம்றிபுனு வுமையத்துல் லமீரியைப்பார்த்து, நானும்மை இராஜாமுகதாவிற் கொண்டுபோய் விட்டுவிடுகிறேன்நீர் இராஜாவைக்கண்டபோது கீழேசாஷ்டாங்கமாகவிழுந்துகிடக்கவேண்டும், அவரும்மை யெழுந்திருக்கச்சொன்னவுடனே யெழுந்திருந்து அவர்கேட்கிற பேச்சுக்குமாத்திரம் பதிற்பேசவேண்டும் அப்படிப்பேசுகிறதிலும் நல்லமரியாதை யொழுங்குடனே பேணுதலாகப் பேசவேண்டுமென்றுசொல்லி யவரைக்கொண்டுபோய் உள்ளரண்மனையில் விட்டுவிட்டு மந்திரி வெளியிற்போய்விட்டான்.

பின்னர், அம்றிபுனு வுமையத்துல் லமீரி இறவுசுல்கூ லிருக்குமிடத்தை நாடிப்போகச்சே, அங்கே, எழுகடலைப்போ லிரைச்சலாய் வுருவியகத்திபளபளென்றபிரகாசத்துடனே அனேகஞ்சுத்தவீரியர்கள் நிற்கக்கண்டு, அஞ்சியமனத்தோடுங் கொலுவாசனத்திற்குப் போகும்போது, நவரத்தினத்தி னழுத்தப்பட்டுச் சூரியபிரகாசமான ஒரு சிங்காசனமீதிருந்து அதைச்சூழ முன்னும் பின்னுமாக வுருவியகத்தியுடனே ஆயிரம்பேர்களுக் கதிகமான °சுத்தவீரர்கள் முறுக்குமீசையெடுப்புத் தணியாதவர்களாகக் காவற்காக்குந் துருப்புச்சேவகர்கள்

நின்றார்கள். அவர்கள், அம்றிபுனு வுமையத்துல் லமீரியைக்கண்ட
போதுஇறவுசுல்கூலுக்குஅறிக்கைசெய்தார்கள்,அதுகேட்டு இராஜன்
அக்காவற்காரரைப்பார்த் தந்தமனுடனே இங்கேவிடுங்களென்றுகட்ட
ளையிட்டான் அதுபோலே காவற்காரர்கள்வந்து, அம்றிபுனுவுமையத்
துல்லமீரியை யுள்ளேபோகும்படி யனுப்பினார்கள்.

அங்கே நவரத்தினம்பதித்தவோர் பொன்னாசனத்தின் பேரில்
ஷைத்தானாகிய இறவுசுல்கூல்சூரியப்பிரகாசமும் சந்திரப்பிரகாசமும்
நாணத்தக்ககிரீடமணிந்துபொற்சரிகையங்கிதரித்து முத்துக்குஞ்சங்
கட்டிய இடைக்கட்டுடனே முன்னாலும், பின்னாலும், இருபக்கங்களி
லும் வயிரப்பிடியிழைத்தபட்டாக்கத்தி பளபளென்ற பிரகாசத்துட
னே யேந்திப்பிடித்தவர்களாகக்காட்டுப் புலிகளைப்போன்ற சுத்தவீரியர்
காவலுடனே சிங்கத்தைப்போலிருக்கக்கண்டு,மந்திரிசொற்படிக்குஅல்
லாகுத்த ஆலாவைநாடித் தலையைவளைத்துப்பூமியிலேசுஜூதாகவிழுந்
துகிடந்தார், அதுகண்டு இறவுசுல்கூல் ஒகே, கிழவரே யுமதுதலையை
யுயர்த்தியெழுந் தருளியாகுமென்று விருப்பமாகச்சொன்னான் அப்
போதுடனே யம்றிபுனு வுமையத்துல்லமீரி சந்தோஷத்துடனே தலை
யையுயர்த்தியெழுந்து கைகட்டிநின்றுகொண்டு இராஜாதிபிராஜ கெம்
பீரவுத்தண்டத்தையுடையவரே பாருசென்ற நாயனுமக்கெந்தநாளுந்
துணையாயிருந்து, இராஜரீகவாழ்வையும் வயதையும் பெலத்தையும்
சந்தோஷத்தையு, மகிழ்ச்சியையும், படை பண்டாரங்களையும், மக்கள்
பாக்கியசம்பத்தை நீடித்துவைப்பார், இன்னுமும்முடைய பகைஞர்களை
யும் பாழாக்கிப்போடுவார், உம்முடைய இராஜரீகத்திற் கொப்பாகவும்,
உமது கைகத்திக் கொப்பாகவும் உமது படைவீரர்களுக்கொப்பாகவும்
பூமியிலெங்குமில்லவேயில்லை, யும்முடைய கோபத்திற்கு முன்னாலே
மலைகளெதிர்த்தாலுந் தவிடுபொடியாய்ப் போய்விடுமென்று சொல்லிப்
புகழ்ந்தார்.

அதுகேட்டு இறவுசுல்கூல் அம்றிபுனுவுமையத்துல்லமீரி பேரில்
மிகுந்தகிருபையாய், ஒகே, கிழவரே, நீர்மிகவும் நன்றானவாக்கியங்கள்
சொன்னீர், ஆதலால் உம்மைநான்மறக்கவுமாட்டேன் விடவுமாட்டே
ன், இப்போதுநானொரு எண்ணத்தின்பேரில் யோசனையாயிருக்
கிறேன், அஃதென்னென்றால், மதீனத்திலிருக்கிற வஞ்சனைக்கார

முகம்மதுடைய விஷயமாயிருக்கும் அது தவிர வேறே யாதாமொன்று
மில்லையென்றுசொன்னான் அதுகேட்டு, அம்றிபுனுவுமையத்துல்லமீரி
இறவுசுல் கூலைப்பார்த்து, அருமையாகிய இராஜாவேயாதாமொரு
துன்பமும்வாராமல் பர்ருசென்றநாயன்காத்துக் கொள்வார்அதனாலே
நீர்கவனிக்கவேண்டாம் உம்முடையபேர்கேட்டால் இராஜாராஜாக்களு
ம்பதறித்திடுக்கிட்டுத் தலையையெடுக்காமல் முகங்குப்புறக்கவிழ்ந்து
விழ்ந்து கொள்வார்கள், யாதலால், இஃதோர் பெரியகாரியம்போலே
யேன்யோசிக்கிறீரென்றுசொன்னார் அதுகேட்டு இறவுசுல்கூல்மிகுந்த
சந்தோஷமாய் அம்றிபுனுவுமையத்துல் லமீரியைப்பார்த்து, ஓகே,
கிழவரே, நீர்சொன்னதுநிசந்தான் என்றாலும் அந்தமுகம்மதுடைய
மாயவஞ்சனை மிகவும் பெரிதென்று நினைக்கிறேன், ஏனென்றால் அவ
ருடையமாமிமகன் சுபைறிபுனுஹவ்வாமையிங்கே, உளவுபார்க்க அனு
ப்பினார், அந்தசுபரை நமதுநாயன் பர்ருசுடையகிருபையினாலே பிடி
த்து அடித்திரத்தவாருக்கிச் சரீரத்திலே நிதநிதமொட்டகத்தினுரித்த
பச்சைத்தோலைப்போர்த்துகாயவைத்து அந்தநேரத்திலே யத்தோலையு
ரிக்கும்படியாகச்செய்து சிறையிலிட்டிருக்கிறேன், அந்தச்சுபைறு நம்
மைமிகவுங் கெஞ்சுகிறான் நான்விடவில்லை, பர்ருசின்பேரில் சத்திய
மாக இனிநான் அந்தமுகம்மதை யடர்ந்தேறிவெட்டி அவருடையகூட்
டத்தார்கள்யாவரையுந் திக்குக்கு திக்கு துரத்திவிடுவேனே தவிரச்
சும்மாவிடமாட்டேன், ஆனால், அறபிகளுக்குள்ளே முகம்மதுடைய
குபாடம் இன்னவிதமாக நடக்கிறதென் றுமக்குத்தெரியுமாவென்று
கேட்டான்.

அப்போது, அம்றிபுனு வுமையத்துல் லமீரி இறவுசுல்கூலைப்பார்
த்து இராசாக்கள்திலதமே நானும்மைத்தேடிவருகின்ற வழியிலே
பனீசாலீம்கிளையாருடைய தண்ணீர்தடாகத்திற்போய் என்னினத்திலி
ருந்த பதார்த்தங்களைத்தின்று தண்ணீர் குடித்துப்போகலாமென்று
யோசித்துப்போயிருந்தேன், அப்போது அங்கேயோர்மனுடன் மிகுந்
தவுயரமும், அதற்குத்தகுந்த நீளமுங் கத்தி பளபளப்பாக அரையிற்
கட்டிக்கொண்டு பார்த்தவர்கள் பயப்படத்தக்தாகவந்து என்கிட்ட
நெருங்கி, எடா, கிழவாயென்றுதட்டி நீயாரென்று? கேட்டான் நானந்
தமனுடனுடைய அதட்டலாலும் கேள்வியாலும்பயந்து சரீரம்நடுநடு
ங்குதலாய்வாய்குழறிநாவில் நீர்வறழ்ந்துபோய் நான் அறபிகளில்நின்

றுமொருமிசுக்கீனைவன், சுயம்பாடுந்திறமையுள்ளபுலவன். இப்போது இறவுசுல்கூல் இராஜாபேரிற் சிலக்விதைகள் கற்பனை யலங்காரத்தோடு சொற்சிதைவின்றிப் பாடிக்கொண்டு அவரைக் காணப்போகிறேனென்று சொன்னேன் அதுகேட்டவன், மறுபடியு மென்னைப் பார்த்து ஒகே கிழவா, நீயென்னை யறிகையாவென்று கேட்டான், அதற்கு நானவனைப்பார்த்து, உம்மை நானறியமாட்டேனென்று சொன்னேன். சொன்னபோதவன், மறுபடியு மென்னைப்பார்த்து, ஒகே கிழவா, நீயறிந்துகொள் நானுங்கிறவன் அபீத்தாலிபுடையமகன் அலியாயிருக்கும், இப்போது நீசொன்ன இறவுசுல்கூலென்ற இராஜனைத்தான் தேடிப்போகிறேன், அஃதேனென்றால், அந்த இறவுசுல்கூலுடைய சுத்த வீரர்களையெல்லாம் வெட்டிவிட்டு, அவனுடைய ஆண்மக்களையெல்லாம் நாசமாக்கிப்போட்டு, அவனுடைய கோட்டைகளையெல்லா மிடித்துத் தூளாக்கிக் காற்றிலே பறக்கவிட்டுவிட்டு அவனையும் வெட்டிவிட்டு அவனுடைய பெண்டுபிள்ளைகளையுஞ் சிறைபிடித்துக்கொண்டு அங்கே சிறையிற் கிடக்கிற சுபைறிபுனு ஹவ்வாமையு மெடுத்துக்கொண்டு வரப்போகிறேன் இச்செய்தியை நீயாருக்குஞ் சொல்லாதே கிழவாவென் றுறுக்கிச் சொன்னான். அதுகேட்டு நானல்லவென்றேன் அப்போதவ னென்னைப்பார்த்து அஃதெனக் கொப்பில்லைச் சத்தியஞ்செய்துதா, அல்லாதவரையி லுன்னைவெட்டிப்போடுவேனென்று வாளைவாங்கிக்காட்டினான். அதற்குப்பயந்து நான் சத்தியஞ்செய்து கொடுத்துவிட்டு வந்தேனென்று சொன்னார்.

இவ்விதம், அம்றிபுனு வுமையத்துல்லமீரி சொன்னசொற்களையெல்லாம் இறவுசுல்கூல்கேட்டுக் கொக்கைபோட்டுச்சிரித்து அவரைப் பார்த்து, ஒகே கிழவரே, நீரெனக் குபதேசம் போதிக்கவந்தவராக இருக்கிறீர், ஆதலால், உம்முடைய உண்மையின்பேரில் நானிருந்த விருப்பதை யுடையவனை இருக்கிறேனென்று சொன்னான். அது கேட்டு, அம்றிபுனு வுமையத்துல் லமீரியுள்ளுள்ளே அல்லாகுத்தஆலாவுடைய வுதவியைக்கொண்டும் முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் துஆபறக்கத்தைக்கொண்டும் இறவுசுல்கூலென்னுமிந்தப்பயல் நம்முடைய பேச்சிற் சிக்கிக்கொண்டானென்று ஒரு தந்திரஞ் செய்ய யோசித்து அவனைப்பார்த்து, ஒகே இராஜாவே யும்முடைய குதிரைச் சுத்தவீரியர்களில் நின்று மிருந்த வல்லமை

சாலியான ஒரு வீரனை யென்னோடு கூட்டியனுப்பினால், அந்த அலியைக் கைப்பிடியாக பிடித்துக்கொண்டுவந் தும்மிடத்தி லொப்புக் கொடுப்பேனென்று சொன்னார், அதுகேட்டு, இறவுசுல்கூலென்பவன் அவ்வம்றிபுனு வுமையத்துல் லமீரிபேரிலே மிகுந்த ஆசை அன்பு கொண்டவனாகித் தன்பக்கத்தில் நிற்கும் ஏவலாளர்களிலொருவனைப் பார்த்து, இந்தப் பெரியவர்வந்து ரெம்பநேரமாச்சுதே பசியாற்ற வேண்டுமாதலாற் சீக்கிரமுன் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோய் நல்ல பால்ப்ழாதிகளுடனே யறுசுவை பொருந்திய வுண்டிதின்றி கொடுவென்று சொன்னான்.

அதுபோலந்த ஏவலாளன் அம்றிபுனுவுமையத்துல் லமீரியைக்கூட்டிக்கொண்டுபோய்த் தன்வீட்டில்வைத்து இன்பமான வஸ்துகளெல்லாம்பாத்திப்புசியும் பெரியவரேயென்றுசொன்னான்; சொன்னபோதுடனே, அம்றிபுனுவுமையத்துல்லமீரி தமக்குப்போதுமென்றமட்டும் வாய்வயிறாரவுண்டுதின்று சருபத்துங்குடித்து மகிழ்ச்சியாய் (அல்ஹம்துலில்லாகி) என்றுஅல்லாகுத்த ஆலாவைச் சுக்கூறுசெய்துயெழும்பி.அவ்வீட்டைவிட்டும் வெளியில்வந்து சுபைறிபுனு ஹவ்வாமையின்றைய இராவைக்குள்ளேகண்டு அவருடைய வருத்தம் நீங்கும்படியாய்ச் சிறையைவிட்டு மீட்டுக்கொண்டு போகவேண்டுமென்று, தம்போக்கி லூரைச்சுற்றிப் பார்ப்பவர்கள் போலே ஜாடையாய் எங்குந்தேடினார், தேடும்போ தங்கே யெல்லா இடத்திலுஞ் ஜனக்கூட்டமுஞ், சந்தடியுங், காவற்காக்கிற வீரர்களுமாக இருக்கிறார்களே யல்லாமல் வேறில்லை, யானால், சுபைறிபுனு ஹவ்வாமையிவர் கண்ணிற் காணாமற்றியங்கி யின்னுங் கொஞ்சதூரம்போய்ப் பார்ப்போமென்று போகும்போது அங்கே யோர்சாவடிக்கு முன்னாற்கிடக்கிற கல்லுப் பாறையிலே சுபைறிபுனு ஹவ்வாமவர்கள் கழுத்திற் பூட்டிய சங்கிலியையிழுத்துக் கட்டியிருப்பதைக் கண்டு, இன்னுங் கொஞ்சங் கிட்டநெருங்கிப் போய்ப் பார்க்கும்போது இவருடைய ஈரற்குலை தீயும்படியாகச் சுபைறிபுனு ஹவ்வாமவர்களின் எலும்புகளெல்லாம் நுறுக்கி நரம்பும், தோலும், இரத்தங்கசியும் சதையுமாக வொட்டகத் தோலிற்பொதியப்பட்டு வெயிலிலே வருத்தம் பொறுக்கக்கூடாமல் அழுதழுது ஆண்டவனே! நானென்ன செய்வேன், இந்தக் காபிரீன்கள் நாளெல்லாஞ் செய்கிறவருத்தத்தை நீபார்த்தவனாக இருக்கிறாயே, இப்படி நானவஸ்தைப் படுகிறதில் நின்றும் நீகற்பனையாக்கி மருந்தை யனுப்பிவிடுவையேயானால் எனக்

கதுமிகவும் நன்முபிருக்கும்; நீவல்லமையுடைய நாயனுகையால் என்னை இந்தத்துன்பத்தை விட்டும் இலேசாக நீக்கிவைக்கப் போது மானவனென்று சொல்லிக்கொண்டு கிடக்கவும், அவர்களைச்சுற்றி ஐம்பது கிங்கிலியர் காவற்காத்துக்கொண் டிருக்கவுங்கண்டார்.

இவ்விதம்,சுபைறு றலியல்லாகு அன்கவர்கள் சிறையில் வேத னைப்பட்டுக் கொண்டிருப்பதைக்கண்ட அம்றிபுனு வுமையத்துல்ல மீறி மனங்கலங்கிப் புத்திசவலித்தவராகி, இந்தக்காவலைவிட்டுஞ் சு பைறிபுனு ஹவ்வாமை யென்னவிதமாக வெளியே கொண்டுபோகலா மென்று யோசித்துக்கொண்டு நிற்கையிற் சூரியனுமடைந்து இராவு காலமாயிற்று அப்போது ஒருதிறத்தவீரனேடிவந்து அம்றிபுனுவு வுமையத்துல் லமீறியைப்பார்த்து, ஒகே கிழவனுரே யும்மை இராஜா கூட்டி வரச்சொன்னுரென்று அழைத்தான். அதுகேட்டு, அம்றி புனு வுமையத்துல் லமீறி இந்நேரத்தில் இராஜா நம்மை யழைக்க வேண்டுவ தென்னகாரணம் தெரியவில்லையே, ஆனுல், எல்லாத்துக் கும் அல்லாகுத்த ஆலா பேர்துமானவனென்று ஆண்டவனைப்புகழ் ந்தவராக அழைத்தவனேடு சுரேலென்று இராஜன் இறவுசுல்கூவிரு க்கு மிடத்திற்குப்போய் அவன் முன்னிலே நின்றூர், அப்போதங்கே, இராஜாகிட்ட வொருமனுடன், அடியுநுனியு மொன்றுபோலான ஈத் தமாத்தைப்போலே பருத்தவனுகவும். அவன் புருவமத்தியிலே சுத் தவிரியத்தன மிலங்குகிறவனுகவும் மிருந்தான், அவனைக்கண்டு இவ னுரோவென் றிவர்யோசனையாய் நிற்கும்போது, அல்லாவுக்கும் அவ னுடைய தூதாங்கரமான முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர் களுக்கும் பகைஞனை இறவுசுல்கூலென்கிற லகுனத்துப்பெற்றவன் அம்றிபுனு வுமையத்துல் லமீறியைப்பார்த்து, ஒகே, பெரியவயதை யுடைய கிழவரே, ஷெய்கே வாரும்வாரும் இருமென்று சந்தோஷ மாகச்சொன்னுன். அதுகேட்டு, அம்றிபுனுவுமையத்துல் லமீறி அல் லாகுத்த தஆலா நேருக்குதவி செய்தானென் றெண்ணியிருந்தார்.

அப்போது, இறவுசுல்கூ லவரைப்பார்த்து, ஷெய்கே, இன்றுப கல் நீர் நம்மிடத்திற் பகைக்கவருகிற அலியைக்குறித்துச்சொன்னீர ல்லவா அதற்காகமிகவும் யோசனைசெய்து நீர்கேட்டபடிக்கும்முடனே யனுப்ப இதோயிருக்கிற என் மூத்தமகனுன சுந்தலத்தை யழைத்து

வைத்துக்கொண்டிருக்கிறேன், இவனெப்பேர்க்கொத்தவனானல் (ஆயிரம்) சுத்தவீரியர்கள் ஒருகைக்கு ஈடுசெலுத்தமாட்டார்கள்; அதிலும் எனக்கிவன் ரொம்பவுமுவப்பானவன், மேலுமிவனை என்னரசுக்குப்பாத்திரமாக இளவரசுபட்டமுங் கட்டியிருக்கிறேன். ஆதலால் அந்த அபீத்தாலிபுடைய மகனான அலிக்கும், மற்றபேர்களுக்கு மிவனொருவனே போதும், ஷெய்கே, நீர்நாடியபடி இவனோடுபோயந்த அலியைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டுவாரும், அல்லாதிருக்கில் வெட்டிப்போட்டாவது வாரும், இவ்விரண்டு வித்தி லொருவிதம் நீர் செய்துவந்தீராகில், எங்களுடைய கதுவம்மிக் கிளையாருக்கெல்லா மும்மை நாயகமாக்கிவைத்து உம்முடைய தரித்திரங்களெல்லாம் நீங்கும்படி செய்வேனென்று சொன்னான்.

அதுகேட்டு, அம்றிபுனுவுமையத்துல்லமீரி இறவுசுல்கூலைப்பார்த்து இராஜாவேயும்முடையகாரியங்களெல்லாம் வெற்றியுண்டாகுமே தவிர வேறில்லை நான் என்னவிதத்திலும் அந்த அலியைக் கைப்பிடியாகப்பிடித் தும்முடைய சமுகத்திலே கொண்டுவந்து ஒப்புவித்துடபோடுகிறேனென்று மிகுந்ததைரியமாகச் சொன்னார். அதுகேட்டு இறவுசுல்கூல் அம்றிபுனுவுமையத்துல் லமீரியைப்பார்த்து, ஓ ஷெய்கே உம்முடையஎண்ணம்போல் நம்முடைய நாயன் பர்ருசென்பவர்முடித்துத்தருவாரென்று மிகுந்த மகிழ்ச்சியாகச் சொல்லப் பின்னர் சுந்தலத்தைப்பார்த்து என்கண்மணியானமகனே! யிந்தக்கிழவனார் சொல்லுக்குயாதாமொரு வித்யாசங்கள் செய்யாதே அவரென்ன சொல்லுவாரோ அதுபோல்கேட்டு நடந்துகொள், அவர்நமக்குபதேசஞ் செய்யவந்தஷெய்காயிருக்கும்; ஆதாலால் அவர்நமக்குநன்மையைக்கொண்டுநாடுவாரேதவிரத் தீமையைக்கொண்டு நாடமாட்டாரென்று சொன்னான். அதுகேட்டுச் சுந்தலத்துச் சந்தோஷமாகித் தன்றகப்பன் இறவுசுல்கூலைப்பார்த்து என்னருமையான தகப்பனே! நம்முடையபார்ருசுக்கும் உமக்கும் நானடிபடிந்தேன் என் சிரஞ்சாய்த்தேனென்று இருந்தவிடத்தைவிட்டெழுந்து, தன்னிருப்பிடம்போய்ப் படையாயுதங்களையெடுத்தணியவேண்டிய இடங்களிலணிந்து வாளாயுதத்தை யிடையிற் கட்டிக்கையில் வல்யத்தை யெடுத்துப்பிடித்துத், தான் வழமையாகச் சவாரி செய்கிற குதிரையின் மேலேறிக்கொண்டு அம்றிபுனுவுமையத்துல்லமீரிக்குமோர் திறத்த குதிரையுங்கொண்டுவந்து கொடுக்கச்செய்தான்; அந்தக் குதிரையின்மே லம்றிபுனு வுமையத்துல்லமீரியுஞ் சவாருகினார்.

அப்போது சுந்தலத்து, அந்த அம்றிபுனுவுமையத்துல்லமீரியை யுங்கூடக் கூட்டிக்கொண்டு, பர்ருசென்றதேவைநாடிக்கோயிலுக்கருகேபோய்க் குதிரையைவிட்டுக் கீழிறங்கிப் பர்ருசிருக்கிற விடத்திற் சென்று தீபதூபமிட்டுப்பனைமரம் விழுந்ததுபோல்நெடுஞ்சாண்கிடையாகக்கும்பிட்டுக் கீழேவிழுந்தெழுந்து புத்தைப்பார்த்து, எங்கள்நாயகனே நான் அபித்தாலிபுடையமகன் அலியைக்கொண்டுவரப் போகிறேன், அதற்கு நீர் மிகவுமுதவிசெய்யவேண்டுமென்று கேட்டான். அப்போது, பர்ருசென்கிற புத்துஹா னெப்போதும் போலேஜவாபு கொடுக்கவில்லை, அதுகண்டு, அம்றிபுனு வுமையத்துல் லமீரி இன்றையதினமிபுலீசு லகுனத்துல்லா பர்ருசுடைய வாயைவிட்டு நீங்கியிருக்கின்றான், இதுநாம் வெற்றிகொள்கிறதற்காக நபிநாயகத்தின் பொருட்டா லல்லாகுத்த ஆலாசெய்த கிருபைதா னென்றெண்ணியுள்ளுள்ளே மகிழ்ச்சிகொண்டு நிற்கும்போது, சுந்தலத்து வந்து அம்றிபுனு வுமையத்துல் லமீரியைப்பார்த்து, ஒகே, பெரியவரேவாரும் வாருமென்றழைத்தான். உடனே இரண்டுபேருங் குதிரைமேல் சவாராய்நடந்து முதற்கோட்டை வாயிலிருக்கிற வுக்காசு மந்திரியிடத்தில் வந்தார்கள்.

வந்தவுடனே, உக்காசுமந்திரி இராஜகுமாரனுக்குச் சங்கைசெய்து, அம்றிபுனு வுமையத்துல் லமீரியைப்பார்த்து உம்முடையகாரியங்களெப்படியாச்சுதென்று கேட்டான். அதற்கு, அம்றிபுனுவுமையத்துல்லமீரி இராஜாவாலே தமக்கு நடந்த பெருமையெல்லாஞ் சொல்லி, இப்போது, அபித்தாலிபுடையமகன் அலியைப்பிடித்துவரப்போறேமென்றுசொன்னார். அதுகேட்டு, மந்திரிதானெப்போதுங்கொள்ளாத மகிழ்ச்சிகொண்டு இரண்டுபேருக்கும் நல்லபுதினமான வஸ்துகளினாலேவிருந்துகொடுத்தான், அந்தவிருந்தை யிருவரும்புசித்துச்சந்தோஷமாய் மந்திரிவிடத்திற் பிரயாணஞ்சொல்லிக்கொண்டு குதிரைமேல் சவாராகும்போது, மந்திரி யிவர்களிருவருக்கும் வழியிற்புசிப்பதற்கு உயர்ந்தஹல்வா, சீனித்தோடு முதலிய சிற்றுண்டிகளுங் கட்டிக்கொடுத்தான், அதையு மெடுத்துக்கொண்டவ்விடத்தைவிட்டு நீங்கிப்போகும்போது, ஒருகுளிர்ந்த சோலையையுடைய வோடைக்கரையிலானவுடனே, அம்றிபுனு வுமையத்துல்லமீரிசுந்தலத்தைப்பார்த்து, ஒகே, இரா

ஜகுமாரனே! நான் மிகுந்த தள்ளாமையையுடைய கிழவனாதலால் மிகு தூரங் குதிரைச்சவாரியில் வந்ததின் பேரிலென்சரீரங் கொஞ்சமிளைப்பும், அயர்த்தியுமாக இருக்கின்றது, ஆதலால், இந்த இடத்திற்கொஞ்சநேரமிறங்கியிருந்து நம்மிடத்திலுள்ள சவாதாவிலே கொஞ்சந்தின்றுதண்ணீருங்குடித்துப் படுத்திருந்துசரீரச் சடைவையும், நித்திரைச்சடவையுந் தீர்த்துக்கொண்டுபோவோமென்று சொன்னார்.

அதுகேட்டுச், சுந்தலத்து அம்றிபுனு வுமையத்துல் லமீரியைப் பார்த்து, ஒகே, ஷெய்கே யும்முடைய மனம்போலே செய்யுமென்று தான்குதிரையைவிட்டுக்கீழிறங்கி அம்றிபுனுவுமையத்துல் லமீரியையும் இறங்கச்செய்து தழையடர்ந்தவோர் மரத்தடியிலிருந்து சிற்றுண்டிகளைத்தின்று தண்ணீருங்குடித்துச் சந்தோஷமாக இருவரும்பேசிக்கொண்டிருக்கும்போது, அம்றிபுனு வுமையத்துல்லமீரி மெய்யாகக் கண் தூக்கமுள்ளவர்கள்போலே கண்ணை யேறவிறங்கச் சொருகிறதும், திடுக்கிடுகிறதுமாகச் சாலஞ்செய்தார், அதுகண்டு, சுந்தலத்து, அம்றிபுனு வுமையத்துல் லமீரியைப்பார்த்து, ஒகே, ஷெய்கே நித்திரைச்சடைவு கண்ணை மயக்கிறுப்போலிருக்கிறதே, யாதலாற் கொஞ்சம்படுத்துநித்திரைசெய்தெழும்புமென்று சொன்னான். அதுகேட்டு, அம்றிபுனுவுமையத் துல்லமீரி யொருவிச்சனைவிரித்துப்படுத்தார், பின்னர், கொஞ்சநேரஞ்சென்று அவருக்குப் பக்கத்திலே சுந்தலத்தும் படுத்தான். படுத்தவுடனே சுந்தலத்துத்தன்னைமறந்து குறக்கை வலித்தவனாக வாயில் நுழைகிற ஈயெறும்புந்தெரியாமற் றூங்கிவிட்டான், அப்படியிருந்தும் அம்றிபுனு வுமையத்துல் லமீரி இவனைச்சோதிக்கவேண்டுமென்று தன்கையைக் காலை யவன்மேலே சாடையாகப் போட்டுப்பார்த்தார், அவனுடையசாவறுதிகாலம் சம்பவித்த படியாலே தன்னைமறந்து உயிரற்றபிணத்தைப்போற்கிடந்தான், அதுகண்டு அம்றிபுனுவுமையத்துல்லமீரி யாதொரு தாமதமுமின்றி யவனுடைய இடையிலேகடந்த வாளையுருவி யவன் கழுத்திலோர் வெட்டு வெட்டித் தலைவேறு, உடல்வே றாக்கிவிட்டு, அவன்மேலிருந்தவுடைகளையும், முத்துமாலை ரத்தின மாலைகளையுங் கழட்டிக்கொண்டு குதிரைமேலே சவாராய் அலிறலியல்லாகு அன்கவர்களிருக்குமிடத்தை நாடிவந்தார்

சுந்தலத்து வதைச்சருக்க-முற்றிற்று.

# உக்காசுவதைச் சருக்கம்.

கலிச்சந்த விருத்தம்.

எக்காலமு நந்நபி யின்புறுசீர்
மிக்கோரலி வாளொரு வீச்சினாலே
சிக்காம லொதுங்கிடு செந்தருவோ
டுக்காசறு பட்டத்தை யோதிடுவாம்.

## இதன்பொருள்.

எந்தகாலமும் நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் இன்பம்பொருந்திய சிறப்பில் மிக்கவர்களான, அலிறலியல்லாகு அன்கவர்களின் கையிற் பிடித்திருக்குந் துல்புக்கறென்னும் வாளின் ஓர்வீச்சினால், ஓர்பிர்மாண்டமாகிய மரத்தடியில் இவ்வெட்டுக்குத் தப்பித்துக்கொள்ளலாமென் றொதுங்கி மறைந்த மரத்தோடு முக்காசென்னும் இறவுசுல்கூலுடைய மந்திரியானவன் வெட்டுண்டிறந்ததைச் சொல்லுகின்றாம்.

## சரித்திர வசனம்.

இவ்விதம் சுந்தலத்தை வதைசெய்துவிட்டு அம்றிபுனுவுமையத்துல்லமீரி வரும்போது, சூரியனுதயமாகி நேரமும் விடிந்ததுஅப்போது, இறவுசுல்கூல் நம்முடையமகனையுங் கிழவனனுப்பியிருக்கிறபடியாலவர்க ளெவ்விதத்திலும் அலியைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு வருவார்களென்ற சந்தோஷத்துடனே யெழுந்து கோயிலுக்குள்ளே போய்ப் பர்முசுக்குத் தீபதூபங்காட்டிக் கும்பிட்டுவிழப்போனான். அப்போது இபுலீசு லகுனத்துல்லா புத்துடையவாயில் நெருப்புப்புகை பறக்கும்படியாய்க் கண்களைவிழித்து ஆராபாரத்துடனே இடியிடித்து விழுந்ததுபோற் கெர்ச்சித்து என்னுடைய கூட்டங்களே! உங்களுடைய மனம் பாழாகப் போய்விட்டதே, உங்களுக்குக்கேடும், அலைவும், வலைவும், வந்து தொடுத்துக்கொண்டதே, யுங்களுக்கு நாசம்வந்து பிடித்துக்கொண்டதே, யுங்களிடத்திற் பெரியபுலவனென்று வந்தானே யந்தக்கிழவனை நீங்கள் ஆரென்றிறந்தீர்கள் ? அவன் மாயமுகம்மதுடைய தண்டற்காரனை அம்றிபுனுவுமையத்துல் லமீரியல்லவா? அந்த அம்றுக்கிழவன் முகம்மதுடைய குபாடத்தைப் பூட்டிவைக்குகிற தலைவனாச்சுதே அவனுக்கு அனேக ஜாலங்களெல்லாந் தெரியுமே அவன்ஒருநாழிகையாவது குபாடத்தை

விட்டிருக்கமாட்டானே அவனெத்தனையோ இராஜாக்களை யெத்திக் கொன்றுபோட்டவனாச்சுதே, இராஜாக்களுடைய குதிரைகளையனே கந்திருடித்திருடி விற்றவனாச்சுதே, அவனைப்பெரியமனுடனென்று நீங்கள் நம்பினீர்களே, யதனாலே சுந்தலத்தைமாறுட்டமாகக்கொண்டு போய் இன்னஇடத்தில் வெட்டிப்போட்டு அவனுடையவுடைமைகளை யும், இரத்தினமாலைகளையு, முத்துமாலைகளையுமெடுத்துக்கொண்டுபோ கிறானேயென்று சொன்னான்.

இவ்விதம்பர்ருசென்னும்புத்துஹார்ன் சொன்னசொற்களைக்கே ட்டவுடனே, இறவுசுல்கூல் தனக்குமேலிட்ட கோபத்தோடு தன் மேலிருந்தசட்டைகளைத், துப்பட்டாவைத் தும்பு தும்பாக்கிறிக் கிழித்தெறிந்தான்; தொப்பியைக்கிழித்தெறிந்தான்; தாடி யுரோ மத்தை யிழுத்துப் பிய்த்துப்பிய்த்தெறிந்தான்; கீழே திடீலென்று விழுந்து தலையிலும், வாயிலும்மண்ணையள்ளிப் போட்டுக்கொண்டுரு ண்டான், புரண்டான், கூகூவென்றுகத்தினான், அதுகண்டு, அவனு டையஜனங்களெல்லாங் கிட்டமுடுகிவந்து இஃதென்னகாரணமென் னவென்று வியாகூலத்தோடு கேட்டுநின்று சஞ்சலித்தார்கள், சுத்த வீரியர்களெல்லா முருவியகத்தியுடனே வந்துகூடினார்கள் அப்போது கீழேகிடந்த இறசுல்கூலெழுந்து ஒரு குதிரையின்மே லேறிக்கொ ண்டு மகாவிரைவாக வுக்காசு மந்திரியிடத்தி லோடிவந்து, ஒகே, பாவி யுக்காசேயென் றழைத்தான். அதுகேட்டு, உக்காசுமந்திரி மனம் பயந்து கால்கை நடுக்கத்துடனே வந்தான், வந்தவுக்காசை இறவுசுல் கூல்பார்த்து, ஒகே, உக்காசே நீநல்லமனுடன், புலவனென்றுகொண் டுவந்துவிட்டாயே, அந்தக்கிழவன் செய்த மாறுட்டங்களெல்லாம் கைமெய்யாக நமதுநாயகன் பர்ருசு சொல்லிப்போட்டாரே, என் மகன் சுந்தலத்தையல்லோ இன்ன இடத்திலே வெட்டிப்போட்டா னாம். என்னீரற்கருகிறதே எடாபாவி, நீ கொண்டுவந்து விட்டதினா லல்லோ; இப்பேர்க்கொத்த மடிப்புவந்தது, இல்லாமற்போனால் வா மாட்டாதே ஒகே, உக்காசே நீஇந்த தட்சணமேபோய் அந்தக்கிழ வனைப்பிடித்து என்கையிற் கொண்டுவந்து தாராமலிருப்பாயே யானா லுன்னை நான்வெட்டிப் போடுவேனென்று சொன்னான்.

அதுகேட்டு, உக்காசு மிக்வும் நெஞ்சமஞ்சி இறவுசுல்கூலைப் பார்த்து இராஜாவே தேவரீர் தங்கள் வியாகூலத்தை நீக்கிப்பொறு மை செய்யுங்கள், பர்ருசின்மேலே சத்தியமாக, அந்தப் பாவிப்பய

உங்களின் மூத்தமகன் சுந்தலத்தை மெய்யாகவெட்டியிருப்பானுகில் நான்போய் விழுந்து அவனையும்வெட்டி அவனேடும் வந்திருக்கிற அலியையும்மற்றஜனங்களையும் வெட்டி நாசமாக்கிப்போடுவேனென்றுசொல்லி,உடனெ ஆயிரங்குதிரை வீரர்களைக்கூட்டிக்கொண்டு அம்றிபுனு வுமையத்துல் லமீரியையும், அலிறலியல்லாகு அன்கவர்களையும்,மற்ற அசுஹாபிமார்களையுந் தேடிப்புறப்பட்டான் இதுநிற்க,

முற்பட அம்றிபுனு வுமையத்துல்லமீரியென்பவர் சுந்தலத்தை வெட்டிப்போட்டு, அவனுடைய அஸ்திரகடகம், மோகனமாலை சரப்பளிமாலை, முத்துமாலை, இரத்தினமாலை, தங்கஅரைஞான், நவரத்தினம்பதித்த கிரீடம், வாளாயுதம், தண்டாயுத முதலிய சமஸ்தமுமெடுத்துக்கொண்டு, அலிறலியல்லாகு அன்கவர்களிருக்கிற இடத்தைநாடி வரும்போது, அவருடையமனதில் நாமிராவெல்லாம் நடந்து பொழுதுவிடிந்தபிறகு வெகுதூரம்வந்துவிட்டோமினியொருபயமுமில்லைக் கொஞ்சம் நித்திரைச்சடைவைத் தீர்த்துக்கொண்டு போகலாமென்று நினைத்துப் பாதையைவிட்டுச் சற்றேவிலகி யோரிடத்திற் போய்ப்படுத்தார். அல்லாகுத்தஆலா எல்லாமறிந்தவனுதலால் அவனருளினு லம்றிபுனுவுமையத்துல்லமீரி கண்களில் நித்திரைவாராமலிருந்து, அப்போதிவர், என்னகாரியத்திற்காக நாம்இங்கே சுணங்குகிறேம் சீக்கிரம் அலிறலியல்லாகு அன்கவர்களிடம் போய்ச்சேர்வோமென்று பாதையைநோக்கி வரும்போது, இவருக்கு முன்னுல் மேகம்போலே தூசிவெளியெல்லாம்படர்ந்து வருவதோடு குதிரைக்குளம்படி தரையிற்படுஞ் சத்தமுந் தடதடென்று கேட்டார். அதனுலே கொஞ்சமுகத்தை திரும்பிப்பார்க்கும்போது, அங்கே ஆயிரங்குதிரைக்காரர்கள் முன்னிலையாகவும், அதனேடு, மகாவேகமாக வுக்காசுமந்திரியும்வரக்கண்டு திடுக்கிட்டு (வலாஹௌலவலாக்கூவத்த இல்லாபில்லாகில் லலீயுல்லலீம்) என்னுமிந்தக் கைசேதவாக்கியத்தைச் சொல்லி ஆண்டவனைநினைத்து அவனிடத்திலடைக்கலந் தேடிக்கொண்டு நெஞ்சைத்தைரியப்படுத்தி நிற்கும்போது, முன்பாகவந்த வுக்காசுமந்திரிஅம்றிபுனு வுமையத்துல்லமீரியைக் கண்டான். கண்டவுடனே தன் குதிரையை விட்டுக்கீழிறங்கி அம்றிபுனு வுமையத்துல் லமீரியைப்பார்த்து, எதடா கெட்டுப்போன கிழவா நீயெங்களை மடிப்புச்செய்துபோட்டு, எங்கள் இராஜாவுடைய மகன் சுந்தலத்தைக் கொண்டு

வந்து வெட்டிப்போட்டாயே; இப்போதுன்னுடைய மாறுபாடானதையெல்லாம்எங்கள்நாயன் பர்ருசுவெளியாக்கித்தந்தாரே, நீபுலவனென்று சொன்னையே, புலவனுக் கிந்தகெடுதி யெங்கேயிருந்துவந்தது? கிழவா நீயெங்கள் கையைவிட்டு மெங்கே தப்பிப்போறாய்? உன்னை நாங்கள் போகவிடுவோமோ? விடமாட்டோம், இப்போதுனக்கு வந்து பிடித்திருக்கிற கிருப்தாரியைப் பார்த்துக்கொள்ளென்று கிட்டநெருங்கிவந்தான்.

அப்போது, மற்றச் சுத்தவீரியர்களுங்கிட்ட அடுத்தாப்போற் குதிரைகளோடும் வந்து வளைந்தார்கள். அதுகண்டு, அம்றிபுனுவுமையத்துல்லமீரி, இனி இங்கே நிற்பதிற் காரியமில்லை யிரண்டிலொன்று பார்ப்போமென்றெண்ணி வாயுவேகவோட்டம்பிடித்தார். அதுகண்டு, அந்த ஆயிரங் குதிரைவீரியர்களு மந்திரியும் பின்னாலே துரத்திக்கொண்டுபோய்ப் பொழுதுசாய்ந்த நேரமான அசறுமட்டு மோடியும் அம்றிபுனுவுமையத்துல்லமீரியைப்பிடிக்க ஏலாமல், ஓடியவோட்டத்தாலே குதிரைக்கால்களெல்லாம் நடையயர்ந்துபோயின, ஆனால், உக்காசுடைய படைஞர் மடையர்களாய் வாயைச்சப்பிக் கையை நொடித்துக்கொண்டு நின்றார்கள். அதுகண்டு, அம்றிபுனு வுமையத்துல்லமீரியானவர் அவர்களைப் பயல்களே கிழவனைப் பார்த்தீர்களாவென் றிகழ்ச்சிசெய்துகொண்டு மிகுதூரமறைய வோடிப்போய், ஓர்மலையடிவாரத்திலிருக்கும்போது, அவரையொருகுதிரைவீரியன் வந்தெதிர்த்தான், அவனை அம்றிபுனுவுமையத்துல்லமீரி தமது கையிலிருந்த சுந்தலத்துடைய தண்டாயுதத்தைக்கொண்டு மொரேயடியடித்தார். அந்த அடியவன் தலையிலும், முகத்திலும்பட்டுக் குதிரையில் நின்றுங்கீழேவிழுந்து செத்துநரகமடைந்தான்.

அதுகண்டு, அம்றிபுனு வுமையத்துல்லமீரி சந்தோஷமாய்மலையின்மேலேபோய் அதினுச்சியிலேறினார், ஏறினாலுமென்ன, சரீரவருத்தமுங், கால்வருத்தமும் பொறுக்கக்கூடாமலிருந்தன. அதனால், அம்றிபுனுவுமையத்துல்லமீரி தம்மனதிலெண்ணினார், நாமோ இந்த இடத்திலே தனித்தவனாக அகப்பட்டுக்கொண்டோம், ஆனதால், மவுத்தாகிப் போவதிலே யாதாமொரு சந்தேகமுமில்லையென்று

தியக்கமாகி வாய்விட்டு என்னுடைய அசுஹாபிமார்களே, நானுங்களைவிட்டுப் பிரிகிற நேரம்வந்து முடுகிக்கொண்டதே, என்னை மவுத்துவந்து சுற்றி வளைந்துகொண்டதே, நானெந்தவிதத்திலுந் தப்பிக்கொள்ள இடமில்லையே ஆதலால், நான் மவுத்தாக முன்னர் நீங்கள் வந்தீர்களானால் நான்செய்த காரியத்தை யெல்லாஞ்சொல்லி யாறிப் பின்னர், மவுத்தாய்ப்போனாலுங் குற்றமில்லையேயென்று புலம்பிக் கொண்டிருக்கும்போது, அந்தக் காபிரீன்களாகிய ஆயிரங்குதிரைக் காரரும், உக்காசுமந்திரியும் அவ்விடத்திலே வந்துசேர்ந்து மலையுச்சியிலிருக்கிற அம்றிபுனு வுமையத்துல் லமீரியைக்கண்டு ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டதாவது, இந்தக்கிழவன் ஷைத்தானே தவிர வேறில்லை. ஒருவேளை பிசாசாக இருக்கவும்போது,அல்லது ஜின்னாக இருக்கவும் போதுமென்று சொல்லி மலையின்மேலேற ஆரம்பித்தார்கள். அதுகண்டு, அம்றிபுனுவுமையத்துல் லமீரி மலையுச்சத்தைவிட்டு மொருபக்கமாகக், கீழே இறங்கினார், அந்த வழியெல்லாமுட்பொருந்திய வேலமரமானதாலே, கீழே பாய்விரித்ததுபோல் முட்களாகவே யிருந்தன, அதனால் அதில் நடக்கக்கூடாமல் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும்போதில்.

உக்காசு மந்திரி அந்தப்பக்கமாக அம்றிபுனு வுமையத்துல் லமீரியை யடுக்கப்போய்நின்று அவரை யேறிட்டுப்பார்த்து, எதடா, கெட்டுப்போனகிழவா, நேற்றெல்லாங் கோலைக்கீழேயூன்றித் தள்ளாடித்தள்ளாடி நடக்கக்கூடாமல் விழுந்தாய், இன்றைக்கு நீநடக்கிற நடைக்குக் குதிரைகளாயிர மனவேகமாகவோடிவந்தும் பிடிக்கக் கூடவில்லையே, என்றாலும் உன்னை விடமாட்டேன், உலாத்து,உஸ்ஸா,குபலென்றதம்பிரான்கள் பேரிலாணையாகக் கிழவாவுன்னை யென்கைவாளாலே துண்டுதுண்டாக அரிந்துபோடுவேனென்று சொன்னான். அதுகேட்டுஅம்றிபுனுவுமையத்துல் லமீரி மனதிலெண்ணினார் ஓகோ. மோசம்வந்துசம்பவித்தது,இனியிவர்களை விட்டுத்தப்பவழியில்லையே, யென்னாண்டவனே எல்லாவஸ்துகளையும் படைத்திரணங்கொடுத்தூட்டி யுறக்காட்டியிரட்சிப்பவனே, என்வருத்தத்தையும் பெலக்கேட்டையும் நீயறிந்திருக்கிறாய், ஆதலாலுன்னைத்தவிர எனக்கொத்தாசை செய்கிறவர்கள் யாருமில்லையே, கிருபைசெய்கிறவருக்குங் கிருபைசெய்கிற றப்பில் ஆலமீனே, என்னை இரட்சித்துக்கொள் (யாதுயாதல், முஸ்த்தகில்

நீம், யாஅறுகமர்றாகிமீன்) என்றிந்த வாக்கியத்தையோதி, ஆண்டவனிடத்தில் அவர்கேட்குந் துஆமுடிய முன்னர், ஆரபாரத்துடனே பிடிபிடித்து வீழ்வதுபோலச் சத்தமிட்டுக்கொண்டு ஒருசுத்தவீரியன், ஷைத்தானுடைய கூட்டங்களே, றகுமானுடைய கூட்டம்வருகிறது, ஆதலாற், றலைசாட்டாமலோடிப்போய் பிழையுங்கள், அப்படியில்லாவிட்டால் நீங்களடங்கலும் வெட்டுண்டு நரகம்போய்ச் சேர்வீர்கள், என்னையறிவீர்களா, நானாகிறது பனீகாலிபுக் கிளையிலுள்ள ஆண்பிள்ளைச்சிங்கமாக்கும். எதிர்த்த அனேகம் சுத்தவீரர்களையும், இராஜாக்களையும்வெட்டி ஜெயங்கொண்ட அபீத்தாலிபுடைய மகன் அலியென்றறிந்து கொள்ளுங்களென்ற சொல்லோடு சத்துருக்கள் மேலேபாய்ந்து வீழ்ந்தொருகுதிரை வீரியனை வெட்டினார்கள்.

இன்னுமொரு சுத்தவீரியனைக் குதிரைமேல்நின்றுந் தூக்கியெறிந்தார்கள், இன்னுமொருவீரியனைக் குதிரைமேலிருந்து தூக்கிமற்றொருகுதிரை வீரியன்மேலடித்தார்கள், இன்னுமொரு வீரியனைக்குதிரை மேல்நின்று தூக்கி யிரண்டாகக்கிழித்தெறிந்தார்கள், இவ்விதம்ஐந்து சுத்தவீரியர்கள் செத்து நரகமடைந்தார்கள், அதுகண்டு,மற்றக்காபிரீன்கள் மிகவும்பயந்து இந்தசுத்தவீரியன் ஜின்னோ, தேவோவென்று சொல்லிக்கொண்டோடத் தொடங்கினார்கள். அப்போது, உக்காசுமந்திரி, ஆ! இஃதென்ன ஆச்சரியமாகவிருக்கிறது (நாமொன்றுநினைக்கத் தெய்வமொன்று நினைத்ததென்னும்) பழமொழிபோலிருக்கிறதேயென்றுபயந்து திகில்கொண்டு, ஓடிப்போகிற சுத்தவீரியர்களையெல்லாம் பார்த்து ஓகே! ஜனங்களே யுங்களுக்கென்ன கெடுதிவந்து பிடித்தது, உலாத்து,உஸ்ஸா,குபலென்கிறஇந்தமூன்று தெய்வங்களாணை திரும்புங்களென்று சத்தமிட்டான்.அதுகேட்டு, ஓடிப்போகிற சுத்தவீரர்கள், உக்காசுமந்திரி தெய்வங்கள் பேரிலிட்ட சத்தியத்திற்குப்பயந்தும் இராஜனிறவுசுல்கூலின் தண்டனைக்குப் பயந்தும் நாள்தோறும் வாங்கித்தின்ற அன்னத்தைநினைத்தும், திரும்பிவந்து யாவருமொன்றுபோல் நின்றார்கள், நின்றவர்களிலோர் சுத்தவீரியன் மிகுந்த பராக்கிரமத்துடனே வாளசைத்து அலிறலியல்லாகு அன்கவர்கள் முன்வந்து எதிர்த்துநின்று சண்டைசெய்தான்.

அந்தப்பாவியை, அலிறலியல்லாகு அனகவர்களோ பாய்ச்சற்பாய்ந்து பிடித்து, மற்றப்படைவீரர் யாவருங்கண்டு பயந்து திடுக்கி

ட்டேங்கும்படியாய்ச் சுழட்டி மேலேயறிந்து அவன் கீழேவிழும்போது தங்கள் கையிலிருந்தவாளாயுதத்தை அவனுக்குநேரேயேந்தினார்கள் அதிலவன் வந்துவிழுந்து இருபிளவாகப்பிளப்புண்டு இறந்து நகரஞ்சேர்ந்தான். அதுகண்டு, காபீரீன்களில் நின்று மலையைப்போற்பருத்துரத்தவுடலையுடைய முனாக்கிறென்பவன் மிகுகோபங்கொண்டு தீரத்துடனேதானேறிய குதிரையை வேகமாய் நடாத்திவருகிற வரத்திலேயே அலிறலியல்லாகு அன்கவர்களை வாளால்வீசினான். அந்தவீச்சை யலிறலியல்லாகு அன்கவர்கள்தங்கள் வாளினாலேதட்டிவிட்டு அவனைக்குதிரையின்மேல் நின்றும் வாரியெடுத்துவிளையாடும்பந்தைப் பூமியிலோங்கியடிப்பதுபோலே சுழட்டி யோங்கியடித்தார்கள். அவ்வடியினால், முனாக்கிறென்பவன் பாறைக்கல்லிலடிக்கும்உளுத்த விறகுக்கொம்புக்கொப்பாயொரு துண்டுமில்லாமற்றூளாய்நுறுங்கிநைந்துநரகமடைந்தான்.

அதுகண்டு, அங்குகடலைப்போல் நிற்கின்றகுபிர்ப்படைவீரர்யாவருமனமுட்கி, யணையையுடைத்துப்பாய்ந்து, பலவாறோடும் வெள்ளநீரைப்போலே பரந்தோடினார்கள். இவ்விதமோடுகிறதன்படைஞர்களை யுக்காசுமந்திரி கெஞ்சிக்கெஞ்சியழைத்துப் பயந்தோடாதீர்கள் வாருங்கள் நானுமந்த அலியும் செய்கிறசண்டையைக் கிட்டநின்று பாருங்களென்று சொல்லிப்படையணியைத் திருத்தமாக்கிவிட்டுப் பின்னர் தான்ஐந்துகதிகளையும், மூன்றுவேகங்களையுமுடைய குதிரையை மனவேகமாகத்துரத்தி விட்டுக்கொண்டுவந்து. அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து நான் எங்கள்இராஜா இறவுசல் கூனுடைய குமாரன் சுந்தலத்தைக்கொன்ற பழிக்குப்பழி யந்த அம்றுக்கிழவனைவாங்குவே னீர்வராதீர் அப்படிவந்தாலும்மையும் வெட்டிப்போடுவேனென்று சொன்னான், அதுகேட்டு அலிறலியல்லாகு அன்குகவர்களந்தவுக்காசைப்பார்த்து, எடா! பாதகா இனிநீபடப்போகிறபாட்டைப் பாரென்று குதிரையைத்தட்டிவிட்டுவாளைச்சுழட்டி வீசினார்கள், அந்தவுக்காசுமெதிர்த்துநின்று வாளைச்சுழட்டிவீசினான், இவ்வித மிரண்டுபேர்களுமேறிய குதிரைகளைச்சுலாவிட்டு நெருங்கிச்செய்யும்சண்டையிலே வாளேடுவாள்மோதுதலிலுண்டாகும் பிரகாச மின்னலைப்போலுஞ், சத்தமிடியைப்போலுமிருந்தான், அஃதன்றியும், குதிரைகளின் காலின்மிதியினால்பூமியிலிருந்தெழும்புகிறதூசியானது மேகம்போலேபடர்ந்து நான்குதிசைகளுஞ் செருமினது,

இவ்விதம்பார்த்தவர்கள் யாவருமதிசயிக்கும்படியாய்ச் சண்டைசெய் யும்போது, உக்காசுதன்குதிரையிளைப்பையறிந்து, இனிநாம்நின்றால் மோசமென்றோடிப்போய் ஓர்பெரியமரத்தின்புறத்தில் மறைந்துமரத் தோடு மொண்டிநின்றான்.

அதுகண்டு, அலிறலியல்லாகு அன்கவர்கள் கடுங்கோபங்கொண் டு வாளாயுதத்தினால் அந்தமரத்தையோங்கி யொருவெட்டு வெட்டி னார்கள் அதனால் மரத்தோடு முக்காசும்வெட்டுண்டு இரண்டுதுண் டாகி இறந்து நரகமடைந்தான், இவ்விதமாமும், உக்காசுமந்திரியும் அலிறலியல்லாகு அன்கவர்களினொருவெட்டி விருதுண்டாகப்பிள ந்துஇறந்துவிழக்கண்ட காபிரீன்கள் யாவரும்பயந்து கோனில்லாத கிடையாடுகள் பிரிந்தோடுவதுபோலோடினார்கள். இவ்விதம் சத் துருக்களோடிப்போன பின்னர் அம்றிபுனுவுமையத்துல் லமீரிதாம் நிற்குமிடத்தைவிட்டு மிறங்கிவந்து அலிறலியல்லாகு அன்கவர்களின் பாதகமலங்களில் விழ்ந்துமுத்திமுகந்தெழுந்து போற்றிப்புகழ்ந்து அவர்களைப்பார்த்துத் தேவரீர் தாங்களிதுமட்டில் வராதிருக்கிலென் னுயிர் மீளாது மீளாதென்று, தம்மால்நடந்தகாரிய மனைத்தையுமாதி யோடந்தமாகச்சொல்லி இத்தருணமறிந்து தேவரீர் தாங்கள்வந்த துமகாகாரணமாக இருக்கின்றதே. இவ்விதம் தாங்கள்நின்றுப்போ லேநினைத்தவடங்கு முன்னே வந்தகாரணமென்னவென்று கேட் டார், அதற்கு அலிறலியல்லாகு அன்கவர்கள் அம்றிபுனுவுமையத் துல்லமீரியைப்பார்த்து, ஏகே அம்றே! நீர்இரவுசுல்கூலுடைய மகன் சுந்தலத்தைக் கூட்டிக்கொண்டுவந்து வெட்டிப்போட்டஅன்றிராத் திரி யென்னித்திரையில் நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்கள் கனவில்வந்து ஹாலிருகி, அம்றுவழியிலே காபிரீன் கள்படையி லகப்பட்டுக் கொண்டு வருத்தப்படுகிறார், ஆதலால், யா அலியே நீர்போமென் றெனக்குச்சொல்லிய வுத்தரவினால் நான்வந் தேன். வந்ததில்,

அல்லாகுத்தஆலா நபிநாயகத்தின் பொருட்டால் வழியினீட்சி யைச் சுருக்கமாக்கித் தந்தானென்றுசொல்லி, யுடனே மரத்தோடு வெட்டுண்டிருந்த மந்திரி யுக்காசுஅணிந்திருந்த, ஆபரணதி, முத்து மாலை, இரத்தினமாலை, வாட்கத்தி, குதிரைமுதலிய சகலவஸ்துகளை யுமெடுத்துக் கொண்டு, மற்ற அசுஹாபிமார்களிருக்குந்தானத்திற்கு வந்தார்கள். அதுகண்டு அவ்வசுஹாபிமார்க ளெதிர்கொண்டு வந்து

அலிறலியல்லாகு அன்கவர்களையும், அம்றிபுனுவுமையத்துல் லமீரியையும் நெஞ்சோடு நெஞ்சணைத்துக்கட்டித்தழுவி மனமகிழ்ந்தார்கள். அப்போது அலிறலியல்லாகு அன்கவர்களும், அம்றிபுனுவுமையத்துல்லமீரியும் தங்களால் நடந்த வரலாறுகளனைத்தையுமவர்களுக்குச்சொல்லி, யன்றைய இராவுகாலங்கழித்துச் சூரியோதயத்திற்கு முன்னெழுந்தருளியாகி, அல்லாகுத்த ஆலாவைத்தொழுதுபின்னர், தசுபீகு, தக்குலீச்சத்தம் கடற்போல்முழங்க அவ்விடத்தைவிட்டெழுந்து குதிரைகளின்பேரிலே சவாராகிப், பூமியிலுள்ள சத்துருக்கள்பயந்து கெடிகலங்க வேதவாக்கியச்சத்தமெவ்விடமுந்தொனிக்க, வெற்றிமாலைகள் புயத்திற்கிடந்து புரண்டசைந்து வாசனைகமழ, ஆரபாரத்துடனே குதிரைகள் கனைத்துப்பந்தைப்போற்குதித்துநடக்கக், கவரி வெண்சாமரம் வீசிவர, விருதினங்கள் சூழ்ந்துவர, வெற்றிக்கொடி சுற்றிலும்படர்ந்துவர வீரமுரசங் கணகணென்றடித்துவர, அலிறலியல்லாகு அன்கவர்கள் முன்னுமற்றப்படைஞர்கள் பின்னுமாக நடந்துபோனார்கள்.

இவ்வித மும்மதம்பொழியு மதர்த்தயானைகளை நிகர்த்த குதிரைப்பதாதிகள் சூழக், கொடிகுடைக ளொன்றோடொன்றாஞ்சக்கடலிரைச்சலாகப்படை நடந்துபோகும்வழியில் வாதில்சுகுறுவென்னும் இறவுசல்கூல் ஊரெல்லைகையையடுக்க நல்லதண்ணீர்த் தடாகங்களும், பூமரச்சோலைகளுஞ், சுற்றிலும்பிரமாண்டமாய் வானத்தையளாவியமலைகளும் விஸ்தீர்ணமாகிய இடங்களு மிருக்கக்கண்டு, அலிறலியல்லாகு அன்கவர்கள், இவ்விடந்தான், கத்திசுழட்டி வீசுவதற்குஞ், சண்டைசெய்வதற்குந் தகுதியான இடமென்றெண்ணிமகிழ்ந்து அவ்விடத்திலே படைஞர்யாவரையும் விடுதிவிடும்படியாயுத்திரவுசெய்து, தாங்களுந் குதிரையை விட்டுக்கீழிறங்கிக் கூடாரமுங், குதிரைப்பந்திகளும், மமைக்கச்செய்து, அசுஹாபிமார்களைப்பார்த்துச், சத்துருக்களாகிய காபிரீன்கள் படைகொண்டுவந்து இந்தவிடத்திலே தாணையஞ்செய்வார்களென் றோரிடத்தைபு மிலகாகச்சுட்டிக்காட்டினார்கள், அந்தத்தரையையறியவேண்டுமென்றும் தாங்களிருந்து சண்டைசெய்ய நல்ல இடங்கிடைத்ததென்று அசுஹாபிமார்கள் மிகவுஞ் சந்தோஷங்கொண்டவர்களாய் இருந்தார்கள் இதுநிற்க,

முன்னர், அலிறலியல்லாகு அன்கவர்கள் மந்திரி யுக்காசைவெட்டிப்பிளந்த திறமைகண்டஞ்சிப் பயந்தோடிய சத்துருக்கள்

இறவுசுல்கூலுடைய முகதாவிற்போய்ச்சொல்லி யேழுகடற்போலே படைகளை அழைத்துவந்து சண்டைசெய்யவேண்டுமென்ற ஆவலோடும்போனவர்கள் மனதில், இப்போது நாம் ஆயிரங்குதிரைச் சுத்தவீரியர்களாயிருந்தும். அலியென்கிற ஒரு குதிரைவீரியனுக்கு அஞ்சிப்பயந்துவந்த கம்மினாட்டிகளாச்சுதே, ஆதலால், இராஜா இறவுசல்கூலிடத்தி லென்னவிதமாக முகங்காட்டுகிறதென்ற வெட்கம் பெரிதாகிஇராஜசபையிற் செல்லாதுநாணங்கொண்டிருந்தார்கள்.

அஃதறிந்து இறவுசுல்கூல் முறிந்துவந்ததம்படைஞருக்கெதிரிலேபோய், ஒகே, படைவீரியரே என்னருமைமகன் சுந்தலத்தைக் கொலைபாதகஞ்செய்த அம்றுக்கிழவனுடையகாரிய மென்னவென்று கடூரமாகக்கேட்டான், அக்கேள்வியினதிர்ச்சியினாலே படைவீரர்பயந்து கெடிகலங்கிப் புலிவாய்க்குத்தப்பிவந்தமான் கூட்டமானது, வடவாமுகாக்கினியில்வந்து விழுந்ததையொப்பாய்நின்று, இறவுசுல்கூலைப்பார்த்து ஆயிரங்குதிரை வீரியர்களானயாங்களும், உக்காசுமந்திரியும், அதிவேகத்துடனேபோய் அந்த அம்றுக்கிழவனைக்கண்டு வெட்ட நெருங்குந்தருணத்தில், அங்கிருந்து பதினாறடிவேங்கைப் புலியைப்போலோர்சுத்தவீரியன் வந்து நமதுபடைகளெல்லாம் அதமாகும்படி, தன்குதிரையை அக்கினிவேகமாகநடாத்தினான். அவனாரெனில், அலியென்பவன், அவனிப்படிவந்ததைக்கண்டு, நமதுமந்திரி யுக்காசுந்தமது குதிரையை வாயுவேகமனோவேகமாகச் சாரிபிட்டுக்கொண்டுபோயெதிர்த் திரண்டுபேர்களும் நெருங்கி, வாளினாலே வலமிடந்திரும்பத்திரும்பி வெட்டுந்தட்டுமாகச் சண்டைசெய்யும்போது, நமதுமந்திரி யோர்பெரியமரத்தையொட்டிமறைந்தார். அது கண்டு அவ்வலியென்பவன் பாய்ந்து, மரமு மந்திரியு மொன்றாயறுபடும்படியாய் ஒருவெட்டுவெட்டித் துண்டாக்கிப்போட்டான், அது கண்டு நாங்கள்பயந்து தேவரீர்தங்களிடத்தில் விண்ணபஞ்செய்ய வந்தோமென்று சொன்னார்கள்.

உக்காசு வதைச்சருக்க - முற்றிற்று

# முகல்கீல்போருக்கெழுந்த சருக்கம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

வரிசைநபிநங் நபினாரின் மருகராலியார் தம்முடனே
கரிசு நிறைந்த மனத்துடைய கயவன் றவுசுல் கூல்தீனதுள்
ளுருசின் மகிழ்ந்த மகன்முகில்கீ லுத்தி யெனவேபடைகொணர்ந்து
நெரிச லுடனே சமர்விளைத்த நேர்மை யெவையு நிகழ்த்திடுவாம்.

## இதன் பொருள்.

வரிசையாகிய நமது நாயகம் நபிநபினார் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் மருமகரான அலிறலியல்லாகு அன்கவர்களுடனே, குற்றங்கள்யாவும் நிறைந்திருக்கு மனத்தையும், கீழ்மைத்தன்மையையும் பொருந்திய இறவுசுல்கூலென்பவன் தன்னுள்ளத்தில் மிகவு முகுசியுற்ற மகனை முகல்கீலென்பவன் கடலைப்போற் பெரிய படையைக் கொண்டுவந்து நெருக்கமாகச் செய்யுகின்ற சண்டையின் செய்திகள் யாவையுஞ் சொல்லுகின்றோம்.

## சரித்திர வசனம்.

அலிறலியல்லாஹு அன்கவர்களின் வெட்டுக்குப்பயந்து தோற்றிரிந்தோடிவந்த சத்துருக்கள்சொன்ன சொற்களைக்கேட்டு இறவுசுல் கூல், கோடைகாலத்தி லிடிக்கு மிடியைப்போ லலறிச்சத்தமிட்டு, அந்தப்படைஞர் பயந்து தண்ணீர் நெஞ்சில்வடிய அழும்படியாக அவர்களைப்பார்த்து, ஓகே, படையோர்களே யுங்களுக்கொல்லாம்பாறு சென்ற தம்பிரானுடையகோபமுண்டாய் விட்டதென்று சொன்னான், அதுகேட்டுப் படைஞர் இறவுசுல்கூலுடைய சொல்லென்னு நெருப்புத் தங்களைச் சுட்டதினால் உளமாந் தளிரைப்போல் வாடிவதங்கி நின்றார்கள், அப்போது, இறவுசுல்கூல், தன்மகன் முகல் கீலென்பவனை யழைத்து நம்முடைய நாயன் பாறுசுடைய கிருபையினால், நானனுப்புகிற படைகளுக்கு நீ தலைமையாகப்போய் அந்த அலியுடனே யுத்தஞ்செய்யவேண்டும், மேலுமங்கு சண்டையில் நடக்கிறவிதங்களை நன்றாயறிந்து, அன்றன்று டெனக்குத் தெரிவிக்கவேண்டுமென்றுஞ் சொல்லித் தன்படைகளிலே திறத்தவர்களாக இருபதினாயிரஞ் சுத்த வீரியர்களைத் தெரிந்தெடுத்து அவர்களைப்பார்த்து, ஓகே, சுத்தவீரி

யர்களே நீங்கள் சிங்கத்துக்கொப்பாகிய என் மகன் முகல்கீலுடனே யுத்தப்பிரசன்னராக ஆயுதபாணிகளணிந்துகொண்டு போங்களென்று சொன்ஞன்.

அதுகேட்டுடனே, படைஞரெல்லாம், யுத்தவுடையுடுத்தி, வாளாயுதம், வேலாயுதம், வில்லாயுத முதலிய மற்ற ஆயுதங்களுமணிந்து, குடை, கொடி, விசிறி, வெண்சாமரம், ஆலவட்டம், பீலிக்குஞ்ச முதலிய விருதினங்களுடனே, இரட்டக்கடிவாளம் பூட்டிக் கல்லணையிட்ட திறத்த இருக்கு தேசத்துக் குதிரைகளின்பேரில் சவாரகிப் பேரிகைநவுரி- சின்னங் காகளங்-துந்துமி-டக்கா-டங்கா-எக்காளம்-பூரி-முருடு-பம்பை-சச்சரி-கொம்பு-குழல்-தம்பூரு முதலிய வாத்தியங்கள் கணகணென்று கடலைப்போல் முழங்க, மலைகளில் வாசஞ்செய்யு மிருகஜாதினங்கள் கலைந்தோட, பூமியிலெழிந்தூசி பொழுதைமறைக்க மேடுபள்ளமாகப், பள்ளமேடாகத் தாம்தாமென்று மார்புகளைத் தட்டியும், மீசைகளை முறுக்கியும், வீரவார்த்தை பேசிக்கொண்டு முகல்கீல் முன்னிலையாக நடந்துவந்து அலிறலியல்லாஹுு அன்கவர்கள் சேனையிறங்கியிருக்குந் தலத்திற்கடுக்க வோரிடத்திற் பெரியவெள்ளி மலைகளைப்போலே கூடாரங்களுமடித்துக் குதிரைபந்தியுமுண்டாக்கிக், கடைவீதியுமமைத்திருந்தான், அதின்பின்னர்.

முகல்கீலென்ற தலைவன் அலிறலியல்லாஹுு அன்கவர்கள்படைத்தகுதியென்னவிதமாயிருக்கிறதென் றுளவாளிகளைவிட்டு உளவறிந்தான், அதுபோல், அலிறலியல்லாஹுு அன்கவர்களு முகல்கீலுடைய்தகுதியென்னவிதமாயிருக்கிறதென் றுளவாளிகளைவிட்டுளவறிந்தார்கள், இப்படிஇருக்கச்சே, முகல்கீலென்பவன் அலிறலியல்லாகு அன்கவர்களுடைய படைக்கூட்டங் கொஞ்சந்தானென்றறிந்து, தன்மனதிலிந்தச் சிறியபடைக்கூட்டத்தைக்கொண்டும் அலிநம்மோடுமென்ன சண்டைசெய்து வெற்றிபெருவார். நமது படைகளோ பெருங்கூட்டமாயிருக்கின்றதாதலால், நமக்கவரீடு ஜோடில்லைஎன்று பெருமகிழ்ச்சிகொண்டுமுன்னர், உக்காசுடனேவந்தபடைஞரைப்பார்த்துக் கோபங்கொண்டு இவ்வளவுகொஞ்சப்படைகளுக்குத் தோற்றுப்போயல்லவா வந்தீர்கள்? ஆதலாலுங்களுக்கு நமதுநாயன் பர்ருசுடையமுனிவும், வெறுப்புமுண்டாய் விட்டதென்று மிகவுமிகழ்ச்சியாகியவார்த்தைகள் சொல்லித், தன்னுடன்வந்த சகலபடைஞரையும்பார்த்து, ஒகேசுத்த விரியர்களே இடியைப்போற்கனைப்பையுடைய குதிரைகளும், கருமலை

யைப்போலுள்ள யானைகளும், அஷ்டகிரியைப்போலுள்ள தேர்களுங் கடலைப்போலுள்ளகாலாட்களுமாகிய இரதகஜதுரகபதாதிகளனேகங் கள் நம்மோடும் வந்தெதிர்த்தாலும் அதற்காகப்பயந்து நெஞ்சத்திற் கொஞ்சமேனுமஞ்சி அதயிரியங்கொள்ளக் கூடாதென் றவர்களுக்கு வெகுமதியுங்கொடுத்துறுதி சொல்லிப் படைகளைச் சதுரங்கமாக்கிக். குதிரைப் படைமுன்னாலும், காலாட்படை பின்னாலும் நிற்கச்செய்து இரத்தின கிரீடமும். வயிரகடகமும்,) தங்க அரைஞாணும், பொற்சரிகை அங்கியும் பூண்டு, புட்பமாலை, முத்துமாலை, தரித்து, இரத்தினச் சோடனை செய்த பஞ்சகல்யாணிக் குதிரைமேலேறிப் பளபளத்த வாளாயுத முதலிய ஆயுதந்தாங்கி விருதினங்கள்சூழ வாத்தியங்கள் முழங்கப் படையினடுவில் நின்றான்.

இவ்விதம் காபிரீன்களின் படைகள்நிற்கிறஆராபாரத்தைக்கண்டு அசுஹாபிமார்கள் மனத்தி லெண்ணமுற்றார்கள், இவ்வித மெண்ண முற்ற அசுஹாபிமார்கள் மனந்தேறுதலையாக, அலிறலியல்லாகுஅன்க வர்கள் வேதவாக்கியங்களை யோதிக்காட்டி, எனதுடற் பிறப்பாகிய தீனானவர்களே. முகம்மதுநபிசல்லல்லாகுஅலைகிவசல்லமவர்களுடைய அசுஹாபிமார்களே, தீனில்விசுலாமாகிய நாம், அல்லாகுத்தஆலாவு டையபடைகள், அக்காபிரீன்கள் ஷைத்தானுடைய படைகள் ஆதலா ல், நம்முடைய கூரியவாளைவிட்டு மவர்கள் தப்பமாட்டார்களென்று சொன்னார்கள், அதுகேட்டு, அசுஹாபிமார்கள் யாவரும், வாயுவேக மனவேகமுள்ள குதிரைகளில் யுத்தப்பிரசன்னராயேறினார்க ளப் போது, அலிறலியல்லாகு அன்கவர்களுந் தங்களுடைய துல்துலென் கிற குதிரைமேலேறிப் படைகளையணிசெய்து விருதினங்களுடனே, சூரியப்பிரகாசமான வாளாயுதமுதலான மற்றஆயுதங்கள் மின்வெட் டும்படியாகத், தக்குபீர்; தசுபிகு, தகுலீலு சலவாத்து முழக்கத்துட னே சத்துருக்களின் படைக்குமுன்னாலே வேங்கைப் புலிகளைப்போல் வீரதீர மாகப்போயெதிர்த்து நின்றார்கள்.

இவ்விதம்,முசிலிமானபடைகள் வந்தெதிர்த்து நிற்பதைக்கண்ட முகல்சீல் தன்படைஞர்கள் யாவரையும்பார்த்து, ஒகே, சுத்தவீரியர்க ளே, இந்த அலியுடைய படைகளடங்கலு மென்வாளுக்கே, இரையா வார்கள் பாருங்களென் றனேகதிட வார்த்தைகள்சொல்லி யவர்கள்

மனதைத்தேற்றித், தான் படையணியினது நடுவில்நின்முன். அப்போது அலிறலியல்லாகு அன்குதங்கள் கையிலிருந்தவெற்றிக்கொடியலேவிபுனு அப்பாசு றலியல்லாகு அன்கவர்கள் கையிற்கொடுத்துப் பிடிக்கச்சொன்னார்கள். அதுபோலவர்களுங் கொடியைவிரித்து அலிறலியல்லாகு அன்கவர்களேறிநிற்கிற குதிரைக்கு முன்னிலேபிடித்து நின்றார்கள். அதுகண்டு, சத்துருக்கள்பயந்து எதிரேறாமல் நின்றார்கள். அப்போது, அலிறலியல்லாகு அன்கவர்கள் அந்தக்காபிரீன்களைப் பார்த்து, ஆண்பிள்ளைச்சிங்கமான முகம்மதுநபி சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய படையை வெல்லலாமென்று வீணெண்ணங்கொண்டுவந்தார்களே, நீங்கள் நிற்குமிடத்தை விட்டுப்பெயர்ந்து இராஜாக்களாக என்னோடு சண்டைசெய்யவாருங்களென் றுரக்கக்கூவினார்கள். அதுகேட்டு முகல்கீல் தானேறிநிற்கிற குதிரையை வேகமாக நடாத்தி, அலிறலியல்லாகு அன்கவர்கள் முன்னிலேயில்வந்து நின்று அவர்களைப்பார்த்து ஒகே, சண்டைக்கழைத்த சுத்தவீரியனே, யுன் பெயர், குல மின்னதென்றெனக்குச் சொல்லென்றுகேட்டான்.

அதற் கலிறலியல்லாகு அன்கவர்கள் அவனைப்பார்த்து, ஒகே சுத்தவீரியனே, நானுகிறது .கனம்பொருந்திய பனிகாலிபுக்கினாபி லுள்ளபுலி, நெருப்புப்பொரிபறக்குங் கூரியவாளினலே சண்டைக்களத்திலெதிர்த்த சத்துருக்களான இராஜாக்கள் தலையைப் பிளந்து மூளையை யுறிஞ்சுகின்ற சிங்கம்-கைபறு-பதுறு-தபூக்கு,குனைன், தாத்துஸ்ஸிருஜில் இப்போர்க்கொத்த இடங்களிலெல்லா மிருந்தபடைகளைவெட்டி ஜெயங்கொண்ட அலியென்றுசொன்னார்கள், அதுகேட்டு, முகல்கில் அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து, நீரிங்கே யென்னகாரியத்தை நாடிவந்தீ ரென்றுகேட்டான். அதற்கலிறலியல்லாகு அன்கவர்கள் முகல்கீலேப்பார்த்து மரம் கல்லுகளை யுருவாக்கிவைத்திருக்கும் புத்துகளையுடைத்து நொறுக்கிவிட்டு அப்புத்தைத் தெய்வமென்று வணங்குகிற காபிரீன்களைத்திருப்பி யவர்கள் நெஞ்சத்தில் வேதபாகையூட்டித் தீனில் விசுலாமார்க்கத்திலாக்கவும், எதிர்த்த பகைவராகிய இராஜாக்க ளுயிரைப்போக்கவும், அல்லாகுத்தஆலாவென்ற ஆண்டவனின்றூதர் நபிநாயகமவர்களி னுத்தாரப்படி வந்தேனென்று சொன்னார்கள். அதுகேட்டு, முகல்கீலென்பவன் அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து, ஒகே,அலியே,நீர் தலைமயங்கித்தன்னைப் பொருமையாகப்பேசினதுசரியான புகழல்லையென்று, வேங்கைப்புலியிட்ட சத்தத்

திற்கெதிரே நரி யூளையிட்டதுபோலே தன்மையும் பெருமையாகச்
சொல்ல ஆரம்பித்தான் அஃதெதன்னெனில்,

நானாகிறவன் சத்துருக்களையும், அவர்கள்கிளைகளையுஞ்சண்டை
க்களத்தில்வெட்டி யவர்களுடையபெண்டுகளை வெள்ளப்புடவை யு
டுத்தச்செய்துசிறைகொண்டுபோகு மகாரிக்குடைய மகனானவன், உ
ம்முடைய துணையானசுபைறிபுனு ஹவ்வாமைநிதநிதமடித்துச்சிறை
யிலிட்டிருப்பது தெரியுமா, சூரவீரம்பொருந்திய வாளாயுதத்தையு
டைய இராஜாக்களின் கிரீடங்களையுடைத்துத்தகர்த்து உயிரையுறிஞ்
சும் வாளையுடைய முகல்சிலாக்குட், ஆதலால், நானிப்போதுசொல்லி
யபடி நீரும் ஆகுமுன்னே தப்பித்துக்கொண்டு உமது நபியிடத்திற்
போய்ச்சேர்வது நன்றாயிருக்கும். இன்னும் புலவனென்று பொய்பே
சிவந்த பாதகனான அம்றுக்கிழவன்; என்னுயுர்ப்பிறவி சுந்தலத்தை த
மாயமாகக்கொலை செய்தபடியால், அந்தக்கிழவனை யெவ்விதத்திலே
னும் பிடித்துச் சதையைவகிர்த்து நாய்நரி தின்னப்போடுவது, நிசம்.
மிசிக்கீனாகிய முகம்மது தரித்திரியத்தை யுடையவராயிருந்து, உயர்
ந்தகுலத்திலுள்ள குவைலிதுடையமகள் கதீஜாவைக் கலியாணஞ்
செய்ததின்பேரில் அந்தப்பெண்ணாலே கிடைத்தபணங்களைக்கொண்
டும் வாழ்கிறாரென்று கேட்டோமே அவருடைய காரியாகாரியங்
களை நிசமாகநீர் சொல்லுமென்றான், அதுகேட்டு, அலிறவியல்லாகு
அன்கவர்கள் முகல்கிலைப்பார்த்து, வேங்கைப்புலியைப்போலே சீறி
வெவ்வியகோபத்துடனே பகுத்தறிவில்லாதவனே நான்சொல்வதை
நீநன்றாய்க்கேள், அந்தமுகம்மதாகிறவர்கள்.

அறிவினாலும், பெருமையாலும், அன்பாலுங், வெற்றியாலுங்
கொடுக்குங்குடையாலும், உயர்ந்தமேன்மையாலும், சொல்லுறுதி
யாலும், மாட்சிமையாலுங், தலைமையாலு மிகவுமுயர்ந்தவர்கள், மே
லும் ஹாஷிம்கிளையிலே யெனது சிறியதகப்பனாருடைய மகனாராகக்
காரணத்துடனே இந்தப்பூமியிலே பிரகாசமுள்ள கோடிசூரியனைப்
போல் வந்தவர்கள் மக்கிகளிலுள்ளவர்கள், எழுவானத்தையு மோ
சிரவையிலேகடந்து சொர்க்கமுதலிய சிறந்ததலங்களையுந்தெரிசித்து
அறுஷிலே பாதகபுசுடனே யேறிப்போய், அல்லாகுத்த ஆலாவு
டனே திருவசனம், பேசிவந்தார்கள், சந்திரனுடனும், புலியுடனும்,
மலையுடனும், முசலுடனும் யானையைவிழுங்கும் சகுலியென்ற மீனு
டனும், பாம்புடனும், மானுடனும், பசுவுடனும், ஒட்டகையுடனும்,

மாத்துடனும், யாவருங்கேட்க, எதிர்பேசிவந்தவர்கள். இன்னும் பாலைநிலத்திலே தகித்தவர்களுக்குக் கைவிரலாலே பூமியைக்கீறி யாற்றை யழைத்தவர்கள், காதகாதவழி கஸ்தூரிவாசனைவீசு மொளி பொருந்திய சரீரத்தையுடையவர்கள், இருபக்கத்திலும் வானவர்கள் காவலாக நிற்கப்பெற்றவர்கள் ஏழுவானத்தையு முருவிப்பாய்ந்து, அறுஷைத்தடவியதலையும், ஏழுபூமியையு முரிவிப்பாதாளந்தொட்ட பாதத்தையு முடையவர்கள், இன்னும், மேகக்குடையையுடையவர்கள் சரீரநிழற்சாயாதவர்கள், முன்கண்டதொலையளவு பின்னுந்தெரிகின்றவர்கள், ஈ, எறும்பு, புழு, பூச்சி யொட்டாததிரேகத்தையுடையவர்கள், ஜலமலம் பிறரறியாத மேன்மையுடையவர்கள் நாசிநீர் பல்லூற்றை காதுக்குறும்பி யிவைகளும், இவைகள்போலுள்ளனவு மில்லாதவர்களென்று நபிநாயகத்தின்காரண மனைத்தையு மின்பமாகச் சொன்னார்கள்.

அதுகேட்டுப் பாவிப்பயல் முகல்கீல் அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து நீ பகையானசொற்களை மிகவுஞ் சொல்லுகிறாயென்று தன்னைப்பயந்து குதிரையைத்திருப்பிக் கொண்டுகூடாரம்போய்ச்சேர்ந்தான். சேர்ந்தபின்னர் அலிறலியல்லாகு அன்கவர்களுந்தங்களிருப்பிடத்திற்கு வந்துவிட்டார்கள். அப்போது, முன்னர் தாங்களூரைவிட்டு வருகிறவழியிலே தீனில் விசுலாமாகிய சுகைறுல் ஆமிறென்றபெயருடைய சுத்தவீரியர் முசிலிமானவர்கள் படையில்நின்றுங் குதிரையை வாயுவேகமாகவிட்டுக்கொண்டு சண்டைகளத்தில்வந்து சிங்கத்தைப் போல் நின்றார். அதுகண்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் அசுஹாபிமார்களைப்பார்த்து நமதுபடையிலிருந்து 'குதிரையைவையாளிவிட்டுக்கொண்டுபோகிறவர் யாரென்றுகேட்டார்கள், அதற்கவ்வசுஹாபிமார்கள், சுகைறுல் ஆமிறென்றுசொன்னார்கள், அப்போது, அலிறலியல்லாகு அன்கவர்கள் அல்லாகுத்தஆலாஅளவிலே தங்கள்கையேந்தி, இந்தச்சுகைறுல் ஆமிறுக்கு அதிகபலத்தையும் திடத்தையுங்கொடுவென்று துஆக்கேட்டார்கள். இவ்விதத்திற்படைக்கலத்திற்கு முன்னிற்போன சுகைறுல் ஆமிறோடு, முகல்கீல்படையில் நின்றுமோர்மதயானைபோன்ற சுத்தவீரியன், கபுறத்தென்பவன் தானேறியகுதிரையைச்சவாரிசெய்து வந்தெதிர்த்து வாள்வீசினான். அந்தவாள் வீச்சைச் சுகைறுல் ஆமிறுபந்தாகத்தட்டிவிட்டுத் தன்கைவாளாலவனுச்சிக்கு

நேராக ஒருவெட்டுவெட்டினார், அந்தவெட்டிலே கபுறத்தென்பவன் இருபிளவாய் நரகஞ்சேர்ந்தான்.

இவ்விதம் பாவிப்பயல் கபுறத்துவெட்டுண்டிறந்ததைக்கண்டகாபிரீன்களிலுள்ளபுலேகென்னுஞ் சுத்தவீரியன்கண்களிலே கோபாக்கினி தெறிக்கும்படியாய்க் குதிரையைச் சாரிசெய்து கொண்டுவந்து சுகைறுல் ஆமிறை யெதிர்த்தபோது இரண்டுபேர்களும் புலியும் புலியுமெதிர்த்துச்சண்டைசெய்ததுபோலேகுதிரைக்கால் மிதியினலெழும் புந்தூசி வானத்தைமறைக்கும்படியாய் அதிகவேகத்துடனே குதிரையை நெருக்கிவிட்டு வாளினல் வெட்டுந்தட்டுமாக நிற்கும்போதுசுகைறுல் ஆமிறு வேலாயுதத்தையோங்கித் தந்திரமாகப் புலேகென்பவனுடைய நெஞ்சிக்கு நேராய்க்குத்தினர். அந்தவேலாயுத மவனுடைய நெஞ்சைக்கிழித்துப்பாய்ந்துமுதுகுப் புறத்திலுருவியதுஅந்தவேலோடும் சுகைறுல் ஆமிறு அவனையுயர்த்திக்கொண்டு அலிறலியல்லாகு அன்கவர்களிருக்குமிடத்திற்குக் கொண்டுவரச்சே காபிரீன்களிலுள்ள கருநிறத்தையுடைய கைபறுகுமாரன்ஹாரிதென்றபாதகன் வந்து தடுத்தான், அவனையுஞ் சுகைறுல்ஆமிறெதிர்த்துச்சண்டைசெய்துவெட்டிவிட்டு வரும்போது, காபிரீன்களிலுள்ளகாயுமென்றபாதகன் மும்மதங்கொண்டயானையைப்போல் வந்தெதிர்த்தான்.அவனையுஞ்சுகைறுல், ஆமிற்றூரத்திற்போய்விழும்படி வேலாயுதப்புடங்கினலே தட்டிவிட்டுத், தமதுகுதிரையில் நின்றுங் கீழேபாய்ந்து புலியானது ஆட்டுக்கிடாயைப் பிடிப்பதுபோல் அவனுடைய புரடியிலோர் பிடிபிடித்தழுத்தி யிழுத்துக்கொண்டு அலிறலியல்லாகு அன்கவர்களிடத்தில் வந்தார். அதுகண்டு, அலிறலியல்லாகு அன்கவர்களும் சந்தோஷமாகிக் காயிமைக் கழுகிவிடச்சொல்லி அசுஹாபிமார்களுக் குத்திரவுசெய்தார்கள். அதுபோ லசுஹாபிமார்கள, பாவி காயிமைக்கழுகிவிட்டுக் கற்கள்வீசி அம்பெய்தார்கள், அதனலவன்செத்து நரகஞ்சேர்ந்தான் அதுகண்டு, காபிரீன்களான இருபதினயிரம் சுத்தவீரியரு மொன்றுபோலேயடர்ந்து அசுஹாபிமார்களை வளைந்துவெட்ட ஆரம்பித்தார்கள்.

அப்போது, முசிலிமானவர்களும் பெரியகடலிலே மாப்புமாப்பாகவழிகிற மீன்களைச்சுறுமீன்களானவை யெப்படிஹதம்செய்கிறதோ அதுபோலேசத்துருக்களிலேனேகர்சாவும்படியாய், வில்லாலெய்தார்கள், வேலாலே குத்தினர்கள், கதையாலடித்தார்கள், தண்டத்தாலடித்

தார்கள் கவண்கல்லாலெறிந்தார்கள், சக்கரத்தாற்பிளந்தார்கள், வாளாலேவெட்டினார்கள், அந்தவெட்டினாலவர்களுடைய தலைகள் பனையின்காய்போலறுந்தன, கைகளறுந்தன, குடல்களறுந்துசரிந்தன, கால்களறுந்தன, குதிரைகளின் தலையுடல் கால்களறுந்தன, கொடிகட்டிய தேர்கள்தகர்ந்தன, யானைகள் துதிக்கைமுதலிய வுறுப்புகளறுந்தன, இவைகளைப்புரட்டிக்கொண்டு இரத்தாறு எவ்விடமும் வெள்ளம்புரண்டோடலாயின. இவ்விதமாகக் காலையிலிருந்து பொழுதுசாய்ந்த அசுறுடைய நேரமட்டினு முசிலிமானவர்கள் தக்குபீர்ச்சத்தத்துடனே நின்று சண்டைசெய்ததாலே சத்துருக்கள் முறிந்து பிறந்தவர்கள்போக மற்றவர்கள் கூடாரம்போய்ச் சேர்ந்தார்கள். பின்னர் முசிலிமானவர்கள் அல்லாகுத்த அலாவைபுகழ்ந்து, நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை வாழ்த்திக்கொண்டுவேங்கைப்புலிகளைப்போலே தங்கள் கூடாரத்திற்குவந்து சண்டைக்களத்தில் வெட்டுண்டவர்களைக் கணக்கிட்டார்கள், இபுனு அப்பாசுறலியல்லாகு அன்கவர்கள் சொற்படிக்கு அந்தச் சண்டையில் ஷகீதாகிச்சொர்க்கஞ் சேர்ந்தமுசிலிமானவர்கள் தொண்ணூறுபேர்கள்

அந்தத்தொண்ணூறுபேர்களையு முறைபோலெடுத்து நல்லடக்கஞ்செய்துவிட்டிருந்தார்கள். வெட்டுண்டிறந்து நாகவாதிகளாயின காபிரீன்கள் ஆயிரத்திருபதுபேர்கள், இவ்விதமொருநாட் சண்டையிற்காபிரீன்களிறந்ததொகையுடனே மற்றுஞ்செய்திகளையும், முகல்கீலென்பவன், தனது தகப்பனாகிய இறவுசுல்கூலுக்கெழுதியனுப்பினான் அன்று சூரியனுமடைந் திராவானது. அப்போதில், இருபடையோர்களுந், தாங்களிருக்கு மிடங்களில், அகஸ்மாத்தாய் எதிரிகள் வந்து நுழையாமற்சூழ நெருப்பைவளர்த்துக்கொழுந் திட்டெரியச்செய்து கண்விழித் திருந்தார்கள் பின்னர், சூரியோதயகாலத்தில் முசிலிமானவர்க ளெல்லாரு மெழுந்து, வல்லகாரணனை அல்லாகுத்த ஆலாவைத்தொழுது, நபிநாயகத்தைப் புகழ்ந்து யத்தப்பிரசன்னராகத் தசுபீகு, தகுலீனு முழக்கத்துடனே ஆயுதங்கள் மின்னலைப்போலே பிரகாசிக்கும்படியாய்ச் சண்டைக்களம் வந்து நின்றார்கள். அதுகண்டு, காபிரீன்களும் பேரிகை முழக்கத்துடனே யுத்தம் பிரசன்னராய்ச் சண்டைக்களம்வந்து நின்றார்கள், இவ்விதம், இரண்டுபடைஞர்களும் நிற்கும்போது வடபக்கமாகத் தூசிபடர்ந்தெழுந்து, வான

த்தைமறைக்கவோர் படைக்கூட்டம் வரக்கண்டு, இஃது யாருடைய படைக்குவருகிற வுதவிப்படையென்று, இருதிறத்தாருஞ் சண்டையைநிறுத்தி நின்றுபார்க்கும்போது, அப்படைக் கூட்டம் இறவுசுல்கூல், தன்மகன் முகல்கீலுக்குப் பின்னுதவிக்காக அனுப்பியபடைக் கூட்டமாதலால் அவர்கள் காபிரீன்களின் படையிலேபோய்ச் சேர்ந்தார்கள்.

அதுகண்டு,முசிலிமானவர்கள்யாவரும் இப்போதுவந்தபடைவீரர் சுமார் ஐயாயிரம்பேரிருக்குமே,இவர்களோடு நாமெவ்விதஞ் சண்டைசெய்கிறதென்று மயங்கினார்கள். அதுகண்டு, அலிறவியல்லாகுஅன்கவர்கள் அம்முசிலிம்களைப்பார்த்து, ஓதே, பிறவிமார்களே; பிறப்பிறப்பில்லாத ஆண்டவனுடையஅருள் நமக்குண்டும் ஆதலால் நீங்கள் பயப்படாதீர்கள், பொறுமையென்னும் போர்வையைப்போர்த்துக்கொள்ளுங்களென்று வேதத்திலுள்ளபலபலஅறிவுகளையோதிக்காட்டினார்கள். அதுகேட்டசுஹாபிமார்கள் மகாதுணிவுகரத்துடனே (அல்லாகு அக்குபர்,அல்லாகு அக்குபர்) என்னுமிந்தத் தக்குபீர்ச் சப்தத்துடனே பெரியகடலிலோர் சிறியதடாகம்போய் விழுந்ததுபோல் திடீரென்றுஜாடிவிழுந்து காபிரீன்களைப்பார்த்து எடா, உங்களுக்கின்றைக்குச் சாவுகாலமென்றுசொல்லிக் குதிரைகளினடையிலே தூசியெழுந்து சூரியனை மறைப்பதிற்,றங்களாயுதப்பிரகாசவெளிச்சத்தினாலே பார்த்துப்பார்த்துப் புலிகள்மான்கூட்டத்தில்விழுந்து ஹதஞ்செய்வதுபோலே ஹதஞ்செய்து காபிரீன்கள் நெஞ்சறுந்தோடும் இரத்தங்குதிரையை நனைக்கும்படியாய் வெட்டிப்,பிளந்து நாய், நரி, பருந்து, காகங், கழுகு இவைகளுக்கிரையாக்கினார்கள்.

இவ்வித முசிலிம்கள், காலைநேரத் திலிருந்து மதியம்வரையிலுஞ்செய்தசண்டையினாற் காபிரீன்கள் அறுநூறுபேர்களிறந்துநரகமடைந்தார்கள்,முசிலிமானவர்கள் முப்பதுபேர்கள் ஷகீதாகிச்சொர்க்கமடைந்தார்கள். அந்நேரத்தி லிருபடையோர்களுஞ் சண்டையைநிறுத்தித் தங்கள் தங்கள் கூடாரம்போய்ச்சேர்ந்தார்கள்,பின்னர், முகல்கீலொருசேவகனையழைத்துப் படையில்நடந்த சங்கதிகளைத் தன்தகப்பன் இறவுசுல்கூலுக்குச் சொல்லும்படி கடிதத்துடனே யனுப்பிவிட்டுத், தன் படையோர்களைப்பார்த்து நாமோருபாயமாகக் குதிரைகளையவிழ்த்து அங்கங்கே மேயவிட்டால் அதுகண்டு, அலியின்

படையோர்களுந் தங்கள் தங்கள் குதிரைகளை யவிழ்த்து மேயவிட்டுச் சந்தோஷமாக எதிரிகள் வரவில்லையென்று மெய்மறந்திருப்பார்கள். அந்நேரத்தில், நமது குதிரைகளை யொன்றென்றாய்ப் பிடித்தொதுக்கி யோரிடமாக்கி, இராவுகாலத்திலேயே அவைகளின்பேரிற் சவாராகித் திடீலென்ன அகஸ்மாத்தாய் தெரியாமற் பையப்பையப்போய் அலியுடைய படைக்கூடாரத்தில் விழுந்து வெட்டுவதே நமக்கு வெற்றியென்று சொன்னான்.

அதுகேட்டுப் படைஞருந், தலைவரு மிதுவே நல்ல யுத்தியென்றெத்துக்கொண்டேனே தங்கள் குதிரைகளின் தழைகளைத் தட்டி மேயவிட்டிருந்தார்கள். இவ்விதம், சத்துருக்கள் முமினனவர்களுக்குச் செய்யவெண்ணிய சதிமான எண்ணம், அந்தப் பாவிகளுக்கே (செய்ததீவினை செய்தவரையே யெய்திடுமென்பது போல்) அல்லாகுதஆலாவின் முனிவுண்டாய் இருந்த இருந்த இடத்திலேயே கட்குடிவெறியோடும் பெருநித்திரையாகி மயங்கிக்கிடந்தார்கள். அப்போது, முசிலிமானவர்களிற்சிலர், துணிவுகரத்துடன் காபிரீன்களின் கூடாரத்திலே புகுந்து அதிகவேகத்துடன் வெட்டினார்கள், அந்தக் கடபிடியினாலே கூடாரத்தில் நித்திரைசெய்த அலிறலியல்லாகு அன்கவர்கள் கண்விழித்து நடந்த சங்கதிகளையறிந்து சரேலென்வறமுந்து சுகைறுல் ஆமிறைத்தாங்களிருந்த இடத்திற்குக் காவலாக்கி வைத்துவிட்டுக் குதிரைமேல்சவாராகி யக்குதிரையைச் சூறுவளிக்காற்றிலும் அதிகவேகமாய் நடத்திக்கொண்டுபோய்ச், சத்துருக்கள் படையிற்புகுந்து, எடாபாவிகளே! தன்வினை தன்னைச்சுற்றுங் கொடுவினை காலைச்சுற்றும்) என்பதுபோ லுங்கள் தீங்கானநினைப்பு உங்களைக்கெடுத்தது பாருங்களென்று சொல்லிச்சலிக்காமல் வெட்டினார்கள் அந்த இராவுகாலச்சண்டையில் ஐந்நூறு காபிரீன்களிறந்து நரகவாதிகளாயினார்கள், மற்றகாபிரீன்கள் தங்கள்தங்கள் கூடாரங்களைவிட்டுவிட்டோடிப் பள்ளத்தாவுகளிலேபோய் மறைந்திருந்தார்கள். முசிலிமானவர்களில் அறுபதுபேர்கள் ஷஹீதாகிச் சுவர்க்கஞ்சேர்ந்தார்கள். அவர்களையெடுத்து நல்லடக்கஞ் செய்துவிட்டு, அலிறலியல்லாகுஅன்கவர்களும், மற்ற அசுஹாபிமார்களுந் தங்களிருப்பிடம் வந்து சந்தோஷமாக இருந்தார்கள்.

பின்னர், முகல்கிலிங்கு நடந்த சண்டையினுள்ள சேதத்தையெல்லாந் தன்றகப்பனை இறவுசுல்கூலுக்கோர் தூதனிடஞ்சொல்லி

யனுப்பிவிட்டுச் சண்டைக்காரம்பிக்காமலிருந்து, பின்னரோர் சதிமானியத்தையெண்ணித் தன்படையிலுள்ள கத்தாறென்பவனை யழைத்து, அவனைப்பார்த்து ஒகே, கத்தாறேநான் என்றகப்பனுக்குச் செய்தியனுப்பியிருக்கிறேன் அச்செய்தி கண்டவுடனே யவனனுப்புகிற படைஞரிதுமட்டிலும் வழியில்வருவார்கள், அவர்களைநீ யெதிர்கொண்டுபோய்க்கண்டு அவர்களிலுன் மனம்போல் ஆயிரங்குதிரைவீரரைத்தெரிந்தெடுத்து மிகுந்த பேணுதலாய்ப் பொய்யை வேதமென்று போதிக்கு முகம்மதுடைய மருமகன் அலியாரின் படையிலே தீனனைபேர்கள்போலே கோலங்கொண்டு மெய்யாக அவர்களுக்குதவிக்குப் போகிறவர்கள்போற் சாடையணுவளவுந் தெரியாமற் போய்ச்சேர்ந்து கொண்டு, அவ்வலியுடனே நபிநாயகத்திற்கும், இறவுசுல்கூலுக்கும் அரிதான சண்டை நடக்கிறதென்று நான் கேள்விப்பட்டு எமனைச்சேர்ந்த எல்கையிலிருந்து, யாஅலியே யுங்களுக்குதவிக்காகப் படைவீரர் ஆயிரம்பேர்களுடனே வந்தேனென்று தீனனவர்களில் முற்றியவர்கள்போல பொய்மையை வெளிக்கிடாமற்சொல்லு, அதுகேட்டந்த அலிசந்தோஷமாகி யுன்னைச்சேர்த்துக்கொள்வார், அப்போதுநீயும், உன்படைஞரு மிகுவிசுவாசிகள்போலே கலந்துகொண்டிருந்து பின்னர், அந்த முசிலிமானவர்களென்னேடு சண்டைக்கு முன்னேக்கியெதிர்த்துவரும்போது, நீயு முன்ஜனங்களுமாக அவர்கட்குப் பின்னுலே யடர்ந்து வெட்டுங்கள், நானுமென்ஜனங்களுமாக அவர்களுக்கு முன்னுலே யடர்ந்துவெட்டுகிறேம், அப்போது, அலியும். அவருடைய படைஞரு முறிந்தோடிப்போவார்கள், நாம்ஜெயங் கொள்ளலாம் போவென்றுசொல்லி யனுப்பினன்.

அதுகேட்டந்தக் கத்தாறு, இறவுசுல்கூலாலனுப்பப்பட்டு வருகிறபடைகளுக்கு முன்னுலே வழியி லெதிர்கொண்டுபோய்த், தனக்குமுகல்கில் கொடுத்திருக்கிற தத்துவகடித வுத்தரத்தைக்காட்டி, அந்த ஐயாயிரங்குதிரை வீரரிலே தெரிந்து; ஆயிரங்குதிரை வீரரையெடுத்துக்கொண்டுபோயினன். மற்ற நான்காயிரங்குதிரை வீரியரும் முகல்கீலுடைய படைக்கடலி னின்னுமோர் படைக்கடல்வந்து சேர்ந்ததுபோல்வந்து சேர்ந்தார்கள், அதுகண்டு, முசிலிமானபேர்கள்யாவரும், மவுத்தைநாடிச் சந்தோஷமாக நின்றார்கள். அப்போதவர்களைப் பார்த்து, அலிறலியல்லாகு அன்கவர்கள் வேதகட்டளையை யோதிக்காட்டி யுறுதிச் சொற்களைச்சொல்லி நின்றார்கள். அந்நேரத்திற் சதி

மான்யஞ்செய்ய முகல்கில்சொற்கேட்டு ஆயிரங்குதிரை வீரரோடும் வந்தகத்தாறென்பவன் முடுகிவந்தான், அதுகண்டு அலிறலியல்லாகு அன்கவர்கள்வருகிற படைகள் யாரென்று நெருங்கிக் கேட்டதற்கு, அந்தக்கத்தாறு நாங்கள் தீனானவர்கள், தீனுக்குதவியாக வந்தோமென்று முகல்கில் சொன்னகுபாடம்போலே சொல்லி நபிநாயகத்தையும், அலிறலியல்லாகு அன்கவர்களையும் போற்றிப்புகழ்ந்து. மெய்யா மெய்யா தீனானவர்கள்போலவே யுண்மைகாட்டி நின்றான், இவனுடையவஞ்சனை மாறாட்டங்களையறியாத அலிறலியல்லாகு அன்கவர்கள் வாருங்கள் வாருங்களென்றிடங்கொடுத்து நமா குதவிவந்த தென்று சந்தோஷம் பெரிதாகி நின்றார்கள்.

அப்போது, முசிலிமான படைஞர்களெல்லோருஞ் சண்டைக்குத் தயாராகினார்கள் அதிலோர் அசுஹாபி வீரரூபத்துடனே குதிரைமேலேசவாராகி வேகமாகப்போய்க் காபிரீன்களைப்பார்த்து, ஓகே, வீரர்களே என்னோடெதிர்த்து உயுத்தஞ்செய்ய என்றவர்கள் வாருங்களென்று அசற்றினார், அதுகேட்டுக், காபிரீன்கள் படையில் நின்றுங் காயிறென்பவன் கண்களிலே கோபாக்கினிபறக்கக் குதிரையையோட்டிவந்துநின்று வாள்வீசினான் வீசினவனுடைய வாள்வீச்சை முசிலிமானவர் தட்டிவிட்டுத், தாமும்வாளைச் சுழட்டிவீசினார். அந்த வீச்சைக்காயிறு தட்டிவிட்டு முசிலிமானவரை வெட்டினான், அந்த வெட்டிலவர் ஷஹீதாகிச் சொர்க்கஞ்சேர்ந்தார். இவ்விதமொவ்வொருவராக வந்தெதிர்த்த வெழுமுசிலிம்களை, யந்தப்பாவியான காபிறு வெட்டித் துண்டாக்கினான், அவர்களும் ஷஹீதாகிச் சொர்க்கஞ்சேர்ந்தார்கள். அதுகண்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் மிகுந்த கோபத்துடன் சிங்கத்தைப்போல் கர்ச்சித்துக் குதிரையை விட்டுக்கொண்டு போனபோக்கிலேயே அந்தக் காபிறுடைய இடைக்கட்டைப் பிடித்து நெற்கதிரைச்சுழட்டி யடிப்பதைப்போலவனைச் சுழட்டிப் பூமியிலடித்தார்கள். அதனால் அவனெலும்புகளெல்லாம் நுறுங்கி நூறுதுண்டாகிச்செத்து நரகமடைந்தான், அதுகண்டு, காபிரீன்கள் கோபங்கொண்டு ஒவ்வொருவராக இருபதுபேர்கள் வந்தெதிர்த்தார்கள், அவ்விருபதுபேர்களையும் அலிறலியல்லாகு அன்கவர்கள் வெட்டி நாய் நரிக்கு விருந்திட்டு நின்றார்கள்.

அதுகண்டு சத்துருக்கள் பயந்து சித்திரப் பாவையைப்போலே கைகாலுதவாமலசைவற்று நின்றார்கள். அப்போது அலிறலியல்லா

ஹு அன்கவர்கள் காபிரீன்கள் குபாடக்காராதலால்நாம் சும்மாநிற்க கூடாதென்று, அவர்களுடைய படைக்கூட்டத்திலோர் புலியானது மான்கூட்டத்திற் புகுவதுபோற்புகுந்து வாளினாலும் வேலினாலும், அனேகர்களைவெட்டியுங்குற்றியு மவர்களுடையவுடற்றுண்டங், கைத்துண்டங், காற்றுண்டம், வெவ்வேறாக விழவெட்டிச் சாவடித்துக்கொண்டு நிற்கும்போது, அவர்களைச் சத்துருக்கள்சூழவளைந்து சுற்றினார்கள். அதுகண்டு சதிமானஞ்செய்யத் தீனைவர்களுடனே வந்து சேர்ந்திருக்கிற கத்தாறென்பவன் பின்னாலே முதுகுப்புற மொதுங்கிச் சண்டைசெய்ய முயன்றான். அந்தச்சாடலை ஷஹீது றஸியல்லாகு அன்கவர்கள் கண்டு, அம்புவிசைசயாக அலிறலியல்லாகு அன்கவர்கள் சத்துருக்களை வெட்டிக்கொண்டு நிற்குமிடத்திற் போய்ச் சொன்னார்கள். அதுகேட்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் (கவுக்கலாச் சொல்லிக்கொண்டு) மின்வெட்டுவது போலே திடீலென்று பின்புறந்திரும்பி வேறே யொன்றையும் பாராமற் பதினாறுநாட் பசிகிடந்த வேங்கைப் புலி இரையிருக்குந் தலத்தைநாடிப் பாய்வதுபோற் பாய்ந்துவந்து பெரிய கோபத்துடனே கத்தாறைப்பார்த்து, எடா! கத்தாறே சதிமானகாரரைச் சதிமானஞ்செய்ய அல்லாகுத் தஆலாவானவன் பார்த்துக் கொண்டிருக்கிறான்,மேலுமவன் கைறுள்ள நாயனென்றும்,பொருளுடைய வேத மொழியையோதி முஸிமானவர்கள் பின்னிடையச் சத்துருக்கள் தலைமயங்கிக் கண்பிரமிக்க வுடல்நடுங்கி யொடுங்கி நிற்கப்பாய்ந்து அந்தச் சதிமானஞ் செய்யவந்த காபிரீன்களில் (170 பேரைவெட்டி நாய் நரிக்கும், காகங் கழுகுகளுக்கும், பேய்பிசாசுகளுக்கும் விருந்திட்டார்கள், மற்ற காபிரீன்கள் வெட்டுக்குத்தப்பி முகல்கிலிருக்கு மிடத்தைநாடிப் பிழைத்தோம் பிழைத்தோமென்றோடிப்போய்ச் சேர்ந்தார்கள். அப்போது சூரியனுமடைந்தான், சத்துருக்களு மவர்கள்கூடாரஞ் சேர்ந்தார்கள்.

பின்னர், அலிறலியல்லாஹு அன்கவர்கள் வந்து முசிலிமானவர்களைப்பார்த்துச் சீக்கிரங் கூடாரங்களுக்குமுன்னாலே பெரிய வெளிச்சமுண்டாக நெருப்பைவளர்த்தெரியச்செய்துவிட்டு, யாவருமொன்றுபோலெழும்பி மலையடிவாரத்திலிருக்கும் பொதும்பிலேபோய்ச் சத்துருக்களுக்குத் தெரியாமலொளித்திருங்க ளென்று சொன்னார்கள். அவர்களதுபோல் நெருப்பை வளர்த்தி விட்டுப்போய் மலைப்பொதும்பி லொளித்திருந்தார்கள், அப்போது,அலிறலி யல்லாஹு அன்க

வர்களும், பத்துக்குதிரைச் .சுத்தவீரர்களும் அவ்விடத்திலிருந்து குதிரைகள் தரையில் நடக்கும்போது, காலடிபடுகிற சத்தம் பிறருக்குக்கேட்காமற் குறும்பாட்டுக்கிடாய்களிலுரித் திருந்தரோமம் அதிகரித்த தோல்களுக்குக்கட்டி மிகுவிரைவில் அந்தக் குதிரைகளின் பேரிற் சவாராய்க் குதிரைக்குளம்படி ஊசாட்டம் அதிகரிக்காமல் மெதுவாகப்போய், இருண்ட நெஞ்சையுடைய காபிரீன்கள் படைக் கடலருகாகிப் பார்த்தபோது, அக்காபிரீன்கள் சதிமான்யமான சண்டைசெய்ய உயுத்த முஸ்தீப்போடு மோர்பாகத்திலொதுங்கி நிற்கக் கண்டு உடனே அலிறலியல்லாகு அன்கவர்கள் தங்களுக் குரிமையாகிய ஒரு முசிலிமானவரைக் கூப்பிட்டு மலையடிவாரத்திலே பதுங்கியிருக்கிற நமது பிறவிமாரிடத்தில் நீர் சீக்கிரமாகப்போய்ச் சத்துருக்கள் சதிமான்யச் சண்டையைநாடி யவ்விடம் வருவார்களானால், முன்பின் பார்க்காம லவர்கள் மேலே பாய்ந்து சின்னபின்னமாக வெட்டும்படி சொல்லிவிட்டு வாருமென் றனுப்பினார்கள் அதுபோல் அவர் போய்ச் சொல்லிவிட்டு அலிறலியல்லாகு அன்கவர்களிடத்தில் வந்து சேர்ந்தார்.

அந்நேரத்திற்சத்துருக்கள், ஐயாயிரம்பேர்க்கதிகமாகக்கூடிச்சதிமான்யச்சண்டைசெய்யத் தீனவர்களிருக்குங் கூடாரங்களைநாடி வந்தார்கள். அதுகண்டு முகல்கீலிப்போதுதானப்பா அலிபடைஞர் முறிந்தோடுவார்களென்று சந்தோஷம் பெரிதாய்த்தன்படையோர்கள் போகிறவழியைப் பார்த்திருந்தான். அப்போது, அலிறலியல்லாகு அன்கவர்கள் தங்களைச்சூழ்ந்த பத்துக்குதிரை வீரருடனே குதிரைக் குளம்படிச்சத்தம் அதிகரிக்காமற்காபிரீன்கள் படைக்கூடாரத்திற் குள்ளேபோய்ப் புகுந்து, எடா! காபிரீன்களே அல்லாகுத் தஆலா, வொப்பற்ற வலிமையுடையவன், அவனே தினவர்களுக்கு அருள்செய்கிறவன்; தீமையையுடைய காபிரீன்களை யெல்லாம் நாசமாக்குகிறவனென்று, தக்குபீ று முழக்கிக்கொண்டு வாளொளிபளபவென்று பிரகாசிக்கச் சிங்கநாதமிட்டு வெட்டினார்கள், அதுகண்டு, பாதகதுரோகி முகல்கீலு புலியைக்கண்ட ஆட்டுக்கிடாயோடுவது போலே யோடியொளித்துக்கொண்டான். அதனாலேமற்றக்காபிரீன்கள்பேரில் அலிறலியல்லாஹு அன்கும், பத்துஅசுஹாபிமார்களும் சுழட்டும்வாள் வல்லமையைப் பார்த்து வானோர்களு மெச்சும்படியாகப் பாய்ந்து பாய்ந்துவெட்டி யெழுநூறுபேரைக்கொன்றார்கள், அதி

லே கடல்வெள்ளங் கரையையுடைத்துத் தண்ணீரைச்சிதறிக்கொண் டோடுவதுபோலே, சத்துருக்கள் படைமுறிந்து இருந்த விடம்விட் டுச் சிதறியோடினார்கள்.

இங்கே இவ்விதமாகச்சே முன்னர், சதிமான்யச் சண்டைக்குப் போன ஐயாயிரங் காபிரீன்களுங், (காட்டானைக்குத் தப்பிக் கவியா ணையிடத்திலேபோய் எம்பட்டாரென்றதுபோல்) முசிலிமானவர்களு டைய கூடாரத்துட்புகுந்து பார்த்தார்கள், அங்கே யொருவரு மில் லாமையினாலே, வாயைச்சப்பிக் கையைப்பிசைந்துகொண்டு நாம்வந் தகுறி தப்பிப்போச்சுதே இனியென்னசெய்கிறதென்று கூடாரங்கட் குள்ளிருந்த பொருட்கள் சாமக்கிரிகைகளைக் கொள்ளை யெடுத்துக் கொண்டு சந்தோஷமாகத்திரும்பி வெளியேவரச்சே, வானத்திலிருந் துதிடீலென்று இடிவிழுந்ததைப்போல் மலைப்பொதும்பிலே பதுங்கி ருந்த முசிலிமானவர்கள் வந்துவிழுந்து வாளொளிமின் வெட்டிப் பாய (500)காபிரீன்களைவெட்டிவிட்டு முன்சதிமான்யஞ்செய்யவந்து தப்பிப்போன கத்தாறென்னும் பாவியுடனே (500) பேரைச் சிறை யாக்கினார்கள், மற்றநாலாயிரம்பேர்களும் பிழைத்தோம்பிழைத்தோ மென்று தப்பியோடித் தங்கள் கூடாரம்போய்ச் சேர்ந்தார்கள்.

பின்னர், அலிறலியல்லாகு அன்கவர்களும், மற்றப்பத்துபேர் களும் விரைந்து தீனவர்களிடம் வந்து அவர்கள்செய்தசமர்த்தைய றிந்து தாங்கள்செய்த வீரதத்துவத்தையு மவர்களுக்குச்சொல்லிவல் லமைக்குரித்தாகிய அல்லாகுத்தஆலாவைப் புகழ்ந்தவர்களாக இருந் தார்கள்; பின்னர், சூரியனுதயமானபோது தாங்கள்செய்யவேண்டிய வணக்கத்தைச் செய்துவிட்டிருக்கச்சே, அலிறலியல்லாகு அன்கவர் கள் சிறையாகிய கத்தாறென்பவனைக் கொண்டுவரச்செய்து முன்ன ரவன்செய்த சதிமான்யத்திற்காக நெருப்பைவளர்த்து அதிலே அவ னைப்போட்டெரிக்கச் செய்து மற்றச்சிறையாளரைக் கொண்டுவரச் செய்து, அவர்களில், அல்லாவுக்கும், அல்லாவுடைய றசூலுக்கும் வேதத்திற்கும் ஈமான் கொண்டவர்கள்போக, ஈமான்கொள்ளாத பேர்களை மற்றச்சத்துருக்கள்பயந்து எங்கும்படியாய் வெட்டிவெட் டிக்கொன்றார்கள், அந்தநேரத்தில் முகல்கீல் தன்படைகளைத்திரட்டி யணியாக்கிச் சண்டைக்களத்திலே கொண்டுவந்துவிட்டுத் தானுமத யானையைப்போலே படையினடுவில் நின்றான், அதுகண்டு தீனவர்

களும் உயுத்தப்பிரசன்னராக ஆயுதபாணியணிந்து சலவாத்து முழக்கிக்கொண்டுபடைக்களம்வந்தெதிர்த்துநின்ருர்கள், இவ்விதம், இரண்டுபடையும் சண்டைசெய்யாது நெருங்கிநிற்கும்போது சிழ்பாரிசமாகச் செந்தூசிமேகம்போற் பறந்து வருவதுடன் பெரியபடைக்கூட்டமொன்றுவரக்கண்டு, இருதிறத்தாரும் அங்கேவருகிற படையைப் பார்த்துக்கொண்டு நிற்கச்சே அலிறலியல்லாகு அன்கவர்கள் அப்துல்லாதையழைத்து ஒகே அப்துல்லாவே நீர்போய் அதோ ஆரபாரமாக வருகிறபடை யாவருடைய படையென் றறிந்து வாருமென்று சொன்னுர்கள்.

அதுகேட்டு, அவ்வப்துல்லாவென்பவர் சீக்கிரமாக வருகிறபடைகளுக் கெதிர்கொண்டுபோய், இவர்கள் யாவரென்று பார்க்கும்போது அப்படைஞர்கள் நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லம், அலிறலியல்லாகு அன்கவர்களுக்குப் பின்னுதவிக்காக அனுப்பிய குதாமத்திபுனு அசுவதுகிந்தி றலியல்லாகு அன்கவர்களும்(100) அசுஹாபிமார்களுமாக இருக்கக்கண்டு மனமகிழ்ச்சியாகி அவ்வசுஹாபிமார்கள் நெஞ்சோடுதம்முடையநெஞ்சணைத்துச் சலாம்கொடுத்தும் படைக்காரியங்களை யவர்களோடும்பேசி யழைத்துவந்து சண்டைக்களத்தில் நிற்கு முசிலிம்களிடத்தில் விட்டார். அவர்களும், வந்தவர்களுடனே மார்போடுமார்பு கட்டித்தழுவிச் சலாஞ்சொன்னுர்கள். பின்னர், வந்த முசிலிமானவர்கள் அலிறலியல்லாகு அன்கவர்களைக்கண்டு மகிழ்ச்சியுடனே அவர்கள் கையைபிடித்து முத்தி முகந்து புளிக்கூட்டம்போலே நின்றுர்கள். நின்றவுடனே, முன்னர் படையணியிலே நின்ற முசிலிம்களும், வந்தமுசிலிம்களுமொன்றுகச் சத்துருக்கள் படையிலிடிபோல் விழுந்து நெருங்கி யடித்தார்கள். அதுகண்டு சத்துருக்கள் பயந்து முறிந்தோடினுர்கள், பின்னர் அலிறலியல்லாகு அன்கவர்களும் அவர்கள் படையோர்களுந் தாங்கள் தாங்களிருக்குங் கூடாரங்களில் வந்து அல்லாகுத் தஆலாவைப் புகழ்ந்திருக்கச்சே, அலிறலியல்லாகு அன்கவர்கள் படைக்களத்தில் நாள்தோறும் நடந்த சங்கதிகளை நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று நினைத்துக் காகிதமெடுத்ததிலே முதலில் (பிசுமில்) எழுதிப் பின்னர் மிகுதாதிபுனு, அசுவது கிந்தியவர்கள் ஆயிரம் பேர்களுடன் வந்ததும், காபிரான கத்தாறென்பவன் சதிமான்யஞ் செய்ய முசிலிமானவர்கள் போல்

வந்து அவன்செய்த குபாடமும், நாளுக்குநாள் இறவுசுல்கூல் கடலைப்போல் முகல்கீனுக் குதவிப்படைகளனுப்புகிறதும், சண்டையில்முசிலிம்கள் வந்தநாள்மட்டும் செய்கிற திறமையும், சண்டையிலே தங்களுக் கல்லாகுத்தஆலா வுதவியாலேகிடைக்கிறவெற்றியும், பாதகன் முகல்கீனுடைய படைத்தொகையும், அவனெதிர்த்துச்சண்டை செய்யும்போது சண்டைக்களத்தில் வெட்டுண்டிறந்த காபிரீன்களின் தொகையையும், ஷஹீதாகிச் சொர்க்கஞ்சேர்ந்தமுசிலிம்களின் தொகையையும், மற்றுபல சமாசாரங்களையும் வணக்கத்துடனே யெழுதி முத்திரையிட்டு, அதனை வழிதெரிந்த வோர்தூதரிடத்திற்கொடுத்து நபிநாயகமவர்களுக்கனுப்பினார்கள். அந்தத்தூதரானவர் கடிதத்தைவாங்கிச் சிரசுமேல்வைத்துக்கொண்டு அலிறலியல்லாஹு அன்கவர்களுடைய பாததாமரையிற் பணிந்தெழுந்து இறவும்பகலுமாக நடந்துகாடு,கரை வனம், வனாந்திரம், ஆறருவி, மலைகெவிகளைக்கடந்து திருமதீனமாநகரம்வந்து, நபிநாயகத்தின் திருச்சமுகஞ்சென்று அவர்களுக்குத் தாழ்ச்சிசெய்து பாதம்போற்றி அதபாகநின்று அலிறலியல்லாகு அன்கவர்கள் கொடுத்த காகிதத்தையெடுத்தார். அதைநபிநாயகமவர்கள் வாங்கித் தங்களிடமிருக்குங் காத்திபுகளிலொருவர் கையிற்கொடுத்து வாசகங்கேட்டு மிகுந்த வியாகூலப்பட்டவர்களாகியுடனே காலிதிபுனுவலீது மக்காமகுருூமியவர்களை யழைத்துக்கொடியுங்கொடுத்து (1000) அசுஹாபிமார்களையுஞ் சேர்த்துவிட்டுப் பின்னரவர்களைப்பார்த்து, காலிதே நீர் இந்த அசுஹாபிமார்களோடும் சத்துருக்களின்பேரில் விரைந்து போமென்றேவினார்கள்.

அதுகேட்டு காலிதுறலியல்லாஹு அன்கவர்கள் நபிநாயகத்தின் பாதம்புகழ்ந்து படைகளுடனே பூமியிலிருந்து தூசியெழும்பிச் சூரியனை மறைப்பதான விசையுடனே குதிரையைநடாத்தி யிரவும்பகலுமாக நடந்து அலிறலியல்லாஹு அன்கவர்களிருக்கிற தலத்திலானபோது, இரண்டு படையோருங்கண்டு இஃதெந்தப் படை? யாருக்குதவியாக வருகிறதோவென் றெண்ணமாக இருக்கையில், அலிறலியல்லாகு அன்கவர்களுத்திரவின்படி சுகைறுல் ஆமீறென்பவர்காலிது றலியல்லாஹு அன்கவர்கள் வருகிற வழியிலெதிர்வந்து அவர்களைக்கண்டு, இஃதியாருடைய படைக்குதவியாக வருகிறது நீங்கள்யாரென்று கேட்டார், அதற்குக்காலிதுறலியல்லாஹு அன்கவர்களுறை விட்டுருவிக் கையிற்பிடித்திருக்கிறவாளையசைத்துச் சுகைறுல்ஆமிறைப்பார்த்து நா

ங்கள் மூன்று லோகத்திற்கும் ஆண்டகையாகிய முகம்மது நபிசல்லல் லாஹு அலைகிவசல்லமவர்களுடைய படை அலிறலியல்லாஹு அன் கவர்களுக் குதவிக்கு வருகிறோம் நீர் யாரென்று? கேட்டார்கள், அதற் குச் சுகைறுல் ஆமிறு நானுகிறது எதிர்த்த சத்துருக்களை நாசஞ்செ ய்யும் வெற்றிவாளேந்தும் சுகைறுல் ஆமிறென்று சொன்னார். இவரு டையபேர் காலிதுறலியல்லாஹு அன்கவர்களுக்கு முற்படத் தெரி யாததினால், இவன் காபிராயிருக்குமென்று வாளையோங்கி வெட்ட முடுகும்போது சுகைறுல்ஆமிறு, ஒ கேசுத்த வீரியரே! வாட்பிடித்த வுமதுகையை நீட்டாமல்மடக்கும், நானுகிறது முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் தீனைவிரும்பி அலிறலியல்லாஹு அன்கவர் கள் கையைப்பிடித்துத் தீனில்லிசுலாமாகி வரிசை பெற்றவனென்று சொன்னார். அதுகேட்டு காலிதுறலியல்லாகு அன்கவர்கள் முதலியயா வரும் அதிசயித்துத் தங்களுடனே சேர்த்துக்கொண்டு அல்லாகுத்த ஆலாவைப் புகழ்ந்து நடந்தார்கள்.

அப்போது சத்துருக்கள் முசிலிமானவர்களோடு மெதிர்த்துச் சண்டை செய்வதைக் காலிதுறலியல்லாகு அன்கவர்களுடன் வந்த மகுசூமி வங்கிஷத்தாரான முசிலிம்கள்கண்டு வாரவரத்திலேயே தக் குபீர்ச்சத்தத்தைமுழக்கிச் சத்துருக்கள்மேலே சிங்கத்தைப்போலே பாய்ந்துவிழுந்து. அனேகம்பேர்களை வெட்டி ஹதஞ்செய்துவிட்டு அலிறலியல்லாகு அன்கவர்களிடத்தில் வந்து, அவர்கள் கையைப் பிடித்து முத்திமுகந்துகொண்டு தாங்கள் வந்த சமாசாரங்கள்யாவை யுஞ் சொன்னார்கள். அதுகேட்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் மிகு ந்த சந்தோஷமாகி முசிலிமானவர்கள் யாவருடனு மனமகிழ்ச்சியா யிருக்கும்போது சத்துருக்கள் படையெடுத்து வாரமல் இருக்கிற குபாடந்தெரிந்து, தங்கள் படையை மூன்று வகுப்பாகப் பிரித்து, வலதுபக்கத்திலொரு பகுதியைநிறுத்தி யந்தப்பகுதிக்குக் காலிது றலியல்லாகு அன்கவர்களைமுதன்மையாக்கி யவர்களோடும் சுகைறுல் ஆமிறையும்விட்டுப் பின்னர் இடதுபாகத்திலொரு பகுதியைவிட்டு அந்தப்பகுதிக்கு மிகுதாது றலியல்லாஹு அன்கவர்களை முதன் மையாக்கி யவர்களோடும் புலைவிபுனு அப்பாசுறலியல்லாகு அன் கவர்களைச் சேர்த்துவிட்டு, அவர்களுக்குச் சொல்லவேண்டிய திற மைகளைச் சொல்லிப் பின்னர் மற்றொரு பகுதிக்குத் தாங்களே தலைமையாகி நடுவில்முன்னாக நின்றுகொண்டு அல்லாகுத்தஆலா அள

விலே இரண்டுகையையு மெடுத்தேந்தி, ஒன்றினுமடங்காத ஆண்டவனே, உன்னைவலக் கொண்டுவந்த எங்களுக்கு வெற்றிதந்து இரட்சித்துக்காப்பாத் தென்றுந் துஆக்கேட்டு உடனே முன்றணிகளாக நிற்கின்ற முசிலிம்களைப்பார்த்து, எனதுடற்பிறப்புகளே, நீங்கள் சத்துருக்கள்மேலே பாய்ந்து புலிகளைப்போற் சண்டைசெய்யுங்களென்று சொன்னார்கள்.

அப்போதுடனே தங்கள்படையிலே துடி, முரசு, துந்துமி, பேரிகை, பறை, நவுரி, தவில், இடக்கை, டங்கா, எக்காளம், சின்னம், மல்லா, திடிமன், முருடு, உடுக்கை, மத்தளம், சங்கு முதலாகிய வாத்தியங்கள் கணகணென்று கடற்போல முழங்கிய முழக்கத்துடனே முத்துக்குஞ்சங்கட்டிய குடைகள், கொடிகள், சிற்றாலவட்டம், பேராலவட்டம், பீலிகுஞ்சம், சாந்தாற்றி முதலிய விருதும்பலுக்குந்தேர், வண்டில் முதலியஎறுவாகனதிகளிலே தலைவர்களும்படைவீரர்களும்தக்குபீர், தசுபீகு, தகுலீலு, சலவாத்து முழக்கத்துடனேநடந்து இலவம்பஞ்சிப்பொதியிலே நெருப்புக்கங்கி விழுந்ததுபோலே சத்துருக்கள் படையின்மேற்போய் பாய்ந்துவிழுந்து, வாள், வேல், வில், அம்பு, சக்கரம், தண்டம், தடி, தோமரம், மழு, கவண்கல், ஈட்டி, குந்தம்பட்டா, சொட்டை, கிறீசுமுதலிய ஆயுதங்களால்வெட்டி, குற்றியும், அடித்தும், எய்தும், வீசியும், கிரீடந்தகரத்தலைமூளைதயிர்போலேசிந்த, நெற்றியுடையப் பார்த்த கண்கள் முகம், மூக்குநைய, தோள்சரியக் குடற்பிதுங்க இரத்தம்பீறிட்டாறுயோடக் கொன்று, நாய்நரிக்கு விருந்திட்டார்கள். இவ்வித முசிலிமானவர்கள் செய்யுஞ்சமர்த்தோடு அல்லாகுத்தஆலாவுடைய முனிவுங்காபிரீன்கள் பேரினுண்டானதால், அக்காபிரீன்களாற்றுமறறேற்றுக்கூடாரங்களை விட்டுவிட்டோடினார்கள்; அதுகண்டு தீனானவர்கள் அல்லாகுத் தஆலாவைப் புகழ்ந்து சத்துருக்கள்வெட்டுண்டிறந்த சண்டைக்களத்திற் போய்ப் பார்க்கும்போது (5500) சத்துருக்கள்செத்து நாய் நரிபிடுங்கித் தின்னக் கிடப்பதைப்பார்த்துக்கொண்டுபோய்க் கூடாரங்களில் நுழைந்து, அங்குள்ள திரவிய முதலான யாவையும் கொள்ளையாடிக்கொண்டு அவர்க ளிருப்பிடம்வந்தார்கள். அப்போது சூரியனும் அடைந்தான், அவ்விராவையிலிருபடைஞருஞ் செய்யவேண்டிய கருமங்களைச்செய்து நித்திரைசெய்தார்கள்.

பின்னர்சூரியனெழுந்து விடிவேளானபோது முகல்கீலென்பவன தன்படைத்தலைவர்கள் யாவரையுமழைத்து, அவர்களைப்பார்த்துக் கொஞ்சச்சனங்களாகிய தீனானவர்களுக்குத்தோற்றிருந்தோடியகம்மிணாட்டிகளே! நீங்கள் சண்டையிலூக்கங்காட்டாத தினாலுங்களுக்கெல்லாம் நமது தேவசஞ்சீவியான பாருசுடைய கோபமுங்கடூரமுனிவுமுண்டாகி விட்டதென்றுசொன்னான். அதுகேட்டு அவர்கள்யாவரும் பயந்து இனிமேல்நாங்கள் ஊக்கங்கொண்டு படையில்நிற்கிறோமென்றுசொன்னார்கள். அதுகேட்டு முகல்கீல் அவர்களைப்பார்த்து நீங்கள் சொன்னபடி படைமுகத்தி லூக்கங்கொண்டு பின்னிடையாமல் நிற்பீர்களாகி லுங்களுக்கு நான்மிகுந்த வெகுமதி செய்வேனென்றுறுதிசொல்லி மனதைரியம்பூட்டினான். அப்போதுடனே படைவீரர்கள் கடலைப்போலிரைந்து குதிரைகளின்மேல் சவாராகினார்கள் அதுகண்டு முகல்கீல்சந்தோஷமாகித் தன்குதிரைமேல் சவாராகிப் படைகளை நடாத்திச்சண்டைக்களத்தில் வந்துநின்று குதிரையை வடசாரி இடசாரிவிட்டு முசிலிமானவர்களைச் சண்டைக்கு வாருங்களென்றழைத்து வாள்வீசிநின்றான். அதுகண்டு அலிறலியல்லாகு அன்கவர்களும், மற்ற தீனானவர்களுங் கடூரமான கோபங்கொண்டு ஐங்கதிநடக்குங் குதிரைகளிலே சவாராகிச் சிங்கங்கள்போல் வந்தெதிர்த்துச் சத்துருக்கள்படையென்னுங்கடலைவற்றடிக்க வந்தெதிர்த்த வடாவாமுகாக்கினித் திரளையொத்து சீற்றங்கொண்டு நிற்கச்சே, சுகைறுல் ஆமிறு அக்கினிவேகமாகத் தமது குதிரையைச் சாரியிட்டுக் காபிரீன்களே, சத்துருக்களுடையசதை வகிர்ந்து நாய்நரிக்கு விருந்திடுகின்ற என்னோடு சண்டைக்கு வாருங்களென்றழைத்தார், அதுகேட்டுச் சத்துருக்களில்நின்று மதர்த்த சத்தாதுடைய மகன் ஆரிதென்ற பாதகன்வந்தெதிர்த்தான். அந்த ஆரிதோடுஞ் சுகைறுல் ஆமீறெதிர்த்துப் பலமாகச் சண்டை செய்து, அரைநாழிக்குள்ளே அவனை வெட்டிப்பிளந்து நரகம்போவென்றெறிந்தார். அதுகண்டு அவனுடன்பிறந்தான் வந்தெதிர்த்தான் அவனையுமப்படியே வெட்டிப் பிளந்தெறிந்தார்.

இதுபோல் ஒவ்வொருவராக இருபதுசத்துருக்கள் வந்துவந்தெதிர்த்தார்கள், அவர்களையும் சுகைறுல்ஆமிறு தனித்தனிவெட்டிப்பிளந்தார். அதுகண்டு சத்துருக்கள் அஞ்சிப்பயந்து மறுபடியொருவரும் சண்டைக்குவாராமல் பயம்பிடித்து நிற்கக்கண்டு, சுகைறுல்ஆமிறென்னுஞ்சுத்தவீரர் சண்டைக்களம்விட்டு அலிறலியல்லாகுஅன்கவர்

கள் நிற்குமெல்லைக்குவந்தார். பின்னர் வெள்ளியகிரணம்பாயுங்கிரீட மணிந்தமிருசுத்தவிரியரான மிகுதாது றலியல்லாகு அன்கவர்கள் சத்துருக்கள் படையணிக்கு முன்போலத் தமது வீரபராக்கிரமங்களைச் சொல்லிச் சண்டைக்கழைத்தார்கள், அப்போது சத்துருக்களில் நின்றுமொரு சுத்தவீரியன் வந்தெதிர்த்தான். அவனை ஒருவெட்டிலிரு துண்டாக்கி வீசினார்கள், அதுகண்டுகாபிரீன்கள் ஒவ்வொருவராய் பன்னிரண்டுபேர்கள் வந்தெதிர்த்தார்கள். அவர்களையும் அப்படியே மிகுதாது றலியல்லாகு அன்கவர்கள் அருபத்துநான்குதுண்டாக வெட்டி வீசிவிட்டுத் தாவிப்பாய்ந்து, இரண்டுகாபிரீன்களைப்புலியானது பாய்ந்து ஆட்டுகிடாய்களைப் பிடிப்பதுபோலே புரடியைப்புடித்திழுத்துக்கொண்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் நிற்குமிடத்திற்கு வந்தார்கள். அதுகண்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் சந்தோஷத்துடனே மிகுதாது றலியல்லாகு அன்கவர்கள் கொண்டுவந்த காபிரீன்கள் இருவருங் கலிமாச்சொல்லாததினால் அவர்களை நாலுதுண்டமாக வெட்டி யெறிந்தார்கள். அதுகண்டு சத்துருக்கள் மிகுதீரத்துடனே தீனானவர்கள்பேரிலே கடலைப்போல் அடர்ந்தேறிப் பலபல ஆயுதங்களைக்கொண்டும் பலபலவிதமான சண்டைசெய்தார்கள், அப்போது தீனானவர்களும், அலிறலியல்லாகு அன்கவர்களுந் தக்பீர்ச்சத்த முழக்கத்துடனேமான் கூட்டத்திலே புலிகள்பாய்ந்தது போலேபாய்ந்து விழுந்து வெட்டிச்சத்துருக்களில் (1200) பேரைக்கொன்றுநரகத்திற் கனுப்பினார்கள்.

அப்போது சூரியனுமடைந்தான், அடைந்தவுடனே இரண்டு படைவீரருந் தங்கள் கூடாரம்வந்து சேர்ந்திருந்து மற்றநாட்காலையிலே யாவருமெழுந்திருக்கும்போது இறவுசுல்கூல் தன்மகன் முகல்கீலுக்கனுப்பிய மிகுந்த பொல்லாத நஞ்சிபோன்ற சுகைறுடைய மகன் னுருத்தாறென்பவன் (5000) சுத்தவீரருடனே கடலிரைச்சலாகவந்து காபிரீன்கள்படையிலே சேர்ந்தான். அதுகண்டு காபிரீன்கள் மனமகிழ்ந்தார்கள், தீனோர்கள்மனதிலே கொஞ்சமெண்ணமிட்டார்கள், அந்நேரத்திலொழுங்கான நபிநாயகத்தின் மகிழ்ச்சிபொருந்திய தல்கத்திபுனு அப்துல்லா அவர்கள் (1000) குதிரைச் சுத்தவீரியருடனே தசுபீகு, தக்குலீலு, சலாவாத்துச்சத்தத்தை முழக்கிக்கொண்டுவந்து, அலிறலியல்லாகு அன்கவர்களை முடுகி மரியாதையாகநின்று சலாஞ்சொன்னார்கள். அதுகண்டு அலிறலியல்லாகு அன்கவர்களு மற்ற முசிலிமானவர்களுஞ் சந்தோஷங்கொண்டார்கள்.

பின்னர் வந்தவர்களும் இருந்தவர்களு மொருவருக்கொருவர் நெஞ்சோடு நெஞ்சுசேர்த்து மினவிக்கொண்டார்கள் பின்னர் அலிறலியல்லாகு அன்கவர்கள் தல்காறலியல்லாகு அன்சவர்களோடும் இன்பமாகப்பேசி யவர்கள் வந்தகாரணங்கள் யாவையுங்கேட்டுச் சந்தோஷமாகி அல்லாகுத் தஆலாவைப் புகழ்ந்துகொண்டு பின்னர் அசுஹாபிமார்கள் யாவரையும் பார்த்து, என்னுயிர்ப்பிறவிகளே சத்துருக்கள் திகிலடையுஞ் சிங்கமானஷகீதும், வானத்திடியேறு போன்ற சுகைறுல் ஆமிறும், அல்லாவுடையகத்தியான காலிதிபுனு வலீதும் ஆகிய இம்மூன்றுபேறும் (1000) குதிரைவீரருடனே வலதுபாகமாகச் சத்துருக்கள்படையிலே முன்னேறவேண்டும், தருமத்தைக் கைவிடாத புலைவிபுனு அப்பாசும், பலத்ததல்காவும், புகழுடைய மிகுதாதும் ஆகிய இம்மூன்றுபேறும் ஐங்கதிக்குதிரை வீரர் (1000) பேர்களுடனே அல்லாகுத் தஆலாவினருளின லிடதுபாகமாகச் சத்துருக்கள் படையிலே முன்னேறவேண்டும்.

இவ்விதம் இடிபோலே யிருபாகத்திலும்போய் அங்கிருந்துவருகிற காபிரீன்கள் படைத்தலைவர்கள் முடிகின்றல் நமதுபடைத்தலைவர்களே நெருங்கிவெட்டவேண்டும் காபிரீன்கள் படைவீரர் வந்தெதிர்த்தால் அழகியவாளையுடைய அசுஹாபிமார்கள் நெருங்கிநின்றுவெட்டவேண்டுமென்று சொன்னார்கள், அதுகேட்டுத் தலைவர்கள் சந்தோஷமாகி அசுஹாபிமார்களிரண்டாயிரம் பேருடனே யிரண்டுபாகத்திலும் பிரிந்துபோனார்கள். பின்னர் அலிறலியல்லாகு அன்கவர்கள் மற்ற அசுஹாபிமார்களுடனே அவ்விரண்டு அணிகளுக்கு முன்னாலே எழுகடற்சத்தமும் பின்னடையத்தக்கதான தக்குபீர்ச் சத்தத்துடனே சென்று சண்டைக்கள மடுத்தபோது காபிரீன்களுஞ் சண்டைக்காயத்தமாகி யெதிர்த்தார்கள், அப்போது முசிலிமானவர்களும் பாவிநின்று காபிரீன்களோடுகடோமாகிய சண்டைசெய்யச்சே அலிறலியல்லாஹு அன்கவர்கள்நின்றுவெட்டுகிற இடத்திலேகாபிரீன்களாயிரம்பேர்கள் மட்டில்வெட்டுண்டு துண்டங்களாகி விழுந்தார்கள்.

இவ்விதம் அலிறலியல்லாகு அன்கவர்கள்வெட்டும் வெட்டுக்காயத்தில் நின்று மிரத்தம் ஆறுகவோடும் விரைவைப்போலே இருண்டு நஞ்சுகுடியிருக்கும் நெஞ்சையுடைய மற்றக்காபிரீன்களோடினார்கள். அப்போதுமிகுதாதிபுனு அசுவதுகிந்திறலியல்லாகு அன்கவர்களுடனே இடது பாகத்தில் நின்று சண்டைசெய்கிறதீனை விசாலமாகவவர்

கள் சரீரங்கள்வெட்டுண்டு பிணமாகக்கிடக்கிறசத்துருக்களின் கூடாரங்களிலேபுகுந்து மனமகிழ்ச்சியுடனே அங்குள்ள சாமக்கிரியைகள் யாவையுங் கொள்ளைசெய்யும்போது முறிந்தோடிய காபிரீன்கள் திரும்பிவந்து நெருங்கிவேகமாய்ச்சண்டை செய்ததினாலே மிகுதாது றலியல்லாகு அன்கவர்களுக்கு மூன்றுகுத்துக்காயமும் தல்காறலியல்லாகு அன்கவர்களுக்குத் தலையிலோர் பெரும்வெட்டுக்காயமும் பட்டிருக்கக்கண்டு, அசுஹாபிமார்கள் மிகு கோபங்கொண்டவர்களாகிச் சிங்கநாதமிட்டுப் பாய்ந்து, அந்தக்காபிரீன்களையெல்லாம் நெக்கியடித்துத் துரத்திவிட்டு அதிலே முந்நூறுபேரைச் சிறைபிடித்தார்கள். முன்னர் மிகுதாதுறலியல்லாகு அன்கவர்களுந் தல்காறலியல்லாகு அன்கவர்களுஞ்செய்த சண்டையினாலே (5000-ம்) காபிரீன்கள் தங்கள் குதிரையோடும் வெட்டுண்டு நாகவாதிக ளாயினார்கள்.

முகல்கீல் போருக்கெழுந்தசருக்கம் முற்றிற்று.

## றசூலுல்லாபடைக்கு வந்த சருக்கம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்

மும்மண் டலங்க ளெவ்விடமு முதிரும் புகழினபியிறசூல்
தம்மண்டலமா மதீனநகர் தனினின் றரிய தானையுடன்
கம்மென் றுடல வாசனையே எாதங் கமழ வெழுந்தருளி
பம்முகடற்போ லுறத்தீனர் படையில் வரும்வாறிசைத்திடுவாம்.

### இதன்பொருள்.

மும்மண்டலங்களான ஏனலோகம், பூலோகம், சுவர்க்கலோக முதலிய எவ்விடங்களிலு முதிர்ந்த புகழையுடையநபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லந் தங்களுக்குரித்தாயிருந்து தீன்மார்க்க இராஜரீகஞ்செய்யும் பூமியாகிய திருமதீனமா நகரத்தில் நின்றும் சொல்லுதற்கரிதான படையோடும் காதகாதவழித்தொலைக்குங் கம்மென்று களபகஸ்தூரிவாசனை கமழும்படியாய் எழுந்தருளி

யாகி இங்கேசண்டைக்களத்திற் பொருந்திய கடலைப்போற்கிடக்கும் படைக்கூட்டத்தில் வரலாறுகளைச்சொல்லுகின்றும்.

## சரித்திர வசனம்.

இவ்விதம் காபிரீன்களின்படைஞர்குதிரைகளுடனே ஐயாயிரம் பேரிறக்கக்கண்ட சூரியன், அலிறவியல்லாகு அன்கவர்கள் முதலாகிய அசுஹாபிமார்களுடைய குதிரையின் வேகமான நடைக்குமுன்னேநம்முடைய தேரினுெற்றையுருளையை இழுக்குங் குதிரையுடைய வேகமொரு பொருட்டல்லவே யாதலால் நாமிங்கே முகங்காட்டிக் கொண்டு நிற்பதிலே காரியமில்லையென்றுவெட்கிமறைந்ததுபோலே கீழ்பாற்சமுத்திரப் பாரிசமாகப்போய் மறைந்துகொண்டான். பின்னர் காபிரீன்கள் மனம்போ லிருண்ட இருளெங்கும் பரந்தபோது அலிறவியல்லாகு அன்குடனே தீனுனவர்களுடைய மனப்பிரகாசம் போலே நட்சதிரத்துடனே சந்திரனெழுந் தொளிசெய்தான் அப்போது அசுஹாபிமார்கள் யாவரும் நித்திரைசெய்தார்கள். நித்திரை செய்த அவ்வசுஹாபிமார்களின் முகம்போலத்தாமரைகள் விரியும்படியாய்ச் சூரியன்கீழ் பாலினுதையஞ் செய்தான் பின்னர் இறவுசுல் கூல் தன்மகன் முகல்கினுடைய படைமுறிந்து முதற்கோட்டையெல்லைமட்டிலே வந்ததைக்கேள்விப்பட்டுச் கோபமிகவு முண்டாகியுடனே திறத்த குதிரைவீரர்கள் பதினுயிரம் பேர்களையழைத்து அவர்களுக்கு உப்பாதாவுடைய மகன் கொடும்பாதகனை இகுறுமென்பவனைத் தலைமையாக்கிப் படைக்களம்போவென்று சொன்னுன்.

அதுகேட்டவன் சந்தோஷமாகி ஆயுதபாணிகள் இரத்தின மாலைகள் முதலிய படைவுஸ்துகளணிந்துகொடி, குடை முதலிய விருதுகளோடும் பேரிகைமுதலிய வாத்தியசப்தமுழங்கப் படையை நடாத்தி வந்தான். இன்னுந் தொடராக இறவுசுல்கூலென்னும் பாவி பதினுயிரங் குதிரைவீரரையழைத்து அவர்களுக்குக் கொடுமையும், பாவமு நீங்காத சபுவா னென்பவனைத் தலைமையாக்கி அவனைப் பார்த்து ஓகே சபுவானே! நீ இந்தப்படைகளுடனே சண்டைகளம் போவென்றுசொன்னுன். அதுகேட்டு பாதகனை சபுவா னென்பவன் சந்தோஷமாகி விருது வாத்தியங்களுடனே கடலைப்போல் அந்தப்படைகள் சூழத் தானேறிய குதிரையைவேகமாக நடாத்திக் கொண்டுவந்தான், பின்னும்.

இறவுசுல்கூல் தான்செய்த பாவந்திரண்டு ஒருருவங்கொண்டுவந்ததுபோல வந்தமகனை, இக்கிரிமத் தென்பவனுடனே பதினாயிரங் குதிரைவீரரைச் சேர்த்து விருதுகளனேகங்கொடுத்து, அவனையும் பார்த்து என் அருமையான மகனே நீ இந்தப்படைகளையுங் கொண்டு படைக்களம்போவென்றனுப்பினான். உடனே அந்த இக்கிரிமத்தும், குடை, கொடி, வெண்சாமரம், ஆலவட்ட முதலிய விருதுடனே, பேரிகை சிச்சரி, திடிமன், தம்பூரு, வீணை சின்னங் காகளமுதலிய வாத்தியங்கள், கோடையிடியைப்போலே முழங்கப், படைகள்சூழத் தன்குதிரையை நடாத்திவந்தான். இவ்விதம், திண்ணிய தோள்பலத்தையுடைய பாதகனான இறவுசுல்கூலனுப்பிய நாற்பதினாயிரங் குதிரைவீரியரும், நாலுபாகமாகவந்து சண்டைக்களமடுத்துத் தலைமையாகவந்தவர்கள் முகல்கீலுக்குத் தாழ்ச்சிசெய்தார்கள்.

அதுகண்டு, முகல்கீல் மிகுசந்தோஷங்கொண்டு வீரமுரசைக்கணகணென்று எவ்விடங்களிலும் அடிப்பித்தான், இவ்விதங்காபிரீன்கள்செய்யும் கடபிடியையும் அவர்களுக்குதவிக்குச் சனம்வந்ததைத் தீனோர்கள் கண்டு கவலையாகினார்கள். அப்போது அல்லாகுத் தஆலாவுடைய அரசுப்புலியாகிய அலிறலியல்லாகு அன்கவர்கள், அசுஹாபிமார்கள் யாவரையும் பார்த்துச், சகலதிறத்தையும், வெற்றியையுமுடைய அல்லாகுத் தஆலாவினுதவி நமதிடத்திலதிகமுண்டும் ஆதலால், அல்லாகுத்தஆலாவுடைய கூட்டமாகிய நீங்கள், இபுலீசுடைய கூட்டமாகிய அந்தக்காபிரீன்களின் பெரும்படையைக்கண்டு யோசிக்கவேண்டாமென்று மிகுதிடங்கள்சொல்லிப் பின்னர் அம்றிபுனுவுமையத்துல் லமீரியையும், அப்துல்லா இபுனுசுல்சுகுனியையும் அழைத்து ஒகே நீங்களிருவருமாக சீக்கிரத்துடனே இரவும்பகலுமாக திருமதீனமாநகரத்துக்கு நடந்துபோய்ச்சேர்ந்து, நபிநாயகமவர்களைக்கண்டு அவர்களுக்கென்சலாஞ் சொல்வதுடனே, இதுவரையிலிவ்விடத்தில் வந்து சண்டைசெய்வதில் அல்லாகுத்தஆலாகிருபையினாலே வெற்றியேதவிரத் தோற்பில்லையென்றும், இப்போது நாலுதலைவர்களுடனே, இறவுசுல்கூல் நாற்பதினாயிரம் படைகளை யனுப்பியிருக்கிறானென்றும் சொல்லி அவர்களாலே கிடைக்கிறவுத்திரவைவாங்கிக்கொண்டு வாருங்களென்று சொன்னார்கள்.

அதுகேட்டுடனே அவ்விருவரும் அலிறலியல்லாகு அன்கவர்களுடைய பாததாமரையிலே பணிந்தெழுந்து வாலிபர்கள் வில்லைவ

ளைத்து எய்யும் அம்புவேகத்திலும் அதிகமான மனவேகத்துடனே இரவும்பகலுமாக நடந்தார்கள், இங்கேயிவ்விதமாக இருக்கச்சே அங்கே சண்டைக்களத்திலே கரோம்பொருந்திய, முகல்கீல் தன்படைஞரையும் உதவிக்குவந்த நாற்பதினாயிரம் படைஞரையுமழைத்து, அவரவர்கள் தாரதாரப்படி மனப்பூரணமாகுதற்குப் பலபல வெகுமதிஇனம்கள் சந்தோஷமாகக்கொடுத்து, உங்களுக் கிதுமாத்திரம்வெகுமதியல்ல உங்கள் திறத்தினாலே நாம் ஜெயங்கொண்டால் அனேகபொற்பொருள்கள் இரத்தினாதிகளெல்லா மனம்போல தருவேனென்று சொன்னான். அச்சொல்லினாலே, அந்தப்பாவிகளாகிய படைஞர்மனமகிழ்ந்து தன்னைமறந்து தலைகீழாகி "அற்பருக்குப் பவுசுவந்தாலர்த் ராத்திரியிலே குடைபிடிப்பானென்பதுபோலே" காபிரீன்களெல்லாங் கொர்ச்சித்து ஆனந்தபாஷ்காமுண்டாய்ப் புதுக்கூடாரங்களெவ்விடத்திலும், வெள்ளிமலையைப்போலே யடித்து நடுவிலே ஓர், சுவந்தகூடாரமடித்து அதிலேமிகு சோடனையுஞ்செய்து உச்சத்திலே தங்கக் கலசமும்வைத்து, இராசன் முகல்கீலுக்கிருக்கச் சொல்லிப் பின்னர், வழுகடற்சத்தத்தைப்போல் வெற்றிமுரசு, விரமுரசு மற்ற முரசுகளையு மடித்துப் பூமிகுலுங்கும்படியா யாரபாரத்துடனே, எவ்விடங்களும் கொடிநாட்டி, வாளாயுதமுதலிய மற்ற ஆயுதம் யாவையுந்தீட்டி மினுக்கி வுயுத்தப்ரசன்னராக விருதுகள் ஒன்றுக்கொன்றுராஞ்ச, ஆயுதங்கள் ஒன்றுக்கொன்றடிபட்டு நெருப்புப்பொறிபறக்க ஐங்கதிக் குதிரைமேலேறி மதயானைகளைப்போலே படைக்களம்நெருங்கி அலிறவியல்லாகு அன்குமுதலிய தீனுனவர்கள் சண்டைக்கு வருவதை யெதிர்பார்த்து நின்றார்கள். அதுகண்டு, அலிறவியல்லாகு அன்கவர்கள், அசுஹாபிமார்கள் யாவரையும் பார்த்து வேதமுறையே பலபல உறுதிகளைச்சொல்லித் தங்கள் கையை, அல்லாகுத்த ஆலாபக்கலிலுயர்த்தி மனங்கனிந்துருகி, துஆக் கேட்டார்கள். அதற்கு, அசுஹாபிமார்கள் யாவரும் ஆமீன் ஆமீனென்று அல்லாகுத் தஆலாவிடத்திற்றேடும் உதவிவாக்கியத்துடனே அவரவர்களுடைய குதிரைமேலேறிச்சிங்கங்களைப்போலே, கொடி, குடை, முதலிய விருதினங்களுடனே சண்டைக்களத்தில் வந்து நின்றார்கள், இவ்விதம். இருபடைஞரும்சண்டைக்களத்தில் ஆயுதங்களை யுருவிக்கொண்டு சண்டைசெய்யாமல் நிற்கும்போது,

## இஃதிச்சரித்திரபுராணத்திலுள்ள.

### எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தங்கள்.

இவ்விதமிகலின்களத்திருபடையு மெதிர்த்து றமெல்வையின்முதனீர்
செவ்வையினனுப்புமிருவருஞ்சென்றே திருநபிக்கிங்குறலெவையுந்
திவ்வியமாகவுரைத்திடக்கேட்டுச் சேனையோ டடுத்தனரென்ன
நவ்விமெய்யிறசூலமான்மதத்தூது நாற்புலிகாசியுற்றதுவே (15)

வள்ளனம் மிறசூல் வருகிரு ரென்ன மான்மதத் தூதுமுன் வரலா
லள்ளிலைக் கதிர்வே ல்விமுதல்யாரு மானந்தக் கடற்குளித் தவரா
யுள்ளக மகிழ்ந்து நபிவரும் வழியை யுற்றொரு பார்வையாய் நிற்பக்
கள்ளகக் குபிரர் கலங்கிட நபினர் கற்கிமேல்வந்திடக்கண்டார். (16)

கரிந்திடு தருவின் கட்டைக டழைத்தே கவின்கொளும் பண
றெனுங்கரங்கள், சரிந்தடி வருடித் தளிரினல் வீசத்தனித்தனி பன்
னிரைமலர்கள், விரிந்தணியணியாய்ப் பல்வனப்படங்கள் விரித்தெதன
வருநெறி சிறப்ப, வருந்திற லலிகண் குளிர்ந்திட விறசூலச்சுவமிசை
யில் வந்தனரால் (17)

விண்ணகத் தமரரினி துவந்தேத்த விளங்கார மகளிர்கள்போற்ற
மண்ணகத்திருந்த விலங்கினம்வாழ்த்த மாங்கள்புற்பூடுரை சாற்றக்
கண்ணகத்துவட்டு மற்றருங்காத்தினுவணியொன்றிலங்கநல்லலியா
வுண்ணகங்களிக்கநபிமுகம்மதனர் கலினவெம்பரியில் வந்தனரால், ( )

நறையுறுந்தருக்க ளிருபுறந் தொழுங்காய் நலன்பெற வலர்ந்த
பொற்போதைச், சிறையளியறுகா லுழக்குபுகுடைந்து சிந்துத லரம்
பையர் கணங்கள், கறையறக் குபிர்க்கண் ணோறடா தகலக் ககனிருந்
தலரினு லாற்றி; யெறிவதை நிகர்க்குநெறிகடந் திறசூலெழிலலி மகி
ழ்வந்தனரால். (19)

அபுபக்கர் வலபான் மன்னுமறிடபா னறையுது மானவர் பிற்பான்
றவமிகும் புகழன் றுடனப்துல் லாவுஞ் செடிலமென் படிதொடுகாரா
புவகையங் கடலி னுறசகு பியர்கவொருபதி னுயிரர் சூழக்
கவனவெம் புரவி மிசைநபி யலியார் கவலைக ளறும்படிவந்தார். ( )

விரிகொடி குடைகண் மூளைத்துறு சேனைவிடாதினமேவினிற்கதிரி,
னருணனென்றெழுந்து பிரபைசெய் துறல்போ லம்புயமிலங்கமான்
மதமே, சொரிதரத் தக்குபிரொடுதகுலீ லுங்துளங்கு காகாமெனமு
ழங்க, முரசொலி கறங்க முகம்மது நபினர்முடுகின ரலியுறு தலமேல்

வசனம்.

இவ்விதம். ஒப்பற்ற நபிநாயகமவர்கள் வருகிறதை யவர்கள் சரீரத்திற் கமழுங் கஸ்தூரிவாசனையாகிய தூது, முற்படவந்து அலிறலியல்லாஹு அன்கவர்களுக்கு அறிவித்தது, அஃதியாதெனில், யாஅலியே தேவரீர் தாங்கள்நபிநாயகமவர்களிடத் திற்கனுப்பிய அம்றிபுனுவுமையத்துல் லமீரியும் அப்துல்லா இபுனுசுல் சுகுனியும்; காடுகரைமலை, வனம் வனாந்திரம் யாவையு மிரவும் பகலுமாகநடந்து கடந்துபோய் அந்தநபிநாயகத்தைக்கண்டு, இங்குநடக்கின்றசண்டைச்செய்திகளையும் உங்களுடைய சலாத்தையும் சொல்லக்கேட்டு உடனேநபிநாயகம் "கவுக்கலாச்" சொன்னவர்களாகப் படைகளைத்திரட்டிக்கொண்டு, பிரயாணமாகி வருகிறார்களென்று சொல்வது போலேபடைக்களத்தில்நிற்கின்ற அலிறலியல்லாகு அன்கவர்களுடைய நாசிக்குமணங்கமழ்ந்தது. அப்போது, சூரியவாளை யொளிபிரகாசிக்க கையிற்பிடித்துச் சத்துருக்களை ஹதஞ்செய்யும் அலிறலியல்லாகு அன்கவர்களும், மற்ற அசுஹாபிமார்கள் யாவரும் ஆனந்தத்துடனே மனமகிழ்ந்து நபிநாயகம் வரும்வழியைப் பார்த்தவர்களாகநின்றார்கள் நிற்கையில், நம்நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள், கள்ளமனக்காபிரீன்களான, சத்துருக்களுடையமனங்களெல்லாங்கலங்கி, யேக்கழுற்றுப் பரிதபிக்க ஓர்பஞ்சகல்யாணிக் குதிரை மேலேறிக்கொண்டு வரும்வழியிலே, கரிந்து நிற்குமரங்கள் தளிர்த்துப்பூத்துப் பூவோடுங் கொம்புகள் சரிந்து, தங்கண்பாததாமரையிலே பூக்களைச்சொரியவும், அவைகளின் றளிரென்னுங் கைகளாற்றங்களுடலிற்றூசுபடாமல் விசிறியைப்போல்வீசவும், வானவர்களும், அவ்வானவர்களின்பெண்களான கூறல் கீன்களும் வாழ்த்திப்போற்றவும் விலங்கினச்சாதிகள் புகழ்ந்தேத்தவும், மரங்கள், புற்பூடு, சலாஞ்சொல்லித்துதிக்கவும் முழங்காலுக்குநீண்ட வகயிலோர் வாளாயுதம் இலங்கவும்வழிகளில் மரங்களிலிருந்து சொரியும் பலவன்னப்பூக்கள், கூறில்கீன்கள் காபிரீன்களுடைய கண்திஷ்டியடாது, வானலோகத்திலிருந்து ஆலாற்றிசுற்றிவீசுவதுபோ லுதிர்ந்துகிடக்கவும், அபூபக்கர்சித்தீக்கு றலியல்லாகு அன்கவர்கள் வலதுபாகத்திலும், உம்றிபுனு கத்தாபுறலியல்லாகு அன்கவர்கள் இடதுபாகத்திலும் உதுமானிபுனு அப்பாசுறலியல்லாகு அன்கவர்கள் பிற்பாகத்திலும், அம்றிபுனுவுமையத்துல் லமீரியும் அப்துல்லாஇபுனு சுல்சுகுனியும், குதிரையுடைய யங்கவடியைக் கையா

லே தொட்டவராகவும்; பதினாயிரம்அசுஹாபிமார்கள்பளபளென்றொளிரும் வாட்பிடித்தவர்களாகச் சூழவும், கொடி, குடை, ஆலவட்டம் விசிறிமுதலிய விருதினமென்று மேகத்தினிருளிலே யெழுந்துவரும் ஆயிரங் கிரணங்களையுடைய சூரியனைப்போ லொளிசெய்யும் தங்கள் சரீரத்திலே களபகஸ்தூரி வாசனைபரிமளித்து, வீசவும், தக்குபீறு, தகுலீல், சப்தமுழங்கவும், பதினெட்டு மேளவாத்தியச் சப்தங்கடலைப்போல்விடாது சப்திக்கவும், எழுபதினாயிரம் வானவர்கள்பொற் பாத கமலங்களைக்காக்கவும், அலி றலியல்லாகு அன்கவர்கள் முதலிய தீனானவர்களுடைய மனமகிழ்ந்து புயம் பூரித்தோருடனு மீருடலாகவும், பயஹாம்பர் நபிமுகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் படைக்கள மடுக்க வந்தார்கள்.

இவ்விதம்வரும் நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு முன்னாலெதிர்கொண்டு அலி றலியல்லாகு அன்கவர்களும் கடற்போலுள்ள முசிலீ மானவர்களும்போய் அழைத்து எற்றிப்போற்றி, அவர்களின்பாத தாமரையைப், பணிபவருங்கையைமூந்திக்கொள்பவரு மாகத்தீன் தீனென்னும் சப்தமுழங்கத் தாங்கள்நின்றவிடைக்களத்திலே கூட்டிக்கொண்டு வரும்போது சத்துருக்களுடையபடையென்கிற கடலையும், அந்தக்கடலி னுரைபோன்ற குடைகளையும், அதினலைகளின் சப்தத்தையும்போன்ற கனைப்பையும்; பாச்சலையுமுடைய குதிரைகளையுங் காடுகளினடர்த்தி போன்ற கொடியடர்த்திகளையும் உயர்ந்த செம்மலைபோன்ற செவந்தகூடாரங்களையும் இன்னுமற்றஆபாரிக்க மனத்தையும், நபிநாயகமும், மற்ற அசுஹாபிமார்களுங் கண்டார்கள், இதுபோல், வள்ளலானநபிநாயக மவர்கள் வருவதையும் அவர்களின் படையென்ற கடலையும் வெள்ளைமேகம்போன்றகுடைக்கூட்டங்களையும், பூங்காவனம்போன்ற கொடிகளின் பெருக்கங்களையுங், கடலலையின் பாய்ச்சலிரைச்சற்போல் அனுமானித்துக்கனைப்புடனேபாயுங்குதிரைகளையும், மற்றும் ஆபாரிக்கம் யாவையும் கள்ளவுள்ளத்தையுடைய காபிரீன்களான படைஞரும், அப்படைத்தலைவருங்கண்டார்கள். கண்டவுடனே முகல்கீலென்னும் பாதகன் தன்படைஞரிலொரு திறத்தவனை, இடியைப்போலேசப்தமிட்டு அழைத்து அவனைப்பார்த்து ஓகே, வீரனே நீபோய்'இப்போது தீனானவர்களுக்குவந்தவுதவிப்படையிலோர் தலைவன் குதிரையின்மேலேவந்தான் அவனைப்பார்த்தாற் திறத்த இராஜதகுதியுடனே வந்தவனாகத்தோற்

றுகின்றது, ஆதலால்,அவனேயின்னுனென்று சாவி அறிந்துவாவென்றுசொன்னுன். அதுகேட்டடனே, அந்தத்தூதன் வானவர்கள் புகழப்பெற்ற நபிநாயகமவர்கள் மருகரான, அலிறலியல்லாகு அன்கவர்களே படைகளிருக்குமிடத்தில்வந்து அசுஹாபி மார்களேப்பார்த்து, இப்போது உங்களிடமாக வந்த படைத்தலைவர் யாரென்றதற்கு அவர்கள வனேப்பார்த்து, அல்லாகுத்த ஆலாவின் அழகிய தூதாக வுபர்ந்த ஹாஷிம்குலத்திலுற்பவித்துவந்த முகம்மது நபிசல்லல்லாகு அலைகி வசல்லமென்று, நபிநாயகத்தின் காரணப்பெருமையடங்கலேயும், அக்தக்காபிரானவர் மனமதிஜுபித் தேங்கும்படி சொன்னுர்கள்.

அதுகேட்டு, அவன்மனம் பயந்து திடுக்கிட்டு அம்புவிசையாய்ப் போய், துறவிகளாலறியத்தக்க,அல்லாகுத்த ஆலாவின் றூதர்நபிநாயகத்தின் செய்கையனைத்தையும், அசுஹாபிமார்கள் சொன்னதுபோலொன்றேனு மறக்காமல், முகல்கிலென்பவனேயடுத்து இவனேப்பார்த்துப்; புகழ்ந்துபேர்பெற்ற மதயானேபோன்ற இராஜகுமாரனே, இப்போது நீனுனவர்கள்படையுடனே வந்ததலைவராகிறது புறக்காளென்னும் வேதமைழையைமனு வென்னும் பயிர்தழைக்கப்பெய்யும்புத்தியுடைய மேகமாயும், காரணகடவுளாயும், வானவரேவல்செய்யும்புத்தியையுடைய பூரணமதியாயும் அப்துல்முத்தலிபுடையமகன், அப்துல்லா அவர்களுடைய தவமகவாயும் விளங்கும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமாம்; இப்போது அவர்கள் படைக்குவந்திருக்கிறபடியால், இனி, நமதுபடைகள் அவர்களுடனே யெதிர்த்து நாசமாய்ப் போகுமே தவிர வேறில்லை யென்பதாகத் தீனுனசுத்தவீரர்கள்சொல்லுகிறுர்களென்று அறிவுடைய மனத்தனுன அந்தத்தூதன்சொன்னுன், அதுகேட்டு, முகல்கிலென்றபாதகன் மிகுகோபங்கொண்டு அந்தத்தூதனேப்பார்த்து; அடாகொஞ்சமும் பயமில்லாமல் என்முகதாவில் வந்து, அந்த முகம்மதைப் பெருமையாகச்சொல்லுகின்றமையால் நீ நம்மினத்தவருக்கெல்லாம் பகைஞனென்றும், நஞ்சிபோன்றவனென்றும் இனி நீ இருக்கக்கூடாதென்றும் பேசிஅவனேக் கூரியவாளினுல் வெட்டிவிட்டான்.

அப்போது அல்லாகுத்தஆலாவின் தூதான நபிநாயகமவர்கள் சொற்படிவணக்கத்தையுடைய முசிலீமானவர்கள் யாவரும் கடலைப் போலே கர்ச்சிப்புடனே குற்றமற்ற, குதிரைகளின்பேரிலேறிச்சிங்கங்

களைப்போலே படைக்களம்போகும்போது, புகழையுடைய ஜிஜாமென்பவர் தம்கையிலிருந்த வெற்றிக்கொடியை விரித்துப்பிடித்து அசைத்து இரண்டு படைக்குநடுவிலே நின்று சிலபயித்துகளைச் சொன்னார் அது கேட்டுச் சத்துருக்கள் தலைவன் முகல்கீலென்பவன் தன்படைஞர்யாவரையும்பார்த்து நீங்கள் முகம்மதுடைய செய்கையின்னதென்றுதெரிந்துக்கொண்டு, பின்னர் நமதுசத்துருக்களுடனே சண்டையைநெருங்கிச்செய்யுங்களென்றான். அதுகேட்டுக்காபிரீன்களெல்லாந் தங்கள் தங்கள் குதிரையைத்திருப்பி விட்டுக்கொண்டு தாங்களிருக்குமிடம் வந்துவிட்டார்கள். அது கண்டு நபிநாயகம் அவர்களுந் தங்கள் படைகளைத்திருப்பிக்கொண்டு தாங்களிருக்கு மிடத்திற்குவந்தார்கள் அப்போது சூரியனுமடைந் திராவுகாலமானதால், இரண்டுபடையோர்களும் நித்திரையில்லாமல் அகஸ்மாத்தாய் எதிரிகள் வந்துவிழுவார்களென்ற எண்ணத்துடன் கண்விழித்திருக்கச்சே, காலைநேரந் தோற்றியபோது முசிலிமானவர்க ளெல்லாரும் பின்னிலையாகநிற்க, நபிநாயகமவர்கள் முன்னிலையாகநின்று அல்லர்குத்த ஆலாவைத்தொழுது வேதவாக்கியங்களை யோதிய பின்னர், நபிநாயகம் அசுஹாபிமார்களைப்பார்த்துச் சண்டைக்களம் போங்களென்று சொன்னார்கள். அது கேட்டு அவ்வசுஹாபிமார்கள் யாவரும் உயுத்தப் பிரசன்னராகப்புலிகள்போலே குதிரைகளிலேறிப் படைக்களம்வந்தார்கள். அதுகண்டு, இருண்ட நெஞ்சையுடைய முகல்கீலென்பவன் தனதுபடைகளிலே நாற்பதினாயிரம் குதிரைவீரரை யணிசெய்து, அதிலே இருபதாயிரம் பேரை வலதுபக்கத்திலும் மற்றயிருபதாயிரம்பேரை இடதுபக்கத்திலும் இன்னும் நாற்பதினாயிரம் வீரரைத் தனக்கு முன்புறத்திலும் பின்புறத்திலும் விட்டுத் தானழகிய வாயுவேக மனவேகமுள்ள இரத்தினச்சோடனைசெய்த குதிரையின் மேலேறி இவ்வெண்பதினாயிரம் படைவீரர்களுக்கும் நடுவிலேநின்றான்.

## இஃதிச்சரித்திர புராணத்திலுள்ள.

கலைநிலைத்துறைகள்.

நந்தனன் னபியவ னண்ணுஞ் செய்திகேட்
டுந்திடும் பரிபதி னாயிரத்தோடுந்
தந்தைதன் சிறசறத் தாக்கும் பாதகன்
வந்துதன் படைச்கள மருவிட்டானரோ (21)

பாதக்கொடியவன் படைக்குவந்ததைச்
சோதிநந் நபியுல்லா வறிந்து சொல்லுமிப்

பூதலத் தின்னைமின் பொதிந்த தென்னவே
யாதியை நினைத்துய ரங்கி பூட்டினர். (22)

வசனம்.

அப்போது முகம்மது சல்லல்லர்கு அலைகிவசல்லம் படைக்கூட்டத்திலே வந்துவிட்டார்களென்றறிந்து, தன் தகப்பன் றலையை வெட்டிய பாதகனான றவுசுல்கூல் பதினாயிரங் குதிரைவீரிய ருடனே, தங்கச்சோடனை இரத்தினசோடனைசெய்த குதிரையின்மே லேறிக்கொண்டு, தன்மகன்முகல்கில் படைக்கூட்டத்திலே வந்துசேர்ந்தான். அதையறிந்து நபிநாயகம் சூரியனைமின்பொதிந்ததுபோ லொளியுள்ள தங்கள்சரீரத்தில் வெள்ளிய கிரணம்பாயுங் குப்பாய மென்னுஞ் சட்டையைச் சிறப்பாக அல்லாகுத்த ஆலாவின் தியானிப்புட னெடுத்தணிந்து, முன்னர் நபிநாயகந் தங்கள் காரணத்தினாலே திமஸ்கு நகரிலிருந் தரசாட்சிசெய்யு மாலிக்குராஜாவின் குமாரர் ஹபீபு ராஜாகேட்டபடி அமாவாசை யிருளிராவையிலே பதினொரு கலையுடனே பூரணசந்திரனைக் கருபாவினுச்சியுல் வந்திருக்கும்படி யழைத்துவைத்த சிறப்புப்போலே பிரகாசமுள்ள தலைபாகையையெடுத்துத் தலையிலிட்டுப், பின்னர், அச்சந்திரனைத் தாங்கள் இரண்டு பிரிவாகப்பிரித்ததில், ஓர் பாதியின் வளைவுபோன்றகூன்வாளை இடையிலோர் பக்கத்திலணிந்து, முன்னர் தாங்கள் பூரணசந்திரனை யழைத் திருப்பதாலிப்போது, எவர்களேனும் இளம் பிறையை யழைத்துக் காண்பித்திருப்பது போலிறக்கைகளையுடைய அம்புகளனேகம்நிறைந்திருக்கும் அம்பாரக்கூண்டையெடுத்து வலதுபக்க முதுகிலணிந்து பின்னர்கடலைப்போல் வந்திருக்குங் காபிரீன்கள்சேனையைச்சுடவேண்டு மென்று வானுலகத்தைவிட்டுச்சூரியனானவன் முதுகுப்புறம் வந்திருப்பதுபோலே கேடயத்தையெடுத் திடதுபாரிசமாக முதுகிலணிந்து பின்னர்சத்துருக்கள் முகமென்றதாமரைப்பூவைவாட்ட அச்சூரியன்போன்றபிரகாசமுஞ்சூடுமுள்ளவாளாயுதத்தைக் கையிலேந்திப்பிடித்துப் பின்னர் சத்துருக்களினிருதயதாமரை கும்பியெண்ணமென்கிறநீரிலே தத்தளிக்கப்பிரகாசமான சந்திரகிரணம்பாயுங்குற்று வாளையுமணிந்துபின்னர் மற்றும்படை யாயுதங்கள்யாவையுமணிந்து இடையிலேபச்சைமாகத நிறம்போன்றகச்சைபாட்டையு மெடுத்துக்கட்டிமலைபோன்ற தோளி லுத்தரீகமென்னுந் துப்பட்டாவையுமணிந்துபின்னர் கிருபையிலங்கு மிருகண்களுக்குச்சுறுமாவு மிட்டுப் பின்னர், அறவில்மிதித்த

றிய பொற்பாதகமலங்களிற் கபுசையுமணிந்து பின்னர், அருகிலிருந்த ஏவலோர்களைப் பார்த்துத் தாங்களேறும் குதிரையைக் கொண்டுவரச் சொன்னார்கள்.

அந்த ஏவலோர்கள்சென்று அம்பைப்போல்விசையாகப்பாய்ந்து காபிரீன்கள் சேனையில்விழுந்து கோடையிடிபோலிடித்து இராஜாதி ராஜரை யெர்த்துத் தலையிலிருக்குங் கிரீடங்களின் இரத்தினந்தெறிக்க மிதித்து, அச்சத்துருக்களின் தேவிமார்கழுத்தி லணிந்திருக்கும் வயிரத்தாலிச்சரடவிழச் சின்னாபின்னஞ்செய்யும் அந்தக் குதிரையின் காலிலணிந்த பாளாசைத் தட்டிவிட்டு, இரட்டை கடிவாளம் வாயிலே பூட்டி, வில்லூரிப்பட்டில் நவரத்தினம் பதித்திருக்குங் கல்லணையை முதுகிலிட்டு நடாத்திக்கொண்டுவந்து நபிநாயகமவர்களின் திருமுன்னாலேவிட்டார்கள்.

---

## இஃதிச் சரித்திரபுராணத்திலுள்ள.

### கலிநிலைத் துறைகள்.

ஏவலர் நிறுத்திரி யிவுளி மேற்கையாற்
காவலர் தடவிடக் கருணை நாயகர்
பூவையென் செய்யவோ புகலு நம்முட
னீவின ரெனச்சுவ ருழ்த்து நின்றதே. 1

விடைமுடி நடுங்கிட விண்ணடுங்கிட
வடவரை நடுங்கிட மழை நடுங்கிட
வடையலர் நடுங்கிட வங்கு கால்பெயர்த்
திடுமரி யிசைநபி யேறி னாரோ. 2

படிதுக ளாக்கவோ பகரொ ணாதுயர்
வடவரை பிளக்கவோ வானை மோதவோ
கடலினைக் கலக்கவோ கழறு மெவ்வித
முடியவோ வெனப்பெயர்த் ததுபரி முனந்தாள். 3

தாலுவாய் மதமுறை தரிய லாரெனிற்
காலினா லெற்றுயிர் ககனி லேற்றிட

வேலுமோர் நொடியிலென் றுள்ளம் பூண்டரோ
நாலுதாளே யும்பெயர்த் ததுநல் வாசியே. 4

மங்குலின் கவிகையார் மகிழ்வு கூர்ந்திட
வெங்குபிர்க் கணங்களே மிதித்து நீடலே
பங்குசெய் திடக்குசை நெகிழ்த்துப் பார்மினென்
றங்குதன் கதியைந்தி னுடிக் காட்டுமால். 5

கறைமனக் குபிர்ப்படைக் கடலைச் சுற்றிட
விறைமுனி வெனும்படை யிவுளி யோட்டியோ
நறைகமழ் நபியுல்லா நான்கி யாரொடு
மறையவ ரணிமிசை வந்து நின்றனர். 6

வசனம்.

இப்படி யேவலர்கள் சோடித்துக் கொண்டுவந்துவிட்ட குதிரையின் முதுகின்மேல் மூன்றுலோகத்திற்குங் காவலாகிவரும் ஆண்டகையாகிய முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லந்தங்களுடைய இராஜாஜுவாகுவென்னு முட்டுக்குரீண்டு தாமரைப்பூவைப்போற் சிறந்த வலதுகையைவைத்துத் தடவும்போது, அந்தக்குதிரை தன்மனத்தில், நபிநாயக மிந்தப்பூமியை யென்னசெய்யநாடி நமது முதுகைத் தடவினர்களோவென்று நினைத்து, குனிந்து, உடலை நிமிர்த்ததுந் தவிர, பூமியைத்தாங்கியிருக்கின்ற எருத்தின் திமில்நடுங்க, ஆகாசம் நடுங்க, அஷ்டகிரிநடுங்க, மேகங்கள் நடுங்க, சத்துருக்கள் நடுங்கக் கால்களை மெதுவாய்த் தூக்கிவைத்துநிற்கும்போது, நபிநாயகமவர்கள், அக்குதிரையின்மேலேறி யிருந்தபோதும், அந்தக்குதிரை தன் மனத்தில், நபிநாயகமவர்கள் நமது மேலேறினது பூமியானவையுந்துளாக்கவோ, அல்லது, உயர்ந்தஅஷ்டகிரி பருவதங்களைப்பிளக்கவோ, அல்லது, வானத்தை மோதிப்பாய்வோ அல்லது கடலைக்கலக்கவோ, அல்லது, எவ்விதஞ்செய்யவோ வென்றெண்ணித், தனது முன்னங்காலைத் தூக்கியெட்டிவைக்கச்சே. மதம்பேசுங்காபிரீன்களைக் காலினுலெற்றி, யவர்களுயிரை யந்தரலோகத்திற் கேற்றலாமோர்நொடியிலென்று பூண்டவெண்ணத்துடனே நான்குகால்களையுமொன்றுக்குப்பின்னென்றுகத்தூக்கிவைத்துப் பின்னும்மேகக்குடையையுடையநபிநாயகமேதாங்கள் சந்தோஷங் கொள்ளச்சத்துருக்களினீண்டதலைகளை மிதித்துவிட்டு மூளையைச்சிதறிவிட எனதுகடிவாள

த்தைக் கொஞ்சம் நெகிழ்த்துப் பாருங்களென்பதுபோலே தலையைய சைத்து இங்கிதங்களேயும் நடனத்தாலாடிக்காட்டினது அந்தச்சயிக்கி னையைக்கண்டு வாசங்கமழுந்திருமேனியையுடைய நபிநாயக முகம் மது சல்லல்லாகு அலைகிவசல்லமர்கள் நான்குயார்களுடனே, மனமிரு ண்டாககாபிரீன்கள் படைக்கடலை அல்லாகுத்த ஆலாவுடையமுனிவு சூழும்படியாய்க் குதிரையைநடாத்தி வேதமன்னத்தார்களான, அசு ஹாபிமார்கள் படையணிலேபோய்ச்சேர்ந்தார்கள்.

றசூலுல்லாபடைக்குவந்த சருக்கம் முற்றிற்று.

---

# அம்றிபுனுதையான்வரு சருக்கம்

கலிவிருத்தம்.

அருளணி முகம்மத ரம்பு ளார்களு
மருளணிறவுசுல்கூல் மன்றன் சேனையும்
பொருகளத்துற்றிடும் போதிலேதையான்
தருமக னறம்றமன் சாரத லோதுவாம்.

## இதன் பொருள்.

அல்லாகுத்த ஆலாவுடைய அருளையுடுத்து முடையா யணிந்தி ருக்கும் நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய அன்புபொருந்தின் அசுஹாபிமார்களும், மருட்சியைபுடுத்து முடை யாயணிந்திருக்கும் இறவுசுல்கூலென்னும் இராஜனுடைய சேனையும், உயுத்தகளத்தில்நெருங்கிச் சண்டையைமுன்னேக்கிக்கொண்டு நிற் கும்போது தையானென்னும் இராஜபெறுமகனுகிய அறம்றம் என் னும் இராஜாவந்த வரலாற்றைச்சொல்லுகின்றும்.

## சரித்திரவசனம்.

சிறப்பாகிய நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லந்த ங்கள் படையணியில்வந்து சேர்ந்தபோது, அப்படைகளுக்கும், காபி ரீன்கள்படைகளுக்கு மெதிராலே செம்மேகம்போற் பெருந்தூசிபட

ர்ந்து வாணம்வரையிலும்படியவும், இடியின் சப்தம்போலே குதிரைகளின் கால்மிதிக்கும்சப்தத்தோடு, மோர்படைக்கூட்டம் வரக்கண்டு இரண்டுபடையிலுள்ளவர்களும் இந்தப்படையானது எவர்கள்படையோவென்று ஆச்சரியங்கொண்டு சண்டையை நிறுத்தி யோசனையாகநிற்கும்போது, இறவுசுல்கூலென்பவன் பேரறிவுந், தெளிவு மாட்சிமையும், வேதநெறிக்குருக்கள் தெரிசனையும், பழயபெரியோர்கள் செய்யு நற்செய்கைத்திறனும் தம்மினத்தார்களுக்கெல்லாந் தலைமையதிகாரமும், பெரியதன்மையுமுள்ள, தனதுமந்திரியைப்பார்த்து, ஒகே, மந்திரியே நீர்சீக்கிரம் போய் இப்போது கடற்போல்வருகிற குதிரைப்படைக்கூட்டம் யாருடைய படையென்றறிந்து வரவேண்டும், அப்படி நீரறிவதில், அவர்கள் அறபுப்படைஞராகில் அவர்களைப்பார்த்து உங்களுக்குச் சாவறுதிகால முடுகினதென்றுசொல்லும், அறபிகளல்லாது வேறேஜாதியார்களாயிருக்கில், நமக்குதவியாகப்பிரிவினையில்லாமல் ஆசையன்புசொல்லிக் கூட்டிக்கொண்டுவாருமென்றுதொண்டையும், மண்டையும்வெடிப்பதுபோலேயாற்றிச்சப்தமிட்டுச் சொன்னான், அதுகேட்டு, மகாசாதுரியமானபுத்தியுள்ள மந்திரியானவர் சண்டமாருதக் காற்றைப்போல்விரைந்து நடக்குமோர்குதிரையிலே சவாராகிஇறவுசுல்கூல் சந்தோஷங்கொள்ளும்படியாய் அக்குதிரையைக்குறடாவினாலடித்தோட்டிக்கொண்டு வேதவேதியர்கள்மெய்க்கச், சிங்கேறும்பின்விலகியோடும்படியாய் போகச்சே, இங்கே சகலவுலகங்களையும், உயிர்களையும் படைத்தாளும் அல்லாகுத் தஆலாவின்றாதரான நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் புலைஸிபுனு அப்பாசுறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து ஒகே, எனது அருமையாகியபுலைலே நீர்சீக்கிரம்பொய், அங்கேகடற்போல்வருகிற படைக்கூட்டம் நன்மைவிரிந்த முசுலிம்களா, அல்லது தீமைவிரிந்த காபிரீன்களாவென்றுபார்த்தறிந்து வாருமென்று சொன்னார்கள்.

அதுகேட்டுப் புலைஸிபுனு அப்பாசு றலியல்லாகு அன்கவர்கள் மனமகிழ்ச்சியாய் அழகிய வோர்குதிரைமேற்சவாராகி அதனைநடாத்திக்கொண்டு போகும்வழியிலே தங்களுக்குமுன்னாலே, இறவுசுல்கூலுடைய மந்திரியானவர் போகக்கண்டு, அவரைநெருங்கி இவர்சலாஞ் சொன்னார், அதற்குமந்திரி பிரத்திசொன்னார், அதுகேட்டுப்புலைஸிபுனு அப்பாசுறலியல்லாகு அன்கவர்களின்பமாகி, (மறுஹபா, மறுஹபா) வென்ற சந்தோஷ வாக்கியத்துடனே சொர்க்கபதியின் சுகிப்பை

யும், நரகவேதனையையுங் கற்பனையோடு, வேதத்தாலும், பழமை நூற்களாலுஞ் சொல்லிக்காட்டினார்கள். அதுகேட்டு, மந்திரியுடைய மனமோர் காந்தம்போலும், புலவிபுனு அப்பாசுறலியல்லாகு அன்குடையசொல் விரும்புபோலுஞ் சேர்மானமாயிற்று. அதினுடனே, அல்லாகுத் தஆலாவினுடைய அருளும் வந்தொத்துக் கொண்டமையால் மந்திரி (லாஇலாக இல்லல்லாகு முகம்மதுர் றசூலுல்லாகி) என்னுமிந்தத் திருக்கலிமாவை வாக்குமனமு மொத்தவராகச் சொல்லி மகிழ்ந்து மகாதவத்தையும், வாயில் அலங்காரமான நல்வசனத்தையுமுடைய புலவிபுனு அப்பாசுறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்துத், தேவரீர் தங்கள் பெயருங் குலமும் வந்தவாலாருஞ் சொல்ல வேண்டுமென்றுகேட்டார். அப்போது, புலவிபுனு அப்பாசுறலியல்லாகு அன்கவர்கள் சகல வர்த்தமானங்களையும் சொன்னார்கள், சொன்னபோது, மந்திரியானவர் புலனுறலியல்லாகு அன்கவர்களைப் பார்த்து, என்னை நற்கதிசேர்க்கப் பூஜுபலமாக வந்த நாயகமே, நான் தீனில் விசுவாசத்திலான செய்தி இறவுசுல்கூ லுக்குத்தெரிந்தால், என்னைக் கொலைசெய்வதுந்தவிர என்மனைவிமக்கள் குடும்பத்தாரடங்கலையும் நாசமாக்குவான், ஆதலால், இந்தச்செய்தியைக் காபிரீன்கள்யாரேனுங் கனவிலுமறியாமற் செய்யவேண்டும், நானினிமேல், அங்கே இறவுசுல்கூவிடத்தில் நடக்கிறசெய்திகளை யன்றன்றுடு தங்களுக்கனுப்புவேனென்று சொன்னார். அதுகேட்டுச், சந்தோஷமாகிப், புலனுறலியல்லாகு அன்கவர்களும், மந்திரியானவருமுடனு மூயிரும்போ லொத்துமையாகத், தாங்கள் நாடிவந்த காரியத்தை யறியவேண்டி நடந்து, அங்குவந்த படைக்கூட்டத்தை நெருங்கினார்கள்.

நெருங்கியபோது, அந்தப்படைக்கதிபதியாகிய, அம்றிபுனுதையான்கண்டு இவர்களிருவரும் யாறென்றறிவோமென்று, தனது படைகளை விடுதிவிடச் சொல்லிநான்கு எல்லைகளுக்கும் பாராக்காவலுமிட்டிருந்தான். இருக்கையில், புலனுறலியல்லாகு அன்கவர்களும், மந்திரியும் அங்குநிற்குங் காவலாளர்களை நெருங்கி, இந்த இராஜாயார்? இவர்பெயரென்ன? இவரெங்கிருந் தெங்கேபோகிறுறென்று கேட்டார்கள். இந்த இராஜாவாகிறவர், மிகுந்த சத்தியவந்தனர், தயிரியத்தையுடையவர், பொறுமையுடையவர், செல்வத்தையுடையவர், இவரொருவருக்கு, ஆயிரஞ் சுத்தவீரியர் ஈடுசெய்யமாட்டார்கள் சண்டைசெய்கிறதிலே சிங்கத்தைப் போன்றவர், மிகுபுத்தியுத்தி

யையுடையவர், இவர்தையானென்னும் பேர்பெற்ற சுத்தவீரியருடையமகன், அறம்றமென்றுசொல்லும் பெயரையுடையவர், இவரிங்கேவந்த தேதுக்கெனில், றகுமானென்றவோர் இராஜனிவருக்குப் பகைசெய்தான், அதினுல் அவனுடனே சண்டைசெய்ய ஆயிரங்குதிரைப்பதாதி வீரரையுங் கூட்டிக்கொண்டு வந்தார், இவ்விடத்திலே இரண்டுபிரிவாகப் படைக்கூட்டமாக இருப்பதாலதைக் கண்டறிந்து போகவேண்டுமென்ற விடுதிவிட்டாரென்று சொன்னுர்கள்.

அதுகேட்டு புலேனுறலியல்லாகுஅன்கவர்களும் மந்திரியும்அந்த. அறம்மிபுனுதையானென்னும் ராஜனிடத்தில் மிகுந்தமரியாதை யொழுங்குடனேபோனுர்கள். அதுகண்டு அறம்மிபுனுதையான் இவ்விரண்டுபேர்களேயுமிகுந்த அன்புடனே யின்பமாக வாருங்களிருங்களென்று அருமைசெய்து பெருமையாக இருக்கவைத்துப் பின்னர், குளிர்ந்தவசனமாக நீங்கள்யார்? எங்கேவந்தீர்கள்? இந்தஇரண்டுபடைக்கூட்டங்களும் யாருடைய படைக்கூட்டமென்று? கேட்டான் அதற்குப்புலேலிபுனு அப்பா சுறலியல்லாகு அன்கவர்கள், அந்த அறம்மிபுனுதையானேப்பார்த்து இராஜாவே கோட்டைமதிளடுக்க இருக்கிறபடைகளிறவுசுல்கூல் இராஜனுடையபடைகள், மற்றப்புறத்திலிருக்கிற படைகள், அல்லாகுத் தஆலாவின் தூதர்முகம்மது நபிசல்லல்லாகு அலேகிவசல்லமவர்களுடைய படைகள் அந்த முகம்மது சல்லல்லாகு அலேகிவசல்லமவர்கள், தங்களிடத்திலென்னேத் தூதாக அனுப்பினுர்கள், அஃதேதுக்கெனில்.

தாங்கள், முசிலிமாயிருந்தாலெங்களுச்கு மிகவுமின்பமாகியவுறுதியென்றுங், காபிராயிருக்கில், அல்லாகுத்தஆலாவுடைய நாட்டப்படி நடக்குமென்றுஞ் சொல்லச்சொன்னுர்கள். இதோஎன்னுடனேவந்திருக்கிறவர், தன் றகப்பன்தலேயைவெட்டிய இறவுசுல்கூலுடைய தூதரென்று மிகுந்தமரியாதை யொழுங்காகச் சொன்னுர்கள். அதுகேட்டு அறம்மிபுனுதையான் தன்தலேயை அசைத்து அந்தமந்திரியைப்பார்த்து, நீர்வந்தகாரண மென்னவென்று?கேட்டார். அதற்குமந்திரிமிகவும் புகழ்ந்துமரியாதையாக, அறம்மிபுனுதையானேப்பார்த்து இராஜாவே, தாங்கள் யாரென்றுபார்த்து எங்களேச் சேர்ந்தவராயிருக்கிற் கூட்டிக்கொண்டுவரவும், முசிலிமானவர்களா யிருந்தாற்கடூரமான வெட்டிலாகிபிறப்பீர்களென்று, சொல்லிவிட்டுவரவும்எங்கள் இராஜாவாகிய இறவுசுல்கூலென்னேத்தூதாகவனுப்பினுரென்று சொன்னுர் அதுகேட்டு

அறம்மிபுனுதையான்இவ்விதம் பெரிய சண்டையிவ்விடத்திலிருதிறத்தாருக்கும் வந்தகாரணமென்னவென்றுகேட்டான். அதற்குமந்திரி, நபிநாயகத்தின் சொல்லைக்கேட்காததினாலென்று சொன்னார், அது கேட்டு அறம்மிபுனுதையான் கொஞ்சநேரந் தலையைகுனிந்திருந்து நன்மை, தீமையிரண்டையும் யோசித்துப்பின்னர், அல்லாகுத் தஆலாவின் தூதரான முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய சொல்மிகவும் நன்மையானதென்று தெரிந்து தன்தலையை நிமிர்ந்து மந்திரியைப் பார்த்து, நபிநாயகஞ்சொற்போலுங்கள் இராஜா நடக்க வேண்டும், அப்படியல்லாதவரையில், அந்த் இரவுசுல்கூலை நான்வெட்டிப்போடுவென்று சொல்லுமென்று, தன்படைவீரரிலொருவனையு மந்திரி கூடப்போவென்றனுப்பினர்.

அதுகேட்டு, மந்திரியும் அம்றிபுனுதையானுடைய மனுடனுமாகப்போய், இறவுசுல்கூலைக்கண்டு மகாதவத்தையுடைய முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் சொற்போல் நீர்நடக்கவேண்டுமாம், அப்படி நடக்காமற் போவீராகில், அங்குபடையுடனேவந்திருக்கிற அறம்மிபுனுதையானும்மைக் கொன்று போடுவாராமென்று சொல்லச்சொன்னாரென்று சொன்னார். அதுகேட்டு, இறவுசுல்கூலுடைய இரண்டுகண்ணும் நெருப்புப்பறக்கக் கோபங்கொண்டு மந்திரியோடுவந்த, அறம்மிபுனுதையானுடைய மனுடனைப்பார்த்து ஒகே நானந்தவஞ்சனையையுடைய முகம்மதைகொன்றுவிட்டு அந்தச்சூடு தணியு முன்னே யுங்கள்ராசாவாகிய அறம்மிபுனுதையானையும் வெட்டுவேன் இவ்வித முடியுமுன்னே யுங்களிராஜா அறம்மிபுனுதையான் றன்னூருக்குப்போவது மிகவுநன்மையாயிருக்கும் அப்படிப்போகாமலிருந்தாலிப்போதுஅரைநொடியிலவனை வெட்டிவிட்டுவந்து பின்னர், அந்த முகம்மதைக்கொள்ளுவேனென்று நீ சீக்கிரம்போய்ச்சொல்லென்றுசொன்னான். இவ்விதம் பாதகனான இறவுசுல்கூல் சொன்னது கேட்டு, அந்தச்சுத்தவீரியன் வந்து தனதுஇராஜா அறம்மிபுனுதையானைப்பணிந்து, இறவுசுல்கூல் சொன்னசொற்களனைத்தையுஞ் சொன்னான். அதுகேட்டு அறம்மிபுனுதையான், துறவிகளிதயாசனத்திலல்லாத அல்லாகுத்த ஆலாவினினைப்புமாறாத நபிநாயகமவர்களிடத்தில்வர நாட்டங்கொண்டு உடனே தனது கொடி குடை முதலிய விருதினஞ் சூழப் படைகள் நெருங்க, வாத்திய முழங்கக் குதிரைமேலேறி யாரபாரத்துடனே படையை நடாத்திக்கொண்டு வந்தார்.

அதுகண்டு, புலேனுறவியல்லாகு அன்குமனமகிழ்ச்சியாய்க் காபிரீன்களின் கருவருக்க அறம்மிபுனுதையான் படையுடனேவருவதை வானத்துக்கும், பூமிக்குஞ் சக்ரவர்த்தியாகிய நபிநாயகமவர்களிடத்திலே முதற்போய்ச் சொல்லவேண்டுமென்று தாமேறியகுதிரையைச் சூருவளிக்காற்றைப்போல்விசையாய் வெட்டிமறையுமின்னேலைப்போல் நடாத்திவந்து நபிநாயகமவர்களிடஞ் சென்று, தாமுன்னர் போகும்போது வழியில் இறவுசுல்கூலுடைய மந்திரியைக்கண்டதும், தாம் அம்மந்திரி யுடனேசொல்லிய வசனத்தாலவர் தீனில் விசுலமான தும், இவ்விதமவர் தீனில்விசுலாமானசேதி இரவுசுல்கூலறிந்தாலுயிர்ப்பழியென்று, வெளிரங்கமாக்காமல் மறைக்கச்சொன்னதும், அங்கே நடக்கிறசமாசாரங்களை யன்றன்றுமே இரகசியமாக மந்திரி அனுப்பவே னென்றதும்; பின்னரிருவருமாக அறம்மிபுனுதையானிடம் போய் மரியாதை யொழுங்குடனே சொன்னசொற்களையும் பின்னர், அவர் தம்மவுடனொருவனை மந்திரியுடனே இறவுசுல்கூலிடத்திற்கனுப்பிச் சொல்லச்சொன்னதும், அவர்கள்போய்ச்சொன்னதும், அதுகேட்டு, இறவுசுல்கூல் கோபங்கொண்டு தாறுமாறாக மதர்த்தவார்த்தை சொன்னதும் அதைகேட்டு, அம்னுடன்வந்து சொன்னதும், அதைக் கேட்டவுடனே அறம்மிபுனுதையான் ஆ! ஆ! அப்படியா பார்ப்போமென்று சொல்லித் தனதுபடைகளை யெழுப்பிக்கொண்டு, இங்கே தங்களை நாடிவருகிறுரென்றும் அங்கு நடந்தவைகளத்தனையுஞ் சொன்னார்.

அதுகேட்டு, நபிநாயகமவர்களு மற்றுமுசிலிமானவர்கள் யாவரு மனமகிழ்ந்து, அல்லாகுத்த ஆலாவைப் புகழ்ந்துகொண்டிருக்கும்போது, நல்லவுள்ளத்தையும். அறிவையுமுடைய அறம்மிபுனுதையான் மலையதிர, மாங்கள் சாய்ந்துவிழப், பூமியிலிருந்தெழும்புந்தூசி மேகத்தைப்போல் ஆகாயத்திற்படரக், காபிரீன்கள்நெஞ்சங்கலங்கக், கடலை போலே படைமுரசுமுழங்கக், குதிரையின் மிதியினால் நிலம்பிளக்கச் சேனையை நடாத்திக்கொண்டு நபிநாயகமிருக்கிறபடைக் கூடாரத்தை நெருங்கியபோது, நபிநாயகமவர்களின் சங்கைக்காகத், தாம்குதிரையைவிட்டுக்கிழிறங்கிக் கால்நடையாகநடந்துவந்து, நபிநாயகத்தின்பாதத்திலே மரியாதையுடனே சரீரங்குழையக், கிரீடந் தலைபொருந்த விழுந்து முத்தியிட்டார் அஃதெத்தன்மையெனில், நபிநாயகத்தின்பாதந் தாமரைப்பூவைப்போலும், அறம்மிபுனுதையான் அந்தத்தாமரை பூவிலே தேனுண்ணவருமோர் வண்டைப்போலு முத்தமிட்டெழுந்து

சலாஞ்சொல்லி யரியாதையாக நின்றார், அப்போது நபிநாயகம் அறம்மிபுனுதையானைப்பார்த்து மனமகிழ்ச்சியாய்க், குளிர்ந்த வாசகமாய்த், தங்கள், கற்பூரவாடைகமழும் வாயைத்திறந்து, தாமிவ்விடம் வந்த காரணமென்னவென்று கேட்டார்கள்.

அதற்குப், பொற்கிரீடமணிந்த அறம்மிபுனுதையான் சிறந்த நபிநாயகமவர்களைப் பார்த்து, வரிசையாகிய முகம்மதே, அகுமதே, முஸ்தபாவே மிசிக்கினுகிய நானும் என்பரிவாரங்களான இந்தச் சனங்களுந் தேவரீர் தங்கள் பாததாமரையைக்கண்டு தெரிசித்துப் பேறுபெறவந்து, அதனைப்பெற்றுக்கொண்டோம். அப்படிப்பெற்ற பேறோடும், நானுமென்படைஞருஞ் சத்துருக்கள் மேலேபாய்ந்து விழுந்து சின்னுபின்னஞ்செய்வோம், ஆதலால், அருமையாகிய நாயகமே தாங்களினி மதீனமாநகரம் போங்க ளிந்தச்சண்டை யொரு பொருட்டென்று தாங்கள்வரவேண்டுமோவென்று சொன்னார். அது கேட்டு, நபிநாயக மிகுந்த சந்தோஷங்கொண்டு, அவ்வறம்மிபுனுதையானை யன்பாகப்பார்த்து, உமதுவரவு நன்றாயிருக்கிறது, ஆகையால் நீர், அரிதான தீனில் விசுவாசமாகிப் பிருதௌசென்னுஞ் சொர்க்கத்தைப் பெற்றுக்கொள்வது எனக்குப் பிரியமாயிருக்குதென்று சொன்னார்கள்.

அதுகேட்டு, அறம்மிபுனுதையான் நபிநாயகத்தைப் பார்த்துத் தங்களுக்கு ஆண்டவன் தந்தவேதமுந் தங்கள்மார்க்கமும் உண்மையென்றேவந்தேன்; என்றாலும், இந்தச்சண்டை நெருக்கத்தை நீக்கிச்செய்வது துணிவான சிறப்பென்றுசொன்னார். அதுகேட்டு, நபிநாயகம் அறம்மிபுனுதையானைப் பார்த்து உமதுபேரிலே கிருபையுள்ள என்னுடைய ஆசைநிறைவேறவும், உம்மைநாசமடாாமலிருக்கவும் அல்லாகுத்தாலாவுதவி செய்வானாகவுமென்று து ஆச்செய்தார்கள் இவ்விதம். நபிநாயகமவர்களுடைய நல்வாக்கியங்களைக்கேட்டு, அறம்மிபுனுதையான் மிகுந்த சந்தோஷமாகித் தமது சேனையுடனே யிரண்டுபடைகளுக்கும் நடுவிலாகிக் காபிரீன்கள் சேனையைப்பார்த்துக் காணக்குறைவான கதுவம்மிஷக் கூட்டத்தார்களே! சண்டை முகத்திலே சினங்கொண்ட மதயானையையொத்த தையானுடைய அருமைமகனான, அறம்றம்மாகிய சிங்கத்துடனே வந்தெதிர்க்கிற சுத்த வீரியன் யார்? உரல்போன்ற கால்களையுடைய யானைகளை யொன்றோடொன்று பட்டுமாயும்படியாய் வாரியடித்து இராஜாக்க

ரூடைய சிரசிலணிந்த கிரீடங்களைத் தகர்க்குகின்ற சிங்கமாகிய என்னோடுஞ் சண்டைசெய்ய இந்தப்பூமியிலே யாவருக்கு மரிதாயிருக்குமென்று திடத்துடனேசொல்லித், தமது குதிரையை நடாத்தினார். அதுகண்டு சத்துருக்கள் மாலையணிந்த தோளயர்ந்து, மனம்பயந்து, திடுக்கிட்டு நின்றவர்களை, இறவுசுல்கூல் வெடுவெடுத்தவசைச்சொல்லுடனே கோபித்துக்கொண்டு பின்னர், அறம்மிபுனுதையானை நெருங்கிவந்து தன்சொல்லையவர் கேட்டுக்கொள்வாரென்று அவரை வாழ்த்திப்போற்றிக் கிருபையையுங் கீர்த்தியையுமுடைய இராஜாவேயென்றழைத்து, நீர் அந்தச்சிறுறென்னும் வஞ்சனை செய்கிற முகம்மதை முடிவாகநம்பியிந்தப்படைக்கு வந்தமையாற், குறைவில்லாத குபலென்னுந் தம்பிரானுடைய முனிவுமக்குண்டாகும். அதுவுந் தவிர இன்றைக்கும்மையந்த முகம்மது வந்தால் நாளையெல்லாம் நமது ஜாதியாரைப் பகைப்பதுண்மை, ஆனதால், அன்பு இரக்கமில்லாத அந்த முகம்மதைக் கொல்லுவதற்கு நமது, பர்ருசென்னுந் தம்பிரான் தந்திருக்கிற தத்துவப் படைகளை நீரறியமாட்டீரோவென்றுசொன்னான்,

அதுகெட்டு, அறம்மிபுனுதையான் சிங்கத்தைப்போலே சீறிக் கோபமாகி அந்த இறவுசுல்கூலைச் சிறைவாரமுடுகினபோது, மற்றக் காபிரீன்கள் வந்து வளைந்தார்கள். அதுகண்டு, தீனானவர்கள் அம்பு விசையாகக் குதிரைகளை விட்டுக்கொண்டுவந்து வளைந்த காபிரீன்களை யோட்டினார்கள். அப்போது அறம்மிபுனுதையான் சத்துருக்கள்மேற் சிங்கத்தைப்போல்பாய்ந்து எழுதலைவர்களை யொவ்வொரு வெட்டில் ரண்டுரண்டாகப் பிளந்துவிட்டுத் திரும்பினார், அதுகண்டு நபிநாயக மிகுந்த சந்தோஷமாகினார்கள், அப்போது அறம்மிபுனுதையான் மனுடர்களில் வல்லமையுடைய நபிநாயகத்தின் வலதுபக்கத்திலே நின்றுகொண்டு, தமதுபடைவீரியரில் நின்றும் ஒருசுத்த வீரியனையழைத்து நீபோய் இரவுசுல்கூலுடையபடையிலேசண்டை செய்யென்றேவினார், அதுகண்டு அந்தப்படைவீரியன் மகிழ்ச்சியாகிக் குதிரையின்மேலே சவாராகியதனை விசையாக நாடாத்திக்கொண்டுபோய்ச் சத்துருக்களின் படையணியைப் பார்த்து, என்னுடன் உயுத்தஞ்செய்யத்திறத்த வீரியருண்டாகில் வாருங்களென்று சப்தித்தான். அப்போது, சத்துருக்களில்நின்று மதத்த, யானைபோன்ற முக்கிறுடையமகன் சத்தாவீதன்பவன் வடவா முகாக்கினியைப்போலிருந்து வாள்வீசிக்கொண்டு வந்தெதிர்த்து அறம்மிபுனுதையானுடைய வீரனைவெட்டி வீழ்த்தாட்டினான்,

அதுகண்டு; அறம்பிபுனுதையான் மறுபடியுந் தம்மாட்களிலே நின்று முப்பதுசுத்தவீரியரை யொவ்வொருவராக அனுப்பினார் அந்த முப்பதுபேர்களையுஞ் சத்தாது வெட்டிவிட்டு, உவமையிலடங்காத வாய்மதம்பேசிப் பெருஞ்சத்தமிட்டுத் தீனவர்களே என்னோடுசண்டைக்குத்திறத்த வீரர் வாருங்களென்றழைத்தான். அதுகேட்டு தீனவர்களி லொருவருந் துணிந்து அந்தச்சத்தாதுடனே எதிர்த்துச் சண்டைக்குப் போகமலிருப்பதை வானம் பூமிசெய்ய முன்னமே முத்தவதாரமாயிருந்த நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள், தெரிந்தொருவராலேயுஞ் செய்யக்கூடாத மிகுருஜியேனிப்படி யெம்பத்தைந்திலுமேறி, வானமேழையுங்கடந்து அறுஷில் மிதித்தேறிய குளிர்ந்தபாதரட்சையான, கபுசைக்காலிலும், வெள்ளியகிரணக் குப்பாயத்தைமேலிலும் சந்திரக்கிரணப்பாகையைத் தலையிலுஞ் சத்துருக்கள் கண்டிஷ்டியடாது அல்லாகுத்தாலாவின் காவலுடனேயணிந்து, அவனருளினாலே எட்டாததையெட்டி வெட்டாததைவெட்டும் வாளாயுதத்தையும், முட்டாததைமுட்டும் வேலாயுதத்தையும், உயுத்தகளத்திலே தட்டாததைத்தட்டுந் தண்டாயுதத்தையுமெடுத்துப் பின்னர், பாயாதவிடங்களிலே பாய்ந்து, போகாத விடங்களிலேபோகும் நான்கு கால்களையுமுடைய குதிரைமேலேசவாராகி இராஜனுன இறவுசுல்கூல் சண்டையை வெல்லவேண்டி நாவினாலே சொல்லக்கூடாத நன்மையுடனே போயினார்கள்.

இவ்வித நபிநாயகம்படைக்குப்போவதைக்கண்ட அல்லாகுத்த ஆலாவி னருள்பெற்ற அசுஹாபிமார்கள் யாவருநபிநாயகத்தைப்பார்த்துச்சகலவுயிர்ப்பிணங்களுஞ் சீரங்குழைந்து மரியாதையுடனே தாழ்ச்சிசெய்யும் யாறசூலுல்லாவே! தேவரீர் நீங்கள், அந்தக்காபிரீன்களின் பொல்லாத படைக்கெதிர் போகாமலிருங்களென்று சொன்னார்கள், பின்னர், சிங்கம்போன்ற அறம்பிபுனுதையான் நபிநாயகத்தைப்பார்த்துத் தண்ணீர்சுரக்காத கிணற்றில்நின்று தண்ணீரானது வெள்ளப்பெருக்காகி போடும்படியழைத்தநாயகமே; தேவரீருங்களாவிந்து எங்களாவியைக் குறுபான்கொடுப்போம், ஆகலால் நீங்கள் அந்தச் சதிமான்ய மிகுந்தவர்களிடத்திலே சண்டைக்குப் போகவேண்டாமென்று சொன்னார். பின்னர், அலிறழியல்லாகு அன்கவர்கள் நபிநாயகத்தைப் பார்த்து, வானமேழையுங் கடந்த யாறசூலுல்லாவே தலைப்பாகையிலே நட்சத்ரமிலங்குத மகுடமே, ஊன்புரண்டிருந்தும்

வாளுடனே சத்துருக்களை வெல்ல நான்போறேனென்று சொன்னார்கள். இவ்வித மிகுந்த சுத்தவீரியர்கள் வெப்பம் பொருந்திய சண்டையின் வேகமாறாது சொன்னவை கேட்டு, நபிநாயகம், அல்லாகுத்த ஆலாவின் கிருபையுள்ள அலிறலியல்லாகு அன்கவர்களைப் பார்த்து, யாஅலியே நீரேதான் தாமதமில்லாது, உயுத்தத்திற்கு போமென்று சொன்னார்கள் அதுகேட்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் மான், உடும்பு, புலி, குதிரை, யொட்டகை, சந்திரன், கடல், மீன், புத்துஹான், முசல்,பசுவுமுதலிய இழிதிணைகளும் வாய்திறந்துபேச அவைகளுக்கெதிர்பேசிய நபிநாயகத்தின் பாதகமலங்களிற் பணிந்தெழுந்து தேன்றுளிக்குங் குங்கும்மாலையானது தோளிற்கிடந்து புரண்டடிக்க மகாவிரைவிலே சத்துருக்கள் படைக்கெதிர் நடந்தார்கள்.

பின்னர், அறம்மிபுனுதையான் தமதுபெரும்படையுடனே தீரமாகப்போனார். அதுகண்டு, சத்துருக்கள் கடலைப்போலே பெரும்படைகளாகத் திரண்டுவந்து சண்டைசெய்தார்கள். அப்போது அசுஹாபிமார்களும் நெருங்கித் தக்குபீர்ச்சத்தமோயாது முழக்கிவெட்டினார்கள். அதுகண்டு, நபிநாயகமனமகிழ்ந்தார்கள் இப்படி இருபடைகளும் நெருங்கிக்கடினமான சண்டைசெய்யும்போது முசிலிமானவர்கள் தங்கள் கையிலிருக்கும் வில்லுகளைவளைத்து, அவைகளில், விஷஅம்பையேற்றி மழைபெய்வதுபோல சிலரெய்தார்கள்,.சிலர் கவண்கற்களா லடித்தார்கள், சிலர்மல்யுத்தஞ் செய்து நெஞ்சோடுநெஞ் சிடித்தார்கள், சிலர் தீன்தீன்முகம்மதாஎன்று சத்தமிட்டுச் சத்துருக்கள் மேலே யடர்ந்துவிழுந்து, வாள்வீரரோடு வாள்வீரருங், குதிரைவீரரோடு குதிரைவீரருந், தண்டாயுத முதலிய ஆயுதங்கள் கொண்டெதிர்த்துக் செய்த சண்டையினாற், சத்துருக்களனேகர் வெட்டுண்டிறந்து தேள்முதலிய விஷஜெந்து குடியாயிருக்கும் நரகத்திற் கிரையானார்கள், அதனோடு மவர்களுடைய கொடி, குடை, தேர்பேரிகை முரசமுதலிய விருதினங்க ளொன்றொன்று மோதி நொறுங்கி நூறு துண்டாய் கிடந்தன.

இவ்விதங் காடுகள்போலேயடர்ந்து வந்தகாபிரீன்கள் படையைக் கோடாரிகள்போலே முசிலிமானவர்கள் மோதிவெட்டினதினாற்காயங்களிலிருந்தோடிய இரத்தக்கடற்போலும் அக்கடலில்வெட்டுண்டவுடற்றுண்டுகள் மிதப்புக்கட்டைகளைப் போலுமிதந்தன. அப்போது, மேற்கடலிலே சூரியனும்போயடைந்தான் பிறகுகாபிரீன்கள் மனம்

போன்றஇருள்எங்கும்பரந்தன,ஆனாலிவ்விதக், தீனோர்கள்செய்தசண்டையின் திறமையைக்கண்டிருந்த சூரியன் முன்னர் போய்ச்சொல்லக் கேட்டுடல்நடுங்கிக், சந்திரனவன் மூற்படநம்மைஹபீபுராஜாகேட்டபடிக்கிரண்டாகப்பிரித்தநபிநாயகத்தின் அசுஹாபிமார்கள் புழக்கத்திற்காக, இருளகற்றிப்பிரகாசஞ்செய்ய நாம்போகாமலிருந்தாலொருவேளை, அந்தநபிநாயகம்இன்னும்நம்மை யெத்தனை துண்டாகப்பிரித்துவிடுவார்களோ தெரியவில்லையேயென்று மனம்பயந்து சீக்கிரம்வருவதுபோலவேவந்து, பொய்யில்லா தவர்கள்வாய்ச் சொற்போலவே பிரகாசஞ்செய்தான் அப்போது வாளாயுதம் பிடித்தகையையுடைய, நமதுதீனவர்கள் படைக்களத்தைச் சுற்றிப்பார்க்கையில், முசிலிமானவர்கள் (140) பேர்கள்சொர்க்கபதி சேர்ந்தவராகவும் (7000) காபிரீன்கள் நரகலோகஞ் சேர்ந்தவர்களாகவு மிறந்துகிடக்கக் கண்டார்கள். பின்னர் முசிலிம்களை யெடுத்துமுறைபோலே யடக்கஞ்செய்துவிட்டு அசுஹாபிமார்கள் யாவரும், அல்லாகுத்த ஆலாவைப் புகழ்ந்து தக்குபீர்ச்சத்த முழக்கினவர்களாக இருந்தார்கள்.

அறம்மிபுனுதையான் வருசருக்க-முற்றிற்று.

# அம்றிபுனுதையான்போர்புரிசருக்கம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

உருக்கொளுங்காப் பறையி னுள்ளே
  காரணத்தி னுற்பவித்த போற்பினுதர்
மருக்கொளுமெய் முகம்மதுற
  சூலினிட மாட்சியொடும் வந்துசேர்ந்த
வுருக்கெழும்வே லறமிபுனு தையான்மெய்
  யுண்மயன்பு நன்மையாவும்
பெருக்கெழுந்தீன் பகைவருடன்
  போர்புரியும் பெருமைதனைப் பேசுவாமே.

## இதன் பொருள்.

தாயாருடையகர்ப்பாசனவீட்டிற்குள்ளே, யுருவங்கொண்டமையும்போதிலே, காரணகாட்சியோடு முற்பவித்தஅழகியவாசனைத்தேகவ

லஜீகாரான நபிநாயகமுகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவச ல்லமவர்களிடத்தில், எல்கிறுற்செய்யப்பட்ட வேலாயுதத்தைக் கை யிற் சுமந்தவராய் மகாமாட்சிமையோடும்வந்துசேர்ந்த அறம்பிபுனு தையானென்னும் பெயர்பெற்ற இராஜானவர் மெய்ம்மை தவறுத வுண்மையும். அன்பும் ஆதரவும், மற்றநன்மையாவும் பொருந்தியோங் குந் தீனில் விசுவாமானவர்களின் பகைவரான காபிரீன்களோடும் உயுத்தஞ் செய்த பெருமையைச் சொல்லுகின்றும்.

## சரித்திர வசனம்.

நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் முதலா கிய அசுஹாபிமார்கள்யாவரும், உருகுதலான மனத்தோடும், பயபக் தியாக அல்லாகுத்த ஆலாவைப் புகழ்ந்து தக்குபிர்ச்சத்த்த்துடனே விழித்திருந்து, அவ்விரவுகாலத்தை போக்கி விடிவேறுனவுடனே நபிநாயகமவர்கள் முன்னிலையாய் மற்றவர்கள்யாவரும் பின்னிலையாய் நின்று பஜிர்த்தொழுகையைத் தொழுது சந்தோஷமாக இருக்கும் போது, அறம்பிபுனுதையான் எழுந்தருளியாகிவந்து நபிநாயகத்தை ப்புகழ்ந்து, அவர்களின் பாதகமலங்களிற்பணிந்து சத்துருக்கள்படை யிலேபோய்ச் சண்டைசெய்ய எனக்குத்தரவு தாருங்களென்று கேட் டார், அதற்குநபிநாயகமனமகிழ்ந்து அறம்பிபுனுதையானைப்பார்த்து ஒசே, சுத்த வீரியரே நீர் சத்துருக்கள் படைக்கடலைச் சூரியன் ஜலக் கடலைகடப்பதுபோல், அல்லாகுத்தஆலாவினருளினாலே ஜெயித்துக் கடந்துவாருமென் றுத்திரவு கொடுத்தார்கள். அதுகேட்டுடனே, அறம்பிபுனுதையான் மனமகிழ்ந்து, கட்டுக்கடங்காத மதயானைகளை யொத்த தனதுபடை வீரருடனே பட்டாயுதம்,வில்லாயுதம், அம் பாயுதம், வேலாயுதம், வாளாயுதம், இவைகளைகையிலெடுத்துக்கொ ண்டு சத்துருக்கள்படையிற் பாய்ந்து கர்ச்சித்து வீரமொழிபேசிக் கொண்டு நிற்கையிலே, சத்துருக்களில் நின்றும் ஒருமுடன்வந்தெதிர் த்து நின்று வாள்வீசினன், அவனைஅறம்பிபுனுதையானோர் நொடியி லே வாளால்வெட்டி யிருதுண்டாக்கி, நரகம் போவென்றனுப்பிவிட் டார்.

அதுகண்டு, சத்துருக்கள் ஒவ்வொருவராகத் தொண்ணூறுபேர் கள் வந்தெதிர்த்தார்கள். அவர்களையும் அப்படியே அறம்பிபுனுதையா னெவ்வொருவராக வெட்டினர். அதுகண்டு, சத்துருக்கள்பபந்துநடு

ங்கியொருவருங் கிட்டநெருங்கிவராமல்நின்றார்கள். அப்போது, அறம்பிபுனுலைதயானு மவர்சேனையோர்களும், சத்துருக்கள் படைக்குள்ளே சிங்கத்தைப்போலே பாய்ந்துகண்டு, சத்துருக்களுமெதிர்த்து பாய்ந்தார்கள். இவ்விதமிருபடைஞரு மின்வெட்டுவது போலவே வாள்வேல்களினாலே வெட்டுங்குற்றுமாகச்செய்தசண்டையிலே, கண்டகண்டவிடங்களெல்லாம் பிணக்குவியலாயின. மலைகள்போன்ற யானைகள் துண்டதுண்டமாய் வெட்டுப்பட்டுக்கிடந்தன; குதிரைகள் கண்டங் கண்டமாய்த் தறிபட்டுக்கிடந்தன; இன்னும் அம்பினங்கள் சத்துருக்களேறியிருக்குங் குதிரைகளின்விலாவிற் பாய்ந்துருவி மேலிருக்குமவர்கள் வயிற்றிலும்பீறி, அவர்களுயிரையுமுண்டு முதுகு வழியாய்ப் புறப்பட்டு அவர்கள் பெண்சாதிமார்கள் தாலியை அறுக்கப் போகிறதுபோலே பாய்ந்தன. இன்னும் பொன்முடியணிந்த அறம்பிபுனுலைதயானேறியகுதிரை காற்றுமஞ்சும்படி நடந்து நான்குகாலினால் மிதிக்குமிதியைக்கண்டு, சத்துருக்கள்பயந்து திரிந்ததிலனேக சத்துருக்கள் மடிந்தார்கள்.

அதனால், அம்றிபுனுலைதயானின் வாள்வெட்டினாலே அனேக சத்துருக்கள் மடிந்தார்கள். இவ்விதத்தில் இரத்தமெங்கும் வெள்ளப்பிரவாகமாயின, அதிலே வெட்டுண்ட முரசுகள், தேர்கள், குடைகள் கொடிகள், இரதங்கள், பொற்கிரீடங்கள், குதிரைகள், யானைகள் முதலானது மிதந்துகொண்டிருந்தன. சத்துருக்களுடைய ஆரபாரமுமொடுங்கின, அந்த நேரத்திலே சுத்தவீரியர்கள் கண்போலும் வாட்பிடித்துவெட்டிய உள்ளங்கைபோலும், அவ்விடத்திலோடும் இரத்தத்தைப்போலும், தானேறியதேரோடும் அயர்ச்சியாய்ச்சிவந்து நபிநாயகமவர்களுக்கு உதவிப்படையெடுத்துவந்த அம்றிபுனுலை யானுமிருக்கி வின்னஞ்சண்டைசெய்து சரீரவயர்த்தியைக்கொள்வார்கள், அதுநன்றல்ல அவருக்குதவிசெய்வதாயிருக்கும் நாமறைந்து கொள்கிறதென்றவெண்ணத்துடனே சூரியன்தனதுதேருருளையை யிழுக்குங்குதிரையை விரைவாயோட்டிக் கொண்டுபோய்க் கீழ்ப்பாற்கடலிற்குப் போவது போலப்போயினன். அப்போதுவள்ளலாகிய நபிநாயகத்துக்குதவிக்கு வந்த அறம்பிபுனுலைதயானுடைய செய்திகளைநாயகத்திற்குச் சொல்லுந்தூதர்கள் இராயிருளிலேதயங்கி நிற்காமல் நான்போய் பிரகாசங்காட்டுவேனென்றுவந்ததுபோலேசந்திரன் வானத்திலுதயமாகிவந்தான்

அன்றிரவு நீங்கி விடிவேறியெழுந்து யாவரும் பின்னிலையாக, நாபிநாயக முன்னிலையாகநின்று அல்லாகுத் தஆலாவைத் தொழுது மகிழ்ச்சியா யிருக்கும்போது அறம்மிபுனுதையான் நபிநாயகமவர்களிடத்தில்வந் தவர்களைப்பார்த்து, மரியாதையுடனே வாய்திறந்து அற்புதப்பொருளே நபிமுகம்மதே, கிருபையக்கடலே, றசூல்நாயகமே, வேதவிளக்கே, அவ்விளக்கிலே கொழுந்திட்டெறியும், அகமியச்சுடரே, அடிமையாகியநானென்னூருக்குப்போய் மதயானைகளையொத்தபடைகளைத் திரட்டிக்கொண்டுவர வுத்திரவு தாருங்களென்று கேட்டார். அப்போது, பூரணச்சந்திரன்பேச அதனோ டெதிர்த்துபேசிய புண்ணிய பிரபுவான நபிநாயகம் அந்த அறம்மிபுனுதையானைப்பார்த்து அப்படியே போய்வாருமென்றுசொல்லித், தங்கள்மதுரமான திருவாயைத்திறந்து துஆச் செய்தார்கள். அப்போதுடனே வாசனைபொருந்திய புட்பமாலைபணிந்த .பலத்த தோளையுடைய, இராஜான அறம்மிபுனுதையான், புலாவிற்புரண்ட வேலாயுதத்தைக்கையிலேந்திக்கொண்டு மனமகிழ்ந்துகடற்போன்ற தமதுசேனைகள் யாவையும், நபிநாயகமவர்களிடத்தில் இவர்களுங்களுக்கு அடிமையென்றுசொல்லி யொப்பிவித்துவிட்டு முகம்மதைப் பொழியுமதயானைகளின் மஸ்தகத்தையுடைத்து மூளையுறிஞ்சுஞ் சிங்கத்தைப்போற் றமதூரை நாடிப்பிரயாணமானார்.

பின்னர், தருமத்தையுடைய நபிநாயகமவர்களும்மற்ற அசுஹாபிமார்களு மகிழ்ச்சியாய் அங்கேயுரிமையாக அறம்மிபுனுதையான் விட்டுப்போன படைவீரர்களுக்குஆகுமான செய்திகளைச் சொல்லியவர்களுக்குவேண்டியவுதவிகளுஞ் செய்தார்கள்செய்துஅருளாகிய நபிநாயகம், மஆதிபுனுஜெபல் றலியல்லாகு அன்கவர்களையருமையாவிரைந்தழைத்து, "ஓகே, மஆதிபுனுஜெபலேநீர்செல்வீக வெற்றிபொருந்திய பனிபகுறிபுனுபாயி லென்றதிறத்தவர்களிடத்திற் போயவர்களைச் சீக்கிரம் இவ்விடத்திற்குவரும்படி சொல்லிக்கூட்டிவாருமென்று நன்மையான உத்திரவுசெய்தார்கள். அதுகேட்டுடனே இந்தமஆதிபுனுஜெபலோர்திறத்தகுதிரையின் பேரிலேசவாராகி வீரம்நீங்காதசிங்கத்தைப்போல்விரைந்துபோனார் அதின்பின்னர் நபிநாயகம்காலிதுறலியல்லாகு அன்கவர்களை யழைத்து, ஓகே காலிதேநீர் சண்டையிலேதிறத்த பனஅத்திலென்னுங்கிளையாரிலுள்ள இராஜாக்கள் யாவரையுஞ்சண்டைசெய்ய வலுத்தகுதிரைகளிலே வரும்படி சொல் நம்மிடத்திற்குக்

ட்டிவாருமென்று சொன்னார்கள், அதுகேட்டுடனே, காலிதுறவியல்லாது அன்கவர்கள் குதிரையின்மேலே சவாராகி, யக்குதிரையை அம்புவிசையாக நடாத்திக்கொண்டுபோனார்.

பின்னு மிதுபோல் நபிநாயகமவர்கள், பத்து அசுஹாபிமார்களை யழைத்து அவர்களைப் பார்த்து, நீங்கள்போய் இன்ன இன்ன, பத்தாரையுடைய இராஜாக்களைப் படையுடனே வரும்படி நான்சொன்னேனென்று சொல்லி யழைத்துவாருங்களென்று, ஊரையும் பேரையும் குறிப்பாகச் சொல்லியனுப்பினார்கள். அதுபோல், அந்தப்பத்து அசுஹாபிமார்களும், பத்தாரையும் நாடிப்போனார்கள்; போன பின்னர், நபிநாயகமவர்கள் காகிதமும் எழுதுகோலும் மையுமெடுத்துத் தங்கள் காத்திபுகளில் நின்றுமோர் காத்திபு கையிலேகொடுத்து இக்கடிதாசியில் முதல்வரி (பிசுமிலே) எழுதுமென்று சொல்லிப் பின்னர் அரிதான இக்கடிதம் அல்லாகுத்தஆலாவுடைய தூதனை முகம்மதிபுனு அப்துல்லா மகாபிரியமாக எழுதுங்கடிதம் யாதெனிற் பெரிய வளந்தங்கிய சபீதியென்ற வூரையாளும் வரிசை பொருந்திய, அம்றிபுனுமகுதீக்கரீபு ராஜர் அறிக இங்கே அடர்ந்த கேடுதங்கிய, கதுவம்மிஷக்கூட்டத்தார், களிபுனார்மலைப்புறத்தில் அவர்கள் படைக்கடலுடனே யானுமடர்ந்து, சூடான உயுத்தஞ் செய்வதினால், உம்முடைய அரிதான படைத் தலைவர்களுடனே நீரும், நல்வழி பொருந்திய முசிலிம்களுடனே சொல்ல அரிதான படையாயுதந் தாங்கி இன்பத்துடன் விரைவாக என்னிடத்திற்கு வருகவென்று சொன்னபடிக்குச் சீக்கிர மெழுதியழகாக மடித்தார், மடித்த கடிதத்தின்மேல், நபிநாயகத்தின் திருக்கைமோதிர முத்திரையுமிட்டு, அதனை வெள்ளியகிரணத் துகிலிலே பொதிந்து, புலவர்களாலே புகழத்தக்க, அப்துல்லா இபுனுசல்சுகுனியவர்கள் கையிற்கொடுத்து நீரிக்கடிதத்தைச்சீக்கிரங்கொண்டுபோய் அம்றிபுனுமகுதீக்கரிபு சபிதிய்பி கையிற்கொடுமென்று, சிலநல்வசனங்களும் வாய்ச்சமாசாரமாகச் சொன்னார்கள்உடனே, அப்துல்லா இபுனுசல்சுகுனியானவர் நாயகமவர்கள்கொடுத்த காயிதத்தை வாங்கிச் சிரசின்மேல் வைத்துக்கொண்டு அவர்கள் பாதம்பணிந்தெழுந்து, ஓர் குதிரையிலே சவாராகி அக்குதிரையின் காலின்மிதி பூமியிலே பட்டதோ படவில்லையோவென்று சொல்லத்தக்க விரைவாக நடாத்திக்கொண்டுபோயினார்.

இவ்விதம், பதின்மூன்றுதேசங்களுக்குக்கடிதாசும், ஆளுமாகஅனுப்பிவிட்டு நபிநாயகமவர்கள் சிங்கேறுபோல் இரண்டுநாளிரவும்பகலு

ஞ் சண்டைசெய்து இனியில்லை யென்றதிடனுடனே யிருந்தார்கள் இவ்விதம், நபிநாயகமவர்களுக்குத் தூதனுப்பியசெய்தியைப்பாவிஇறவுசுல்கூலென்பவன் றனதுவேவுகாரரினாலே யறிந்து தானும், உடனே நான்குதிக்குகளிலுமிருக்கிற காபிரீன்களாகிய இராஜாக்களும், அறபிக்காபிரீன்களுக்கும் வேண்டியதிரவியந்தருகிறேனென்று காயிதமெழுதித் தூதர்கள்வசம் அனுப்பிக் கடலைப்போலே படைகளையழைத்துத் தன்னூரிலிடமில்லாமல் நிறைத்துவைத்தான். இவ்விதம் சத்துருவாகிய இறவுசுல்கூலுக்குச் சொல்லமுடியாத பெரியபடைகளுதவிக்கு வந்ததை முசிலிமானவர்கள்கண்டு மனத்திடுக்கமாயிருக்கும்போது வானத்தையளாவிக் கடல் வெள்ளம்புரண்டு வந்ததுபோலே தூசியானது ஆகாயத்தைமறைக்க, குதிரைகள் வழிகளைமூடப் பேரிகைச்சப்தங் கடற்சப்தத்தையவிக்க, பெரியபடைகளாகச் சண்டைக்களத்தில் வந்ததுகண்டு தீனில்லிசுலாமானவர்களுங், காபிரீன்களும் இஃதாருடைய படையென்று யோசித்துக் கொண்டு நிற்கும்போது, அறம்மிபுனுதையானும், அவர்கூடவந்த படையோர்கள் (30000ம்) குதிரை வீரியர்களும் திரண்டு வந்து நபிநாயகமவர்கள் பாதாரவிந்தத்திற் பணிந்தார்கள். அதுகண்டு நபிநாயகமவர்களும், மற்ற முசிலிம்கள் யாவரு மனமகிழ்ச்சியாய்வந்தபடையோர்களையும் அருமைசெய்து வைத்தார்கள். பின்னர், இராஜரான அறம்மிபுனுதையானும், அவர்படையோர்களும், கடல்போன்ற தீனில்லிசுலாமான படையும், தங்கள் குதிரையின்மேலே சவாராகிச் சண்டைக்களம் வந்து நின்றார்கள்.

அறம்மிபுனுதையான் போர்புரிசருக்க-முற்றிற்று.

---

# அம்றிபுனுமகுதீக்கரீபுவரு சருக்கம்

---

கலிவிருத்தம்.

வம்பிராதமுகம்மதர் பாவிலே
சம்பிரதாயச் சபீதியை யாட்சிசெய்
அம்றிபுனு மகுதீக்கரீபவர்
இம்பர்போற்ற வருதலியம்புவாம்,

## இதன்பொருள்.

வம்பு வயிராக்கிய மெய்போது மில்லாத முகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய இடத்திலே, சம்பிரதாயமாகச் சபீதித் தேசத்தை யாசாட்சிசெய்யும் அம்றிபுனு மகுதீக்கரீ பென்னும் பெயரையுடைய இராஜர், பூலோகர்கள், யாவரும் புகழும் படியாய் வந்த வரலாற்றைச் சொல்லுகின்றோம்.

## சரித்திர வசனம்.

சண்டைகளத்தில் ஆயுதபாணிகளோடு குதிரையின்பேரிலே சவாராகி முசிலிமானவர் படை சிங்கக்கூட்டம்போல் வந்து நிற்பதைக் கண்டு, பாவிகளாகிய காபிரீன்க ளடங்கலுஞ் சண்டைக்கோலங்கொண்டு குதிரைகளின்பேரில், இந்தப்பூமியில் யானைக்கூட்டங்கள் வந்தெதிர்ப்பதுபோலெ படைக்களமடுக்க வந்தெதிர்த்தார்கள். அதுகண்டு, முசிலிமானவர்களு மெதிர்த்தார்கள், இவ்விதமிரண்டு படைகளுமெதிர்த்து நிற்கும்போது, மலைகளதிரும்படியா யொருதிசையிலிருந்து சத்தசமுத்திரத்தைப்போலே, கொடி, குடையுடனே படைக்கூட்டமொன்று வரக்கண்டு இருதிறப்படைஞரு மனதிலே மலைவுதோன்றி நிற்கும்போது, மலைகள்நடுங்க, மண்தூசுபெரிதாய்ப்பறக்க, இடங்களெல்லாநடுங்கப், பார்த்தவர் பயப்பட, இரத்தம்புரண்டிருக்கும் ஆயுதங்கள் பிடித்தவராகப் படைகள்கிட்ட நெருங்கினபோது, இறவுசுல்கூல் ஒருவனையனுப்பி இதுயாருடைய படையென்று பார்த்தறிந்து வாவென்றுசொன்னான்.

உடனே, யந்தத்தூதன்போய் அந்தப்படைக்கூட்டத்தை யடுத்து அவர்களைப்பார்த்து, இஃதியாருடையபடை? இந்தப் படையுடைய இராஜர் பெயரென்னவென்று? கேட்டான். அதற்கப்படைஞர்கள் தொடர்ச்சியாய் நல்ல அடவாகச்சொன்னதாவது, பகைத்த இராஜாக்களுடைய மனம் நடுநடுங்கவைக்கும் அம்றிபுனு மகுதீக்கரியென்று சொல்லு மகாபுலியானவர், பகையர் கொடுக்கவேண்டிய திறைப்பணத்திற்காகச் சிறைபிடித்து வந்தவர்களைத் திருப்பிக்கொள்ள, அவரவரே பணங்களைக்கொண்டுவந்து மலையைப்போலே குவித்து எண்ணி யொப்புக்கொடுக்குஞ் சத்தமோயாத சபீதியென்னு மூரையுடையவரென்று சொன்னார்கள். அதுகேட்டு, இறவுசுல்கூல் தூதன்பயந்து எங்கிநிற்காமல் அம்புவிசையாகப் போய்ப், பாவந்திரண் டுருவாய்த் தந்த இறவுசுல்கூலையடுத்து வணங்கிச் சண்டைப்புலியே, பூமியிலே

சத்துருக்களுக்கு ஓர் சிங்கேறே, நம்மள் படைகளுக்கெல்லா முடிவுநாளெடுத்துக் கொண்டவிதமாகச் சண்டைக் கடலிலே மிகைத்தெழும்புஞ் சூரியனைப்போலேயும், கண்ணிமைக்கு முன்னுயிரை வாங்குமெமனைப்போலேயும்; சபீதிநகரத்தைத் தனியரசாளும், அம்றிபுனுமகுதீக்கரீ யென்னுமிராசர் புலிகளைப்போலே சுத்தவீரியர்சூழ மஞ்சட்கொடியுடனே வருகிறாரென்றுசொன்னார்.

அதுகேட்டு இறவுசுல்கூல் அந்தத்தூதனைப்பார்த்து, யடாநீயந்த இராஜனையிவ்வளவு பெருமையாக என்முன்னிலே பேசினபிழையான காரியமென்னவென்று கோபத்துடனே சீறிப்பாய்ந்து, அவனைவாளினால்வெட்டியிரண்டு துண்டாகப் பிளந்துவிட்டான் அப்போதுஅம்றிபுனுமகுதீக்கரீயென்னும், ஸபீதிதேசத்திராஜர் அணியணியாகப்படைகள்சூழப்பூமியிலிருந்தெழும்புந் தூசியாகாயத்திலேபுதிதாயிட்டபந்தலைப்போலிருக்க, அப்பந்தலின் கண்,கொடி குடையென்றவண்ணப்பட்டங்கள் விரித்தபந்தலினுள்ளாகிவானந்தெரியாமல் அகன்றசிறைகளையுடையபருந்து, காகம், கழுகுமுதலியபறவையினங்கள்கூவுங்கூச்சலானது இன்றைக்குஅம்றிபுனுமகுதீக்கரீபுமன்னர்வந்தால் நம்மினத்தார்கள்யாவருக்குங்குறையில்லாது வாய்வயிறார ஆன்பசுப்புக்கிடைக்குமென்று தாங்கள் தங்களின்பங்கொண்டு கூவினதுபோலிருக்க அழகிய சிங்சக்கொடிகள், பிரகாசமான குடைகள், தந்தப்பல்லக்குகள், கவரிகள்: வெண்சாமரைகள், இரதங்கள், யானைகள், குதிரைகள் பக்கங்களிலேசூழச்சேனைகளுடனே தீனவரான அம்றிபுனுமகுதீக்கரீபு சபீதியானவர், அல்லாகுத் தஆலாவின்றூதர்முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சேனைகளிருக்கு மிடத்திற்கடுக்க வந்தபோது, அங்கிருக்கும் அசுஹாபிமார்கள்யாவரும்,வானம்வரையிலே சத்தமெழும்பும்படியாய், (அல்லாகு அக்பர், அல்லாகு அக்பர்) என்று தக்குபீர்ச் சத்தமுழங்கினார்கள்.

அதுகேட்டு, ஈனமான காபிரீன்களின் மனமெல்லாம் நடுக்கமுற்றன, அப்போது, அம்றிபுனுமகுதீக்கரீபுசபீதிஇராஜர் தமது சேனைகளைக் காரணக்கடவுளான நபிநாயகமவர்களின் சேனையுடனேகலக்காமலோரிடத்தில் நிறுத்திவிட்டுத் தமதுகுதிரையை மிகவிரைவாகநடாத்திக்கொண்டு சத்துருக்களின்படைக்கு முன்னே பூரணசந்திரனைப்போலே போய்த்தாமணிந்துவந்த எழுபதுஇருத்தற்பாரமும்நீட்சியில் முப்பது முழமுள்ள குறைவில்லாத வல்வயமும், வீரவாளும்பற்பல

ஆபரணாதிகளும் நவரத்தினம்பதித்த கிரீடமும் பிரகாசிக்கமூர்க்கங் கொண்டபுலிபோலேசீற்றங்கொண்டுநின்ற அல்லாகுத்தஆலாவுடைய முனிவினாலே வந்த அரிதாகியகாபிரீன்களான கூட்டத்தார்களே யென்றழைத்துப், பொல்லாத பாதகமான கொடுமைதங்கிய நீங்கள் பூமியிற்படிந்திருக்கு மணலைப்போல்பெரிய கூட்டமாகவந்துமோதி னாலும், என்னுடைய வெள்ளிய கிரணம்பாயும் வாள்முனை யிலேபட் டழிவீர்களே யல்லாது இப்பூமியிலே யுயிர்பெற்றுபிழைக்க மாட் டீர்களென்று சொன்னார். அதுகேட்டுக், காபிரீன்களில்நின்றுங் காட் டானையைப்போல் மதர்த்த, சைதிடையமகன் ஹஜ்ஜா சென்பவன் வந்தெதிர்த்தான் அவனைப்பார்த்து, அம்றிபுனு மகுதீக்கரீ பாத மது வரிசையான வாய்திறந்துநீயாரென்று கேட்டபோது, அவனு டையபெயருந், தத்துவமும் இன்னதென்றுசொன்னான் அதுகேட் டு அம்றிபுனு மகுதீக்கரீபு மிகுந்தகோபங்கொண்டு, அவனுக்குமுன் னாலடர்ந்தேறித் தமதுகையிலிருக்கும், முப்பதுமுழவேலையோங்கி அவனுடைய புரடியிலேகுத்தினார் அந்தக்குத்தோடு மவன்குதிரை மேல்நின்று கீழேவிழுந்து, புலியைக்கண்டஞ்சியோடும் ஆட்டுக்கடா ப்போ லோடிப்போய்த்தன்பெரும் படைநடுக்குள்ளே யொளித்துக் கொண்டான். அதுகண்டு, மிகுந்தபலம்பொருந்திய இறவுசுல்கூல் கோபங்கொண்டு கடலைப்போலே படைகளுடனேவந்த, அவ்வம்றி புனு மகுதிக்கரீபு சபீதியுடனே பலவிதமாக நானேசண்டை செய் வேனென்று படைனுஸ்துகளையணிய ஆரம்பித்தான்.

அம்றிபுனு மகுதீக்கரீபுவரு சருக்க முற்றிற்று.

## அசறபத்து சிறைபடு சருக்கம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

அட்டதிக் கவர்கள் போற்றுமாரண ரிரசூ லுல்லா
இட்டமுர் றசுஹா பீன்களில்புரி களத்தில் வந்து
திட்டனான் றவுசுல் கூல்செய் சொல்லத கஷற பாதான்
மாடறு சிறைபி லான வாக்கினை யியம்புவாமே.

### இதன்பொருள்.

எட்டுத்திசைகளிலுமுள்ள யாவர்களும் போற்றிப்புகழும்புருக் கான் வேதத்தையுடைய றசூல்நாயக முகம்மது சல்லல்லாகு அலைகி

வசல்லமவர்களுடைய மனவிருப்பமுற்ற அசுஹாபிமார்கள் நின்று உயுத்தஞ்செய்கிற களத்திலே, துஷ்டனன இறவுசுல்கூலுடைய மகன் சொல்லஅரிதான அஷறபத்தென்பவன் வந்து ஒப்பற்றசிரையி லகப்பட்டவரலாற்றைச் சொல்லுகின்றும்.

## சரித்திரவசனம்.

இவ்விதம், இறவுசுல்கூல்படையணிகளை யெடுத்தணியக்கண்ட, அவன்மகன் அஷறபத்தென்பவன் வேங்கைப்புலியைப்போற் கோபங்கொண்டு, தன்தகப்பனுன இறவுசுல்கூலைப்பார்த்தும் புகழ்ந்து என் தகப்பனே தேவரீர் தாங்கள்சண்டைக்குப்போகவேண்டாம் நான்யானையின் பலத்தைக்கொடுக்கும் குதிரைமேல் சவாராகிப்போய், மலைபோன்ற தோளையுடைய அர்தஅம்றிபுனுமகுதீக் கரீபாவுடனேசண்டைசெய்வேனென்றுசொன்னுன்; இவ்விதமவன் அஷறபத்தென்பவன் சொன்னசொற்களைக்கேட்டு இறவுசுல்கூல்மகனே நீசண்டைக்குப்போகவேண்டாம், அஃதேதெனெனில், அந்தப்பாவி அம்றிபுனுமகுதிக்கரீபாபொல்லாதவன், அவனைவெல்லயாராலு முடியாது நானே போகவேண்டுமென்று சொன்னுன். அச்சொல்லை அஷறபத்துகேளாமற் றுள்ளித்துடித்துப் புலிக்குட்டிபோல் மனமகிழ்ச்சியாய் அந்த அம்றிபுனு மகுதீக்கரீபா விடத்திற்போய்நின்றுன் நின்றவனை,

அம்றிபுனு மகுதீக்கரீபாபார்த்துநீயார்?சொல்லென்றுர் அதுகேட்டவன் உன்னதமான இறைசிக்காவென்றும் இறவுசுல்கூலென்றுஞ் சொல்லும் பெயருடைய இராஜாவின்குமாரன் வேங்கைக்கொப்பான அஷறபத்தென்றுசொன்னுன், அதுகேட்டுடனே அம்றிபுனுமகுதீக்கரீபாதாமேறிய குதிரையிர்கடிவாளக் கயிற்றைநெகுழவிட்டு நடாத்தி விசையாகத் தாவிப்பாய்ந்து வெட்டினுர், அந்தவெட்டுநடாத்திவிசையாகத்தாவிப்பாய்ந்துவெட்டினுர் அந்தவெட்டை அஷறபத்துதனது வேலினுலேதட்டினுன் தட்டியபோதந்த வேலிருதுண்டாகத்தெறித்து விழுந்தது. உடனே அம்றிபுனு மகுதீக்கரீபாவோர்பாய்ச்சற் பாய்ந்தவனைப்பிடித்துச் சிறைபாக்கிக்கட்டிப்பூமியிலேபோட்டிழுத்துக் கொண்டுவந்து, தலைவிலோ நட்சத்திரமொளி செய்துகொண்டிருக்கும் நபிநாயகமவர்களிடத்தில் விட்டார்விட்டபோதுடனேநபிநாயகம் அவனைக்காவலில் வைக்குபடியவருக்கே சொன்னுர்கள் அதுபோலே, அஷறபத்தைக் காவலில்வைத்துவிட்டு மறுபடியும் அம்றிபுனுமகுதீக்

ரீபு குதிரையின் பேரிலேறி நஞ்சிருக்கும் நெஞ்சரானகாபிரீன்கள், படையில் நின்றுமொருசுத்தவீரியன் பயமில்லாமல்வந்தெதிர்த்தான். அவனையும் அம்றிபுனுமகுதீக்கரீபு ஒருபாச்சலிலேகுதிரையில் நின்றும் பிடித்திழுத்துச் சுழட்டிஇன்னோர் காபிரானவன்மேலடித்தார் உடனே யாவருங்காண்க அவ்விரண்டுபேரும் இறந்து நரகஞ்சேர்ந்தார்கள்.

மறுபடியும் அம்றிபுனுமகுதீக்கரீபுசபீதிய்யீகாபிரீன்கள்கள் படையினடுவிற்புகுந்து இடியைப்போலிறைந்துகுதிரையைவலசாரி இடசாரியாகப் பலபல விடங்களுங் கலகலென்று நான்குகால் வீரதண்டை குலுங்க நடாத்திவாளாயுதம், வேலாயுதங்கொண்டு சத்துருக்கள்(70) பேரைக்குற்றிவெட்டிக்கொன்றுபோட்டு விரிந்தகடற்சூழ்ந்தபூமியெல்லாம் நபிநாயகமவர்களிடத்தில் வந்து, அவர்களிருபாத தாமரையில் பணிந்தெழுந்து நின்றார். அதுகண்டுநபிநாயகமும், நான்கியார்களும் மற்ற அசுஹாபிமார்களு மிகுந்தசந்தோஷமாய் ஆண்டவனைப்புகழ்ந்திருந்தார்கள்.

அப்போது முன்னர், நபிநாயகந் தூதாயனுப்பிய பன்னிரண்டு வீரசூரர்களும் அவ்வவ்வூர்களிலேபோய், அங்கிருக்குந்தலைவர்களை இராஜாக்களைக்கண்டு, காபிதங்கொடுத்தும், வாய்மொழிசொல்லியும் பெரிய கடற்போலே, யுதவிக்காகக் குதிரைப்படைகளைத் திரட்டிக்கொண்டு வந்து, சொர்க்கநகருக்கும் இராஜவானநபிநாயகமவர்கள் பாதம் பணிந்திருந்தார்கள், அப்போது, இறவுசுல்கூல்தன்மகன் அஷறபத்துச்சிறையிலகப்பட்டதறிந்து மிகுந்தவியாகூலமாகித்தானணிந்திருக்கும் பொற்கிரீடத்தைக்கழட்டி வீசிவிட்டுப் புழுதிமண்ணையள்ளித் தலையிலிட்டு திகில்கொண்டு அரற்றிச்சத்தமிட்டு அழுதுசோர்ந்துபின்னர், தன்மேலிருந்த பிடவைகளைத் கிழித்தெறிந்து, ஏழுகடலொத்த தனதுபடைகளைப்பார்த்துக், கணக்கிலடங்காத படைவீரர்கள்போய், நமதுசத்துருவாகிய, தீனவருடனே சண்டை செய்யுங்களென்று கொடூரமாகச்சொன்னான், அதுகேட்டவர்கள் யாவருந்திரண்டு ஆயுதங்களுடனே சண்டைக்களம்வந்து நின்றெதிர்த்தார்கள்.

அஷறபத்துச் சிறைபடு சருக்கம் முற்றிற்று.

# அறம்மிபுனுதையானீமான்கொண்டசருக்கம்

---

மாசகல் முகம்ம துல்லா மலரடி யிறைஞ்சிப்போற்றி
யாசகல் தைய்யா னின்சேய் அறம்றமென் றுரைக்கும் வேந்தர்
வாசகஞ் சிறப்ப விந்த வையகம் வாழ்த்தமேன்மைத்
தேசுறு மீமான்கொண்ட செய்தியைசெப்புவாமே.

## இதன்பொருள்.

குற்றமற்றமுகம்மதுமுஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் பாததாமரைகளில் விழுந்துபோற்றி, பாதகமகன்றதையா னுடைய மகனார் அறம்றம்மென்று பேர் சொல்லப்படுமிராஜர், அவர் முன்சொன்னசொற்சிறப்பாக, இந்தப்பூலோகமுழுதும் வாழ்த்த,மே ன்மைப்பிரகாசமான ஈமான்கொண் டிசுலாத்திலான செய்திகளைச் சொல்லுகின்றோம்.

## சரித்திர வசனம்.

சத்துருக்கள் படைக்களத்திலேவந்து எதிர்த்துநிற்கிறதை நபி நாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் அசுஹாபி மார்களாகிய படைவீர்கள் யாவருங்கண்டு, உடனே தாங்களேறு கின்ற ஒப்பில்லாத நடையையுடைய குதிரைகளின்மேலே சலாராகி யுருவிய ஆயுதங்களுடனே புலிகளைப்போலே படைக்களம் புகுந்துழ க்கி வாளாலும், வேலாலும் வில்லிலேற்றிய அம்பாலும் வெட்டிக் குற்றி யெய்ததினாலே, கிரீடமணிந்த இராஜாக்களு மவர்களுடைய படையுமுறிந்து பூமியில்விழ, எவர்களுமேங்க இரத்தமெவ்விடமும் பரந்தோடின. அதுவுந்தவிர அல்லாவி னறுசுப்புலியான அலிறலி யல்லாகு அன்கவர்கள்வாளினாலும், அம்றிபுனு மகுதீக்கரீபு வேலினா லும் விண்ணவர்புகழ் மண்ணுலகிலனேகங் குபிரர்மாண்டார்கள்.

இப்படிக்காபிரீன்கள் அனேகர்மாளும்படிநான் கிடங்களிலுந்தி ரிந்து வெட்டினதால், அம்றிபுனுமகுதீக்கரீபுக்குச் சடலங்கொஞ்ச மிளைப்பானது,அதினால், அவ்விளப்பை யாற்றநபிநாயக மவர்களிருக் குங்கூடாரத்தைநாடிவந்தார் வந்தபோதங்கேநபிநாயகமில்லாது பூமி

யெல்லாம் புகழும் சல்மான்பாரி சிரிக்கக்கண்டு, அவரைப்பார்த்து நபிநாயகமெங்கே? யென்றுகேட்டார். அதற்கந்தச் சல்மான்பாரிசு நபிநாயகம் சத்துருக்களுடைய படைநடுவிலே நிற்கிறார்களென்றார். அதுகேட்டு, அம்றிபுனு மருதீக்கரீபா வுடனே மகாவேகமான கது விமென்கிற தங்குதிரைமிலேசவாராகிக், காற்றும், பின்னிட அக்குதிரையைக் காபிரீன்கள் சேனைமுறிய நடாத்திப்படைக்களத்தி னடுவிலாகிப் பார்த்தார். பார்க்கச்சே யங்கே அலிறலியல்லாகு அன்கவர்கள் கடலைப்போல்நின்ற சத்துருக்கள் சேனைகூட்டங்க ளறும்படியாய்ப் புலியைப்போலே பாய்ந்துபாய்ந்து வெட்டக்கண்டு, இன்றைய தினம் நல்லோர் ஆச்சரியத்தை நாம்கண்டதென் றெண்ணிக்கிட்ட நெருங்கயிலே; இவரையலிறலியல்லாகு அன்கு கண்டு இன்பமான சொற்களாக ஓகே, அம்றேவாரும் வாருமென்றழைத்து, அவரோடு தாங்கள் படையிலே சத்துருக்களைப் படுத்திய பாட்டையெல்லாஞ் சொல்லிவிட்டுத், தாமதித்து நிற்காமல் பூமிநடுங்கும்படி சத்துருக்கள் படையிலடர்ந்தேறினார்கள்.

பின்னாலே அம்றிபுனு மருதீக்கரீபு மடர்ந்தேறினர், அடர்ந்தேறிய இவ்விரண்டுபேரும் வெட்டுகிறவெட்டினாலே மிகுந்த காபிரீன்கள் மாண்டார்கள் இன்னுங் கொஞ்சம் அப்புறம் மிரண்டுபேர்களும்போய் பார்க்கும்போது, மிகுவோசையாக ஒருசத்தம், அம்றே நீர் சீக்கிரம்மிவ்விடத்தி லென்னுடனுக்குதவியாக வாருமென்று மிகுதாது றலியல்லாகு அன்கு அழைக்கக்கேட்டு, உடனே, அம்றிபுனு மருதீக்கரீபும் அலிறலியல்லாகு அன்குமின்னலைப்போலே குதிரையை யோடவிட்டுப் போய்பார்க்கச்சே, அங்கே மிகுதாதிபுனு அசுவதுகிந்தி றலியல்லாகு அன்கவர்கள், ஐம்பது காபிரீன்களைக் குதிரையோடும்வெட்டி விழுத்தாட்டிய இளைப்பினா லுடலந்தளர்வாகிக் குதிரையுமில்லாமற், பூமியிலே, விழுகிற தருணமாக இருக்கக்கண்டு மிகுகோபங்கொண்டு, மிகுதாதுறலியல்லாகு அன்குவைச் சூழ்ந்துநின்ற காபிரீன்கள் பின்னாகும்படி வெட்டினார்கள். இவ்வித மிவர்கள் வெட்டியவெட்டிலனேகங்காபிரீன்கள் மாண்டதைக்கண்டு மற்றகாபிரீன்கள் நெஞ்சமஞ்சிப் பின்னிடைந்தோடினார்கள். அப்போது அம்றிபுனுமருதீக் கரீபவர்கள் மிகுதாதுறலியல்லாகு அன்குவைமுடிகி யவர்களைத் தாமேறியிருக்குங் குதிரைமே லேற்றிக்கொண்டுவருகிறவழியிலே காபிரீன்களை வெட்டிக்கொண்டே வரச்சே, யொருசத்துரு மிகுந்ததிடத்தவனாக, எமன்புரடியைப் பிடித்துத் தள்ளிக்கொண்டுவருவதைப்போ லிவர்கள்முன்னாலே, அவனேறிய குதி

ரையை யோட்டிக்கொண்டுவந்தான். வந்தவனை, அம்றிபுனுமகுதீக் கரீபாபாய்ந்து குதிரைமேல்நின்று மோர்மரம்பிளந்து விழ்வதுபோ லேவிழவெட்டி யிருதுண்டமாகப் பிளந்துவிட்டு, அவன் குதிரையி லே, மிகுதாதுறவியல்லாகு அன்குவை யேற்றிக்கொண்டு கீர்த்தி பெற்ற மூன்றுபேர்களூ மறுபடியும் காபிரீன்கள் படைக்கடலிலே ஜாடிவெட்டினார்கள்.

அப்போது, திசைகள்தோறுஞ் சண்டைக்களத்திலே, இபுனு அப்பாசுறவியல்லாகு அன்கவர்கள்போய் வாமுகம்மதா, வாமுகம் மதாவென்று கூப்பிடுங் குரற்கேட்டுத், தாசிமென்னும் பெயரையு டைய நபிநாயகஞ் ஜவாபுகொடுத்த சத்தம் அவர்கள் காது யிவ்வது போலிருந்ததால், அந்தச்சத்தம் வருமிடத்தை நாடிப்போய், நபி நாயகத்தைப் பார்த்ததில், அப்போதங்கே அம்றிபுனுமகுதீக்கரீபும் மிகுதாது றவியல்லாகு அன்கும் நெருங்கக்கண்டு, அழகிய முசிலீ மானவரனேகர்சூழ விஷேஷமான மகா நல்லநயத்துயுடைய ஓர் கொடியினிழலின்கீழே இராஜாராஜர் புகழும் நபிமுகம்மது சல்லல் லாகு அலைகிவசல்லம் பொற்பிரகாசமாக இருப்பதைக்கண்டு ஆவ லாய் முன்னிலையிற் போய் அருள்பெற்ற அல்லாவுடைய ஹபீபாகிய நபிநாயகத்தின் பாதம்பணிந் தவர்களைப்பார்த்து எட்டுதிசையி லுந் திக்குத்திகாந்தங்களிலு மிலங்கும்புகழைப்பெற்ற அல்லாகுத்த ஆலாவின் தூதரே வாசனைகமழுஞ்சரீரத்தையுடைய மகுமூதென் லும் இராஜரே! தேவரீர் தாங்கள் சண்டைக்களத்திலே வந்திருப்ப தால் எங்களுக்குச் சத்துருக்கள்மேலே கைகால் மிகவும் விரைவைக் கொடுக்காமல் உங்கள்பேரிலேயே மனமுங்கண்ணும் பார்வையாயிருக் கின்றன. ஆதலால், அல்லாவின்பேரி லாணையாக இனிவெள்ளிய கிரணமுமிழும் நமதுபடைக்கூடாரத்திற் போயிருங்களென்றார்.

இவ்விதமவர்கள், ஆணையிட்டதினால், உடனே நபிநாயகம்படைக் களத்தைவிட்டும் விலகி யொப்பில்லாத கூடாரத்திற்குப்போய் தாங் களிருக்குமிடத்திலே நின்றுசொண்டு மனவருத்தமாகச்சூரநிலத்தி லேகலிமாவிரலாலே ஒருகீற்றுக்கீறி அக்கீற்றுவழியாயாற்றையழைத் துக்கீர்த்திபெற்ற இரண்டுகையையும் அந்தரத்தைப்பார்க்க வுயர்த்தி அங்கேயிருக்கு நதீனவர்கள்யாவரும்கேட்கும்படியாய்த்தங்கள் கற் பூரவாடைகமழுந் திருவாயைத் திறந்துவானத்தைத்தூண்கள் ஒன்று மில்லாமல் மேலேநிறுத்திப் பூமியைத்தண்ணீரின் மேலேநிலையாக்கி வைத்தமுதல்வனே! மெய்யையுடைய முசிலீம்கள் வெற்றிபெறும்படி

யாய் நீ இந்தட்சணமேவானவர்களைஉதவிக்கு வரும்படியுத்திரவு செய்வாயென்றுவேதவுதிப்புடனே துஆக்கேட்டார்கள்· அந்தத்துஆ முடியுமுன்னே அல்லாகுத்தஆலாவி னருளினாலே ஜிபுரீலலைகிஸ்ஸலாமவர்கள்வந்து அல்லாகுத்த ஆலாவுடைய சலாமுங்களுக்குண்டாவதாகவும் யாமுகம்மதே யுங்கள்மனம்போலே கணக்கி லடங்காத மலாயிக்கத்துமார்களைஅல்லாகுத்த ஆலாமிகுதிறமாக அனுப்பியிருக்கிறார்கள், அவர்களைப்பார்த்து நீங்கள் இந்தப்பூமியையெடுத்து விழுங்கச்சொல்லி யேவினாலுமதிஷ்டம் போலே செய்வார்களென்று சொல்லிவிட்டு வானலோகம் போயினார்கள்.

அதுகேட்டு நபிநாயக மிகுந்தசந்தோஷமாகியிருக்கும் போதிற்சொர்க்கத்துப் பசும்பட்டணிந்து பலபல ஆயுதங்களைக்கையிலேந்திமின்னலைப்போலேபறக்கும்பஞ்சகல்யாணிக்குதிரைகளின்பேரிலேறினவர்களாய் அனேகம் வானவர்கள் சண்டைக்களத்திலிறங்கி நபிநாயகமவர்களின் படையணிகளிலொன்றாகக்கலந்து நின்று இந்தப்பூமியிலே பலபேர்கள் கண்காணும்படியாய் அந்தரமட்டில்வாட்களின்னொளிபிரகாசிக்கச் சத்துருக்களைவெட்டினார்கள். அப்போது வானோர்களேறிவந்த குதிரைகளுந் தீனோர்களேறிநிற்கும் குதிரைகளும் பூமியிலேகுதித்து நடப்பதிலே யவைகால்களிலிருந்து எழும்புந்தூசு சூரியனின்பிரகாசத்தை மறைப்பதாயின்; அந்நேரம் அல்லாகுத்த ஆலாவினருளினாலே தீனோர்கள்படையணியை மாத்திரஞ்சூழச் சோனாவரிமழைபெய்தது அதனாலங்குபரவியதூசியெல்லாம்நீங்கி அந்தநிலமுழுமையுஞ் சிறப்பாயிருந்தன. இவ்விதம் நபிநாயகத்தின் படையணியிலே நடக்குமுகதாவில் "நஸ்ஸல அலைக்குமினஸ்ஸமாயி" என்கிறகுறுஆனைத்தொன்றிறங்கினது. அதின்பொருளாவது, பாரயமாகிய அகியான் தாபித்தாவினுள்ள எழுத்தின் பிரகாரம் இரங்குதலாய் இந்தப் பூமியிடத்தில் உங்கள்பேரில் அருளாகியதெந்தக்காலமும் நிறைவாக வானலோகத்திலிருந்து நீர்சொரியுமென்பதாம், இவ்விதம் வானவர்கள்வந்து காபிரீன்களை வெட்டுகிற காரணத்தை, அறம்மிபுனுதையான் கண்டு நபிநாயகமுண்மையை யுடையவர்களே தவிரவேறில்லையென்றெண்ணித்தமது படையோர்களையழைத்து ஆகாயத்தவர்கள் செய்யுஞ் சண்டையின் வல்லபத்தைக்காட்டினார், அந்தக்காரணத்தை யவர்களுங்கண்டு மிகவுமனமகிழ்ந்தார்கள்.

அப்போது அறம்மிபுனுதையான், வானவர்கள் புகழ்ந்தேத்தும் நபிநாயகத்தினிடந், தமது படைஞருடனே கூடிவந்து பாதம்பணிந்து

அதபுமரியாதையுடன் போற்றிப்புகழ்ந்து "லாஇலாக இல்லல்லாகு முகம்மதுர்றசூலுல்லாகி" யென்ற திருக்கலிமாச்சொல்லி யீமான் கொண்டு இசுலாத்திலாகினார்கள். அந்தத்தருணத்திலே புலிவிபுனு அப்பாசு றலியல்லாகு அன்கவர்கள் நபிநாயகத்தினிடத்தில் வந்து, முசிலீமானவர்கள் படைக்கூட்டம் நிற்குமிடமட்டுமழைபெய்த்தும் வானவர்கள்வந்து காபிரீன்கள்படையில் விழுந்துவெட்டினதுஞ், சண்டைநடந்ததிறமுஞ்சொன்னார்கள். அதுகேட்டுநபிநாயகமகிழ்ச்சியாகிச், சல்மான்பாரிசு றலியல்லாகு அன்கவர்களையழைத்து அவரைப்பார்த்து ஓகே, சல்மானேநீர் சீக்கிரம் படைக்களம்புகுந்து அலியாரெங்கே நிற்கிறார்களென்று பார்த்துவாருமென்றார்கள்.

அதுகேட்டுச், சல்மான் பாரிசவர்கள் படைக்களம் போகும்போது, ஒருசத்துருவாகிய காபிரானவனிவர்களை வெட்டவேகமாகவந்தான்அதுகண்டு, சல்மான்பாரிசவர்கள், உமறிபுனு கத்தாபுறலியல்லாகு அன்கவர்கள் நிற்குமிடத்திற் கோடிப்போய்; யாஉமறே! இப்போதெனக் குதவிசெய்யுங்க ளென்றார்கள். அதுகேட்டு, உமறுகத்தாபுறலியல்லாகுஅன்கவர்கள் மிகுகோபங்கொண்டு சல்மான்பாரிசவர்களைத் துரத்திக் கொண்டுவந்த காபிரீன்மேலே பாய்ந்து ஓரேவெட்டி லவனையிரண்டு துண்டாக்கிவிட்டுச் சல்மான் பாரிசைப்பார்த்து, ஓகே, சல்மானே நீரிந்தப்படைமளியி லிங்கேயேன் வந்தீரென்று கேட்டார்கள், அதற்கவர், நபிநாயகம், அலிறலியல்லாகு அன்கவர்களைப் பார்த்து வரச்சொன்னார்களதற்காக வந்தேனென்றுசொல்லக் கேட்டுச் சிறப்புப்பொருந்தி உமறுகத்தாபு றலியல்லாகு அன்குஅலியார வர்கள் சத்துருக்களின் படைநடுவில் நின்றார்க ளாதலாலவ்விடத்தித்திற்கும்மாலே யிப்போது போகக்கூடாது, சல்லானே நீர்வந்த இஷ்திற்குப்போமென்று சொல்லிவிட்டுத், தாங்கள் சத்துருக்கள்படையிலே பாய்ந்தார்கள்.

பின்னர், சல்மான் பாரிசவர்களு நபிநாயகமவர்களிடத்தில் வந்துதாம்போனயிடத்தில் நடந்தசங்கதிகளைச்சொன்னார். அதுகேட்டு நபிநாயகஞ் சந்தோஷங்கொண் டிருக்கச்சே, சண்டைக்களத்தில் உமறிபுனுகத்தாபவர்களும் அசுஹாபிமார்களும் வானவர்களும்சத்துருக்கள்படையி லெப்புறமும், பாய்ந்து பாய்ந்துவெட்டுவதினாலே காபிரீன்களிலே தலையறுந்தவர்கள்சிலர், தோளுமார்புமறுந்தவர்கள் சிலர் கைகாலறுந்தவர்கள்சிலர் குடற்சரிந்தவர்சிலர் அதனோடுகுதிரைகளி

னூற்கால்களும் அறக்கெடுத்துப் படைமுறிந்தோடினார்கள் இவ்விதத்
திலேபடைக்களமெல்லாம் இரத்தப்பிரவாகமாகஇருந்தன. அப்போது
சண்டைக்காற்றுமல் முறிந்தோடியசத்துருக்களும் அவர்கள் இரா
ஜா இறவுசுல்கூனு முதற் கோட்டைக்குள்ளே போய்ப்புகுந்து நூறு
போராலே தள்ளக்கூடாதகோட்டைவாசலுக்கிடுங் கருங்கற்கதவைத்
தள்ளிப்பூட்டிக்கொண்டு இனிதீனுனவர்கள் நம்மையொன்றுஞ்செய்
யமுடியாதென்று மதங்கொண்டிருந்தார்கள்.

இங்கேசண்டைக்களத்திலே தீனுனவர்களால் வெட்டுண்டிறந்த
சத்துருக்களின் பெண்சாதிமார்கள் யாவருமேங்கியழுதார்கள். அந்
நேரத்திலே சூரியனும் அடைந்தான், அப்போது மேகக்குடையில்
வருங் காரணநபிநாயகமவர்கள் படைகளைக்கோட்டை யோரத்திலே
கூடாரமடித்திருக்கவுத்திரவு செய்தார்கள் அதுபோல்யாவருங்கூடா
ரங்களைக்கோட்டையை யடுக்கக்கொண்டுபோ யடித்துவிட்டுச்சண்
டைக்களத்தி லிறந்தவர்களைப் பார்க்கும்போது, கணக்கிலடங்காத
முசிலீமானவர்கள் ஷகீதாகியிருந்தார்கள். காபிரீன்களிறந்ததொகை
அல்லாகுத்தஆலா அறிவானேதவிர மற்றப்பேர்களாலே கணக்கிட்ட
றியக்கூடாமையா யிருக்கக்கண்டு, நபிநாயகத்துக் கறிக்கையிட்டார்
கள் அதுகேட்டு நபிநாயகம்தங்கள் கூடாரங்களைக் காக்குகிறதற்குக்,
காலிதுறலியல்லாகு அன்கவர்களைக்கட்டளை யிட்டுத்தாங்களும் அசு
ஹாபிமார்களுமாக அவ்விரவிற் செய்யவேண்டிய நேமநிஷ்டைகளைச்
செய்து, அல்லாகுத்தஆலாவைப்புகழ்ந்து நித்திரை செய்தார்கள்.
பின்னர், விடிவோனபோது எழுந்திருந்து பனிமுகத்திலேயே,
உலுச்செய்து நபிநாயக, முன்னிலையாகவு மற்ற அசுஹாபிகள் யாவ
ரும் பின்னிலையாகவுநின்று, உடல், உயிர் பேசநாவுமுதலிய அவய
வாதிகளை யுண்டாக்கிய அல்லாகுத்தஆலாவைச்சங்கையாகத்தொழுது
வேதவாக்கியங்களை யோதிக்கொண்டிருந்தார்கள்.

அறம்பிபுனுதையா னீமான்கொண்டசருக்கம் முற்றிற்று

# அசறபத்தீமான்கொண்ட சருக்கம்.

எழுசீர்க்கருநெடி லாசிரியவிருத்தம்

வசையறுங் குறைவிக் குலத்தி னிலுதித்த முகம்மது நபிநபி ஞரின் விஷயமு நவமு மதிமதித் தெழிலார் மேலவ ரெவர்களும்பு கழ, அசைவிலா வருளின் பவப்பிணி யகற்று மானந்தமாங்கலிமா வை அஷறபத்துரைத்தீமான்கொளும் வண்மை யனைத்தையுந்தொ குத்தினி துரைப்பாய்.

## இதன் பொருள்.

இந்தவுலகத்தி லுண்டாகும் வசைகளறுந்தகுறைஷிக்குலத்தி ற்றோற்றிய, முகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களி னடத்தைதையையும் காரணத்தையும். புத்தியில்மதித்து அழகி யமேலோர்களெவர்களும்புகழ, அசையாத நிலைபெற்ற அல்லாகுத் ஆலாவி னருளோடும், பாவமென்கிறநோயை யகற்றிவைக்கும் ஆன ந்தமாகியமதுரமொழியான, லாஇலாக இல்லல்லாகு முகம்மதுற் றசூலுல்லாகி, என்னுங்கலிமாவை அஷறபத்தென்பவர் சொல்லி, ஈ மான்கொண்டிசுலாத்திலான சிறப்புகள்யாவையும் விபரமாகயெடுத் து இன்பமாகச் சொல்லுகின்றோம்

## சரித்திரவசனம்.

அல்லாகுத்த ஆலாவைச் சங்கையாக யாவருந்தொழுது வேத வாக்கியங்களை யோதினவர்களா யிருக்கும்போது அறம்மிபுனுதை யானும், அவருடையபடைவீரருந் தாங்கள் முன்னர்சொன்னகலிமா வைப் புதுப்பித்து, முத்தி புத்தி யுள்ளவரும் பணிகின்றதெளிவையு டைய நபிநாயகமவர்களின் பாதத்தைச் சிறப்பாகப்போற்றினார்கள். அ ப்போது நபிநாயகம் சிலஅசுஹாபிமார்களைப்பார்த்துச் சிறையிலிருக் கும், இறவுசுல்கூலுடையமகன் அஷறபத்தைக்கொண்டுவாருங்களெ ன்றார்கள். அதுகேட்டு அவ்வசுஹாபிமார்கள்சீக்கிரம்போய் அஷறப த்தைக் கொண்டுவந்தார்கள். அப்போது நபிநாயகம்அவ்வஷறபத்தை க் கிருபையாகப் பார்த்து, அன்பாகக்கலிமாச் சொல்லச்சொன்னார்க ள், அதற்கு அஷறபத்து, நபிநாயகமவர்களைப்பார்த்துத்தேவரீர் தங்க

விடத்திலேயா தேனுமொருகாரணத்தைக்காணும லென்மனமெப்படி க்கலிமாச்சொல்லப் பொருந்துமென்று சொன்னன், அதுகேட்டு, நபிநாயகம் அவ்வஷறபத்தை, யழகாகிய கிருபைக்கண்ணுற் பார்த்து, ஒகே, அஷறபத்தே, என்னிடத்திலுமக்கென்னகாரணங் காணவேண்டுமென்று கேட்டதற்கு மறுபடியும், அசறபத்துநபிநாயகத்தைப்பார்த்து அமாவாசையிலே பூரண சந்திரனை யழைத்தநினுடன் பேசிய காரணத்தின லனேகம் பேர்களைப் புறக்காணென்னுந் திவ்விய வேதம் திலாவரச்செய்த, அகுமதே, இராஜாக்கள் அஞ்சித்திறைவிடு முகம்மதே யென்று புகழ்ந்து, அங்கே கிட்டக் காய்ந்து கிடந்த விறகுக் கட்டையொன்றைக் சுட்டிக்காட்டி யிந்தக் கட்டையைப் பூமியி லூன்றியதில் நின்றுந் துளிர்த்துப் பச்சையிலைப்பணர் விட்டுப் பூத்துக், காய்த்துப், பழஞ் சொரியச் செய்தால் எனக்கது போதுமான வுண்மையாயிருக்கு மென்றுன். அதுகேட்டு, நபிநாயகம் உடனே நினைக்குமுன் அறியும் ஒப்பற்ற தூயனை| அல்லாகுத்த ஆலாவை நினைத்துத், தங்கள் தலையைப் பூமியை நோக்கிக் கவிழ்ந்திருந்தபோது வானவர்க்குத் தலைவரான, ஜிபுரீ லலைகிஸ்ஸலா மவர்கள் வந்து, அல்லாகுத்த ஆலாவுடைய சலாமுஞ் சொல்லி வகியறிவித்து யாமுகம்மதே, பாவி இரவுசுல்கூலுடைய மகன், அஷறபத்து உங்களிடங் கேட்டபடிக்கு யாதொரு தடையில்லாமலுண்டாகுமென்று சொல்லி விட்டு வானலோகம் போயினுர்கள்.

அதுகேட்டு, நபிநாயகமிகுந்த சந்தோஷமாகி, அஷறபா சுட்டிக் காட்டிய விறகுக் கட்டையை வலதுகையின லெடுத்துத் தேவாமிர் தத்தையொத்த பிசுமிலை யோதிப் பூமியிலே யூன்றியபோது, அவ் விறகுக்கட்டை வேரூன்றிப் பசுமையாய்த் தளிர்த்து நான் கிடமும் வட்டமாகத்திரண்டு, எழுகொப்பாகப்பணர்விட்டு அப்பணர்கள் குறைவில்லாத இலைகளால் நிறைந்து, பூப்பூத்து,ஒவ்வோர் கொப்புக்கு, எழுபழங்களாகவும், ஒவ்வொரு பழங்களின் இன்பம், ஒவ்வோர் விதமாகவு முண்டாயினது அதுகண்டு அசுஹாபிமார்கள் யாவருங் குபிர்சொன்னர்கள். அஷறபத்து எழுந்து பூமியிலே தடர்ந்தெரியாமல், ஒவ்வோர்விதமாகவு முண்டாயிற்று, அதுகண்டு அசுஹாபிமார் கள்யாவருந் தக்குபிர்சொன்னர்கள், அஷறபத்தெழுந்து, பூமியிலே தடந்தெரியாத நபிநாயகத்தின் பாதத்தில்வீழ்ந்து முத்தியிட்டுஅங்கு காரணத்தினுலுண்டாகிய கனியினும், பாலினுந், தேனினுந், தெளிந்த அமுதத்தினும் சீனிகற்கண்டினும், மகாயின்பமுற்றவராகி யானந்த

பாஸ்காங்கொண்டு பாதத்தைவிட்டெழும்பி வசைகளைநீக்கும் (லாஇலாக இல்லல்லாகு, மும்கமதுர்றசூலுல்லாகி) என்னுமிந்த அவ்வற்கலிமாவைச்சொல்லி வாக்குமனமுமொன்றுகி அல்லாவுடைய திருநபியிவர்களே யல்லாமல் வேறில்லையென்று புகழ்ந்து தீனில்விசுலாமாகினதினாலே, சொர்க்கத்தவர்கள் புகழுநபிநாயகமவர்கள் முதலிய அசுஹாபிமார்கள் யாவரும் அல்லாகுத்த ஆலாவைப் புகழ்ந்திருந்தார்கள்.

அஷறபத்தீமான்கொண்ட சருக்கமுற்றிற்று.

---

## அகிழ்கடந்த சருக்கம்.

கலிவிருத்தம்.

புகழ்மிகுந்த புநிதமுகம்மது
மகிழ்மிகுந்தமனத்துடைதீனரு
மிகழ்மிகுந்த பகைவர்களோங்கிட
வகிழ்கடந்திடு மற்புதஞ்செப்புவாம்

இதன்பொருள்

இந்தவுலகத்திற் கீர்த்திப்பிரபல்ய மிகுந்த நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம், தங்களின் மனமகிழ் அதிகரித்த நெஞ்சையுடையதீனில் விசுலாமானவர்கள் இகழ்ச்சிமிகுந்த சத்துருக்கள் ஏங்கித் திடுக்கங்கொள்ள அகிழியைக்கடந் தப்புறமான காரணத்தைச் சொல்லுகின்றும்.

சரித்திரவசனம்

வரிசையாகிய நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும், நாலுயார்களும், மற்ற அசுஹாபிமார்களு மகிழ்ச்சியாயிருக்கும்போது, முன்னர் படைக்களத்தில் முறிந்துயிர் பிழைக்கலாமென்றெண்ணி யறுதலியென்னுங் கைப்பெண்டீர்களைப் போலே தோற்

றுப்பரிசனத்துட னோடிப்போய்க் கோட்டைக்குட் புகுந்தொளித்த இரவுசுல்கூலும் படைஞர்களும்; கோட்டைவாசலுக்கிட் டடைத்திருக்குங் கற்கதவைத்திறக்காமல் மதிலினுச்சத்திலேறி நின்று தீனானவர்களங்கே நெருங்கினால், எய்தும் எறித்துங் கொல்வோமென்று அம்பு கவண்கல், வளைதடி, சூலம், பாலாமுதலான எறியாயுதங்களைக் கையிலேந்திக்கொண்டு நிற்கச்சே நேரம்விடிந்தது, இப்போது தீனானவர்கள்பலர் குதிரைமேலேசவாராகி யக்குதிரைகளை நடாத்திக்கொண்டு கோட்டைமதிலை யுடைக்கப்போகும்போது, அங்கே மதிலுக்குமேலே ஆயுதத்துடனிருக்கிற பாவிகளாகியகாபிரீன்கள் அம்பாலும், கவண்கற்களாலும், எறியவும், எய்யவுஞ்செய்வதால், தீனான வீரியரிலே நூறுபேர்கள் ஷகீதாகிச் சுவனபதிசேர்ந்தார்கள்.

அதுகண்டு, மற்ற அசுஹாபிமார்கள் அவ்விடத்தைவிட்டு நீங்கி நபிநாயகமவர்களிடத்தி லோடிவந்து, கோட்டைவாசலில் நடந்த சண்டையையும், அதனாலுண்டாகிய சேதத்தையுஞ் சொன்னார்கள் அதுகேட்டு, நபிநாயகமவர்கள் மிசுந்தகவனமாயிருந்து, அங்கிருக்கும் அசுஹாபிமார்களைப்பார்த்து என்னருமையான அசுஹாபிமார்களே யுங்களிலே கோட்டைவாயிலையடுத்து அதற்கிட்டிருக்குங் கற்கதவைத்திறக்கும் பலத்தையுடையவர்கள் யாரென்று கேட்டார்கள் அப்போது, மிகுவீரசூரமுடைய ஆலிறுறலியல்லாகு அன்கவர்கள் படைச்சட்டைமுன் றெடுத்துத் தங்கள்சரீரத்திலணிந்து வெவ்விய கூர்மையுள்ள ஆயுதங்களையுமெடுத்துக்கொண்டு சிங்கத்தைப்போலே சத்துருக்கள் கோட்டைமேலிருந்து எய்யும் ஆயுதங்களைத் தட்டிக்கொண்டுப்போய்ப் பார்த்தார்கள்; அங்கே கோட்டைமதிளடுக்க, முப்பதுமுழம் அகலமும், கடற்போலாழமுமுள்ள அகிழியைக்கண்டு அதின்மேலே போட்டிருக்குஞ் சுருக்குமரப் பாலவழியாகப்போய்க் கோட்டை வாயிலையடுத்து, அதற்கிட்டிருக்குங் கற்கதவைத் தம்மாலேண்டமட்டும் பலமாக அசைத்துத் தள்ளிப்பார்த்தார்கள், அக்கதவுகடுகளவும் அசையாமலிருப்பதைக்கண்டு திரும்பி நபிநாயகமவர்களிருக்குமிடம் வந்து கோட்டைக் கதவினுடைய திறத்தைச் சொன்னார்கள்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த அலிறலியல்லாகு அன்கவர்கள் நாம்போவோமென்றுடனே எழுந்துபோய்க் கோட்டைவாயிலை

யடுத்து, அக்கோட்டை வாயிற்கதவைத் தங்களாலேண்ட பலத்தை கொண்டுந் தள்ளினார்கள், இவர்கள் தள்ளனுக்கந்தக்கதவு கொஞ்சமு மசையாமலிருப்பதைக்கண்டு, திரும்பிநபிநாயகமவர்களிடத்தில் வந்தார்கள், பின்னர், அம்றிபுனுமஹதீக்கரீபு சபீதிய்பி அவர்களெழுந்து சத்துருக்கள் விடும் ஆயுதங்கள் தம்மேலேபடாமற் றட்டிக் கொண்டுபோய்க் கோட்டைக்கதவை தள்ளிப்பார்த்தார்கள், அதற்குமந்தக்கதவு கொஞ்சமுமசையாமலிருப்பதால்; அவருந்திரும்பி நபிநாயகமவர்களிடம்வந்தார், இவ்விதம், பேர்பெற்ற மூன்று சுத்த வீரியர்களாலும், அக்கதவைத் தள்ளமுடியாமல் வந்ததை, விறகுக் கட்டை தளிர்த்துப், பூத்துக் காய்த்துக், கனியுதிரச்செய்த காரணத்தையுடைய நபிநாயகமவர்கள், தங்கள் தலையைக்கொஞ்சநேரங் குனிந்து பூமியையுற்றுப் பார்த்திருந்து பின்னர், தலையையுயர்த்தி யங்கிருக்கும் சல்மான் பாரிசவர்களைப்பார்த்து நானணியும் படையணிகளைச் சீக்கிரமெடுத்துக்கொண்டுவந்து தாருமென்று கேட்டார்கள், அப்போது, அங்கிருக்கும் அசுஹாபிமார்கள் யாவரும் நபிநாயகமின்ன காரணத்திற்கென்று சொல்லாமற்; படையணிகளைக் கேட்டது யாதுகாரணமோவென்று சந்தேகமா யோசனை செய்திருக்கையில்,

அலிறலியல்லாகு அன்கவர்கள் நபிநாயகத்தைப்பார்த்து யாது காரணந் தேவரீர் தாங்கள் படையணிகளைக் கேட்டதென்றபோது, பிசகில்லாத வாக்கையுடைய நபிநாயகமவர்கள் கற்பூரவாடை கமழுந் தங்கள் திவ்வியமான வாயைத்திறந்து, அல்லாகுத்தஆலா அருளினல், அந்தக்கோட்டையின் கற்கதவை நான்போய்த்திறக்க நாடுகிறேனென்று சொல்லிச், சல்மான்பாரிசவர்கள் கொண்டுவந்த சண்டைஉலுப்புகளையணிந்து, அம்றிபுனுமகுதீக்கரீபையும், அறம்மிபுனுதையானையும் அலிறலியல்லாகு அன்கவர்களையும், காலிதுறலியல்லாகு அன்கவர்களையுங் கூடக்கண்டு சத்துருக்கள் எய்யும் ஆயுதங்களொன்றேனுந் தங்கள் சரீரங்களிலேபடாத வண்ணமாகப்போய்க் கோட்டையையடுக்கக் கிழக்கு மகிழியை நெருங்கிப் பார்க்கச்சே, அந்த அகிழிக்கிட்டிருக்குஞ் சுருக்கமரப்பாலத்தைச் சத்துருக்கள் கோட்டைக்குள்ளே யிழுத்துக்கட்டிப்போட்டார்கள்.

அதுகண்டு நபிநாயகமவர்களும், அவர்களுடன்போன நான்குபேர்களும், அகிழியோரமாகக்கிட்டநெருங்கிப்பார்க்கும்போது அகிழியானது, முப்பதுமுழஅகலத்தோடுகணிக்கமுடியாத ஆழத்துடன் கடலை

போல் அலைதிரண்டு அடிபடுகிறதுடனே, முதலைகளனேகம்புரண்டுகொண்டிருக்கவும், முசிலிம்கள்கைவேலாயுதம்பாய்வதுபோல்வாளைமீன்கள்பாயவும், கெண்டைமீன்கள் முசிலிம்கள் கையம்பைப்போலேபாயவும், அகிழிநபிநாயகந் தன்னிடத்திலே நெருங்கிநிற்பதால் அவர்கள் பாதத்தைப்பிடித்து முத்திமோட்சம்பெற்றுக்கொள்வோமென்று தன் கைகளைநீட்டுவதுபோல் அலைகளைச்சுருட்டியடித்துவரவும், இரண்டு கரையினுஞ்சங்குகளீன்ற வெண்முத்துக்களினூடுபெருக்கமாகியசெவந்தபுட்பங்கள்கலந்து தோன்றுவது நபிநாயகமிங்கேவந்தால் வஞ்சிப்புட்பங்களே நீங்கள் பெண்ணின்பேரைக்கொண்டிருப்பதால் அவர்களைநெருங்கியணையவேண்டாமென்று அகிழிதன்கைகளினால் முன்வந்துமறைப்பதுபோலவும், நபிநாயகம்நம்மிடத்திற்கு வந்தார்களேயென்று அகிழிபுதியபந்தலிட்டதுபோல் வெண்சாமரைகள்விரிந்துதோற்றவும் அதனோடுசெந்தாமரைகள் விரிந்திருப்பது நபிநாயகமவர்களிருக்கிறதற்கு அகிழிஇரத்தினபீடமிட்டதுபோலும், மகரமீன்கள் வாலடிபடுதல் மத்தளமாகவும், வாளைமீன்கள்பாய்தல்வாணமாகவும், விரால்மீன்கள்குதித்தல் சிரம்பமாகவும், இறால்களெழும்புந் தொனிகுரவையாகவும், வலம்புரிச்சங்கின்தொனி சங்கீதமாகவும், அகிழிகலியாண வீடுபோலுமிருக்கக்கண்டு, நபிநாயகமவர்கள் மனமகிழ்ந்தார்கள். மகிழ்ந்து,

தங்கள் திருவாயைத்திறந்து கடல்வளைந்தபூமியையொரேகுடைக்கீழரசாண்ட நபிசுலைமா னலைகிஸ்ஸலா மவர்களுக்கு மேலானவோர் அற்புத மின்றையதினஞ்செய்ய என்னாலே யேலுமென்றுசொல்லித், தனக்கிணையில்லையென்பதா யலைபிரைச்சலிட்டுக்கொண்டிருக்கும். அவ்வகிழியின் தண்ணீரின்மேலே தங்கள்யேவிருந்த சவுக்கமான இலேஞ்சியைவிரித்ததின்மேலே தாங்கள்முதலிலேறிப்பின்னர்மலைக்கொப்பான தோளையுடைய அலிறலியல்லாகு அன்கவர்களைஅம்றிபுனு மகுதீக்கரீபு அறம்மிபுனுதையானை காலிதுறலியல்லாகு அன்கவர்களை ஆகிய இந்நான்குபேர்களையு மேறும்படியாகச் செய்து அகிழின்பேரில்விரித்த, அந்தயிலேஞ்சி யோர்கப்பலாகவும், அக்கோடுகிறமுதலையும் இறால்மீனும் வவலாளாகவும், ஊதைக்காற்றென்ற இராஜன் ஊன்று கோலைப்போலேயூன்றி மிகுசீக்கிரமாய் நடாத்த இலேஞ்சியோடிப்போயினது.

இவ்விதம், இலேஞ்சியின்மேல் நபிநாயகம் நாலுபேருடனேபோகுங்காரணத்தைக், கோட்டைமதளின் மேலிருக்கிற காபிரீன்கள்கண்டு அவர்கள்நெஞ்சஞ் சாவடுத்தவர்களுக்குத் துடிப்பதுபோலேதுடிதுடித்துமுகங்கரிந்தவர்களாகி இதுமுகம்மதுடைய வஞ்சகமென்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இருக்கும்போது, தீனில்விசுலாத்திற்குரிய நபிநாயகமவர்கள் அகிழியினுடைய அந்தக்கரையையடுத்துஇலேஞ்சைவிட்டுங் கிழிறங்கிக்காபிரீன்கள் கோட்டைவாயிலிற் கிட்டிருக்குங் கருங்கற்கதவைத் திறப்பார்களென்று மகிழ்ச்சியாயிருந்துபார்த்தார்கள்;பார்த்துக் காபிரீன்க ளக்கதவைத் திறக்காதபடியினாலே பகையில்லாத தங்கள் கூடப்போன நாலுபேருடனேயும் வாயிலடியிலே போய்நின்றுகொண்டு நூறுபேர்களாற்றள்ளக்கூடாத வொன்பதுமுழ அகலமும், பதினாறுமுழநீளமுமுள்ள அந்தக்கருங்கற்கதவைத் தங்கள் முட்டுக்குநீண்டு செந்தாமரையைப் போல்மிருதுவாயிருக்கும் வலது கையினா லிடித்துத்தள்ளித்திறக்கச்செய்து புட்பமாலையணிந்த நான்கு பேருடனே யுள்ளேபோய் அங்கிருப்பவர்கள் காதுசெவிடெடுக்கும்படியாய்த் தக்குபீறு முழக்கினார்கள். அதுகேட்டுச், சத்துருக்களோடிப்போய் இறவுல்கூலுக்கு இச்செய்திகளைச் சொன்னார்கள். அதுகேட்டுடனே நமதுசேனைகளெல்லா மிந்தட்சணமே யெழுப்புங்களென் றுக்கியாபித்தான், உடனே, எட்டுத்திக்கு யானைகளும், பூமியும், மலைகளும் குலுங்கும்படியாய்ப் படைக ளெழுந்துவந்தன.

அதுகண்டு, நான்குதிக்கினும்கீர்த்திபரவிய நபிநாயகமவர்கள், காலிதுறலியல்லாகுஅன்கவர்களையழைத்து அல்லாவுடையவாளாகியகாலிதே, நீர்போய் நமதுசேனைக்கடலார்களை, அகிழியை நெருங்க அக்கரையில்வந்திறங்கும்படிசீக்கிரம்.சொல்லிவிட்டு வாருமென்றுசொன்னார்கள், அதுபோலே. காலிதுறலியல்லாகு அன்கவர்கள்வந்து அசுஹாபிமார்களைக்கூவி, அகிழியோரம்வந்து நிற்கச்சொல்லிவிட்டு நபிநாயகத்தினிடம் வந்தார்கள். அப்போது, அகிழ்க்கரை யடுக்கவந்த அசுஹாபிமார்கள் நபிநாயகம் நான்குபேருடனே கோட்டைக்குள்ளேபோனார்களே, போனஇடத்தி லெவ்விதமாகுமோவென்று மனமகிழ்ச்சியடங்கிநிற்க, இங்கே கோட்டைக்குள்ளே மேகக்குடையுடைய நபிநாயகத்தினிடத்தில் இறவுசுல்கூலும்வன்சேனைகளுங்கடற்போலவந்து சண்டையைநெருக்கினபோது, அலிறலியல்லாகு அன்கவர்களோர்சிங்கேறானது யானைக்கூட்டத்தில் விழுந்துழக்குவது போலே, தக்குபீர்முழக்கிச்

சத்துருக்களை யோர்பக்கம் நின்றுவெட்டினார்கள். அறம்மிபுனுதையா னுஞ் சண்டையிலே சலிக்காமல் வெட்டுகின்ற காலிதுறலியல்லாகு அன்கவர்களு மோர்பக்கம் நின்றுவெட்டினார்கள், அதனாலெவ்விடமும் இரத்தப்பிரவாக மோடத்தீன்தீன் முகம்மதாவென்றுசொல்லி அம்றிபுனு மகுதீக்கரீபும் வெட்டினார்

இவ்விதம் நான்குதலைவர்களும், அல்லாவுடைய றசூலவர்கள் பேரிலே காபிரீன்களான படைக்கடல்மோதாமல், மலையினாலாகியவேலிபோலே நான்கிடமும் சூழநின்று வெட்டினதினாலே, பிணங்கள் மலைபோலே குவிந்தன. அப்படிக்கிறந்த பிணமலையினூடே யெதிர்த்துநிற்கிற இறவுசுல்கூலை அறம்மிபுனுதையானடுத்துச்சிங்கம்போலே சொர்க்சித்துப் பிரகாசமானவாளினாலே பார்ப்பவர்கண்கள்கூச வெட்டும்போது காபிரீன்கள்சேனை நெருங்கிவளைந்து அவரைச் சிறைவாரிக்கொண்டு போவதை யலிறலியல்லாகு அன்குகண்டு, அம்றிபுனு மகுதீக்கரீபு றலியல்லாகு அன்குவைபார்த்துச் சீக்கிரம் நீர் பின்னால் தொடர்ந்து போமென்றேவினார்கள், இதுகேட்டு அம்றிபுனுமகுதீக்கரீபு அகிழின் கரையில்வந்து பார்க்கச்சே, அக்கரையில்மிகுந்த புகழுடைய முசிலிமானவர்கள் குதிரைகளின் பேரிலே சவாராகிக் கடலைப்போல் இறைந்து நிற்கக்கண்டு, தம்முடைய அப்பைதப் பெயர்சொல்லிக்கூவி என்கையிற்பிடிக்கும் வேலாயுதத்தினுடனே, நானேறுகிற கத்தாறென்னுங் குதிரைக்குக்கல்லணையிட்டுக் கடிவாளம்பூட்டி யங்கவடிபோட்டு, அதின் மேலே நீயேறி யகிழிடைப் பாயவிட்டுக்கொண்டுவாவென்று சப்தித்துச்சொன்னார் அதுகேட்டுப் பயலுடனே, குதிரையைசோடித்து மேலேசவாராகி அகிழ்க்கரையில்வந்து, அக்குதிரையே யோர்தட்டுத் தட்டினவுடனே அஃதன்பது முழ அகலமுடைய அவ்வழியைக் கடந்து தன்மேலிருக்கும் பயலோடும் வந்தது.

அப்போ தம்றிபுனு மகுதீக்கரீபுகண்டு மிகுந்தசந்தோஷமாகிக் குதிரையின்மேலேறிக் கையிலேமுப்பதுமுழவேலை யேந்திக்கொண்டு சத்துருக்கள் படைக்கூட்டத்தில்வானத்திலிருந்து இடிவிழ்வது போலே குதிரையை நடாத்திப் போய்ப்பாய்ந்து சின்னபின்னமாகும்படி வெட்டிக்கொண்டு அறம்மிபுனுதையானைச்சிறை கொண்டுபோகின்றோரிடத்தில் நெருங்கி யோர் நொடியி லெழுபது சத்துருக்கள் சாகும்படியாய் வெட்டிவீழ்த்திவிட்டு மற்றகாபிரீன்களை நெருக்கியடித்து

த்தூத்திப்போட்டு, அறம்மிபுனுதையானை மிகுதூரிதத்திலே சிறை மீட்டுக்கொண்டு வரும்போதிலே சத்துருக்கள் மிகுபேர்களும் இறவுசுல்கூலும் நபிநாயகமவர்களை வளைந்து நின்று பயமில்லாமற்சண்டைசெய்வதைக் கண்டேங்கி (கவுக்கலாச் சொல்லிக்கொண்டு)நெருங்கும்போது அங்கே காலிதுறலியல்லாகு அன்கவர்கள் கடற்போன்ற காபிரீன்கள் சேனையை அதல குதலமாகவெட்டவும் அவர்கள்மேலே முப்பது சிறுகாயம் பட்டிருக்கவுங் கண்டு திடுக்கிட்டு நெருங்கும்போது நபிநாயகமவர்கள் பூமியில்மண்ணெடுத்துக்காபிரீன்கள்படைமேலே வீசவும், அப்படிமண்வீசியவுடனே சத்துருக்களெல்லாமுறிந்து, அய்யோ, அந்தோ அப்பாவென்றுசொல்லிக் கொண்டோடவுங்கண்டு மகிழ்ந்து சலவாத்துச் சொல்லினவர்களாய் நபிநாயகமவர்களின் திவ்விய பொற்பாதகமலங்களை யடுத்துக்கண்டார்.

அப்போதுநபிநாயகமவர்கள் அம்றிபுனுமகுதீக்கரீ பாவைப்பார்த்துச் சபீதிராஜரே, நீர் அலியாரைப்பாருமென்று சொன்னார்கள். அதுகேட்டு, அம்றிபுனுமகுதீக்கரீபாவும் அறம்மிபுனுதையானுஞ் சிக்கிரம்போ பார்க்கச்சே அலிறலியல்லாகு அன்குசத்துருக்கள்படையினடுவே சிங்கத்தைப்போல்நின்று தக்குபீறுசொல்லிவெட்டக்கண்டு, தாங்களிருவரு மான்கூட்டத்திலே புலிகள்சாடினதுபோலேஜர்டி முன்பின்பாராமல் வெட்டினார்கள். அப்போது காலிதுறலியல்லாகு அன்கவர்களும் அவ்விடத்தில் நெருங்கி வெட்டினார்கள். இவ்விதம் நான்குதலைவர்களும் நின்று தக்குபீர், தகுலீனு கெர்ச்சித்து முழக்கி வெட்டினதினாற் சத்துருக்கள் முறிந்து பிழைத்தோம் பிழைத்தோமென்றோடினார்கள், பின்னர் நான்குதலைவர்களும் சொல்லியதக்குபீர சப்தத்துடனே, மும்மண்டலங்களும் புகழுகின்ற எம்மாண்டகை முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் பொற்பாத கமலங்களில்வந்துபணிந்துநின்றார்கள் அன்றையதினம் கோட்டைவாசற்குள்ளே நுழைந்து அலிறலியல்லாகு அன்கவர்கள் முதலியநான்குதலைவர்களும் வெட்டியவெட்டினாலே (5000) காபிரீன்களிறந்தார்களென்று றுபிகுறலியல்லாகு அன்கு சொன்னார்கள், அப்போதுஅகிழ்க்கப்புறம் நிற்கிற முசிலிமானவர்கள்யாவரும் கோட்டைக்குள்ளே நபிநாயகமவர்களும் நான்குதலைவர்களும்போய்நேர மிகவுமாச்சுதே அங்கேயென்னவிதம் நடக்கிறதோதெரியவில்லையே யென்றுகவனமாக நிற்கும்போது முற்பட வந்து அவ்வசுஹாபிமார்களை யகிழியோரம் நெருங்கிநிற்கச்

சொன்ன காலிதுறலியல்லாகு அன்குவிஞருபம்போலே இபுலீசு லகி னைத்துல்லா தன்னுடைய மாயாவினேதவித்தையினல் மறுரூபங்கொண்டு மக்காரகவந்து கோட்டைக்குப்புறத்தே அகிழியோரத்தில் நின்றுக்கொண்டு, அங்கேநிற்கும் அசுஹாபிமார்களைப்பார்த்து, ஒகோ! முசிலிம்களேயென்று சப்தித்துக்கூவி நபிநாயகத்தளவிலே அல்லாகுத்தஆலா வுங்களுக்கு மிகவும் வலுப்பமான கூலியைத்தருவானுகவு மென்றுசொல்லி மிகவு மிரக்கமாக அழுதான். அதுகேட்டு, அசுஹாபிமார்களடங்கலும் நபிநாயகத்திற்குச் சண்டையிலேயாதேனும் கெடுதிவந்து சம்பவித்ததோவென்று மிகுந்த துன்பமுற்றவர்களாகக் கலங்கிக் கசங்கியமனத்தர்களாகக்கதறியழுது இதுநாள்வரையிலும் நபிநாயகம் நமக்குக்காவலாய் இரட்சிக்கும் கிருபையையுடையவர்களாக இருந்தார்கள். நாமுமவர்களுக்கு எவலாளாக இருந்தோம் இப்போது நாம்செய்தபாவமோ, அல்லது தலையின்விதியோ நமக்கிவ்விதம் வந்து சம்பவித்தது இனியிங்கே நமக்கென்ன இருக்கிறது திரும்பிப்போவோமென்று புலம்பிப் புலம்பியழுதார்கள்

அப்போது நபிநாயகமும்நான்கு சுத்தவீரியரும் அகிழிக்குப்புறத்தேயிருக்கும்நமதுசேனைகளை பார்ப்போமென்றெண்ணி அழகான அகிழியோரத்தில்வந்துநின்றுபார்க்கும்போது அந்த அகிழிக்கரையில்முசிலிம்கள் நின்றழக்கண்டார்கள் அதின்பேரில் அலிறலியல்லாகு அன்கவர்கள் அழுகிற அசுஹாபிமார்களே யுங்களுக்கு அவ்விடத்திலழும்படியான துன்பமென்னவந்து நேரிட்டதென்று கேட்டார்கள். அதற்கவ்வசுஹாபிமார்கள், அலிறலியல்லாகு அன்கவர்களுக்கு காலிதுறலியல்லாகு அன்குவந்து சொன்னசொல்லிவைகள், அதனலே நாங்களிப்படித் துயரங்கொண்டழுகிறேமென்று சொன்னர்கள். அது கேட்டு, நபிநாயகமவர்களும், மற்றமூன்றுபேர்களும் காலிதுறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து: ஒகே காலிதே நீரேனிந்தப்படி தகாதசொல்லைச் சொன்னீரென்று கேட்டார்கள் அதற்குகாலிதுறலியல்லாகு அன்கு இப்படியானசொல், இன்றுமுதல் என்றைக்குமென் மனதிலும், வாக்கிலும் சொல்லிலும் வாராமல் நபிநாயகமவர்களின் துஆபறக்கத்தினல், அல்லாகுத்தஆலா, காத்துக்கொள்வானுகவென்றுண்மையாகச்சொன்னர்கள்

அதுகேட்டுச் சிறுபாவம், பெரும்பாவங்களை விட்டும் நீங்கிய நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் திருவாக்கி

னாலே அசுஹாபிமார்களைக் கலங்கும்படியாக இந்தசொற் சொன்ன துகாவிதுடைய வேஷங்கொண்டு இபுலீசு லகுனத்துல்லா சொன்ன சொல்லே யல்லாமல் வேறில்லையென்று சொன்னார்கள் அதுகேட்டு யாவர்களுமன மகிழ்ந்தார்கள் அப்போது நபிநாயகமவர்கள் தங்கள் கூடநிற்கிறவர்களைப்பார்த்து அசுஹாபிமார்கள் யாவருங்கோட்டைக் குள்ளே வருகிறதற்காகச் சுருக்கிழுத்துக்கட்டி யிருக்குமாப்பாலத் தையெடுத்து அகிழின்மேலேபோடுங்களென்று சொன்னார்கள். அதுகேட்டவர்கள், அப்பாலத்தை யிழுத்தார்கள் அதுகொஞ்சமு மசையாமலிருப்பதைக்கண்டு, நபிநாயகமவர்கள், தங்களின் இராஜா னுவாகுவென்னு முட்டுக்குநீண்ட திருக்கையினாலந்தச் சுருக்குப் பாலத்தைத்தூக்கித் தண்ணீரின்மேலே போட்டார்கள். உடனே, அப்பாலத்தின்பேரி லிக்கரையிலிருந்த அசுஹாபிமார்கள் யாவரு மேறிவந்து. எட்டுத்திக்கும், பதினாலுலோகமும்புகழ அழகிய நபிப் பட்டம்பெற்ற முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் பாத தாமரையைக் கண்டு, பணிந்து, நான்குதலைவர்களோடு மனமகிழ்ச்சி யால் நபிநாயக மவர்களைப் புகழ்ந்தார்கள்.

அகிழ்கடந்த சருக்க-முற்றிற்று.

## சுகைறுல் ஆமிறைவெட்டு மப்துத்தார் வதைச்சருக்கம்

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

பொன்பரவியமெய் முகம்மதுநபியின் புகழணியோங்கிய தோழர்
மின்பரவியகை வேலசிதாங்கு மேலவர்பொரு படைக்களத்திற்
றுன்புறுகுபிராணியினி லுயர்ந்த சொல்லொடுந் தடிந்துநின்றுரைத்த
அன்புறும்சுகைறுலாமிறை வெட்டுமப்துத்தார்வதையினையறைவாம்.

இதன்பொருள்.

பொற்பிரகாசம் பாவித்தோற்றுஞ் சரீர வஜீகரத்தையுடைய நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் அழகியபுகழோங்குந் தோழர்களான அசுஹாபிமார்களென்கிற மேலோர்கள் பிரகாசம்பொ

ருந்திய வேலாயுதம் வாளாயுதம் கையிலேந்திநின்று உயுத்தஞ்செய் யுங்களத்திலே, துன்பம்பொருந்திய காபிரீன்களின் படையணியில், உயர்வாகிய வசனத்தோடும் நெருங்கிநின்று வெட்டின அன்புபொருந்திய சுகைறுல் ஆமிறவர்களை வெட்டிய, அப்துத்தாரென்பவன் வதையாகியதைச் சொல்லுகின்றோம்.

## சரித்திர வசனம்.

வள்ளலாகிய செய்துல் கௌனைன் ஷபீகுல்முதனபின் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் படைவீரர்கள் குதிரை முதலிய சகலவைகளோடு முதற்கோட்டை வாசலுக்குள்ளே வந்துகூடினார்கள். அதைக்கண்ட காபிரீன்களுடைய காலாட்படைகளுங் குதிரைவீரர்களும் வெள்ளப் பிரவாகமாகவந்தார்கள்; வந்த காபிரீன்களில் நின்றும், அப்துத்தாறென்னுஞ் சுத்தவீரியன், முசிலிம்களோடும் வந்தெதிர்த்து, ஒவ்வொருவராகப் பத்து முசிலிம்களைக் கொன்றான். அதுகண்டு, சுகைறுல் ஆமிறென்னும் அசுஹாபியானவர், அந்த அப்துத்தாறையெதிர்த்து இரண்டுபேர்களுந் தங்கள் தங்கள் குதிரையை முன்னும் பின்னும் ஏறஇறங்கவிட்டு வாளைச் சுழட்டி விசிக்கொண்டு சண்டை மும்முரமாகச் செய்யும்போது, அந்த அப்துத்தாரென்பவன், சுகைறுல் ஆமிறுடைய குதிரையின் கால்களை வெட்டினான். அக்குதிரை பூமியில்விழுந்ததால், சுகைறுல் ஆமிறுகுதிரையில்லாமற் பாதசாரியாய்ச் சிங்கத்தைப்போலே சீறிச்சீறி விழுந்து சண்டைசெய்தார். அதுகண்டு; அப்துத்தாரென்பவன்பயந்து குதிரையைத் தட்டிவிட்டுக் கொண்டோடினான், அப்போது, சுகைறுல் ஆமிறு, ஓடுகின்ற அப்துத்தாறுடைய குதிரையின்வாலைப் பிடித்திழுத்து வலித்தார். அதனாலே, அக்குதிரை செத்துப்போனது, உடனே, அப்துத்தாறு மறுகுதிரையின்மேலேறிவந்து, சுகைறுல் ஆமிறுடன் சண்டைசெய்தான். அதுகண்டு அலிறலியல்லாகு அன்குசொல்லக்கேட்டு, அம்றிபுனு மகுதீக்கரீபா, ஒரு குதிரை கொண்டுவந்து சுகைறுல் ஆமிறவர்களுக்குக் கொடுக்குமுகதாவில் அப்துத்தாறுடைய வெட்டுமுந்திச் சுகைறுல் ஆமிறுமேல் விழுந்து, அவர்ஷகீதாகிச் சுவர்க்கஞ்சேர்ந்தார்.

அதுகண்டு, அம்றிபுனுமகுதீக்கரீபா தாம்கொண்டுபோன குதிரையுடனே அசுஹாபிமார்களணியில் வந்துவிட்டார். பின்னர் அந்த அப்துத்தாரென்பவன் தானிருக்குங் குதிரையை, வலசாரி, இடசாரி விட்டு அல்லாகுத்த ஆலாவினருள்பெற்ற அசுஹாபிமார்களைச் சண்

டைக்கழைத்தான். அதற்கு, அசுஹாபிமார்க ளொருவரும் நான்று னென்று முன்னேறிப் போகாமலிருப்பதைக்கண்டு நபிநாயகமவர்க ளினுத்திரவின் பிரகாரம் அலிறலியல்லாகு அன்கவர்கள் துல்து லென்னுங் குதிரையிலே சவாராய்த், துல்புக்கரென்னும் வாளையுரு விச் சுழட்டி வீசிக்கொண்டு போனபோக்கிலேயே, அந்த அப்துத் தாறுடைய தலையிலொரு வெட்டு வெட்டினார்கள். அந்தவாளானது அவனையுமிருதுண்டாகப் பிளந்து, அவனேறிய குதிரையையு மிரு துண்டாகப் பிளந்து கீழ்பூமியிலும்போய்ப் பூமியைத்தாங்கும் ஆயி ரம் கொம்புகளுடைய காளைமாடும் நடுங்கும்படி பாய்ந்தது.

அப்போது, இராஜாக்கள் வந்து பாதம்பணியுகின்ற நபிநாயகம வர்கள், தங்களின் திருவாயைத்திறந்து மருசரான, அலிறலியல்லாகு அன்குவை வாருமென்றழைத்தார்கள். உடனேயவர்கள் ஷாமுதே சத்திற்குப் போகும்வழியிலே பாம்புவந்து பணிந்த தங்கள்மாமனா கிய நபிநாயகத்தின் பாதமடுக்கவந்து பணிந்தார்கள். அப்போது, பாவி இறவுசுல்கூலுடைய அடப்பக்காரனை பொல்லாத குமைறத் தென்பவ னீண்டவாளும், நீண்ட கேடகமும், கொடியுங்காட்டிக் கொண்டு சரேலென்றுவந்து முசிலிமானவர்களைப் பார்த்து, ஓகே நீனைவர்களே நானுகிறவன் மதர்த்தயானைபோன்ற இறவுசுல்கூலி ராஜனுடைய அடப்பக்காரன்; ஆகையாலுங்கள் முகம்மதுடைய அடப்பக்காரனை, அம்றிபுனுவுமையத்துல் லமீரியை யென்னேடும் உயுத்தஞ்செய்ய வரச்சொல்லுங்கள். அவனை நான்வெட்டி நாய்நரி க்கு விருந்திட வேண்டுமென்று மிகுந்த வாய்மதம்பேசினான். அது கேட்டு, அம்றினுவுமையத்துல் லமீரி கடுங்கோபமாகப் பலபல ஆயு தங்களையுமெடுத் தணிந்துகொண்டு வாயுவேக மனவேகமுள்ள குதி ரையின்மேலே சவாராகி, யக்குதிரையை நடாத்திக்கொண்டு விரை வாகப்போய், குமைறத்துடைய முன்னிலையாகி 'அவனைப்பார்த்து, எடா, பயலே! இறவுசுல்கூடைய மகன் சுந்தலத்தைக் கொன்றது நானுக்கும்; ஆதலாலிப்போது என்னுடனெதிர்த்துச் சண்டைசெய் பவன் யாரென்று அதட்டிக் கெர்ச்சித்துக் கேட்டார்.

அப்போது, குமைறத்தென்பவன் அம்றிபுனுவுமையத்துல்லமீரி யைப்பார்த்துக்,கீர்த்தியுள்ள எங்கள் இறவுசுல்கூல் இராஜாவுடையமக னையுபாயமாகவதைசெய்தசதிமாயைக்காரனே! அந்தப்பழிக்குப்பதிலா கஇப்போதேயுன்னை நான்வெட்டிக் கொன்றுபோட்டு, இந்தபூமியிலே இன்னான்மகனின்னனை, இந்நாளிலிந்தவிடத்திலே,சதிமான்யஞ்செய்த இன்னனை, இந்தத்தலத்திலே, இன்னான்கொன்றுனென்று சத்ருக்கள்

என்தேசத்தாருங் கீர்த்தியாகச்சொல்லும்படி செய்வேனென்றுசொன்னான்; அதுகேட்டு, அம்றிபுனுவுமையத்துல்லமீரியவர்கள் மிகுகோபமாய், அந்தச்சத்துருவான குமைறத்தைப்பார்த்துவடாகுமைறத்தே முன்னருங்களிலுள்ள காயுமென்பவனை வெட்டியமுறைபோலே யுன்னையு மின்றைக்குவெட்டிக் கொல்வேனென்று சத்துருக்கள்தலைவனான அந்தக்குமைறத்துப் பயப்படும்படிசொன்னார். அதுகேட்டடனே யவன் ஆயுதங்களைச்சுழற்றிக்கொண்டெதிர்த்தான் அதுபோல அம்றிபுனுவுமையத்துல் லமீரியுமெதிர்த்தார்; எதிர்த்துஇரண்டுபேருங்குதிரைகளைச் சக்கராசாரியாக்கிப் பந்தைப்போலேகுதிக்கச்செய்து வாள், வேல், சக்கரம், வில்லு, அம்பு, கேடங்கொண்டு அனேகஞ் சண்டைசெய்து, ஆயுதங்களைத்துண்டாடிவிட்டுப்பின்னர், வாகனத்தைவிட்டும் பூமியிலேகுதித்து ஆயுதங்களை யெறிந்துவிட்டுமலையுமலையும்வந்து, ஒன்றாகமோதினதுபோலும் யானையும் யானையு மிடித்துக்கொண்டதுபோலும் இருவரும்பார்த்தகண்கள் பூக்கும்படியாய் மல்யுத்தஞ் செய்தார்கள். அதுகண்டு சத்துருக்கள்சிலர் அம்றிபுனுவுமையத்துல் லமீரியைச் சிறைவார வெண்ணிநெருங்கினார்கள்.

அப்போது அலிறலியல்லாகு அன்கவர்கள் தாங்களேறியிருக்குந்துல்துல்லென்கிற குதிரையை மின்னலைப்போலேபறக்கவிட்டு அம்றிபுனுவுமையத்துல்லமீரியவர்களையழைத்துத்தங்கள்பக்கமாக்கிப், பாவியான குமைறத்தைப் பிடித்துக்கொண்டு நபிநாயக மிடத்திற்குவந்தார்கள்; அதுகண்டு,சத்துருக்கள்கடலைப்போலேபறந்து நெருங்கினார்கள். அப்போது முசிலிமானவர்களும்நெருங்கிச்சூரியனின் பிரகாசங்குதித்து நடக்குங் குதிரைகளின் காற்றாசியால் மறையும் படிக்கு, அவைகளைநடாத்தி யிடிவாளுக்கொப்பானவாளாலும் வேலாலும்மற்றும்ஆயுதங்களாலும், வெட்டியுங், குற்றியும், சத்துருக்களினிரத்தம் பூமியிலேமழைபெய்தோடும் நீரைப்போலோட வாக்கினார்கள். அதனோடும் அலிறலியல்லாகு அன்கவர்கள் துலபுக்கரென்னும் வாளாலும் அம்றிபுனு மருதீக்கரீபா அவர்கள்முப்பதுமுழவேலாலும் முன் பின் பாராமலும், கையாறுமலும்வெட்டியுங்குத்தியுங்கொன்றார்கள். இவ்விதத்திலன்றையதினஞ் செய்தசண்டையிலே சத்துருக்கள் (1050) பேர்களிறந்தார்கள். அப்படி இறந்தவர்களுயிர் நரகம்போகவும், அவர்களின் சரீரம் நாய்நரிதின்னவுமானார்கள், முசிலிமானவர்களும் (120) பேர்கள் ஷகீதாகிச்சுவர்க்கம்புகுந்தார்கள்.

சுகைறுல் ஆமிறைவெட்டு மப்துத்தார் வதைச்சருக்கம்,முற்றிற்று.

# குசுஆவருசருக்கம்.

எசீழுர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

சுந்தரநபி முகம்மதர்க்குப் பகைஞன்சொல்லரும் றவுசுல்கூல்தனக்குப், புந்தியற்றுதவிக்காய்ப்பெரும் படைகள்போர்செயப்பொருள்வாமீறி, யந்தகன்குசுஆ முதல்மூன்றரசரவனியிற்றாசெழுந்துயர, வந்துவம்பிருக்குங்குபிர்ப்படைசேர்ந்தவாறினை யெடுத்தினிதுரைப்பாம்.

## இதன்பொருள்.

அழகிய நபிநாயக முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்குப் பகைஞனுகிச், சொல்ல அரிதான கெடுதியுற்றிருச்கும், இறவுசுல்கூலுக்காகப்புத்தியற்றுப் பொருளாசைமீறியுதவிக்காகப்பெரும்படைகளைத் திரட்டிக்கொண்டு சண்டைசெய்யவேண்டிக்குருடனுனகுசுஆமுதலான மூன்றுஇராஜாக்கள் பூமியில்நின்றுந் தூசியெழுந்துஆகாயத்திலுயரவந்து வம்புத்தனமிருக்குங் குபிர்ப்படையுடனே சேர்ந்தவசலாறுகளை யெடுத்தினிமையாகச் சொல்லுகின்றும்.

## சரித்திரவசனம்.

எல்லா வல்லமையுமுள்ள அல்லாகுத்த ஆலாவுடையறசூலுமாய் ஆலத்துக்கெல்லாம் நபியுமாய்விளங்கு முகம்மது சல்லல்லாகுஅலைகிவசல்லமவர்கள் இரண்டுபாளையத்திலும் இறந்த தொகை யிவ்வளவென்றறிந்து, அல்லாகுத்த ஆலாவைச்சுக்குறு செய்துமனமகிழ்ந்திருந்தார்கள். அப்போது, இறவுசுல்கூல், தனதுபடையிலிருந்த தொகையைக்கேட்டு மனங்கலங்கி திகில்கொண்டவனுகத் தனது படையவர்கள் யாவரையுமழைத்து அவர்களைப்பார்த்து, ஒகேசுத்தவீரியர்களே சண்டைசெய்யும்போது நமதுபடைகள் சாவுகிறதுடன் தோற்பும், முகம்மதுடையபடைகள் வெற்றியுமாகிறவிதமென்னவென்று மிகு கோபமாகக்கேட்டான். அதற்குப் படைவீரியர்கள்யாதாமொருஜவாபும் சொல்லாதிருந்தார்கள் பின்னர், இறவுசுல்கூல், சிக்காசிக்கு, பனீசுகைபு, பனீமாசிம் என்னுமூன்றுகிளையாரிலே மிகுந்த வீறுள்ள, இதிரிபு, ஆரிது, குசுஆ, என்றமூன்றுபெலத்த இராஜாக்களுக்குங் காகிதமெழுதினன், அக்காகிதவாசக மென்னேனில்,

மதீனத்தாசனான முகம்மது என்னுயிருக்குயிரானமகன் சுந்தலத்தையுங் கொலைசெய்து பின்னர், என்னுயிரையும்வலுத்துக்காரமாக வந்துபிடித்துக்கொண்டான். ஆதலால், இப்பகையைத்தொலைக்கநீங்கள்வாராமலிருந்தால் இனியுங்களூர்களையும் வந்துபிடிப்பான். அங்கிருக்குஞ் சிறப்புகளை யெல்லா மழிப்பா னாதலால், அப்படிவருமுன்னே யெதிரேறிச்சண்டைசெய்ய நீங்கள்யாவரும்வருகிறதுமிகுந்த ஏற்றமாயிருக்குமென்றுவாழ்த்தி அறபெழுத்தாலெழுதி முடித்தகாயிதத்தை மடித்துமுத்திரையிட்டு, அதன்மேலேதனதுதாடி ரோமமிரண்டினால் வரிந்துகட்டித்தன்மக்களிலே, துஹாமாவென்பனையழைத்து அவன் கையில் அந்தக் காயிதத்தைக்கொடுத்து, மூன்று இராஜர்களுடைய பெயரையுஞ்சொல்லி இவர்களை நீபோய்க்கண்டு கடிதத்தையவர்களுக்குக்கொடுத்து, வணக்கமாய் மரியாதையுடனே வேண்டியதிரிவியமுதலானதுஞ்செலவிடுவோம் தாங்கள்படைகளுடனே வரவேண்டுமென்று அன்பாதரவுசொல்லிவரும்படி செய்யென்றுசொன்னான். அதுகேட்டுத், துஹாமத்தென்பவன் சீக்கிரங் குதிரைமேல் சவாராகி அதனை நடாத்திக்கொண்டு, அம்மூன்று இராசர்களையுந், தனித்தனிகண்டு, தகுதியானசொற்களுடனே தாட்சிசெய்து மகிழ்வாகத்தன்றகப்பன் இறவுசுல்கூல் கொடுத்தகடிதாசையெடுத்து மரியாதையுடனே கொடுத்துச் சொல்லவேண்டிய பக்குவப்படி யாவையுஞ்சொல்லி அவர்கள் ஆசைகொள்ளும்படியாய்ப்பொருளாசையையுங்காட்டிச்சொன்னான். அதுகேட்டவ்விராஜாக்கள் துஹாமத்துச்சொல்லிய சொற்களைமனத்திவிருத்திப் பொருளாசையைப் பெரிதாகக்கொண்டு, அவர்களுக்குப் பாவமென்கிற நோவுபிடிக்கும் விதிகள்ளவாதலால் லட்சத்திருபதுனாயிரங்குதிரை வீரியர்களுடனே பலவிருதினங்களும் ஆயுதபாணிகளும் பிடித்தகையாய், விரைந்து பூமி நடுங்கும்படியாய் வாகனாதிகளான தேர் முதலியயாவையுமடமடென்று கெர்ச்சித்துவரஊரைவிட்டுப்பிரயாணமாய் நடந்தார்கள்.

இவ்விதம் வருகின்ற இராஜாக்கள் மூன்றுபேரில் மிகுந்தபாதகமுங் கொடுமையையு முடையவன், இன்னும்பேர்பெற்ற வில்லாயுதத்தையும், அடுக்கம்பு, சரஅம்பு, இரகம்புகளையு முடையவன், இன்னும் இருகண்ணுமில்லாத அந்தகன், குசுஆவென்னும் பெயரையுடையவன் 20000 குதிரைப்பதாதியுந் தலைவர்முதலிய வீரருந்தன்னைச்சூழக்கொடி, குடை, முதலிய விருதினத்துடனே பேரிகை டம்மாரமுதலிய வாத்தியங்கள் கெர்ச்சிக்கக்கடலெழுந்து வந்ததுபோலே, தன்னூரைவிட்டெழுந்துவந்தான். அதுகண்டு இறவுசுல்கூலுடையமகன், துஹாமத்

தென்பவன் மனமகிழ்ச்சியா யுதவிப்படைகள் பிரயாணமாகி வருகிற தை முதலிலே தன் தகப்பனுக்குப்போய்ச் சொல்லும்படியொருவனைச் சீக்கிரத்திலனுப்பினன். அதுபோலவனுஞ் சீக்கிரம்வந்து பாதகன் இறவுசுல் கூலுக்குச்சொன்னன் அதுகேட்டு, இறவுசுல்கூல் மிகவுமகிழ்ந்து நமக்குஉதவிக்குப்படைவருகிறதென்ற மதர்ப்புக்கொண்டுவேங்கைபுப்லியைப்போலே விராப்புற்றவனக இருந்தான், அப்படியிருக்கச்சே,

அங்கே, படையுடனே வருகிற, குசுஆவென்பவன், காடு, மலை கெவிகள் முதலிய, இடங்களைக்கடந்து பாதகன் இறவுசுல்கூலுடைய முதற்கோட்டைவந்து அவனைக்கண்டபோது, அவ்விறவுசுல்கூல்குசுஆமுதலிய யாவருக்கும், அறுசுவை பொருந்திய விருந்துகொடுத்து உபசாரணை மிகவுஞ்செய்து நின்று, அந்த இராஜர்களைப்பார்த்து, முகத்திலே கைவைத்தவனுக மிகவும் பொருமிப் பொருமி யேங்கியழுதான். அதுகண்டவர்கள், இறவுசுல்கூலைத்தேற்றி யழாதீர்,பொறுமை செய்யும், நாளையதினமாகட்டும் முகம்மதுடைய படைகளையெல்லாம் வெட்டி இந்தவிடத்தைவிட்டு மோடிப்போகும்படி செய்கிறோமென்று திடவாக்கியஞ் சொன்னார்கள். அதுகேட்டுக் கல்லைச் செம்பைத் தெய்வமென்று வணங்குகின்ற காபிராகிய இறவுசுல்கூல் சந்தோஷங்கொண்டவனுகியிருந்தான். அப்போது சூரியனும் அடைந்தான்; அடைந்தபோது, காபிரீன்கள் மனம்போன்ற இருளெங்கும் பரந்த இரவாகி யாவரு மவரவர்கள், நித்திரை செய்யும்போது தீனில்விசுவாசமானவர்கள், மனம்போலே பிரகாசத்துடன் சூரியனுதித்தான் உதித்தபின்னர் நபிநாயக முதலிலேநிற்க மற்றவர்கள் பின்னலே நின்று அல்லாகுத்த ஆலாவைத்தொழு தெழுந்து படைஉஸ்துக ளணிந்து, விருதுகள் சூழப் படைக்கலம் வந்தணியணியாய் நின்றார்கள்.

அதுகண்டு, இறவுசுல்கூலுடைய படைஞரும் ஆயுதமுதலியவையணிந்து உயுத்தப்பிரசன்ன ராய்ப்படைக்களம் வந்துநின்றார்கள். அப்போது, முசிலிமானவர்களிலொவ்வொருவராகப்பத்து பேர்கள்காபிரீன்ளுடனேபோய்ச் சண்டைசெய்ய, அப்பத்து பேர்களையுஞ்சத்துருவாகிய காபிரீன்களில்நின்று மொருதிடத்தவன்வந்து வெட்டிப்போட்டான். அதுகண்டு. முசிலிமானவர்களிலே நின்றும், மிசுறிபுனுடைசென்னு மகாசுத்தவீரியர், காபிரீன்கள் வெட்கப்படத்தக்கதான சில

பமித்துகளை யோதிக்கொண்டு வேங்கைப் புலியைப்போலே போய்ச் சத்துருக்களோ டெதிர்த்துநின்று அங்கேவருகிற காபிரீன்களை ஒவ்வொருவராக (5) பேரைவெட்டிக் குற்றிக்கொன்ருர். அதுகண்டு காபிரீன்கள் பின்னடைந்தார்கள்.

அப்போதிவர்கள் அங்கேவந்திருக்கிற குருடனை குசுஆ முகதாவிற்போய் நின்றுக்கொண்டு, எடா குசுஆவே! நீகூரிய நுனையுள்ள அம்புகளினல் வைத்தகுறி தப்பாமல் ஆட்களைக்கொல்லுசிறவனுமே அப்பேர்க்கொத்த அம்புகள்விட்டென்னைக் கொல்லாவிடிலுன்னைநான் கொன்றுபோடுவேனென்று சொன்னர்கள். அதுகேட்டுக் குசுஆ அங்குள்ள தன கூட்டத்தாரைப்பார்த்து குபல உலாத்து உஸ்ஸாவென்னுங் தேவதைகளினுணை இந்தக்கொடுமையான வீணைநான் கொன்று, நாய், நரி, முதலிய மிருகஜாதிகளுக்குத்தின்னப் போடுவனென்று சப்தங் கூறினன், அதுகேட்டு, அவன்சனங்கள் அவன்காலடியிலே தாழ்ச்சி செய்தெழுந்து சந்தோஷங்கொண்டார்கள். அப்போது குசுஆவென்பவன், அழகாகியவில்லை யிடதுகையிலெடுத்து வளைத்து நாணேற்றிக் குணத்தொளி செய்து பின்னர், நஞ்சிமாத்திலிருந்தெடுத்துச் சீவி மறுபடியும் நஞ்சேற்றியிருக்குங் கூறிய அம்பை வலதுகையிலெடுத்து வில்லிலே பூட்டி அங்குநிற்கும் குசுஆ தன்மனிதரைப்பார்த்துவிற்பிடிதிருக்குமென்கையையும் முகத்தையு மெதிரிகளுக்கு நேரேகுறிப்பாகத் திருப்பிவையுங்களென்று சொன்னன் அதுபோ லந்தப்பாவிகள் குருடனைத்திருப்பி அங்கேநிற்கிற முசிலிமான மிசுறிபு னுபைசென்பவருக்கு நேராக்கி வைத்தார்கள்.

அப்போது குருட்டுக் குசுஆவில்லையிழுத்து அம்பைப்பாய விட்டான். அந்தஅம்பானது, ஐம்பது பேரைத்துளைத்துக்கொண்டுபோய் அங்குகுதிரைமேலிருக்கிற மிசுறிபுனுபைசென்பவருடைய மார்பையுந்துளைத்துருவி யப்புற பூமியிலுமோடினது. அதுகண்டு முசிலிமானவர்கள் யாவருந்திரண்டு சத்துருக்கள்மேல்விழுந்து ஜனக்காடு பிணக் காடாகவெட்டி யெவ்விடமுமலைபோல குவித்தார்கள் அதனுலிரத்தங் கடலைப்போற்பறந்தோடலாயிற்று இவ்விதஞ்சண்டைநடக்கும்போது, அலிறலியல்லாகு அன்கவர்களும் அம்றிபுனு மகுதீக்கரீபாவும் நித்திரை செய்வதினல் முசிலிம்களாகிய குதிரைப்பதாதிவீரர்கள் சத்துருக்களுக்கஞ்சிப்பின்னடைந்தார்கள். அதுகண்டு, காலிதுபுனுவலீது றலியல்லாகு அன்கவர்கள் சீக்கிரம்போய் நான்குதிசைக

ளிலுங் கீர்த்திபாவிய அலிறலியல்லாகு அன்கவர்களிடத்தில் முப் பதுமுழநீளமுள்ள வேலாயுதந் கையிலேந்திய அம்றிபுனு மகுதீக்கரீ பா அவர்களிடத்திலும் குசுஆ வென்னுங்குருடன்வந்ததும் அவ னெய்தஅம்பினால் மிசுபுனுபைசென்னும் வீசர்விழ்ந்ததும் நான்கு திசைகளிலுந் தீனைவர்களெதிர்த்து சண்டைசெய்துங் காபிரீன்க ளுக்காற்றும விழிவுண்டாகும்படியாயிருந்து பின்னடைந்ததுஞ் சொன்னார்கள்.

அதுகேட்டவுடனே காபிரீன்களாகியமாடுகள் பலதிக்குமிருந்தோ டும்படி, பதினாறடி, வேங்கைப்புலியைப்போலே காற்றும்பின்னடைய த்தக்கநடையையுடைய குதிரையின்பேரில் அலிறலியல்லாகு அன்கவர் கள்சவாராகினார்கள். அப்போது அக்குதிரை தனதுகால்களை அயரவி டாமல்ஐந்துகதிகளையுங் காட்டியாடிவந்தது, அதுகண்டு அம்றிபுனும குதீக்கரீபாஅவர்களும் இரத்தக்கவுச்சிவீசுகின்ற வேலாயுதத்தைக்கை யிலேந்திநல்லவீர பராக்கிரமத்தை தூண்டுகின்றபைத்துகளையோதிக் கொண்டு அலிறலியல்லாகு அன்குடனே போய்க்காபிரீன்களுடைய படைக்கடலினுள்ளே நுழைந்துவலது பக்கமாகவெட்டினார் அதனோடு நெஞ்சமஞ்சாதமிகுதாது றலியல்லாகு அன்கவர்களுங் காலிதுறலிய ல்லாகு அன்கவர்களும், அறம்மிபுனுதையான் றலியல்லாகு அன்கவர் களுந்தாங்கள் தாங்களேறிய குதிரைகளைவாயுவேக மனவேகமாக வோட்டிக்கொண்டுபோய்க் காபிரீன்கள்படையில் நுழைந்து இடது பக்கமாக நின்றுவெட்டினார்கள். இவ்வித ஐந்துமகத்தாகிய இராஜாக் களும் குதிரைகளைவலசாரி இடாசாரிசுழட்டிவிட்டுக்காபிரீன்களையும் அவர்களேறிய குதிரைகளையும், யானைகளையும் கடிசாக வெட்டி மலை களைப்போல குவித்தார்கள்.

இவ்விதம் நான்குதிசைகளிலும், இவ்வைந்து இராஜாக்களேறிக் குதிரைகள், காற்றைப்போலேதாவிப்பாய்ந்து கொடூரமாகியகாபிரீன் கள்சேனையில்எமனுடைய எவலாட்கோலங்கொண்டு உயிர்வேறு உட ல்வேறுபடுத்திய தன்மையையாவராலே சொல்லக்கூடும்? அந்தச்சண் டையிலே காபிரீன்கள்படையில் திறமற்றுத்தோற்றோடும் போதில் அக்காபிரீன்களுக்கும்தன்னாலே இராஜாதிபதியாகிய அம்றிபுனுமகு தீக்கரீபாதொடர்ந்துபோய்ஐந்துசத்துருக்களைவெற்றிபொருந்திய மு கம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களினுதவிகொண்டெதிர்த்து நின்று வெட்டினார்கள். அதுகண்டு, மறுபடியும்இறவுல்கூலென்னும் பாதகன், தனதுபடைகளையெல்லாந் திரட்டிக்கொண்டுவந்து, முசிலி

மானவர்களோடே எதிர்த்துச் சண்டைசெய்தான். அப்போது, முசிலிமானவர்களுக்கும் புலிகள் ஆட்டுக்கூட்டத்திலாகி ஹதஞ்செய்வதுபோல் வெட்டினார்கள். அவ்வெட்டுக்காற்ருமற் காபிரீன்கள் முறிந்தோடினார்கள். இவ்விதமோடிய காபிரீன்களோரிடத்திலேபோய்ச், சேர்ந்து ஒன்றுகூடித் திரும்பிநீண்ட வேலையுடைய அம்றிபுனுமகுதீக்கரீபா அவர்களைச் சூழ்ந்துவந்து வளைந்து சண்டைசெய்தார்கள், அப்போது, அம்றிபுனுமகுதீக்கரீபா அவர்களும் ஆட்டுக்கூட்டங்கள் வளையப்பெற்ற புலிபோல் நின்று ஈடுசெலுத்திக் கொண்டுவரும்போது, இவர்களேறிய குதிரையின்கால் சறுகிப் பூமியிலேவீழ்ந்தது. அப்போதவர்கள், அதிக சீக்கிரத்திலே கால்நடையாகப்போய் அவர்களுடைய, கத்தாறென்னும் பெயருடைய குதிரையைச் சல்தியாக இங்கே கொண்டுவாவென்று, தங்கள்பயல், கிலாலென்பவனுக்குச் சொன்னார்கள்.

அதுகேட்டவன், உடனே அகலத்தில், முப்பதுமுழமு மிகுந்த ஆழமுமுள்ள அகிழியைப்பாய்ந்து தாண்டிய கத்தாறென்னுங் குதிரையைக் கொண்டுவந்து கொடுத்தான். அதிலே அம்றிபுனுமகுதீக்கரீபா அவர்கள் சவாராகினர், அப்போது, அந்தக்குதிரை பூமியில்நின்றுந் தூயெழுந்து ஆகாசத்தை மறைக்கும்படியாய் நான்குகால்களையுமிதித்துத்தூக்கி நாட்டியமாடினபோது, கொஞ்சங்குசையை நெகிழ்த்துப்பிடித்தார், பிடித்தவுடனே அக்குதிரை கண்மூடி விழிக்க முன்னே, இடியேறுபோலே சத்துருக்கள் படையிலேபோய்ப் பாய்ந்து, கொடிக் கூட்டம்முறியக்குடைப் பெறுக்க நொறு, கங்அடிபடு முரசங்களுடைய, வாட்பிடித் தலைவர்கள் முடிபிளக்கத், தலைகளின் மூளைசிந்த,யாவரும்நினைக்கும்படியாய் நான்கு கால்களினுலே மிதித்துச் சின்னபின்ன மாக்குவதுடனே, நீட்சிபொருந்திய வேலாயுதத்தையுடைய அம்றிபுனு மகுதீக்கரீபிஸ் ஸ்பிதிய்யவர்களும் நீண்டவாளாயுதத்தினுலோங்கி வீசியவீச்சி லனேக சத்துருக்களிறந்து வீழ்ந்தார்கள், அதைக்கண்ட மற்றச் சத்துருக்கள் பயந்தோடினார்கள் பின்னர், அம்றிபுனு மகு[illegible] இரத்தத்திலே புரண்டவாளுடனே படைக்[illegible]த்தைவிட்டு [illegible]ண்டு, குற்றமற்ற நபிநாயக மவர்களிடம் யாதாமொரு வி[illegible]மில்லாமல் வந்தார்.

வந்தபோது, அவருடைய திறமையை நபிநாயகமவர்கள் கண்டு அரிதான துஆச்செய்து கொண்டிருக்கும்போதிலே பருந்துகள் மே

லேவட்டமிட்டிரைந்து இரைதின்னலாமென்று வரும்படியாக வாளுடனே சத்துருக்கள் படைக்களம் போகுகின்ற சுத்தவீரியர்களான அசுஹாபிமார்கள் யாவரும் நபிநாயகமவர்களிருக்கு மிடத்திற்கு வந்தார்கள். அப்போது, அவ்வசுஹாபிமார்கள் வெட்டியிரத்தம்புரண்டு செவந்த வாட்களுறையிலே புகுந்திட, உயுத்தக்களத்தி லிரத்தம் புரண்டு பூமியிலோடிடச் சத்துருக்கள் திரள்களெல்லாங் கலைந்தோடிடச், சூரியனும் மேற்றிசைக்கடலிலோடினான். அப்போது இறவுசுல்கூலிராஜன் தனதுபடைகளின் றொகையைப்பார்த்தான், அதிலே அனேகம்பேர் குறைந்தால் மனவருத்தத்துடன், தாலியிழந்த கம்மிணாட்டிகளைப்போலே தலைகவிழ்ந்திருந்தான், அதுகண்டு அவனுடைய மந்திரிமார்கள் வந்து இன்பமாகப் பக்கங்களிலே சூழ்ந்துநின்று அவனைப்புகழ்ந்து, இராஜனே அந்த அலிமாத்திரம் வாராமலிருந்தால், உமது தீரத்தின் முன்னால் முகம்மது நிலைக்கமாட்டாரென்றார்கள். அதுகேட்டு, அக்காபிரீன்களில் நின்றும், இதிரிபென்ற துட்டனெழும்பி, அந்த அலியை நான் நாளையதின மெவ்விதத்திலுங் கொன்று போடுகிறேனென்று மதர்த்தசொல்லாகச் சொன்னான். அதுகேட்டு இறவுசுல்கூல் மிகுந்த சந்தோஷமாக இருந்தான் அப்போது குசுஆவென்ற குருடன் எழுபதுதிறத்தவீர ரென்னோடும் வாருங்கள். தீனவர்கள்படையில், இவ்விரவிலே காவல் யாரிருக்கிறார்களென்று பார்த்து வருவோமென்று சொன்னான்.

அதுகேட்டுடனே யெழுபதுபேர்கள் தயாறாகிக் குதிரைமேலேறிக்கொண்டு குசுஆவைச்சூழ்ந்துவர அவர்களுடனே அவன்மலையடிவாரத்தி லுண்டாயிருக்கும் வளைந்த பாதையில் நடந்துபோகிற [illegible]தந் தீனவர்களின் வேவுகாரர்கள் கண்டு ஓடிவந்து, அசுஹாபிமார்களுக்குத் தெரிவித்தார்கள். அப்போது புலைலிபுனு அப்பாசுறலியல்லாகு, அன்கவர்களும், முப்பது அசுஹாபிமார்களும் குதிரைகளிலேசவாராகிச் சத்துருவானகுசுஆ எந்தவழியால் வருகிறான் அதனையறிவோமென் றவனைத்தேடி இன்பமான பேச்சுகள் பே[illegible]க்கொண்டு போகும்போது, அசுஹாபிமார்களிற் சிலர், [illegible]தகுசுஆவுடையஅம்பினுரத்தைச் சொன்னார்கள், சிலர் அவனு[illegible]டைய வில்லுமம்பு மெய்போதும் பழுதுவாராததா யிருக்குமென்று சொ[illegible]ர்கள். அதுகேட்டுப் புலைலுறலியல்லாகு அன்கவர்கள் அவ்வசுஹாபிமார்களைப் பார்த்து, நமது நபிநாயகமவர்கள், குசுஆவுடைய வில்லொடிந்து போமென்று சொல்லியிருக்கிறார்கள், ஆதலால் அந்தச்சொல் பழுதுவரா

தென்றுசொல்லிக்கொண்டு போகும்போது கண் பழுதான அந்தக்குசு ஆவும் அவனோடுபோன எழுபதுபேர்களும் முசிலிமானவர்களங்கே போகிற ஆரம்பந்தெரிந்து கொண்டுடனே குற்றம் பொருந்தியகுசுஆ தனது வில்லையும் அம்பையுமெடுத்து இரண்டரை நாழிகைவழிக்கப் புறஞ்செல்லுமான அம்புகளைவில்லி னிடத்தில்மாட்டிச்சத்தமிட்டுக் கொண்டு முசிலிம்கள் வருந்திசையைக் குறிப்பாக்கி யெய்தான்.

இவ்விதம், பஞ்சமாபாதகதுரோகி குசுஆயெய்த அம்புகளானவை பாம்பைப்போலே சீறிச்சென்று முசிலிம்களில் முப்பதுபேர்கள் விழும்படியாகப் பாய்ந்தது அதுகண்டு புலைவிபுனு அப்பாசுறலியல்லாலாகுஅன்கவர்கள் (கௌக்கலாவென்னும்) கைசே;வாக்கியத்துடனே அம்முப்பதுபேரையும் நெருங்கிச்சபூறுடனே வாயாற்றுமலிருங்கள் அல்லாகுத்த ஆலாவுங்களுக்கதிகபேரையும், பெருமையையுந் தருவானென்றுசொன்னார்கள், அதுபோல் அம்புதுளைத்துப்பூறிய அசுஹாபிமார்கள்சபூறாக இருந்தார்கள், அப்போது, குசுஆவென்ற குருட்டுப் பாவி, என்னநாம்தொடுத்துவிட்ட சாஅம்புகள்பாய்ந்திதுவரையிலுஞ் சத்தத்தைக்காணோமே ஆனாலிதுவரையும் நாம் விடுகின்ற அம்புகளிப் பூமியிலே வீண்போனதில்லையே இன்றைக்கென்ன காரணம் நாம்வைத்தகுறிதப்பினதென்று, தன்குறிப்பைத்தானேயிகழ்ந்து, இனிக்குறிதப்பியவில் நமக்குவேண்டியதில்லை யென்று தூஷணிப்புடனே அவ்வில்லைக்காலில்வைத்து மிதித்து வளைத்து முறித்தெறிந்துவிட்டு, அவ்வழியை நீங்கிப்போய்க் கல்லைக்கடவுளென்று வணங்குங் காபிரீன்களுக்கு இதுகாரியத்தைதெரிவித்தான். அதுகேட்டவர்கள் பூமியிலே தேடக்கிடையாத குசுஆவுடைய வில்லொடிந்ததே யென்றுசங்கடமுந், தங்கடமுங் கொண்டிருந்தார்கள்.

அப்போது,முப்பதுமுசிலிம்கள் குசுஆவிட்ட அம்பினாலிறந்ததை நினைந்து, தீனில்விசுலாமானவர்கள் மனக்கவலையுங் கொண்டிருக்கச்சே, குசுஆவுடையகொடிதான வில்லொடிந்தவிதம்பற்றிச் சிலகாபிரீன்கள் சொல்லொண்ணாததுயரமுந்துன்பமுந்துணுக்கு முற்றெழுந்து குசுஆபோய்வந்தபாதையிலே செல்லும்போது அங்கேயோரிடத்திலே குசுஆ வொடித்தெறிந்த வில்லுடைய துண்டுகள் கிடக்கவும்அதற்கப்புறமாக, முசுலிம்கள்முப்பதுபேர்கள் இறந்துகிடக்கவுங்கண்டு அவ்விடம் விட்டுநீங்கித்தங்களிருப்பிடம்வந்து இனத்தார்களுக்கெல்லாந்

தாங்கள்கண்டதைச் சொன்னார்கள் அதுகேட்டுக் குசுஆ மனந்திடுக்கி ட்டேங்கித் (தீராக்கோபம்பாடாய்முடியும்) என்பது நமதுமட்டிகாச்சு தே, நாம்குறிதப்பினதென்றல்லோவில்லை யொடித்தெறிந்தோம், இப் போது பார்க்குமளவிலே குறிதப்பவில்லையே, இப்பேர்க்கொத்தவில் லெந்தக்காலந் தேடியெடுப்போம், இனிநமக்குக்காமாவுக்கு நேரிட்ட துன்பந்தான்வந்துநேரிட்டதென்றுநினைத்துஎன்வில்லொடிந்தபோதே அவ்வில்லைப்பிடிக்குங்கையிருந்தாவதென்னவென்று தன்னுடையகை யையுந்தறித்தெறிந்தான். இவ்விதங் கொடியபாதகன் குசுஆவில்லை யொடித்ததும், பிறகு, கையைத்தறித்ததும், உயர்ந்தபுகழையுடைய அல்லாகுத்தஆலாவின்றூதர்நபிமுகம்மது முஸ்தபாறசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சொன்னபடிக்கு இந்தப்பூமியில்நடந்தேறியதெ ன்று முசிலிமானபேர்கள் யாவரும் ஆனந்தக்கடலில் மூழ்கினவர்களா யிருந்தார்கள், காபிரீன்கள்யாவரும் வியாகூலமென்ற கடலி லாழ்ந்த வர்களாகத்துன்பம்பெருகி யிருந்தார்கள்.

குசுஆவருசருக்க-முற்றிற்று.

---

# ஹாரிதை அம்றுவதைத்த சருக்கம்.

கலிவிருத்தம்.

காரினீழல் கவியு முகம்மதின்
சீரின் றோழர் செறிந்த களத்திடை
ஹாரிதென்னுங் கயவனை யம்றெனுஞ்
சூரர்கொன்ற துணிகர மோதுவாம்.

இதன்பொருள்.

மேகங்கவிந்த குடையாக நிழலிடவருகின்ற நபிமுகம்மது சல்லல் லாகு அலைகிவசல்லமவர்களுடைய சிறப்பானதோழன்மார்கள் நெருங் கிநிற்கும் சண்டைக்களத்திலே, ஹாரிதென்னும் பெயருடைய இழிகு ஞன சண்டாள பாதகதுரோகியை அம்றென்னும் பெயருடைய சுத்தப வீரியர்கொன்ற துணிவுகரத்தைச் சொல்லுகின்றும்.

## சரித்திர வசனம்.

இவ்வித முசிலிம்கள் இன்பத்துடனுங் காபிரீன்கள் துன்பத்துடனுமிருக்கும்போது, இருக்கூட்டங்களொதுங்கச் சூரியன் கீழ்த்திசையிலெழுந்துவர, அப்போதுமுசிலிமாகிய யாவருந்தங்கள் நேமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு குதிரைகள்மேலே சவாராகிச் சண்டைக்களத்தில்வந்துநின்றார்கள் அதிலே அம்றிபுனுமகுதீக்கரீபவர்கள், தாங்களேறியகுதிரையை முற்பட நடாத்திவந்து சத்துருக்களைச் சண்டைக்கழைத்தார், அதுகண்டு, சத்துருக்கள்பயந்து ஒருவரும் எதிர்த்துவாராமலிருந்தார்கள் அப்போது அம்றிபுனுமகுதீக்கரீபா அவர்கள் குதிரையைவலசாரி இடசாரியாக்கிச் சத்துருக்கள் படைமுன்போய் பாயவிட்டபோது அக்குதிரையானது இடியேறுபோலெ காபிரீன்களுடைய குடல்கள்பிதுங்க மூளைகள்சிதறமிதித்தோடும், அம்றிபுனுமகுதீக்கரீபா அவர்களும் வாளாயுதத்தினாலே சத்துருக்களைத் தென்னங்கீற்றுப்போல் வகிர்ந்துவிட்டுத் திரும்பி இரண்டுபடைகளுக்கும் நடுவிலே குதிரையைப் பறவையைப்போலே பறக்கவிட்டுவந்துநின்று அந்தக்காபிரீன்களைப்பார்த்துத் தங்களினமுகான வாயைத்திறந்து, எடா! புத்துஹானை வணங்குங்காபிரீன்களே நரியினுடைய மக்களே சண்டைக்குவாருங்களென்றழைத்தார்.

அதுகேட்டு, இறவுசுல்கூலென்பவன், அதிககோபமாய்த்தனது படையிலுள்ள தலைவரையெல்லாமழைத்து அவர்களைப் பார்த்து ஓகே, படைத்தலைவர்களே நீங்களழகிய, பாறுசுடைய கோபத்தைப் பெற்றுக்கொள்ளலாம். எட்டுத்திசைகளும் புகழும்படியாய்த், தீனவருடனெதிர்த்துச் சண்டை செய்யுங்களென்று சொன்னான். அப்போது, அத்தலைவர்களிலே நின்றும், ஒரு கொடும்பாதகனான சுறுகத்தென்னுஞ் சுத்தவீரியன் தானேறிய குதிரையைச் சாரிசெய்து தீனவர் முன்னில் வந்தெதிர்த்தான், அதுகண்டு அம்றிபுனுமகுதீக்கரீபா அவர்கள் இடிவிழ்வதுபோலே தங்கள்குதிரையைத் தட்டிவிட்டுச் சுறுக்கத்துடைய முன்னிலே போய் யெதிர்த்தார்கள். அப்போது, அந்தச் சுறுகத்தென்பவன் மனங்கலங்கிச் சிங்க முன்னான யானையைப்போலோடினான். அதுகண்டு இன்னுமோர் காபிரானவன் குதிரையைநடாத்தி அம்றிபுனுமகுதீக்கரீபா அவர்கள் முன்னில் வந்தெதிர்த்தான், அப்போது, அம்றிபுனு மகுதீக்கரீபா அவனையோர் ஆலசியம்பண்ணுமற் றங்கள்கையிலிருக்கும் நீண்டவேலாயுத நுனியினாலே குற்றிக் கோரியெடுத்துப் பூமியில் வாரியடித்தார். அதனால், அவனிறந்து நரகம் போய்ச்சேர்ந்தான்.

அதுகண்டு பின்னரும் சத்துருக்களொவ் வொருவராக நாற்ப த்து மூன்றுபேர்கள் வந்து அம்றிபுனு மகுதீக்கரீபாவை யெதிர்த் துச் சண்டைசெய்து அவர்களுடைய வேலாயுதத்தினலே குற்றுண் டு செத்தார்கள். பின்னர், சத்துருக்களெல்லாமொன்றுசேர்ந்து சகல படைக்குந் தலைவனுகவந்த இதிரி யென்பவனிடம்போ யழுது தாங் கள்பட்ட அவஸ்தைகளைச் சொன்னார்கள். அதுகேட்டந்த ஈனன் ஹாரிதென்பவனைப்பார்த்து நீயிந்தப்படைகளுக்குத் தலைமையாகப் போவென் றனுப்பினன், அந்தஹாரிதென்பவன்மிகுந்த வாய்வம்பு பேசித் தன்பயல் முபுலிகென்பவனேடு வாளாயுதம் வேலாயுதம் கேடகம்கொண்டு வரும்படி சொல்லியவைகள் வந்தவுடனே சரீரத் தில் அணிந்துகொண்டு, தனது, சல்காவென்னுங் குதிரை மேலே சவாராகிப் படைக்களத்தில் வந்து நின்று, பலம் பொருந்திய அலி யைக்கொன்று, அவர்மாமன் முகம்மதைச் சிறைபிடித்து, அந்த முகம்மதைச் சூழ்ந்தவரை யெல்லாம் என்கைவாளுக் கிரையிடுவே னென்று நபிநாயகமவர்களின் சிறப்பானகாது கேட்கும்படி யுரக்கக் கூவிச், சொன்னன்.

இவ்விதம் பாதகதுரோகியானஹாரிதென்பவன் சொன்னசொல் லை, யம்றிபுனுமகுதீக்கரீபா அவர்கள்கேட்டுமகாகோபமாய் அவன்கிட் டக்குதிரையைத்தட்டிவிட்டு நெருங்கிநின்றுவாளசைத்து இவ்விதம் வாய்மதம் பேசுகின்றநீயார்? சொல்லடாவென்று கேட்க அவன்நான் றுன்ஹாரிதென்னும்சுத்தவீரியன் உன்பெயரென்னவென்றுகேட்டா னதற்கு அம்றிபுனுமகுதீக்கரீபா அவர்கள், அந்தக்கேடானஹாரிதை ப்பார்த்து எடாநாஞகிறவன் அவன் எமன்சபாவென்னும் இம்மூன்று ர்களையுமெங்குங்கீர்த்திபரவ ஆட்சிசெய்கின்றராஜசிங்கமானவன் இன் னு மிருண்டமனக் காபிரீன்களுடைய இரத்தத்தையுண்ணுந்தாகத் தையுடையபுலி, இன்னும்சத்துருக்கள் வாழும்பதிகளைத்தூளாக்குகின் றவாள். இன்னும் அறபுதேசமுதல் அமிதேசம்வரையுங்கீர்த்தியுள்ள சபிதிதேசத்தையாளுங் குற்றமற்ற மகுதீக்கரீபா வரத்தினல் வந்து வெற்றிகள் பெற்ற இராஜனன அம்றுநானென்று சொல்லக்கேட்டு அந்தஹாரிதென்பவன் தீமுன்னன தாமரையைப்போல் முகம்வாடி நின்று, இனி இந்த அம்றுவைச்சதிமானஞ் செய்யவேண்டுமென்றகரு த்துடனே, அம்றிபுனுமகுதீக்கரீபா அவர்களைப்பார்த்து, ஒகே, அம் றே இராஜாவே, உனதுதகப்பன் இராஜரீகஞ்செய்யும் நாளில் நானெ ந்தநாளு மவ்விடத்தில் வந்திருந்து நல்லவசனங்களைப்பேசிக் கொண் டிருப்பேன், அப்படி நான்போய் வந்து பேச்சுவார்த்தையாயிருக்கு

நாட்களிலோர்நாள் நீ கையிற் பிடித்தநாள் வேல்வில் அம்புடனே இளம்வாலிபரோடுமொப்பற்றசிரமசாலைகளிலேபோய்ஆயுதப்பரீட்சைகள்காட்டித்தப்பில்லாமற்குதிரைமேலேறி, அக்குதிரையைஐந்துகதிகளுட்டே நடனங்காட்டிவருவதை நான்கண்டு என்மனமிகமகிழ்ச்சியாகியுடன் தகப்பனாருடனே யுன்னைப்பார்த்து இந்த அருமையாகிய மகன் வளர்ந்துவரும் பருவகாலத்திலேயே யிவனுக்கு மேன்மையும் பெலமும், வீரமுஞ்செல்வமுந் தலைமையும் அழகியஅரசும், உயுத்தத்தில் வெற்றிமுதலிய எல்லாநன்மையுண்டாகுமென்று சொன்னேன் அதுகேட்டவர், மிகுந்த மகிழ்ச்சியாகினார். அப்பேர்ப்பட்ட என் தோழர் மகுதீக்கரீபா வரத்தினால் வந்த மகனே யுன்னுடனே தீரமாக நான்சண்டைசெய்யமாட்டேன், ஆகையாலுனது குதிரையைத்திருப்பிக்கொண்டு, நீயிருக்குமிடத்திற்குப்போவது நான் மிகுந்த நன்மையென்று, சரீரமும்மனமும் நடுக்கமுண்டாகினவனாகச்சொன்னான்

அதுகேட்டு, அம்றிபுனுமகுதீக்கரீபா, அந்த ஹாரிதைப்பார்த்து, ஓகே ஹாரீதே நீயென்னவுபாய தந்திரங்களைக்கொண்டுசொன்னாலும்நானென்மனத்திற்பொருந்தமாட்டேன் உன்னைப்பிளந்துதானெறிவேன்பாரென்று தாமேறியிருக்குங்குதிரையை, அந்த ஹாரீதுக்குமுன்னே காற்றைப்போற் பறக்கவிட்டெதிர்த்து நின்றார் அதுபோல ஹாரீதுதங்குதிரையின் மேலேயோர் பெரியமலையைப்போலே பாதகமான வில்வித்தை வேல்வித்தைமுதலிய பலவிதவித்தைகளைக்காட்டி விசனப்படும்படியான சண்டை செய்துநின்று, வில் அம்பு வாள் வேல் முதலிய ஆயுதங்களைச் சோனைமழைபோலே பிரயத்தனஞ் செய்து, ஓயாதசண்டைசெய்யும்போதில், இரண்டுவீரர்களுடைய குதிரைகளுங் காலயர்ந்து விழுந்துவிட்டது, அப்போதுகல்லைச் செம்பையுருவஞ் செய்து தெய்வமென்று வைத்து வணங்குகிறகாபிரானஹாரீது மிகவும்பயந்து, தான்வேறோர் குதிரைமேலேறி வந்துசண்டைசெய்வதற்கு, அம்றிபுனுமகுதீக்கரீபா அவர்களிடத்தி லுத்திரவுபெற்றுக் கொண்டுபோய் அதுபோல்வேறோர் குதிரைமேலேறிவந்தான். அப்போது, அம்றிபுனு மகுதீக்கரீபாதாமும்வேறோர் குதிரைமேலேறிவந்து அக்குதிரையை வானவரு மதிஐயிக்கத்தக்கதாய் நடையில் விட்டு அந்தஹாரீதுடனே சண்டைசெய்தார். அதுபோலவனுஞ் சண்டைசெய்தான் அப்போதிரண்டு பேர்களுடைய வாளாயுதங்களு மொன்றுக்கொன்று தட்டுண்டு நெருப்புப்பொரி பறந்தன.

இவ்விதந்தீனவருங், காபிரும் நெடுநேரவரையில் வெட்டுந்தட்டுமாக நிற்கும்போது, ஒருபாயத்தால் ஹாரீதுடையகுதிரைவெட்டுண்டுமேலேபோலே பூமியில் விழும்படியாய், அம்றிபுனுமகுதீக்கரீபாஅவர்கள் வெட்டினார், அந்த வெட்டுடனே ஹாரீதும் நரகஞ்சேர்த்தான் அதுகண்டு நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் விரியந் தங்கிய அசுஹாபிமார்களுடனே "அல்லாகு அக்குபர்அல்லாகுஅக்குபர்" என்று தக்குபீர்சொன்னார்கள், அப்போது அம்றிபுனுமகுதீக்கரீபவர்கள் தாமதமில்லாதுசத்துருக்களை யெதிர்த்துச் சண்டைக்கழைத்தார். அதுகண்டு சத்துருக்கள்பயந்து நெருங்காமலோடினார்கள், அதிமேலசில சத்துருக்கள் ஓர்பெரிய மரத்திடுக்கிலே போய் நுழைந்தொளிந்தார்கள் அதுகண்டு அம்றிபுனு மகுதீக்கரீபவர்கள் விசையாகநடந்து அம்மரத்தை நெருங்கிப்போனதால், சத்துருக்கள் மரத்தைவிட்டுமோடினார்கள். அதுகண்டு அம்றிபுனுமகுதீக்கரீபவர்கள் தாம்கொண்டகோபத்துடனே அம்மரத்தையடியோடும் பிடுங்கியெடுத்துச் சத்துருக்களைத் துரத்திக்கொண்டு போயவர்கள் மேலே மரத்தைச் சாடவிட்டார், அம்மரம் விழுந்து எழுபேர்களை நசிக்கிக்கொண்டப்புறம்விழுந்து அங்கேநின்ற மிசுறென்றவீரனையும் மவனேறிய குதிரையையும்நசுக்கச்செய்தது அதுகண்டு அம்றிபுனுமகுதீக்கரீபவர்கள் சந்தோஷமாய்த் திரும்பித் தமதிருப்பிடத்திற்கு வந்தபோது, அவரைக்கண்டு நபிநாயகம் தங்கள்மனதில் மிகுந்தமகிழ்ச்சியுடனே முடிவில்லாத முழுமுதலாகியஆண்டவன் பக்கலிலே தங்கள் கையையுயர்த்தியழகான துஆச்செய்திருந்தார்கள்.

ஹாரீதை அம்றுவதைத்த சருக்க முற்றிற்று.

## அலியாரும் றவுசுல்கூலும் போர்புரி சருக்கம்.

(*)

அறுசீர்க் கழிலடிலாசிரிய விருத்தம்.

மட்டில்லாப் புகழினேங்கு முகம்மதின் மருக ருஞ்சீர்
தொட்டில்லாப் பாதகத்தின் றொடர்ச்சியாய் புத்தை நெஞ்சம்
விட்டில்லா திருந்துபோற்றும் வினைம் றவுசூல் கூலுந்
தட்டில்லா தட்டினேடுஞ் சமர்புரிதிறமைச்சொல்வாம்.

## இதன்பொருள்.

மட்டிடக்கூடாத புகழதிகரித்தோங்கு முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் மருமகராகிய அலிறலியல்லாகு அன்கவர்களும் சிறப்பென்பதை மனங்தொடாற் பாதகத்தின் தொடர்ச்சியினுற் புத்துஹா னென்னும் விக்கிரகத்தைப் பூசிக்குங்குணமெப்போதுமனத்தில் விட்டிடாமலிருந்துபோற்றும் வீணனுகிய றவுசுல்கூலும், கிஞ்சித்துந்தட்டுப்பாடில்லாதுவாள், வேற்றட்டோடுஞ் சண்டைசெய்த திறமையைச் சொல்லுகின்றோம்.

## சரித்திர வசனம்.

நபிநாயகமவர்கள் துஆச்செய்திருந்த அன்றையதினம் சூரியன் அடைந்து, மற்றுநாட் சூரியோதயத்தில், முசிலிமானவர்கள் யாவருமெழுந்து அல்லாகுத்தஆலாவைத் தொழுதுமுடிந்தது, பின்னரெல்லோர்களும் படைவுஸ்துக ளணிந்து ஆயுதங்களைத் தரித்தவர்களாகக் குதிரைகளிலேறிப் படைக்களத்தில் வந்து அணியணியாகநின்றார்கள். அதுசண்டு காபிரீன்களுங் கடலைப்போலே திரண்டெழுந்து குதிரைகளிலே சவாராகிப்படைக்களத்தில் வந்து நின்றார்கள். அப்போது, பாதகனுன இறவுசுல்கூல் முன்னிலோர்நரைத்தகிழவன் மிகவும்பெருந்தன்மையுடனேவந்து அவனைப்பார்த்து ஒகே, இறவுசுல்கூலரசனே நான் சொல்வதுபோல் நீர் சண்டைசெய்யப் படைகளை யேவினுல்வெல்வீரென்று சொன்னுன். அதுகேட்டு இறவுசுல்கூல் அக்கிழவனைப்பார்த்து அஃதென்ன சொல்லுயென்று கேட்டான், அதற்குமாயக்கிழவன் இறவுசுல்கூடைய காதிலே இரகசியமாகத் தனக்குத்தெரிந்த கெடுதலான சூழ்ச்சியைக்கொண்டும் நமது படைவீரியர்களுக்கு மிகவுமனம்விருப்பமுள்ள பொன்னையும் பெண்டுபிள்ளைகளையும், இவ்விடத்தில் வருவித்துக்கொடுத்தால் அவர்கள் அனுபோகத் துடனே சந்தோஷங் கொண் டுறுதியாய் நின்று சண்டைசெய்வார்கள், அப்போதுதா நீர் வெல்லுவீரென்று சொன்னுன்.

அதுகேட்டு, இறவுசுல்கூல் அக்கிழவனைமிகவும் புத்திசாலியென்றுமெச்சிக்கொண்டு உடனேபொன்னிதி முதலியயாவையுந் தன்னூரில்நின்றும் படைக்களத்திற்கழைத்துப் புதிதாகத் தனக்கிருக்கும்படியாய்ச்செவந்த கூடாரமொன்று செய்து அதிலே ஊரிலிருந்துவந்த திரவியங்கள் யாவையும் வைத்துக்கொண்டு தனது படைஞரைத்தகு

திபோலழைத்து, அவரவர்தாராதரப்படி பணங்களை வாரிவாரி எவர்க ளுக்குங்கையும், மனமும் நிரம்பும்படியாகக் கொடுத்துச் சந்தோஷ முண்டாக்கி, அவர்களைப்பார்த்து நமது தம்பிரான் பர்ருசையுவப்பு க்கொண்டு சண்டைசெய்யுங்களென்று சொன்னான். அதுகேட்டுப் படைஞரெல்லோரு மனமகிழ்ச்சியாகிக் கடலைப்போலிரைந்து யாவரு ங்கூடிக் குதிரைகளின் மேலேறிவந்தார்கள் அதிலோர்கொடிய பாவி ப்பயல், தானேறிய குதிரையை முன்னாலே யோட்டிக்கொண்டு வந்து முசிலிம்களைச் சண்டைக்குவேகமாக அழைத்தான். அப்போது முசி லிம்க ளொவ்வொருவராகப் பன்னிரண்டுபேர்கள் போய் அவனுடனே சண்டைசெய்து வெட்டுண்டு சொர்க்கவாதிகளாயினார்கள், பின்னும் ந்தப்பாதகன், குற்றமற்ற தீனனவரைச் சண்டைக் கென்னுடனே திறத்தவீரர்கள் வாருங்களென்றுரக்கக்கூவி யழைத்தான்.

அதுகேட்டு, தீனனவர்க ளொருவரு மெதிர்க்காததினாலே, அந் தக்காபிரான துட்டனன் மதர்த்தயானையைப்போலே தானேறிய குதிரையைப் பூமியிலே தூசெழுந்து ஆகாசத்தை மறைக்கும்படியாய்ச் ச்சுலாவவிட்டுத் தீனனவரை முடுகவந்து சண்டைக் கென்னுடனே வாருங்களென்று மிகவுமுரக்கக்கூவினான். அதற்குத் தீனவர்களெ திர்த்துப் போகாததினாலே, அந்தக்காபிரான பாவி தீனவர்களைப் பார்த்துச் சண்டைத்திறம்பேசிய சத்துருக்களே சண்டையிலே நீங்க ளிறந்தால் சொர்க்கமென்றும், எங்களவர்களிறந்தால் நரகமென்று முங்கள்வேதஞ் சொல்லுகிறதென்று சொன்ன நீங்கள், இப்போதெ ன்னுடனே சண்டைக்கிறங்காம லிருப்பதென்ன காரணஞ்சொல்லு ங்களென்று கேட்டான். அதற்குமுசிலிம்கள் ஜவாபுசொல்லாமலிரு ப்பதைக்கண்டு, அந்தக்காபிரான துட்டனன், நபிநாயகத்தின் பெயர் சொல்லி யுரக்கக்கூவி ஓகே, முகம்மதே! யுமது மருமகனான அலியெ ன்னும் புலியெங்கே? அந்த அம்றுக் கிழவன் யெங்கேயென்றுகே ட்டுநின்றான் அவனுடைய கொடூரமான கேள்வியினாலே, மிகுபுகழை யுடைய நபிநாயகத்திற்குக் கோபமதிகமாய் நமது மனவருத்தநீங்கச் சத்துருக்களுக்கு முன்னாலே சிங்கேறுபோன்ற அலியையெங்கேயெ ன்று அசுஹாபிமார்களைப்பார்த்துக் கேட்டார்கள். அப்போது, சத் துருக்களைக் கீற்றுக்கீற்றாய் வகிர்ந்து பருந்து காகங் கழுகுக் கிரை யிடும் அலிறலியல்லாகு அன்கவர்கள் குதிரைச் சவாரியுடனே நபிநா யகத்தின் முன்னால்வந்து லெப்பைக்குமென்று தாழ்ச்சிசெய்து நின் றார்கள்.

அதுகண்டு உடனே நபிநாயகந் தாங்களணிந்த குப்பாயத்தையும் அழகியதுல்புக்கறென்னும் வாளையுமெடுத்து அவர்கள் கையிற் கொடுத்து அல்லாகுத்தஆலா பக்கலிலே தங்களுடைய செந்தாமரை போன்ற திருக்கையையுயர்த்தி ஆதிநாயகனே! அலியாருக்குநல்லருள் செய்யென்று துஆக்கேட்டுப்பின்னர் அலிறலியல்லாகு அன்குவைப் பார்த்து நீர் யுத்தகளத்திலிறங்குமென்று சொன்னார்கள். அப்போது அலிறலியல்லாகு அன்கவர்கள் நபிநாயகத்தைப் புகழ்ந்துகாபிரீன்களான இராஜர்களணிந்த கிரீடங்களைத்தலையைப் பாதி பாதியாய்த் தகர்க்குகின்ற தங்கள் குதிரையைநடாத்திப் படைக்களம்போய் முற்படப்பன்னிரண்டு முசுலிம்களைக்கொன்ற பாதகப்பயலையடுத்து நின்றுஇருவருந் தங்கள்தங்கள் திறமைகளும் பெயர்களுஞ் சொல்லிக்கொண்டு வாள்வீசிச் சண்டைசெய்யும்போது அலிறலியல்லாகு அன்கவர்கள் அந்தக்காபிரான சுத்தவீரியனைப் பாய்ந்து குதிரை மேல் நின்று பருந்தானது பூமியில்மேய்கிற கோழிக்குஞ்சைவாருவதுபோல் வாரியவனினத்தார்களெல்லாம் ஐயோ, அந்தோ, அம்மவென்று கூவும்படியாகச் சுழட்டியந்தரத்தின்மேல் வீசிவிட்டுவாளையேந்தினார்கள் அந்தவாளில் அவன்வந்து வீழ்ந்து இரண்டு துண்டாய்வகிரப்பட்டு நரகஞ்சேர்ந்தான். அதுகண்டு காபிரீன்களிலுள்ள ஹஜ்ஜாவென்பவன் மிகுந்தகோபமாய் வந்தெதிர்த்தான் அவனையும் அலிறலியல்லாகு அன்கு ஒரு நொடிநேரத்தில் வெட்டினார்கள்.

அதுகண்டு காபிரீன்கள் கோபமாய் ஒவ்வொருவராக நாற்பத்தொன்பதுபேர்கள் வந்தெதிர்த்து வாள்வீசினார்கள் அவர்களையும் அவர்களேறிவந்த குதிரைகளையும் வெட்டிவீசிவிட்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் மற்றக்காபிரீன்களைப் பார்த்து எடா காபிரீன்களே இபுலீசுடைய கூட்டங்களே அல்லாவுடைய புலியுடனேசண்டைசெய்யவாருங்களென்றழைத்தார்கள். அப்போதுகாபிரீன்கள் யாவரும் காற்றின் விசையைமதிக்காத கால்நடையையுடைய குதிரைகளுடனேநாற்பத்தொன்பதுவீரரிறந்ததையும் அலிறலியல்லாகு அன்கவர்களுடைய மகாதிறத்தையும்நினைந்துபயங்கொண்டு வெள்ளாட்டுக்கிடாய் சாய்ந்து ஒருமுகமாயோடுவதுபோலோடினார்கள். அதுகண்டு இறவுசுல்கூல் ஆட்டுக்கிடாயைத்தப்பவிட்டுக் கையிட்பிடித்தகோலுடனே தயங்குகின்ற இடையர்களின் றன்மையாய்த் தயங்கிப்பின்னர் ஓடிய படைகளுக்கு முன்னிலாகி அப்படைஞரைப்பார்த்து ஓகே சுத்தவீரியரே அந்தஅலியொருவனாகவந்து சண்டைக்களத்திலே

நீங்களொருவராயினு மவனோடு மெதிர்த்தீர்களில்லையே ஆனதாற் போனது போகட்டும் இப்போது பயப்படாமற்போய் அலியுடனே சண்டைசெய்து அவன்சாகும்படி செய்யுங்கள்; உங்களுக்கு நல்லவெகுமதி தருகிறேனென்று மிகுந்த விருப்பத்துடனே சொன்னான் இப்படி இறவுசுல்கூல் சொன்னதுக்கென்ன படைஞர்கள் (சூடுகண்ட பூனையடுப்படி நாடாது) என்றபழமொழி போலே யொருவருந் திரும்பிவாராமலோடும் வழியைப் பார்த்தார்கள்.

அதுகண்டு இறவுசுல்கூல் படைஞரைப்பார்த்துக் காறிக்காறியுமிழ்ந்து அந்த அலியைமாத்திரம் அவனோடு நீங்களொருவரும் சண்டைசெய்யப்போக இல்லையல்லவா? இனிநான் தான் போய்அந்தஅலியுடனே சண்டைசெய்து பகையைத்தீர்ப்பேன் பாருங்களென்று உடனே குதிரைமேற்சவாராகி குதிரையை நடாத்திக்கொண்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் முன்னிலேவந்து நின்று அவர்களைப்பார்த்து ஓகேயலியே! இப்போது ஒருநொடிநேரத்தி லுன்னையும் மற்றவர்களையும்பிடித்துச் சிறையாக்கிக் கீழ்மைத்தன்மையாகக் கட்டிவைத்துப் பிறகுவெட்டிப் பிளந்தெறிகிறேன்பாரென்றுசொன்னான். அதுகேட்டுஅலிறலியல்லாகு அன்கவர்கள் அந்தப்பாதகனான் இறவுசுல்கூலைப் பார்த்து எடா இறவுசுல்கூலே நீசொன்னவார்த்தை யல்லது எங்கேயென்றுசொல்லி மிகுந்த கோபமாகி யண்டபிண்ட மின்னதென்றுதெரியாது தூசியெழும்பும்படி குதிரையைச் சாரிபிட்டு நெருங்கினார்கள் அப்போது இறவுசுல்கூலுஞ் சூறுவளிக்காற்றைப் போலே குதிரையை நடாத்திக்கொண்டு கோபமாக அலிறலியல்லாகு அன்குவின் சரீரந்துண்டாகும்படியாய் வாளாயுதத்தை யோங்கிவீசினான்; அவ்வீச்சையலிறலியல்லாகு அன்கு தட்டிவிட்டு எமனைப்பார்க்க அதிககோபமாய் இரட்டைக்கவருடையதுல்புக்கறென்னும் வாட்கொண்டு இறவுசுல்கூலை வெட்டினார்கள் அவ்வெட்டை யவன்றடுத்துக்கொண்டு குதிரையைச்சுழலவிட் டெதிர்த்தான்.

இவ்விதம் இரண்டுபேர்களும் இரண்டு மலைகளெதிர்த்த தன்மையாய் மனமஞ்சாம லொருவரை யொருவ ரெதித்துச் சண்டைசெய்யும்போதில் அலிறலியல்லாகு அன்கவர்கள் வாளினாலோங்கி யொருவெட்டு வெட்டினார்கள், அந்தவெட்டை இறவுசுல்கூல்தட்டிக் கொள்ள முடியாமற் பின்னடைந்து நின்றுகொண்டு, இராஜாதிராஜர்களெல்லாம் புகழுகின்ற கீர்த்தியையுடைய, அலிறலியல்லாகு

அன்குவைப்பார்த்து, ஓகே, அலியே யுனக்குநான் பிந்திநின்றது, கையினு லாகாமையல்ல, அந்த முகம்மதுடனே யுன்னையுஞ்சிறைசெய்ய நினைத்தும் உன்றிறமையை நன்ருகயறியவேண்டியுந்தான்; ஆதலால், மலையையொத்த நீண்ட தோள்களையுடைய நான்பிந்தினதைக்கொண்டு முன்மனத்தில் மகிழ்ச்சியடையவேண்டாம், ஆனுலென்படைஞர் புலியைப்போ லுந்திறத்தவர்களாய்க், கடலைப்போலும் அதிகமானவர்களாயிருக்கிறூர்கள். அவர்களைக்கொண்டு முன்னுடையவூர்போய்ச் சோராமல் யாவரையு முண்மையாகச் சிறையிலாக்கச்செய்வேன், அதுந்தவிரப், பர்ருசென்னு மெங்களுடைய தம்பிரானுதவி மிகவுமுண்டாயிருக்கிறது, ஆதலா லுங்களாண்டவனுடைய நபியோடும் யாவரையு மென் கையாயுதத்தினுலே வெட்டிப் பருந்துமுதலிய பறவைகளுண்ணும்படி யிரையிடுவேனென்று சொன்னுன்.

இவ்விதங் கொடுரபாவியான, இறவுசுல்கூல்சொல்லக் கேட்டவுடனே அழகியநபிநாயக மனமகிழு மருமகராமனஅலிறலியல்லாகுஅன்கவர்கள், இறவுசுல்கூலைப்பார்த்து, அல்லாகுத்த ஆலாவாலனுப்பிய புறுக்கானென்னும் வேதமொழிகளை யோதிக்காட்டலாயினுர்கள் அஃதென்னெனில் இருபது சிபத்தினுலே யாவையும் ஆள்பவனுன அல்லாகுத்தஆலா கேட்டதெல்லாங் கிடைக்கும் வளம்பொருந்தியசுவர்க்கலோகத்தில் மகிழ்ச்சியாக்கி வைக்கவந்த முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்குப் பதினெரு சிபத்துக் கொடுத்ததினு லுண்டாகிய சகலகாரணங்களையுஞ் சொல்லிக் காட்டி வரத்தையுடைய இராஜாதிபதியான அந்தமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் கலிமா (லாஇலாக இல்லல்லாகு முகம்மதுர்றசூலுல்லாகி) என்னுந் திருமந்திரத்தை யோதினவர்கள் சொர்க்கத் தாட்சியையுடையவர்கள் அக்கலிமாவை யோதாதவர்கள் நெருப்புவிடாமலெரியும் நரகத்தார்கள் அவர்களைநான் தலையை வெட்டாமல் விடுகிறதில்லை யென்றுசொன்னுர்கள். அதுகேட்டு இறவுசுல்கூல் கோபமாகிக் குதிரையைத்தட்டி நெருக்கிக் கொண்டு வந்தான் அதுகண்டு அலிறலியல்லாகு அன்கவர்களுங் குதிரையை நெருக்கிச் சொல்ல அரிதானசண்டைசெய்ய அங்கேநிற்கிற மற்றவர்களெல்லாங்கண்டு இவ்விதச் சண்டை கண்டதில்லை யென்று ஆச்சரியப்படும்படியாய் இரண்டுபேர்களும் வாளினுல் வெட்டினுர்கள்.

அப்போது அல்லாவுடைய அறுஷனைப்புலியலிறலியல்லாகு அன்கவர்கள் வில்லினாலும் வேலினாலும் வாளினாலும் செய்யுஞ்சண்டையின் திறத்தைக்கண்டு இறவுசுல்கூல் புலிமுன்னான ஆட்டுகிக்கிடாய்பயப்பட்டோட வழிபார்க்கு முறைமையாக அவனிற்கு மெல்கையைவிட்டோட வழிபார்த்து நிற்கக்கண்டு மேகக்குடையையுடைய நபிநாயகத்தின் மருமகரான அலிறலியல்லாகு அன்கவர்கள் அவனை நகைத்து இழிவாகப் பேசினார்கள். அதுகேட்டு இறவுசுல்கூல் வெட்கப்பட்டுக் கோபமுண்டாய்மானத்துக்கஞ்சி யுயிர்போனாலும்போகட்டுமென்றெண்ணியோடாமற் பிடிபடும் யானையைப்போல் விரைந்தெதிர்த்தான். அப்போது அலிறலியல்லாகு அன்கவர்களு மெதிர்த்துஇரண்டுபேர்களுஞ்சண்டை செய்வதிலே பூமியதிர்ந்து நடுங்கப்பார்த்தவர்கள் கண்கள்கூச மனம் பதற பிரகாசிக்கும் வாட்களால் வீசிக்கொள்வதில் நடந்துகுதிரைக்கால்களோய்ந்துதளர்ந்து ஓர்பக்கமாகவொதுங்கி நின்றன. அப்போதுஇறவுசுல்கூல்குதிரையின் தளர்ச்சியறிந்து அதைவிட்டுக் கீழிறங்கினான் உடனே யலிறலியல்லாகு அன்கவர்களுங் குதிரையைவிட்டுக் கீழிறங்கினார்கள்; இவ்விதங்குதிரையைவிட்டுக் கீழிறங்கிய இரண்டுபேர்களும் மலையு மலையுமெதிர்த்துச் சண்டைசெய்வதுபோல் வாளினால் வெட்டுந் தட்டுமாகநெருங்கிச் சண்டைசெய்யும்போது இறவுசுல்கூல் நெருங்கி வெட்டினான் அந்தவெட்டுஅலிறலியல்லாகு அன்குவின் தலையிலணிந்த தொப்பியை இரண்டாகவகிர்ந்து தலையிலுந்தாவி யிரத்தந் துளும்பின.

அதுகண்டு சத்துருக்கள் கடலைப் போலே கொர்ச்சித்துச் சந்தோஷமுற்று முழக்கினார்கள் அதுகண்டு சிறப்பாகிய தீனானவர்கள் மனந்தடுமாறினார்கள் அப்போது சகலவுயிர்ப்பும் புகழுகின்ற நபிநாயகமவர்கள் அலிறலியல்லாஹு அன்குவின்காரியத்தை யறிந்துவரும்படியாக அம்றிபுனு வுமையத்துல் லமீரியை யனுப்பினார்கள். அவர் அம்பு விசையாக நடந்துபோய்ப் படைக்களத்தில் நிற்கிற அலிறலியல்லாகு அன்குவையடுத்து நாயகமே யுங்களுக்கு நேரிட்டதுன்பமென்னவென்றதற்கு அலிறலியல்லாகு அன்கவர்கள் சுகமுள்ளபுலியைப் போல் நின்று தங்கள் திருவாயைத்திறந்து நன்மைதானென்று சொல்லி, அவ்வம்றிபுனு வுமையத்துல் லமீரியைப்பார்த்து, ஒகே, அச்சமறந்த புகழையுடைய அம்றே, வஞ்சகராகிய சத்துருக்களின் கிரீடங்களைத்தகர்த்தெரியும், எனது சிறியதகப்பனார் அப்பாசுறலியல்லாகு

அன்கவர்களின் தலைபாகையைச் சீக்கிரமிங்கேயெடுத்துக்கொண்டுவந்துதாருமென்று கேட்டார்கள். உடனே அந்த அம்றுறவியல்லாகு அன்கு அத்தலைப்பாகையை யெடுத்துக்கொண்டுவந்து கொடுத்தார், அதை யலிறலியல்லாகு அன்கவர்கள்வாங்கித் தங்கள் தலையிலேயணிந்துக்கொண்டு பாதசாரியாய், இறவுசல்கூலின் முன்னர் சிங்கத்தைப்போலேசென்று, அவனைப்பார்த்து, அடா அல்லாவுடைய முனிவுண்டாகிய மகாபகைவனே நீ என்தலையிலணிந்த தொப்பியை வெட்டிவகிர்ந்தாயே அதையெண்ணி மனமிறுமாப்புக்கொள்ளாதே. நீஎங்கள் கவிவிமாச்சொல்லுவாயென்றெண்ணி நான் ஆசைகொண்டு நின்றேன், அதினாலே சந்தோஷங்கொண்டாயோ இனியுன்னுயிரை வதைப்பதுண்மை, ஆதலாலுன்னூருக்கோடிப்போக நினைப்பதைவிட்டொழியென்று சொல்லி யவனைநெருங்கி வாளினாலேவீசினார்கள்.

அப்போதுஇறவுசல்கூல்மனத்துள்ளே பயந்தவனாகி அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து, ஒகே, ஆதாவாகிய அலியே, என் குதிரையினடைதளர்ந்து விட்டதாதலால், நான் வேறோர் குதிரைமேலேறிக்கொண்டு வருவதற்குவிடைதாருமென்று கேட்டான். அதற்கலிறலியல்லாகு அன்கவர்கள் சம்மதித்தார்கள். அப்போதுடனே ஒரு குதிரையைக் கொண்டுவரச்செய்து அதிலே சவாராகிப், பாதகங்கள் தன்னைசூழப் படபடென்று குதிரையை நடாத்திக்கொண்டு வந்தான். அப்போது அல்லாகுத்த ஆலாவுடைய ஆறுஷூப்புலியான, அலிறலியல்லாகு அன்கவர்களும் வேறோர் குதிரையையழைப்பித்து அதிலே சவாராகிச் சயசிங்கேறுபோலேவந்தபோதுஇரண்டுபேர்களும் இரட்டைக்கடிவாளம் பூட்டிய குதிரைகளை வலசாரி இடசாரிவிட்டுச் சண்டைசெய்வதிலே அதிககீர்த்தியையுடைய அலிறலியல்லாகு அன்கவர்கள் வன்மங்கொண்டு தங்கள் வாளாலோங்கி, இறவுசல்கூலைவெட்டினார்கள். அந்தவெட்டையவன் கேடகத்தாலே தாங்கினான், அந்தக்கேடகம் இரண்டுதுண்டாய்த் தறிபட்டு விழுந்தன.

அதுகண்டு கள்ளமனமும், கொடுமையுமுள்ள பாவி இறவுசல்கூல்மனம்பயந்து சூரியனின் முன்னாகியபனியைப்போலும், தானேறிய குதிரையை யிழுந்துவிட்டு மனமயங்கித் தாயையிழந்த மான்கன்றானது புலியைக்கண்டோடுவதுபோலு மோடிப்போய்ச்சத்த முழக்

குந் தனது படைக்கூட்டத்திற்கு ளொளித்துக்கொண்டான். அதுக ண்டு, அலிறவியல்லாகு அன்கவர்கள் எதிர்த்தவர்களை யெதிர்ப்பதல் லாது, இளைத்திரிந் தோடுபவரைப் பின்றெடர்ந்து நெருக்கிறதும், வெட்கமுள்ளவர் வெட்கத்தைக் குலைக்கிறதும், எவரையேனுஞ் சதி மானஞ் செய்கிறது மனு நீதிக்குத் தகாதென்றெண்ணிப்படைக்களத் தைவிட்டு மீண்டு, மதிக்க அரிதான புகழையுடைய அல்லாகுத்த ஆ லாவின்றூதர், முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களிரு க்கிற கூடாரத்தில் வந்திருந்தார்.

அன்றையதினம் இராவுகால நீங்கி, விடிவேளுகும்போது அசு ஹாபிமார்க ளெவர்களுக்கு முன்னிலையாகிநின்று நபிநாயகம்தொழு து பின்னர், தங்கள் மருமகரான அலிறவியல்லாகு அன்கவர்களை யழைத்து, அவர்களின் அழகானதலையில், இறவுசுல்கூலின் வாளாற் பட்டகாயத்திலே கற்பூரவாடைகமழும் தங்கள் வாயினுமிழ் நீரைத் தேவாமிர்தம்போலே தடவினவுடனே அந்தக்காயங் கடுகுபோலே னுமில்லாமலாறிப்போய்த் தழும்புமில்லாதிருக்கக்கண்டு தீனுனவர் கள் யாவருஞ் சந்தோஷக்கடலிலே மூழ்கினவர்களாகினார்கள். அப் போது, நபிநாயகம் அலிறவியல்லாகு அன்கவர்களைப்பார்த்து யாஅ லியே, பாதகன் இறவுசுல்கூலும்முடைய கைவாளினுலேயேவெட்டு ண்டு யாதொருபேதகமில்லாமல் மடிவான், அதற்கின்னுங் கொஞ்சநா ளிருக்கிறது, ஆனபடியா லிப்போதவன் றப்பிப்பிழைத்துக்கொண் டானென்று சொல்லக்கேட்டு, அலிறவியல்லாகு அன்கவர்க ளின்ப மாக இருந்தார்கள். இதுநிற்க,

மதிமருண்டபாதகனை இறவுசுல்கூல் தனது படைஞரைப்பா ர்த்து ஒகே, வீரியர்களே நான்முகம்மதுடையகண்காண, அவரின் மருகன் அலியுடையதலையிலே இரத்தந்துளும்பும்படிசெய்தது இந்தபூ மியில் மலைமேலிட்ட தீபம்போலே நமதுகீர்த்தி துலங்கிநிற்குமென் றும், இப்போது அலியென்பவன் பயந்திருப்பதாலே நீங்களெல்லா ருமொன்றுபோலேகூடித்திடத்தமனத்துடனே, பணங்காசுகளை, மக் களைப், பெண்டிரை நினைக்காமல் வேகமாகம்போகச் சண்டைசெய்யு ங்களென்றுஞ் சொன்னுன். அதுகேட்டுப் படைஞர்கள் திரண்டுபுலிக ளைப்போல் மகாதீரங்கொண்டு குதிரைமேலே சவாராகிக்காலைப்போ லே படைக்களம்வந்தார்கள். அப்படைகளுக்கு முன்னுலே சிங்கேறு போலே,அம்றிபுனுமகுதீக்கரீபா அவர்கள் வெவ்வியகோபங்கொண்டு

ஒப்பில்லாத தாழ்ப்பத்தையும், அகலத்தையுமுடைய அகிழியைத் தாண்டின, தமது கத்தாரென்னுங் குதிரைமேலே சவாராகி நடாத்திக்கொண்டுபோய்ச் சத்துருக்களை மிதக்கவிட்டுத் தமதுகையிலிருக்கும் வேலாலே, குற்றியும். வாளாலேவெட்டியும் பிணக்காடுசெய்து படையினடுவிலாயினர்.

அதுகண்டு இறவுசுல்கூல் நாமெங்கேயொளித்திருந்தாலும் எமன்வருகிறது போலிந்தஅம்றுவந்துநம்மைத்தொடறுகிறுனென்றெண்ணிப் பயந்து படைஞர்திரண்ட கூட்டத்தைத் தேடியோடினன். அப்போது, அவனுடைய முன்னிலையிலே கொடிபிடித்துநிற்கின்றசுத்தவிரியன்மேற்பாய்ந்து, அவனை அம்றிபுனு மகுதீக்கரீபாவெட்டிப்பிளந்தார்; அதுகண்டு, அங்கேகூடிநின்ற சத்துருக்களெல்லாம்புறடியிலே காலடிக்கஓடினர்கள், அவர்களைப்பின்றலே அம்றிபுனு மகுதிக்கரீபா துரத்திக்கொண்டுபோயினர். அப்போது சத்துருக்களுடைய எல்கையிலே தீனுனவர்கள் புகுந்து கொள்ளையாடினர்கள் அதுகண்டு பயந்தோடிய காபிரீன்கள் சரேலென்று திரும்பிக் குதிரைகளுடனே வந்து, அத்தீனுனவர்களை வளைந்து, தடுத்து, அவர்களெடுத்தகொள்ளைப்பொருட்களையெல்லாந் தங்கள் வசமாக்கினர்கள். அதுகண்டு, வானவர்களாலே சூழப்பெற்ற நபிநாயகமவர்களும், அவர்களுடனேயிருந்த தீனுனவர்களும் அங்கே வந்து விழுந்து கொள்ளைப்பொருளைத் தடுத்துக் கைக்கொண்ட சத்துருக்களைச் சின்னபின்னம்செய்து நின்றர்கள், அச்சத்துருக்கள் எதிர்நிற்காமற் கரையையுடைத்துக் கொண்டோடுகின்ற, ஆற்றுவெள்ளம்போலே தோற்று விரைவாகவோடினர்கள்.

அலியாரும் றவுசுல்கூலும் போர்புரிசருக்க முற்றிற்று.

---

# கடந்தைச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

அருமறையிறையவன் தன்று லகுமதர்மருகாவி
பொருமமர்க்குதவியாகப் புகுந்திழிகுபிர்தம்மி
னுருவகஞ்சிதையச்செய்யென் றுற்றிடுமுத்தாத்தார்
கருநிறக்கடந்தைக்கூட்டங் கடிந்துறம்புதுமைச்சொல்வாம்.

## இதன் பொருள்.

சொல்லுகிறதற்கரிதாகியவேதப்பொருளான அல்லாகுத்தஆலா வினாலே சொல்லப்பட்ட, அகுமதென்னுந் திருநாமத்தையுடைய நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் மருமகரான, அலிற லியல்லாகு அன்கவர்கள் உயுத்தத்திற் குதவியாகப்புகுந்து இழிஞா னகாபிரீன்களினுருவங்கள் சிதையும்படிசெய்யென்று யுண்டானவுத் திரவினாலே, கருநிறமான கடந்தையென்னு மோர்விதவண்டுக்கூட்டங் கடுமையாகவந்த புதுமையைச் சொல்லுகின்றாம்.

## சரித்திரவசனம்.

இவ்விதஞ் சத்துருக்கள் தோற்றோடும்போது சூரியனும் அடை ந்து இருட்படர்ந்து இராவானபோது யாவரும் அவரவரிருப்பிடம்வந் திருந்தார்கள், பின்னர் சூரியனுதையமானபோது, கொடி, குடை, வா த்தியங்கள், குதிரைகள், வில், அம்பு, சதையைவகிர்ந்து கொழுப்புப் புரளும் வாள், இரும்புத்தடி, இவைகள் முதலாகிய படைவஸ்துகள் நெருக்கமாக, இரண்டுபடைவீரர்களும்படைக்களம்வந்துநின்று குதி ரைகளைச் சவாரியிடுவதிலெழும்புந் தூசி வானமலையிலே படர்ந்து படைக்களத்தைச்சுற்றிப் படர்ந்திருப்பதைப் பார்க்கில், காபிரீன்க ளின் படைக்கடலையுண்ண, அல்லாகுத்தஆலாவின் முனிவென்னு மேகம்வந்துகவிந்ததைப் போலிருக்கின்றன. அப்போது இரண்டு படைஞர்களும்நெருங்கி இரத்தம்பீறிட்டுத் தெறித்துச்சிதறும்படி யாகவெட்டும்போதிலே காபிரீன்கள் முசிலிம்களுக்காற்றாமல் அவ் விடத்தைவிட்டோடிப்போய் அப்புறமிருக்கிறகோட்டையிற்புகுந்து, அக்கோட்டைவாசலை யடைத்துக்கொண்டிருந்தார்கள்.

அதனால் முசிலிமானவர்கள் அக்கோட்டை மதிலின்மேலேறினார் கள், அதுகண்டு, காபிரீன்கள் அம்பு முதலிய எறியாயுதங்களாலெறிந் து தடைசெய்தார்கள். அப்போது நபிநாயகமவர்கள் சத்துருக்கள்விடு கின்றஆயுதங்கள் முசிலிம்கள்பேரிலே படாதிருக்கத் தங்கள் திருக் கைவிரல்மோதிரத்தை யலிறலியல்லாகு அன்கவர்களிடத்திற்கொடுத் தார்கள். அதையவர்கள் வாங்கிக்கொண்டுமுன்பாய்ந்துபோகும்போது சத்துருக்கள் ஓயாமல் விடுகின்ற அம்புங், கல்லும்நாகப்பாம்பைப்போ லே சீறிவர, அவைகளை யலிறலியல்லாகு அன்கவர்கள்நம்நபிநாயகத் தின் திருவாழிமோதிரமுகப்பில்வைத்திருக்கும் வட்டத்தினாலே, அல்

லாவுடைய அருளாணகுதாத்தின்பேரிலே, தட்டிவிலங்கிக்கொண்டு மகாசீக்கிரத்திலே கோட்டையைத் தாவியேறிப்போ யுள்ளேபாய்ந்து அங்குள்ள சத்துருக்களைச் சின்னுபின்னமாகவெட்டி, அங்கிருந்து மிகுதொலைதூரந் தூரத்தினார்கள். அப்போது, காபிரீன்களிற் சிலர், அலியார் இங்கும்வருவாராவென்றார்கள் அதுகேட்டுச் சிலர், அவரெங்கும்வருவாரென்று திகிலடைந்து ஓர் பெரிய கற்பாறினுச்சத்திலேரிநின்று, வில்லிலேற்றிய அம்பாலுங் கருங்கல்லாலுமொன்றுபோலேகூடிப் பின்னடையாம லெய்தார்கள், எறிந்தார்கள்.

அவைகளையெல்லாம் அலிறலியல்லாகு அன்கவர்கள் தாஜுல்லன்பியா நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் கொடுத்த மோதிர மேல் வட்டத்தினாலே தடுத்துக்கொண்டு தங்களுக்கொரு காயமும்படாமல், அந்தகற்பாறை யுச்சத்தி லேறிப்போய் மகாகரோமாக இரட்டைக் கவர்வாளினாலே வெட்டினார்கள், அவ்வெட்டுக் காற்றாமற் சத்துருக்களான காபிரீன்கள் அவ்விடத்தையும் விட்டுத் தூரவோடினார்கள், ஓடியபோ தக்காபிரீன்கள் சூரியனின் சூட்டுக்கஞ்சி, நெருப்பிடத்திற்போய்ச் சார்ந்தது போலே, அங்கே, காலில் முள்ளும், வாயிற்பல்லுமுள்ள கடந்தையென்று மொருவிதப்பெரும் வண்டுக்கூட்டமுள்ள இடத்திலாகினார்கள்.

ஆகினபோதங்கே, அவர்களுக்குப்பின்னாலே அலிறலியல்லாகு அன்கவர்களுந் தூரத்திக்கொண்டே போகும்போது, அல்லாகுத்தஆலாவினால், அக்கடந்தைக் கூட்டங்களுக்கு, நீங்களெல்லாமகா சீக்கிரமாகப்போய் அலியாருக்குப் பணிவிடைக்காரராகி, அவர்பகைவர்களைக் கொல்லுங்களென் றுத்திரவு பிறந்ததால், அக்கடந்தைக் கூட்டங்களெல்லாம் தங்களின் கொடுமையான நஞ்சுள்ள பற்களைப்பிதுக்கியும் இறக்கைகளை விரித்தும் காபிரீன்களின் படைக்கடலிலுள்ளாகிச் சீறிச்சீறி, யவர்களுடைய முகத்திலும், கழுத்திலுங், காலிலும், உடலிலும் சதை பிதுங்கிக் குழியும்படியாய்க்காலாலே சிதைத்துப்பல்லாலே யூன்றியுமிழுத்தபோது, அக்காபிரீன்கள் மதிமருண்டு, நெஞ்சயர்ந்து எண்ணந்தடுமாறி, யலங்குலைந்து ஐயோ, அந்தோ, அப்பாவென்று கூவியழுது முகங்குப்புறவிழுந்து காயப்பட்டோடி மிகுத்த விசனமாயினார்கள், ஆனால் காபிரீன்களோடின தெவ்விதமெனில், மேகக்கூட்டங்கள் கடலில்விழுந்து தண்ணீரையுண்டு மழைபெய்தது போலே கடந்தையாற்பட்ட காயங்களில் இரத்தஞ் சொளசொளென்று வடியும்

படியாயோட, அப்போது கடந்தைக் கூட்டங்கள் அவர்களுக்குப் பின்னுமே, மாந்திரீகர் மந்திரித்துவிட்ட வுருக்கள், அடித்துத் தூரத்துவதுபோலே துரத்த, அக்காபிரீன்கள், ஒரு பக்கமல்லாது பல பக்கமும் அழுங்கண்ணீர் முழங்கால் நனைய வோடினார்கள்.

இவ்விதம் கடந்தைகள் நபிநாயகத்தின் மனதுக் கிசையவூன்றுகின்ற விஷப்பல்லு, முள்ளூன்றைத்து வீங்கிச்செவந்த முகத்துடனே காபிரீன்கள் இழிந்தோடிப் போகையில், அலிறலியல்லாகு அன்கவர்கள் அக்காபிரீன்களைவிடாமற் பின்றொடர்ந்து போயினார்கள். அப்போது நபிநாயகமவர்களும், மற்ற அசுஹாபிமார்களுமிருந்த, இடத்திலேயே இருந்தார்கள், ஆனாலந்தக் காபிரீன்கள், தீனனவர்படைக்கும், தாங்கள் செய்ததீவினைப்படைக்கும், முன்னர் வானவர் படைக்கும், அல்லாகுத்தஆலாவின் முனிவானபடைக்கும், நீங்காது முன்னடர்ந்தேறுகின்றவர்கள், மரஞ்செடியடர்ந்த மலையினிடத்திலிருந்தெழுந்த பொல்லாத கடந்தைப்படைக்கு நீங்கித் தனித்தனியோடும்போது, அக்கடந்தைகள் துரத்தித்துரத்தி முட்காலாலும் பல்லாலும் ஊன்றிக் குற்றுவதால் அவர்களெங்கும் தரிபடாமல் மூன்றாவது கோட்டைபோய்ச் சேர்ந்தார்கள், அம்மூன்றாவது கோட்டையிலேயும், நபிநாயகத்துடனே, அசுஹாபிமார்களும்போய் அக்காபிரீன்களை வெட்டினார்கள், அதினாலே காபிரீன்கள் அங்கிருந்துங் குதிரைக்கூட்டங்களைக் கொண்டோடி நான்காவது கோட்டை போய்ச்சேர்ந்தார்கள்.

கடந்தைச்சருக்க-முற்றிற்று.

---

## முகல்கிலிமான்கொண்ட சருக்கம்.

---

கலிநிலைத்துறை.

காரியங் கருத்தராயிக் காசினி யிடத்திலாகி
மாரியங் குடையி லாரு முகம்மதர் படையை யானே
வீரியங்கொண்டு வெல்வே னெனமுகல் கிலுவிண்டு
போரினுக் குற்றசெய்கை யாவையும் புகலுவாமே.

## இதன் பொருள்.

சகல நற்செய்கைகளுக்குங் காரியகர்த்தராகி இந்த வுலகத்தில் அழகிய மேகக்குடையிடவந்தநபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய படையை நானேபோய் வீரியத்தோடும் வெல்வேனென்றுசொல்லி, முகல்கிலெனன்பவன் சண்டைக்குவந்த செய்கை யாவையும் சொல்லுகின்றோம்.

## சரித்திர வசனம்.

அல்லாகுத்த ஆலாவுடைய தூதாங்கரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை விசுவதிக்காத காபிரீன்களாகிய மதர்த்த யானைகள்போன்றவீரர்கள், கடந்தைக்கூட்டத்தின் புறகடியும்-முட்டுற்றும், தீனுனவர்களின் வாள்வெட்டும் பட்டுக்கொண்டு, பாம்பினுடைய நஞ்சி மண்டையிலே கொண்டவர்போலே மெய்ம்மறந்து நான்காவது கோட்டையிற்போனபோது, மூன்றுவதுகோட்டையிலே-புட்பமாலைகளையணிந்த தோட்களையுடைய முசிலிமானவர்கள் கூடாரங்களையடித்து அக்கூடாரங்களிலே, அருள்மிகுந்தடைந் துகிடக்குங்கிருபைகண்களையுடைய முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடனேயிருந்தார்கள்; அப்போது, முன்னர்முசிலிமானவர்களின்சண்டைக்காற்றுமலுங் கடந்தைசெய்யும் வேதனைக்காற்றுமலும், பயந்தோடிப்போன காபிரீன்கள் இறவுசுல்கூலரசனிடம்போய், அவனைக் கடற்போலே வளைந்து சுற்றினுர்கள்.

அப்போது, இமைறத்தென்னுஞ் சுத்தவீரியன் அங்கேவந்து இறவுசுல்கூலைப்பார்த்து மிகவும்புகழ்ந்து, ஓகே, இராஜாவே, முகம்மதும், அவர்மருகாலியும் முன்னர் அப்துத்தாறென்பவனைக்கொலைசெய்தார்கள், அஃதன்றியும்சபதுறுகூனென்னு மிவ்வீரின் சண்டைகளையும் ஜெயித்தார்கள்; அதுவுந்தவிர நமது மாட்சிமையுடைய அகுசாசு நகரப்படையையும் பனீகுதைத்தென்னுங் கூட்டத்தையுந் தொகை தொகையாக வெட்டிக்கருவறுத்தார்கள்; ஆதலாலினிநாமெதுவாக இராமற்றுணிவுகாமாகநின்றுயாவரு மொரேமனமாகிச் சண்டைசெய்ய வேண்டும். அப்படிச்சண்டைசெய்யாதிருக்கில், அவர்கள் நமதுபடைகள் பூமியின் மணற்பெருக்கைப்போலேபோய் அடர்ந்தாலும், அந்த முகம்மதும், அலியும் நமதுவீரர்களைக்கொன்றேபோடுவார்கள், அதற்குச் சந்தேகமில்லையென்று சொன்னுன், அதுகேட்டு இறவுசுல்கூல்

இமைறத்தென்பவனைப்பார்த்து, ஒகேஇமைறத்தே நமதுபடைஞர்கள்
தோற்றோடினாலும், அந்தமுசிலிமானவரை வதைக்க நாமே போதுமா
னதென்று தனது படைக்கூட்டத்தாரெல்லோருங் கேட்கும்படியாய்
மிகுகோபங்கொண்டவனாகச் சப்தித்துச் சொன்னான்.

அது கேட்டுக், குளிர்ந்த வளம்பொருந்திய புகழ்மிகுந்த வாதில்
சுகுறுவையாளுமாசனான, அந்தஇறவுசல்கூலுடையமகன் கொடியபா
தகவுத்தண்டலுத்தனானமுகல்கீலென்பவனுடைய மனமிகுந்தவெப்பத்
துடனே புழுங்கிக் கோபமாகிச் சபையைபார்த்துநான் அந்தமுசிலிம்க
ளைப் பணிகாரத்துக்குப் பிசையுமாப்போலே சுடுவேனென்று அகங்கா
ரத்துடனேயெவர்களும் பயப்படத்தக்கதாயெழுந்துதன்றகப்பன்இறவு
சல்கூலைப்பார்த்துப் புகழ்ந்து என்றகப்பனே நான்படைக்களம்போக
வுத்திரவுதாருமென்றுகேட்டான், அதற்கு இறவுசல்கூல், தன்மகன்
முகல்கீலைப்பார்த்து என்மகனே முகல்கீலே, முன்னர்உன்பிறவி அஷ
றபாவை மாயமுகம்மது உபாயமாகப்பிடித்துச் சிறையிலாக்கிவைத்தி
ருப்பதால், இப்போதுன்னைப் படைசெய்ய அங்கேபோக விட்டுவிட்டு
நானிங்கே யிருக்கமாட்டேனென்றுசொன்னான், அது கேட்டு, முகல்கீ
ல் தன்தகப்பன் சொல்லை மனபொருந்தாமற்சிங்கங்களும் பின்னடையு
ம்படியான சத்தத்துடனே வாய்திறந்துநமது குற்றமில்லாதபர்றுசெ
ன்னுந்தம்பிரானருளினால் அந்தமாயவஞ்சகன் முகம்மதுடையசதுரங்
கப்படைகளனைத்தையும் என்கைவாளினாலே வெட்டிப்பிளந்து சாகவடி
த்துவிட்டுவருவேனென்றுசொல்லியுடனே இரட்டைக்கவருள்ள வளைந்த
வாட்கத்தியும் அரவிபிலை போன்றவாட்டமுமுள்ளவேலாயுதத்தையும்
கொலைசெய்யப்பதுங்கிவளைந்தவில்லையும், அம்பையுங் கேடகத்தையும்
முக்கவர்ச்சூலத்தையுமற்றுமாயுதங்கள் யாவையுமெடுத்தணிந்து, இரு
ம்புச்சீராவையுஞ் சரீரத்திற்றரித்துச், சண்டைத்தொப்பியைத்தலைக்
கிட்டு, இடைக்கட்டைஇறுக்கிக்கட்டி, வீரகழலணிந்துமிகுந்தசீற்றமு
ங்கருகினநிறத்தையுங்கொண்ட அதுகமென்னுந்தனதுகுதிரைமேலே
றியதை ஐந்துகதிகளும் மூன்றுவேகங்களுந் தோன்றநடாத்திப்
படைக்களம்வந்து சிங்கநாதமிட்டு வந்தவாத்திலேயே இருபது
முசிலிம் களைவெட்டி வீசிவிட்டு நின்றுகொண்டு முசிலிம்களை
ப்பார்த்து ஒகேதீனவர் களேயுங்களைச் சிறைபிடித்தென்னூர்
கள்தோறுங்கொண்டுபோய்ச் சிலரைவெட்டி மிருகஜாதினங்களு
க்கிரையாக்கிவிட்டு இனிப்பகைவர்களில்லை யென்பதாக்குவேன், ஆ

னதாற் குற்றமற்ற என்னுடனே சண்டைக்கு வாருங்களென்றழைத்தான்.

அதுகேட்டு நபிநாயகம் அஷறபத்தென்னும் சுத்தவீரியரைப் பார்த்து, ஒகே, அருமையாகிய அஷறபாவே இவ்வளவு கடுமையாக வந்துநிற்கின்ற இவன்யாரென்று கேட்டார்கள். அதற்குவள்ளலாகிய அஷறபத்தென்னும் சுத்தவீரர் நபிநாயகத்தைப்பார்த்து மிகவும் புகழ்ந்து, எங்கள்நாயகமே இவனுகிறது லகுனத்துப்பெற்ற இறவுசுல்கூலுக்குப் பூமியிலொருகோணத்தி லிருக்குஞ் சத்துருக்களை வேதனை செய்யுஞ் சண்டைக்களத்திற் பாயுகின்றபுலியுமாய், வெள்ளிய கிரணமுமிழும் வாளினுலி ராஜாக்களையே வெட்டுகிறவனுமாய்ப், பாதங்கள்யாவும் பொருந்தியோருருவெடுத்துப் பிறந்தமகனுயாயுள்ளவன், எனக்குந்துணைவன், முகல்கீலென்னும் பெயரையுடையவன், சண்டைகளினுத்தி மிகவுந்தெரிந்தவன் பொல்லாத முரண்டாட்டத்தையுடையவனென்று சொன்னர்.

அதுகேட்டு, அசுஹாபிமார்களில் நின்றும் மனுகுடையமகனுர் ஷஹீதுறலியல்லாகு அன்கவர்களெழுந்து வாளாயுதம் வேலாயுத முதலிய பல ஆயுதந்தரித்து அழகிய இரட்டைகடிவாளமிட்ட குதிரைமேலேறி அக்குதிரையை மிகுவிரைவாக நடாத்திக்கொண்டு படைக்களம்போய் முகல்கீலை யெதிர்த்து வாள்வீசினர், உடனே அந்த முகல்கீலும் வேலாயுதத்தினுலிலக்காகப் பார்த்துக்குற்றினன். அக்குற்று அவர்கள் மார்பிலேபாய்ந்து ஷஹீதாகிச் சுவர்க்கலோகம் போய்ச்சேர்ந்தார். அதுகண்டு, உடனே அவர்களினழகியவுடற் பிறந்தாருமாய், மிகவும் வயதுள்ள வருமாயுள்ள ஷஹீதென்பவர்தங்குதிரையை மகாவிரைவாக நடாத்திக்கொண்டு கோபத்துடனேபோய்-முகல்கீலை வாளாலேவீசினர். அந்த வாள்வீச்சைத்தட்டி விட்டுப் பாய்ந்து ஷகீதுறலியல்லாகு அன்குவை விலாவடியிலே பிடித்துச் சுழட்டியடித்தான், அவர்களும் ஷகீதாகிச் சொர்க்கலோகம் போய்ச் சேர்ந்தார்கள், அதுகண்டு, அவர்களைப்போலின்னும் பத்து முசிலிம்கள் மிகவுங்கோபமாகி யொவ்வொருவராகப் போயெதிர்த்து முகல்கீலுடனே சண்டைசெய்து, அப்பத்து பேர்களும் ஷகீதாய்ச் சுவர்க்கலோகம் போய்ச்சேர்ந்தார்கள்.

இவ்விதம், பத்துப்பேர்கள் ஷகீதாகக்கண்ட மற்றமுசிலிம்கள் அஞ்சியொருவரு முகல்கீலை யெதிர்க்காமல் நின்றூர்கள், அப்போது முன்னர் அரிதான சிறையிலாகிக் கலிமாச்சொன்ன அஷறபத்துறலி

யல்லாகு அன்கவர்கள் திடீரென்றெழுந்து, ஒப்பில்லாதகடவுளென்னும் றப்பில் ஆலமீனுடைய தூதாங்கரான நபிநாயகத்தின் பாதத்திற் பணிந்தெழுந்து அவர்களைப்பார்த்து, இப்பூமி முழுமையும் வான லோக முதலாய் மற்றிடங்களெல்லாந் தனதுசெங்கோல் செலுத்தி ஒரே குணமானகுடை நிழலிலெந்த வுயிர்ப்பிணங்களையுங் காத்துக் கிருபைசெய்யுந் தூய்தான - அல்லாகுத்த ஆலாவின்றூதரே, எங்கள் நாயகமே, இதோ வந்துநிற்கிற முகல்கீலுடைய சண்டைத்திறமும், வாள் வீச்சின் பலமும்-ஒப்பில்லாத பலசெய்கையின் விதமும், நானவனுடற்பிறந்தானதால் என்னைப்போல்மற்றொருவரும் அறிந்திரார்கள் - ஆகையால், அவனுடனே நான்போய் நின்று சண்டைசெய்யத் தேவரீர் தாங்களெனக் குத்திரவுதந்தால், அவனையடர்ந்து. அழகிய வாள், அம்பெறிந்து, அவனுயிரிழக்கச் செய்து வெற்றிகொண்டு வருகிறேன், அப்படியல்லாமல் ஒருவேளையவன்கத்தி முந்துமாகில் அவனென்னைக்கொன்று போடுவான் அதுதப்பினால், நானெவ்விதத்தின் மவனைப்பிடித்துச்சிறையாக்கிக் கொண்டுவருவேனென்று சொன்னார்.

அதுகேட்டு நபிநாயகமவர்களின் இரண்டுகண்ணிலுங்கண்ணீர் ததும்ப அஷறபாவைப்பார்த்து அப்படியே போய்வாருமென்றுத்திரவு கொடுத்தார்கள். அப்போதுடனே, அவர்நபிநாயகத்தின் செந்தாமரைபோன்ற பாதத்தில் விழுந்து தெண்டனிட்டேத்திப் புகழ்ந்தெழுந்து வாள்வேல் முதலிய பற்பல ஆயுதந்தரித்துக் குதிரையின் மேலேறினார் உடனே அக்குதிரை துள்ளிப்பாய்ந்து தூசி யண்டபிண்டம் பராவும்படியாய் நடந்தது இவ்விதந் தேன்சொரியும் பூமாலைகள் தோளிலேகிடந்து புரண்டுருண்டசையைக் குதிரையை ஆடவிட்டு வருகின்ற மகாகனம்பொருந்திய அவ்வஷறபத்தென்பவர் முள்ளுள்ள காடைபோன்ற மனத்தினன முகல்கீலென்பவனிடத்திலே பிறவுயிரைக் கொள்ளையாடும் புலியைப்போல் ஆரபாரிக்கமாக இரைந்து கொண்டுபோய் எதிர்த்து நின்று வாள்வீசினார் அப்போது, முகல்கிலு முயிர் போனாலும் போகட்டென்ற வெண்ணத்துடனே, தலைமயங்குதலாய், அஷறபாவை நெருங்கிவாள் வீசிக்கொண்டு நின்று நீயாரென்று கேட்டான், அதற்கஷறபா யாதொன்றும் பேசாமல் முகல்கீல் மேலிலக்காக வாள் வீசினார், அந்தவீச்சையவன் கேடகத்தாலே தாங்கிக்கொண்டுதன்வேலால் அஷறபாவினெஞ்சுக்கு நேராய்குற்றினன் அக்குற்றை யவர்வாளினலே தட்டிவிட்டுத், தமதுவேலினலே, முகல்கீல் மனமுடையும்படியான சண்டைசெய்தார்.

அப்போது அஷறபா நீட்டுகின்ற வேலாயுதத்தைக்கொடுமையான முகல்கீல்தடுத்து நின்றுபூமித் தூசெழுந்துவானத்தை மறைக்கும்படி தனது குதிரையை நேரோடவிட்டு, மறுபடியும் அஷறபாவின் முன்வந்தான் அதுபோலிவரும் குதிரையை நேரோடவிட்டு முகல்கீல்முன்சென்றார் இவ்விதமிரண்டுபேர்கள் குதிரையும் புலிகளைப்போலே பூமியிலேகுதித்ததிலெழுந்ததூசி மேகம்போலும், அதனுட்குதிரைகளின் கால்மிதி இடிபோலும், வாட்களின்பிரகாச மின்போலுமிருக்க, அதிலே இரண்டுபேர்களும் பெய்யுகின்ற மழைபோலே அம்புகளையெய்துநின்று பின்னர்-இரண்டுபேர்களின் வேலாயுதத்திலும் நெருப்புப்பொறிபறக்க எதிர்த்து தட்டலோடு பசைப்தவார்த்தையும். பேசினவர்களாய்ப் பக்கங்களில் நிற்கின்ற இரண்டு படைவிரியர்களு மெச்சிக்கொள்ளும்படியான பலபல சண்டைகள் மிகவும் பெரிதாகச் செய்தார்கள்.

இவ்விதத்தி லிரண்டுபேர்களும், ஒருவர்க்கொருவ ரிளைக்காமல் நின்று சரியான சண்டைசெய்ததிலே அவர்களுடைய குதிரைகள் காலயர்ந்து திரும்பினபோது, மற்றவீரர்கள்கண்டு இவர்கள்போலே சண்டை செய்தவர்களை நாம் இதுமட்டிலும் பார்க்கவில்லையென்று மிகவும் அதிசயித்தார்கள் அப்போது, முகல்கீல் தான்செய்த சண்டைத்தொழில் பலமுறைக்கும் தப்பில்லாது அஷறபா எதிர்முறை செய்ததையெண்ணி, முகல்கீல் இஃது நம்முடற் பிறப்பார்களின் படிப்புப்போ லிருக்கிறதேயென்று யோசித்து, அஷறபாவைப்பார்த்து ஒகே சுத்தவீரியனே, நீ குதிரையை விடுகிறதும், சண்டை செய்கிறதும், வாள், வேல், விரைவில், நீட்டுகிறதும் வில்லைக்கையிற் பிடித்து தம்பைமாட்டி யிழுத்தெய்கிறதும்ஆகிய, இவ்விதங்கள்யாவையும் பார்த்தால் இறவுசுல்கூலென்ற இராஜாதிராஜனுடைய மக்களில் நின்றுமொருவன்போலிருக்கிறதே, யாகையாலுனது பெயரென்ன சொல்லுமென்றான்.

அதுகேட்டு; அஷறபாமுகல்கீலுக்கு எதிர் ஜவாபுசொல்லாமற் காற்றைநிகராகக் குதிரைநடாத்தி யெதிர்த்தார், அதுகண்டு முகல்கீலும் பூமியெல்லாந்தூசிபாவத் தன்குதிரையையும், நடாத்தியெதிர்த்தான், இவ்விதமெதிர்த்த இரண்டுபேருங் குதிரைகளை இழுத்துப் பின்னுக்கி மறுபடியுஞ் சிங்கங்களைப்போல் முன்னுக்கி மற்ற வீரர்கள் அதிசயிக்கவொருவருக்கொருவர் இளைக்காமல் நெருங்கி-வெட்டுந், தட்டுங்-குற்று மெத்துமாகமுரண்டிநிற்கும்போது, முகல்கீல் அஷற

பாவைப்பார்த்து, ஓகே சுத்தவீரியனே நீ படையில் ஆயுதஞ்சுழட்டு முறைமையும், அதிற்செய்கிற வுத்தியும்பார்த்தால் முகம்மதுடைய அசுஹாபிமார்களி லவருக்குச்சொந்த இனத்தாராக இருக்கவேண்டும் அல்லாதிருக்கில் இறவுசுல்கூலுடையமக்களில் அஷறபத்தென்று சொல்லலாம், ஆகையால், மிகுந்ததிறமாக யெதிர்க்குகின்ற நீமகிழ்ச்சியாக வணங்குகிற நாயன்பேரிலாணையாக வுண்மைப்பிரகாரம் இன்னாரென்றெனக்குத் தெரியச்சொல்லுமென்று மிகுந்த விருப்பத்துடனே கேட்டான்.

இவ்வித முகல்கீல், ஆணையிட்டு விரும்பிக்கேட்பதினால், அஷறபத்தவர்கள்தமது முகத்திலிட்டிருக்கு முகவாடையை நீக்கினார்- அப்படி நீக்கும்போது பூரணசந்திரன் மேகமறப்பைவிட்டு வெளியான தன்மையாய் முகவஜீகரந்தோற்ற-அதைக்கண்டு முன்னர்நிறப் பழுதாயிருந்தமுகம், கலிமாச்சொல்லித் தீனிலான தன்மையினால், அல்லாகுத்த ஆலாவினருளாகிய ஒளியும், அழகும், வாசனையுங்குடியிருப்பதால், முகல்கீலுடைய முகம் சிறைச்சாலையிலுள்ளவர்கள் முகம்போல் .வாட்டங்கொண்டு, அஷறபாவைப்பார்த்துப் பகைவிளைப்பதைவிடாத. பாதகனான முகல்கீல்தன் மனற்குத்தமாகச்சுடுஞ் சொற் சிலவற்றைச சொல்லலாகினான், அச்சொற்களானவை உயிர்போலெனக்குத் துணைவனாகவந்த அஷறபத்தே நீயுயிர்போற்பொருந்திய வுடற்பிறவிகளை இராஜவாழ்க்கையை நமது பார்ருசென்ற தெய்வத்தினருளையாகிய இவை முதலான மேன்மையாவையும் விட்டுவிட்டுப் பதகமான அந்த நபியினுடைய மாக்கத்திலாகினையே, இஃதுனக்கு நல்லதா மேலும், தாயைத், தகப்பனை, இனத்தாரைச்-சனத்தாரைப், பெண்டீரைப், பிள்ளைகளையொருநொடியிலே, ஒருவருக்கொருவர் வேறாகச்செய்து, எந்தநாளு மிணங்கவிடாமலாக்கித், தானுமொருவர் சொற்கிணங்காதமுகம்மதை, யுன்மனதில் விருப்பங் கொண்டமுறைமையென்ன சொல்லென்றான்,

இவ்விதம், ஈனனாகியமுகல்கீலின்சொல்லைநன்மையானஅஷறபத்தவர்கள்கேட்டுச் சிங்கத்தைப்போலே தமதுதுணைவன்முகல்கீலுக்கு முன்பாகி, இன்பமாகபேசஆரம்பித்தார் அஃதியாதெனில், இந்தப் பூமியில் நம்மவர்கள் புத்துஹாரீனைத்தெய்வமென்று வணங்கி, முடிவிலேழுநாகத்திலும் போய் விழுவதைவிட்டுநான் அருளாகியமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் திருக்கலிமாவைச் சொல்லிநன்மையிலாகினேன் ஆதலால், அல்லாகுத்த ஆலாவினுண்மைத்தூதாங்க

ரிவர்களேயல்லாமற் பூலோகத்தில் வேறில்லையென்றுசொல்லி, நீரும் அந்த நபிநாயகத்தின் கலிமாவைச்சொல்லி நற்கதியிலாகுமென்று சொன்னார், அதுகேட்டு, முகல்கீலென்பவன் மனத்திலே, கசடுங் குபாடமும் வைத்துக்கொண்டு அஷறபாவைப்பார்த்து நான் தீனானவர்களனேகரைக் கொன்றபடியால், அந்த மார்க்கத்தில் வந்தால் நபியென்ன செய்வாரோவென் றென்மனம்பயப் படுகிறதேயென்று சொன்னான்.

அதுகேட்டு, அஷறபாமுகல்கீலைப் பார்த்து, ஒகே, பிறவியே யுண்மையாக முகம்மதாகிறவர்கள், சொல்லக்கூடாத கொலைபாதகங் களைச்செய்தவாயினும், புறக்கானென்னும் வேதவழிக்கொழுகினா ராகில், அவர்களுடைய குற்றங்களை நீக்குவார்களே தவிற அவர்கள், முன்செய்த தீவினையை நினைத்து விஷேடமொன்றுஞ் செய்யமாட் டார்களென்று சொன்னார், அதுகேட்டுப், பாதகனானமுகல்கீல்தான் கொண்ட கள்ளநினைப்பு வெளிவாராம லுள்ளாக்கிக்கொண்டு, அஷற பாவைப்பார்த்துக், கிருபையுடைய நபிநாயகமவர்களிடம்போக நீர் முன்பாகப் போமென்றுண்மையாகச் சொல்பவர்கள்போலே சொன் னான், அதுகேட்டஷறபா முகல்கீல் சொன்ன . சொல்லுண்மையென் றுடனே, அழகிய முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களிடத் திற்போக நாட்டமாய் மகிழ்ச்சியுடனே எழுந்து முன்னாலேபோக, முகல்கீல் வஞ்சகமில்லாதவர்கள்போலே, பின்னாலே போகச்சே. தங் களைப்பெற்றதாய் தகப்பனென்றாயிருந்தும், மார்க்க பேதத்தாலேபின் னாலேபோகிற முகல்கீல், முன்னாலேபோகிற அஷறபாவின்முதுகிலே யாவருக்குந்தெரியாமல் மிகுபலமாக வேலாயுதத்தினாலோங்கிக் குற் றினான், அக்குற்று இரண்டுதோளுக்கிடையிற் புரடிக்குங்கீழே கடுங் காயமாகப்பட்டு அதனாலவர் கீழேமயங்கி விழுந்தார்.

அதுகண்டு, பாதகனானமுகல்கீல் சந்தோஷமாகி என்தகப்பனே அஷறபத்தென்னு மும்முடையமகனென்னைச் சதிமானஞ்செய்யவந் தான் அதனால்; நானவனை வேலாயுதத்தாற்குற்றிக் கீழேவிழுத்தாட் டினேன்; சீக்கிரம் அவனைப்பிடிக்கவோடி வாருங்களென்றாற்றினான் அதுகேட்டு அங்கிருந்து சுந்துமத்தென்னுந் தலைவனைப்பார்த்து இற வுசல்கூல் நீ சீக்கிரம்போவென்றனுப்பினான், இவ்விதமிங்கே நடந்த வையெல்லாந்தெரிந்து, மிகுகீர்த்தியுள்ள நபிநாயகமவர்கள், தங்கள் மருகாலி றலியல்லாகு அன்குவை அங்கனுப்பினார்கள். அவ்விடத்தி ற்கு அல்லாவுடைய அறுஷப்புலியாகிய அலிறலியல்லாகு அன்கு

வரும்போது அஷறபாவைப், பாதகன் முகல்கீலும் சுந்துமத்தென்பவனுந் தூக்கிக்குதிரை மேலேற்றக்கண்டு, சரேலென்று அவர்கள்கிட்ட நெருங்கியோருபாய தந்திரத்தினாலே சத்துருக்களிரண்டுபேரையும் அஷறபாவையும் பிடித்துச் சிறையாக்கினார்கள்.

அதுகண்டு, இறவுசுல்கூல் கடலைப்போலே ஆரபாரித்திரைந்துகொண்டு எழுந்தான், விழுந்தான், விம்மிவிம்மி யழுதுபுரண்டான் அதுவுந்தவிர நிதமும் புத்தைவணங்குந் தலையிலே கையாலடித்துக்கொண்டு கூகூவென்றாற்றினான். பிறகு யாவருங்கலங்கத்தக்கதான மூரியாட்டத்துடனே தன்குதிரை மேலேறிக்கொண்டுகடல்போன்ற பெரும்படைகளுடனே படைக்களம்வந்து, காற்றைப்போலே குதிரையை வலசாரியிடசாரி சுற்றவிட்டு மிகுஆக்கிரமத்துடன் அடர்ந்தான், அதுகண்டு அல்லாகுத் தஆலாவின்றூதர் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் றேழுர்களும் எதிர்த்து வெட்டினார்கள், இவ்விதம், இரண்டுபடைஞரும் இடியைப்போலிரைந்து, கடலைப்போலேபடர்ந்து வெட்டிக்கொள்ளும்போது, அலிறலியல்லாகு அன்கவர்களும் அறம்மிபுனுதையானவர்களும், அம்றிபுனுமகுதீக்கரீபா அவர்களுக்கு மிகுகோபமாய்க்கண்ட இடங்களெல்லாம் பிணமாகவுந், திக்குகள் தெரியாது தூசிக்காடாகவும் நின்று வெட்டினார்கள். அச்சண்டைக் களத்திலேபறக்கும் தூசிமேகம்போலும், அடிபடுகின்ற தடாரி தண்ணுமை திண்டிமம்-பேரிகை முதலிய மேளவாத்தியச் சத்த மிடிகளைப்போலும், வெட்டும்வாட்கள் ஒன்றுக்கொன்று மோதித்தெறிக்கிறது மின்னைப்போலும், அதிலேசுத்தவீரிய செய்யுகின்ற அம்புகள் சோனை மழையைப்போலுமாகி யிருநதன.

இதிலே சில குதிரைகள் தலை புரடி நெஞ்சி-குடல் கால்கள்-காற்குரங்களற்றுவிழுந்தன, அக்குதிரை மேலிருந்த சுத்தவீரியர்களும் வெட்டுண்டிறந்தார்கள், இவ்விதம், அசறுநேரமட்டில் நெருங்கிநின்று சண்டைசெய்ததிலே காபிரீன்கள் (3000) பேர்களும், முசிலிமானவர்கள் (3000) பேர்களுமிறந்தார்கள், இவ்விதம் நடந்தசண்டையைக்கண்டு, சுந்துமத்தென்னும் அதிகவீரதீரனானவன், எங்கித்திகில்கொண்டு மனமருண்டுதத்தளித்துச் செத்துப்போயினான், பின்னறலியல்லாகு அன்கவர்கள் இறவுசுலகூலுடைய மக்கள், முகல்கீல் அஷறபா ஆகிய இவ்விரண்டு பேரிடத்திலும் வந்து அவர்களைக்கூட்டிக்கொண்டு கெடுதலில்லாத நபிநாயகமவர்களிடத்தில் வந்தார்கள்.

அப்போது, அசுஹாபிமார்களும் அங்கே வந்தார்கள் அதுகண்டு நபிநாயகம் அஷறபாவைபார்த்து உம்முடையவருத்த மெப்படியிருக்கிற தென்றதற்கு அஷறபா தமது முதுகிலிருக்கும் வேதனையைச் சொன்னார். அதுகேட்டு நபிநாயகம் அவ்வஷறபாவை யின்பமாகவாருமென்று முன்னிலையிலேயழைத்து அவர் முதுகிலிருக்கும் வெட்டுக்காயத்தையும் அதிலிருந்து கசிந்தோடும் இரத்தத்தையுங்கண்டு மிகவும் இரத்தமாகி அரியதவத்தவர் புகழ அஷறபாவின் முதுகிலிருக்கும் வெட்டுக்காயத்திற்கு மதிலோடு மிரத்தத்திற்கும் உலகிலெந்த நோவுக்கு மிருதுவான மருந்தாகிய மாந்துளிர்போன்ற தங்கள் கைவிரலை, அந்த வெட்டுக்காயத்தில் வைத்து மெதுவாகத்தடவினார்கள், அப்போதே அக்காயமுங், காயத்திலோடு மிரத்தமும், 'சொல்லமுடியாத வேதனையுங், கடுகளவுமில்லாமற் சுகமாகப்போய் மனமகிழ்ச்சியுடனே அஷறபா அங்கேயெதிரில் நிற்கின்ற, முகல்கீலைப்பார்த்து உனக்குத்துப்புரவாகிய அறிவுசொன்ன வென்னைக்கொல்லத் துணிந்தலகுணத்தானவனே இதோவுன்னைச்செய்யப்போகிறவேலையைப்பாரொன்று வாளையுறையைவிட்டு நீக்கி யசைத்துக்கொண்டு நெருங்கும்போது அந்த முகல்கீல், அஷறபாவைப்பார்த்து எனதுடற்பிறந்தானே வாளை நீட்டாதேயுமென்று உடனே (லாஇலாக இல்லல்லாகு முகம்மதுர் றசூலுல்லாகி)யென்று கலிமாச் சொன்னார்.

அதுகேட்டு, அஷறபாமனமகிழ்ந்து முகல்கீலைநெஞ்சோடுநெஞ்சணைத்துக் கட்டித்தழுவிப் புருவமத்தியில் முத்திமுகந்து பின்னர் தமதிருகைகளையும் நெஞ்சுக்குநேரே யுயர்த்திக்கொண்டு விஞனபுத்துஹானைவிட்டு மெங்களையழகிய நபிநாயகத்தின் அசுஹாபிமார்களிலாக்கிய ஆண்டவனே யுனக்கே புகழென்ற புகழடங்கலுமென்றுதித்து, முகல்கீலுடனே மகிழ்ச்சியா யிருந்தார். அப்போது, நபிநாயகமும், அசுஹாபிமார்களும் சத்துருக்கள்படை யதிகமானதால் இரவுகாலமெப்படியிருக்குமோ வென்றெண்ணிக், கண்விழித்துக் காத்திருந்து; காலையிலெழுந்து குதிரைகளைத்திரட்டி படைகளின் மேலே சவாராகி நடாத்தி, அக்குதிரைகளனுமானிக்கப் படைக்களம் வந்து அணியில் நின்றார்கள்.

அதுகண்டு கொடியபாதகன் இறவுசுல்கூல்,தனது படைகளுக்குத் தலைமைத்தனஞ் செலுத்ததன் மகன் துகாமாவைவைத்துச்சகலவைகையுமவனிடத்திலே சாட்டிவிட்டுப், பார்ருசிருக்கிற இடத்திற்குப் போய் அப்பார்ருசென்னுந் தேவுடைய காலடியிலே சாஷ்டாங்கமாக விழுந்துகிடந்து, தனக்குநேரிட்ட துன்பங்களையெல்லாஞ் சொல்லி

ஞன், அப்போதுகுற்றமாகிய இபுலீசுலகுனத்துல்லா அந்தப்பச்சைக் கல்வினலேசெய்யப்பட்ட புத்துடையவாயில் நுழைந்து வயிற்றுக்குட் சென்றிருந்து இறவுசுல்கூலைப்பார்த்து என்னடியார்களிலே தலைமை பெற்ற மஹாரிக்குராஜனே, இந்தப்பூமியி னலியையும் முகம்மதையுங் கெடுத்து உனக்கு நான் மேலான அருள்செய்குவேன் பயப்படாதே எழுந்தருளியாகிப்போவென்று சொன்னதுகேட்டு, இறவுசுல்கூல்மர கதம் பத்மாரகம், நீலம், வயிரேரியம், முத்துப்பவளங், கோமேதகம், இவை முதலிய ஒன்பது ரத்தினமும் பதித்திலங்கும் பச் சைகல்வினலேசமைத்து வைத்திருக்கும்புத்துகான்வரையில் நுளைந் திருந்துபேசும், பிசாசினுடைய பேச்சினல் மனமகிழ்ந்து அளவில் லாது புகழ்ந்து, அப்புத்திரன் காலடியைவிட்டு மதிசிக்கிரமாக எழுந் தான்.

முகல்கி வீமான்கொண்டசருக்கம் முற்றிற்று.

---

# அம்றும், அப்துல்லாவும், சுபைறையும், பர்ருசையுங் கொணர்ந்த சருக்கம்.

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

காரணக்கடவுள்முகம்மதுநபினர் கருணையின்றோழர்கடம்மி
லாரணக்கடலம்றுடனப்துல்லாவு மசனும்றவுசுல்கூல்நகர்போய்ப்
பூரணச்சுபைறைக்குபிரர்கையெடுக்கும்புத்துபர்ருசினைக்கொணர்ந்து
சீரணித்துற்றுச் செயங்கொடுவந்தசெய்திகள் யாவும்செப்பிடுவாம்.

## இதன்பொருள்.

காரணக்கடவுளாகிய நபிநயினர் முகம்மதுசல்லல்லாகு அலைஹிவ சல்லமவர்களுடைய கிருபைபொருந்திய தோழன்மார்களில் வேத அறி விற் சிறந்த கடலுக்கொப்பாகிய, அம்றிபுனுவுமையத்துல் அமீரியும் அப்துல்லா இனுசல்சுருனியும் இழிஞனுகிய இறவுசுல்கூலினூருக்குள் ளே தந்திரமாகப்போய் கல்வியில்நிறைவான சுபைறிபுனுஹவ்வாமவர் வர்களையுங் காபிரீன்கள் கையெடுத்துவணங்கும் புத்துஹானுகிய பர் ருசையு மெடுத்துக்கொண்டு சிறப்பையணிந்து பொருந்துஞ் ஜெயங் கொண்டு வந்தசெய்திகள் யாவையுஞ் சொல்லுகின்றோம்.

## சரித்திர வசனம்.

புத்துஹானுடைய பேச்சைக்கேட்டுச் சந்தோஷமாக எழும்பிய, இறவுசுல்கூல் குதிரையின்மேல் சவாராகித், தனதிருப்பிடம் போயிருந்தான். அப்போது, அல்லாகுத்த ஆலாவின் திருத்தூதாங்காராக வந்த காரணக்கடவுள் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் கடலைப்போலே திரண்டிருக்கும் அசுஹாபிமார்களைப் பார்த்துக் கலியாண முருக்கின் பூப்போன்ற இதழுற்றுக் கற்பூரவாடைகமழுந் தங்களின் திருவாயைத் திறந்து, எனதுயிர்த்துணைவாகிய சுபைறிபுனு அவ்வாம் சிறைபட்டு, அங்கே வருத்தப்படுவதை நாம் நீக்கவந்ததில், இடையிற்பெரிய சண்டைசெய்ததினால் நாளதிகப்பட்டுப்போய்விட்டது, இப்போது, இறவுசுல்கூல் தன் வீட்டுக்குப் போயிருக்கிறான், அவனொருவனை நின்றாப்போல் படைக்களம் வந்து அவன்மகன் துஹாமான்வக்கேட்டு அவன்பட்டிருக்கிற சேதத்தைக் குறித்துக் கோபங்கொண்டு சிறையிலிருக்கிற சுபைறையழைத்துக் கொலைசெய்யவும் போதுமென்று மனத்திற் கொஞ்சம் அச்சம்புகுவதால், அந்தச் சுபைறைக் கைவசமாக்கித் தந்திரமாகக் கொண்டுவரும்படியான பூராயம், புத்தியுத்தியுள்ளவர்கள் யார்சொல்லுங்களென்று கேட்டார்கள்.

அப்போதங்கே அசுஹாபிமார்களுடனிருந்த, அம்றிபுனுவுமையத்துல்லமீரியானவர், விரைவாய்ச்சபையில் எழுந்துநின்று நபிநாயகத்தைப்பார்த்து, அகன்ற மலையைப்போன்ற தோளையுடைய நாயகமே சுபைறை நான்போய்க் கொண்டுவர வுங்கள் கிருபையுள்ள அருள்வாக்கினுத்திரவு கிடைக்கவேண்டுமென்று சொன்னார். அது கேட்டு நபிநாயகம் அவ்வம்றைப்பார்த்து நல்வாக்கியமாகப் போய்க் கொண்டுவாருமென்று சொன்னார்கள் சொன்னவுடனே அம்றிபுனுவுமையத்துல் லமீரியெழுந்து, கிழிந்தபழங்கந்தைத் துணிகளையெடுத்து அரையிலணிந்து அதின்மேல் இரண்டொரு நூலில் முறுக்கிய கயிற்றையும் அரையிற்கட்டி அவ்வரையிலே ஓர்கிறீசையுமறைவாகவொழித்துத் தலையிலோர் பாகையுமிட்டு, அப்பாகைக்குமேலே கிழிந்த செகப்புத்துணிகளையுங் கோலமாக இடையிடை சொருக்கிக்கொண்டு, எளியவரினு மகாவெளியவர்போலே கோலம்பூண்டு, அம்றிபுனுவுமையத்துல்லமீரி, அல்லாகுத்தஆலாவை வணங்கி, நபிநாயகத்தைப்புகழ்ந்து போயினார்.

அதன்பின்னர் உபைசுடைய மகனார் அப்துல்லாவென்பவரெழுந்து நபிநாயகத்தைப்புகழ்ந்து, அல்லாவுடையறசூலே நான், அம்றி

புனுவுமையத்துல் லமீரியுடைய தந்திரத்தில் நின்றும் அதிக தந்திரஞ்செய்து சுபைறைக் கொண்டுவருவேன் அதற்காகத் தேவரீர் தாங்கள் ஜெயவாக்கருளவேண்டுமென்று கேட்டார். அதற்கு, நபிநாயகங்குஞ் சிரிப்புக்கொண்டு அவரைப்பார்த்து, ஓகே, அப்துல்லாவே அப்படியே நீர் போய்வாருமென்று சொன்னார்கள், அதுகேட்டு மனமகிழ்ந்து அப்துல்லா வென்பவர் சந்திர கலைபோன்ற வெள்ளைப்புடவையெடுத் தரையிலுடுத்துக், கரண்டை கால்வரையிலும் விழுகின்ற நீண்ட குப்பாய மொன்றையுந் தரித்துத் தலைக்கு அழகாகிய பாகையுமணிந்து, விலையுயர்ந்ததுப்பட்டாவுமேலே போட்டுக்கையிலோர் கோலுமெடுத்தூன்றி நடப்பதற்கு பிடித்துக்கொண்டு, வெட்டுக்காயங் குற்றுக்காயம் கை, கா, லொடிவு முதலிய மற்றவியாதிகள் நீங்கவும், பாம்பு முதலிய விஷஜெந்துக்கள் கடித்தால், அவ்விஷங்கள் மாறவும் ஆகிய சகலவியாதிகளுக்குங் கொடுக்கு மருந்துகள் வைத்திருக்கும் பையையு மெடுத்துக்கொண்டு மகா பண்டித வயித்தியரென்று யாவருக்குந் தோற்றும்படி, அல்லாகுத்தஆலாவையும், அவனுடைய றசூலையும் போற்றிப்புகழ்ந்து, கொஞ்சமுமனதிற் பயங்கரமில்லாமல் நடந்து கடலைப்போலே சப்தமாறாத இறவுசுல்கூலின்படைக் கூட்டத்தாரிருக்கின்ற வீதிகளிற்போனார். போய்,

அங்கேயெங்குஞ்சுற்றித்திரிந்து ஒவ்வோர் வீடுகளிலுஞ் சென்று, வாதபித்தசிலேத்துமத்தினாலுள்ள பல வியாதிகளுக்கும், வெட்டுக் குற்றுக்காயங்களுக்கு மருந்து செய்து சுத்தப்படுத்துகிறதற்கு நோயாளிகளுண்டோவென்று விசாரிக்கும்போது அங்குள்ளவர்கள் திரண்டுவந்து, அவருடைய வயித்தியக் கோலங்கண்டும் வாய்மொழியினட்பைக்கேட்டும், சந்தோஷமாகி ஆங்காங்குள்ள வியாதியஸ்தர்களிலே, பயித்தியம், குஷ்டம், காசம், பாண்டு; விஷச்சுரம், நீரோட்டம், சயித்தியம், குன்மம், இளைப்பு, ஈளை, இருமல் லெட்டுக்கால் முதலிய வியாதியஸ்தர்களும் மீனுள்ளகுளத்திலே பறவையினம் வந்து வளைந்ததுபோல் அப்துல்லா அவர்களைக் காபிரீன்கள் வந்து வளைந்து கூடினார்கள் கூடிய அந்நோயாளிகளுக்கு இவர் நோவுக்குத் தகுந்த மருந்தினாலும்-செந்தூரத்தாலும், பற்பத்தாலும்-தந்திரத்தாலும், சூ-சூ மந்திரத்தாலும்-அல்லாகுத்த ஆலாவுடைய அருளினாலும்நோய்களைத் தீர்த்தார். இவ்விதமிவராலே நோவுகள் சொஸ்தப்படுகிற செய்தியெங்கும் பாவியதினாலே, காபிரீன்கள், ஆங்காங்கிருந்து, இவர்கற்ற பெரியவரென்றும் அரிதானபண்டிதரென்றும் ஆசையாகிபோய்வில்லாது தினந்தினம்வந்து, அப்துல்லாவுடைய பாதம்ப

ணிந்துபுகழ்ந்து போவதுந்தவிரச், சண்டையிலே கால்முறிந்தவர்களும் கையறுந்தவர்களும் மேலறுந்தவர்களும், கண்குருடானவர்களும் சதைவெளியிட்ட காயத்தவர்களும், "கோலூன்றிவந்து சொஸ்தப்படுத்திக் கொண்டுபோய் வயித்தியருடைய பெருமையையும், நோய்தீருகிற விதத்தையும் அங்கங்கே புகழ்ந்துபேசிக்கொள்வார்கள்.

அதுகேட்டுப், படையிலுள்ள, தலைவர்கள், வீரர்கள்மிகவுஞ் சந்தோஷமாகிப் பண்டிதரைத்தினந்தினம்வந்து கண்டுகொண்டுபோவார்கள், இப்படி நடந்துவரும் நாளிலே சத்துருக்களிற்சிலர் மகாபண்டிதரான, அப்துல்லா அவர்களைப்பார்த்து முகம்மதென்பவர், எங்கள் விஷயத்திற்செய்த அனியாயங்களின்ன இன்னவிதமென்று சொல்வார்கள். சொல்லுகிறவர்களை அப்துல்லா அவர்கள்ப்பார்த்து ஆ, ஆ, அப்பா, அந்த முகம்மதாவென்று இரண்டு கண்ணுங்கோபாக்கினிபறக்க, இடியைப்போல சப்தித்து அச்சமென்பது கடுகுபோலுமில்லாத, அந்த முகம்மதென்னும் பஞ்சமாபாதக வஞ்சகம் நிறைந்த நெஞ்சையுடைய பொல்லாதவன். படிறு பொய், நிந்தனை குபாடம் மாருட்டம், தந்திரம், மந்திரம் :இவைகளாலே, இராஜாதிராஜர்களையெல்லாங் கெடுத்துச் சண்டைக் களங்களில்வெட்டி அதஞ்செய்து கொண்டல்லோ இருப்பான், அப்பா அவன்பேச்சா பேசாதீர்கள் பேசாதீர்களென்றுசொல்லி அவர்களை யேமாத்துவார்.

பின்னர், இறவுசுல்கூலாசனுடைய சமஸ்தானத்திலு மிவ்விதமான பண்டிதர்வந்துபலவியாதிகளையும், வெட்டுக்குத்துக்காயங்களையும் மருந்தாலும், மந்திரங்களாலுந் தீர்க்கிறாரென்கிற செய்தி தெரிந்து இறவுசுல்கூலாசன், சில ஏவலோர்களையனுப்பி, அப்துல்லாவையழைப்பித்துத் தன்சமுகத்தி லிருக்கவைத்து, இவர்பெரியவர்தானென்றெண்ணி அப்துல்லாவைப் பார்த்துப் பண்டிதரே ஷெய்கே யென்று மிகவும் அருமையாக முகம்பார்த்துப் பேசிக்கொண்டிருந்து பின்னர், நீர்வந்தவரலாறென்னவென்று கேட்டான் அதற்கப்துல்லா இறவுசுல்கூலைப்புகழ்ந்து இராஜாதிராஜாக்களுக்கும் இராஜாவாகிய வுத்தண்ட மகாராஜரே, நான் மருந்தாலும், மந்திரத்தாலும், கைபாகஞ்செய்பாகம், மெய்பாகத்தாலும் பெரிய பிணிகளெல்லாந் தீர்க்கப் பிறந்துவந்த பண்டிதனென்றும், கபிலையென்னும் நகரத்திலே தலைமைசெய்யுங் கனதியான பனீகவாசிம்கிளையிலுள்ளவனென்றும், எங்களூரிலிருக்கும்போது, முகம்மதென்பவன் உம்முடைய விரில்வந்து

கொடுமைகள் விளைத்தானென்று கேள்வியாகிவந்தேனென்றும் அந்தக வாசீன்கிளையார்கள் (5000) குதிரைவீரியர்களுமக் குதவிக்காக இங்கேவர இருந்தார்களென்று சொன்னர்.

இவ்விதம், அப்துல்லா அவர்கள் சொன்னவைக ளெல்லாத்தையும், இறவுசுல்கூலரசன்கேட்டுத், தன்மனமிகவுமகிழ்ந்து, தன்னிடத்திலே பிள்ளையைப்போலிருக்கிற அப்துடைய முதுகிலிருக்குங்காயத்தைக்காட்டி, ஒகே, ஷெய்கே இந்தப்பயலுக்குப் படையிலே பட்ட காயம் இதை நீர் எவ்விதத்திலுந் தீர்த்துப்போட்டால், உமக்குமேலானவெகுமதிகள் தந்து இந்தப்பூமி முழுமையுங் கீர்த்தியுண்டாகச் செய்வேனென்று மிகுந்த விருப்பத்துடனே சொன்னன். அதுகேட்டு, அப்துல்லா அவர்கள் நல்லது அப்படியே செய்கிறேனென்று மிகுந்த சந்தோஷமாகி அல்லாகுத்தஆலாவை மனதில்வணங்கி முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லத்தைத் துதித்துப், பயலுக்கு முதுகிலிருந்த வெட்டுக்காயத்தைச் சீக்கிரத்தில் மருந்தினலும், மந்திரத்தினலும், பூமியில் யாவரும் புகழும்படியாய் ஆற்றினர்.

அதுகண்டு, இறவுசுல்கூல் மிகுந்த ஆனந்த மகிழ்ச்சியாகி அப்துல்லா அவர்களுக்குப் பலபல வெகுமதிகள் கொடுத்து உபசாரணை செய்து அப்துல்லாவைத் தன்மந்திரியிடத்திற் கனுப்பிவைத்தான், அம்மந்திரி, இராஜன் முதலாகிய காபிரீன்களுக்குத் தெரியாமல்முன்னர், அறம்மிபுனுதையானவர்களைக்காணப்போகும் வழியிலே புலைலிபுனு அப்பாசவர்கள் கையைத்தொட்டு ஈமான்கொண்டு தீனில்விசுலாமான விபரீதபுத்திசாலியாதலால், வயித்தியர் வந்த தந்திரமறிந்துகொண்டார், என்ருலும் "இராஜாவாலே தம்மிடத்திற் கனுப்பிவைத்த பண்டிதராச்சுதே யென்று, காபிரீன்களுக்கு ஒப்பாயிருக்கும்பொருட்டு, வயித்தியருக்கு ஒரு சவடிகழுத்திலிட்டு, அவர்கள் கூடப்போனவர்களை, யெதுவோவோருபாய தந்திரத்தினல் வெளியிற்போகச் செய்துவிட்டுப் பின்னர், அப்துல்லா அவர்களும், மந்திரியும், தனித்தவோரிடத்திலாகிப், பக்கம் பார்த்திருந்துகொண்டு, நபிநாயகத்தின் செய்திகளை மந்திரியானவர், அப்துல்லா இடத்திற் கேட்க, அதற்கிவர்கள், மந்திரிக்கு நபிநாயகஞ்சொன்ன சலாமுஞ் சொல்லி, அவர்களிருக்கும் வரிசைச் சிறப்புகளையுஞ் சொன்னர்.

அதுகேட்டு, மந்திரி மனமகிழ்ந்து ஆனந்தக்கடலில் மூழ்கினவராகிச்சில இரகசியங்களெல்லாம் பேசியிருந்து பின்னர், அப்துல்லா அவர்களுடனே எழுந்து இறவுசுல்கூலிடத்திற்குப்போய்ச் சிலவார்த்

தைகளின்பமாகப் பேசிக்கொண்டிருக்கும்போது, மந்திரி இறவுசுல் கூலைப்பார்த்துப் புகழ்ந்து இந்தப் பூமியெங்குந்தேடினுலும், இவ சைப்போலொரு பண்டிதர் கிடைப்பது அரிதாயிருக்கும் இவரு டைய கண்திறந்துபார்த்தாலுடனே நோய்களெல்லாம்; பறந்தோடிப் போய்விடுமென்று சொன்னுர் அதுகேட்டு இறவுசுல்கூலரசன் மந் திரியைப்பார்த்து, ஒகே மந்திரியேநீசொன்னது நிசந்தான், இந்தப் பண்டிதரை வானவரென்று சொல்லலாமென்று சொல்லிப்பின்னர், அப்துல்லா அவர்களுக்குச் சரிகையினுலாகியவுத்தரீகங், தங்கக்காசு முதலாகிய வரிசைகளும், தக்கள் ஏரித்திரிவதற்கு மேலாகிய உயர் ந்த குதிரையென்றும்: இருக்கவீடுங்கொடுத்தான் இவ்விதம் இறவு சுல்கூல்கொடுத்த வெகுமதிகளெல்லாம் அப்துல்லா பெற்றுக்கொ ண்டு இருக்கும்போது, நபிநாயகத்தின் மகிழ்ச்சிபொருந்திய சுபைறு றவியல்லாகு அன்குவை யெவ்விடத்திலே சிறையாக்கிவைத்திருக்கு தென்று, அவ்வூரிடங்களிலுள்ள சாவடிகள், கற்பாறைகள் முதலிய விடங்களிலெல்லாந்தினந்தினம் போய்ச்சுற்றிப், பார்த்துக்கொண்டே வருவார். இதுநிற்க,

முன்னர் நபிநாயகத்தின் சொல்லிற்காக, இராஜாதிபதியான, சுபைறுறவியல்லாகு அன்கவர்களைக்கொண்டுவரப்போன அம்றிபுனு வுமையத்துல்லமீரி, அரியதவத்தைப்பொருந்திய, பக்கிறுகளுடைய கோலங்கொண்டு, மலை, வனம், காடு, கரைகாடு நகரிகளெல்லாங்கட ந்து, வரும்போது வழியிலே சிலசத்துருக்களைக்கண்டு, அவர்களை நெருங்கி இரண்டு கண்ணினுலும் தாரை தாரையாக வழியும்படி விம்மி, விம்மி, யேங்கி யேங்கி யழுதுசொல்ல ஆரம்பித்ததாவது யாதெனில், அச்சத்துருக்களைப்பார்த்து, ஒகே நம்மையான கூட் டங்களே வஞ்சகங், குபாடம் பொருந்திய முகம்மதென்பவன் நான் வருகிற வழியில் என்னைக்கண்டு கிட்டிநெருங்கிக் கொஞ்சமேனும் நெஞ்சிலிரக்கமில்லாமல் என்னிடமிருந்த பணங்காசு, துணிமணிக ளெல்லாங் கொள்ளையெடுத்துக்கொண்டு பிரிந்துபோன இந்தக்கந் தைத்துணிகளை யணியச்செய்து, எனக்குப் பிரியமுள்ள மனிதரை யுங் கொன்றுவிட்டுப் பஞ்சுக்கட்டில் நெருப்பிட்டதன்மையாய் என் னைச்செய்துபோயினதால், நானிந்தக்கோலமாகிப், பசியினுல் அழகிய என்திரேகமும் இளைத்துவாடி திகைத்து என்னினத்தவர்களிடத்தி லேபோகவும் பலமில்லாமல், உங்களையாதரவாக நாடிவந்தேன் ஆத லால் என்பசியுந் தாகமுந் தீரும்படி செய்தாலுங்களுக்குத் தரும மிகவு முண்டாயிருக்குமென்று சொன்னுர்.

அதுகேட்டு அச்சத்துராதிகள், அம்றிபுனுவுமையத்துல்லமீரியுடனிலே, கந்தைத் துணியும், இடுப்பிலேமுறுக்கிய கயிறும் அழுகியபுடரியில் வழியக்கிடக்குந்தொப்பியும் அத்தொப்பியின்மேலே கிடந்தசெகப்புத்துணியும் மெலிந்தவுடலும் தளர்ந்தபேச்சும் ஆகிய இக்கோலங்களை யெல்லாங்கண்டு மனமிகவுமிரங்கி உறட்டியும் ஆட்டினிறைச்சியும் தண்ணீருங்கொண்டுவந்து கொடுத்தார்கள். அவைகளை அம்றிபுனுவுமையுத் துல்லமீரி யுண்டுதின்று குடித்து மகிழ்ச்சியாகி அவர்களைமெய்யாமெய்யாய் புகழ்பவர்கள்போலே புகழ்ந்துகொண்டு அவ்விடத்தை விட்டெழுந்து எங்குஞ்சுற்றிப் பார்த்துக்கொண்டு போகச்சே, பாதகரானசத்துருக்கள் தலையெழுப்பாமலிரும்புச் சங்கிலிபிட்டுச் சிறையிலேபோட்டுத் தினந்தோறுஞ்செய்யும் வருத்தத்தினல் விடாதகாய்ச்சலாளிகளைப்போலே துன்பமுற்றுச்சுபைறுறலியல்லாகு அன்குகழுத்தி லிரும்புச்சங்கிலிப் பூட்டும் காலிலேதுறங்கும், அன்பது வீரர்காவலுடனுங் கிடக்கக்கண்டபோது.

உடனே அம்றிபுனு வுமையத்துல் அமீரி அக்காவலாளிகளைப் பார்த்து, ஒகே வீரரே நீங்கள் நமது பர்ருசுடைய அருள் மிகவும் பெருவிர்களென்று சொல்லிச் சோனைமழை நீர் சொரிவதுபோலே யழுதுகொண்டு நின்றூர், அதுகண்டு, அக்காவலாளர் அம்றிபுனுவுமையத்துல் லமீரியைப்பார்த்து. ஒகேஎளியபக்கிரே நீரிந்தமலைச்சார்பிலேவந்தக்காரணமென்னவென்றுகேட்க அதற்கிவர் ஒருதந்திரத்தையெண்ணி;அக்காவலாளரைப்பார்த்து நானிந்தப் பூமியிலேவாட்டமில்லாமல் வாழும்பனீகுதை லென்கிற கூட்டத்திலுள்ளவன், என்பிள்ளைகளுடனே நான் வழிநடந்து வரும்போது முகம்மதென்கிற சூனியதந்திரக்காரன் எங்களை அடுக்கவந்து என்பிள்ளைகளை வெட்டிக்கொன்றுபபோட்டுப் பணங்காசு துணிமணிகளெல்லாங் கொள்ளையாடிக்கொண்டு என்னை இக்கோலமாக விட்டுவிட்டுபோயினன், பின்னர், நான் அவன்மேல் வன்மித்துக்கொண்டவ்விடத்தைவிட்டு நீங்கி இங்கே இராஜாதிராஜனை இறவுசுல்கூலுடைய படைக்கூட்டத்திலே சேர்ந்து, அப்பகைஞனை முகம்மதுடனே எதிர்த்துச் சண்டைசெய்து, அவன் சிரசைவெட்டி முகமெங்குமிரத்தத்தை யோட்டிவிக்க வந்தேனென்று பொருமிபொருமி யழுது சொல்லிநின்றுன்.

இவ்விதம், இவரழுந்துயரத்தைக்கண்டு அந்தச் சத்துருக்களுங் கண்ணிலேதண்ணீர்பிசியும்படியாய் அவ்வம்றிபுனுவுமையத்துல்லமீரியைப்பார்த்து, ஒகேஷெய்கேவுமக்கு வேண்டியதுதருகிறோம்அழாதீர்

ளைளழா தீரென்று உபசாரணைசெய்தார்கள் அவர்கள்கூடவுமிருந்து அம்றிபுனுவுமையத்துல்லமீரி வயிறுநிரம்பக்கோதுமை ரொட்டியுந்தின்றுவிட்டுப்பிறகு, ஞூதாகஒர் துஆவென்னும் ஆசீர்வதிப்புமோதியிருந்தார். அப்போது, அக்தக்காவலர்கள்நாங்கள் குடிக்கிற கள்ளையும் சாராயத்தையும் பங்கிட்டு விதப்படிக்கு எடுத்து ஓர்பாத்திரத்திலிட்டு அம்றிபுனுவுமையத்துல் லமீரியவர்களுக்குங் கொடுத்தார்கள் அப்போது, 'அம்றிபுனுவுமையத்துல்லமீரி அந்தக்கள்ளுக் கொடுத்தவர்களைப்பார்த்துத் துன்பத்தையுடையவர்களுக் கின்பமான செய்கை வருத்தமுண்டாக்கி. வைக்குமென்றுசொல்லி, அக்கள்ளைச் சாராயத்தைக் குடிக்காமல் அன்றைய இராவுகாலம் அவ்விடத்திலேயே தங்கியிருந்தார். அப்போதந்தகாபிரீன்கள் ஷெய்கு சொல்லுகிறது சரிதானென்றெடுத்துக் கொண்டிருந்தார்கள் பின்னர், அம்றிபுனுமையத்துல்லமீரி சிலதந்திரஞ்செய்ய ஆரம்பித்தார், அத்தந்திரம்யாதெனில் முன்னிருந்துலகத்தை யரசாட்சிசெய்த, இராஜாக்கள் சரித்திரமும் அவ்விராஜாக்களிடத்திலிருந்த சுத்தவீரியர்களின்றிறமையும் பலபல விடுதைகளையு மிகவு மின்பமாகக் கேட்டபோதே சிரிப்புக் கிடமாகவுஞ்சொன்னார்.

அப்போ தவர்களெல்லா மிகுந்தமகிட்சியுடனே கண்தூங்காமலிருந்திவர் சொல்லுங்கதைகாரணங்களைக் கேட்டுக்கொண்டுமிகுநேரவரையுமிருந்துபோதும்போதும் பெரியவரேயென்று சொல்லச்சொல்ல, இன்னுமிவர்மிகுவினோத வேடிக்கையான கதைகள் சொன்னார், அதுகேட்டிருந்த, சுபைறலியல்லாகு அன்குவழமைப்படி தங்கள் வேதனையிலே புலம்புகிறதுபோல், அங்கிருப்பவர்களுக்குக் கொஞ்சமுந்தெரியாமலிலக்கணமாக அல்லாகுத்த ஆலாவைப்புகழ்ந்து சில பயித்துகளோதினார்கள், அதுகேட்டு; அம்றிபுனுவுமையத்துல்லமீரியும், அதற்கும்பதிலாக அல்லாகுத்தஆலாவைப்புகழ்ந்து இலக்கணமாகப் பக்கத்திலிருப்பவர்களுக்குத் தெரியாமல் சிலபயித்துகள் சொன்னார், அப்போது: அங்கிருக்குஞ் சத்துருக்களுண்ட கள்வெறி மண்டைகொண்டு மதிமயங்கிப்படுத்த இடத்திலேயே நித்திரைசெய்தார்கள்.

அப்படி நித்திரை செய்பவர்களை அம்றிபுனு வுமையத்துல்லமீரியவர்கள் சோதித்தவராய் நடுச்சாமம்வரையிலும் நித்திரைசெய்பவர்களைப்போல் கண்ணைச்சிமிட்டிச் சிமிட்டித்தலையைச் சாடவிட்டுத் தோளிலோர் பக்கமாகச்சரிந்து நித்திரைகண்ணைமயக்குந்தன்மையாம்ஜாலஞ்செய்து தம்முடையமனத்திலே சுபைறுறலியல்லாகு அன்கு

வை அடர்ந்த இருள்வந்தபோது தந்திரமாகக் கொண்டுபோகவேண்டுமென்றுநாடி ஆண்டவனைநினைத்து என்னுட்டம் நிறைவேற ஆண்டவனே, நீயுதவிசெய்யென்று ஓர் துவாவுமோதிப் பிறகு, வாயைமிகவுந் திறந்து பெரியகொட்டா யிட்டுக்கொண்டிருந்தார். அதுகண்டு சத்துருக்கள் அம்றிபுனுவுமையத்துல் லமீரியைப்பார்த்து, ஒகே ஷெய்கே! நேரம் நெடுநேரமாயிற்று, ஆதலால் நீர் படுத்துறங்குமென்று சொன்னார்கள், அதுகேட்டு, அம்றிபுனுவுமையத்துல் லமீரி பூமியிலே படுத்துக் காலைநேராகப்பொறுக்கநீட்டியொருக்கணித்து, அந்தக்குடியர் புத்திமாறி நித்திரைசெய்வதுபோல, தாமு முபாயதந்திரமாக மூசுமூசென்று பெருமூச்சிட்டு, மெய்யாமெய்யா நித்திரைசெய்பவர்கள்போல் நித்திரைசெய்தார்.

அப்போது, கட்குடித்த வெறியினாலேகாபிரீன்களெல்லாந்துணி சோரவும் வாயிற்போற ஈயெறும்பு தெரியாமலும் பூறுபூறென்றுகுறக்கையிட்டு நித்திரைசெய்தார்கள், அதுகண்டு, அம்றிபுனுவுமையத்துல் லமீரியவர்களெழும்பிக்காவற்காரரைச்சோதித்து இதுநல்லதருணமென்று அங்கேயெரியுகின்ற நெருப்பின்வெளிச்சங்களையெல்லாம் அவித்துவிட்டுக் குற்றமற்ற ஆண்டவனையும், அவன்றூதாங்கரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களையுந்துதித்துப் புகழ்ந்து சுத்தவீரியம்பொருந்திய, தமதுநெஞ்சத்திலே கொஞ்சமும் பயமென்பதில்லாமற் படுத்திருக்கையிலேயே, புரண்டு புரண்டு நெஞ்சினாலே தவழ்ந்து சத்தமெழும்பாமல் மெதுவாகப்போய் எந்தநாளுமகாதுன்பத்தோடும் வருத்தப்பட்டுக்கொண்டே கிடக்குகின்ற சுபைறிபுனு அவ்வாமவர்கள் கிட்டநெருங்கினார். அதுகண்டு, சுபைறுறலியல்லாகு அன்குயாரென்றுகெட்டார், அதற்கு அம்றிபுனுவுமையத்துல்லமீரி, சுபைறுறலியல்லாகு அன்குவைப்பார்த்து. அல்லாகுத்தஆலாவுமக்கு நன்மைசெய்வானாகவும், நீர்மெதுவாகப்பேசுந் தலையையுயர்த்துமென்று சொன்னார்.

அதுகேட்டுச், சுபைறுறலியல்லாகு அன்கவர்கள்தலையையுயர்த்தினார்கள், அப்போது கொஞ்சமும்பெலமில்லாமற் சோர்தலாகப்பழையபடிதலையைக் கீழேபோட்டார்கள். அதுகண்டு, அம்றிபுனுவுமையத்துல்லமீரியவர்கள், சுபைறுறலியல்லாகு அன்கவர்களுடைய காலிலுங், கையிலும் பாதகர்கள் பூட்டியிருக்கின்ற இரும்புச்சங்கிலிகளைப் பெலமாகத்தொட்டு அசக்கிப்பார்த்தார்கள், அப்பூட்டுகள் கடுகளவுமசையாமலு, மிழகாமலுமிருக்கக்கண்டு அல்லாகுத் தஆலா

வின் திருநாமங்களையும் நாயகத்தின் சலவாத்தையுஞ் சொல்லித்தமது யுத்திபுத்தி தந்திரத்தினாலே சகலதழைகளையு மொடித்தெரிந்து விட்டுச், சுபைறுறலியல்லாகு அன்குவை யெழுப்புமென்று சொன்னார். சொன்னாலுமென்ன,

சுபைறுறலியல்லாகு அன்கவர்களுடைய சரீரமாதிக்கமும், பாவிகளான காபிரீன்களடித்த அடியின் கடோத்தினாற் புண்ணாயிருப்பதாலெழும்ப ஏலாமலிருந்தது, அப்படியிருந்தும்; அம்றிபுனுவுமையத்துல் லமீரியைப்பார்த்து, ஓகே, அமறே என் கைகால், முகமிவைகளைமெதுவாக நிமிர்த்தி விடுமென்று சொன்னார்கள். அதுபோலே, அவர்களுடைய கால், கைமற்ற வுறுப்புகளையெல்லா மெதுவாக அம்றிபுனுவுமையத்துல் லமீரியவர்கள் நிமிர்த்துவிட்டு எழும்பும் சுபைறேவென்றுசொன்னார். அதுகேட்டுச், சுபைறுறலியல்லாகு அன்கு எழும்பினார்கள். அப்போதும் எழும்ப ஏலாமையால், என்னாலேயொன்று மேலாதென்று முன்போல தரையிலேயே சுருண்டு விழுந்தார்கள். அதுகண்டு, அம்றிபுனுவுமையத்துல்லமீரி ஒரு தந்திரத்தை மனதிலெண்ணிச்சரேலென்று அங்கே கட்குடித்த வெறியினாலே பிணத்தைப்போல் நித்திரைசெய்கிற காவலாளர்களான பகைவரைத்துண்டு துண்டாகத், தலைவேறு, உடல்வேறாக வெட்டிவிட்டுச் சீக்கிரம் சுபைறுறலியல்லாகு அன்குவைத் தலைமேலேற்றிக்கொண்டு அம்பின் விசையாகவந்தார். அப்போது,

தமக்குச்சுமை கனப்பதினாலே, அங்கோர் மலைப்பொதும்பில் மனுடர் நடமாட்டமில்லாத இடத்திலே சுபைறுறலியல்லாகு அன்குவைக் கொண்டுபோய் வைத்துவிட்டுத்-தாங்கள் தனியத்திரும்பி வந்து சத்துருக்களுடைய படைக்கூடாரத்திலே தந்திரமாகப்புகுந்து, ஒரு குதிரையையும், ஒரு வாளையுங்களவெடுத்துக் கொண்டுவந்து வேதநூற் புகழுகின்ற சுபைறுறலியல்லாகு அன்கவர்களிடத்திற் கொடுத்துக்குதிரை மேலேறி வாளைக்கையிற் பிடித்துக் கொண்டு வாருமென்று சொன்னார், அப்போது, சுபைறுறலியல்லாகு அன்கு அம்றிபுனுவுமையத்துல் லமீரியைப்பார்த்து, எனக்குப் பசித்தாக மிகுதியாயிருப்பதால் நானென்னென்று குதிரையைச் சாரிபிடுவேனென்று சொன்னார்கள்.

அதுகேட்டு அம்றிபுனுவுமையத்துல் லமீரியவர்கள் - சுபைறுறலியல்லாகு அன்குவைப்பார்த்து, நீரிந்த இடத்திலேயேயிரும். நான் போய் வருகிறேனென்று சொல்லிவிட்டு போய்ப் பர்ருசிருக்குங் கோயிலில் நுழைந்தாலங்கு பட்டைச்சாத மிருக்குமதை மறைவா யெடுத்

துவாலாமென்று, அங்குபோய் நுழைந்துபார்த்தா ரப்போதங்கு சந் தடியாயிருக்கக்கண்டு ஒரு மூலையிலே போய்ப் பதுங்கிக் கொண்டிருந் தார். அந்த நேரத்தில் அங்கே இறவுசுல்கூல் வந்து பர்ருசுடைய கா லடியில் விழுந்து தெண்டனிட்டுச் சாலையப் பட்டவனைப் பர்ருசைப் பார்த்துப்புகழ்ந்து என்னையாளும் நாயகனே மகாவஞ்சனைக்காரனை முகம்மது என் மக்களிரண்டு பேர்களைத் தன்னிடத்திற் சேர்த்துக் கொண்டான், அதுவுந்தவிர, மூத்தமகனைக் சொல்லவுஞ்செய்தானே யென்று ஏங்கிப் பெருமூச்சிட்டழுது சொன்னான்.

அதுகேட்டுப், புத்துடைய வயிற்றில் வந்திருக்கும் ஷைத் தான், பர்ருசுடைய வாய்திறந்து சொல்லுவதுபோலே இறவுசுல்கூ லைப்பார்த்து என்னையின்பமாகப் போற்றிப்புகழும்காரிக்கே, உன்னு டைய இராஜரீகம் நெடுகிலும் . நிற்கவும், அந்த முகம்மது அழியவும் செய்வேனென்று சொன்னான். அதுகேட்டு, இறவுசுல்கூல் ஆனந்தக் கடலில் மூழ்கினவர் போலாகிச் சந்தோஷம் பெருத்துத் தலைமயங்கி யுடனே சில ஆடுமாடுகள் கொண்டுவரச்செய்து புத்துக்குப் பலியுங் கொடுத்துவிட்டு அங்குள்ள சுத்தவீரியர்களைப்பார்த்து நாளையதினம் நாம் சண்டை செய்யும்போது சத்துருக்களுக்கஞ்சி யோடுகின்ற நாமு றுதாக்களை வெட்டிப் போடுவதுந்தவிர அவர்கள் ஆஸ்திகளையுங் கொள்ளையாடும்படி செய்வேனென்றும், நமது தேவுபற்ருசு நாளைய தினம் படையிலே வெற்றி தாவருவாரென்றும் எவ்விடங்களிலும் படைசாங்க ளடியுங்களென்றுஞ்சொன்னான், அதுபோல் வீரியர்கள் முரசங்களடித்தார்கள், பின்னர்;

இறவுசுல்கூல் தன்வீட்டுக்குப் படுக்கப்போகுஞ் சமையத்திலே சப்தித்து, அங்குள்ள வீராதிவீரர்களைப்பார்த்து நாளைச் சூரியோத யத்திலே பொல்லாத வம்பனாகிய சுபைறை என்னிடத்திற்கொண்டு வாருங்களென்று கட்டளையிட்டுப் போய்ப்படுத்து நித்திரை செய் தான். அப்போது, மற்றவீரர்களும் அங்கங்கேபடுத்து நித்திரைசெய் தார்கள், இதுநிற்க அங்கே கோயிலுக்குள்ளொளித்திருந்த, அம்றி புனுவுமையத்துல்லமீரி யெழுந்து பர்ருசையும், அங்கிருக்கும்போது அங்கு நிற்குங்காவற்காரர் யார் போறதென்று? கேட்டதற்கிவர்கள், நோயாளியப்பா- என்னேவுத்தீரத் தேவரிடத்திற்குப் போறேனெ ன்று சொன்னார், அதுகேட்டுக் காவற்காரர்கள் நல்லது போம்போ மென்று சொன்னார்கள்.

அப்போதிவர் சந்தோஷமாகி யுள்ளேபோய்ப்பற்றுசைப் பார்த்தார் அவ்விடத்திலே பற்றுசும் பட்டைச்சாதமு மில்லாதிருப்பதால் தமது மனதில் ஒருவேளை யிபுலீசுலகுனத்துல்லா மறைத்து வைக்கவும் போது மென்றெண்ணிக்கொண்டு திரும்பிக்கோயிலுக்கு வெளியே வரும்போது, சிலமனிதர்கள் கூட்டமாகப்போகக்கண்டார், அப்படிப்போற, சத்துருக்கள் சுபைறு றலியல்லாகு அன்கவர்களிருக்குமிடத்திற் சென்று பார்த்ததில், அங்கே வள்ளலாகிய சுபைறவர்களில்லாமலும், அங்கிருந்த காவலர்கள், வெட்டுண்டு துண்டந்துண்டமாகக் கிடப்பதையுங்கண்டு, திகில்கொண்டோடிவந்து இறவுசுல்கூலிடத்திற்சொன்னார்கள். அதுகேட்டவனுடனே, கைசேதப்பட்டவனாக எழுந்து இச்செய்தியைப் பற்றுசிடத்தித்திற் சொல்லவந்தான், அங்கே ஒருகண்பழுதானவன் வாங்கேட்கப்போன இடத்திலே மற்றக்கண்ணும் பழுதானதுபோலே பற்றுசைக்காணோம் அதனாலே இறவுசுல்கூல் மிகவுமயர்ந்து மயங்கிற்றெளிந்து மனத்திலெண்ணினான், இந்தவிதஞ்செய்தது- அம்றிபுனுவுமையத்துல் லமீரியே யல்லாமல் வேறொருவருஞ்செய்யார்களென்று மிகுகோபமாகித் தானுடுத்திருந்த வஸ்திரங்களைக் கிழித்திறைந்தான், தொப்பியைகழட்டி நிலத்திலடித்தான் சத்தமிட்டான் கீழே விருந்துருண்டு புரண்டழுதுகொண்டு எழுந்து தனது படைகளையெல்லா மெழும்புங்களென்று கட்டளையிட்டான்.

இவ்விதம். அழுதுகவலைப்படுகிற இறவுசுல்கூலிடத்தில், அங்கேயுள்ளீமான்கொண்டிருக்கிற மந்திரி சரேலென்றுவந்து இறவுசுல்கூலைப்பார்த்து-இராஜசிங்கமே யும்முடைய முகதாவில், நமது நாயன் பற்றுசுசத்துருக்களை நாளையதினம் சன்னபின்னமாக வுருட்டிவிடுவேனென்று சொன்னதை நீர் மறந்துவிட்டீரோ, அவர் சொற்பழுது வருமா-அவர்சொற்போலே முதலிலே அந்த முகம்மதுடைய படைகளை நாசஞ்செய்யநாடிப் போயிருக்குமேயல்லாது, வேறேயாவர்களெடுப்பார்கள் இராஜனே, இன்னும் அந்தப்பாவி முகம்மதுடைய கண்ணினெதிரிலே கொண்டுபோய்க்காட்டிக் கழுகிலே போட்டுக்கொல்லவேண்டிச் சுபைறையுமெடுத்துக்கொண்டே தேவர்போய் இருக்கிறார், அதேதவிற வேறே இந்தக் கடுங்காவலைக் கடந்து யாவர்களெடுத்துக்கொண்டுபோவார்கள், ஐயாவேயென்று அந்த இறவுசுல்கூலுடைய இருள்மனம் பொருந்தச்சொன்னார், அதுகேட்டு இறவுசுல்கூல், மந்திரி சொன்னசொற் சரிதானென்று மனமகிழ்ந்து மந்திரிக்கு வரிசைகள் செய்திருந்தான்.

இந்த நடத்தைகள் யாவையும் அங்கே யொளித்துக்கொண்டு பார்த்திருந்த அம்றிபுனுவுமையத்துல்லமீரி, இனிநாமிங்கிருப்பது பழுதென்றெண்ணிச் சரேலென்று-சுபைறுறவியல்லாகு அன்கவர்க ளிருக்குமிடத்திற்குவந்து கோயிலுக்குத்தாங்கள் நாடிப்போன விப ரங்களையும், அங்கேநடந்த காரணங்களையுஞ்சொல்லி அவர்களைக்குதி ரைமேலேற்றிக்கொண்டு மிகுசுறுக்கில் மின்னைப்போலே நடந்தார் கள், அப்போது. சுபைறுறவியல்லாகு அன்கு அம்றிபுனுவுமையத் துல் லமீரியைப்பார்த்து, ஓகே, அம்றே நீ ருமொருகுதிரை மேலேறி வந்தால் நல்லதென்றுசொன்னார்க ளதுகேட்டு அம்றிபுனுவுமையத் துல்லமீரி யென்னுடைய கால்நடைக்குக் குதிரைநடை முன்னிற்கா தென்று சொல்லி விரைவாகநடந்தார், நடக்கும்போது.

இவர்களுக்கு முன்னாலோர் குதிரைக்காரர் போறதைச்சுபைறு றவியல்லாகு அன்குகண்டு, அம்றிபுனுவுமையத்துல் லமீரியைப்பார்த்து, ஓகே, அம்றே அதோ குதிரைமேலே போகிறது யாரென்று பார்த்துக்கொண்டு அம்பின் விரைவாக வாருமென்றுசொன்னார்கள் அதுகேட்டு, அம்றிபுனுவுமையத்துல்லமீரி அங்கே போறவர்களினி டத்திலே முடிகியபோது, போறவர், அல்லாகுத்தஆலா வலியவனெ ன்றும், அவனுதவியானது நல்லோர்களுக்குண்டுமென்றும், அவனு டைய முனிவானது பொல்லாத குபிரோர்கட்கென்றும், மெய்யைச் சொல்லும்வேதமுறையான தக்குபீர் மொழிந்தார்கள், அதுகேட்டு, அம்றிபுனுவுமையத்துல்லமீரியவர்கள் மதித்து இவர் அப்துல்லாவெ ன்றறிந்து மிகவுஞ்சந்தோஷமாகியவர்கள் கிட்ட நெருங்கியபோது கால்நடையர்கவருகிற அம்றிபுனுவுமையத்துல் லமீரியையும் மிகுபசி யினோடு குதிரைமேல்வருகிற சுபைறிபுனு அவ்வாமையும், அவ்வப் துல்லா றவியல்லாகு அன்குகண்டு புஜம்பூரித்து உரோமபுளகிதங் கொண்டு ஆனந்தக்கடற் குளித்தெழுந்தவராகிச் சலாம்சொன்னாரங் கச்சலாத்திற்கவர்களிருவரும் பிரத்திசொல்லித் தாங்கள் வந்த வரலா ற்றையும் விவரமாகச்சொன்னார்கள், அதுகேட்டு,அப்துல்லாஅவர்கள் ஆனந்த பாஸ்கரமாகினர், பிறகு மூன்றுபேரும் சொல்ல அரிதான மனமகிழ்ச்சியாகப்பேசிக்கொண்டு நிற்கும்போது, அப்துல்லாவுடைய மலைபோன்ற வாசமணிந்ததோளிலே பிள்ளையுருவமாக வொன்றிருப் பதை அம்றிபுனுவுமையத்துல்லமீரிகண்டு, அவரைப்பார்த்து, ஓகே, அப்துல்லாவே யுமது தோளிலிருக்கின்றதென்ன சொல்லுமென்று கேட்டார்.

அதற்கு, அப்துல்லர்தாம் வயித்தியவேஷங்கொண்டு சத்துருக்கள் படைக்களம்போய், அங்குள்ளவர்களின் வெட்டுக் குற்றுக்காயங்கள் முதலிய பலவியாதிகளைத் தீர்த்ததினுல், அச்சத்துருக்கள் மகிழ்ந்து மிகவுமுபசாரணை செய்திருக்கும்போதிவர்களோருபாயஞ் செய்து செவந்த மாணிக்கம்பதித்து விளங்குங் கண்ணையுடைய பற்ருசென்னும், புத்தைதயெடுத்துக்கொண்டுவந்த திறமையைச்சொன்னர், அதுகேட்டு, அம்றிபுனுவுமையத்துல்லமீரி தாம் கோயிலுக்குள்ளே பற்ருசைத் திருடிக்கொண்டு வரப்போன காரணமும், அஃதங்கில்லாது கண்டு தான்றிரும்பிவரும்போது சத்துருக்களால் நடந்த செய்கை யாவையுஞ்சொல்லி, ஒகே, அப்துல்லாவேஸீர், கடுங்காவலைக்கடந்து எப்படி இந்தப்பற்ருசைத்திருடிக்கொண்டு வந்தீரென்று கேட்டார்.

அதற்கப்துல்லா அவர்கள் அம்றிபுனு வுமையத்துல்லமீரியவர்களைப்பார்த்துத் தாம்பண்டித முறைமையினுற் பலபல பிணிகளைத் தீர்த்ததினுலே, இறவுசுல்கூலென்னும் பாதகனும்; அவனுடைய படைத்தலைவர்களும், தங்கள்பேரிற்கொண்ட மகிழ்ச்சியுடனே அப்பாதகர்களை விட்டு நீங்கியோர்போது மரத்தினுலே பற்ருசைப்போலே பருமை நீளமுள்ள சுரூபச்சிலையொன்றை யெடுத்து அதுவியுள யாதிள் பிள்ளையென்று தோளிலேற்றிக்கொண்டதுடனே, தங்கள் கையிலோர் துணியைவரிந்து சுற்றிக்கொண்டு கோயிலின் வாசலிற் புகுந்தபோது; அங்கு காவற்காக்கிற சத்துருக்கள், உருவியகத்தியுடனே தங்கள்முன்வந்து யார் நீயேன் கோயிலுக்குட் போகிருய் தோளிலென்ன சுமையென்றதட்டிச்சொல்லென்றதற்குத், தாங்கள் அவர்களைப்பார்த்து, ஒகே, காவலாளர்களே இராஜா இறவுசுல்கூலவர்களோடு பகைசெய்கிற முகம்மதை வெட்டப்படையிலே முன்னேறும்போது, அந்த முகம்மதுடைய படைவீரர்விட்ட அம்புதைத்த காயமிஃதென்று துணிசுற்றிய கையைக்காட்டித் தோளிலிருப்பது நோயுற்ற என்பிள்ளை இதற்காக நம்மையாளுகின்ற பற்ருசிடத்திற் போய் வரங்கேட்டுச் சுகப்படுத்தப்போறேனென்று சொல்லித் தாங்கள், வயித்தியத்திலே சம்பாதித்தபொருள்களிற் சிலதொகையுமெடுத்தவர்களுக் கொடுத்துத் தாழ்மையாகப் பேசினதின்பேரிலவர்களிரங்கித், தங்களைப்பார்த்து எளியவரே கோயிலுக்குட்போய்த்தேவரிடத்திலேயுமது துன்பத்தைச் சொல்லிக்கொள்ளுமென்றதாற், ருங்கள் சந்தோஷமாகிக் கோயிலுக்குட்போய்ப் பார்க்கச்சே,

அங்கே தம்மைத் தடைசெய்ய யாதாமொருவரு மில்லாமலிருக்கக்கண்டு, சந்தோஷமாகி, யொருவேளை ஷைத்தான்வந்து சத்தமிடுமென்றெண்ணிச் ஷைத்தான் வாயடிக்கும்படியான அல்லாவுடைய அசுமாக்களையோதிக்கொண்டு தோளிலிருந்த மாச்சிலையை அங்கே வைத்து விட்டுப் பற்றாசைத்தூக்கித்தோள்மேலேவைத்து அதின்பிரகாசம் வெளிக்குத்தோற்றாமல் துப்பட்டாவைமேலே பொதிந்துகொண்டுவரும்போது அங்கே காவற்காப்பவர்மன மகிழ்வாழ்த்துதல்செய்து கரும்பின்சாறு; தேன்கற்கண்டு பால்பழமுதலிய இன்பத்திலுமின்பமாகியவாசகம் பேசுகின்ற பற்றாசென்னுந் தகுதியையுடைய தம்பிரான், துரும்பைத்தூணாகவுந் தூணைமலையாகவுந் தோன்றச்செய்வார், இனி அவர்சித்தமுள்ளே திரும்பினாற்பிணிகளெல்லாந் தீருமென்ற வாக்கியத்துடனே, நான் தேவார்ச்சனையைநாடிக் கோயிலுக்குள் நுழைந்தபோதே, யென்மகனுடையபிணிகளெல்லாம் நீங்கிவிட்டதென்று சொல்லிக்கொண்டு, கள்ளவழியாகத் தப்பினோந்தப்பினோமென்றுதாம்வந்த காரியங்களனைத்தையும் விபரமாகச்சொன்னார்; அதுகேட்டு: அம்றிபுனுவுமையத்துல்லமீரி அவர்களும், சுபைறிபுனு அவ்வாமவர்களும், மிகுந்த சந்தோஷமாகி, அவ்விடம்விட்டு நீங்கி நடந்தார்கள், இதுநிற்க.

அங்கே, தனக்கு வருங்காரணமின்னதென்றறியாத கொடும்பாதகனான இறவுசுல்கூல் சுபைறு றலியல்லாகு அன்குவையும்பற்றாசையுங் காணாமையாற்கொண்ட வியாகூலமானநோவு, மந்திரியவர்கள்சொல்லானவுபாயதந்திரமென்னு மருந்துகண்டு தீர்ந்து படுத்து நித்திரைசெய்தான், அப்படிநித்திரைசெய்தாலுமென்ன (குற்றப்பட்டவனுக்கும், குறைவயிற்றுக்காரனுக்கும், நித்திரைவராதென்னும் பழமொழிபோல) பற்றாசும், சுபைறவர்களும் காணாமற்போயின வெண்ணமாகிய இரண்டு அம்புகளுங்கண்ணையுங் கல்லையுந்துளைத்தால் நித்திரைவாராமல் விழித்துக்கொண்டேயிருந்து, தன்மனதிலே தேவையாரேனுந்திருடினார்களோ, அல்லது, சத்துராதிகளைக்கொல்ல நாடித்தான் தேவர்போயிருக்கிறாரோ, இவ்விதங்களில், எவ்விதமென்றுந் தெரியவில்லையே, மேலும்வளமையாகிய இங்கே நம்மிடத்திற்கு வருகிறவாதித்தியரையு மின்றைக்கெல்லாம் வரக்காணோமே. ஆகையால் ஒருதூதையனுப்பி விசாரித்தறியவேண்டுமென்றெண்ணிக்கொண்டிருக்கும்போது சூரியனும் பிரகாசமாக எழுந்தான்.

அப்போது, இறவுசுல்கூல்வயிராக்கியத்திற் றிறத்திற்சண்டையில்மற்றுமெந்தக்கெட்டித்தனத்திலும் பூமியிலிவனைப்போலில்லை யென்

றெவருமதிக்கத்தக்க கெட்டபேருள்ள கினைத்திபுனசுமத்தென்றும்; பிருறத்துல், மவுத்தென்னும் பெயருள்ளதுட்டனனையழைத்து அவனோடு மிருவீரம் பொருந்திய ஆயிரங்குதிரை வீரரையுஞ்சேர்த்து, அத்தலைவனைப்பார்த்து, நீபோய் நாலுவழிகளையும், அங்கங்கேயிருக்கிற மலைபொதும்புகள் முதலிய விடங்களெல்லாத்தையுஞ் சுற்றிப்பார்த்து, இங்கேவந்து புழங்கினபண்டிதனைத் தேடிப்பிடித்துக்கொண்டுவாவென்று சொன்னான், அதுகேட்டுப் பிருறத்துல்மவுத்தென்பவன், தனக்கு இறவுசுல்கூலாலே கிடைத்த சுத்தவீரிய ராயிரம்பேர்களையும், ஆயுதமுதலிய படைவுஸ்தணிந்து குதிரைமேல் வரச்செய்து, அவர்களுடனே, பூமியில் நின்றுந்தூசெழுந்து வானை மறைக்கும்படியாய்க்குதிரைகளை நடாத்திக்கொண்டு பண்டிதரைத் தேடித் தவங்கெட்ட பாதகர்கள் வருகின்றார்கள்.

இவ்விதமாக, வருகிற ஆயிரங்குதிரை வீரியர்களும் பிருறத்துல் மவுத்தென்னுந் தலைவனும், வேதப்பொருளைத்தெரிந்த, சுபைறிபுனு அவ்வாமவர்கள் முதலியமூன்று பேர்களும் தாங்கள், போறபாட்டையில் நெருங்கிவருவதைக்கண்டு; அம்மூன்றுபேர்களு மினிநாம் தப்புவது அரிதென்றெண்ணிப் பீஸபீலிற் றுணிந்ததிலே, அல்லாகுத்த ஆலாவின் ஆயிரம் அசுமாக்களை மறக்காமலோதும். அப்துல்லாறவி யல்லாகு அன்கவர்கள் சுறுக்கி லவ்விடத்தைவிட்டு விலகிப்போம், ஓர்மலைப் பொதும்பில் யாவருக்குந் தெரியாமற் றங்களிடத்திலிருக்கிற பற்றுசென்னும் புத்துஹானை யொழித்து வைத்துவிட்டு வந்த பின்னர், மூன்று தலைவர்களும், வழியில்நடக்கும்போது, ஆயிரங்குதிரைவீரரும், பிருறத்துல் மவுத்துங்கிட்ட அடுத்தார்கள், அதைப்பார்த்தால். அவர்கள் யாவரும் கூட்டமாகிய தயிரைப்போலும், இவர்கள் மூன்று பேருமத்துகளைப்போலுமாகிவுள்விழுந்து கலக்கினார்கள், அப்போது சுபைறுறவியல்லாகு அன்கு தாங்களேறிய குதிரையைச் சாரிபிட்டுக்கையிலிருந்த வாளினாலே இரண்டுபேரைக் கண்மூடி விழிக்குமுன்னேவெட்டி நரகத்திற் கனுப்பினார்கள்.

அதுகண்டு, சத்துருக்களில்நின்றும்ஒரு மகாவீரன் சுபைறுறவியல்லாகு அன்கு திகைக்கும்படியாய் வந்தான், அவனோ, தாடியும் நீண்டு, உயரத்தாலும். பருப்பத்தாலும் கனதியானவனுதலால், இவர்கள் பலவாறு சரீரமிளைத்தவர்களாதலால், மூன்று பேருமோர் மலையுச்சத்திலேபோய் ஏறிக்கொண்டார்கள், அதுகண்டு சத்துருக்கள் நெருங்கிய

வர்களுக்குப் பின்னாலேயே மலைமேலேறினார்கள், அவர்கள் மூன்று பேர்களும் சத்துருக்களைப்பார்த்துக் கீழேயிறங்குங்களெடாவென்று பெருங்கற்களை யுருட்டிவிட்டார்கள், அக்கற்கள் வந்த விசையிலேயே எம்பட்டுநெசிங்கி அன்பது சத்துருக்களிறந்துநாசமடைந்தார்கள், அது கண்டு, மற்றச்சத்துருக்கள் மலைமேலேறப்பயந்து பின்னிடுவதைத் தலைவனை பிறுறத்துல் மவுத்துகண்டு, அச்சுத்த வீரியரைப்பார்த்து ஒகே, கம்மினுட்டிகளே இந்தமூன்றுபேர்களுடனே சண்டைக்கடர் ந்தேறப் பயந்துபின் வாங்குகிற நீங்கள்; அலி, மிகுதாது, காலிது, அறம்றம், அம்றிபுனு, மகுதீக்கரீபு,புலைலிபுனு, அப்பாசு, ஆகிய இவர் களெல்லாம் அவரவர்களுடைய படைகளுடனேவந்தால் நீங்களெவ் விதஞ் சண்டைசெய்வீர்கள் ஆதலாலிப்போது பின்னிடையாமற் சண் டையின்பேரிற் றிடச்சித்த புருடராகப் போங்களென் றேவினான்.

இவைகளை யெல்லாங்கேட்டு. அம்றிபுனுவுமையத்துல்லமீரியவர் கள் இனிமோசம்வரும் போலிருக்கிறது, ஆதலால், அல்லாவுடையதூ த்தங்கர்முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்திலேபோய்ச் சொல்லவேண்டுமென்று சத்துருக்களுக்குத்தெரியாமல் மலையிலோர் பக்கமாக இறங்கி வாயுவேக மனவேகத்தினுங்கடி தாகக், கால்நடைக் காரர்களுக்கு, ஐந்துகாத வழித்தூரத்தையும் ஐந்துநாழிகைக்குள்ளே யோடிப்போய் நபிநாயகத்தின் சமுகத்தையடுத்து, அவர்கள் பாதம் பணிந்தெழுந்துநின்று தாங்கள் மூன்று பேர்களாலங்கு நடந்த காரி யங்களையும், தாங்கள்வரும்போது சத்துருக்கள் வந்து வளைந்துகொ ண்டதையுஞ் சொல்லித், தளர்ச்சியாகிநின்றார், இவ்விதம், சுபைறு றலியல்லாகு அன்குவந்தார் சத்துருக்கள் வந்து வளைந்துகொண்டார் களென்று அம்றிபுனுவுமையத்துல் லமீரியவர்கள் சொன்ன செய்தி யை நபிநாயகமவர்கள் கேட்டவுடனே. தங்கள் மருகாலிபல்லாகு அன்கவர்களைப்பார்த்து, யாஅலியே நீர் சீக்கிரம்போமென் றுத்திரவு செய்தார்கள்.

அதுபோல, போறதற்கு அலிறலியல்லாகு அன்கவர்களெழுந்த ருளியாகினார்கள், அதுகண்டு, அம்றிபுனு,மகுதீக்கரீபவர்கள் அலிறலி யல்லாகு அன்கவர்களைப்பார்த்து யாஅலியேநான் போகிறேனீங்களி ங்கே இருங்களென்று சொன்னார்கள். அதுகேட்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் அம்றிபுனு மகுதீக்கரிபவர்களைப்பார்த்து யாஅம்றேநீர் நபிநாயகத்தினிடத்திலே காவலாக இருமென்று சொல்லிவிட்டுக்குதி

ரை மேலேறிப் பூமியும்; மலையும், வானமுங், குலுங்கும்படியாய் அக் குதிரையை நடாத்திச் சத்துருக்களான இராஜர்கள் பயந்தோடவும் நபிநாயகமவர்கள் மனமகிழவுந்துரிதமாகப்போய் அங்கே மலையின் பேரிலிருக்கு மிரண்டுபேரைச் சூழ்ந்திருக்கிற சத்துருக்களென்கிற கடலைத்தாண்டிச் செல்லும்போது.

சுபைறு றலியல்லாகு அன்கவர்கள் சத்துருக்களுடனே பீஸபீற்செய்து, கையயர்ந்து, உடற்றளர்ந்து, பசியினாலேவாடி, ஆதிநாயகனே இப்போதும், எப்போதும்போலே யுனதுகாவலேதவிர எனக்கு வேறில்லையென்றுசப்தித்துத்துஆவோதினார்கள், அந்தச்சத்தம் அலிறலியல்லாகு அன்கவர்கள்காதிலேகேட்டதால் உடனேயவர்கள் வாளையுருவிச் சிங்கமானது யானைக்கூட்டத்தில் நுழைந்ததுபோலே அச்சத்துருக்கள் கூட்டத்திலே நுழைந்து குதிரையைவலசாரி இடசாரிசுற்றவிட்டு முப்பது சத்துருக்களைக்கொன்று நரகத்திற்கனுப்பிவிட்டு வேகமாய்நிற்கும்போது, அக்காபிரீன்களில்நின்று மகாபொல்லாதவனாகியஹாரீதென்பவன் மண்டைப்புழுவூர்ந்து நமச்சத்செய்வதினால் நெருப்பிலேபூச்சி விழவந்ததுபோலே தானேறிய குதிரையைநடாத்தி இடசாரிவலசாரி சுற்றிக்கொண்டு பாஷைகள்பேசி மீசையை முறுக்கிவிட்டு வேகமாகவந்தெதிர்த்தான்.

அப்போது, அலிறலியல்லாகு அன்கவர்களும்ஒருகொழுத்தகாளைமாட்டைக்கண்டு, புலிபாய்வதுபோலேபாய்ந்தார்கள்; அதுகண்டு, ஹாரீதென்ற சத்துருபயந்துஓடினான், ஓடும்போது அலிறலியல்லாகு அன்கவர்கள்கொண்டு வேகத்தோடு சத்துருக்கள் கூட்டத்திலே நுழைந்து அவர்களேறியகுதிரைகளுடனே அனேகரைவெட்டி நாசஞ்செய்வதைக்கண்டு. அச்சத்துருக்களில்நின்றும் சத்தாதென்ற பலத்த வீரன்நான்குபேருடனே வந்தெதிர்த்தான் அதுகண்டு அலிறலியல்லாகு அன்கவர்களொரேமூச்சிலேபாய்ந்து அவ்வைந்துபேர்களிலொருவனைப்பிடித்து இன்னொருவன்மேலே சுழட்டியடித்தார்கள் அவ்விரண்டுபேரு முட்டிச்சட்டி நெய்யாய் நசிங்கிச்செத்து நாகமடைந்தார்கள், மறுபடியு மலிறலியல்லாகு அன்கவர்களொருவனை வெள்ளியகிரணவாளினாலேவெட்டினார்கள், இவ்விதமூன்றுபேர்கள் இறக்கக்கண்டு, மற்றஇரண்டு சத்துருக்களும்பயந்து நினைவுதடுமாறியோடின வோட்டத்திலேயே ஒருவர்க்கொருவர் மோதிப்பள்ளத்தாக்கிலுருண்டு விழுந்திறந்தார்கள்.

இவ்விதம் ஐந்துபேரு மிறந்ததைக்கண்டு மலைநிகர்த்ததோட்களையுடைய பிருறத்துல் மவுத்தென்னுந்தலைவனினி நம்மைப்போலே பலத்தவர்களிங்கில்லையென்று வாய்மதம்பேசிக்கொண்டு தானேறிய குதிரையை நடாத்திக் குறிதப்பாமல்வெட்டுகின்ற அலிறலியல்லாகு அன்குவின் முன்னால்வந்தெதிர்த்து வாளினாலே பலவிதமான சண்டைகள்செய்தான்; அவைகளை யெல்லாந் தட்டிக்கொண்டு அலிறலியல்லாகு அன்கவர்கள், அவ்விதமாகத் தாங்களேறிய குதிரையை நடாத்தி யவனைவெட்டி யிரண்டாகப்பிளந்து வெட்டிச்சரேலென்று குதிரையைத்தட்டிவிட்டுக்கொண்டுபோய்ச் சுபைறிபுனு அவ்வாமவர்களுடனேசேர்ந்து வெகுசத்துருக்களை வெட்டிவீழ்த்தினார்கள். அதுகண்டு சத்துருக்களிற்சிலர் முன்னிதாய், இறவுசுல்கூலுக்குச் சொல்லவோடினார்கள், சிலர்பின்னாலே யுயிர்பிழைத்தோம் பிழைத்தோமென்றோடினார்கள்,

இவ்விதம் சத்துருக்களோடக்கண்ட அலிறலியல்லாகு அன்கவர்களும், சுபைறிபுனுஅவ்வாம் றலியல்லாகு அன்கவர்களுமிகுசந்தோஷமாகிச் சண்டைக்கள முழுமையுஞ்சுற்றிப்பார்த்து அங்கே வெட்டுண்டுகிடக்கிற சத்துருக்களின் வாள், வேல், குதிரைமுதலாகியசாமக்கிரிகைகளெல்லா மெடுத்துக்கொண்டபின்னர் அப்துல்லாசுல்குனியவர்கள் மலைப்பொதும்பிலொளித்துவைத்த பற்றுசென்னும் புத்துகானையெடுத்துக் கொண்டுவந்து நன்மையையுடையவர் புகழுகின்ற அலிறலியல்லாகு அன்கர்களிடத்தில்வைத்தார்கள் அந்தப்பற்றுசை அன்கவர்கண்டு அப்துல்லாவைப்பார்த்து, ஒகே, அப்துல்லாவே இஃதுகாபிரீன்களிடத்திலே ஷைத்தானுடைய கோட்டியினாலே பேசிக்கொண்டிருந்ததே அட்பேர்பட்ட இஃதுமதுகைபி லெவ்விதத்திற் கிடைத்ததென்று கேட்டார்கள்.

அதுகேட்டு நபிநாயகத்தின்தூதராகியஅப்துல்லா அவர்கள் தாமரத்தினாலோருருவஞ்செய்து பிள்ளையென்று பேர்வைத்துக்கோயிலுக்குட்சென்றதும், அதுகண்டு அங்குள்ளகாவலாளயதடங்கற்செய்ததும் அவர்களுக்கிவர்கள் சொன்னதும். பின்பு மாச்சுரூபத்தை யங்குவைத்துவிட்டு அந்தப்பற்றுசையெடுத்துக்கொண்டுவந் துமாகிய சகலநடத்தைகளையு மாதிமுதல லந்தம்வரையிலே சவிஸ்தாரமாகச் சொன்னார்கள் அதுகேட்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் குஞ்சிரிப்புக்கொண்டு பின்னர் காதவழிகஸ்தூரி மணக்குகின்ற நபிநாயகமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்திற்போக எழுந்தருளியாகிச்சத்து

ருக்களிட மெடுத்த குதிரை முதலிய யாவையுமுன்னடாத்திக்கொண்டுபோகும்போது, கீர்த்திபொருந்திய நபிநாயகமவர்கள், தங்கள்மருகரான அலிறலியல்லாகு அன்கவர்கள், சுபைறு றலியல்லாகு அன்கவர்களைக் கூட்டிக்கொண்டு வருகிறார்களென்றறிந்து மகாசந்தோஷமாகி அசுஹாபிமார்களைப்பார்த்து நீங்களெதிராலேபோய் சுபைறிபுனு அவ்வாமுதலியவர்களை யழைத்துக்கொண்டு வாருங்களென்றுத்திரவு செய்தார்கள்.

அதுகேட்டடனே, அவ்வசுஹாபிமார்கள்போய்ச் சுபைறுறலியல்லாகு அன்கவர்கள் முதலிய யாவரையும் அழைத்துக்கொண்டு கூட்டமாகவந்து நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பாததாமரையைக்கண்டபோது அலிறலியல்லாகு அன்கவர்கள் சுபைறுறலியல்லாகு அன்குவைக்கொண்டுவந்து நபிநாயகத்தின் சமுகத்தில் விட்டார்கள், பின்னர், அப்துல்லா றலியல்லாகு அன்கவர்கள் இபுலீசுலகுனத்துல்லாவாயிலே புகுந்து பேசுகின்றபற்றுசைக் கொண்டுவந்து நபிநாயகத்தின் முன்பில்வைத்தார்கள். அதுகண்டயவர்களாலும் புகழ்கின்ற நபிநாயகன் சந்தோஷமாகி குஞ்சிரிப்புகொண்டு அப்துல்லா இபுனுசுல்சுகுனியையும் அம்றிபுனுவுமையத்துல்லமீரியையும்பார்த்து நீங்களிருவருமங்கேபோன விதங்களையும் பற்றுசையும் சுபைறவர்களையுங் கொண்டுவந்த விதங்களையுமெனக்கு நன்றாகச் சொல்லுங்களென்று சொன்னார்கள்.

அதற்கு அப்துல்லா அவர்கள் தாம்வயித்திய வேஷங்கொண்டுபோய் மோவாளிகளினோவுகளைத்தீர்த்ததும் அதின்பேரில் இறவுசுல்கூலுடைய நட்புப்பெற்றுப்பின்னர், மறைவிலேமாத்தினாலே பற்றுசைப்போலோர், உருபஞ்செய்து அப்வுருபத்தோடு கோயிலிலேபோனதும் அங்கேநடந்ததும், பின்னர், தந்திரமாக மாவுருபத்தை யந்தக் கோயிலிலே வைத்துவிட்டுப் பற்றுசைக்கொண்டுவந்தது மாகிய யாவையுஞ் சொன்னார், பின்னர் அம்றிபுனுவுமையத்துல்லமீரி தாம் யெளியவர் கோலங்கொண்டுபோய்ச் சத்துருக்களை யிரட்டிக் கொண்டு தந்திரமாகப்போய்ச் சுபைறுற்லியல்லாகு அன்கு சிறைகிடக்குமிடத்தைக்கண்டு அங்கிருக்கிற காவலாளிகளைத் தந்திரத்தினாலே சினேகம்செய்ததும் பின்னர் யிராவுகாலத்திலே அந்தக் காவலாளர்களை யெல்லாம் வெட்டிப்போட்டுச் சுபைறுறலியல்லாகு அன்

குவைக் கொண்டுவந்ததுமாகிய யாவையுஞ்சொன்னார்கள், அதுகேட்டு, நபிநாயகம் அல்லாகுத்தஆலாவைப்புகழ்ந்து தங்களிரண்டுகையையு மெடுத்து ஆகாயத்திற்கு நேரேயுயர்த்தி அம்றிபுனுவுமையத்துல் லமீரியவர்களுக்கும், அப்துல்லா அவர்களுக்குந் துஆச்செய்து மற்றுமசுஹாபிமார்களுடனே சந்தோஷமா யிருந்தார்கள்.

அம்றுமப்துல்லாவும் சுபைறைபற்றுசைக்கொணர்ந்த-சருக்கம்.

முற்றிற்று.

---

# சிலாஜீ ஸீமான்கொண்ட சருக்கம்.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

கொடுமையினரசாள் றவுசுல்கூல்லெனுங்கெடுதிமன்ன
னெடுமையின் மகிழ்ந்துநெஞ்ச நேசிக்குமகன்சிலாஜீல்
படிமையின்கவிகையோங்கும் பார்த்திபரிறசூல்மெச்ச
மிடிமைதீரீமான்கொண்ட மேன்மைகளனைத்துஞ்சொல்வாம்.

## இதன்பொருள்.

இந்தவுலகத்திற் கொடுங்கோலரசுசெய்யும் இறவுசுல்கூலென்னும் கெடுதியானரசன், நீண்டமகிழ்ச்சியாக மனத்தில்நேசங்கொண்டமகனை சிலாஜீலென்பவன், மேகக்குடையிற் பொருந்தியோங்கும் இராஜநாயகரான றசூல்நாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மெச்சும்படியாய் கெடுதிகள்யாவுந்தீர ஈமான்கொண்ட மேன்மைகள் யாவையுஞ் சொல்லுகின்றும்.

## சரித்திர வசனம்.

நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அசுஹாபிமார்களுடனே சந்தோஷமாக இருந்தார்கள் அன்றையதினம்சூரியனடைந்துமறுதினஞ் சூரியனுதயமானநேரத்தில் இறவுசுல்கூலென்னும்பாதகன், தான்வணங்குந்தேவதையாகிய பற்றுசுகளவுபோனதும், சுபைறுறஷியல்லாகு அன்குவைச் சிறைச்சாலையிலேகாணுமல் அவ்விடத்திற் காத்திருந்தகாவலாளர்கள் வெட்டுண்டுகிடந்ததும்மற்றும்விசேஷமானகாரியங்கள்யாவையும் படைக்களத்திலிருக்கின்றதன் மகன்

சிலாஜீவிடத்தில்வந்து சொன்னான் அதுகேட்டு அந்தச் சிலாஜீயென் பவன்மிகுகோபமாகி அந்தக்ஷணமே தனது படைகளெல்லாந்திரட்டிக் கொண்டுவந்து தீனுனவர்களை வளைந்தான், அப்போது, வள்ள லாகியமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்களும், அசுஹாபி மார்களும் படைவுஸ்தணிந்து குதிரைகளிலேறி வந்தபோது, கள்ள மனத்தனான சிலாஜீயென்பவன் தன்குதிரையை வலசாரி இடசாரி விட்டுக்கொண்டு முன்னணியில் நின்ற முசிலிம்கள் சிலர் விழும்படி வாளாலேவீசிட்டுப் பின்னர், இரண்டுபடைக்கும் நடுவிலே நின்று கொண்டு, முசிலிம்களே வாருங்கள்வாருங்கள் வேட்டையாடுகிறேன், பாருங்களென்று சொன்னான்.

அதுகேட்டு; அறம்மிபுனுதையானவர்கள் குதிரையைச் சவாரி செய்து சிலாஜீல்முன்போய் யெதிர்த்து வாள்வீசினார்கள், அவனும் வாள்வீசினான், அதிலே, அறம்மிபுனுதையானுக்கொரு காயம்பட்டு வருத்தமானதாலே, தமது குதிரையைத் திருப்பிக்கொண்டு முசிலிம் கள் படையிலேவந்தார்கள் அதுகண்டு இன்னுமொரு முஸ்லிமான வர் தமது குதிரையை நடாத்திக்கொண்டு வந்து இறவுசுல்கூல் மக னைபாதகன் சிலாஜீனுடனெதிர்த்துச் சண்டைசெய்தபோது, சிலா ஜீனுடையவாள் வெட்டினாலவர் சகீதாகிச் சுவர்க்கப்பதிசேர்ந்தார், பின்னர் இன்னமொரு அசுஹாபியானவர் தமதுகுதிரையைச் சவாரி செய்துவந்து சிலாஜீலோடெதிர்த்துவாள் வீசினதிலவனிவர்களைச் சிறையாக்கிக்கொண்டுபோய்க் கழுமரத்திலேற்றினான், அப்போது, அவ்வசுஹாபி யானவர்கள், வாக்கிலே கலிமாமொழி மறக்காமல் மவுத் தாகிச் சுவர்க்கஞ்சேர்ந்தார்கள்.

இவ்விஷயத்தை மூன்று லோகத்திற்கு மாண்டகையாயும் உண் மையான் புறுக்கான்வேதத்திற்குக் காரீபகுருவாயும் வந்த நபிமுகம் மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் கண்டு மிகுகோபமாகி, வேத அறிவினால் மனத்தெளிவும் அழகினாலே பூரணச்சந்திரன் போன்ற முகவொளிவும் பொருந்திய அறம்மிபுனுதையானவர்களைப் பார்த்து அதோ மதயானைபோலே சண்டைசெய்து நிற்கிற சிலாஜீலை யெதிர் த்து வெல்லுமென்றுசொல்ல உடனேயவர்கள், தாமேறிய குதிரை யைநடாத்தி வீரவேங்கைப்புலியைப்போலே வெள்ளிமலைபோன்ற தோட்களிலிலங்கப்போய் அந்தச்சிலாஜீலோடுகடூரமாக எதிர்த்துவாள் வீசினார்கள், அவனுமெதிர்த்து வெட்டினான், அப்போது, இவர்கள் குதிரையைப்பின்னிழுத்து முன் முடுக்கவிட்டுச் சிலசப்தவார்த்தை

பேசியொருவரால் மதிக்கக்கூடாமையாகிய ஆச்சரியமான வெட்டு வெட்டினார்கள், அந்த வெட்டையவன், தன்னுடைய வேலாயுதத்தினால் தட்டிவிட்டான்.

பின்னரிவரும் தங்கள்தங்கள் தாமரைமலர்போன்ற முகங்கள் தூசியினாலே மறையும்படியாய்க் குதிரைகளைச் சாரியிட்டு நேர்நோக்கக்குதிரையைப் பாயவிட்டுமோதச்சே, சிலாஜீலென்பவனை அறம்பிபுணுதையான், அஷ்டகிரியென்னு மலைத்தாக்கத்தாலசையாதுதண்ணீரின்மேல் நிலைபெற்ற பூமியிலே விழும்படியால் விரைவிலே வேலாயுதத்தாற்றட்டி விழித்தாட்டிப்பிடித்துக்கொண்டு ஜயபேரிகைமாருதடிபடுந் தங்கள்படை கூடாரத்திற்குக்கொண்டுவந்து, அந்தச்சிலாஜீலை நபிநாயகத்திற்கு முன்பாகவிட்டார்கள், அப்போது, நபிநாயகம் சிலாஜீலைப்பார்த்து உன்னுடைய உடன்பிறந்தார் அஷறபத்து, முகல்கீலிவர்கள் போலே நீயுங்கலிமாச்சொல்லென்று சொன்னார்கள் அதற்கவன், மறுமொழியாதும் பேசாமற் கவிழ்ந்ததலையாக இருந்து பின்னர், தலையையுயர்த்தி நபிநாயகத்தைப்பார்த்து நபியே நீரிந்தச்சொல்லை விட்டுவிடும் நானுமக்குவேண்டிய திரவியங்களைத்தருகிறேன், அவைகளை யெடுத்துக் கொண்டென்னைவிட்டு விடுமென்று சொன்னான்.

அதுகேட்டு நபிநாயகமவர்கள் அந்தச் சிலாஜீலைப் பார்த்துப் பணமொருபொருட்டல்ல, மனமகிழ்ந்து நான் சொன்னபடிக்குக் கலிமாச்சொல்லென்றபோது அவ்விடத்திற்கு அவன்றுணைவர்கள் வந்தார்கள் வந்த இரண்டுபேரும், நபிநாயகத்தைப்பார்த்து, எங்கள் நாயகமே, இவனையின்றையதினம் இராமட்டுக்கும் நீங்களெங்களுடனனுப்பிவைத்தாற் பாவத்தைக்கொடுக்கின்ற குபிர்வழியைவிட்டு நன்மையைத்தருகின்ற தீன்வழியிலேயாகும்படி யறிவுகளைச்சொல்லி மனத்தைத் திருத்துவோமென்று சொன்னார்கள் அதுகேட்டு நபிநாயகம் அவ்விருவுடற்பிறந்தான்மார்கள் கையிலுஞ்சிலாஜீலை யொப்புக்கொடுத்து கூட்டிக்கொண்டு போங்களென்று சொன்னார்கள். அப்போதவர்கள், நபிநாயகத்தைப்புகழ்ந்து தங்களுடற்பிறந்தான் சிலாஜீலைக்கூட்டிக்கொண்டு ஒப்பில்லாத தங்கள் கூடாரத்திற்போய் புகுந்திருந்து, தம்பியாகிய சிலாஜீலுக்குப் பல நன்மொழிகளாலும், இன்பங்களாலும், அரிதான புறுக்கான் வேதமுறைமைகளைக் கற்பித்து துப்புரவானமனத்தவராக்கி வைத்தார்கள் பின்னர், விடிந்தபோது, அஷறபாவும், முகல்கீலு மெழுந்து உலூச்செய்து, பு

தியஆலத்தையுடைய அல்லாகுத்தஆலாவைத் தொழுதார்கள் அவர்கள் தொழுமுறைமைகளெல்லாத்தையும், சிலாஜீல் வேறு பார்வையின்றிப்பார்த்துக்கொண்டிருந்தார், பின்னரிருவருந்தொழுது தீர்ந்தெழுந்து, தம்பிசிலாஜீலைக் கூட்டிக்கொண்டுவந்து நபிநாயகமவர்கள் அசுஹாபிமார்களுடனே இருக்கிற மஜ்லீசிலேவிட்டார்கள், அப்போது, சிலாஜீல் அழகியவாயைத்திறந்து (லாஇலாக இல்லல்லாகு முகம்மதுர் றசூலுல்லாகி) யென்னுந் திருக்கலிமாவை வாக்குமனமுமொத்தவாகச்சொன்னர், அதுகேட்டு மேகக்குடையில்வரு நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மிகவு மனமகிழ்ந்தார்கள்.

சிலாஜீ லீமான்கொண்டசருக்கம்-முற்றிற்று.

---

# இபுலீசுபுத்துகொணர்ந்த சருக்கம்.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

பாதகன்கொடியன்மாயைப் படர்ச்சியைத்தொடர்ச்சியாக்கி
யேதகன்மனத்தர்பானு மிடைஞ்சலுக்கடுஞ்சூமன்
கோதகன்றவுசுல்கூலைக் குபாடஞ்செய்வதற்கோர்புத்தைப்
போதகன்போலுங்கொண்டு புக்குமம்முறைமைசொல்வாம்,

## இதன்பொருள்.

பாதகனுகவும், கொடியவனுகவும் விளங்கும் இபுலீசுலதுனத்துல்லாதனதுமாயைப் படர்ச்சியைத் தொடர்ச்சியாக்கியாதாமொரு குற்றமுமில்லாத தெளிந்தமனத் தோரிடத்திலும் இடஞ்சற் செய்கிறதற்கு நெருங்கும் பொல்லாதவனுங் குற்றங்குடியிருக்கு மனத்தனுமான இறவுசுல்கூலைக் குபாடஞ்செய்வதற்கோர் புத்துஹானைமகாபோதகன்போலே கொண்டுவரு மந்தவரலாற்றைச் சொல்லுகின்றும்.

## சரித்திரவசனம்.

நபிநாயக மனமகிழ்ச்சியாகச் சண்டையில்லாமலிருந்தார்கள். இருக்கும்போதங்கே பாவி இறவுசுல்கூல்மகாவேகமாகவந்து துயாமெனும் படையிலேடும், சுபைறுறலியல்லாகு அன்கவர்கள் சிறைபிட

த்தி யில்லாமலிருக்குந் துன்பக்கடலின்மேலே பர்ருசெய்ற தம்பி
ரான் போயினதீவினை கவிந்திருக்கின்றதெர்ப்பத்தின்மேல் எறித்தன்
மகன் சிலாஜீல் நபிநாயகமவர்கள் வசமானதறியாமல் வந்தான் இப்ப
டி, இறவுசுல்கூல்வருவதை அவன்மகன் துகாமத்தென்பவ னறிந்து
தானொருகுதிரை மேலேறிக்கொண்டு போய்த்தகப்பனை யெதிர்த்துக்
கொண்டு தாழ்ச்சிசெய்தபோது, இறவுசுல்கூல் தன்மகன் துகாமத்தை
நெஞ்சோடு நெஞ்சணைத்து முத்திமுகந்து அவனோடு, சுபைறுறவி
யல்லாகு அன்குவைச் சிறையிலிருந்தவிடத்திலே காணமற்போன
தும் பாதகமாகப் பர்ருசுதிருடுபோனதும், உஹுத்தனான, பிருறத்
தில் மவுத்துப்படைக்களத்திலே வெட்டுண்டதும், மற்றுஞ்செய்தி
கள் யாவையுஞ் சொன்னான்.

அதுகேட்டுத் துகாமத்துத், தன்துணைவர் சிலாஜீலின் வாலா
றுக ளனைத்தையுந் துக்கமாகச்சொன்னான், அதனாற் பாதகனானஇற
வுசுல்கூல் ஏக்கங்கொண்டு குதிரைமேல் நின்றுபூமியில்விழுந்துநெருப்
பிலகப்பட்ட புழுப்போலே துடிதுடித்தமூர்ச்சையில்லாமற்கிடந்தான்
அப்போதவன்மகன் துகாமத்தென்பவன்தகப்பன் இறவுசுல்கூல்குதி
ரைமேலிருந்துகீழேவிழுந்து கிடக்கிறதன்மையைக் கண்டுமிகவுமழுது
திகைத்தெளிந்து தகப்பனைத்தாங்கி யெடுத்துவீசித்தண்ணீர் குடி
ப்பாட்டித்தெளியச்செய்து முன்னரவனேறிவந்த குதிரையின் மேலே
ற்றிக்கொண்டு வந்தோராசனத்தி லிருக்கவைத்தான். அப்போது,இற
வுசுல்கூல் சுபைறுறவியல்லாகு அன்குவையும், பர்ருசையுங்காணாத
துயரத்தோடும் வரும்வழியிலேமகன் துகாமத்துச்சொன்ன சிலாஜீ
லுடைய செய்தியையுங்கேட்டு மதந்தீர்க்கவரும் யானை படுகுழியிலே
வீழ்ந்துமயங்கிய தன்மையாகி வாட்டங்கொண்டிருந்தான்.

இவனிப்படி யிருக்கச்சே, பூமியை நடுங்கச்செய்யும் வஞ்சனைமா
யையுள்ள, இபுலீசு லகுனத்துல்லா தன்னுடைய சூழ்ச்சசத்தி நட்டியினா
லாகிய, அனேகமக்களி லொருவனைத்தன்கிட்ட அழைத்து அவனைப்
பார்த்து, இந்தப்பூமியிலே இறவுசுல்கூலுடைய மக்களிலேசிலரை
முகம்மது தன்தீனிலேயெடுத்துக்கொண்டாலும், அழகியபர்ருசென்ற
புத்தையெடுத்துக் கொண்டுபோனதாலும் இனி என்னுடைய தீனைப்
பழிப்பாக்கி அந்த முகம்மதுடைய தீனையெங்கும்பரப்புவான் ஆதலா
ல், முன்னர் இறவுசுல்கூலிடத்திலிருந்த புத்தைப்போலே யொருபுத்

தையெந்த விடத்திலுங் கீர்த்தியிலங்கும்படி செய்து அந்த இறவுசுல்
கூல் இராஜனுக்குக் கொடுப்பான், அப்போது நீ அந்தபுத்தின் வயிற்
றுள்ளே யுண்மையாக நுழைந்திருந்து கொண்டு எதுவேனும் தங்கள்
தங்கள் கருத்தின் பிரகாரம் வந்து, அபயஞ்செய்பவர்களுக்கு மனது
பொருந்தும்படிச் செவ்விதான வுத்திரமளித்தாயாகில், யாவரு முன்
னையேத்தி வாழ்த்துவார்கள்; அப்படியில்லாவிடில், அந்த இறவுசுல்கூ
லைச்சேர்ந்த யாவருமுகம்மதுடைய தீனிலாகுவார்கள், அப்போதுநா
ம் தளர்ச்சியடைவோம், ஆகையினால் நீ நான் சொல்வதுபோலேசெய்
யென்று சொன்னான். அதற்கிவன் சந்தோஷமாகி யொத்திருந்தான், பி
ன்னர் பகைவனான இபுலீசு, ஒருபச்சை இரத்தினம்போன்ற கல்லைப்
புத்துஹானாகச்செய்து, அதின் கண்ணிரண்டுஞ் செவந்த மாணிக்கத்
தால் வைத்துச், சுற்றுஞ்சோடு முன்னிருந்து திருடுபோன பர்ரு
சைப்போலவே சகலபணிகளுஞ்செய்து; அதின் சிரசிலே பூரணச்சந்
திரன்போன்ற கிரீடமொன்றும் போட்டுப், பின்னர், ஒளிபொருந்திய
ஆசனத்தில், அந்தப்புத்துஹானைவைத்து, அதற்குச்செய்யு முறை
சகலமுஞ்செய்து பொற்சரிகையிழைத்து, முத்துக்குஞ்சந்தூக்கி, வயி
ரம், பச்சை செகப்புமுதலிய இரத்தினம் பதித்தொளிரும் போர்வை
யணிந்த, ஓர் ஒட்டகையின் முதுகின்பேரில், அந்தப்புத்துஹானைச்
சிங்காசனத்துடனே தூக்கிவைத்துவிட்டுப் பின்னர்,

தன் தலைக்குப்பாகையணிந்து இடுப்பிற்கு இரத்தினம்பதித்தொ
ளிரும் அரைஞாண்பூட்டிக், கையில்வயிரப்பிடியிழைத்த கோலொன்
றும், வாளொன்றும் எடுத்துக்கொண்டு முதுகிற்கூனும், உரோமங்
கள் பஞ்சுபோல் நறைத்தநரைப்பும், வாத்தில்மிகுந்த தன்மையுமா
கிய பெரியோர்கள்போலே கோலங்கொண்டு, அழகிய சீதுநபிவங்கி
ஷத்திலுள்ள ஆலிமான ஓர்ஷெய்கென்று சொல்லிக்கொண்டு செவந்
தநிறத்துடனே நீட்சியுள்ள ஒருவொட்டகத்தின்மேலேறிக்கொண்டு
கொடும்பாவியான இறவுசுல்கூல் படைஞரிருக்குமிடத்தைப் பார்த்
துத் தான் செய்துவைத்த புத்திருக்கும் ஒட்டகத்தினசியினாலைக்
கையிலே பிடித்துக்கொண்டு பாளையத்தை யடுக்கவந்தான். வரும்
போது.

அந்தப்புத்துஹானிருக்கிற ஒட்டகத்தைப்பார்த்து, ஒகே, யொ
ட்டகமே நீயுகங்களெல்லாம் புகழையுடையநாயனைப்பூமியில் யாவரும்
செல்வமாகிடத் தகுதியாகக் கொண்டுவா, தெளிவாகக் கொண்டுவா

வென்றபொருளைத்தருஞ் சிலகவிதைகள் யாவருக்குங் கேட்கும்படி குரலைவிட்டுப் படித்துக்கொண்டு, இங்கே யழுது துன்புற்றிருக்கும், இறவுசுல்கூலிடத்தில்வந்தான். இவ்விதம், பாதகனிபுலீசு சொல்லிக் கொண்டு வருஞ்சொல்லைக்கேட்டு, இறவுசுல்கூல் சந்தோஷமாகிக் கூம்பியிருந்த தனதுமுகமலர்ந்தான், அதுகண்டு, இபுலீசுலகுனத் துல்லா இறவுசுல்கூலைப்பார்த்து, ஒகே, ராஜாவே பூமியில் உமக்கும், உம்மைப்பற்றியிருக்கிற பேர்களுக்குங், குபலென்னுந் தம்பிரான்,பல த்தையும், பேறையும், தகுதியையும், மற்றெந்தமேன்மையையுங் கொ டுப்பாரென்றுசொல்லிப், பின்னர், அங்கிருக்குங் கூட்டத்தாரைப் பார்த்து, ஒகே,அறபிகளில் மேன்மையான அறபிகளே, நீங்கள்மறுக் கங்கொண்டிருக்கிறதன்மை யென்னவென்றுகேட்டான், அப்போது: இறவுசுல்கூல் இபுலீசைப்பார்த்துக் குபலென்னுந் தம்பிரானுடைய பேர் சொல்லியஷைகே நாங்கள் படுகின்றதுன்பத்தை நீர்கேளுமெ ன்று சொல்லத்தொடங்கினான். அஃதென்னெனில்.

முன்னர்தானிருந்த வரலாறும், இரத்தினமழுத்திய பார்ருசின் வரலாறும், அந்தப்பார்ருசுபேசிய வரலாறும், அந்தப்பார்ருசு யாவரை யும் ஆட்சிசெய்தவரலாறும், நபிநாயகத்தின் படைவந்த வரலாறும், தனது மக்கள் தீனில்லிசுலாத்திலான வரலாறும், கெடுதியாகப் பார் ருசுகளவு போனவரலாறும், தன்னூரைமுசுலிமானவர்கள் பிடித்துக் கொண்ட வரலாறும்; தனதுபடைகளிலனேகர் வெட்டுக்குற்றுப்பட்டு இறந்துபோன வரலாறும், பார்ருசைதேடித் தான் வாட்டங்கொண்டு வந்த வரலாறும் ஆகிய எல்லாக்காரியத்தையும் நல்லாகத்துதித்துச் சொன்னான்.

அதுகேட்டுச் சதிமான்யமாகிய இபுலீசுலகுனத்துல்லா. இறவு சுல்கூல் மனம்பொருந்தும்படியாக அவனைப்பார்த்து, ஒகே, இராஜா வே இரத்தினாதிபதித்துவிளங்குந் தம்பிரான் பார்ருசை யொருவருந் திருடார்கள், ஆனால் உன்னுடைய மனத்தைத் தான் திருடினார்கள், இனி நீயதை நினைந்துருகிய பாவம் நீங்கத் தேடிக்கொள்ளென்றுசொ ன்னான், அதுகேட்டு இறவுசுல்கூல் இபுலீசு லகுனத்துல்லாவைப் பார்த்துச் ஷைகே அஃதென்னென்று கேட்டான்.

அப்போது, இபுலீசு இறவுசுல்கூல் முகத்தைப்பார்த்து, ஆகாச த்துநாயன் விருப்பமாக இந்தப்பார்ருசைக் காண்பதற்குப் பூமியில் அவனுடையதூதரையனுப்பி யழைத்துக்கொண்டான். ஆதலால், இன்

னுஞ் சிலநாளைக்குள்ளே யுன்னுடைய கண்குளிர மனம்கிழக் காண்பாயென்று சொல்லிப் பின்னும், ஒகே, இராஜனே யுன்னைப்பார்மூசு மறக்கமாட்டார், உன்னினத்தார் அயர்த்தி யடையாமற்படிக்கு இன்பமாகவைத்து வணங்க அவரைப்போலே ஒருவரை யென்னிடத்திலேதந்து சில செய்தியுஞ்சொன்னார். அஃதாவது, இந்தத்தேவு உங்களோடு மிருந்த சத்தமுண்டாகப் பேசுவதுமன்றி யுங்களுக்கு நேரிடுகிற துன்பங்களையும் நீக்குவாரென்றும், தருமத்தையும், பலத்தையும் வேண்டிப் பேப்பிராக்கில்லாமல் நல்ல திறமுள்ள இந்தத்தம்பிரானைச் சிந்தனைசெய்த பேர்கள் வாழ்வாரென்றும், அப்படிச் சிந்திக்காதவர்கள்நல்லநிறமும், ஒளியுங்குன்றி நிந்தனையிலாவாரென்றும், மருண்ட மனத்தையுடைய காபிரீன்களெல்லா மொப்புக்கொள்ளும்படியாகச் சொன்னான்.

இவ்விதஞ், சத்துருக்கள் மனங்கொள்ளும்படியாகப் பொய்களைப்போதித்த இபுலீசுலகுனத்துல்லா, தன்னுடைய புத்துஹானை ஏற்றிக்கொண்டு வந்த வொட்டகத்தை முழங்காலூன்றிப் படுக்கச் செய்து, அதின்மேலே வட்டமாக மாணிக்கத்தினாலே பிறை வைத்திலங்குகின்ற பீடத்தைத் திறந்து அதனுள்ளிருக்கிற பச்சை மரகதக் கல்லிற் செய்த புத்துஹானை யெடுத்துவைத்தபோது அங்கிருக்குங் காபிரீன்கள் அந்தப் புத்தினுடைய மரகதத்தினுடலைக் கண்டார்கள், சிவந்த மாணிக்கத்தாலே புத்துக்கு வைத்திருக்குங் கண்ணைக்கண்டார்கள், ஒன்பது இரத்தினதிகளாலே புத்துக்கிட்டிருக்குங் கிரீடத்தைக் கண்டார்கள். புத்தினொளியாகிய முகத்தைக்கண்டார்கள். பேசுகின்ற புத்துஹானுடைய வாயைக்கண்டார்கள், புத்துஹானுடைய பிரகாசமான மூக்கைக்கண்டார்கள் புத்துஹானுடைய கை கால்களையும், அவையில் வயிரத்தால் நகங்கள் பதித்து நீண்டிருக்கும் விரல்களையுங் கண்டார்கள், இவ்விதம், புத்துஹானுடைய ரூபத்தைக் கண்ட பாவிகளாகிய காபிரீன்களெல்லா மகிழ்ச்சியாயிருக்கும்போது;

முன்னர், இபுலீசுலகுனத்துல்லா அப்புத்தின் வயிற்றிலிருக்கச் சொன்ன மகனாகிய குட்டிசைத்தான், புத்துஹானுடைய வாயில் நுழைந்து வயிற்றிலே போயிருந்தான், அதுகண்டு, இபுலீசு அந்தப் புத்தைப்போற்றிப் புகழ்ந்து, அதின் பாதத்தடியில் விழுந்து தெண்டனிட்டெழுந்து அப்புத்துஹானைப்பார்த்து, அரிதான மெய்ப்பொருளே, யாவையுமமைக்கவும், அழிக்கவும்வல்லாய், உனக்குரித்தாகிய

அடியாருக்கெல்லாம் நல்லுத்தாரஞ்சொல்லி யவர்களுடைய சத்துருக்களானவரின் தலையிடறச்செய்து வெற்றியைக்கொடுவென்று விபரம் விபரமாகச் சொன்னான், இவ்விதம், பாதகனான இபுலீசு சொல்லக்கேட்ட புத்துஹானுக்குள்ளிருக்குங் குட்டிசைத்தான் புத்துஹானுடைய தலையைச்சுறுக்கில் நீட்டிவளைத்து அகங்கரித்துச் சத்தமிட்டுக் கண்களில் நெருப்புப் பறக்கும்படியாய்க் கண்ணைத்திறுதிறென்று விழித்துப்பார்த்து, வாயிலே புகைவரும்படிசெய்து நான்கு பக்கத்திலிருக்குங் காபிரீன்களுக்குங் கேட்கும்படியாய், ஒகே, என்னுடைய அடியார்களான கூட்டங்களே உங்களுக்கு நாயன் நானேயல்லாமல் இந்தப்பூமியிலே வேறுநாயனில்லை, யாகையால் நானுங்களுக்கு எல்லாக்காரியங்களையுஞ் சந்தோஷங்கொண்டு முடித்து வைப்பேன் உண்டாக்குவேன், உண்டாக்கியவைகளை யுடனே யழித்துப் போடுவேன், மறுபடியுந் தரந்தரமாக அவையவைகளை முன்போலே செய்வேன், இவைகளை நீங்கள் நன்றாயறிந்து கொள்ளுங்களென்று சொல்லிற்று.

அதுகேட்டு, அங்கிருக்கும் பெருமூடராகிய காபிரீன்களெல்லோரும் சந்தோஷமாகி நாமினிவெற்றியும், வீறும்பெற்றுக்கொண்டோமென்றொன்றுபோலெழுந்து அந்தப்புதிய விக்கிரகத்தைப் புகழ்ந்துபோற்றி யதற்குத் தனித்துத் தனித்தவரவரே பூமியிலே சிரசைவைத்துச், சுஜூதிட்டுப் பாவிப்பயல்கள் கிடந்தார்கள். அப்போது புத்துஹான் வாயைத்திறந்து உள்ளிருக்கும் குட்டிசைத்தான் பலவிதங்களான கவிதைபாடிற்று, அக்கவிதைகளின் பொருளாவது அந்தக்காபிரீன்களைப் பார்த்து, உங்களுடைய சத்துருக்கள் பூமியிலே பரவிய மணலைப்போலே குவிந்து வந்தாலும், என்னிடத்திலுள்ள நோவாகிய ஆயுதங்களில் நின்றும், ஓர்சிறிய நோவாகிய அம்பினாலே யெய்து கொல்லுவேன் அதற்காக நானுமுங்களோடு படைக்குவருகிறேன், என் கூட்டங்களே நீங்கள் பயப்படாதீர்கள், உங்களுக்குச் சந்தோஷமுஞ், சமாளிப்பு முண்டாக்குவேனென்று சொன்னது; இச்சொல்லானது இரும்பைப்போலும் காபிரீன்கள் நெஞ்சங் காந்தத்தைப்போலும் பற்றிக்கொண்டதால் அந்தப்பாவிகளெல்லா மிகுந்த சந்தோஷமாகி, மறுபடியும் அப்புத்திற்குத் தெண்டனிட் டெழுந்து ஆடு, மாடு, ஒட்டகை யனேகமறுத்துப் பலிகொடுத்து நைவேத்தியங்களுஞ் செய்தார்கள்.

பின்னர் பலிகொடுத்தஉயிர்ப்பிராணிகளின் மாமிசமாகிய இறைச்சிகளைச்சமைத்து இராஜன் இறவுசுல்கூல் முதலிலுண்ணவந்தபோது

இந்தக்கூத்துகளெல்லாம், விளைத்துவைத்த பாவி இபுலீசையுங்கூட விருந்துண்ணக் கூப்பிட்டான், அப்போது, இபுலீசு கூடவந்திருந் துங் கடுகளவும் இறைச்சி முதலாகிய பதார்த்தங்களை யுண்ணுமலுந் தின்னுமலுமிருந்தான், அதுகண்டு இரவுசுல்கூல் இபுலீசைப் பார்த்து, ஒகே, ஷெய்கே நீர்கொஞ்சமும் புசிக்காதிருக்கின்ற காரண மென்னென்று கேட்டான், அதற்கிபுலீசு மிகுந்தவஞ்சனை குபாடத்தையுடைய, அந்தமுகம்மதையும் அவர்மருமகன அலியையுங்கொன் றேயல்லாமல் நான் அன்னந்தண்ணீருண்ணமாட்டேனென்று பர்ரு சைக்கொண்டுஞ் சத்தியஞ்செய்து இறவுசுல்கூலைப்பார்த்து, நீர் அதற்காகமனவருத்தமில்லாம லுண்ணுமென்றுசொன்னன். அதுகேட்டவன் சந்தோஷமாகப் புசித்திருந்தான், அப்போது சுவர்க்கலோகத்தை இழந்த பொல்லாப்பாதகனுகிய இபுலீசுலகுனத்துல்லா, இறவுசுல்கூலைப்பார்த்து நான்முதலிலே சத்துருக்கள் படைமேலே போகிறேன், நீங்களெல்லாம் ஆயுதங்கள் யாவுமணிந்துக்கொண்டு பின்னுலே வாருங்களென்றுசொல்லி, யேமாற்றிப்போட்டு அவனுடைய மாய்கையினுலே மறைந்துபோயினுன்.

இபுலீசு புத்துகொணர்ந்த சருக்கம்-முற்றிற்று.

---

# புத்துபடைக்குப்போன சருக்கம்.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

கெடுதிமனத்தினிபுலீசு கிழவர்தமைப்போற் கோலங்செண்டு
சுடர்செய்பசியகல்லதனுற் றேற்றமுருவச்சிலைபுதிதாய்
அடவிற்சமைத்துக்காபிர்களி னரசன்றவுசுல்கூற்களித்த
படுவுத்ததுபோர்க் கெழுந்தமுறை பலர்க்குந்தெரியப்பகர்திடுவாம்.

## இதன்பொருள்.

கெட்டமனத்தையுடைய இபுலீசுலகுனத்துல்லா மிகுந்தவயதையுடைய கிழவர்போலே கோலங்கொண்டு பிரகாசமுள்ளவார்பச்சை யாகதக்கல்லினுலே, தலை, முகம், கண், காது, மூக்கு, வாமுதலாகிய அவயவாதிகள் தோற்றும்படியாய் புதிதாகப்புத்துஹாமென்று மகா அடவாகச்செய்துகொண்டுவந்து, காபிரீன்களுடைய இராஜுன இற

வுசல்கூலுக்குக்கொடுத்த, அந்தப் புத்துஹான் படைக்கெழுந்த முறையை யாவருக்குந்தெரியும்படியாகச் சொல்லுகின்றோம்.

## சரித்திர வசனம்.

எல்லா வல்லமையுமுள்ள அல்லாகுத்தஆலாவின் முனிவுபெற்ற இபுலீசு லகுனத்துல்லா போனதின்பிறகு இறவுசுல்கூல்சொல்லிலே நயத்தையும் கல்விச்சற்குணத்தையும் கொடையையும், கற்பையும், கல்லனீராக்குகின்ற இராகமான நல்ல வசனத்தையுடைய தன் பெண்சாதி ஜாமி அத்தென்னும் நாயகியிருக்குமண்டபத்திற் கெழுந்துபோய்த் தன் பெண்ஜாதியையழைத் தருகிலிருத்தி இன்பமாகப்பார்த்துக், கூனக்கிழவனான இபுலீசு லகுனத்துல்லா புதியபுத்துஹான் கொண்டு வந்துகொடுத்ததும், அப்புத்துஹான் வாய்திறந்து பேசினபேச்சுகளும், அதற்காக இவனும் இவனைச்சேர்ந்தோருஞ்செய்த சங்கையையும் ஆகிய யாவையுஞ்சொன்னான். அதுகேட்டு, அந்தக்கற்புநாயகி (பேதமையென்பது மாதர்க்கணிகலமென்னும்) நீதிவாக்கியத்தைப் போலே, தானெப்படியிருந்தாலும் புருஷனுக்கு அயிக்கியப்பட்டவளாதலால், அவன் மனதுக்கு வருத்தம்வாராமல் நமது பாருசென்னுந் தம்பிரானுடைய சொல்லுக்குயாதேனும் பழுதுவாராதென்றுசொன்னாள்.

அதுகேட்டு, இறவுசுல்கூலுடனே குதிரையின்மேலேறிப் புதிய புத்துஹானிருக்குமிடத்திற்கு வந்து, படைஞர்கள் யாவரையும் படைஉஸ்தியச்செய்து, பேரிகை முழக்கத்துடனே இபுலீசேற்றிக்கொண்டுவந்த ஒட்டகைமேலே சந்திரனொளிபோன்ற வட்டம் பதித்த ஆசனத்திலே புத்துஹானையிருக்கவைத்து, அவ்வொட்டகத்தைத்தனக்கிஷ்டமான கத்தாபென்பவனிடத்திலே கொண்டுவரும்படி யுத்திரவுசெய்து சத்தசாகரம்போலே சத்தமெழும்ப, மெத்த மகிழ்வாய்ப் புறப்பட்டான், அப்போது ஒட்டகத்தைக் கூட்டிக்கொண்டு வருகிற கத்தாபென்னும் பாதகன் சிறப்பாகியதேவு இஃதாமென்றும், இனை நினைத்துத் தொழுபவர்க் குதவிசெய்யுமென்றும் அழுக்காகிய மனத்தையுடையவரெல்லாம் அவஸ்தையுற் றழிவாமென்றும், மிகப் புதிய புத்தைப்போற்றிப் புகழ்ந்து சத்தமிட்டுப் பல இராகங்களாகக்கவிதையும் பாடிக்கொண்டுபோயினான்.

அப்போது, இழிஞராகிய மற்றப்படைக்காபிரீன்கள் பிடித்துப் போகும், கொடிகள்கொடிகளினெருக்கஞ் சூரியனைமறைத்து இருளைக்

காட்டவும், அவர்களின், ஆயுதத்துடைய நெருக்கினுலொன்றுக் கொன்றுராஞ்சி மின்னெளியைக்காட்டவும், அவர்களுடைய கோபம் பொங்கித் கண்வழியாக நெருப்பைக்காட்டவும், தலைவர்களேறிப்போகும் தேர்கள், பல்லக்குகள் வழிகளைத் தெருக்களைச் சிறிதாகக்காட்டவும் அகங்கரித்தவர்களாக வந்தார்கள். இவ்விதஞ் சத்துருக்கள் வரக்கண்ட, தீனுனவர்கள் காற்றைப்போலே யெதிரேறிச் சில சத்துருக்களை மாய்த்துவிட்டு நபிநாயகமவர்களுக்குத் தெரிவித்தார்கள். அந்நேரஞ் சூரியனுமறைந்தான், அவ்விராவுகாலத்திலே சண்டைக்களத்திற் பேய்கள் கூடிக்கூற்றுடிச் சந்தோஷங்கொண்டாடி நிற்கச் சத்துருக்கள் கண்விழித்திருக்கத், தீனுனவர்கள் அல்லாகுத்தஆலாவை வணங்கிக்கொண்டு மனமகிழ்ந்திருந்தார்கள், இவ்விதஞ் சத்துருக்களும், பூமியெங்கும் கீர்த்திபொருந்திய நபிநாயகமவர்களும், அவர்களின் சேனையு மூன்றுவது கோட்டைக்குள்ளே யிருந்தார்கள் இதுநிற்க,

முன்னர் புலேவிபுனு அப்பாசுறவியல்லாகு அன்கவர்களுடனே பாதையிலே போகும்போது சமான்கொண்டிசுலாத்திலாகிய மந்திரியானவர், வேவுசொல்லுகின்ற முபாறக்கென்பவனை யழைத்தும், தமது பக்கத்தி லிருக்கவைத்து, அவனைப்பார்த்து, அல்லாகுத்தஆலாவின் றுதாங்கர் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களல்லாமல், மற்றெருருவரினுலோர் காரியமும் பலனுமில்லை யாதலாலே நானுமவர்கள் தீனில் லிசுலாமார்க்கத்தி லாகியிருக்கிறேன், அதுபோலே நீயும் இந்தப்புத்துகளெல்லாம் பேயாட்டமேயல்லாது நின்னயமுள்ள தல்லையென் றுறுதியாக அந்த நபிநாயகத்தின் மார்க்கத்திலாகிக் கொள்ளென்று மிகவும் அறிவுகளைப் போதித்துகாட்டிப் பின்னர், மிதுக்காலென்னுந் தங்கக்காசி ஆயிரமும் அதுபோலுள்ளவெள்ளிக்காசிஐந்நூறு மெடுத் தொருபையிலே போட்டுக்கட்டி, அந்த முபாறக்குடைய கையிலேகொடுத்துப் பின்னர்;

அவனைப்பார்த்து ஓகே, முபாறக்கே நீ இவ்விரவிற்றுனே இந்தக் காணிக்கைப்பொன் வெள்ளிகளை நபிநாயகமவர்களிடத்திற் கொண்டு போய்க்கொடுத்து, என்னுடைய சலாம் அவர்களுக்கு மற்றுமுடற்பிறந்தான் மார்களாகிய அசுஹாபிமார்களுக்குஞ் சொல்லிப்பின்னுலே நபிநாயகமவர்க ளிடத்திலே இங்கே சேனைகள் யிருந்திருக்கிறதென்றும், அந்தச் சேனைவீரர்கள் புத்துஹானுடைய சொல்லினுலே

மதர்ப்புக் கொண்டிருக்கிறார்களென்றும் அந்தப்புத்துஹான் வந்த விதங்களனைத்தையும் சொல்லி, இவைகளையெல்லாம்நான் சொன்னதாகச்சொல்லென்று முபாறக்குக்கு ஏறிப்போக-ஓர் ஒட்டகமுங்கொடுத்தனுப்பினார், உடனேயந்த முபாறக்கு மந்திரியைப்புகழ்ந்து ஒட்டகைமேலேறிக்கொண்டு போயினான் அதுகண்டு மந்திரி மனமகிழ்ந்தார்.

அப்போதந்த முபாறக்குச் சீக்கிரத்திலேசென்று நபிநாயகத்தின் படைக் கூடாரங்களையடுத்தபோது, அங்கிருக்குங் காவற்காரர்கள் தடைசெய்தார்கள் அதற்கு முபாறக்குத்தான்வந்த வுண்மையைச்சொன்னபோது அவ்வசுஹாபிமார்கள் முபாறக்கை கூட்டிக்கொண்டுபோய் நபிநாயகத்தின் முன்னில்விட்டார்கள். அப்போது முபாறக்கு மூன்றுலோகத்திற்கும் வேதவிளக்காயும், அறிவுநீரைச்சொரியுமேகமாயும், கணக்கில்லாதகாரணம் விளைக்கும் நபிநாயகமாயும், கிருபைவீடாயும், கல்விநிறைந்த மனக்கடலினிடத்திலே பொறுமை நிறைந்த பூவாயும், விளங்கிச் சொர்க்கத்திலே ஆசியாமறியமென்னுமிரண்டு கற்பு நாயகிகளைவெள்ளை யானையின்மேலே பவனியுல்லாசம்வந்து திருக்கலியாணமுடிக்குகின்ற வள்ளலாகியும், விளங்குமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைக்கண்டு, உடனே யொட்டகத்தைவிட்டுக் கீழிறங்கி அவர்கள் பாதாம்புயத்திலே பணிந்துவீழ்ந்து, அப்பாதமென்ற தாமரைப்பூவிலிருக்கும் அழகென்றதேனைத் தன்னுடையகண்கள் வண்டு போலுண்டெழுந்து, மரியாதையன்புடனே சலாஞ்சொல்லிக் கை கட்டி வாய்பொற்றியோர் விரற்றொலை விலகிநின்றுகொண்டு மந்திரியவர்கள் சொல்லியசலாத்தையும் மற்றுஞ்செய்திகளனைத்தையுஞ்சொல்லிக் காணிக்கைப்பொருளையும் கைநீட்டிமுன்னிலே வைத்தான்.

அதுகேட்டுநபிநாயகமவர்கள் மனமகிழ்ந்து முபாறக்கைக்கிட்ட அழைத்து அவ்விரவிலேயே மந்திரிக்குச் சொல்லவேண்டிய சொற்களைச் சொல்லியனுப்பிவிட்டு அம்மந்திரியனுப்பிய பொருள்களை அசுஹாபிமார்களுக்கு முறைபோலே பங்கிட்டுக்கொடுத்தார்கள். அவர்களும் அப்பொருளைப்பெற்றுமனமகிழ்ந்திருந்தார்கள் பின்னர் நபிநாயகமவர்கள் அந்த இராவையிலே அம்றிபுனுமக்குதீக்கரிபவர்களை யழைத்து நீர்பதினாயிரங்குதிரைவீரியருடனே போய் எதிரிலிருக்குமலையில் வலது பக்கத்தினுள்ளே யொளித்திருமென்று பிரீசமாகச்சொன்னார்கள். அதுகேட்டவர்கள் மகிழ்ச்சியாகினார்கள் பின்னர் நபிநாயகம் காலி

துறலியல்லாகு அன்குவையழைத்து அவர்களைப்பார்த்து நீர் பதினு யிரங்குதிரை வீரியருடனேபோய் அந்தமலையி னிடதுபக்கத்திலே யொளித்திருமென்றார்கள். அதுகேட்டவர்கள் மகிழ்ச்சியானார்கள் பிறகு நாலுவேதங்களும் புகழுகின்ற நபிநாயகமவர்கள் தங்கள் மருமகனாகிய அலிறலியல்லாகு அன்குவையழைத்து நீர்பதினுயிரங் குதிரைப்பதாதிகளுடனேபோய்ச், சொல்லுகின்ற மலையினடுவிலே யிருமென்றார்கள். அதுகேட்டவர்கள் மகிழ்ச்சியாகினார்கள்.

பின்னர், அம்மூன்று தலைவர்களு முப்பதினுயிரங் குதிரைப் பதாதிகளுடனே யெழுந்தருளியாகி வாள்-வேல்-அம்பு-வில்-வளை தடி-சக்காம்-மழுவாயுத முதலிய மற்ற ஆயுதங்களிலங்க நடந்து, அந்த மலையிலேபோய் மூன்று வகுப்பாக நபிநாயகஞ் சொன்னது போலிருக்கும்போது சூரியனு முதயமாகினன், அதுகண்டு நன்மையுள்ள நபிநாயகமவர்களும் அசுஹாபிமார்களான படைஞரும் அல்லாகுத்தஆலாவைத் தொழுதெழுந்து குதிரைகள்மேலே சவாராகிப் படைக்களம்போய் நின்றார்கள். அப்போது குற்றம்பெருத்தசத்துருக்களும் குதிரைமேலே சவாராகினார்கள், அதிலே இபுலீசுல குனத்துல்லா கொண்டுவந்து கொடுத்த புத்துஹான் வைத்திருக்கும் ஒட்டகையைப் பிடித்துவருகின்ற பாதகன் படைகளுக்கு முன்னலே அவ்வொட்டகத்தை நடாத்திக்கொண்டு மூர்க்கத்துடனே சப்தித்துத், தங்களினத்தார்களைப் பார்த்து, நமது குடிகளுக்குரிய நாயனார் சண்டைசெய்ய இங்கேவந்தால் நீங்கள் யாவரும் துணிவு காத்துடனே தீனவர்கள் படைக்குள்ளே பயமில்லாமற் புகுந்து சண்டைசெய்யுங்களென்ற சொல்லுடனே வந்தான்.

அதுகேட்டுக், காபிரீன்கள் சந்தோஷமாகிக் கடலைப்போலிரைந்து திரண்டுகூடி, நமதிடத்திலே இரத்தின ஜொலிப்புமாறுத தேவர் வெற்றிகிடைக்கச் செய்வாராதலால் நாம் சண்டையிலே துணிவுகாமாக நிற்கவேண்டுமென்று யாவருக்குஞ் சொல்லிக்கொண்டு மதிப்பிலடங்காத நடனத்தையுடைய குதிரைகள்-கடலைச் சுழிக்கச்செய்யும் பிசற் காற்றைப்போலே தாழ்ச்சியில்லாத விசையாகப் பூமி யெவ்விடத்திலுஞ் சூழ்ந்து நிற்க, அக்குதிரைப்பதாதிகளுக்கு முன்னே நிற்கின்ற புத்துவைத்த ஒட்டகையுடனே இறவுசுல்கூல் நிற்க மற்றச்சத்துருக்கள் சந்தோஷங்கொண்டு பேரிகை கவுரி சின்னங்காளங் துந்துமி டங்கா டக்கா எக்காளமுதலிய மேளவாத்திய முழங்கிக்கொண்டு முசிலிம்களுடனே வந்து சண்டை செய்தார்கள்.

அப்போது அசுஹாபிமார்களும் இந்தப்பூமி முடியுங் காலத்தி லடிக்கும் சூறுவளிக் காற்றைப்போலே குதிரைகளைவிட்டு எதிர்த் துச் சண்டைசெய்தார்கள் இவ்விதத்தி லிருதிறத்தாரு மொருவருக் கொருவர் பயப்பாடின்றிச் சுத்தவீரர்கள் விடுகின்ற அம்பினங்கள் நெஞ்சுகளைக் குற்றியுருவி முதுகுப்புறத்திலே புறப்பட்டுப்போய் இன்னுந் தொலையில் நிற்கிறவீரியர் மார்பிலும் பாயும் இன்னஞ் சிலசுத்த வீரியரேறிய குதிரைகள் பந்தைப்போலெழுந்து குதித்து இலக்காக மிதித்துத் திரிவதாற் பூமியில் நின்றும் புழுதியுடனே தூசெழுந்து ஆகாயத்திலே குளிர்ந்த மேகத்தைப்போலே பாராவின திலே சுத்தவீரியர் வீசி வெட்டுகின்ற வாட்கள்பட் டாவர்களு டையநெஞ்சிலே புகுந்தொளித்துக்கொள்ள. இந்தப்பூமிக்கு இந்த ஆறு வேண்டுமென்பதைப்போலே யெங்கு மிரத்தப்பொழிய வெட் டினார்கள்.

இப்படிச் சண்டை நடக்கும்போது, அல்லாவுடைய திருத்தூ தாங்கர் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள், தங்கள்கிட்ட நின்றவோர் அசுஹாபியைப்பார்த்து நீர் சீக்கிரம்போய் நமதுபடை ஞரைச் சத்துருக்களுக்கஞ்சிப் பின்னடைபவர்போலே பின்னடை யச் சொல்லுமென்று சொன்னார்கள், அதுபோலே அவ்வசுஹாபி போய்ப் படைக் கூட்டத்திற்சென்று அங்குள்ளவர்க்குஞ் சொல்லி னர். அதுகேட்டுப் படைவெட்டிய வீரரெல்லா மொன்றுபோலே பின்னடைந்தார்கள். அதுகண்டு சத்துருக்கள் நமக்கிந்த வெற்றி நமது தேவதையாகிய சின்னப்பர்ருசுதான் தந்தாரென்று துணித் தடர்ந்து ஒரே மூச்சிலே வந்து விழுந்து ஐம்பது தீனவரை வெட் டிப்போட்டுப் படையை நெருக்கிக்கொண்டு வந்தார்கள்.

அப்போது முன்னர் நபிநாயகத்தின் சொற்படிக்கு மலையிலே போய்ப் பதிங்கியிருக்கு மூன்று அமீறுகளும் முப்பதினாயிரம் அசு ஹாபிமார்களும் கடலானது மலையென்ற மடையை யுடைத்துக்கொ ண்டு வருவதுபோலே வந்துவிழுந்து ஆக்கிரமத்துடனே மூன்று பக்க மாக முப்பதினாயிரஞ் சூரரும் தாங்களேறிய குதிரைகளோடும் பாயு கின்ற புலிகள்போலும், அலிறலியல்லாகு அன்கவர்களும், அம்றி புனு மஃதீக்கரீபவர்களும் காலிதுறலியல்லாகு அன்குமாகிய, இம் மூன்று பேர்களுஞ் சிங்கங்கள்போலுங் குதிரையைத் தட்டிவிட்டு அடர்ந்தேறினார்கள். அஃதெவ்விதமிருந்ததென்றால், அருளில்லாத

காரீபின்கள் யாவரு மடிந்துபோகும்படியாய் மலையென்னுமிராஜன் தன்னிடத்தி லடையாகக்கிடந்த மூன்று சிங்கங்களையும் புலிக்கூட்டங்களையும் அனுப்பிய தன்மையாய் முப்பதினாயிரம் வீரரும் மூன்றமீர்களும் மூன்று திசையிலும் நெருங்க அப்போது மேகக்குடையையுடைய நபிநாயகமவர்களு மவர்களுடனிருந்த அசுஹாபிமார்களும் ஒருதிசையில் நெருங்கிச் சத்துருக்களென்ற ஆட்டுக்கிடைக்கூட்டத்தை வளைந்துகொண்டு கூரியவாளினால் வெட்டினார்கள்.

அப்போது சத்துருக்களும், மலையின்யானைகள் அம்மலையிலிருந்து பள்ளமாகிய குழியில் வீழ்ந்ததுபோலும், பெருநெருப்பி னடுவிலாகிய பஞ்சிப்பேரர்கள்போலும், குரங்கு முள்ளுச்செடிகளை யுருவினது போலுமாகிப் பயமொரு பக்கமாயிருந்துந் திடத்துடனே நெருங்கிச்சண்டை செய்தார்கள். ஆனால் சத்துருக்கள் பயந்திருந்து துணிந்து சண்டைசெய்தது எதினாலெனிற், குட்டிசைத்தான் வாயிற்புகும்படி செய்து பொட்டை இபுலீசு கொண்டுவந்து கொடுத்த புத்துடைய தைரியங்கொண்டு தான் இவ்விதத்திலிரண்டு படைகளும், வில்லாலும், வேலாலும், கைகளாற் செய்யுமல்லாலும் வாளாலும், கவண்கற்களாலும், கசைகளாலும் சொல்லுதற்கரிதான சப்தவார்த்தையுடனே சண்டைசெய்யும்போது சத்துருக்களி லனேகருக்குத் தலையறுந்தும், உடலறுந்தும், கையறுந்தும், காலறுந்தும் நெஞ்சறுந்தும் விலாத்துறந்தும் அவர்கள் எண்ணிவந்த தரபறுந்தும் காற்றைப்போன்ற நடையையுடைய அனேகங் குதிரைகளறுந்தும் வெவ்விய கோபாக்கினிகண்களிற் றெறிக்கும் வீரர்கள் கைகளிற்பிடித்த கொடிகளறுந்தும், அவர்கள் பிடித்திருந்த குடைகளறுந்தும், அவர்களணிந்திருந்த ஆபரணாதிகளறுந்தும் தட்டழிவாகினதுடனே அலிறலியல்லாகு அன்கும் அறம்மிபுனுதையானவர்களுங் காலிதுறலியல்லாகு அன்கும் அம்றிபுனு மகுதீக்கரீபவர்களும், இரட்டைக் கடிவாளமிட்ட குதிரை வீரர்களான அசுஹாபிமார்களும் கடலைப்போல் வளைந்து இவ்விதங் கொல்லுவதாலே சத்துருக்கள் முறிந்தோடினார்கள்.

ஓடும்போது அல்லாகுத்தஆலாவின் சொல்லைமறுத்துச் சுவனலோகத்தை யிழந்து, லஃனத்தென்ற பெயரைப்பெற்ற இபுலீசு கொண்டுவந்து கொடுத்த புத்தையுமெடுத்துக்கொண்டு அப்புத்தைப்பார்

த்துச் சிலர் ஆபுத்தே! உனது எத்தேயெத்தென்று சொன்னவர்களாக வோடினூர்கள், அப்போது சண்டைக்களத்திலே மான்பார்வை போன்ற கண் பார்வையுடைய பெண்கள் மணலிலே புரண்டுருண்ட லறியழுக, வீராதிவீரரின் மணமாலைகள் சிதறித்தெறித்து, அங்கே யழுகின்ற பெண்களின்றலைப்பேன்போலச் சுருண்டுசுருண்டு செத்த பிணங்கள் நாய்நரி தின்னும்படியாகக் கிடந்தன. இவ்விதங் கருமை யாயிருண்ட மனக்காபிரீன்கள் செத்துருண்டு போனதைக்கண்டு பாதகன் இறவுசுல்கூலும் அங்கேவந்து மாரடித்தழுகின்ற பெண்களும் படைக்கஞ்சித் தோற்றோடிய வீரரும், ஓட்டமாகவோடிப்போய் நான்காவது கோட்டையிலே புகுந்து மிகவுமயர்த்தியுடனே யிருந்தார்கள்.

பின்னர், முசிலிம்கள் யாவரும் சத்துருக்கள் வெட்டுண்டப் படைக்களம்புகுந்து, அங்குள்ள ஆயுதங்கள் முதலாகிய சமஸ்தங்களையுங் கொள்ளையாடிக்கொண்டு, இதுபோலொருபோதுஞ் சத்துருக்களைவெட்டி ஜெயம்பெறவில்லை யென்று சந்தோஷத்தோடும் போய் நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்திலே கொள்ளை யுடைமைகளை வைத்தார்கள், அதுகண்டு நபிநாயகம் அல்லாகுத்தஆலாவைப் புகழ்ந்து அசுஹாபிமார்களுடனே மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

புத்துப் படைப்போன சருக்கம்

முற்றிற்று.

---

## சல்காபுறப்படு சருக்கம்.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

சேற்றினி லமைந் தெழுந்தார் திருமணிபோலுங் கெட்ட
வாற்றிலார் றவுசுல்கூலின் மகள்சல்கா தந்தைசெய்கை
யேற்றிடா தில்லநீங்கி யெழில்பிற ருலைக் காண
மாற்றரு முறுதியோடும் வரும்வா லாறுசொல்வாம்.

### இதன் பொருள்.

சேற்றிலே யுண்டாகியெழுந்து பொருந்தியதிவ்விய இரத்னமணி போலே,கெடுதியான வழியிற்பொருந்திய இறவுசுல்கூலின்மகளாகிய

ஸல்ஹாவென்பவள், தன்தகப்பன்செய்யுஞ் செயல்களைத் தன்னுடைய நெஞ்சத்திற் கொத்துக்கொள்ளாமற், ருனிருக்கும் அரண்மனையைவிட்டு நீங்கி அழகிய றசூல்நாயகத்தைக்காண, இடையிலொருவரால் மாற்றக்கூடாத வுறுதியோடும்வருகின்ற வரலாற்றைச்சொல்லுகின்றும்.

## சரித்திர வசனம்.

இப்படியாக ஒப்பற்ற அல்லாகுத் தஆலாவின் றிருத்தூதராகிய நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நல்லசெய்கை நலத்தையுடைய அசுஹாபிமார்களுடனே சந்தோஷமாக நாவிலே வல்லமை பொருந்திய புலவர்மார்களும் புகழும்படியாக இருக்கப் பாதகனுகிய இறவுசுல்கூல் தன்மகன் துஹாமத்தென்பவனைத் திறமில்லாது தோற்றேடிய தன்சேனைகளைத் திரட்டிப் படைநடாத்தச் சொல்லிவிட்டுக் காற்றைக்காணவிசையாய் நடக்குமேயர் குதிரைமேலேறிக்கொண்டு தன் மனைவியிருக்கின்ற வஜூவது கோட்டைக்குப் போய் வீட்டிற்புகுந்து அங்கிருக்குந் தன்பெண்ஜாதியைப் பார்த்து இங்கே படைக்களத்தில் நடந்த சமாசாரங்கள் யாவையுஞ்சொல்லி யழுதான் அதுகண்டு அந்தக்கற்பு நாயகியும் கண்களிலே தாளந் தாளமாக நீரோடும்படி இசுலாத்திலாகிய தன்மக்களை நினைந்தழுதாள்.

இவ்விதம் இறவுசுல்கூலும் அவன்பெண்ஜாதி ஜாமிஅத்தும் பெண்யானையும், ஆண்யானையும் படுகுழிப்பள்ளத்திலேகிடந்து தயங்குவதுபோலேதயங்கும்போது அவ்விடத்திலே இவர்களிரண்டுபேரும் வாத்தினுலே பெறுகின்ற சித்திரம்போன்ற பத்மினியாகிய சல்ஹாவென்னுங் கன்னிகையானவள் சொல்ல அரிதாகிய அழகுடனே வந்தாள். அவளுடைய அழகும் திறமும் குணமும் புலவரவர்கள் இந்தச் சரித்திரத்தைப் புராணமாகப் பாடியபாடல்களா லறிந்துகொள்க.

### அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

வெளிக்கரசாம் விதுவமுதும் வெய்யோன்கதிருஞ் சரிகலந்தே
தெள்ளிதெளித்துவடித்ததனுற் றெரிவையுருச் செய்தியற்றியதோ
புள்ளிப் படமோ பணிமணியோ பொன்னே நவரத்தினவறலை
யள்ளிப்படைத்த வடிவினளோ யவர்கடிருமுன்னணிகினனே. (1)

எண்ணுயிரங்கொம்பிடபமதோ ரெயிற்றுலெடுத்தவிரும்புவியிற்
பெண்ணுக்கிடவே கடிபேசிப் பெலத்தோடுறுதொண்ணூறரசர்
மண்ணுடிடவேபரிவிடுத்துத் தோற்பித்தவர்கண்மணமறுத்தாள்
விண்ணுடவர்வந் துதவிசெய்ய வேல்வாள் நாமம் சல்காவே (2)

இதுவுமது-இராகம்-வேறு.

காரியமைக்கடலினந்தற்றேய்ந்துகடுவிளைக்கலவையென்றணிந்த
வரியளியினங்க ளிரவுகண்டேங்கு மளிகையோ வாசமுற்றிருந்த
வரியகற்பனிநீ ரளைந்ததிற்கள்ப மணிந்தகிற் றூடமுமூட்டி
விரிதருதளவெள்ளிபூத்திலங்கி விளங்குகந்தரமெனுங்குழலாள். (3)

வண்டுமொய்த்திருந்தேர்மலரிணையுழக்கிமதுமழைபொழிதரக்கிடந்த
தண்டலைத்தடமோதிரடரவளர்ந்தேர் தலைநொளிகொன்றையோவுவமை
விண்டிடாக்கூந்தல்கமுகுசைவலமோமினுங்கவர்தொழுகியைவகையா
எண்டிசைவிளங்கமுடிப்பதற்கியைந்தங்கழிவிருடிரண்டநீள்குழலாள்

அழகுசெவ்வகத்தி மலரினிலருகாலளியிருந் தெனவிரைபொருந்துங்,
களபநற்றிலதமணிந்தருஞ் சிலையைக்கணிச்சியைக் கரம்படத்தேய்த்
தேர், வளைவுகொண்டுலவு முகமுழுமதியின் மேற்றிசைதவழ்ந்துமூன்
றுலகுநங், குழலெனும் பெயர்கொள் கருமையின் கீழ்பாற் பிறந்தகோ
விள்ம்பிறை நுதலாள். (5)

மாற்றலருயிரை விழிக்கணைதொடுத்துவாட்டிடவளைந்ததார் முகமோ
தோற்றிடக்காண்டமெதிர்ந்திருப்பதுவோ சுடரெறிகுக்குடத்தலகோ
கூற்றெனக்கொடிய கொலைபலதேர்ந்த கொடுவரிக்கட்கடறன்னின்
மேற்றிசைக்கரையினுருநிறப்பவளமெனக்கொடியுறழ்புருவத்தாள். (6)

உலையனற் புகுத்தி யடித்தடித் தமையா வுவணிபம் பாரிவினைச் சினங்கொண், டலையினைத்துளக்கியருணலைத்தாத்தி யளியினைப்பற த்திமா வடுவை, விலையினிற் படுத்திக்கயர்கருவிளை காவிஙயமுதமபு கமுடுக்கிக், கொலைசெயக் கருதிக் கடுவொடுமிணங்கிக் கூற்றுடன் பழகுமை விழியாள்.

இதுவுமது-கலிவிருத்தம்,

கங்கை நேருறுங் கண்ணைக் கமலம்போற்
றங்குமானனத் தைத்தழு வாமலே

மங்கிலூசனற் கத்தரி வள்ளையைப்
பங்க மாகப் பழிக்கும்பொற் காதினல். (8)

மிக்க சாணைக டேய விடுத்துமுன்
பக்கமேயுருப் பாய்ந்துள் விலங்கிடத்
தக்கதாக்கித் தயங்கிய தண்படி
மக்கலத்தினும் வாய்ந்த கபோலத்தாள். (9)

எள்ளைவாட்டி யெழிறரு சண்பகத்
துள்ளவேட்டை விரித்துறை வண்டின
மெள்ளவாடி விறைந்தெழு கட்டனைக்
கொள்ளநீண்டு கொளும்வள நாசியாள். (10)

இதுவுமது-எழுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

கிடர்ந்துலர்ந் தறவிலவிந்திடக் முருகக்கிளைகளை முளரியைப்புரிந்து, வடிவுறுந்துகிரை விழியை முடுக்கிமதுப்பிழி தொண்டயங்கனியைக், கொடிபடைத் தியம்புட் குலந்தினச் செய்துங்கோமொப் பிலையெனப் படுத்திப், படியிலஞ் சுகமும் பூஅவயுமாய்ப் படுத்துபண் வாயினினி தழாள். (11)

முல்லையை முருந்தை மயிலடியிறகை முத்தைவென் றணிகொண்மா துவளை, மெல்லியவிதையை யணிதினப்படுத்தி மெல்லெனச்செவந்தபொற் சிலைமேற், சொல்லுதற்கரிய வெண்ணரம்பொழுங்காய்த்தொடுத்தணிநிரைநிரை நிறுவுங், கல்லெனவுருகா மனங்ளைந் துருகக் கற்றபுன் னகைதரு நகையாள். (12)

இதுவுமது-கலிவிருத்தம்.

ஓதுமுகி லிற்கிடை யுதித்தினி தெழுந்த
பாதிமதி நெற்றியடி பார்த்துநிறை யிந்தோ
சாதிமணி மேவிய சரோருகம தென்ன
மேதினியின் வெண்மதி விளங்குவத னத்தாள். (13)

தேனமுதி யாழ்கதலி சீனிமுதற் பாகோ
காஞெழுகு மாங்கனிகற் கண்டினி வருக்கை
யினமறு கிள்ளைகுழ லிக்கரிய பூவை
தாழுறழ்வு ருமதுரத் தாலினுரை யாளே. (14)

இதுவுமது-எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

கருமுகிற்தணமுங் குழவிவெண் பிறையுங் கண்டமும் பிரண்டையும் பிணையு, மருவிரி குமிழுமாடியும் வளையும்வளங்கொள் செவ்வாம்பலுமதியு; மொருதலங் கிடப்பச் சுமந்துறு கமுகுமுத்தியுற்றிரை தரும் வளையும், பொருவினும் பொருவா மணியணி பலவும் பூண்டழ கிலங்குமென்கழுத்தாள். (15)

இதுவுமது வேறு.

மின்னுகின்றநல் வேயையுங் கன்னறன்னையுங் கத்தியா
லிந்நிலத்தினி லீர்வதாற்றுன்னனீக்குமென்றேளினல்
இனியராகத் தியாழினைத் தொனியிதென்று ஷாத்தியே
மினியுரோமம் விளங்குசெங், கனகமேய்ந்த முங்கையினுள். (16)

காய்ந்தளென்னக் கதிர்கலந்-தேந்து தாமரையென்னவே
வாய்ந்தமன்னர் வலிகடான் றேய்ந்திடச்செயுஞ் செய்கையாள்
சினையிருந்த செழுங்கெளிற் றினைமுனிந்ததி லஞ்சியே
புனல்புகப்பொனி ஞழியை-வனையுமென்விரன்மங்கையாள். (17)

கொஞ்சுகின்ற குதலையா யிஞ்சொற்பேசி யெழில்பெறு
மஞ்சுகத்தல கானதின்-சுஞ்சுகூருகிர் மேவினுள். (18)

இதுவுமது-அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

அரும்புயம் பாரநற் சிமிழ்வரை முடியோ டாடுபங்துயர்கிளருது குரும்பைபொற் குடமென் றசும்புமண்டலமா கோங்கரும் பிளவிள நீர்மண், ணிரும்புவிக்கலச நேமியங்குமிழி யிலங்கு செப்பருங்கிணந் தாளம், பெரும்பதக் கரிகோடிவைகளை முடுக்கிப் பெருமையுற் றிலங்கு பொற்றனத்தாள். (19)

உரம்படுத்தோங்கிப் பணைத்திரு மாந்தங் குலவுகச் சறுத்தணிச் சுணங்கு நிரைநிரை செறிந்துதகரமும புழுகு நீவிநற்பசலைபூத் திலங்கி, யிருவிழி கறுத்தங் கடர்ந்தமை யாமலெதிர்த்தவ ராவியுள்ளடக்கித்தரளவொண் மணிப்பூண்டழைத்து மும்மதத்தின் றந்தியைப் பொருங்கன தனத்தாள். (20)

கொங்கையென் றிணைத்த கோட்டுவா ரணத்தைக் கொழும் வயிற்றுவினிற்றழையுஞ் சங்கிலித்துடரோ தடப்படப்பணிவா னிமிர்

த்ததோ தயங்கெறும் பொழுக்கோ, வெங்கயத் தறியோ காஞ்சிரன் மணியோ மெல்வடமோசலாகையதோ, பைங்கொடி நிலையோமதன் மயநூலோ பகரடி வயுற்றுறுமுடியாள். (21)

ஆலிலைநீழல்வடமதின் கீழ்பாலறற்சுழிமலாலரிலங்க வோவிடுங் கடலினுருதிரை யேற வொளிருகற் படிகிடந்திசைய, வாவிபரிடையப்பட்டமுமால வட்டமுமடுப்புமான குளம்பும், பாலினி விருட்பக் கற்பெனும்வேலி படர்கலை விசித்தமெல்லிடையாள். (22)

மின்னெனப் பதுங்காத்துடி யெனவுடையா மில்லினை நூலெனக் குழையாப், பன்னக மெனமட் கமரினுட் புகுதாப் பைங்கொடி யெனக்கிரிபடரா, தென்னுறுமரிபூங் கொம்பிவை தூத்தித்தேயி மகரனையுமுடுக்கி யிந்நிலத்திசைமா ரனினுடல்போன்று மில்லையுண்டென வுறுமிடையாள். (23)

அரம்பையைக் குலையா லழிவுறப் படுத்தி யனநடைதரும்பிடியதனின், கரம்புழை யெனவேகடிந்துமென் மையவாய்க் கவினுறவிலங்கு செங்குறங்கா, ளரும்புவியலவன் றனைமுகந் தோய்த்தங்கெழில் வாரவினைப்பயம்புகுத்தி யூரம்பெறு கணைத்தூணியைநற்காகளத்தை யுவமை சொல்லருங்கணைக்காலாள். (24)

பொன்னினுற் சமைத்த மணித்தரா சுவமை பொருத்தினும் பொருந்துருப்பறடாள், வன்னமார்கமடப்போத்தக மெனவே மணிச்சிலம்பிசைபுறவடியாண் மின்னனார் .காந்தொட்டாடும் பொற்றிரட்டும் விளங்குபந்தெனுஞ் செழுங்குதியாள், பன்னுமோர் வயிரக் கதிருகி ரமைசெய்பவளமென் கொழுந்தணி விரலாள். (25)

வனங்கிடந்தலம்பு 'மேன்மையந்தடத்தின் மணிச்சிறைப்பெடையொடுஞ்சேவ, லனங்கிடந்தருங்கட்டுவிடக் குடைந்தங் சரியகண்டுயிறாப்படுத்தே, தினங்கிடந்துலவு முளரியம்போதிற் செப்பலத்தக மணிந்தனபோற், கனங்கிடந் தனைய கருங்குழன் மடவார்கரங்கொடு வருடு பொற்பதத்தாள். (26)

மலையினிற் பயிலு மிளம்பிடியானைவருகின்ற சாயலோவல்லா, விலகிய வருங்கட் டேவியின் ரேகை யிணையடி பெயர்த்ததோகைமலத்; துலவிய நறும்போ தினிற்றிரிவனங்களுலவலோ சொலவருநடையாள், மெலமெலநடந்து தந்தைதாயிருக்கும் விகசிதவிடத்தை கண்ணினளால். (27)

வசனம்.

இவ்விதம், கேசாதிபாதமென்னு முச்சிதொடுத் துள்ளங்கால் வரையிலுங் குறைவில்லாத மிகுந்த பேரழகையும்-சவுந்தரியத்தையு முடைய சல்காவென்னும் கன்னியின் அழகையும், கற்பையுங், கல்வியையும், உயுத்தாயுத பரீட்சையையும், எறுவாக்குதி நடாத்துதலையும் நாள்தோறும் கேட்டறிந்த இராஜாதிராஜாக்கள், இக்கன்னிகையை மாலையிட்டு மணஞ்செய்ய, ஆசைகொண்டு, நேசஞ்செய்ய விரும்பித் தேசாதி தேசங்களி லிருந்துவருவார்கள், அப்படி வரப்பட்ட இராஜாக்களைப் பார்த்துச், சல்காவென்னுங் கன்னிகை தான் வைத்த பிரதிக்கினைப்படிக்கு என்னைக் கலியாணஞ் செய்யவேண்டுமாகில், என்னுடனே இணையாகக் குதிரைச் சவாரிசெய்யில், அவர்கள் யாராயிருந்தாலுஞ்சரியே நான் மாலைசூட்டிக்கொள்வேனென்று சொல்வாள்; அப்படியே வந்த இராஜாக்கள் குதிரைச் சவாரிசெய்தால் இவளுடனே சரியாகச் சவாரிசெய்யாமற் பிந்திப்போவார்கள். இப்படியாக ஆயிரங் கொம்புகளையுடைய இடபமென்னுங் காளைமாடானது ஒரு கொம்பினுலே சுமைதாங்கிய இந்தப்பூமியினிடத்திலே ஒவ்வொருவராக இக்கன்னிகையுடனே மணந்திருக்கும்படியாகக் குதிரைச் சவாரிசெய்த இராஜாக்கள், தொண்ணூறுபேர்கள்தோற்று வெட்கித்துப் போயினுர்களேதவிற, அவளுக்குச் சரியாகத் தகுந்தவர்களில்லாதிருந்தாள்.

இவ்விதம், விவாகமில்லாதிருக்கும் அழகிய சல்காவென்னுங் கன்னிகையெழுந்து, இராஜமண்டபத்தில் மிகுந்த வியாகூல முற்றிருக்குந் தன் தாய்தகப்பனிடத்திற்கு வந்தபோது, அந்தச்சல்காவைப்பார்த்து இறவுசுல்கூல் அழுத கண்ணுகத் தான்படையிலே தோற்றதுடனே, சகல காரியத்தையும் நன்ருகத் தெரியச்சொன்னுன். அதுகேட்டுச் சல்கா நெருப்பிலே எண்ணெயை விட்டது போலும், புண்ணின்பேரிலே தீயிற்காய்ச்சிய இருப்புச் சலாகையை விட்டதுபோலும் வருத்தத்துடனே யிருக்கிற தகப்பன் இறவுசுல்கூலைப்பார்த்து என் தகப்பனே, எதிரிகளாகிய யானைகளுக்குச் சிங்கேறே என்தமையன்மார்கள் மூன்றுபேரு மனத்திலறிவுட், பொருந்திய ஜெயமு மிகுதியானவர்கள், மேலும் பூமியிலே சத்துருக்கள் செய்யும், மந்திர தந்திரத்திற்கும் சண்டைக்கும் சற்றேனு மனமயராதவர்களாச்சுதே, அப்பேர்ப்பெற்ற, மூன்று புலிகளு மேன்மையான முகம்மது நபியவர்களின் கலிமாச்சொல்லித் தீனில்விசுலா

மானதாலே அந்த முகம்மதுடைய வேதமாகிறது, அல்லாகுத் தஆலாவா லனுப்பினதாகும், ஆதலால் அவ்வேதத்திற் கிணங்கி ஈமான் கொண்டிசுலாத்திலாகினுற் குலேபாதகமும், சண்டையும், சொல்லரிதாகிய பகையும் நீக்கிப் பலாபலனும் பெறலாமென்று சொன்னுள்.

இவ்விதம் சல்காவென்னும் கன்னிகையாய்ந்துணர்ந்த அறிவினற்றேனைப்போலே சொன்ன சொல்லானது இறவுசுல்கூலுக்கு வேப்பஞ்சாற்றைப்போலாகித் தன்மகள் சல்காவைப்பார்த்து, நமக்குநாயகனுக இருக்கிற பர்ருசை விருப்பங்கொள்ளாது அந்த முகம்மதுடைய காரியத்தின்பேரில் விருப்பங்கொண்டு இச்சொற் சொன்ன வுன்னே அந்தப்பர்ருசானவர் காய்கின்ற வலியநாக நெருப்பிலாக்கிக் கரித்துப்போடுவாரென்று சொன்னுன். அதுகேட்டுச் சல்காவென்னுங் கன்னிகைசெவந்த பவளம்போன்ற விதழ்பொருந்தியவாயைத் திறந்து தகப்பனுகிய இறவுசுல்கூலேப்பார்த்து இந்தச்சரித்திரப் புராணத்திலுள்ள கவிதைகளின்பொருளை அறப்புப்பாஷையினுலே பயித்தாகப் பாடினுள்.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

விள்ளரும் பெருமை யாக விளங்கிய தம்பிரானை
யெள்ளள வெனினுங் கூச்ச மின்றியிப் புவியின்மீதிற்
கொள்ளைகொண் டவருமுய்ந்தே குறையற விருப்பதாலே
கள்ளருக்கடங்குந்தேவைக் கருத்துரு தடக்கு மன்னே. (38)

அனைத்தையுஞ் சடலங் கோட்டி யாவியங் கதனிற் பூட்டித்
தினத்தரா தரம்போ லூட்டிச் செழுந்துகி லாடைசூட்டி
மனத்தையு மிருதி பேட்டி மறைவழி யறிவுங்காட்டி
நினைத்ததைக் காசாய் நாட்டி நிறுத்திறை யொருவன்மன்னே. (39)

ஈதலாற் றிருடபோன வியற்றியை விறையா மென்னக்
காதலாயிருக்குமுடக் கருத்தைவிட் டமைத்தவல்லோன்
வேதமே யுளதா மென்றும் விறல்நபி யங்தநாயன்
றூதரா மென்று நாடித் துலங்குதீன் புகுதவேண்டும். (40)

இப்படி யொருமைகொண்டே யிரண்டரைக் கடிகைதங்கில்
மைப்படி கவிகை வள்ளன் மருஷுறி விறைபாற் கெஞ்சி
மெப்படிந் திருக்கும் பொன்னூர் மேனிலே வாழ்வின் பாகக்
கைப்பட வருள்வாரென்னக் காதலுற் றிசைந்து நின்றுள். (41)

வசனம்.

இவ்விதம் மக்ளாகிய சல்காசொன்ன பயித்துக்காதிலேகேட்ட மாத்திரத்தில் இறவுசல்கூல் மிகவுமுனிந்துசீறிக்கோபங்கொண்டு சல்காவுடைய முகமான சந்திரன்செவந்த சூரியநிறமாகும்படி நெருங்கிக்கன்னத்திலே பளீரென்றோரடியடித்து இவள் நமக்குப் பகையாளாகையாலிங்கேயாகாதென்றும் இவளையினித் துன்பங்கொள்ளக் கொல்வேனென்று மிகவுமிழிவாகச் சொன்னான். அதுகேட்டுச் சல்காமுகமயர்ந்து அவ்விடத்தைதவிட்டுநீங்கி மேகங்கள் நீங்காதடைகிடக்க வுயர்த்தியாகச் சமைப்பித்திருக்குந் தனது மேன்மாடத்திற்போய் முகம் வாடி யிருந்தாள்.

அதுகண்டு சல்காவின் ஏவற் பெண்கள் தோழிப்பெண்கள்வந்து சல்காவைப்பார்த்துப்பெண்களரசியே இராஜாதி ராஜகுமாரத்தியே நீயேன்முகம்வாடி யிருக்கின்றாய்? உனக்குவந்த துன்ப மென்னென்று கேட்டதற்குச் சல்கா அப்பெண்ணைப்பார்த்து எனக்கிப்போது பேசக்கூடாமையான ஒருதுன்பம் வந்திருக்கிறதாதலால் நீங்களிருக்குமிடத்திற்போ யிருங்களென்று சொல்லி யவர்களையனுப்பிவிட்டுத், தான் தனித்திருந்து கடிதாசுங்கலமும் மையுமெடுத்துச் சீக்கிரம் சில செய்தியெழுதி முத்திரையிட்டுத் தனக்குமிகவுமனமுவந்தவனாகியும் இரகசியங்களை வெளிக்கிடாதவனாகியு மிருக்கின்ற சாரியென்னும் பெயரையுடையபயல்கையிலே அக்கடிதத்தைக் கொடுத்து அவனைப் பார்த்து எடாசாரிமே நீமிகுந்த சங்கையுடனே இப்போதே இக்கடிதத்தைக் கொண்டுபோய் நல்லவீரியனாகிய கஃபுடையமகன் வெற்றி பொருந்திய முற்றத்தென்னும் பெயரையுடையவனிடத்திலே கொடுத்துவிட்டு அவனாலே கிடைக்கிற மறுமொழியைப் பெற்றுக்கொண்டு இராவானபோது என்னிடத்திற்குவா அப்படி வந்தாயானா லுனக்கு நூறுபொன்னுங்கொடுத்து உன்னை யுரிமையாக்கியும் விடுவேனென்று சொன்னாள்.

அதுகேட்டுச் சாரிம் மனமகிழ்ச்சியாகி யுடனே கடிதாசைக் கையில்வாங்கிமரியாதையுடனே யெடுத்துக்கொண்டு போய் முற்றத்துவசங்கொடுத்தான். அவன் அதைவாங்கி முத்திரையையுடைத்துவாசித்து செய்திகளையறிந்துமனதடக்கஞ் செய்துகொண்டு இந்தக்கடிதாசு தனக்குச் சாரிம்கொண்டுவந்து கொடுத்ததிற்காகச் சந்தோஷமாகியவனுக்கு நூறுபொன்விலை பொறுமதியாகிய பொற்சவடியொன்றெடுத்துக் கழுத்திலிட்டு மிகுந்த வுபசாரணைசெய்து பின்னும் முற்றத்துச்சாரிமை

பார்த்து ஒகேசாரிமே நீபோய்ச் சீக்கிரம் கிரீடாதிபதியாகிய இறவுசுல்கூல் மகள் சல்காவென்னுங் கன்னிகைக்கு நான்மிகு சுறுக்கிலே வருவேனென்று சொல்லென்று சொன்னான். அதுகேட்டுச் சாரீம் காற்றினும் விரைவாய் நடந்துவந்து அரியகுழலுடைய சல்காவின் பாதம்பணிந்து புகழ்ந்து முற்றத்தாலே தனக்கு நடந்ததையும் அவன் சொன்னதையுஞ் சொன்னான் அதுகேட்டு அழகிய சல்கா சாரிமுக்குச் சொன்ன சொற்படிக்கு நடாத்திச் சந்தோஷமாக இருந்தார்கள்.

அன்றையதினம் இராவானபோது திறத்தமுற்றத்தென்பவன் கூரியவேல் வாளையெடுத்துப் பிடித்துப் பறவையைப்போலே பறக்கின்ற வோர்குதிரைமேலே சவாராகி யக்குதிரையை நடாத்திக் கொண்டு, துறவறத்தார்கள் மனதுக்கிசைந்த அரிவையுடைய சல்கா இருந்துவாழுங் கோட்டைக்குவந்து, அங்கே யோரிடத்திலிருக்கிற மலைப் பொதும்பி லொருவருக்குந் தெரியாமற் றணிந்துவந்த ஆடையாபரணாதிகளையும் ஆயுதங்களையும் வைத்துக் குதிரையையுங் கட்டிவிட்டுத் தான் கால்நடையாக வாசம்பொருந்திய சல்காயிருக்கிற கன்னிமாளிகை வாசலையடுக்கவந்தான் அப்போது இராஜபரிபாலனத்திலே மதற்புக்கொண்டு வாழும் இறவுசுல்கூலுடைய கையினாலே அடிபட்டு மனம் வருந்திப்போய்த் தாமிருக்குமிடத்திலிருந்து அல்லாவுடைய ஹபீபாகிய முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைப்புகழ்ந்து போற்றுஞ் செவந்தவாயையும் குயிலிராகத்தையுடைய சல்கா ஒருத்தி தவிர மற்ற யாவர்களும் நித்திரைசெய்கின்ற கன்னிமாளிகைவாசல் அடுக்கவத்து நிற்கும் முற்றத்தென்றவீரன் என்ன இங்கே மனுடர்புழக்கத்தைக் காணோமே சல்காவுக்கு நாம்வந்தது தெரியவேண்டுமேயென்று துணிந்து ஒரு சிறியகல்லைக் கையிலெடுத்துத் திறந்திருக்குஞ் சாளரத்து வழியாக வுள்ளே வீசினான்.

வீசிய அந்தக் கல்லானது அங்கே படுத்திருக்குந் தாதிகளிலோர் தாதிமேலே விசையாகப்போய்ப் பட்டதினாலே அவள்சடேலென்றெழுந்து கல்லெறிந்தவர் யாரென்றலறினாள். அதுகேட்டுச் சல்கா அக்கல் வீசியது முற்றத்துதானென் றுணர்ந்து தாதியைப் பார்த்து ஒகே தாதியே நான்தானுன்னுடைய நித்திரையைச் சோதிக்கக் கல்வீசினேனென்றாள் அதுகேட்டுத் தாதியானவள் படுத்து நித்திரைசெய்தாள். பிறகு குற்றமற்ற சல்காவெழுந்துவந்து மாளிகையின் கதவைத்திறந்து அந்த முற்றத்தைப்பார்த்துச் சலாமுஞ்

சொல்லி நாமிருவரும் விடியுமுன்னே இவ்விடத்தைவிட்டு மெழுந்து போகவேண்டுமென்று இன்பமாகச் சொல்லிவிட்டுச் சீக்கிரத்திலே மாளிகையுட்புகுந்து சண்டையணிகளை யணியவாரம்பித்துத் தான ணிந்திருந்த இரத்தினாபரணங்களைக் கழட்டி விட்டுப் பிரகாசம்பொரு ந்திய பிடவையுடுத்திச் சட்டையிட்டு நெஞ்சத்திலே தாமரை முகைபோ லுற்றிருக்குந்தனங்கள் தோற்றாது, இரத்தின மிடையி லழுத்திய பொற்சீராவணிந்து, தலையிலே இரத்தினக்குஞ்சந் துலங் குகின்ற தொப்பியணிந்தாள்.

பின்னர் அச்சவடிவாகிய வேல் வாள் முதலிய தான் பழகியி ருக்கும் பதினெட்டாயுதமுமெடுத்து அணிந்துகொண்டு இளம்பிறை போன்ற நெற்றியினடுவிலே திலதப்பொட்டணிந்து, தமாரைமலர் போன்ற காலடிக்குக் கபுசும்பூட்டி இன்னும் இராஜாதி இராஜர்களு டுத்து முறைமையாகச் சகல வுஸ்துகளு மெடுத்தணிந்து அல்லா குத்தஆலாவையும் அவனுடைய தூதர் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களையுந் துதித்துப் புகழ்ந்துகொண்டு மனையை விட்டு வெளியில் வந்து பூரணச்சந்திரனு நிகரொவ்வாத முகத்திற்கு முகமூடியுமிட்டுப் பின்னர் சாகதி, சசகதி, சற்பகதி. வானரகதி, மயூர கதிஆகியஐங்கதிகளானஐந் துவிதநடலத்தையும்வாயுவேக, மனோவேக, அக்கினி வேகமென்ற மூன்று ஆக்ாவ துடித்தலையும் மின்னலைப்போ லே பாய்ச்சலையும், பந்தைப்போற் குதித்தலையும், வானிடிபோ லிடித் தலையும் கடிவாள மிட்ட வாயில் வேகத்தாற்பறியும் வெள்ளை நுரை யையுடைய பஞ்சகல்யாணிக் குதிரையின் மேலே சவாராகிவந்து அங்கு நிற்கின்ற முற்றத்துடனே நடக்கும்போது,

அந்த இருள் மனத்தனை முற்றத்து முற்படதான்மலைப் பொதும்பிலொளித்து வைத்த ஆடையாபரண முதலியவைகளையும், கட்டிவைத்த குதிரையையு மெடுத்துக்கொண்டு குதிரைமேலே றிச் சல்காவுடனே அங்கிருக்குந் தெருவீதிகளெல்லாங் கடந்துமிகு தூரம்போயும்; சத்துருக்கள் வணங்கும் புத்தைப்பழிப்பாக்கி நேர் வழியை நாடிப்புறப்பட்ட சல்காவென்னுங் கற்புநாயகி, தான்கொண் டிருக்கிறவெண்ணமொன்றையுமந்த முற்றத்துக்குவெளிவிட்டுச்சொல் லாமல், இரண்டுபேரும் ஒரே மனவாக்குடனே அந்த இராவையிலேயே மிகுதூரம்வரச்சே, அவ்வழியிலேவில்வம், மாதுளை, நெல்லி, சந்தனம் அகில்,நாரத்தை, தேக்கு,பாடலம், வாழை, கமுகு. பலா, ஆசினி, சண் பகம், இரும்புலி,கொன்றைநாவல்,அத்தி,ஆல்,அசோகு,மூங்கில்முதலா கிய மரங்களும்மல்லிகை,முல்லை,பிருவாட்சி, பிச்சி,குங்குமமலர்ச்செடி

களு மெங்குநிறைந்திருக்குமொருபூங்காவனத்தைக்கண்டு அதனுட் சென்று அங்கே தெளிந்தவர்மனம்போலே தண்ணீர் பாவிக்கிடக்கும் குளக்கரையை யடுத்துக் குதிரையைவிட்டுக்கீழிறங்கி இந்தக்குளத் துத்தண்ணீர்மிகவும் நன்றாயிருப்பதால் இங்கிருந்து எதுவேனும்பசி யாறிக்கொண்டு போகலாமென் றிருவருடையமனமு மொத்திருந்து தங்கள் வசமிருந்தசிற்றுண்டிகளைப் புசித்து; அக்குளத்துநீரருந்தி மனமகிழ்வாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். இருக்கும்போது,

சல்காவென்னுங் கன்னிகை அந்தக்காபிராகிய முற்றத்துடைய மனதையறியவேண்டி, யவனோடு மெதுவாகச் சொர்க்கபதி காணும் படியாக வொரு வசனஞ்சொல்லினன்; அதாவது கலைக்கியானத்தில் வல்லவாகி எனதுயிர்போன்ற பிறவிகளானவர்கள், மேலாம்பாமா கிய முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களிடத்திலே சேர்ந்து அவளுடைய தீனில்விசுலாமென்னு மார்க்கத்திலாகிக் கலிமாச்சொ ல்லி யிருக்கின்றமையால் அந்தநலமான மார்க்கவழியிலே இன்பமா கப்புகுந்து நல்ல அமல்ச்செய்யநாடி நானும்வந்தேன்; ஆதலால் எனக் குப் பள்ளிக்கூடத்துச் சினேகமாக இன்பங்கொண்டிருக்கிற அழகு சவுந்திரியதீரனே உன்கருத்தும் மனமுமெப்படியென்று கேட்டாள். அதற்கந்த, முற்றத்துக் கடிசான கோபங்கொண்டு வாய்மதமாகச் சல்காவைப்பார்த்து இந்தப்பூமியிலே பலபல வஞ்சனை சூனியங்களைச் செய்கிற அந்த முகம்மதுடைய மார்க்கத்திலாக வேண்டுமென்று சொன்ன நீயெனக்குச் சிறுபோதிலே யிருந்து சினேகமில்லாதிருக் கில் உன்னை நான் வெட்டிக்கொன்றுபோடுவேனென்றுசொன்னன்.

அதுகேட்டுச் சல்காநாயகி, ஒகோ காரியங்கெடுதலாச்சுதே இவ னை நாம் சொன்ன சொல்லை நினைக்காம லாக்கவேண்டுமென்றெண்ணி அவனைப்பார்த்து ஒகே, முற்றத்தே நானுன்னுடைய மனதைச்சோதி த்தறியவேண்டிச் சொன்னதேயல்லாமல் வேறேயொன்றுமில்லை, மே லும்நான் அந்தமுகம்மதுடைய வழியிலாகுவேனே, இஃதுனக்குத்தெ ரியாதாவென்று சொல்லிப்பின்னர், தன்னருளாகிய மனத்தில்நாடி னல் இனியெப்படியிருந்தாலுமிவன் நபிநாயகத்தை யொப்புக்கொள் ளாததாலே நமக்குப்பகைவனேதவிர வேறில்லை, ஆதலாலிவனைச் சதி மானஞ்செய்து கொல்லவேண்டுமென்று நாடி அவனோடு மிகு இன்ப மான வார்த்தைகளாடி நல்ல இன்பமுண்டாக்கி, அவன் பிரியமுண் டாகும்படி தனது மேனியழகு மினுக்கந்தெரியச்செய்து அவ்வழகா

லும், குளிர்ந்த வசனத்தாலும், இன்பத்தாலும், மூன்றும்பிறைபோன்ற நெற்றியையுடைய சல்காபீவி அவனைமருட்டி மனமயங்கச்செய்தபோது, அந்தப்பாவி முற்றத்தும்பழுதில்லாமற்சந்தோஷமென்னுங் கடலிலேமூழ்கி மகிழ்ச்சியாகத் தன்னிடத்திருந்த முந்திரிகைச்சாராயத்தையெடுத்து வயிறுவீங்க முடக்குமுடக்கென்றுகுடித்துமிகுந்த ஆனந்தமாக இருக்கும்போது, அவன்குடித்த சாராயவெறி நேராகச்சிரசுக்கேறயாதொன்றும் பாராமல் வீராதி வீரம்போய் மயங்கிப் பூமியிலே படுத்து நினைவுமறந்து நித்திரைசெய்தான் அதுகண்டு சல்காவென்ற அழகிய கற்புநாயகி இதுதான் நாம் நாடினநாட்டத்தை நிறைவேற்றுவதற்கான காலமென்றெண்ணித், தன்னுடைய கூரிய வாளையுருவி யந்தமுற்றத்துடைய கழுத்தைவெட்டித் தலைவேறு உடல்வேறாக்கினாள்.

சல்காபுறப்படு சருக்க-முற்றிற்று.

# சல்காபோர்புரி - சருக்கம்.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

வல்லோ னருளா லுலகுயிர்கள் வாழ்த்து மிறசூல் திருப்பாத
வுல்லாசமதே தெரிசிக்க வுவப்பேமனதிற் பெருக்காகிப்
புல்லா னதுவந் திடுமாறு புகுபாட்டையிலா ரரிகளுடன்
சல்கா போர்செய்கின்ற திறந் தனையிங்கெடுத்துச் சாற்றிடுவாம்.

## இதன் பொருள்.

வல்லகாரணனாகிய அல்லாகுத்த ஆலாவினருளினால் உலகிலுள்ள வுயிர்ப்பிணங்கள் யாவும் வாழ்த்துகின்ற றசூல்நாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் திவ்விய பொற்பாத கமலவுல்லாச சல்லாபத்தைக்காணச் சந்தோஷமே நெஞ்சத்திற் பெருக்காகி ஓர்பெண்புலியானது வருவதுபோலே, சல்காபீவி வருகின்ற வழியில் வந்தெதிர்த்த சத்துருக்களோடும் அந்தச் சல்காபீவி உயுத்தஞ்செய்கின்ற திறமையை இவ்விடத்திலெடுத்துச் சொல்லுகின்றோம்.

## சரித்திர வசனம்.

தீனில்விசுலாமென்னும் நன்மார்க்கத்திற்கு மனங்கொள்ளாத பாவியாகிய முற்றத்துடைய கழுத்தை வெட்டியவனுடைய வுயிரை யந்தரம் போக்கிய பின்னர் சல்காபீவி அவனுடலையோர் குழிகெல்லியதிலேபோட்டு மண்ணைத் தள்ளி மூடிப்போட்டுத், தான் றனித்தவளாக இருக்கும்போது, இழிவாகிய காபிரீன்கள் செய்கைகளைப் பார்க்க வேண்டுமென்பதுபோலே கீழ்பாற்கடல் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வருவதுபோலே சூரியனுமுதயகிரிமேலே வந்தான் ஆனால் சூரியன் வந்ததெத்தன்மையா யிருந்ததென்றால், இராவுகாலத்திருளிலே மனையைவிட்டுப் புறப்பட்டு நபிநாயகத்தின் பேரிலே சிந்தையாக வருகின்ற சல்காவுக்கு வழிகள் தவறிவிடாமல் இன்பமுண்டாக்கி நேரேசெல்லப் பாதைகாட்டுவோர்களுடைய நட்புப்போலே வெகுசீக்கிரத்திலே தனதாயிரங் கிரணங்களுடனே வந்து தோற்றினான்.

இவ்விதஞ் சூரியனுதித்தெழுந்தபோது சல்காவென்னுங் கன்னிகை சூரவீரமுள்ள ஆடவர்களணிபோலுள்ள அணிகளணிந்ததோடும் தன்னுடைய சிறப்பாகிய குதிரைமேலே சவாராகி மேகக்குடையுடைய நபிநாயகமிருக்குந் திசையைநோக்கிக், குதிரையை நடாத்திக்கொண்டு வரும்போது, வந்தவழி மாறிப்போய் மறுவழியாக வரும்போது, அந்த வழியிலே யொருசுத்த வீரியன் இறவுசுல்கூல் பாளையத்தில் நின்றும் குதிரைமே லேறிக்கொண்டு வந்தான். இப்படி வருகின்றவன் குதிரையும், சல்காநாயகி குதிரையும் கிட்ட நெருங்கியபோது சல்கா அவனுக்கு சலாஞ்சொன்னாள். அதுகேட்டவன் சல்காவைப்பார்த் துனக்கெந்தவூரென்று கேட்டதற்குச் சல்கா அவனைப்பார்த்து 'நான் அதென்னுமூரிலிருந்து வருகிறேன் வளம்பொருந்திய திகாமுக்குப் போகிறதற்காகவென்று சொன்னாள். அப்போது அவனுடைய குதிரையின் கால் பூமியிலோர் கற்குழியில் விழுந்திடறினது. அப்படி இடறியபோதவன் முதுமையாகிய நபிநாயகத்தை மூதேவியென்றான். அதுகேட்டுப் பொன்மலைக்கொப்பாகிய பூரித்தெழுந்த தனத்தையுடைய சல்காவுக்கு அந்தப் பாவிப்பயல் பேரில் மிகுந்த கோபமாகி யிரண்டுகண்ணிலும் கோபாக்கினி தெறிக்கும்படியாய்க் கைவாளை யுருவியொரேவெட்டாக அவனை வெட்டி யிரண்டுபாதியாக்கி நரகத்திற்கனுப்பிவிட்டுப் பெண்புலியைப்போலே தன்குதிரையை நடாத்திக்கொண்டு வந்தாள்.

வந்தபோதங்கு குதிரைகளின் பேரிலே சில சுத்தவீரியர்கள் வந்து சல்கா நாயகியையடுத்து நெருங்கி ஒகே, அறபிகளின் உடற் பிறந்தாளே நீயெங்தவூரி விருந்து எந்தவூருக்குப் போகிறுயென்று கேட்டார்கள், அதற்குப் பெண்கள் நாயகியான சல்கா, என்னுடைய வூரானது வரிசையும், புகழுந்தங்கிய மதீனமாநகரென்று சொல்லி மறுசொற் சொல்லுகிறதற்கு முன்னே யந்தப்பாவிகள் கோபமாகி மகாதீரத்துடனே அடர்ந்தேறினார்கள். உடனே சல்காவும் குதிரை யைபிழுத்துத் தட்டிவிட்டுப் பாய்ந்து தன்வாளினாலே அவர்களிலே யிரண்டுபேரை வெட்டிவிட்டுக் குதிரையை நேர் சவாரிசெய்து மிகு தொலைதூரங் கடந்து வரும்போது அங்கே பூமியிலிருந்து தூசெழு ந்து மேகக்கூட்டம் போலேவரவும்; அதினுடனே குளம்படி மிடி யைப்போலே சப்திக்கவும், சிலவீரர் குதிரைகளை நடாத்திக்கொண்டு வருவதை மான்பார்வைபோலும், வண்டைப்போலும், அம்பைப் போலும் வாளைப்போலுங் கண்ணையுடைய சல்காபீவிகண்டு நடக்கச் சே, ஓர்நொடி நேரத்தில் அந்தக்குதிரை வீரியர்களான நூறு சத்து ருக்களும், இவளை முடுகிவந்து நீயாரென்று கேட்டார்கள். அதற்குச் சல்காபீவி நான் முகம்மது நபியுடைய அசுஹாபிமார்களான சுத்த வீரியரில் நின்றுந் திறத்தையுடையவளென்று சொன்னாள்.

அதுகேட்டுடனே யந்தச் சத்துருக்களி லொருவன் குதிரை யைத் தட்டிவிட்டுக் கொண்டு இராஜவடிவமாக நிற்கின்ற சல்கா நா யகி முன்னில்வந்து எதிர்த்து வாள்வீசினான். அந்த வாள் வீச்சைச் சல்கா தனது வாளினாலேதட்டி விலக்கிவிட்டு அவனுடைய நெஞ்சிக்கு நேராக இலக்குப் பார்த்து வேலாற்குற்றினாள். அவனிறந்து நரக மடைந்தான், அதுகண்டு காபிரீன்கள் மிகவுங்கோபமாகி ஒவ்வொரு வராக இருபத்துநாலு பேர்கள்வந்து எதிர்த்து உயுத்தஞ்செய்து சல்காவுடைய வாளுக்கிரையாகி நரகஞ்சேர்ந்தார்கள். அதுகண்டு சத் துருக்கள் தங்கள் கூட்டமுழுமையும் நெருங்கி வெட்டுங்களென்று சொன்னார்கள். அதுகேட்டு அவர்களுக்குத் தலைவனாக வந்தவன் அந் தக்கூட்டத்தாரைப் பார்த்து ஒருவனைப்பலர் வளைந்து சண்டைசெய் கின்றது நன்றல்ல நான்போய் அந்தச்சுத்த வீரியனைச் ஜெயிக்கிறே னென்று அவர்களை விலக்கிவிட்டுத் தான்பல பமித்துகள் சொல்லித் தன்னைப்பெருமையாக்கிப் பேசிக்கொண்டுவந்து சல்காவுடனெதிர் த்து வெட்டினான். அதுகண்டு சல்காபீவி இவனுக்கு மண்டைப்புழு குடைவதால் நம்மோடுவந் தெதிர்த்தானென் றெண்ணித் தமது குதிரையைச் சுற்றிவிட்டு ஓரேவெட்டி லந்தத்தலைவனைத் தென்னங் கீற்றுப்போல் வகிர்ந்து நாகத்திற் கனுப்பினாள்.

இவ்விதந் தலைவனிறந்ததுகண்டு மற்றப் படைஞரெல்லாமொன் றுபோலேகூடி வெட்டுவோமென்று குதிரைகளை நான்கு பக்கத்தா லும் வளைந்து நெருங்கி மிகுந்த கீர்த்தியையுடைய சல்காபேரில் அடர்ந்தேறினார்கள். அப்போது சல்காபீவி நாம் நாடிவந்த நபிநாய கத்தின் சமுகங்காணத்தவறுவருகிறதுப்போலே காண்கிறதேயென்று நினைத்து மனமுருகித் தனது சந்திரோதயமுகத்திற்கு நேரே செந் தாமரைபோன்ற இரண்டுகைகளையுமேந்தி யொப்பற்ற ஆண்டவனைப் புகழ்ந்து வாழ்த்திக் கனம்பொருந்திய முகம்மது நபி சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஹக்கைக்கொண்டும் ஆண்டவனே நானுன்னி டத்தில் கேட்கிறேன் அதாவது உயர்த்தியுள்ள அந்தநபிநாயகமுகம் மது சல்லல்லாகு அலைகிவசல்லமுமவர்களின்வேதமு முண்மையாகில் நானவர்களைக் காணமட்டிலு மென்னுயிரைக் காத்திரட்சியென்று துஆக்கேட்டாள். உடனே கிருபைக்கெல்லாங் கிருபையுடைய ஆண் டவனுதலாலும் அவரவர்கள் கருத்தை அறிந்தவனுதலாலும் இந்தச் சல்கா தாய், தகப்பன் பாருசென்ற தம்பிரான் முதலிய மற்றெந்த மேலாம்பாத்தையும் விட்டுவிட்டுப் பிரகாசமுள்ள முகம்மது சல்லல் லா கலைகிவசல்ல மவர்களைக் காணவேண்டுமென்கிற வுறுதியுடனே வருகின்றவளாதலாலும் அந்தவுறுதி கண்ணுக்குமுன்னே நிறைவே ற்றநாடி அழகிய வானவர்களைச் சல்காவுக்குதவியாகப் போங்களென் றேவினான்.

ஏவினவுடனே, அவ்வானவர்கள் கண்ணிமைக்குமுன்னே சந் தோஷமாகக் கணக்கிலடங்காதவர்கள், வாசனை பொருந்திய பச்சையு டையுடுத்தி வாளாயுதங்களுடனேவந்து சல்காபீவியைச் சுற்றிவளை ந்து நிற்குஞ்சத்துருக்களை வளைந்து சல்காபீவிமனமகிழும்படியாகச் சத்துருக்களைக் கழுத்திலும் இடுப்பிலும், பிடித்துத்தூக்கி தூக்கி யொருவரும் பிரிந்துபோகாமல் அந்தரத்திலேயெறிந்து பந்தாடினார் கள். இவ்விதஞ் சத்துருக்களைக் குதிரையுடனே தூக்கித்தூக்கி அந்த ரத்திலெறிந்த வானவர்கள் அந்தச் சத்துருக்கள் பூமியை நோக்கி விழும்போது தங்கள் வாளை யவர்களுக்கு நேராகப்பிடிப்பார்கள், அவ்வாளிற்பட்டுச் சத்துருக்கள் துண்டாகி நரகக்குடி புகுதுவார் கள். இவ்விதம் அறிவுடனே புகழாகிய வானவர்கள் சத்துருக்களைக் குதிரைகளுடனே அந்தரத்திலேறிவதிலெ சிலசத்துருக்கள் முன்வா னம்வரையிலுஞ் சிலர்மேகமண்டலம் வரையிலும், சிலர் கடலிலும், சிலர் மலைகளிலும், சிலர் பூமியிலும்போய் மோதிவிழுந்து ஆலையிலி ட்ட கரும்பைப்போல் நசிங்கினார்கள்.

இவ்விதம் சத்துருக்கள் நசிங்கினதைத் அழகிய கற்புநாயகி சல்காபீவி கண்டு அருளிலே சீமாந்தனத்தையுடைய நபிமார்களுக்கரசர் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பொருட்டினாலே ஆதிநாயகனாகிய அல்லாகுத்தஆலா செய்தானென்று மனத்திலே ஈமானிலை முன்னினும் மும்மடங்கதிகமாகினாள். இவ்விதத்திலே சல்காபீவி புகழும்படியாய் வானவர்கள்வந்து செய்தசண்டையிலே சத்துருக்கள் எழுபத்தைந்து பேர்களிறந்தார்கள். மற்ற விருபத்தைந்து பேரை முன்னர்சல்காவதைத்தாள் ஆக நூறு சத்துருக்களும் இறந்த பின்னர் சல்காபீவி காதவழி கஸ்தூரிமணம் வீசுகின்ற அல்லாவுடைய ஹபீபாகிய றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிருக்குமெல்லைகயைநாடிப் போகலாமென்றெண்ணி மலை, வனம், வனாந்திரங்காடு கரைகளைக்கடந்து, நபிநாயகமவர்களிருக்கின்ற படைக்கூடாரம் அதோதெரியுந் தெரியாதென்ற இடமட்டிலே வரும்போது,

அங்கே, இரண்டுவாலிபர்கள் வேட்டையின்பேரிலே பூமியில் நின்றுந் தூசெழுந்து வானமுகட்டை மறைக்கும்படியாகக் குதிரைகளை நடாத்திக்கொண்டு அம்புபூட்டிய விற்பிடித்த கையராக, ஓர் மானை யதிக விரைவிற்றுரத்திக் கொண்டுவந்தும், அந்த மான்வேட்டைக் கெற்றுக்கொடாமல் முந்தியோடினது. அவ்வாலிபருடைய குதிரை பிந்தினது அதுகண்டு சல்கா புஞ்சிரிப்புகொண்டு தன்குதிரையை அந்தமானைப் பார்க்கத்திருப்பி மின்னலைப்போ லோடவிட்டு குதிரைமேலிருந்தே அம்மானைத் தட்டிவிட்டுப் பிடித்துக்கொண்டு சந்தோஷமாயோரிடத்தி லிறங்கிக் குதிரையையோர் மாத்தடியிற் கட்டிவிட்டுப் பிறகு தான் வேட்டையாடிய மானை யறுத்தறுத்துத் தன்னிடத்திலிருந்த சக்கிமுக்கிக் கல்லெடுத்து நெருப்புண்டாக்கி விறகுகள் புறக்கி நெருப்பை மிகவும் பெருக்கி அதிலுரித்த மானிறைச்சியை வைத்துச் சுட்டுத் தனதுபசி தீரும்படி தின்று தண்ணீருங் குடித்து மகிழ்ச்சியாய்ப் பின்னர் தின்று மீந்த இறைச்சியைத் தனது பக்கத்தில் வைத்துக்கொண்டிருந்தார்கள்.

அப்போது முன்னர் மானைத்துரத்திப் பிடிக்கக் கூடாமையாகிய இரண்டு வாலிபரும், சல்காபீவி பாயும் அம்பைப்போலே குதிரையைச்சவாரிசெய்து தங்களாற்பிடிக்கவலாமற்போன மானைப்பிடித்துச்சுட்டுத்தின்ற வல்லமையெல்லாங்கண்டு இந்தச்சுத்தவீரியன் எங்கேயுள்ளவன் கிட்டமுடுகிப்பார்த்தறிவோமென்றெண்ணிச் சல்கா இருக்குமிடத்தில் நெருங்கிவந்தபோது சல்காபீவி அவர்களைக் கூர்க்கப்பார்த்து

இவர்கள் நமதுடற்பிறந்தார் அஷறபாவும் மூகல்கீலுமென்று கண்டு
இன்னும் நன்குயறிவோ மென்றொன்றும் பேசாமலிருந்தாள். அப்
போதந்த இரண்டு வாலிபரும் சல்காநாயகி முகமூடி யிருப்பதால்
இவளைத் தங்களுடைய வுடற்பிறந்தாளென்று தெரியாமல் சல்கா
பீவியைப்பார்த்து ஒகே அரசியே நீர் வருகின்ற வூரெந்தவூர்? சொல்
லுமென்று கேட்டார்கள். அதற்குக்கற்புநாயகி சல்காபீவியுடனே
அவ்விருவரையும்பார்த்து எமன்கட்டிலுள்ள வெற்றிதங்கிய அத
னிலே புகழ்பராவிய வாசனைப்பூங்காவு சூழ்ந்தஸபாவென்னும் ஊரி
லுள்ளவளென்றுசொல்லி நீங்களும் சுட்ட இறைச்சி தின்ன வாருங்க
ளென்றழைத்தாள். உடனே அவ்விருவரும் குதிரையைவிட்டுங் கீழி
றங்கி இன்பமாகச்சல்காபீவியைப்பார்த்து அரியதவமுள்ள அறபி
மார்களிலே தலைமைத் தனத்தையுடையவரே உம்முடைய திறத்தை
யும் வலிமையையும் பொருந்திய ஜெயமாகிய செயல்களையும்பார்த்து
நாங்கள்வந்தோம் ஆதலால் நாங்களும்மை யின்னுமொன்றறிய வுமது
முகத்தி விட்டிருக்கிற முகமூடியை யெடுமென்று சொன்னார்கள்.

அதுகேட்டுச் சல்காபீவி முகமூடியை மெதுவாக நீக்கியபோது
அல்லாகுத் தஆலாவின் றாதர் மூகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு
அலைகிவசல்லமவர்கள் பேரிலாசையாகிக்குற்றமற்ற ஈமான் கொண்டி
சுலாமாகின பிரகாசம் முகத்திலிலங்கச்சல்காபீவியுடைய செழுமை
யான முகத்தைக்கண்டார்கள். இளஞ்சந்திரனைப்போன்ற நெற்றியைக்
கண்டார்கள் வில்லைப்போலே வளைந்துலங்கிய புருவத்தைக் கண்
டார்கள் வேலாயுதம்போன்ற இருகண்களைக்கண்டார்கள் ஆணிமுத்
துபோன்ற தந்தபந்தியைக் கண்டார்கள் புட்பமாலையணிந்த தோளி
விலங்கிய இரத்தினமிழைத்த சட்டைபூண்டிருக்கக் கண்டார்கள் பக்
கங்களிலே பூண்டிருக்கும் ஆயுதங்களைக்கண்டார்கள் சிரசிலணிந்த
இரத்தினகிரீடத்தைக் கண்டார்கள் கொடைகொடுக்குங் கையிலே
வாளைக்கண்டார்கள் வேலைக்கண்டார்கள் நெஞ்சிலே சாய்வாகப்
போட்டிருக்கும் வில்லைக்கண்டார்கள் முதுகிலணிந்திருக்கும் அம்பி
டுந் தூணியைக்கண்டார்கள் இவைகளெல்லாங்கண்டு ஏங்கியழுது
எங்கள்சல்காவேயென்று மிகவுமனமகிழ்ந்து உடற்பிறப்பே மின்னே
தங்கமே இரத்தினமே பூங்கொம்பிலிருக்கும் அழகிய குயிலே ஒப்பில்
லாத இன்பத்தையுடையமயிலே பசுங்கிளியே இளமானே யுன்னிடத்
திலே யூரில் நடந்தகாரணமென்ன சொல்லென்றும் இன்னும் தங்
கையாகிய சல்காவைப்பார்த்து நீவந்த தேனென வினவினார்கள்.

அதற்குச் சல்கா தகப்பனென்னை யடித்தானென்றாள் அவர்கள் சல்காவைப்பார்த்து உன்னைத் தகப்பனடித்த காரணமென்னவென் றதற்குச் சல்காபீவி நான்புறக்கான்வேதத்திலுள்ள நன்னடைத் தைகளைத் தகப்பனுக்குப்போதித்தேனென்றாள் அதற்கவர்கள் அப் படி நீ வேதபோதனைசெய்யத் தகப்பன் அறிவையுடையவனோ வென் றார்கள் அதற்குச் சல்காபீவி இல்லையென்றாள். பிறகவர்கள் சல்காபீ வியைப்பார்த்து அப்படியிருக்க நீதனிவழி வருவானேனென்றார்க ளதற்குச் சல்காபீவி அவர்களைப்பார்த்து நான் முற்றத்துன்னே வந் தேனென்றாள். அதற்கவர்கள் அந்தமுற்றத்தை எங்கே யென்றார்கள் அதற்குச் சல்காபீவி நானவனை வெட்டினேனென்றாள் அதற்கவர் கள் வெட்டினதுவது காரணத்தாலென்றார்கள் அதற்குச் சல்காபீவி நான் அழகிய நபிநாயகத்தைப் புகழ்ந்ததற்கு முற்றத்து விலக்கினான் அதனாலே அவனைவெட்டினேனென்று தான்தகப்பனுக்கு நல்லறிவு சொன்னதினாலே சண்டையாகி வீட்டைவிட்டு வெளிவந்ததும் வரும் வழியிலே பகைவர்கள் வந்தெதிர்த்துச் சண்டை செய்தலும் அதிலே தானிருபத்தைந்துபேரை வெட்டினதும் பின்னர் வானவர்கள் தனக் குதவியாகவந்து தன்னையடர்ந்த சத்துருக்களைக்கொன்றதும் பிறகு தான் வாதில்லாத நபிநாயகந் தங்களைக்கண்டு கலிமாச் சொல்ல நாடி வந்ததும் ஆகிய இவைகளெல்லா மொன்றேனும் விடாமல் அழகா கச் சொன்னாள். அதுகேட்டுப் பிறவிகளாகிய இரண்டு ராஜாக்களும் அல்லாகுத்தஆலாவையும் அவனுடைய தூதாங்கரான நபிநாயகம வர்களையும் புகழ்ந்து அவ்விடத்திலே பாலுந், தேனும், பழமும், கற் கண்டுஞ்சீனியும் ஆகிய இவைகளை யொன்றாய்க்கலந்து பிழிந்தபா னத்தின் ருசிபோல் இன்பமாகப் பேசிக்கொண்டு பிறவிகள் மூன்று பேரு மிருந்தார்கள் இது நிற்க,

அங்கே தாகபூகத் தண்ணீர் தேடுவாருக்கு வேப்பஞ்சாற்றைப் போன்ற இறவுசுல்கூல் தன்னுடைய மனைவிஜாமி அத்தென்னுங்கற்பு நாயகியைப்பார்த்து என்னிருகண்மணியாயும் மேன்மையான இருதய க்கனியாயும் ஈரற்கொழுந்தாயும் பொருந்திய சகலசற்குணமாயும்உயி ருக்குயிராயும் பெற்றெடுத்த சல்காவை யென்கையினாலோரடியடித்த தின்பேரில் என்மனமிகவும் வருத்தமாகியிருக்கிறேன்மேலுஞ்சல்காவு மனநொந்து போனபடியினால் நமதுபர்தாசை யிகழ்ந்துவிட்டு நமது ஆண்மக்களைவஞ்சனையினாலே தன்வசமாக்கிய முகம்மதென்பவனிருக் குமிடத்திற்குப்பிறவிமார்களைத்தேடியொருவேளைபோகவும் போதும்

ஆகையினால் அப்படிச் சல்காபோக முதலில் அவளிருக்கும் கன்னி மண்டபத்திற்கு நீபோய் அவளைக்கொண்டு நானடித்த வருத்தந்தீரும் படியாக நல்லஇன்பமான வார்த்தைகளைச் சொல்லி மனத்தைத் தேற்றென்று சொன்னான்.

அதுகேட்டு இறவுசுல்கூலின்தேவியாகியஜாமிஅத்துத்தன்மகள் சல்கா இருக்குங் கன்னிமாளிகைக்குவந்து மகளை மிகப்பிரியமாகத்தே டினாள்; மகளங்கே யில்லாமையினாலே சல்காவின் ஏவற் பணிவிடை செய்யும் பெண்களைப்பார்த்து என் அருமைமகள் சல்காவை யெங்கே யென்று கேட்டதற்கு அவ்வேவற் பெண்கள் இன்று இராவுகாலத்தி ருளிலே முற்றத்தென்பவனோடு அழகிய கன்னிகை சல்கா எங்கேயோ போயினாள் போனவிடம் நாங்களறிய மாட்டோமென்று சொன்னார் கள். அதுகேட்டுச் ஜாமிஅத்தென்னும் கற்புநாயகி வாட்டங்கொண்டு தன் புருஷனாகிய இறவுசுல்கூலிடத்தி லோடிப்போய்த் தன் மகள் சல்காவின் காரியத்தைச்சொன்னாள். அதுகேட்டுடனே இறவுசுல்கூல் தானுந் தன் பெண்சாதியாகிய ஜாமிஅத்தும் கன்றையிழந்து தியங் கிய கலையும் மானையும்போலே கதறிப் பூமியிலடித்து விழ்ந்தழுது இரண்டரை நாழிகைநேரம் புத்திமறந்து செத்தபிணம்போலே மூர்ச் சையாய்க்கிடந்து தன்னருணர்வு வந்தெழுந்தபோது இறவுசுல்கூல் தனதுபடைக்கெல்லாந் தலைவனான அம்றுடையமகன் ஹையாலென் பவனைச் சீக்கிரத்திலழைத்து அவனுடனே ஐயாயிரங் குதிரைவீரிய ரைத் தெரிந்தெடுத்துச் சேர்த்துவிட்டு அத்தலைவனைப்பார்த்து ஓகே ஹையாலேசல்காவை யிருந்த இடத்திலே காணோம் அவளிவ்விதத் திலே வெளிகடந்திருக்கிறாளென்று நடந்தவைகளைச்சொல்லி இதற் காக நீபோய்ச் சீக்கிரமவளைத் தேடிப்பிடித்துக்கொண்டு வாவென்ற னுப்பினான்.

அதுகேட்டுடனே அந்தஹையாலும் மற்றும் படைவீரரும் கட லைப்புரட்டி யலையந்தரமட்டிலெழுப்புஞ் சூறைக்ககாற்றினும் சுறு க்காக வெவ்விய சீற்றத்துடனேயொத்து நடக்கும் குதிரைகளெல் லாம் பூமி நடுங்கத்தாவித் தூசியந்தரத்திலே பந்தலிட்டது போலிரு க்க அத்தூசிப் பந்தலிலே யாவரும் திடத்த சல்காவென்னு மயிலைத் தேடிப்போனார்கள் போகும்போதவர்கள் சொல்கிறதாவது பெண்க ளெல்லாம் பெண்ணே மிகுந்த பிரகாசத்தையுடைய சல்காவைப்போ லே இந்தப் பூமியெல்லாம் தேடினாலுமப்படியொருபெண் கிடைக்கு மோவென்று கண்களெல்லாமலையடிகளிலும் காடுகரைகளிலும் முக்கு

முடக்குகளிலும் மற்றிடத்திலும் பார்த்ததாக வாட்பிடித்தகைகளும் பார்த்த கண்களுஞ் செவக்கும்படியாகச் சல்காவைத் தேடினார்கள் இவ்விதத்திலே சல்காவைத்தேடி வரப்பட்ட சத்துருக்களுடைய வாய்கள் சல்காவுடைய குணங்களைக்கூற மனம் அவளழகு சவுந்தரியத்தைநாடச் சரீரம் அவளாலே சோர்ந்துபோகக் காதுகள் அவள் பேச்சைத்தேடக் கண்களெல்லாம் அவளைப் பார்த்துப் பார்த்துச் செவந்துபோகச் சத்துருக்கள் குதிரைகளை நடாத்துகிற விரைவில வைகள்மேலிருந்து வேர்வைசிந்த வழியிலே போய் வருபவரைப் பார்த்து இவ்வழியாக இந்த நிறத்தையுடையவர்கள் போகிறார்களாவென்று கேட்டுக்கேட்டு மகாவிரைவில் வந்தார்கள்.

அப்போது பூமியெல்லாம் புகழ்கின்ற கீர்த்தியையுடைய சல்காபீவியும் அவளுடைய தமையன்மார்களும் பேசிக் கொண்டிருக்கச்சே அந்த ஐயாயிரஞ் சத்துருக்கள் வருகின்ற குதிரைக்காலி லிருந்தெழும்புந்தூசி வானத்தை மறைத்துக்கொண்டு வருவதைச் சல்காபீவிகண்டு ஆச்சரியமாகத் தன்றமையன்மா ரிருவருடனும் அதோ தூசிபடர்ந்து வருவதைப் பாருங்களென்று சுட்டிக்காட்டியபோது அவர்களும் அந்தத்தூட்படத்தைக்கண்டு அதிசயம் பெரிதாகி மெவி வில்லாமலிருந்தார்கள். அப்போதுஒருநொடி நேரத்திலே கடல்மடை வாயை யுடைத்துப் பள்ளத்தாக்கிலே தண்ணீர் மடமடென்றுவந்து விழுவதுபோல் அந்தச்சத்துருக்கள் ஐயாயிரம் பேர்களும் வந்து நெருங்கி யங்கேயிருக்கிற மூன்று பேர்களையும் மூன்று குதிரைகளையுங் கண்டு அகங்கரித்துக்கடல்போன்ற இரைச்சலையுடைய தங்கள் படையில் நின்று மொருதிறத்தவனை இம்மூவரிடத்தி லனுப்பினார்கள். அந்தமூடன் கெடுதியில்லாத இந்த மூவரிடத்தில்வந்து கொஞ்சமும் பயமில்லாமல் ஒகே நீங்கள் புத்தை வணங்குகிறவர்களோ வென்றுகேட்டான் அதற்கு முகல்கீலென்பவரந்தச் சத்துராதியை பார்த்து எதிர் நோக்கி யடிக்குங்கையைப் பிடித்ததுபோலும் கஞ்சி முதலியவை குடித்தவாயைத் துடைத்ததுபோலும் துலாம்பரமாக அந்த வீருகியபுத்தைவிட்டும் நாங்களன்றவர்களென்று சொன்னார்.

இவ்விதங்குற்றமில்லாத சொல்லைக்கேட்டுஅந்தவைராக்கியத்தையுடைய காபிர்ப்பயல்முகல்கீலைப்பார்த்துநீங்கள் எங்கள் சத்துருவான முகம்மதுடைய அசுஹாபிமார்களிலுள்ளவர்களோவென்று கேட்டான் அதற்குமுகல்கீலென்பவர் ஆமென்றார், அதுகேட்டு அந்தப்பாவிபயல்சரேலென்றுபோல்த் தங்கள்படைத் தலைவன் ஹையாலைப்பார்த்து

அவர்கள் தீனில்விசுவாமானவர்களென்று சொன்னான். இந்தச்சொல் அங்கிருக்கும் படைவீரியர்காதிற் கேட்டமாத்திரத்தில் ஆக்கிரமித்து நாமெல்லோரும் போய்விழுந்து அம்மூவரையும் வெட்டுவோமென்று சொன்னார்கள். அதுகேட்டுத் தலைவனாகியஹைறயானு அப்படைஞரைப் பார்த்துப் பலபேரென்னத்திற்கு ஒருவரை யனுப்பினாற் போதுமென்று சொல்லியுடனே ஒருவீரியனையனுப்பினான். அந்தப்பாவியுடனே குதிரையைச் சவாராகி இந்தமூன்றுபேர்களிடத்தில் வந்து வாள்வீசினான் அப்போது இராஜாதிராஜாகிய முகல்கிலெழுந்து ஒருபாச்சலிலே சுழன்று அவனை யிரண்டுபிளவாகவாளினால் வெட்டிப்பிளந்து நரகத்திற்கனுப்பிவிட்டு நின்றார்.

பின்னர் சத்துருக்களில் நின்றும் அதிககோபத்துடனே நாற்பத்தெட்டுபேர்கள் வந்துதங்கள் தங்கள் திறங்களுடனே சண்டைசெய்து முகல்கிலவர்களின் வாளுக்கிரையாகி நரகமடைந்தார்கள். இவ்விதஞ் சத்துருக்கள் நாற்பத்தெட்டுபேர்களிறந்ததைக்கண்டு மற்றவர்கள் பயந்து ஒருவரும் வந்துநெருங்காமல் நிற்கும்போது ஹைறயால்கோபங்கொண்டு படைவீரரைப்பார்த்து போங்களென்றேவியும் ஒருவரும் வாராதிருப்பதால் மறுபடியும் படைவீரரைப்பார்த்து அப்படி ஒருவரிரண்டுபேர்போகப் பயமாயிருக்கையில் ஆயிரம்வீரர்கள் குதிரையுடனேபோய் எதிர்த்து வாள்வீசி யந்தச்சுத்தவீரியனை வதையுங்களென்று சொன்னான். அதுகேட்டு ஆயிரம்வீரர்கள்வந்து முகல்கிலவர்களைவந்து எதிர்த்தார்கள். அப்போது மாமரத்திலிருந்து கூவுங் குயிலுக்கொப்பாகிய சல்காநாயகி தம்பிறவிகளைப்பார்த்து மனுஷறிலே நம்மையெல்லா மன்றுடிச்சொர்க்கப்பதிக்கு முகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஹக்கின்பேரிலாணையாக என்னைச் சண்டைக்கனுப்புங்களென்று சொன்னான் ஆனால் அவர்கள் தாங்களிருக்கத்தங்கையைச் சண்டைக்கனுப்பக்கூடாதென்று கொண்டவெண்ணத்தை யவள்செய்த சத்தியம் பெரிதாயடர்ந்ததாலே அந்தச்சத்தியத்தைத் தட்டக்கூடாதென்று வேதாதிவேத வெற்றிபெற்ற நயினாயகத்தைப் புகழ்ந்து சல்காவைப்பார்த்துனது பிரியப்படி சண்டைசெய்யென் றுத்திரவு கொடுத்தார்கள்.

உடனே சல்கா அல்லாகுத்தஆலாவைப் புகழ்ந்துபடைவுஸ்துகளெல்லாமணிந்து கையிற்பிடித்த வாள்வேலோடு சூறாவளிக்காற்றினுங்கடிதாகநடக்குந் தனது குதிரையின் கடிவாளத்தின் வாரைக் கையாற்பிடித்தபோது அக்குதிரைநமது எஜமாட்டி நமது கடிவாளத்

தைத் தொட்டது என்னகாரணமோவென்று முதுகைக்குனிந்து நிமிர்த்திச் சத்துருக்கள் நடுங்க அவர்கள்மனநடுங்க அவர்களேறுங் குதிரைகள் நடுங்க மலைகளுமலையடி வாரங்களு நடுங்க நீண்ட துதிக் கையுடைய எட்டுத்திசைகளிலுள்ள யானைகளும் நடுங்கச் சத்துருக் கள் படைக்கூட்டமுநடுங்க அனுமானித்துக் களைத்து அடங்கி நின் றபோது சல்கா அக்குதிரைமேலேறினாள். அதுகண்டு குதிரை எஜ மாட்டி நமது முதுகிலேறினது தீனில் விசுவாசத்திற் கொழுகாத இராஜாக்கள் சிரசிலணிந்த கிரீடங்களைத் தகர்க்கவோ அல்லது கலி மாச் சொல்லாத கொடியபாவிகளினுடைய நாக்கைவகிர்ந்து போட வோ அல்லது காத்திமுல்லன்பியா முகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்களுடைய வாசனைபொருந்திய பொற்பாதகமலங்களை யடுக் காத சத்துராதிகளுடைய வூர்களை அதல குதல மாக்கவோ அல்லது அந்தச் சத்துருக்களுடைய வுயிர்களை யெமலோகத்திற்கனுப்பவோ வென்ற எண்ணத்துடனே நான்குகால்களையுந் தூக்கிவைத்தது.

உடனே சல்காநாயகி அக்குதிரையை நடாத்தி வஞ்சகநெஞ்சக ராகிய சத்துருக்களைப் பார்த்துச் சத்தமிட்டு அநேகம் பயித்தோதி னாள். அவைகளின் பொருளாவது இந்தப் பூமியில் எந்நாளும் காணு தற்கரிதாகிய திரையுள்ளேநின்று இப்போதுபிஸபிலுக் காசைகொ ண்டு சத்துருக்களுக்கு முன்னில் அடர்ந்து உங்களுக்கு மவுத்தென் னுங் கசப்புநீரைக் குளிப்பாட்டி யுங்களுடைய மலையையொத்த சரீ ரத்தில்நின்றும் இரத்தத்தை யோட்டிவைப்பேனென்றும் விருப்ப மாக றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் மேலான நிலைமைக் கெனது உடலுமுயிருங் குறுலானென்று குதிரையின் கடிவாளத் தை நெகிழ்த்து நடாத்தினாள். நடாத்தியலோ தந்தக் குதிரையிடியைப் போலேபூமியில் மிதித்துமின்னைப்போலே பாய்ந்து கொடுமைதங்கிய சத்துருக்களின் கூட்டத்துள்ளாகி இராஜாக்களின் கிரீடத்தைத் தூளாக்கி யவர்கள் முகங்களைக் காயப்படுத்தி பூமிதூசி ஆகாயத் தை மறைக்கும்படியும் எவர்களுமெச்சும்படியுந் திரிந்ததுந்தவிர இன்னும் அந்தக்குதிரை சத்துருக்களுடைய மண்டைமூளைச்சிதறக் கண்கள் கலங்கத் தொண்டையும் நெஞ்சும் நையத் தோளென்றமலை கள்பிய்யக் கழுத்துகளிலணிந்த மாலைகள் நொறுங்க மேலானவான வரு மகிழ்ச்சிகொள்ள நான்குபக்கங்களிலுந் தாவித் திரிவதுடனே சல்காநாயகியுடைய மின்போன்ற சிறியயிடையுமின்ன அவளேறிய

குதிரையின் பாய்ச்சலுமின்ன அவள்கையிலே பிடித்துச் சுழட்டிவீசும் வாளுமின்ன இவ்விதத்திற்படைக்களமுழுமையும் பலபல மின்னலுண்டாயிருந்தன.

அப்போது சல்கா நாயகியின் வெட்டினாலே சத்துருக்களின் கைகளறுந்துவீழ்ந்தன தோள்களறுந்துவீழ்ந்தன நெஞ்சும் உட்குடலு மறுந்து வீழ்ந்தன இவைகளுடனே சத்துருக்கள் தாங்களும் அறுந்துபோய் அவர்கள்கூட்டம் நான்கிடங்களுந் தெறித்துச்சிதற வேகங்கொண்டு சல்காநாயகிகுதிரையை வலமிடஞ்சுற்றிவிட்டுவாளினாலும், வேலினாலும், தண்டத்தாலும் வெட்டியுங்குற்றியும் தாக்கியும் நின்றதாற் சத்துருக்கள் கண்டங்களுந் துண்டங்களுமாய்ப் பிணங்குவிந்தவுடனே கடல்போலே இரத்தம்பெருகியோடலாயிற்று. அவ்விடங்களெல்லாம்நாய்நரிகள் பிணந்தின்னக் கூடிவந்து சத்துருக்களுடைய மேனியையும் கொழுப்பையுஞ் சதையையுங்கண்டு சந்தோஷமாகி நமக்கின்று கற்புநாயகி சல்கா நல்லவிருந்தளித்தாளென்று கொண்டாடிக் கூத்தாடித் தின்று நின்றன.

அப்போது சிதறியசத்துருக்க ளொன்றாகச்சேர்ந்து சல்காபீவியைப்பார்த்து அவர்களொருவருக்கொருவர் இந்தபூமியில் இவனெங்கேயுள்ள சுத்தவீரியன்? படைகளைநாசஞ்செய்யு மிவனுடைய குதிரை யெங்கேயுள்ளதோ, இவனுடையவாள் வடவாமுகாக்கினிதான் வாளாய்ச் சமைத்துவந்ததோவென்று ஆச்சரியப்பட்டு இனி யிந்தச் சுத்தவீரியனை விடக்கூடாதென்றுவந்துநெருங்கி வாள்வேல்வீசினார்கள். அப்போது சல்காநாயகி தன்குதிரையைச் சுழலவிட்டுச் சத்துருக்கள் வீசுமாயுத்தைக் கேடகத்தாலே தடுத்துத் தட்டிவிட்டுப் படைக்குள்ளேநுழைந்து ஜனக்காடு பிணக்காடாகும்படி முன்பின் பாராமல் வெட்டிக்குற்றி ஹதஞ்செய்தாள். அதனால் முன்னணியில் நின்ற சத்துருக்களாயிரம்பேர்கள் தாங்களேறிய குதிரைகளுடனே வெட்டுண்டு நரகமடைந்தார்கள்.

அதுகண்டு பின்னணியில்நின்ற சத்துருக்களெல்லாம் சல்காவைநெருங்கிவளைந்து புலிகளைப்போல் வாள்வேல்மின்னும்படி சுழட்டி வெட்டினார்கள், குற்றினார்கள் இவ்விதம் சத்துருக்களுடைய வெட்டுங்குற்று மொன்றேனுந் தனது சரீரத்தி லுறுப்புகளிலே படாமற்

ருன்கற்ற குதிரைநடையாலும் சிலம்பவரிசையாலும் கேடகத்தைக் கொண்டும் தண்டத்தைக்கொண்டுந் தடுத்து விலக்கிச் சத்துருக்கள் நசுங்கும்படியாகக் கடூரமான சண்டைசெய்தாள் அப்போது சத்துருக்க ளிந்தச்சுத்தவீரியனை வாட்சண்டை வேற்சண்டையினுல்வெல்லக்கூடாதென்று விலகிநின்று வில்லினிடத்தி லம்புகளையேற்றிமழை பொழிவதுபோல் அம்புக் கூட்டங்களைப் பொழிந்தார்கள். இவ்விதங் கல்லைவணங்கும் காபிரீன்கள் வில்லினலே செய்யுஞ்சண்டைக் கஞ்சாமல் சல்காநாயகிசத்துருக்களுக்கு முன்னில்நெருங்கச்சே அவர்களெய்யும் அம்புகளையெல்லாந் தட்டிவிட்டுத் தான் வில்லாலும், வேலாலும், வாளாலும், சக்கரத்தாலும் சத்துருக்களை இலக்குவைத்துக் கண்கள் விலாக்கள் பார்த்துப் பார்த்து எய்வதால் அவ்வாயுதத்தினை தாவுங் கொரோம் பொறுக்கமுடியாமற் சத்துருக்கள் சல்காவைப் பார்த்து இவனமதுயிர் வாங்கவந்த எமனோவென் றெவ்விடத்திலுஞ் சொன்னவர்களாகித் திகில்கொண்டுநின்றார்கள். அப்போது இடிபாய்ந்து வீழ்வதுபோலே சல்கா தன்குதிரையைப் பாயவிட்டுச் சத்துருக்களைவெட்டினள் இவ்விதம் சல்கா மின்னின்வெட்டைப்போல் வாளால் வெட்டுவதால் அநேகசத்துருக்க ளிறந்தவர்கள்போக மற்ற சத்துருக்கள் கால்பெயர்ந்தோடி யவர்கள் படைத்தலைவன் ஹையாவிடத்திற்போய்ப் பட்டபாட்டைச்சொன்னார்கள்.

அப்போது, சல்கா நாயகிதன் குதிரையை நடாத்திச் சத்துருக்களைப்பார்த்து முன்னர் தன்னைப்பெற்ற தகப்பனைக்கொன்ற தகப்பனுடையசேனைகளை என்னோடுமெதிர்த்துச் சண்டைசெய்யவாருங்கள் வாருங்களென்று அழைத்தாள், அதுகேட்டுச் சத்துருக்களில் நின்று மொருபாதகன் மிகுந்த கோபமாகிப் படபடத்துக் குதிரையைநடாத்திக்கொண்டு சல்காவுடனே வந்தெதிர்த்துவாள்வீசினன். அவனைமாதுசிரோமணி சல்கா, ஒரேவெட்டி லிரண்டுதுண்டமாக்கி நாகத்திற் கனுப்பினள். அதுகண்டசத்துருக்கள் இஃதென்ன இந்த சுத்தவீரிய னொருவனுக இருந்து, அனேகரைக் கொல்லுகிறானே இவன்பேயோ, பிசாசோ, அல்லது; ஜின்னோ, வானத்திலுள்ள தேவனோ பார்த்தால் மனுடன்தானே, இவனை நம்மாலே வெட்ட முடியாதாவென்று கடூரமானகோபங்கொண்டு ஆயுதங்களைச் சுழட்டி யொவ்வொருவராக, எழுபதுசத்துருக்கள் வந்து தங்கள் கற்றவித்தையெல்லாங்காட்டி நின்று சண்டைசெய்து சல்காநாயகியின் வா

ளாலே வெட்டுண்டு அவ்வெழுபதுபேர்களும் பதைபதைத்துத் துடிதுடித்துச்செத்து நரகமடைந்தார்கள்.

அதுகண்டு மற்றக்காபிரீன்கள் அழுக்கடைந்த மனம்பயந்தும் இனியெதிர்த்தாற் பழுதுவருமென்று முன்னேருது அழுதகண்ணர்களாக நின்றார்கள் அதுகண்டு வால் நட்சத்திரத்தை அம்பை, வண்டை, வேலாயுதத்தை, வாளாயுதத்தை, மாம்பிஞ்சிப் பிளம்பை யானின் மருண்ட நோக்கத்தைவென்ற கண்களையுடைய சல்கா நாயகி, பெருமை பொருந்திய தனது குதிரையைத்தட்டி நடாத்திச் சத்துருக்களைப் பார்த்துச்சிலபயித்துகள் சொன்னாள். அவைகளின்பொருள்யாதெனிற் கூட்டமான பிசாசுடைய கும்பல்களே, உங்களுடைய கோபத்தீயவிந்து போனதோ; பூமியில் நாட்டுங் கற்களை நாயனைக் கொண்டு வணங்குங்குபிரர்கள்,உங்களை நான் வெட்டிப்போடுவேனென்பதாம், இவ்விதம் பொருளுள்ள பயித்தைப்பாடிக்கொண்டு, சல்கா நாயகி சத்துருக்களுடனே யடர்ந் தேறும்போது செத்துப்போன அந்தச்சத்துருக்கள் போக மீதியாயிருந்தசத்துருக்கள் மூன்று பகுதியாகிச் சல்காவுடனும் அஷறபா, முகல்கீலுடனும், மகாதிடனுகவெதிர்த்துச் சண்டைசெய்தார்கள்.

அப்போது, சத்துருக்கள் வந்து வளைந்து செய்கின்ற கொடூரச் சண்டையைக்கண்டு, நான் இறவுசுல்கூலுடைய மகனென்னுஞ்சாடையைக் குதிரை நடையினாலே காட்டிப்பாய்ந்து வெட்டிப்பிணக்காடாக்கினர். இவ்விதஞ் சண்டை செய்கின்ற முகல்கீலைச் சத்துருக்கள் ஓர் தந்திரத்தினல் வளைந்து பிடித்து அவருடைய முகமூடியைத்திறந்து பார்க்கும்போது முகல்கீலென்று தெரிந்து மிகவுஞ்சந்தோஷமாகி அவருடைய கைபிரண்டையும் பிடித்துக்கட்டி நாம் பூமியில் இராஜாதிராஜர் இறவுசுல்கூலுடைய கிருபை பெற்றோமென்று முகல்கீலைச் சிறையாக்கினர்கள். அதுகண்டு அஷறபத்து மிகவும் கடோமான கோபங்கொண்டு சத்துருக்கள் பேரிலே பாய்ந்து எழுபதுபேர்களை யொரே சாரியிலேவெட்டி நரகத்திற்கனுப்பிவிட்டு நிற்கும்போது சத்துருக்களெறிந்த ஆயுதத்தினல் அவர் சரீரத்திலோர் காயமுண்டாயிற்று.

அதுகண்டு சத்துருக்கள் இந்தச் சுத்தவீரியன் காயப்பட்டிளைத்திருப்பதா விதுநல்லதருணம் நமக்குவாய்த்ததென் றெண்ணி அஷறபாவைச் சூழவளைந்து ஆயுதங்களினெருக்கினலே அவரைப்பிதுக்க

விடாமற்செய்து பிடித்து இவர் அஷறபாவென்றுகண்டு உடனேகட்டிச் சிறையாக்கினார்கள். அதுகண்டு சல்காநாயகி நமதுயிர்ப்பிறவிகளிருவரையும் சத்துருக்கள் சிறை செய்தார்களே இனி யெவ்விதமாகுமோவென்று அல்லாகுத்த ஆலாவையும் நபிநாயகத்தையும் புகழ்ந்தேத்திப் பெண்புலியைப்போலே சத்துருக்கள் மேலேபாய்ந்து ஒரு மூச்சில் நூற்றிருபதுபேர்களை வெட்டிவிட்டுக் குதிரையைச் சாரிவிடும்போது சத்துருக்களின் தலைவன்றையாலென்பவன் வேங்கைப் புலியைப்போலே சீறிவந்தெதிர்த்தான். அதுகண்டு சல்காநாயகிபெண் சிங்கம்போலே பாய்ந்து சண்டைசெய்தாள். இவ்விதம் இரண்டு பேர்களும் கொஞ்சநேரந் தாங்கள் கற்றசிரம வரிசைகளைக்கொண்டு எவர்களுஞ் சந்தோஷங் கொள்ளும்படி சண்டைசெய்து நிற்கும்போது சல்காநாயகி அந்த றையாலுடைய நெஞ்சிமேலேகுறிப்பாக வேலாயுதத்தினை லோர்குற்றுக் குற்றினாள் அந்தக்குற்றவன் முதுகுப்புறமுருவிப்பாய்ந்து இறந்துநாகஞ் சேர்ந்தான்.

இவ்விதந் தலைவனிறக்கக்கண்ட படைஞரெல்லாம் கடல்கொந்தளித்து வருவதுபோல்வந்து சல்காபீவியை வளைந்து சண்டைசெய்தார்கள். அப்போது சல்காவும் குதிரையைச் சுலாவிவிட்டுச் சத்துருக்கள் ஐயோ அந்தோ அம்மா அப்பாவென்று கதறும்படியாக நெருப்புப் பறக்கவாளினாலே புரடியைப்பார்த்து பார்த்து வெட்டினாள். இவ்விதம் சல்காபீவி வெட்டும் வெட்டினாலும் விடுகின்ற குதிரைச் சாரியினாலும் தண்டாயுதத்தினாலும் சத்துருக்கள் ஒருவரோடொருவர் முட்டினாலும் பிணமலை குவிந்ததுடனே இரத்தங்கடற்பெருக்காகியோடுகிறது. இவ்விதத்தில் இறந்த சத்துருக்கள்போக மீந்தசத்துருக்கள் சல்காநாயகி முன்னில் முடுகப்படாது விலகிநின்று இப்படிச் ஜனங்களை நாசஞ்செய்கிற சுத்தவீரியன் ஆரப்பாவென்று குறிப்பாகப் பார்வையிட்டதிலே குதிரையை நடாத்தும் வல்லமையைக்கண்டு இது சல்காவேதவிர வேறில்லையென்று திட்டமாகமதித்துப் பின்னணியில்நின்ற சத்துருக்களுஞ் சொன்னார்கள். அவர்களும் வந்துபார்த்துத் திட்டமாக இறவுசுல்கூல் ராஜனின் செல்வமகள் தான் இவளுக்காகத்தானே இவ்வளவு ஜனங்களை யிறக்கக்கொடுத்தோம் ஆதலால் நெருங்கி தளைங்களென்று சொல்லிச் சல்கா நாயகியை வளைந்து ஓர் தந்திரமாகப் பிடிக்கவந்தார்கள்.

அப்படிச் சல்காபிபீவியைப் பிடித்துப்பார்த்தபோது சந்தேகமில்லாது சல்கா தானென்றறிந்து சத்துருக்கள் நாம் தேடிவந்த மயிலுந்

தேடினாலுங்கிடையாத இராஜகுமாரரிரண்டு பேரும் நமது கைக்குள்ளே சிக்கினது நமது தம்பிரான் பார்ருசுடைய; அருள்தான் இப்போதிஃதொன்றுமே போதும் போதும் இனியிவர்களை இராஜனிடத்திலே கொண்டுபோய் யொப்புக் கொடுப்போமென்று கூட்டிக்கொண்டு போகும்போது அந்தச் சத்துருக்களைக்கொல்ல எமன் பின்னாலே துரத்திக்கொண்டு வருவதுபோலே குதிரைக்கால்களிலிருந்து எழும் புந்தூசி வானத்தை மறைத்து வரும்படி கண்டு சத்துருக்கள் விரைந்து நடந்தார்கள். அப்போது அம்பின் விசையாகச் சில குதிரைக் கூட்டங்கள் கடிசான வேகத்துடனேவர அவைகளுக்கு முன்னர் இணையில்லாத ஓர் சிங்கத்தைப்போலே சில கவிதைகள் பாடிக்கொண்டு சத்துருக்கள் படைக்கடல் கொந்தளித்துக் கலங்கக்கிட்டவடுத்து எடாஷைதானின் கூட்டத்தார்களே! நீங்கள் அல்லாவுடைய கூட்டத்தாரிலுள்ள மூன்றுபேர்களையும் விட்டுவிட்டுப்போங்கள் உங்களுயிர்களை நரகங்குடிபுகுத்தத் தாவிபுக்கிளையிலுள்ள புலியெழுந்து வருவதால் இந்த பூமியில் இனி நீங்கள் உயிர் பெற்றிருக்கமாட்டீர்களென்று சொல்லிக்கொண்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் வந்தெதிர்த்தார்கள்.

இவர்களுக்குப் பின்னாலே புலைலிபுனு அப்பாசும், காலிதிபுனுவலீதும் சகிதும், மிகுதாது அம்றிபுனு மகுதீக்கரீபும், சுபைறிபுனு அவ்வாமு மற்றுந் தலைவர்களும் அசுஹாபிமார்களுந்திரண்டு இன்பத்துடனே குதிரைகளை நடாத்திக் காபிரீன்களைச் சின்னபின்னமாகக் கொன்றார்கள் இவ்விதத்திலே காபிரீன்களாகிய சத்துருக்களிலனேகர்களை வெட்டிச் சல்காநாயகியின் சிறையைமீட்டி யவளைப்பார்த்து உன் துணைவராகிய முசல்கீலையும் அஷறபாவையு மெங்கே யென்று கேட்டதற்குச் சல்காமுற்படச் சத்துருக்கள் கொண்டுபோவார்களென்று சொன்னாள். அதுகேட்டுடனே சல்காவை யொரு குதிரையின்பேரி லேற்றிக்கொண்டு முன்னாலே போகுகின்ற காபிரீன்களுடனே அலிறலியல்லாகு அன்கு முதலாகிய தலைவர்களும் அசுஹாபிமார்களுமாகப் போயெதிர்த்துச் சிங்கங்களைப்போலே சண்டைசெய்தார்கள். அப்போது சத்துருக்களுமெதிர்த்துச் சண்டைசெய்தார்கள் இவ்விதம் இரண்டு படைஞரும் எதிர்த்துச் சண்டை செய்யும்போது மின்னலைப்போன்றிலங்கும் சல்கா நாயகி தன் குதிரையை முன்னாலே நடாத்தி அலிறலியல்லாகு அன்கவர்கள் முதலாகிய யாவரும் பார்த்

ததிசயிக்கும்படியாய்ச் சத்துருக்களை வெட்டியதஞ்செய்தாள் மற்ற அசுஹாபிமார்களும் சத்துருக்களுடனே ஒருவருக்கொருவரெதிர்த்து வேகமாக வெட்டினார்கள். அதனாலே சத்துருக்களெல்லாம் ஒரே பக்கமாகத் திரண்டார்கள் அவர்களிலிறந்தவர் போக மற்றப்பேர்களையெல்லாம் வளைந்து முசிலிம்கள் சிறையாக்கினார்கள்.

பின்னர் அங்கு சிறையிலிருந்த முகல்கீலையும் அஷறபானவையும் சிறையைவிட்டு மீட்டினார்கள். அப்போது அலிறலியல்லாகு அன்கவர்களிடத்தை யடுத்துச் சல்கா சலாஞ்சொல்லி யவர்கள் காலில்விழுந்து முத்திமிட்டுப் புகழ்ந்து நின்றாள். அதுகண்டு வள்ளலாகிய அலிறலியல்லாகு அன்கவர்கள் கிளியைப்போலும் குயிலைப்போலும் இராகமாகப்பேசுகின்ற சல்காவைப்பார்த்து அவள் மனம் சந்தோஷமாக அன்பாகிய வார்த்தைகள்பேசி அந்தச் சல்கா நாயகியுடனும் அவள் பிறவிகளாகிய முகல்கீல் அஷறபாவுடனு மற்ற அசுஹாபிமார்கள் சூழ்ந்துவர அவ்விடத்தை விட்டெழுந்து நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களிடத்தில் வந்து அவர்களுக்குச் சலாம் சொன்னார்கள்.

அப்போது வந்த யாவரையுங்கண்டு நபிநாயகஞ்சந்தோஷமாகினார்கள் அவர்களின் அழகாகிய பாதாரவிந்தத்தில் மாங்குயில்போலுமிருதுவான குரலையுடைய சல்கா விழுந்து தனது அழகிய முகமுக்குக் கண்களை யழுந்தவைத்து முத்தமிட்டு எழுந்தருளியாகித் தனது தமையன்மாருடனே சகல படைப்புக்கு முன்னாலே படைக்கப்பட்ட முதுமையாகிய நபிநாயகமவர்களின் முன்னில் வந்து நின்றாள். அப்போது நபிநாயகம் சல்காவைப்பார்த்து மகிழ்ச்சியாகக் கலிமாவை யோதென்று சொன்னார்கள். அதுகேட்டடனே சல்கா மனதிலே யானந்தங்கொண்டு மகிழ்ச்சியாகிக் குற்றமற்ற கலிமாவைப் பவளம் போன்ற விதமுற்றிருக்கும் வாயைத்திறந்து (லாஇலாக இல்லல்லாகு முகம்மதுர் றசூலுல்லாகி) யென்றோதினாள்.

இவ்விதம் மல்லிசாரக்கொடிக் கொப்பாகிய இடையையுடைய சல்கா கலிமாவைச் சொன்னதின்பின்னர், நபிநாயகமவர்கள் மிகமகிழ்ச்சியாகிச் சல்காவைக் கிருபையுடனே பார்த்து நல்லமேலாம்பாத்துடனே நீவந்த வரலாற்றைச் சபையினிடத்தில் விபரமாகச் சொல்லென்று சொன்னார்கள். அதுகேட்டுச் சல்காநாயகி பவளவிதழைப்

பொதிந்த வாய்திறந்து ஓரிரவையிலே ஏழுவானத்தையுங்கடந்து அல்லாவுடைய அறுஷிலே காலில்மிதித்த கபுசுடனேயேறியவள்ளலான முகம்மதேயென்று நபிநாயகத்தைப் புகழ்ந்தவர்களைப் பார்த்துத் தாஜுல் லன்பியாவே! தேவரீர் நீங்கள் என்னுவுள்ள காரியங்களெல்லா மறந்திருக்க என்னைப்பார்த்து எனது காரணங்களைச் சொல்லென்ற தெவ்விதமென்று சொன்னாள் அதுகேட்டு நபிநாயகஞ் சந்தோஷமாகித் தங்களின் கற்பூரவாடைகமழுகின்ற வாயைத்திறந்து அந்தச் சல்காவை யவள் தகப்பன் இறவுசுல்கூல் முகத்திலடித்ததும் அதனாலே சல்கா இருந்த இடம்பிரிந்து பாதையில்வந்ததும் அப்பாதையிலே சத்துருக்கள் வந்துமறித்ததும் அவர்களுடனே சண்டைசெய்தபோது அவர்களடர்ந்து நெருங்கச்சே அல்லாகுத்தஆலா அருளினாலே வானவர்களுதவிக்கு வந்ததும் பின்னர் சத்துருக்கள் (5000) பேர்கள்வந்ததும், அவர்களுடனே சண்டைசெய்ததும் ஆகிய இவைகளெல்லாம் அல்லாகுத்த ஆலாவின் வகியென்ற கட்டளைகொண்டு வானவர்க்கரசர் ஜிபுரீலலைகிஸ்ஸலாமவர்கள் வந்துசொன்னவுடனே தாங்கள் அலிறலியல்லாகு அன்குமுதலாகிய தலைவர்களுடனே அசுஹாபிமார்களை யனுப்பியதும் ஆகிய சகலவையு மிகுமகிழ்ச்சியுடனேசொன்னார்கள். அதுகேட்டுச்சல்காநாயகி அல்லாகுத்தஆலாவைப் புகழ்ந்து சந்திரனைப்போல் முகமிலங்கச் சொல்ல அழிதாகியமுசிலிமாய்த் தமதுடற்பிறந்தாள்மார்களுடனே சிறப்பாக இருந்தாள் அப்போது சூரியனுமறைந்தான்.

சல்காபோர்புரி சருக்கமுற்றிற்று.

## ஜின்வதை - சருக்கம்.

கலிவிருத்தம்.

சொன் னயத்தி றநூலின் மருகர்சீர்
நன் னயத்தலி யார்நவில் வீரமே
எங் நிலத்து மிலங்கிட முன்னிலார்
ஜின் வினத்தைச் சிதைத்ததை யோதுவாம்

## இதன் பொருள்.

திருவாய்திறந்து பேசும்பேச்சிலே திறமையையும் நல்லநயத்தையும் பொருந்திய றசூல்நாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் மருமகரான சிறப்புற்ற நல்லநயத்தையுடைய அலிறலியல்லாகு அன்கவர்கள் சொல்லுகின்ற வீரபராக்கிரமமே எந்தப்பூமியிலும் விளங்கிடத் தங்களுடைய முகதாவில் வந்தஜின்கூட்டங்களைச்சம்ஹாராஞ் செய்ததைச் சொல்லுகின்றும்.

## சரித்திர வசனம்.

இவ்விதஞ் சூரியன் அடைந்ததின்பிறகு பூமிமுழுவதுங் கீர்த்திகொண்ட நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அம்றிபுனுவுமையத்துல் லமீரியவர்களையழைத்து அவருடனே ஐந்நூறு திறத்த அசுஹாபிமார்களைச்சேர்த்து நீங்கள் யாவரும் இவ்விரவிலேயே நமது படைக்கூடாரங்களுக்குச் சிலதூரத்திற் கப்புறம்போய் அங்கே நான்கு எல்கைகளாலும் வரப்பட்டவழிகளைக் காத்துநில்லுங்களென்றுச் சொன்னார் களதுகேட்டவர்கள் மதங்கொண்ட யானைகள்போலே தங்களெல்கையை விட்டுநீங்கிமேகத்தைப்போலுங் கவிதைகளை வாயினல் சுயமாகப்பொழியும் அம்றிபுனு வுமையத்துல் லமீரிமுன்னும் மற்றவர்கள் பின்னுயாகப்போய் லோகங்களெல்லாம் கீர்த்திபராவிய நபிநாயகத்தினுத்தாரப்படிக்கு அவர்கள்சொல்லியவிடத்திற் சென்று ஒருஜாமம் வரையிலே காவற்காத்திருந்தார்கள் அப்போது பத்துநாழிகை இறவுசென்ற பின்னர் அம்றிபுனு வுமையத்துல் லமீரியவர்களும் அசுஹாபிமார்களைந்நூறுபேர்களும் யாதாமொரு தாமதமில்லாமலெழுந்து சத்துருக்களுடைய காரியங்களையறிந்து வருவோமென்று தீர வீரத்துடனே போனார்கள்.

இவ்வித மிவர்கள்வருகிறதைக்கண்டு சத்துருக்களின்வேவுகாரார்களிற் சிலர்களோடிப்போய்க் கூட்டமாக இருக்கிறசத்துருக்கள் படைஞரிடத்திலேசொன்னார்கள். அதுகேட்டவர்கள் பதுங்கியிருந்துமுசிலிமானவர்களுக்குத்தெரியாமல்வந்துவிழுந்து (500) அசுஹாபியார்களையும் அம்றிபுனுவுமையத்துல் லமீரியையும் ஒரேவளையாக வளைந்து அகஸ்மாத்தாகப் பிடித்துக்கொண்டு சிறையாக்கினார்கள். இந்தச்சத்தம் நபிநாயகத்தின் காதிலேகேட்டுத் தங்களைச்சூழ இருந்தவர்களைப்பார்த்துக் காவற்காக்கப்போயிருந்த நமதசுஹாபிமார்களைச் சத்துருக்கள்

பிடித்துக்கொண்டார்களென்று சொல்லி அப்துல்லாஇபுனுசல்சுகுனி
யவர்களைப்பார்த்து ஓகே! அப்துல்லாவே நீர்போய் அங்கே அசுஹா
பிமார்களிடத்தில் நடந்த வரலாற்றையறிந்து வாருமென்று சொன்
னார்கள் உடனே அவர்கள் ஓடிப்போய்ப் பார்க்கும்போது சத்துருக்
கள் (500) அசுஹாபிமார்களையும் அம்றிபுனு வுமையத்துல் லமீரியை
யுஞ் சிறையாக்கிக்கொண்டு போகிறதைக்கண்டு அயர்த்தியாக வரும்
போது அங்கே வழியிலே சத்துருக்களின் நின்றும் ஒருவீரியன் வரு
வதைக்கண்டு அவனைச் சிறையாக்கிக்கொண்டு நபிமுகம்மது சல்லல்
லாகு அலைகிவசல்ல மவர்களிடத்திலே வந்து அவனைவிட்டுச் சத்துரு
க்களின் சதிமானச் செய்கையையுஞ் சொன்னார்.

இவ்விதம் அம்றிபுனு வுமையத்துல் லமீரியுடனே ஐந்நூறுஅசு
ஹாபிமார்களையுஞ் சத்துருக்கள் சிறையாக்கிக்கொண்டுபோகிறார்களெ
ன்று அப்துல்லா சொன்ன சொற்கேட்டு நபிநாயகமவர்கள் மிகுந்த
வியாகூலங்கொண்டவர்களாய் அப்துல்லா சிறைபிடித்துக்கொண்டு
வந்து விட்ட மனுடனை அன்பாகப் பார்த்து ஓகே மனுடனே உனது
பெயரென்னவென்று? கேட்டார்கள். அதற்கவன் என்பெயர் சாரிமெ
ன்று சொன்னான் அதுகேட்டு நபிநாயக மிகமகிழ்ச்சியாகி நீகலிமா
வைச் சொல்லென்று சொன்னார்கள். உடனே சாரீம் சந்தோஷமாக
(லாஇலாக இல்லல்லாகுமுகம்மதுர்றசூலுல்லாகி) யென்றும் அவ்வற்
கலிமாவை யழகாகவோதி முசிலிமாகி நல்ல நயத்துடனே சொர்க்க
பதவியைப் பெற்று நின்றார். அப்படி நின்றவரை நபிநாயகமவர்கள்
பார்த்து ஓகே, சாரிமே நீர் எனக்குரிய தீனில்விசுலாமென்னும் வழி
யிலாகினபடியால் இனி தீனில்விசுலாமானவர்க ளெடுத்துச் செய்யு
முறைகளை யெல்லா மெடுத்துச்செய்து வரவேண்டுமென்று நல்ல வச
னங்களைப் போதித்துச் சில செய்திக ளவருடனேசொல்லத் தொடங்
கினார்கள் அஃதாவது,

நபிநாயகமவர்கள் சாரிமைப்பார்த்து ஓகே சாரிமே! நீரின்றிர
வையிலேயே இவ்விடத்தை விட்டும் நீங்கிச் சத்துருகளுக்கு நீர்
தீனில்விசுலாமான செய்தி தெரியாமற்போய்க் குற்றமில்லாத மந்தி
ரியினிடத்திலடுத்து தீனிலைமையிலான வுன்மனதையவாறிந்து கொ
ள்ள நல்ல யின்பமாகவும் அழகாகவும் நாகரீகமாகவும் அதபு ஒழுங்
காகவும் பேசி அவருக்கென்னுடைய சலாமுஞ் சொல்லி நம்மவர்க
ளைச் சத்துருக்கள் சிறையாக்கிக்கொண்டு அங்கே வருவதாலே, அவர்

களை மந்திரியவர்களினுபாய சூழ்ச்சசத்திலே திருப்பும்படி சொல்லென்று சொன்னார்கள் அதுகேட்டுச் சாரீம் நபிநாயகத்தைப் புகழ்ந்து தாமதமில்லாமல் மந்திரியிடத்துக்குப்போக நடந்தார், அப்போது, சூரியனெழுந்து வெளிச்ச முண்டாகி வருநேரத்திலே சத்துருக்கள் அவ்விராமுழுதும் அசுஹாபிமார்களைக்கொண்டு நடந்துபோய் இறவுசுல்கூலிடத்திலே விட்டார்கள்.

விட்டபோது, இறவுசுல்கூல் அந்த (500) அசுஹாபிமார்களுடனே அம்றிபுனுவுமையத்துல் லமீரியவர்களையுங்கண்டு மிகுந்ததிடத்துடன் மனமகிழ்ச்சியாய், அல்லாகுத்த ஆலாவுடைய முனிவுதங்கிய அவ்விறவுசுல்கூ லிடியைப்போல் அலறிச்சப்தித்து, அம்றிபுனுவுமையத்துல் லமீரியவர்களைப் பார்த்துப் பாவங்கள் பொருந்திய கிழவா! வுனக்கு நரைத்த நரை வீணுக்கல்லாது காரியமில்லை நீதவத்தினுல் வந்த என்மகனைக் கொண்டுபோய்க் கொடுங்கொலை செய்தாயல்லவா? ஆதலாலுன்னுயிரிப்போது என்னிடத்திலாகும்படி செய்தது என் தம்பிறுனை பர்ருசேயல்லாது வேறில்லையென்று பர்ருசைப் புகழ்ந்து தன்கிட்ட நின்ற எவலோர்களைப் பார்த்து இந்த அம்றுக்கிழவனுக்கு ஒப்பாக இந்த பூமியிலே யாரேனுமில்லை யாதலாலிவனை வைத்துப்பார்க்கக்கூடாது சீக்கிரத்தில் ஒரு நீண்ட கழுகிலிட்டுச் சித்திரவதை செய்யுங்களென்று சொன்னான்.

இவ்விதம் ராஜசபையில் நடக்கும்போது நபிநாயகமனுப்பிய சாரிமென்ற முசிலிமானவர் அம்புபோல்விரைவாக நடந்துபோய்க்குற்றமற்றமந்திரியிருக்கின்ற மண்டபமடுத்துமந்திரிகிட்ட அதபுமரியாதையுடனேசென்று நபிநாயகஞ்சொன்ன சலாமுஞ்சொல்லித் தீனுனவர்கள் சிறையாகிய செய்திமுதலான எல்லாம் நபிநாயகஞ் சொன்னதுபோலே சொன்னார். இச்சொல்லானது மந்திரிகாதிலே நெருப்புக்கொள்ளியை நுழைத்ததுபோலாகியுடனே இருப்பிடமிட்டெழுந்து இறவுசுல்கூலிடத்திற் கால்நடையாகப்போய் அவனுக்குச் செய்யும் முறைபோலே தாழ்ச்சி செய்தார். அப்போது இறவுசுல்கூல் மந்திரியுடைய அழகியமுகத்தைப பார்த்துத் தீனுனவர்கள் சிறையாகியதும் அவர்களோடு மிகுந்த திறந்த அம்றிபுனு வுமையத்துல் லமீரியும் வந்து கிடைத்ததும் அவர்களைத்தான் கழுகிலிடச் சொன்னது மாகிய பல செய்திகளுஞ் சொன்னான். அதுகேட்டு மந்திரி மனத்துள்ளே (கவுக்தலாவையோதிக்) காரியமிஞ்சிப்போச்சுதே ஆண்டவனே நானிதற்கென்ன செய்வேனென்று யோசிக்கும்போது தமது நெஞ்சிலோர்

திடத்த சந்தோஷமுண்டாகி ஆண்டவனுதவியால் நயினாயகமவர்கள் திருவாக்குப் பழுதாகாதென்று தேறி யோருபாய தந்திரத்தை நினைத்தார். நினைத்து,

அந்த இறவுசல்கூலைப்பார்த்து மடைகளிலே வாளைமீன்களானவை குதித்துபாய்கின்ற வளம்பொருந்திய தடாகச்சிறப்பையுடைய வாதில் சுகுரூவான இந்தப்பூமண்டலத்தை யொருகுடையிலரசாளும் இராஜவுத்தண்டனே யென்று மிகமிகப்புகழ்ந்து கொடுமைதங்கிய அந்த அம்றுக்கிழவனைச்சீக்கிரத்தில் கழுகிலேற்றியுயிரழியும்படி செய்கிறது இலேசாக வுயிர்போகும் அது நன்றான யோசனையல்ல ஆனால் அந்தப் பொல்லாத அம்றுக்கிழவனைக் கொலைசெய்கிறது பின்னாலே எல்லாதேசத்தாரும் அறியும்படியாய்க் கீர்த்திநெடுநாளும் நிற்கும்படியாய் மகாயிடரும் பங்கமுஞ்செய்து கல்லுமுருகும்படியாக நாட்கள்தோறும் மிகமிகத்தண்டனைசெய்து நமதுகோயிலிலே கொண்டுபோய்த் தனக்கு நிகரில்லாத தம்பிரானுடைய முகதாவிலே கிடத்துப்போட்டுக் குறுபான்கொடுத்தால் மிகுந்ததிறமான புத்தியாகும் அதனாலே இந்த பூமிமுழுதினும் புகழும்பாவி நிற்கும் அதனுடனே நமது தம்பிரான் பர்ரூசும் அடிமைகளாகிய நமதுபேரில் மனமகிழ்ந்து குடிகோத்திரர்க்கெல்லாங் கிருபை யெந்தநாளுஞ்செய்வார். அப்படிப் பலிகொடுப்பது இந்தச்சண்டையினுடைய கடபிடிதீர்ந்து நாம் வெற்றிக்கொண்டு சந்தோஷமாகி யிருக்கும்போது பலவூர்களுக்கும் பலஇராஜாக்களுக்கும் அறிவித்துச் செய்யவேண்டும் அதுமட்டிலே இந்த வாதில் சுகுரூ உட்கோட்டைக்குவெளியிலே யிருக்குங் கடியசிறையிடத்திலே அந்த அம்றுமுதலான தீனனவர்களைக் கடுங்காவலில் வைக்கவேண்டுமென்று சொன்னார்.

இவ்விதம் மந்திரிசொன்ன உயுத்தி புத்திகளை இறவுசல்கூல்கேட்டு மிகுந்த ஆனந்தமகிழ்ச்சியாகி மந்திரியைப் பார்த்து உன்னைப்போலே யொருயூகி இந்தப்பூமியிலெங்குங் கிடைக்காதென்று புகழ்ச்சியாகச் சிரித்துச்சொல்லி முசிலிமானவர்களுக் கெல்லாங் கைகால்களுக்குத் தளைபூட்டவுத்திரவுசெய்தான் அதுபோலே எவலோர்கள்முசிலிம்களுக்குக் கால்கைகளுக்குத் தளைபூட்டியபின்னர் இறவுசல்கூல் நூறுமகா சுத்தவீரியர்களைப்பார்த்து இந்தக்கொடூரம் பொருந்திய தீனனவர்களைச் ஜாக்கிரதையாகக் காவற்காருங்களென்று சொல்லித் தன்மக்களி லொருவனையு மவர்களுக்குத் தலைமையாக்கிக் கொண்டு போய்க் குறித்த சிறைச்சாலையில் வையுங்களென்றுசொன்னான். அது கேட்டுமந்திரி இறவுசல்கூலைப்பார்த்து இராஜாராஜர் புகழும் இரா

ஜனே இவர்களைப் பகலையிலே கொண்டுபோனால் இவர்களுடைய இனத்தாரானநமது சத்துருக்கள் அறிந்துவந்து விழுந்து தட்டிக் கொண்டுபோவார்கள் ஆதலாற் சூரியன்டைந் திரவானபோது அந்தமுகம்மதுக்குத் தெரியாமற் கொண்டுபோகிறது நன்றென்றுசொன்னார். அதுகேட்டு இராஜன்மந்திரிபேரில் மிகுந்தசந்தோஷமாகி அப்படியே இராவுகாலத்திலேயே கொண்டுபோங்களென்று காவற்காரர்களுக்குச் சொல்லிவிட்டுத்தான் மனமகிழ்ச்சியுடனே சிங்காசனத்திலிருந்தான்.

இவ்விதஞ் சிறையாளரை யிராவுகாலத்திலேயேசிறைச்சாலைக்குக் கொண்டுபோகுஞ்செய்தியை மகாபுத்திசாதுரியமுள்ள மந்திரியானவர் நபிநாயகத்திற்குத் தெரிவிக்கவேண்டுமென்ற எண்ணத்துடனே தமதுவீட்டுக்குவந்து முற்பட இசுலாத்திலாகிய சாரிமென்னு முசிலிமானவரையழைத்து அவருடனே இராஜசமுகத்தில் நடந்த சகல செய்திகளையும் விபரமாகச்சொல்லி நீபோய் நபிநாயகமவர்களிடத்தில் இச்செய்திகளைச் சொல்லிச்சிறையாளிகளை இரவைக்குக் கொண்டுபோகுந்தருணத்தில் அசுஹாபிமார்களை யனுப்பி மீட்டிக்கொள்ளச்சொல்லென்று சொன்னார். அதுகேட்டுப் புத்தியில்மிகுந்த செவ்விய சாரீம் வெகுசீக்கிரத்திலேபோய்த் துவக்கமும் முடிவுமில்லாத ஆண்டவனின்றூதாங்கர் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு மகிழ்ச்சியுண்டாகும்படி சொன்னார் அதுகேட்டு நபிநாயக மந்திரிக்குத் துஆச்செய்து பின்னர் அலிறலியல்லாகு அன்குவையும் அப்துல்லா இபுனுசுல்குனியவர்களையும் இருநூறு அசுஹாபிமார்களுடனே அந்தச்சத்துருக்கள் சிறையிற்சிக்கிய முசிலிம்களைக்கொண்டு வருகிற பாதையை நோக்கிப்போகும்படி யனுப்பினார்கள்.

உடனே இவர்கள் யாவருஞ் சந்தோஷமாகிக் குதிரைமேலே போனாலந்தச்சத்த மெதிரிகளுக்குத் தெரியுமென்று நினைத்துக்கால் நடையாகக் குறுக்குவழியிலேவிழுந்து அப்துல்லா முன்னாலேபாதை காட்ட அவர்களுக்குப் பின்னாலே அலிறலியல்லாகு அன்குவும்மற்ற பேர்களெல்லாம் அவர்களுக்குப் பின்னுமாக ஓர் பிர்மாண்டமானமலையின்பேரிலேறிச் சதிமானஞ்செய்யு மிருகங்களும் முட்செடிகளு மிகுந்திருக்குமோர்காட்டிலே போகும்போது அங்கே கொடூரமாகிய சிறியமிருகஜாதினங்கள் அனேக மெதிரிலே வருவதால் அல்லாகுத்தஆலாவின் அறுஷ-ப்புலியலிறலியல்லாகு அன்குமுன்னாலே நின்று யாவரையும்பார்த்துப் பூமியில் ஒருவர்வைத்த அடிக்குமேலே மற்

ருருவாடி மிதித்து வாருங்களென்று சொல்லித்தாங்கள்சிங்கத்தைப்
போல் நடந்தார்கள். அப்போதங்கே ஓர் படைக்கூட்டமாகப் புலிக்
கூட்டங்கள்முன் வந்தெதிர்த்து வரக்கண்டு அவைகளை அலிறலியல்
லாகு அன்கவர்கள் வெட்டித்தெற்கும் வடக்கும் அவைகளின் துண்
டஞ் சிதறிவிழும்படி செய்தார்கள் இப்படிவெட்டியும் அப்புலிக்கூட்
டங்கள் மேலும்மேலும் கணக்கிலடங்காத கூட்டங்கள் வாலைமுறுக்கி
இடியைப்போலே சப்தித்துக் கண்கள்நெருப்புத் துண்டற்போற்
கதுவவந்ததுகள்.

அதுகண்டு அசுஹாபிமார்களெல்லா மிகவும் கலங்கித்திகில்கொ
ண்டார்கள் அப்போது அப்துல்லாஇபுனுசுல்சுருனி அப்படிக்கலங்கிய
அசுஹாபி மார்களைப்பார்த்து அல்லாவின் பேரிலாணையாக நான் இன்
றய தினம்போ லென்றைக்கு மென்னுடைய நெஞ்சிலேபயங்கொள்ள
வில்லை அஃதேனெனில் வானம்பூமிவரையு மொரேநெருக்கமாகப்புலி
கூட்டங்கள் வரக்கண்டேனென்று சொன்னார். அதுகேட்டு யாவரு
மிகுந்த கலக்கங்கொண்டார்கள் அப்போது அங்கே கூட்டமாகவந்த
புலிக்கூட்டங்களையெல்லாம் அலிறலியல்லாகு அன்குவாளினாலேவீற்
றுவீற்றுய்வெட்டி வீழ்த்தினார்கள் ஆனால்அலிறலியல்லாகு அன்குடை
யவாள் புலிகளின்வாயிற் பாய்ந்து வால்மட்டிலே கிழித்துவிடுவதால்
நெருப்புப்போ லெரியுங் கண்களையுடைய புலிகளிறந்து அப்பாதை
யெல்லாம் பாய்விரித்தது போலேகிடந்தன இவ்விதம் புலிக்கூட்டங்
களைமனுப்புலியாகிய அலிறலியல்லாகு அன்குவெட்டி ஜெயம்பெற்று
அவ்விடத்தைவிட்டு நீங்கி அசுஹாபிமார்களுடனே ஓர் சிற்றடிப்
பாட்டையாகப் போகும்போது சூரியனுமடைந்தான்.

அப்படிச் சூரியனடைந்து இருளானஇராவடுத்தபோது அங்கே
வால்களினாலே நெருப்புத்துண்டங்களைக் கக்கிக்கொண்டு ஓர் கணக்கி
லடங்காத ஜின்கூட்டங்கள் அந்தக்காடுகள் அதிரப்பூமிகுலுங்கப்பார
த்தவர்கள் பயந்து நடுநடுங்கும்படியாக வந்தன. அந்தஜின்கள்வாயினு
ங் கண்களினும் எழும்புகின்ற அக்கினிச்சுவாலைவாவி முகிலிமானவர்
கள் சரீரமெல்லாம் ஆறுத காய்ச்சலையுடையவர்களின் மேனிபோலே
சூடுண்டாயிருந்தது. இவ்விதம்ஜின் கூட்டம்வந்தபோது அலிறலியல்
லாகு அசுஹாபிமார்களையெல்லா மொரேபக்கத்தி லாக்கிவிட்டுத்
தங்களுடனே முப்பது வீரியர்களைக் கூட்டிக்கொண்டு (லாவுலவலாக்
கூவத்த இல்லாபில்லாகில் லலீயுல்லலீமென்னும்) இந்தக்கைசேதவாக்
கியத்தை யோதிக்கொண்டு மகாதீரத்துடனே நிற்கும்போதுஜின்கூட்

டங்கள்கிட்ட அடுத்தன; அவைகளின்வாய் மூக்குகண்களிலிருந்து வருகின்ற அக்கினிப்புகைக்கு முன்னே அசுஹாபிமார்களுக்கு நிற்கக்கூடாமையாகிப் பின்னடைந்து நிற்க அலிறலியல்லாகு அன்கவர்கள் முன்னேறி மனத்திலே யொருகடுகளவும் பயமில்லாமற் சிங்கேறுபோலே கர்ஜித்துத் தாரைவாளினாலே அந்தஜின்கூட்டங்களை யெல்லாஞ் சின்னபின்னமாக வெட்டி ஹதஞ்செய்தார்கள்.

இவ்விதம் அலிறலியல்லாகு அன்கு இடசாரிவலசாரிதிரும்பிவெட்டுவதால் மலைபோலுள்ளஜின்கள் வயிறுபஞ்சிப்போர்கள் போற்சரிந்துசரிந்துவிழுந்தன; சிலஜின்களுடையமாமரம்போன்றபுரடிகளறுந்து விழுந்தன; சிலஜின்களின்சிறுமலைபோன்றதலைகளறுந்து விழுந்தன; சிலஜின்களின் பெரும்பருவதம் போன்றவுடலறுந்துவிழுந்தன, இவ்விதத்தி லெழுநூறுஜின்கள் செத்திறந்து விழக்கண்டமற்றஜின்கூட்டங்களெல்லாம்பயந்து தொலைதூரம் ஓடிவிட்டன. இவ்விதஞ்ஜின்களுடனே அலிறலியல்லாகு அன்குசெய்தசண்டையில்விலகி நின்ற அசுஹாபிமார்களில் முப்பத்திரண்டுபேர்கள் கொண்டபயத்தாலும் ஜின்கள் அவர்களை யெடுத்துநல்லடக்கஞ்செய்துவிட்டு அலிறலியல்லாகு அன்குமுதலாகிய யாவரும் அவ்விடத்தைவிட்டும் நடந்துபோயினார்கள். அப்படிப்போன தீனனவர்கள் இறவுசுல்கூலின் ஆறுவதுகோட்டைமதிலை யடுக்குஞ் சமயஞ் சூரியனுமுதித்துவரக்கண்டு யாவர்களும் ஒருகாகமும் அறியாத தன்மையாய் மலைப்பொதும்புகளிலே புகுந்து ஒளித்திருந்தார்கள். அப்போது அலிறலியல்லாகு அன்கவர்கள் அப்துல்லா இபுனுசுல்சுகுனியவர்களைப்பார்த்து இவ்விடத்திலிருக்குமூர்களில் நீர்தந்திரமாகப்போய்ச் சத்துருக்களுடைய காரியங்க ளெவ்விதமென்று நன்றாயறிந்து வாருமென்று சொன்னார்கள் அதுகேட்டு உடனேயப்துல்லா இபுனுசுல்சுகுனியவர்கள் ஏழையர்கோலங்கொண்டு கண்குருடனென்று கண்ணையொருவிதமாக மூடிக்கொண்டு கையிலொரு கோலுமெடுத்துக்கொண்டு முதுகையுங்கூனிக்கொண்டு கந்தைத்துணிகளையு மணிந்துக்கொண்டு பாதைகளிலே கையிலிருக்குங்கோலாலே யூன்றிக்கொண்டு பலையடிகளைக் கடந்துபோய்க் குடிபதியாக இருக்கிற இடங்களில் மெய்யாமெய்யாய்க் குருடர்போலவே ஒவ்வொரு அடியெடுத்துவைக்குந்தோறுங் கோலைப்பூமியிலே தட்டித்தட்டிக் கால்தவறுமற்சரீரத்தைக்குலுக்கிக் குலுக்கி

அங்கே இருக்கும் வீடுகள்தோறும்போய் அம்மா நான் மிசிக்கீன் அதினுங்குருடன் பசியினால் வாடினவன் ஆதலால் எனது பசிப்பிணி தீரும்படி செய்தா லுங்களுக்குத் தருமநேத்தியுண்டாகு மென்று சொல்வார்.

அதுகேட்டு அந்தச் சத்துருக்க ளானவர்கள் அப்துல்லாவின் சாளயப் பாட்டைப் பார்க்கவந்து கூடுவார்கள் அப்படிக் கூடுபவர்களின் காதுக் கின்பமாகும்படி நல்ல நல்ல இராகமான பயித்துகளை யோதுவார். அந்தப் பயித்துகளின் பொருளானது நானுகிறவ னாட்டை யிழந்துவந்தவன், மிகவு மிரக்கிறவன் எதிர்த்து வாதாடுகின்ற தரித்திரமென்னும் பகைவனின் மூர்க்கமே பெரியதாகியதால் இனஞ்சனங்களை விட்டும் நீங்கினவன் சொல்லுகின்ற ஸக்காத்துக்குரியவன்; ஆதலால் அந்தப்படி ஸக்காத்து முதலாகிய தர்மஞ் செய்பவர்களுக்குக் குபலென்னுந் தம்பிரானுடைய அனுக்கிரக முண்டாகு மென்று சொல்வார். இவ்விதம் அப்துல்லா அவர்கள் சொல்லுகின்ற சொல்லுடையபொருள் நயத்தைக் கேட்டுக் காபிரீன்கள் மிகுந்த சந்தோஷமாகினார்கள். அதுகண்டு அப்துல்லா இபுனு சுல்சுகுனியவர்கள் சண்டையிலே மடிந்துபோன சத்துருக்களை நினைத்துக் கொஞ்சம் பொய்யழுகையும் அழுதுகொண்டு தீனவர்களைப் பகைவரென்றுஞ் சொல்லுவதுடனே நபிநாயகத்தையு மிழிவுபேசி வேதத்தின் வசனங்களுக்கு மழிமாண்டம் பேசுவார், அதுகேட்டுக் காபிரீன்களிவர்பேரிலே சந்தோஷமாகிக் கோதுமைரொட்டியும் சமைத்த இறைச்சியும் பணமுமவரவரே கொண்டுவந்து கொடுத்தார்கள். அவைகளைச் சுத்த வீரியரான அப்துல்லா பெற்றுக்கொண்டு கொடுத்தவர்களை மிகவும் புகழுவார் இவ்விதமங்குள்ள வீடுகள் தோறும் கொடுத்த பணங்களையுந் தீன்பதார்த்தங்களையும் சுமையாகக் கட்டிக்கொண்டு மேகக்குடையுடைய நபிநாயகமவர்கள் மருகரான அலிறலியல்லாகு அன்கவர்களிருக்கு மெல்லைக்கு வந்து உறட்டி முதலான தீன்பதார்த்தங்களை அவர்கள் சமுகத்திலே வைத்து தமக்குக் கிடைத்த பணத்தொகையையுங் காட்டித் தாம் குருடரின் வேஷங்கொண்டுபோய் இவைகள் சம்பாதித்துவந்தேனென்றங்கிருக்கும் அசுஹாபிமார்களெல்லா மனமகிழும்படியாகச் சொன்னார்.

பிறகு அலிறலியல்லாகு அன்கு முதலாகிய யாவரும் அப்துல்லா அவர்கள் கொண்டுவந்த ரொட்டி முதலிய தீன்பதார்த்தங்களைப் புசித்து தண்ணீரருந்தி அல்லாகுத்தஆலாவைப் புகழ்ந்திருக்கும்போது ஓர்கக்கத்திலே குதிரைகளினடனத்தினாலே தூசியெழுந்து வரக்கண்டு அந்தவழியை நோக்கி யலிறலியல்லாகு அன்கவர்களும் அப்துல்லா

இபுனுசுல் சுகுனியும் இருப்பிடம் விட்டெழுந்துபோய்ப் பார்க்கும் போது அங்கே சத்துருக்கள் ஒட்டகை எருது கோவேறு கழுதை இவைகளிலே தொகை தொகையாக ஊண்தீன் ரஸ்துகளேற்றிக் கொண்டு இறவுசுல்கூல் பாளயத்திற்குப்போகிறார்கள்; அப்படிப்போகிறவர்களை அப்துல்லா அவர்கள் நெருங்கி யவர்களைப்பார்த்து ஓகே காபிரீன்களே நீங்கள் செத்திறந்து போகிறதற்கு முன்னிற் கொண்டு வந்த உண்டிகளுடனே வாகனதிகளையும் விட்டு விட்டோடிப்போங்கள்; அப்படி நீங்கள் தவசமேற்றிய ஒட்டக முதலியவைகளை விட்டு விட்டுப் போகாதிருப்பீர்களானல் உங்களையெல்லாம் நான் பிடித்துக் கட்டிப்போடுவேனென்று சொன்னார்.

அதுகேட்டு அந்தக்காபிரீன்கள் அப்துல்லா அவர்களைப்பார்த்து இவன்பயித்தியக்காரன்பித்தவெறியினாலே பிதற்றுகின்றானென்றுபுதுமையாகிக் கைகொட்டிச்சிரித்து நின்றார்கள். அதிலே ஒருகொரோமாகிய காபிரானவன் அப்துல்லா அவர்கள்பேரிலெதிர்த்தடர்ந்து வந்தான் அவனை அப்துல்லா அவர்கள் புலியைப்போலே பாய்ந்து கையிலிருந்த கருவியினாலே குத்திக்கொன்றார்கள். அதுகண்டு மற்றச்சத்துருக்களெல்லாம் ஒன்றாக அப்துல்லா பேரிலடர்ந்தேறினார்கள் அப்போது இராஜருடைய கிரீடத்தலைகளைக் கைகளாலே திரிக்கியெறியுகின்ற அலிறலியல்லாகு அன்கவர்கள் பாய்ந்து அக்கூட்ட முடிமை வரையும் வெட்டினார்கள் அப்படிச்சத்துருக்களெல்லாமிறந்து போன பிறகு அவர்கள் கொண்டுவந்த ஒட்டகை எருது கோவேறுகழுதை முதலிய சுமைவாகனங்களைத் திரட்டியோட்டிக்கொண்டு முசிலிம்களிடத்தில் வந்து அவ்வாகனத்தின் மேலேற்றியிருக்கும் உண்டிதின்றிகளையெல்லா மிறக்கி மலைபோலே குவித்து வைத்தார்கள்.

அப்போது சூரியனும் அடைந்தான்; அவ்விருளிலே முசுலிமானவர்கள் அல்லாகுத் தஆலாவைப்புகழ்ந்து இருக்கும்போது தங்களுக்கு நேராக வழியிலே பெருங்கூட்டமாக மெழுகுவத்தி யெரித்துக்கொண்டு மனுஷருடைய கூட்டங்கள் வரக்கண்டு இஃதியாவர் பார்ப்போமென்று முசிலிம்களெண்ணங்கொண்டு இருக்கும்போது வந்த கூட்டத்தார்கள் அலிறலியல்லாகு அன்கவர்கள் அசுஹாபிமார்களுடனே பிறங்கி யிருக்கின்ற மலைப்பொதும்புக்கு அடுக்க வந்திறங்கினார்கள் அதுகண்டு அலிறலியல்லாகு அன்கவர்கள் அப்துல்லா அவர்களைப் பார்த்து ஓகே அப்துல்லாவே நீர் இதோவந்திறங்கியிருக்கிற கூட்டத்தார்களை யாரென்று பார்த்து வாருமென்று சொன்னார்கள் அதுகேட்டு உடனே அப்துல்லா அவர்கள் போய்ப் பார்க்கும் போது அங்கே சிறையாகிய முசிலிமா

னவர்களையும் அவர்களுக்குக்காவலாகவந்த காபிரீன்களுடனே இற வுசுல்கூலுடைய மகன்குதிரையேற்றத்தில் வல்லமையுள்ளவனுகிய ஜனுதீலையுங்கண்டு சீக்கிரமாகஓடிவந்து அலிறலியல்லாகு அன்கவர் களுக்குச்சொன்னுர்.

அதுகேட்டுடனே அலிறலியல்லாகு அன்கவர்கள் அசுஹாபி மார்களை எழுப்பிக்கொண்டு சத்துருக்களைநாடிப்போய் அவர்களையடுத் தபோது அங்கே அம்றிபுனுவுமையத்துல்லமீரியவர்களை இறவுசுல்கூ லுடையமகன்ஜனுதீலென்பவன் வாய்க்குவாதவம்புந்துய்பும் பேசிக் கொடூரமாயடிக்கின்ற வேதனை பொறுக்காமல் அழுதழுது அம்றிபுனு வுமையத்துல் லமீரியவர்கள் அல்லாகுத்த ஆலாவைநோக்கி ஆ! ஆண் டவனே கொடியபாவிகளாகிய காபிரீன்களென்ற யானைக்குச்சிங்கம் போன்ற இராஜாவாகிய அலிறலியல்லாகு அன்குவை யெனக்குதவி யாகவந்து இந்தத்துன்பத்தை நீங்கச்செய்வாயாகவென்று துஆக் கேட்டார்கள். அந்தச்சப்தம் அலிறலியல்லாகு அன்கவர்கள் காதிலே விழுந்தது அதுகேட்டுடனே அலிறலியல்லாகு அன்கவர்கள் அல்லா குத்த ஆலாவைப்புகழ்ந்து தங்களுடைய திருவாயைத்திறந்து, ஓகே! அம்றே பனீகாலிபுக் கிளையிலுள்ள புலிவருகின்றது. ஆதலால் அல் லாவுடைய கிருபையினுல் உம்முடைய துன்பத்தை அந்த அலிப்புலி மாற்றிவைக்கு மென்றசொல்லுடனே இரட்டைக்கவர்தங்கிய துல்பு கர்வாளை யசைத்து வீசிக்கொண்டு மற்றுந் தீனுனவர்களுடனே மான் கூட்டத்திலே புலிகள் நுழைந்ததுபோலே சத்துருக்கள் கூட்டத்தில் நுழைந்து வாள்வீசினுர்கள்.

அதுகண்டு சத்துருக்கள் முசிலிம்களைப்பார்த்து நீங்கள் இங்கே எவ்விதம் வந்தீர்களென்று கால்பதறி கைபதறி மனம் நடுங்கிக்கேட் டார்கள் அதற்குமுசிலிம்கள் அக்காபிரீன்களைப்பார்த்து குற்றமான மனமிருண்ட குபிர் கூட்டங்களே நாங்கள் அல்லாகுத்த ஆலாவுடைய அருளானகூட்டங்கள் ஆகையால்எங்களுக்கொரு அவஸ்தைவருங்கா லங்களில் அந்தஆண்டவன் இரங்குவானென்றுசொல்லி அந்தச்சத்து ருக்கள்பேரில் அலிறலியல்லாகு அன்கவர்கள் முன்பக்கத்திலும்மற்ற அசுஹாபிமார்கள் பின்பக்கத்திலுமாக அடர்ந்தேறிச்சிங்கநாதமிட்டி ரைந்து நெருங்கியபோதுசத்துருக்கள் வந்தவழியும் அவர்கள்மனமுந் தடுமாறிமுசிலீம்களைப்பார்த்து உங்கள்சிறைகளை நீங்கள்ஒப்புக்கொ ண்டு எங்களை விட்டுவிடுங்களென்று சொன்னுர்கள். அதுகேட்டு அலி றலியல்லாகு அன்குகொண்டகோபத்துடனே அந்தச்சத்துருக்களைப் பார்த்து நீங்கள் வரிசையாக கலிமாச்சொன்னுல் நாங்கள் சந்தோஷ மாகி யுங்களைவிட்டுவிடுவோம் அல்லாதவரையில் வெட்டுவோமென் று நெருங்கியபோது சத்துருக்கள் மரப் பாவையைப்போலே திகை

த்து நின்றார்கள், உடனே அவர்களை முசிலிமானவர்கள் வளைந்து சிறையாக்கினார்கள்.

இவ்விதஞ் சிறையாக்கிய இருண்டமனக்காபிரீன்களுக்குத் தலைமையாகவந்தஇறவுசுல்கூல் மகன் ஜனாதீலென்பவன் ஒருதந்திரத்தினாலே தப்பியோடினான். அதுகண்டுமுசிலிம்கள் அவனைத்துறத்திப்பின்றொடர்ந்து போனார்கள் அப்படிபின்றொடர்ந்த அசுஹாபிமார்கள்பேரிலே ஜனாதீலெதிர்த்துத்தன் குதிரையை இடசாரிவலசாரிசுற்றவிட்டு வாள் வீசி இருபது அசுஹாபிமார்களை வெட்டிக்கொன்றான். அதுகண்டு அலிறலியல்லாகு அன்குகோபமாகி ஜனாதீலையெதிர்த்து வாள்வீசினார்கள் அவனுமெதிர்த்துவாள்வீசினான் இவ்விதமிருவரும் ஒருவருக்கொருவர் இளைக்காது வெட்டிக்கொண்டு நிற்குந்தருணத்தில் அலிறலியல்லாகு அன்கு ஜனாதீலுடைய வாட்பிடித்த கையைவெட்டி அவனைச் சிறைபிடித்துக் கொண்டு தீனானவர்கள் சிறையையு மீட்டுக்கொண்டு அல்லாகுத்தஆலாவை மிகமிகப்புகழ்ந்து போற்றினார்கள்.

முன்னர் அக்காட்டிற் பிடித்தசிறையையும் ஒட்டக முதலாகியவாகனங்களிலேற்றி வந்ததவச்சுமைகளையும் பின்னர் பிடித்தசிறையையும் திரட்டித் தீனதீன்முகம்மதென்ற சத்தத்துடனே தக்குபீர் முழக்கிக் கொண்டு நபிநாயகமவர்களிடத்தில்வந்து அவருக்கு சலாம் சொல்லி இருவிதங்களாகப்பிடித்த காபிரீன்களுடைய சிறைகளையும் தானியச்சுமைகளையும் அவைகளேற்றிவந்த ஒட்டகங் கோவேறுகழுதை குதிரை எருதுகளையும் ஒப்பித்துப் பின்னர்தாங்கள் போனவிடத்திலே புலிக்கூட்டங்கள் வந்தெதிர்த்ததும் அவைகளைத் தாங்கள் எதிர்த்து வெட்டிக்கொன்றதும் அதிலே அசுஹாபிமார்கள் இருபதுபேர் ஷகீதாகிச் சுவர்க்கஞ் சேர்ந்ததும் பின்னர் தங்கள் மலைப்பொதிம்பிற் போய் ஒளித்திருந்ததும் அப்போது அப்துல்லா அங்கிருக்குங் காபிரீன்களிடத்திற்போய்க் குருடர்வேஷங்கொண்டு உண்டிதின்றி வாங்கிக் கொண்டு வந்ததும் பின்னர் சத்துருக்கள் தவசங்கொண்டு வந்ததும் அவர்களையடர்ந்து பிடித்துச் சிறையாக்கி அந்தத்தவசச்சுமைகளையும் அவர்களேற்றிய வாகனங்களையும் பிடித்துப் பிறகு பாவிஇறவுசுல்கூலுடைய மகனுடனே நூறுசத்துருக்கள் தீனானவர்களைக் கொண்டுவந்தது, அவர்களுடனே யெதிர்த்துச் சண்டைசெய்து சிறையாக்கித் தீனானவர்களுடைய சிறையைமீட்டிக் கொணர்ந்ததும் ஆகிய இவைகள் யாவையும் சொன்னார்கள் இவ்விதம் அலிறலியல்லாகுஅன்கு சொன்னதுகேட்டு நபிநாயகமிகுந்த மகிழ்ச்சியாகி அல்லாகுத்த ஆலாவைப் புகழ்ந்திருந்தார்கள், அப்போது சூரியனும் அடைந்தான்.

ஜின்வதைச் சருக்க-முற்றிற்று.

# இக்கிரிமத்தும் ஜனுதீலுமீமான்கொண்ட சருக்கம்.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்

மருவா சனேயே கமழ்மேனி வடிவா ரிறசூல் திருத்தோழர்
பெருஞ்போ தினிலே சிறைபிடித்த புரட்டன் றவுசுல் கூல்பயந்த
விரிதோ ளிக்கிரி மத்துவுமா விறல்கொண்டு டிடுஜனுதீலு
மரிதா கியசீ ரீமான்கொண்டழகா கியவை யறைந்திடுமோம்

## இதன்பொருள்.

பொருந்துதலான வாசனைகமழுந் திருமேனியையுடைய றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய அழகானதோழர்கள் உயுத் தஞ்செய்யும்போதிலே சிறையாகப்பிடித்தபுரட்டுதனத்தையுடையஇற வுசுல்கூல் பெற்றமக்களான விரிந்ததோளையுடைய இக்கிரிமத்தும் மகத்தாகிய தீரத்தைக்கொண்டிருக்கும் ஜனுதீலும் சொல்லஅரிதா கிய சிறப்பான ஈமான்கொண்டிசுலாத்தி லழகாகப் பொருந்தியவைக ளைச் சொல்லுகின்றும்

## சரித்திர வசனம்.

பின்னர், நபிநாயகமவர்களும் அசுஹாபிமார்களும் சூரியோதய த்திற்குமுன்னர் எழுந்தருளியாகி அல்லாகுத்தஆலாவைத்தொழுது மகிழ்ச்சியாயிருக்கும்போது நபிநாகம் அசுஹாபிமார்களைப்பார்த்து எனதன்பான தோழர்களைசிறையாகப் பிடித்தகாபிரீன்களைக்கொண் டுவாருங்களென்று சொன்னுர்கள். அதுகேட்டு அவ்வசுஹாபிமார்கள் அந்தச் சிறையாளர்களை யெல்லாங்கொண்டுவந்து விட்டார்கள்; விட்ட சிறையாளரை நபிநாயகம்பார்த்து ஒகேமனுடர்களே நீங்கள் கலிமாச் சொல்லுங்களென்று சொன்னுர்கள். அதற்கவர்கள் மறுத்தார்கள் அதனுல் ஜனுதீல்ஒருவன்தவிர மற்றவர்களை யெல்லாங்கழுகிலேற்ற ச்செய்தார்கள் இங்கே இவ்விதமாய்நடந்த செய்தியைப் பாதகன் இற வுசுல்கூல் கேட்டுத்தன்மகன் ஜனுதீல்தவிரமற்றபேர்களை யெல்லாம் கழுகிலிடப்பட்டார்களேயென்று மிகுந்த வியாகூலமாக அழுதுசஞ் சலித்திருந்தான்

அப்போதுவெற்றிபொருந்திய அலிறலியல்லாகுஅன்கவர்களும் அம்றிபுனுமகுதீக்கரீபும்,காலிதுறலியல்லாகுஅன்கும், பலமிகுந்தஅற ம்மிபுனுதையானும், மிகுதாதுறலியல்லாகுஅன்கும், மற்றஅசுஹாபிமா ர்களுமடர்ந்து அகங்கரித்துச் சத்துருக்களைத்தேடி முன்னேறிப்போ

பினார்கள். அதுகண்டு சத்துருக்களு மெதிர்த்துவந்து சண்டைசெய்
தார்கள் இவ்விதம்இரண்டு படைகளும் நெருங்கிச் சண்டைசெய்வ
தினாலே பூமியில்நின்றுந் தூசெழுந்து சூரியனுடைய பிரகாசத்தை
மறைத்தது. அந்தஇருட்கூட்டம் வீரர்கையிலிருக்கும் ஆயுதத்தின்
பிரகாசத்தினால் நீங்கியபோது முசிலிம்களேறிய குதிரைகள் சத்து
ருக்களுடைய தலைவர்கள் தோள்கள் கால்கள் நெஞ்சுகள் நைந்துபிய்ந்
து போகும்படியாய்ப் பாய்ந்து திரிவதாலும் அசுஹாபிமார்களுடை
ய வாட்கள் சத்துருக்களுடைய நெஞ்சைக் கீறிப்பிளப்பதாலும் இர
த்த முடம்பெல்லாநனைந்து சத்துருக்கள் இறந்தவர்கள்போக மற்ற
வர்கள்பயந்து பின்னடைந்தோடிப் போயினார்கள்.

இந்தச்சண்டையில் (5000) காபிரீன்கள் இறந்துநரகமடைந்தார்
கள் முசிலிம்கள் மூந்நூறுபேர்கள் ஷகீதாகிச் சுவர்க்கலோகஞ் சேர்ந்
தார்கள் அங்கேஓடிய காபிரீன்கள் ஐந்தாவது கோட்டையிலேபோய்ச்
சார்ந்தார்கள். அப்போது தீனானவர்கள் கொண்டதீரத்துடனே அவ்
வைந்தாவதுகோட்டையிலும்போனார்கள் அதுகண்டுகாபிரீன்கள் பய
ந்து அவ்விடத்தையும்விட்டு ஆறுவதுகோட்டையிற் போயிருந்தபோ
து யாவருக்கு மின்பமாகிய நபிநாயகந்தங்கள் குதிரைப்பதாதி வீரர்க
ளான அசுஹாபிமார்களுடனே அவ்வாறுவது கோட்டையிலே போய்
மகிழ்ச்சியாகக்கூடாரமடித் திருந்தார்கள். அப்போது சூரியனடைந்து
காபிரீன்களை மனத்திருளைப்போலே எங்குமிருட்படர்ந்தன அந்த
இருளானது காபிரீன்களோடி யொளித்ததுபோ லொளிக்கும்படியாய்
நபிநாயகமும் அசுஹாபிமார்களுஞ் சிறந்திருப்பது போலே சந்திரனு
ம்நட்சத்திரக் கூட்டங்களுதயமாகித் தீனானவர்கள் மனம்போலே
பிரகாசித்தன.

அப்போது கள்ளத்தனமாகிய காபிரீன்களுடைய கருத்தென்கிற
வெள்ளத்தினூடே பயமென்கிறவாய்க்காலுண்டாகி யதிலேபுத்தியெ
ன்கிற வோடம் செல்லஅரிதாகி மெலிவுதங்கிவாடி இருக்கிறகாபிரீன்
களும் தீனில்விசுலாத்தில் நிலைபெற்றமுசிலிம்களும் ஒரேகோட்டையி
லிருக்கின்றதால் இனிநடக்குங்காட்சியை நாம்பார்க்கவேண்டுமென்று
வருவதுபோலே சூரியனுதயமாகினான் அச்சூரியோதயத்திற்கு முன்
னர் அரிதானகீர்த்தியையுடைய முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல
மவர்களும் அசுஹாபிமார்களுமெழுந்து அல்லாகுத்தஆலாவைத்தொ
ழுது மகிழ்ச்சியாயிருக்கும்போது நபிநாயகமவர்களைப் பார்த்துமுசிலி
மானவர்கள் சகலவஸ்துவையுமுடைத்தான ஆண்டவனின்மகிழ்வான
தூதாங்களே உயுக்கத்திலே நாள் அதிகரித்ததால்இனி இறவுசுல்கூல்

இறந்தவர்களில் நின்றும் ஜனங்களை யதிகஞ்சம்பாதித்துகொண்டு சண்டைக்கு வருவானென்று சொன்னார்கள் அதுகேட்டு நபிநாயகம் அவ்வசுஹாபிமார்களைப் பார்த்து முசிலிம்களே இனி நாம் வெற்றி யடைய நாட்கள் நீடிக்காது ஆகையால் நீங்கள் வலுத்தத்திறத்துடனே இருக்கிற சீக்கிரத்தில் வெற்றியை அடைவீர்களென்று சொன்னார்கள். அதுகேட்டு அசுஹாபிமார்கள் குதிரையின் மேலேறினார்கள் அதுகண்டு .சத்துருக்களும் குதிரைகளிலேறிக் கடலிறைந்ததுபோல விரைந்தார்கள். அப்போது பாதகனான இறவுசுல்கூல் மகன் இக்கிரிமத்தென்பவன் குதிரையிலே சவாராகித் தன் றகப்பனிடத்திலே போய்ப் படைக்குப்போக எனக்குத்திரவு தாருமென்று கேட்டான். கேட்ட,

அவ் விக்கிர்மத்தென்பவன்பேரில் அவனுடைய தகப்பனான இறவுசுல்கூல் கிருபையாய் மகனான அவ்விக்கிரிமாவைப் பார்த்து அந்த வஞ்சனைக்கார முகம்மதுடைய படையதிகமா யிருப்பதால் என் கண்மணி மகனே அங்கே நீபோனால் அவர்களுன்னை வெட்டியாவது போடுவார்கள் அல்லது முன்னருன்னுடற்பிறந்தான்மார்களைச் சிறைப் பிடித்து அவர்களுடைய மார்க்கத்தி லாக்கினதுபோலே சிறையாவது பிடித்துக்கொள்வார்கள். ஆதலால் என்னருமையான மகனே நீபோகப்படாதென்று சொன்னான் அதுகேட்டு இக்கிரிமா தன் றகப்பன் இறவுசுல்கூலைப் பார்த்து என்னருமையான தகப்பனே அவர்களுடைய சிறுவஞ்சனை என்னிடத்திலொன்றும் பலியாது நான் பிரகாசமான வாளினால் வெற்றியுடனே அவர்கள் படையணிகள் வீழ வெட்டியவர்களைச் சவச்செய்வேனென்று சொன்னான். அதுகேட்டு இறவுசுல்கூல் இவனை விலகினால் நிற்கமாட்டானென்றெண்ணி மகனை அவ்விக்கிரிமாவைப் பார்த்து நமது தேவரான பார்சுடைய அருளுனக்குண்டாகும் போவென்று சொன்னான். அப்போது உடனே இக்கிரிமா ஐந்து கதிகளென்னும் நடைகளையுடைய குதிரையிலே சவாராகிவந்து முசிலிம்களைச் சண்டைக்கழைத்தான்.

அப்போது அதுமாமுல்லசுகரி றலியல்லாகு அன்கு தாங்களேறிய குதிரையை நடாத்திக்கொண்டு இக்கிரிமா வுடனே வந்தெதிர்த்து வாள் வீசினார்கள் அந்த வாள்வீச்சை இக்கிரிமா தட்டிவிட்டுத் தன் வாட்புடங்கா லிடித்து அவர்களைக் குதிரையில் நின்றுங் கீழே தள்ளிப்பூமியிற் போட்டிழுத்துக்கொண்டு போய்ச்சிறையாக்கி விட்டு மறுபடியும் வேகமாக வந்தான். அப்போது மூன்னர் எதிர்த்துச்

சிறையாக்கிய அசுஹாபிமார்களினுடற்பிறந்தார் வந்தெதிர்த்தார் அவரையும் இக்கிரிமத்துப் பிடித்துச் சிறையாக்கினன். பின்னர் இதுபோல் முசிலிம்கள் ஒவ்வொருவராகப் பதினைந்து பேர்கள் வந்து சண்டை செய்தார்கள் அவர்களையும் இக்கிரிமத்துச் சிறையாக்கித் தகப்பனிடத்திலேகொண்டுபோய் ஒப்பிவித்தான் அதுகண்டு இறவுசுல்கூல் தன்மகனான இக்கிரிமாபேரில் மிகவு மகிழ்ச்சியானன்

அப்போது நபிநாயகம் இந்த இக்கிரிமாவைப்பார்த்து இவ்வளவு துணிவுகாரயாகநின்று முசிலிம்களைச்சிறைசெய்கிறவன் யாவனென்று கேட்டதற்கு முகல்கீலும் சல்கா நாயகியும் வந்து நபிநாயகத்தைப் பணிந்து அவர்களைப்பார்த்து நாயகமே அவன் இறவுசல்கூல் மக்களிலே குதிரைதிருப்புந் திறமும் வாள்வீச்சின்திறமு மிகவுந்தெரிந்த இக்கிரிமாவென்று சொல்லி அவர்களைப் பணிந்து மூன்றுலோகத்திற்கு மாண்டகையே என்னை யனுப்புங்கள் சண்டைக்கென்று சல்காநாயகி யுத்திரவு கேட்டாள். அப்போது நபிநாயக மகிழ்ச்சியாகிச் சல்காவைப்பார்த்து உன் மனம்போலே சண்டைக்குபோய் வாவென்று விடையளித்தார்கள் உடனே சல்கா குதிரை மேலே சவாராகி முன்னடந்துபோய் அங்கு துடித்துக்கொண்டு நிற்கின்ற இக்கிரிமாவுடனெதிர்த்து வாள்விசினள். இவ்விதம் உடற்பிறந்தாள் வீசுகின்றவாளை உடற்பிறந்தான் தட்டிவிட்டுத் தானும் வாள்விசினன் அவ்வாளைச் சல்காபீவி தட்டிவிட்டு வேலாயுதத்தினற் இக்கிரிமாவைக்குத்தினள். அக்குத்தை அவன்தட்டிக் குதிரையைத் திருப்பிச் சாரிவிட்டு அம்பைப் பிரயோகித்தான் அப்போது சல்காவுங் குதிரையைத்தட்டி வலசாரி இடசாரிசெய்து அம்பைப் பிரயோகஞ் செய்தாள். இவ்விதம் இருவரும் நடத்துகின்ற குதிரையின் காலின் றாசிமேகத்தைப் போலும் அவர்கள் வில்லை வளைத்துச் செய்யுகின்ற குணத்தொனி யிடிபோலும் அம்பின் விசை மின்னலைப்போலும் அம்பின் பெருக்க மழையைப்போலு மிருந்தன.

அப்போதுபக்கங்களில் நிற்பவர்கள்கண்டுஇதுபோலே சண்டை நாமொருபோதுங் கண்டதில்லையென்று ஆச்சரியமாகினர்கள் இவ்விதம் பார்த்தவர்கள் ஆச்சரியமானபோது இக்கிரிமா சல்காபீவியுடைய முகத்திலே போர்வையிட்டிருப்பதா ன்னுரென்று தெரியாமல் அவர்களைப்பார்த்து ஓகே சுத்தவீரியனே ன்னுடனே சரிசரியாக ஆயுதங்களைப் பிரயோகித்துச் சண்டை செய்கின்ற உன்னைப்போலொரு சுத்தவீரியனை நானிதுவரையிலுங் காணவில்லை ஆதலால் நீ

தீனானவர்களிலுள்ளவனல்லை என்னுடற் பிறந்தார்களிலுள்ளவனாக இருக்கவேண்டுமென்று சில சொற்கள்சொல்ல ஆரம்பித்தாள் அஃ தாவது,

இக்கிரிமா சல்காபீவியைப்பார்த்து இழிவில்லாத தாய்தகப்பன் மார் நித்தமும் மனமகிழுகின்ற பாட்டன் பாட்டி முதலிய முன்னோர் கள் பொருந்தியிருந்த நல்லவழியை விட்டுவிட்டுக் கீழ்மையாகிய இ சுலாமென்னும் வழியிலேபோனதென்ன? இனியந்தவழியை விட்டு விட்டு எட்டுத்திக்கும் புகழுகின்றவராயும் நம்மையாளுகின்றவராயும் விளங்கும் பர்ருசென்கிற தேவைப்பணியென்று சொன்னான். அது கேட்டுச் சல்காபீவி இக்கிரிமாவைப்பார்த்து ஓகே சுத்தவீரியனே யுனதுசொல் வெகுதூரம் வெகுதூரம் ஆதலால் இச்சொல்லையும் பர் ருசுடைய எண்ணத்தையும் விட்டுவிட்டுக் கலிமாச்சொல்லு அப்படி நீ கலிமாச் சொல்லாதவரையில் முடிவிற் பாவத்துடனே பத்தொன் பது நாவுடனெரியுகின்ற நரகநெருப்புக் கிரையாவா யென்றுசொன் னாள் அப்போது இக்கிரிமா இந்தச் சொற்பழுதென்று வாளைச்சுழட் டிச் சண்டைக்காரம்பித்தான்.

அதுகண்டு சல்காபீவியுங் குதிரையைநடாத்தி மிகுதுணிவுகாத் துடனே, வேலாலும், வளாலும், சிலம்பவரிசைகளைக்காட்டி நெருங் கிச் சண்டைசெய்தாள் இவ்விதமிருவரும் சண்டைசெய்கின்றதைப் பார்த்தால் இரண்டுபேர்களும் வெட்டுகின்றவாட்களும் வேல்களுங்கட் டுப்பட ஆகாயத்திலே தூசிபடறக்காற்றைப்போற் கதியுடனடக்குங் குதிரைகளின் வாய்க்களைப்புச்சத்தம் பெருக அவர்கள் பேசும் சபத வார்த்தைசப்தம் அதிகரிக்கக் கொண்டமீனைக் கெடுத்தொளிரும் கண் களையுடைய சல்காபீவி மிகுந்த சண்டைசெய்தாள் இவ்விதம் பலரும் பார்த்துப் புதுமைகொள்ள நின்றுசண்டைசெய்தசல்காபீவி ஒரு சூட் சத்தையெண்ணிச் சண்டைக்களத்தைவிட்டும் ஓடினாள். அதுகண்டு இக்கிரிமாநம்மோடுமெதிர்த்த சுத்தவீரியன் றோற்றான் இனி நாம் சிறைபிடிக்கலாமென் றெண்ணிச் சந்தோஷமாகிச் சல்காவுக்குப் பின் றொடர்ந்து நெருக்கிக் குதிரையை யோட்டிக்கொண்டு போகச்சே சல் காபீவி திடீலென்று தன்குதிரை இக்கிரிமாமுகத்துக்கு நேராகத்தி ருப்பிவிட் டெதிர்த்துவெட்டினாள் அவ்வெட்டானது இக்கிரிமாவு டைய கிரீடத்தைப்பிளந்துதட்டுண்டு அவனுடைய குதிரைமுதுகிற் றுங்கிக் குதிரையிரண்டாகப்பிளந்தது உடனே பாவிஇக்கிரிமா பூமி யிலே ஓதியமரம்விழுந்தது போலேவிழுந்தான். விழுந்தவனுடைய தலையிலிருக்கின்ற குடிமியைச் சல்காபீவிபற்றிப் பிடித்திழுத்துக் கொண்டு நபிநாயகமவர்களிடத்தில் வந்து ஒப்பிவித்தாள்.

அதுகண்டு நபிநாயக மனமகிழ்ச்சியாய் முன்னர்சிறையில் அகப்பட்டிருக்கும் ஜனுதீலயுந் தங்களிடத்திற் கழைத்துமுன்னில்விட்டுக் கொண்டு இரண்டுபேரையும் பார்த்துக்கலிமாச் சொல்லுங்களென்று சொன்னார்கள். அதுகேட்டு இரண்டுபேரும் ஒன்றும்பேசாமற்குனிந்த தலையாரா யிருந்தபோது அல்லாகுத்த ஆலாவுடைய அருளினலே அவர்களிருவரின் மனக்கண்திறந்து வெளிச்சமானதா லுடனே ஜனுதீலும் இக்கிரிமத்தும் ஆகிய இருவருக்கும் சொர்க்கலோகச்சிறப்பும் நரக வேதனையுமெதிரிலே தோற்றக்கண்டவர்களாகிப் புதுமைகொண்டு உடனே (லாஇலாக இல்லல்லாகு முகம்மதுர்றசூலுல்லாகி) யென்னுங் கலிமாவைச்சொல்லித் தீனில்விசுலாத்தி லாகினதாலே நபிநாயகமவர்களும் வானவரால் ஒத்தாசை செய்யப்பட்ட சல்காநாயகியுமற்ற அசுஹாபிமார்களு மிகுந்த சந்தோஷமாக இருந்தார்கள்.

இக்கிரிமத்தும் ஜனுதீலு மீமான்கொண்டசருக்க

முற்றிற்று.

---

## சதியெழுத்துச்—சருக்கம்.

கலி நிலைத்துறை.

கதியிலாத கசடன் றவுசுல்கூல்
புதிய னன்புறும் பொற்பி னபியென
மதிந வின்ற முகம்மதர்க் கன்பர்போற்
சதி யெழுத்து விடுத்ததைச் சாற்றுவாம்.

### இதன்பொருள்.

மோட்சகதி யெப்போதுமில்லாத கசடனுகிய இறவுசுல்கூலென்பவன் புதியவுலகத்தையுடைய ஆண்டவன்அன்புகொண்டிருக்கும் அழகான நபியென்றுசந்திரன் பேசியநபிநாயகமுகம்மது சல்லல்லாகுஅலைகிவசல்ல மவர்களுக்கு அன்புள்ளவர்கள்போலே சதிமானமாகிய கடிதாசி யெழுதிக்கொடுத்தனுப்பிய சரித்திரத்தைச் சொல்லுகின்றும்.

## சரித்திர வசனம்.

இவ்விதம் யாவரும் சந்தோஷமாக நபிநாயகமென்ற பூரணசந்திரனை அசுஹாபிமார்களென்ற நட்சத்திரக் கூட்டங்கள் சூழ்ந்துமகிழ்ச்சியாக அல்லாகுத்த ஆலாவைப்புகழ்ந்து ஆருவது கோட்டையிலிருக்கும்போது பாதகனாகிய இறவுசுல்கூல் இங்கே நடந்த காரியங்கள் தெரிந்து தான் அருமையாய்ப்பெற்ற ஆண்மக்களையும் பெண்கள் சிரோமணி சல்கா நாயகியையும் இழந்ததாலும் அவர்கள் தீனுல்லிசுலாத்தி லாகினதினாலும் தனக்கு மிகுந்த வியாகூலமுற்று வருத்தமாகிப் பூமியிலே தலையைச்சேர்த்து முட்டிமுரண்டி ஐயோ அந்தோ அப்பாவென்று கூக்குர விட்டழுதான். அப்படியழுவதில் அவன் பெற்றமக்களான சுந்தலத்து, சிலாஜீல், அஷறபத்து, இக்கிரிமத்து, முகல்கீல், சுந்துமத்து, ஜனாதீல், சல்கா ஆகிய இவர்களை இழக்கப்பெற்றேனே யென்றவர்கள் பெயரைச்சொல்லிச் சொல்லி யழுது தன்துயரத்தையடக்கக் கூடாமையாகி எவர்களுமிவன் துக்கங்கொண்டிருக்கிறானென் றறியவேண்டிக் கறுப்புடைகளைப் பலவிதங்களாக அணிந்துகொண்டான் கொண்டு,

தன்னுடைய ஆண்மக்கள் எழுபேரிலே இறந்தவர்களுந் தீனில் விசுலாத்தி லானவர்களும் போக அப்போது தன்னிடத்திலிருந்த மகன் துகாமத்தென்பவனை ஆசையாகத்தழுவிக்கட்டி முந்திமுகந்து அவனைத் தன்கிட்ட வுட்காரவைத்து அவனைபார்த்து மகனே எனக்கின்பமான மக்களில் ஆறுபேரை யிழந்துவிட்டேன் இனியுன்னுடைய நல்ல உதவியேயல்லாமல் எனக்கு வேறுதவியொன்றுமில்லை. மேலும் எனக்கு அரைவாசி வயதுமாகிவிட்டது ஆதலால் என்கண்மணியான மகனே துஹாமத் தேயென்று புகழ்ந்து அவனை என்பதிகள் யாவையும் உன் பதியாகக்கொண்டு இங்கிருந்து உலகத்தையாள்வது உன் கடனாயிருக்கும் அதனோடு குடிபடைகளையும் நன்றாகப் பாதுகாக்கக் கடவாயென்று சொல்லிப் பின்னும் குடிகளை அனுசரித்தின்பமாக ஆதரித்து இந்தக் கோட்டைவாசல்களெல்லாம் நன்றாகக் காவல்வைத்துத்திறனாக இருந்துகொள்; நான்போய் அறபிப்படைகளில் நமக்கானவர்களுக்கு மிகுந்த திரவியங்களைக்கொடுத்துப் படைசேர்த்துக்கொண்டு தீனவர்களுடனே சண்டைசெய்யச் சீக்கிரம் வருகிறேனென்று சொல்லிவிட்டுப் பாதகனான அந்த இறவுசுல்கூல் தன்னுடனே இருபது குதிரைச் சுத்தவீரியர் சூழத் தானுங் குதிரைமேலே சவாராகி பனீ அகாறென்னுங் கூட்டத்தாரின் இராஜனிடம் போய்

மிகுதுயரமாக அழுது சஞ்சலித்து மிகுந்த திரவியங்களைக் கொடுத்துத் தனக்கிருக்கு மிடைஞ்சல்களைச் சொன்னன்.

அதுகேட்டு அந்த இராஜன் (3000) குதிரை வீரியரைக்கொடுத்தான் அதைப் பெற்றுக்கொண்டு சரேலென்று பனீநஅத்துக்கிளையாரின் அதிபன் அழுக்குமனத்தையுடைய ஹாரீதென்பவனிடம்போய் அவனைக்கண்டு தன்துயரங்களைச் சொல்லி யனேக திரவியங்களைக் கொடுத்துத் தன்மக்கள் வரலாற்றையுஞ் சொன்னன். அதுகேட்டு அவ்வரசனிரங்கி (4000) குதிரை வீரியர்களைக் கொடுத்தான் அதையும்பெற்றுக்கொண்டு பனீகிபு அசென்ற பெரிய கிளைகளுக்கதிபனை கிரீடாதிபன் அகுறிபனசமாறென்பவனிடம்போய் அவர்களைக்கண்டு மிகுசலிப்பாக அழுது தன்றுயரங்களைச் சொல்லி அனேகந் திரவியங்களைக்கொடுத்து அவ்வரசனும் (3000) குதிரைப் பதாதிவீரர்களைப் பெற்றுக்கொண்டு இன்னும் பாதகன் பலபல இடங்களெல்லாம்போய் அங்கங்கே இருக்கும்படியான தலைவர்களைக்கண்டுகண்டு அவர்களிடமெல்லாம் அழுதழுது பொன்கள் மிகமிகக்கொடுத்து வீரர்களைப் பெற்றுக்கொண்டு ஆக இருபத்து மூவாயிரம் பதாதியுடனே தன்னூரைநாடிப் பிரயாணமாகினன். பிரயாணமாகிப்,

பகலெல்லா மேடீரிடத்தி லடங்கியிருந்து இராவானபோது படைகளுடனே யெழுந்து நடந்து ஒருவருக்குந் தெரியாமல் மிகு மகிழ்ச்சியாய் வாதில் சுகுறுவெல்கைக்குள் ளாகியபோது தன் மகனுக்குத் தான் படைகள் திரட்டிக்கொண்டு வருஞ்செய்தியை முன்னர் தெரிவிக்கவேண்டி யொருதூதனை யழைத்து அவனிடத்திலே தான் படைகள் பெருப்பமாகத் திரட்டிக்கொண்டு வந்திருக்கிறதும் அப்படைகளினல் நபிநாயகத்துடனே சதிமான்யமாகச் சண்டைசெய்ய நாடியிருக்கிறதும் இன்னும் பலசெய்திகளுஞ் சொல்லி இச்செய்திகளை என்மகன் துகாமத்துக்குச் சீக்கிரம்போய்ச் சொல்லென்று அனுப்பினன். அதுபோலே தூதன் போய்த் துகாமத்துக்குச்சொன்னன் அதுகேட்டவன் அந்தத் தூதனிடத்தி லென்தகப்பன் இறவுசுல்கூலிடத்தில் நீ காற்றைப்போலே சுறுக்காகப்போய் அச்சதிமானமென்னவிதமென்று கேட்டுக்கொண்டுவாவென்று சொன்னன். அது கேட்டுத்தூதன் இறவுசுல்கூலிடத்திற் போய்க்கேட்டதற்கு அவன் கொண்டிருக்குஞ் சதிமானத்தை யிரகசியமாகச் சொல்லத்தொடங்கினன். அஃதென்னெனில்,

இப்போதுநான் கொண்டுவந்த படைகளை இங்கே மறைவில் வைத்துவிட்டு முகம்மதுக்கு இனியெங்களாற் சண்டைசெய்யப் படையு

மில்லை மனமுமில்லை யாதலாற் கலிமாச் சொல்லியும் தீனில்வருகிறோ மென்று இடறில்லாது இன்பமான செய்தியை யனுப்பினால் அவர் பொருந்திக்கொண்டு சண்டையில்லாதிருப்பா ரப்படியிருக்குஞ் சமையத்தில் நாம்படையுடனே திடீலென்றுபோய் அவர்களை வளைந்து பிடித்து வெற்றியடையலாமென்று போய் மகன் துகாமத்துக்குச் சொல்லச்சொன்னான். அத்தூதன் அதுபோலே வந்துசொல்லக்கேட்டுத் துகாமத்துச் சந்தோஷமாகி மந்திரிக்கும் இந்தச்செய்திகளைச் சொல்லிக் கூட்டிக்கொண்டு, தகப்பன் இறவுசுல்கூலிருக்குமிடத்திற்கு வந்து மூன்றுபேருமாக யோசித்துக் கொண்டிருக்கச்சே இறவுசல்கூல் செம்பினாலாகிய எழுதுகோலில் மைதோய்த் தின்பமாசக் காகிதமொன்றெடுத்து மனதிலே தான்கொண்டிருக்குங் கசடு குபாடங்களைவும் பிறருக்குத்தெரியாமற் றனக்குத் துன்பஞ்சூழ முதல் வரியில் வக்கணையெழுத ஆரம்பித்தெழுதினான் அஃதெதன்னெனில்,

கொடிநெருங்கிய கோட்டை கொத்தளம் பலவகைகளையுடையவன் பூமியதிரும்படியாக அறுவகைப் படைகளை வைத்தாளுபவன் கிரீடந்தரித்தவன் சண்டைக்களத்தில் வடவாமுகாக்கினிபோலடர்ந்தேறுபவன் ஆகிய இறவுசுல்கூலென்ற இராஜன் அப்துல்முத்தலிபு தவத்தினாலே பெறுகின்றமகன் அப்துல்லாவின் வரப்பிரசாதத்தாற் றவப்பிரபல்ய மகலாய் மேகக்குடையிடக் காரணக்கடவுளாய் இந்த பூமியில் நபிப்பட்டம் பெற்றுவரு முகம்மதென்ற பெயரையடையவரிக் குற்ற மற்ற கடிதமென்று மேல்வரி இரண்டெழுதிப் பின்னர் நாமும் நீங்களும் எதிராகி மிகுந்த ஜனத்தைக் குலையாகும்படி செய்தோம் இப்போது உவமையில்லாத எங்கள் உள்ளத்திலுண்மை விளங்கினதால் அருளாகிய கலிமாச்சொல்லக் கருத்திசைந்தோம் ஆதலால் இனிச் சண்டைசெய்யக் கூடாதென்று அழகா எழுதி அதையொருதரம் வாசித்து நன்றாய்மடித்து மேல்வாசகமு மெழுதி முத்திரையிட்டு அக்கடிதத்தை வழிகள் நன்றாயறிந்த ஓர் தூதன்கையிற் கொடுத்தான்.

அந்தத்தூதன் தனது கையை நீட்டிக் கடிதத்தை வாங்குந்தருணத்தில் மந்திரியானவர் ஒருகுதிரையி லேறிப்போய் அங்குசிங்காதனத்திலிருக்கும் இறவுசல்கூலைப் பார்த்து மதயானையைப்போலே வருகின்ற சத்துருக்களுக்குச் சிங்கேறுபோன்ற அரசே கடிதங்கொண்டுபோகிறவர்கள் திடத்த சிந்தையும் அஞ்சாமல் எதிர்பேசுந் தன்மையுமுள்ளவர் வேண்டும் அஃதேனென்றால் அந்தமுகம்மது ஹாஷீம் கிளையுள்ள வராதலால் அதற்குத் தகுதியாகக் கணதியுள்ள வும

து அருமைபொருந்திய அம்றுடையமகன் நாபிதுவை யனுப்பவேண்டுமென்று சொன்னார். இவ்விதந்தருமகுணாலயச் சமேதரான மந்திரி சொல்லக்கேட்டு இறவுசுல்கூல் மந்திரியின் புத்தியைப்புகழ்ந்து அவருடைய சொற்போலே சிறந்த சொல்லையுடைய நாபிதின் அழகியகையிலே கடிதத்தை வாக்கொன்று மனமொன்றாகக் கொடுத்து ஓகே நாபிதே நீ இந்தக்கடிதத்தை முகம்மது நபிக்குக் கொடுத்துவிட்டுப் பதில்வாங்கிக் கொண்டுவாவென்று சொல்லிக் குற்றந்தங்கிய மனத்துடனே கடிதத்தைக் கொடுத்தான்.

அதுபோல் நாபிது கடிதத்தை வாங்கிக்கொண்டு உடனேயோர் குதிரைமேல் சவாராகி விரைந்து அக்குதிரையை நடாத்தும்போது அந்த நாபிதுடனே இராஜகுமாரனும் மந்திரியும் தொடர்ந்து சிலதூரம்போய்ப் பயணம் அனுப்பும்போது அந்த நாபிதைப்பார்த்து இராஜகுமாரன் ஓகே நாபிதே இனிமேல் முரண்டாட்டமில்லாமலும் சண்டை சல்லியமில்லாமலும் நம்மள்பேரில் முகம்மதைக் கிருபையாக இருக்கும்படி நான் சொன்னதாகச் சொல்லென்று சொன்னான். அது கேட்டு உடனே மந்திரி நாபிதைக்கூவி அந்தமுகம்மது இனியிணக்கமாகவே நம்மைச் சேர்ந்திருக்கவேண்டும் அப்படியல்லாது பிணக்கமாக மனமிருந்தால் இந்த பூமியிலே சொல்மதுரம் பொருள்மதுரம் பொருந்தப்பாடும் பெரிய புலவராகிய ஹச்சாசுசொன்ன பயித்தை நினைத்துப் பார்த்துக் கொள்ளவுமென்று தேவினுடைய வணக்கத்தைமீறிய என் சொல்லிவை யென்று சொல்லென்று சொன்னார். இவ்விதம் இராஜகுமாரனும் மந்திரியும் நாபிதிடத்திற் சொல்லி யவனை யனுப்பிவிட்டுத் தங்களிருப்பிடத்திற்கு வந்துவிட்டார்கள்.

அப்போது நாபிது இவர்களிருவருடைய பேச்சையுங் கியாபகத்தில் மறக்காமற்றானிருக்குங் குதிரையைக் காற்றின் வேகமாக விட்டுக்கொண்டு நபிநாயகமவர்களிருக்கு மெல்கையை யடுத்தபோதுமரியாதையாகக் குதிரையைவிட்டுக்கீழறங்கிப்பாதசாரியாய் அல்லாகுத்தஆலாவின்றாதர் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்தில் மகாமரியாதையாக அடுத்து அவர்கள் பாததாமரையிலே பணிந்துமுத்திமிட்டெழுந்து அதபுடனே யொழுங்காநின்று பாதகனாகிய இறவுசுல்கூல்கொடுத்த காகிதத்தைக்கொடுத்தான். அக்கடிதத்தைக் குற்றங்குறைவுகளை நீக்குகின்ற தாமரை மலர்போன்ற கையினால் நபிநாயகம் வாங்கி யுடனே அக்கடிதத்தை முத்திரைநீக்கி அலிறலியல்லாகு அன்கவர்களிடத்தில் இதை வாசியு மென்று கொடுத்தார்கள்.

உடனே அலிறலியல்லாகு அன்கு அக்கடிதத்தை விரித்து அதின் மேல்வரிகளிலே இறவுசுல்கூலாசனின் வெற்றியும் அவன்பெயரும் அவ்வரிகளின்கீழே சிங்கநிகர்த்த நபிநாயகத்தின் பெயருடனே தீனில்லிசுலாமென்னும் அருளாகிய வழியில் நாங்கள் தரிபடுவோமென்றும் எழுதியிருந்தவைபோல் விபரமாக வாசித்தார்கள்.

இவ்விதம் போகும்பாதையிலே சுரநிலத்தில் மழையையழைத்த காரணத்தையுடைய அலிறலியல்லாகு அன்கவர்கள் கடிதாசி வாசித்தசெய்திகேட்டு அவ்வலியாருக்கிருந்த குளிருங் காய்ச்சலுந்தீர்ந்து போகும்படியொருக்ஷணத்திலே செய்த நபிநாயகமும் மற்றும் அசுஹாபிமார்களுஞ் சந்தோஷங்கொண்டார்கள். இவ்விதம் நபிநாயகம் மகிழ்ச்சியானதின் பிறகு கடிதம்கொண்டுவந்த தூதனான நாபிது நபிநாயகத்தைப்பார்த்து வயிராக்கியம்பொருந்திய இறவுசுல்கூல் மகன் துகாமத்துடனே மந்திரியவர்களுஞ்சொன்ன இருவிதவாக்கியங்களையும் பிசகில்லாமற்சொன்னான். அதுகேட்டு நபிநாயகமவர்கள் மந்திரிசொல்லியனுப்பிய சொற்களையும் துகாமத்துச்சொல்லியனுப்பியசொற்களையும்நன்றாய் சோதித்துச்சீர்தூக்கிப்பார்த்துமந்திரிசொல்லியனுப்பினது நமர்களைப்பேணியதென்றெண்ணினார்கள். எண்ணி அலிறலியல்லாகு அன்கவர்களைப்பார்த்து இறவுசுல்கூலெழுதியனுப்பிய கடிதத்திற்கு ஒருஜவாபு கடிதமெழுதியனுப்புமென்றார்கள் அதுகேட்டுடனே யவர்கள் கலமும்மையுமெடுத்து ஓர்சிங்கத்தைப்போலிருந்துகொண்டு மிகுந்தமகிழ்ச்சியாக முதலிலே (பிசிமிலைத் தொடங்கி) முதல்வரியெழுதிப்பின்னர் அல்லாகுத்த ஆலாவுடைய தூதுமாய்நெஞ்சஞ்சாக அப்துல் முனபுடையமகன் காஷீமென்னும் அதிபதிதவத்தில்வந்த குமாரதீரர் அப்துல் முத்தலீபுடைய வாத்திலுதித்தகுமாரர் அப்துல்லா அவர்களின் செல்வமகனுமாய் விளங்கு முகம்மதுநபி குற்றமாகிய இறைசிக்காவின்மகன் மகாரிக்கென்று சொல்லுகின்ற இறவுசுல்கூல்காண்பதற்கெழுதுகின்றசெய்தியென்னவெனில் உன்னுடைய கருத்திசைந் திவ்விடத்திற் கெழுதும் அவ்வெழுத்தின் முறையை நீ மறுக்காதிருக்கில் மிகவும் நன்மையாகும் அதுவேசரி; ஆனால் அல்லாகுத்தஆலாவுடைய தூதாங்கரென்று அழைப்பதற் கிணங்கிக் குற்றங்களறும்படி நிற்கின்றவர்கள் தீவினைச்சதிமானங்கள் பேதகங்கள் செய்யமாட்டார்களென்றெழுதி அல்லாகுத்தஆலாபேரிலோதுகின்ற ஹம்தென்னுந் துதிமொழிகளுடனே கடிதத்தை முற்றிவித்தார்கள்.

முற்றிவித்த அக்கடிதத்தை அழகிய நாபிது கையிற் கொடுத்தவனையனுப்பிவிட்டு நபிநாயக மவர்கள் பழுதில்லாத தீனில்லிசுலாமானபேர்களை வாருங்க ளென்றழைத்து அவர்களைப் பார்த்து

முத்துகளை வரிப்படுத்தியது போல் இலங்குகின்ற தந்தபந்திகளு டையக் கற்பூரவாடை கமழுந் தங்கள் திருவாயைத் திறந்து மந்திரி சொல்லி யனுப்பிய பெரியபுலவர் ஹக்காசுசொன்ன பயித்துகள் உங்களிலெவர்கட்கேனுந்தெரிந்திருக்கிறதை சொல்லுங்களென்ற போது உடனே அங்கிருப்பவர்களிலே தாபித்துடைய மகனார், கஸ் ஸான் றலியல்லாகு அன்கு சந்தோஷமாக எழுந்துநின்று வள்ளலா கியமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைப்பார்த்து ஹக்காசு டைய பயித்துகளை யோதினர்.

அந்தபயித்துகளையுடைய வுட்பொருள்யாதெனில் இன்பத்துட னே இராவுமுப்பது நாழிகையிலே மூன்றுபாகத்திற் பிற்பாகத்தில் நித்திரைசெய்தவர் சிலர் அவர்கள் துன்பத்தையும் இடறுகளையுமுடை த்தானவர்களாகினு ரென்பதாம்முதல்பயித்தின்பொருள். இனி இரண் டாம் பயித்தின்பொருளோ இராமுற் பாகத்திலின்புற்று நித்திரை செய்து பிற்பாகத்தில் இன்பமுற்றிருந்தவர் சிலர்; அவர்கள் வெகு நாளாகப் பூமியிலும் வருத்தப்பட்டு முடிவில் நரகநெருப்பிற் கீடா கினுர்களென்றும் இது தவிரச்சிலர் இராமுழுது முவப்புடனே முழிப் பும் நித்திரையுமாக இருந்தார்கள் அவர்கள் அவ்விராவையில் நெருங் குந் துன்பத்தைத் தவிர்த்திருந்தார்களென்றும் உலகரை முன்னி லைக் கூட்டாக நீ இவையறிந்துகொள் ளென்பதாம் இனிமிகுபேர்கள் இராமுழுமையுந் தன்னைமறந்து நித்திரைசெய்து விடிந்தபோது கண்விழித்துச் சொல்லொணுத கைசேதமும் பல தொடர்ச்சியான இடறும் தொகை தொகையாகிய வருத்தமும் உண்டாகினவர்களா கினுர்களென்று நான்குபயித்திலும் பொருள் அமைந்திருந்தன.

இப்பொருளுணர்ந்த நபிநாயகமவர்கள் பாதகனுகிய இறவுசுல் கூல் நமக்குச் சதிமானமாகிய எழுத்தெழுதினதினுலே மந்திரிநம்மை முழிப்புடனே இருக்கச்சொல்லி இந்தபயித்தைத் தூண்டிக்காட்டினு ரென்று யாவருக்குந் தெரிவித்துப் பிறகு வாத்திமிகுந்த அலிறலி யல்லாகு அன்குமுதலிய அசுஹாபிமார்கள் யாவரையும்பார்த்து அவர்கள் குதிரைகளேறவும் சண்டைஉஸ்துகளணியவும் நெருப்புப் போலே கதகததத்த சூடுதங்கிய வாட்களைக்கையிலே பிடிக்கவும் வில்லம்புகளையேந்தவும் இவ்விதம் ஆயுதசன்னத்த ரானவர்களை முன்றணியாகப்பிரிந்து நிற்கவுஞ்சொல்லி இன்னும் அசுஹாபிமார் களைப்பார்த்துச் சத்துருக்களுடையபடைகள் மிகுதியாயிருப்பதால் நீங்களெல்லாங் கபன்கிழித்துக்கழுத்திற் கிட்டுக்கொண்டு சத்துருக் களுடைய ஆசாட்டங்கொண்டவுடனே பயந்து அவர்களுயிர் எமலோ

கம் போய்ச்சேரும்படி வெட்டுங்களென் றுறுதிசொல்லி யுத்திரவு கொடுத்தார்கள்.

இவ்விதம் அல்லாவுடையதூதர் நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லஞ்சொன்னதுபோலே அலிறலியல்லாகு அன்குமுதலானதலைமையோர்கள் படைகளைத் தயாறுசெய்து மூன்றணியாகப் பிரித்து அங்கங்கே சுற்றிப்பரப்பிவைத்துவிட்டுத்தாங்களுந்தடு தாளியுடனே நின்றார்கள். அப்போது சூரியனுமடைந்தான். பிறகு இருளரசன்கருமேகத் திரளுடனே சதிமானத்தைநாடிய சத்துருக்கள் சதிமானத்திலாகவும் முசிலிமானவர்கள் வருத்தநீங்கி இன்பத்தையனுபவிக்கவும் ஆதிநாயகன் றூதர் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வெற்றிபெறவும் உலகமெங்கும்பரந்து மூடினான். அவ்விருளில் இறவுசுல்கூலிராஜனும் அவனுடைய படைஞரும் சீக்கிரம் ஆயுதசன்னத்தராகிக் குதிரைமேலேசவாராகி யெட்டுத்திக்கும் நடுங்கும்படி வாகனாதிகளை நடாத்திக்கொண்டு நபிநாயகமவர்கள்வளைத்துவைத்த படையென்னும் வலைக்குள்ளே மான்கூட்டங்கள் போலே வந்தகப்பட்டுக் கொண்டார்கள்.

ஆனால் சத்துருக்கள் தீனானவர்களிடம் வந்துசிக்கிக்கொண்டது எத்தன்மையென்றால் படுகுழியில்மதயானைகள் வந்துவிழுந்ததுபோலும், பறவைகள் கண்ணியில் மாட்டினதுபோலும், மீன்கள் வளையிலும் தூண்டிலு மெம்பட்டதுபோலு மிருந்தன, இவ்விதமாகச் சத்துநக்கள்யாவருஞ் சிக்கிக்கொண்டபோது இராஜராஜாக்கள் வந்து காலடியிற்பணிகின்ற கீர்த்திபொருந்திய நபிநாயகத்தின் அசுஹாபிமார்களாகிய குதிரைப்படைவீரர் வளைந்து சத்துருக்களை நெருங்கி இருட்கூட்டங்களைவிலக்கு மின்னுக்கொப்பாகிய வாட்களினால் வெட்டினார்கள். அப்போது இறவுசுல்கூல் மிகுந்த கூட்டத்துடனே தன் கையிலோர் வாட்பிடித்தவனாகக் குதிரையின்மேல் வந்தான் வந்தவனைத் துரத்திக்கொண்டுபோய் மிகுதாதுறலியல்லாகு அன்கு தங்களின்வாளினால் அப்பாவி றவுசுல்கூலுடைய நெஞ்சினாலே யூன்றினார்கள்; அதனாலவனெஞ்சிற் காடமாகி யக்காயத்தின் வழியாலே இரத்தஞ் சிந்தினவனாகப் பின்னடைந்து தான்செய்தவஞ்சகத்திற்காக மந்திரிதெரிவித்த வழியினாலே அடங்காதநெருப்பு மீறிநிற்குந் தீனவர்கள் முன்பிலே தனதுபடையென்ற பஞ்சுப்பொதிகளைத் தீயும்படி செய்துவிட்டு ஓடினான். ஓடிய இறவுசுல்கூல் மறைந்திருக்க அவனுடைய படைஞரெதிர்த்துச் சண்டைசெய்தார்கள். முசிலிம்களுமெதிர்த்துவெட்டினார்கள் இவ்விதத்தி லிரண்டு படைகளும் வடகடலுந் தென்கடலும்மோதியெதிர்ந்து முட்டித்தாக்கியதன்மையானதினாலே முசிலிம்கள் வெட்டதிகரித்து நபிநாயகமனமகிழும்படியாய்க் காபிரீன்கள் மடிந்தார்கள்.

அதிலே சத்துருக்களுக்குஉடலறுந்தன; கழுத்துகளறுந்தன; வயிற்றுக்குடல்களறுந்தன; குரால்வளைகளறுந்தன; தலைகளறுந்தன; முகங்களறுந்தன, முழங்காலடியுடனே யறுந்தன இவைகளுடனே வாள்முதலிய பலபலஆயுதங்கள் சத்துருக்களுடைய சரீரத்திலேதைத்துப் பூறி வலையிலகப்பட்ட மீன்கள்போலே துடிதுடித்து உலையிலிட்ட மெழுகுபோல் மனமுருகிப்பதைபதைத்துத், தலைகள் பனைக்கனி போலேதுண்டமாகி யனேகங்காபிர்க ளிறந்தார்கள். இன்னும் கழுத்திற்கட்டியமுடியின் பின்னர் கயிறுடனே ரத்தினப்படமிட்ட மத்தகமும் பொன்பூண்கட்டியவெள்ளிய மூன்றாம்பிறைபோன்றுவளைந்த கொம்புகளும் மரவுரல்போன்ற காலடிகளும் பருத்துநீண்டு துவாரம் பொருந்திய துதிக்கையும் முகத்திற்படர்ந்த தேமலும் முறம்போன்ற இரண்டு செவிகளும் கொலைசெய்யுஞ் சிறுத்த இருகண்களும் இடிபோன்ற குரல் சப்தமும் அகண்டவாயும் கரியவுடலும் விசிறிபோன்றவாலும் ஆகியஇவ்வுறுப்பினங்களையுடைய யானைகளனேகங்களைத் தீனானவர்கள் வெட்டினார்கள்.

இவ்விதம் தீனானவர்கள் வெட்டியவெட்டினால் இரதகஜதுரகபதாதிகள்மடிந்து பிணங்கள் தடிகள் மற்றவையாவு மலைகளைப்போலே குவிந்துகிடந்தன, அக்குவியல்களிலிருந்து வழியுகின்ற இரத்தமலைச்சுனைகளிலிருந்து கண்ணீரோடுவதுபோ லோடுகின்றன இப்படியோடுகின்ற இரத்தப்பெருக்கிலே கொடிகள், குடைகள், சத்துருக்கள் கிரீடங்கள், முரசங்கள், தண்டங்கள், வெண்சாமரைகள் ஆகிய இவ்விருதினங்களும் பலபலமிதந்தன இப்படியாகத் தீனானவர்க ளிராவு காலத்திற்செய்த சண்டையிலே சத்துருக்கள் (5000) பேர்களிறந்து நரகமடைந்தார்கள்.

இந்தக்காரணத்தைப்பார்க்க ஒருவன் இரண்டுகண் போதாதென்று ஆயிரங்கண்களை விழித்து வருபவரைப்போலே சூரியன் தனதுகிரணங்கள் ஆயிரத்தையும் விரித்துவந்து தோற்றினான் இவ்விதஞ்சூரியன் தோன்றினபின்னர் சத்துருக்களிறந்தவர்போக மற்றப்பேர்களும் மிகுதாது ரலியல்லாகு அன்குவின் வேலாயுதத்தினாலேகுத்துப்பட்டு முறிந்து பின்னடைந்த இறவுசுல்கூல் அரசனும் அசுஹாபிமார்களென்ற கடலின்பிசர் கடுவலிலகப்பட்டுச் சிதறியோடுங் கப்பல்கள்போலே காபிரீன்கள் தெறித்தோடினார்கள் ஆனால் இந்தபூமியிலே தினைவிதைத்தவன் தினையைப்பெறுவான் வினைவிதைத்தவன் வினையைப்பெறுவானென்னும் பழமொழிப் பிரகாரம் சதிமானஞ்செய்ய நாடிவந்த இறவுசுல்கூல் சதிமானம் சம்பவித்தவனாகக் காற்றைப்போல் மிகுதொலைதூரம் ஓடிப்போயிருந்தான்.

சதியெழுத்துச் சருக்க முற்றிற்று.

# துகாமத்து சிறைபடு சருக்கம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மகாமத்த கத்தின்யானை வன்மங்கொண்டெழுந்து சீறிப்
புகாதுற்றங் கிருக்குஞ்சியப் பொருப்பினிற் புக்குமாறு
சஹாதத்தி னெண்ண மேவுஞ் சங்கையார் தீனோர்பாலில்
துஹாமத்து சிறையிலான செய்தியைத் தொகுக்குவாமே

## இதன்பொருள்.

மகத்தாகிய மத்தகமென்னுஞ் சிரசையுடைய யானை வன்மித்தெழுந்து சிங்கமானது சீற்றங்கொண்டுபோகாமற்பொருந்தியிருக்கு மலையினிடத்திற் போனதுபோல் ஷகாதத்தென்னுமுடிவாகிய மரண வெண்ண முற்றிருக்கும் சங்கைபொருந்திய தீனில்விசுலாமானவர்களிடத்தில் துஹாமத்தென்பவன் போய்த் தெம்பட்டுச் சிறையாகிய செய்திகளை விரிவாகச் சொல்லுகின்றோம்.

## சரித்திரவசனம்.

அப்படித்தூரந்தொலையிலே போயிருந்த இறவுசல்கூல் தனது படைத்தலைவர் முதலாகிய சேவர்கள் யாவரையுமழைத்திருத்தி அவர்களைப்பார்த்து வருத்தங்கொண்ட நமது படைஞருக்கு இனிமேல் இலேசாயிருக்கும் அஃதேதெனனில்இந்தஇடங்கள், நமதுஇருப்பிடத்திற்குச்சமீபம் ஆதலால் தீனுனவர்கள் இங்கேவந்தால் மிகவும்நன்று அல்லாதிருக்கில் அவர்களுடையநித்திரை நோம்பார்த்துப்போய்க்கொல்வோமென்று சொன்னுன். அதுகேட்டு அங்கிருந்ததலைவர்களிலொருவன் எழுந்து இறவுசல்கூலைப்பார்த்து இராஜனே அந்த முகம்மது சென்றகாலம் நடக்குங்காலம் வருங்காலம் ஆகிய மூன்று காலங்களையும் அறிந்திருக்கின்றுர் ஆதலால் இங்கே நாம் எவ்விதஞ்செய்ய நாடினும் உடனேயவரறிந்து தன்மனுடர்களுக்குச் சொல்லுவார் அதனினிச் செய்யவேண்டியது யாதெனில் நமது ரொக்கமுதலாகிய நிதிமணிகளையெல்லா மெடுத்தொன்றுபடுத்தி யேழாவது கோட்டைக்குள்ளாகி யந்த இடங்கள் யாவையும் காவல்களைப்போட்டுப் பத்திரப்படுத்தவேண்டும்; இஃதன்றி அந்த ஏழாவது கோட்டைவாசல்களையடைத்து அவைகளுக்கெல்லாங் காவலாளர்களை நூதனமாக அதி

கப்படவைத்துக் காக்கும்படிசெய்து பிறகு நீர் வெளியேபாய்ந்து தீனு னவர்களுடனே கடிசானசண்டைசெய்தாற் குற்றமற்ற ஜெயம்பெற லாமென்று சொன்னான்.

அதுகேட்டு இறவுசுல்கூல் இரவுகாலத்தில்அந்தத்தலைவன்சொற் படிக்குப் பணங்காசு முதலிய சம்பத்துகளையெல்லாம் இன்பத்தோடு மெடுத்துச் சுமைசுமையாக வாகனங்களிலேற்றி யேழாவது கோட் டைக்கனுப்பினான். அதுகண்டுமந்திரி இச்சமாசாரத்தை நபிநாயகம வர்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென் றெண்ணித் தனக்குரிமையா கிய பயல் சாரீமைப்பார்த்து நீ சீக்கிரம் நபிநாயகத்தின் சமுகத்திற் கொருவருமறியாமற்போய் அவர்களுக்கென் சலாமுஞ்சொல்லி இங் கோாசன்சபையில் இன்ன இன்னவிதம் நடந்திருக்கிறதென்று சொல் லென்று அங்குநடந்த செய்திகளையுஞ்சொல்லி இறவுசுல்கூலுட் கோட்டைக்குள்ளே வந்துவிட்டால் அதுசூட்சமான கோட்டையா தலால் நபிநாயகத்துக்கு அவ்விடத்திலே வருவதற்குக் கனவருத் தத்துடனே நாளுமதிகஞ் செல்லும் அப்படிவாாமல் உட்கோட்டை திறக்கும்போது அங்கேபோகிற பேர்களுடனே பத்துப்பேர்கள் நமது சனங்களை யனுப்பிவைக்க வேண்டுமென்று சொல்லிவிட்டுச் சீக்கிரம் வாவென்றனுப்பினார்.

அதுபோலே சாரீம் நபிநாயகத்தி னிடத்திலே வந்து ஒழுங்காக முறைபோலே சகலசெய்திகளையுஞ் சொல்லிவிட்டு வந்தான்அதுகேட் டு நபிநாயகமனமகிழ்ந்து இராவானபோது அலிறலியல்லாகு அன்கு வையும் தந்திரத்தையுடைய அம்றிபுனு மருதீக்கரீபாவையும் அறம் பிபுனுதையானையும் காலிதுறலியல்லாகு அன்கவர்களையும் மிகுதாது றலியல்லாகு அன்கவர்களையும், சுபைறலியல்லாகு அன்கவர்களையும், தல்காறலியல்லாகு அன்கவர்களையும், ஸகிதுறலியல்லாகு அன்கவர் களையும் கப்பாசுறலியல்லாகு அன்கவர்களையும், அப்துல்லா றலியல் லாகு அன்கவர்களையுங் அழைத்துமந்திரிசொல்லிவிட்ட செய்திகளைச் சொல்லி நீங்கள்தான் போகவேண்டுமென்று சொன்னார்கள். அது கேட்டு அப்பத்துபேர்களுமகிழ்ந்து உடனே குதிரைமேற் சவாராகி னபோது நபிநாயகமவர்கள் அந்தப்பத்துபேரையும் பார்த்து மந்திரிக் குத் தெரியும்படியாகப் போங்களென்று சொன்னார்கள்.

அதுகேட்டு யாவரும் நபிநாயகத்தைப்புகழ்ந்து குதிரைகளைநடா த்திக்கொண்டு இறவுசுல்கூல் பாளையத்தை யடுக்கப்போகச்சே அங்கே மந்திரிதீனுனவர்கள் வருவார்களென்றும் அதைத்தாமறிந்துகொள்ள வேண்டுமென்றும் வைத்திருந்த வேவுகாரப்பயல் சாரீம்கண்டுசீக்கிரம்

வோடிப்போய்மந்திரியிடத்திலே சொன்னான். அதுகேட்டுமந்திரி அலி றலியல்லாகு அன்குமுதலிய பத்துபேர்கள் வருகிறார்களென்ற சந்தோஷம் பெரிதாய்க் குதிரைமேலே சவாராகிவந்து இவர்களையடுத்த போது, சங்கையாகக் குதிரையைவிட்டுக் கீழிறங்கிச்சலாம் சொல்லிப் பின்னர் குதிரைமேலே சவாராகிக்கொண்டு மந்திரியும் முசிலிமாகிய பத்துத்தலைவர்களும் பயலுமாகநடந்து, சத்துருக்களிருக்குமிடத்தில் அவர்களை யடுக்கபோனபோது, சத்துருக்களிலவர்கள் வருவதைக் கண்டு மகாதீர்க்கத்துடனே இங்கேவருபவர்கள் யாரென்று கேட்டதற்குப் பயல்சாரீம் அந்தச் சத்துருக்களைப் பார்த்து என்னையடிமை கொண்டாளுகின்ற மந்திரியும் பத்து பேர்களுமாகச் சத்துருக்கள் காரியத்தைச்சுற்றித்திரிந்து பார்த்துக்கொண்டுஇராஜாவினிடத்திலே போய்ச் சொல்வதற்காக வருகிறோமென்று சொன்னான்.

அதுகேட்டு அந்தக்காவலாளர்சந்தோஷங்கொண்டு சாரிமைப்பார்த்து உனக்கும் உன்னுயகர் மதிமந்திரிக்கும் நமது பாருசென்னுந்தம்பிரான் அருள்செய்வாரென்று சொன்னார்க ளச்சொல்லைக் கேட்டுக் கொண்டிவர்கள் நடந்துபோகும் போது அங்கிருக்கும் காவற்கடுமையினாலே மந்திரிவீடு மட்டிலும் போகக்கூடாமையால் மந்திரியானவர் ஓர்மலைப் பொதும்பினுள்ளே பத்துபேர்களையும் இருக்கவைத்து அவர்களைப் பார்த்துமந்திரி இராமட்டில் நீங்களிங்கே யிருந்து கொண்டுவிடிந்தபிறகு அல்லாகுத் தஆலாவினுதவியாலும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் துஆபரக்கத்தாலும் நீங்கள் நாடியபடி செய்யுங்களென்று சொல்லி விட்டுத் தான் இறவுசுல்கூல் பாளையத்தை நாடிநடந்தார். அப்போது இராஜகுமாரன் துஹாமத்துப் பாளையத்தில் நின்றுங் கோட்டைக்குப் போகிறதற்காக வருகிறதை மந்திரி கண்டு இதை யலிறலியல்லாகு அன்கவர்களுக்கு அறிவிக்க வேண்டுமென்றெண்ணித் தமதுபயல் சாரீமிடத்தில் இவ்விதந் துஹாமத்து கோட்டையை நாடிவருகிறானென்று அலிறலியல்லாகு அன்கவர்களுக்குச் சீக்கிரம்போய்ச் சொல்லென்று சொல்லிவிட்டுத்தாம் துஹாமத்துக்குத் தெரியாமல் மறைந்து கொண்டார்.

பிறகு சாரீம்போய் அலிறலியல்லாகு அன்கவர்களுக்குத் துஹாமத்துக் கோட்டைக்குள்ளே போகப்பாளையத்தை விட்டும் வருகிறானென்று சொன்னதுகேட்டு உடனே அவர்கள் தனித்தவர்களாகக் குதிரையைநடாத்திக் கொண்டுதுஹாமத்துப் போகிறவழியேபோனார்கள் அதுகண்டு துஹாமத்து தன்கூடவருகிற பயலைப்பார்த்து அதோகுதிரைமேல் சவாராகிப்போகிறது யாரென்று பார்த்து வாவென்று சொன்

னான் அதுகேட்டுப் பயல்வந்து அலிறலியல்லாகு அன்குவைப்பார்த்துச் சத்தமிட்டுக்குதிரைமேலேபோகிறது யாரென்று கேட்டான் அதற்கு அலிறலியல்லாகு அன்கவர்கள் பயலைப்பார்த்து இராஜாதி இராஜர்களுடைய கிரீடங்களை விழுத்தாட்டிய புலியாம் கடுகடுப்பையுடைய அரசன் இசுறுவென்பவனைப் படைகளுடனே கைபறில் வெட்டி ஜெயங்கொண்ட கூரிய துல்புகர்வாளையுடைய அலிநானென்று சொன்னார்கள். அதுகேட்டுப்பயல் சீக்கிரமோடிப் போய் துஹார்மத்துக்குச் சொன்னான்.

அதுகேட்டவன் திரும்பவும் பயலைப்பார்த்து நீ போய் அந்தஅலியைவெட்டென்றுசொன்னான் அதற்குப்பயல் துஹாமத்தைப்பார்த்து இராஜாதிராஜன்பெற்ற குமாரசிங்கேறே! அந்த அலியும் னைப்போல் இரதகஜதுரக பதாதிகளில் மிகுந்தவனாதலால் அவனைச் சீக்கிரத்திலடர்ந்து நீர்வென்றால் அந்தகீர்த்தி இந்தக்கடல் சூழ்ந்த பூமியெங்கும்பரந்து நிற்குமென்று சொன்னான். அதுகேட்டு துஹாமத்தென்பவன் தன்மனதில் யோசித்துப் பயல்சொன்னது சரிதானென்று உடனே தனேறியிருக்குங் குதிரையை நடாத்தி அலிறலியல்லாகு அன்கு முன்னே சென்று வாய்மதங்கள் பேசி நின்றான் அப்போது அலிறலியல்லாகு அன்கு துஹாமத்தைப் பார்த்து எடா! நீ எங்கள் தீனில்லிசுலாத்தில் வா, அல்லாத வரையில் நீ செத்துப் போவாயென்றுசொன்னார்கள் அதுகேட்டு துஹாமத்துக் கடூரமான கோபங்கொண்டுஇப்பதானேவென்று கொல்பவனைப் போல் வேலாயுதத்துடனே பாய்ந்தான். அப்போது றலியல்லாகு அன்கு அவன் பாய்ச்சலைத்தடுத்து அவன்கையிலிருந்த வேலாயுதந் தெறித்துத் தூரவிழும்படி தங்களாயுதத்தினாற் றட்டிவிட்டு அவனேறிவந்த குதிரைக்கால்கள் அறும்படி வாளாயுதத்தினால் வெட்டினார்கள்.

அப்போது துஹாமத்துக்கால் நடையாக வாளாயுதத்தைக்குலுக்கி நீட்டிக்கொண்டு நெருங்கி அலிறலியல்லாகு அன்குவைப்பார்த்து ஒ கேவீரனே நீமட்டில்லாத வலிபேசி வந்தும் உன்னையாதுங்கெடுதியில்லாத என் குதிரையின்கால்களைவெட்டிக்கீழே விழுத்தாட்டினதுனக்கு ஞாபமோ சொல்லென்று சொன்னான். அது கேட்டு எட்டுத்திக்கும்புகழுமின்ற அலிறலியல்லாகு அன்கவர்கள் தங்கள் குதிரையை விட்டுங்கீழிறங்கிப்பூமியதிரும்படி சப்தித்து துகாமத்தைப்பார்த்துசதிமானயானவனே யென்று சொல்லித் தங்கள் கையிலிருந்த வாள்ப் பிடிநெறுங்கும்படி இறுகப்பிடித் தசைத்துக் கொண்டவனை நெருங்கினார்கள் இவ்விதத்தில் இரண்டுபேர்களும் இடியுமிடியும் எதிர்த்ததுபோலெதிர்த்து நிற்கும் போது துகமாத்துடையபயல் துகாமாவைப்பார்த்துஇப்போது

நீ நெருங்குந் தன்மையைபார்க்கில் அலிகையிலே சிறையாகச் சிக்கிக்கொள்வாய்போலே தெரியுகின்றதென்று சொன்னான் அப்போது அலிறலியல்லாகு அன்கு அந்தப்பயல்பேரிலே கோபமாகிப் பூமியிற் குனிந்தோர் சிறியகல்லை யெடுத்தவனை யடித்தார்கள் அக்கல் அவன் தலையை யுடைத்துக்கொண்டப்புறம் போய்விட்டது பயலுங் கீழே மயங்கி விழுந்துவிட்டான்.

அதுகண்டு துஹாமத்து திகில்கொண்டு பயந்து நின்ற இடம் பெயர்ந்தோடினான் அப்படியோடுந் துஹாமத்தின் பின்னாலே அலிறலியல்லாகு அன்கு ஓடிப்போய்ப் புலியானது ஆட்டுக்கிடாயைப் பிடிப்பதுபோலவன் புரடியைப் பிடித்தொருதரங் குலுக்கித் தங்களுக்குப் பின்னால் நிற்கிற அப்துல்லா அவர்களிடத்திற் கொடுத்தார்கள் உடனே யப்துல்லா அவர்கள் துஹாமத்துடைய கை காலுக்குத் தளையிட்டுச் சிறையிலே வைத்தார்கள். பிறகு அசுஹாபிமார்கள் ஒன்பதுபேர்கள் சத்துருக்களின்பாளயத்திற்குபோய்விழுந்துழக்கினார்கள் அதில் வந்தெதிர்த்த சத்துருக்களில் (500) பேரைவெட்டிக் கைகால் தலையறுந்த பிணங்களாகப் பூமியிலே பாய்விரித்ததுபோலே பரத்தினார்கள். அப்போது ஒரு சுத்தவீரியன் சத்துருக்கள் பாளையத்தில் நின்றும் அவ்வழியாக வந்தபோது அங்கே வெட்டுண்டு கிடக்கிற பிரேதமொன்று அவன் காலிலே தட்டுண்டது அதுகண்டு அவன் இவன் நித்திரை செய்கிறானென்றெண்ணி ஓகே, வழியிற்படுத் துறங்குபவரே யெழும்புமென்று சொல்லிக்கொண்டு இன்னும் ஓரடி தூக்கி வைக்கச்சே அங்கும் ஒருபிரேதம் அவன் காலிலே தட்டுப்பட்டது கண்டு, இஃதென்ன மனுடர் சடலங் காலிற்றட்டுப் படுகிறதேயென்று நன்றாகவெங்கும் பார்க்கும்போது அங்கே பிணக்காடாகக் கிடக்கக் கண்டு அழுதுகொண்டு இராஜன் இறவுசுல்கூலிடம் போய் இவ்விதமின்ன இடத்திலே பிணக்காடாகக் கிடக்குதென்று சொன்னான்.

அதுகேட்டு இராஜன் தனதுபடைகள் யாவற்றினும் பேர் பாதிப் படைகளை யெடுத்துக்கொண்டு இருளான இரவு காலமாதலால் மெழுகு வத்தி மத்தாப்பு முதலாகிய தீபவெளிச்சத்துடனே வந்து பிணக்களத்தை யடுத்துப்பார்த்து இவ்வேலை செய்தது அலியேயல்லாமல் வேறொருவருஞ் செய்த தல்லவென்று சொல்லிச் சஞ்சலித்தான். அப்போது அலிறலியல்லாகு அன்கு முதலிய பத்து அசுஹாபிமார்களும் துஹாமத்தைப் பூட்டிய தளையுடனே தாட்டிகமாகக் கொணர்ந்து காட்டில் மான்பேசிய வாட்டிறல் நபிநாயகத்தின் முன்

பில் விட்டார்கள். நபிநாயகம் அந்த துஹாமத்தைப் பார்த்துப் பாவங்களைத் தடியுகின்ற கலிமாவைச் சொல்லென்று சொன்னார்கள் இவ்விதம் வேதகாரணராகிய நபிநாயகஞ்சொன்ன சொற்கேளாமல் மறுத்தான். ஆதலால் அவனைக் கழுகிவிடச்சொன்னார்கள். அப்போது அங்கேவந்த முகல்கில் றவியல்லாகு அன்கு நபிநாயகத்தைப் புகழ்ந்து அல்லாவுடைய றசூலே இன்றை .யிராவரையு மென்னிடத்திலிந்தத் துஹாமத்தைத் தாருங்கள் நானவனுக்கு ஆகுமான புத்தியைப்போதிக்கிறேன் அதனால் அவன்மனந் திருந்துமென்று சொல்லிக் கேட்டார்கள். அப்போது நபிநாயகம் முகல்கிலுடனே யுமது மனம்போலே செய்யுமென்று சொன்னார்கள் அதுகேட்டு முகல்கில் பாதகனாகிய துஹாமத்தைத் தமது இருப்பிடத்திற்குக் கூட்டிக்கொண்டு போய் அவனை யிருக்கச்செய்து வேதபாகை யறிவாகாரங்களை யின்பமாக அவனுக்குப் போதித்தார். அவ்வறிவுகளைப் பாதகன் துஹாமத்து எவ்வளவு மனங்கொள்ளாமற் றனதுபிறவியுடைய நேர்வார்த்தைக்கிடர் பேசினவனாக இருந்தான். அப்போது மகா திரவல்லியானமுகல்கில்படுத்து நித்திரைசெய்தார் அதுகண்டு பாவிதுஹாமத்தென்பவன் இதுதானமக்கு நல்லதருண மென்றெண்ணித் தனது கால் கைகளிலிட்ட தளையை யொருவிதத்தில் நொறுக்கிக் கழட்டி வீசிவிட்டு அங்கிருக்கு முகல்கிலுடைய வாளை யெடுத்துத் தன் பிறவியென்ற உருக்கமுமில்லாமல் முகல்கிலுடைய தலையை வெட்டி யெடுத்துக் கொண்டு அந்த இருளிரவையிலேயே அம்புவிரைவாகப் போயினன்.

அந்நேரத்தில் இறவுசுல்கூல் படைக்களத்தில் வந்து தன் மகன் துகாமத்தைக் காணாமையால் அங்கே வெட்டுப்பட்டுத் தலைகளுமுடல்களும் மாண்டுகிடக்கிற பிணங்களை யெல்லாம் புரட்டிப் புரட்டி இதில் மாண்ட துஹாமத்தும் வெட்டுப்பட்டுக் கிடக்கிறானோவென்று பார்க்கும்போது தன்மகன் துஹாமத்தோடிருந்த பயலிறந்து கிடக்கிறதுடனே துஹாமத்துடைய வேலாயுதமுமுறிந்துகிடக்கக்கண்டு திகில்கொண்டு மனம்பதறி அந்தோ அப்பாவென்றரற்றிக்கொண்டு கூகூவென்று அழுது கீழே விழுந்து மண்ணைவாரித் தலையிலிட்டு வண்டைப்போலே சுருண்டு உருண்டு வுணர்வுமயங்கிக் கிடந்து கொஞ்சநேரத்திற்குப் பிறகு வுணர்வு வந்தெழுந்து நாலுதிக்கையும் பார்த்தகண்ணாய் நிற்கின்றான் அப்போது பாவி துஹாமத்து முகல்கிலுடைய தலையுடனே தகப்பன் கிட்டநெருங்கினான் அதுகண்டு உடனே இறவுசுல்கூல் ஆவலாக மகன் துஹாமத்தைக் கட்டியணைத்து முத்தமிட்டு நின்றான்.

அப்போது துஹாமத்துத் தன்தகப்பனுகிய இறவுசுல்கூலைப் பார்த்துத் தான் அலிறலியல்லாகு அன்கவர்க ளுடனே சண்டைசெய்து சிறையிலகப்பட்டதும் பின்னர் அலிறலியல்லாகு அன்கு இவனை யப்துல்லா அவர்களிடத்திற் கொடுத்ததும்; அவர்கள் நபிநாயகத்தி லிவனைக் கொண்டு போய் ஒப்பித்ததும், அவர்களிவனைக் கலிமாச் சொல்லச் சொன்னதும், அச்சொல்லிற்கிவன் வீறுபேசியதும் ஆகிய சகல செய்தியுஞ் சொல்லி யுடன்பிறந்தார் முகல்கீலுடைய தலையையும் முகதாவில் வைத்தான் அதுகண்டு இறவுசுல்கூல் மகன் துஹாமத்தை மெச்சிக்கொண்டு அகங்கரித்துத் தனதுபடைகளை யெல்லாமொன்ருகத் திரட்டினன், அப்போது இறவுசுல்கூல் மனம்போலே இருண்டிருக்கு மிருட்கூட்டம் நீங்கிச் சூரியனுதயமாயினன். அப்படிச் சூரியனுதயமாக முன்னர்நபிநாயக முதலாகிய அசுஹாபிமார்கள் யாவரும் எழுந்து உலுச்செய்து அல்லாகுத் தஆலாவைத் தொழுதிருந்து பின்னர்,

நபிநாயகமவர்கள் இக்கிரிமா றலியல்லாகு அன்குவைப் பார்த்து தீனுல்லிசுலாத்தில் இணங்காத துஹாமத்தைக்கொண்டு வரும்படி முகல்கீலவர்களுக்கும் சொல்லுமென்று சொன்ஞர்கள். அதுகேட்டுடனே இக்கிரிமா அவர்கள் மதயானைக்கொப்பமாக இருதோளும் பூரிக்க நடந்து முகல்கீலிருக்குங் கூடாரத்திற் சென்று பார்க்கும் போது அங்கே முகல்கீலவர்களின் தலையில்லாமல் உடற்றுண்டமாத் திரங் கிடப்பதையும் துஹாமா அங்கே யில்லாமலிருப்பதையுங் கண்டேங்கித் திகைத்துக்கானகச் சுரத்தில் ஆற்றையழைத்துத் தாகத்தை யுடையவர்களுக்கு அத்தாகத்தைத்தீர்த்த முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களிடத்தில் வந்து சொன்ஞர். அதுகேட்டு உடனே நபிநாயகஞ் சில குதிரை வீரியர்களை யழைத்துப்பாதையிலெங்கேனும் பாதகன் துஹாமாவென்பவன் போனுற்பார்த்துச் சீக்கிரம் பிடித்து வாருங்களென் றனுப்பினர்கள் அவர்களும் போய்ப்பார்த்ததி லெங்குங்காணுமல் வருத்தங்கொண்ட மனத்தராக வந்துவிட்டார்கள். பின்னர் றமலான் மாதம் ஒன்பதாந்திகதி சனிவாரம் அாவமில்லாத இராவுகாலத்தி லேழுவானத்தையுங் கடந்து அறுஷிலேறி ஆண்டவனுடனே மூன்றுபகுதியாக முப்பதினுயிரம் வசனம்பேசி மீண்ட நபிநாயகமவர்களும் அசுஹாபிமார்களும் ஆண்பிறப்பிலழகாகிய முகல்கீலவர்களுக்குத் துஆச்செய்தவர்களாக இருந்தார்கள்.

அப்போது இறவுசுல்கூல் தன்மகனுகிய பாதகன் துஹாமத்தை யழைத்து அவனைப்பார்த்து மகனே துஹாமாவே நீ சீக்கிரமாக நமது

கோட்டை கொத்தளம் தெருக்கள் இராஜமண்டபமுதலாகிய இடங்களையெல்லாம் நன்றாய்ப் பார்வையிட்டு அங்கங்கே கெடித்தலம் பார்த்துப் பத்துப்பத்து பேர்களாக இரவும் பகலும் அயராமலிருக்கும்படி காவலாளர்களைத் தாக்கீது செய்துவிட்டு அவர்கள் மனம் பூரணமாகும்படி கைநிரம்பப் பணங்களையுங் கொடுவென்று சொன்னான். அது கேட்டுத் துஹாமத்துச் சந்தோஷமாகித் தகப்பன் சொன்ன முறைபோலெங்கும் கடுங்காவல் நிறுத்தினன் பின்னர் இறவுசுல்கூல் முகம்மது நமக்குப் பயந்திருக்கிறுரென்றெண்ணித் தனது பாளையத்தைப் பார்க்கவேண்டுமென்று வேளிபிலே புறப்பட்டான்.

துஹாமத்து சிறைபடு சருக்க-முற்றிற்று.

---

# அலியார் கோட்டைபுக்கு - சருக்கம்.

கலிவிருத்தம்.

கலியார் குபி ரோர்கள் கணம் படவே
மெலியா தடரும்விறல் வேதர் நார்
புலியா ரிற சூல்புகழும்மருகர்
அலியா ரரண் புக்கதை யோதிடுவாம்

## இதன் பொருள்.

அருளிலே தரித்திரர்களான காபிரீன்களின் கூட்டங்கள் பட்டு மடிந்து போகும்படியாய் மெலிவில்லாது நெருங்கி வெட்டும்வெற்றி வேதநாயகர் நாஜெ‌ன்மரில் ஓர் புலியானவர் றசூல் நாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் புகழும் பலதீரத்தையுடைய மருமகர் அலிறலியல்லாகு அன்கவர்கள் வாதில்சுகுறுவுட் கோட்டைக்குப் போனதைச் சொல்லுகின்றும்.

## சரித்திர வசனம்.

இறவுசுல்கூல் வெளியில்வந்து தனதுபாளையத் திடங்களையெல்லாம்பார்த்தபோதுமுன்னர்,அலிறலியல்லாகு அன்கவர்கள் வெட்டிய சத்துருக்களின் பிணங்களைக்கண்டுமனம்பயந்துயிருந்தான். அப்போதுநபிநாயகம் வேதமன்னகல்விமான்களாகிய அசுஹாபிமார்களைப்பா

ர்த்து உங்களிலே யுட்கோட்டைக்குள்ளே போவதற்கு நல்லவுபாய தந்திரமுந்திறமு முடையவர்களாகப் பத்துப்பேர்க ளென்முன்னெழுந்து வாருங்களென்று சொன்னார்கள் அதுகேட்டு மலைபுருக வாங்குசொன்ன அலிறலியல்லாகு அன்கவர்கள் நானென்றென்றார்கள் பிறகு அம்றிபுனுமகுதீக்கரீபவர்கள் நானென்றென்றார்கள் அதுகேட்டு நபிநாயகம் அவ்வம்றிபுனு மகுதீக்கரீபவர்களைப்பார்த்து நீரென்னுடனே இங்கே இருமென்று சொன்னார்கள். பிறகு அலிறலியல்லாகு அன்குவும், புலைலிபுனு அப்பாசும், மிகுதாதிபுனு அசுவதிகிந்தியும், காலிதிபுனுவலீதும், நப்பாசும், அறம்மிபுனுதையாலும், மைசறூவும் அப்துல்லாவும், சுகைறும், தல்காறலியல்லாகு அன்கும்ஆகிய இப்பத்துத் தலைவர்களும் மகாதீரவீரத்துடனே காற்றும் பின்னடையும்படியாய்க் கால்நடையாகப்போய்ப் புலிகளைப்போல் ஆயுதங்கள் மின்னலைப்போலிலங்கக் கோட்டைமதிலையடுத்து அங்கே எட்டுபேர்களையிருக்கவைத்துவிட்டு வீரதங்கிய அலிறலியல்லாகு அன்குதாங்களும், அப்துல்லாவும், நடந்து போய்க்கோட்டைவாயிலுக்கு நேரேயோரிடத்திலே பதுக்கமாக நின்றார்கள்.

அப்போது அங்கே மடமடென்று சில வொட்டகங்கள் போகக் கண்டு அவைகளின்மே லென்னசாமான்களேற்றி வருகிறதென்று குறிப்பிட்டுப் பார்க்கும்போது எழுபது ஒட்டகைகள்மேலேபொற்காசு முதலிய நவரத்தினதிநிறைந்த பெட்டிகளேற்றி யதனுடனே பத்து வீராதிவீரரும் இறவுசுல்கூலுடைய பெண்ஜாதி ஜாமியத்தும் நெருக்கமாகப் போகிறார்கள் அந்தவழியில் அலிறலியல்லாகு அன்குபதுக்கமாகப்போய்ப் பார்த்தபோது அவ்விடங்களெல்லாம் பெரும்பெரு மரங்கள் கொப்புக்குழை யடர்ந்து நிற்கக்கண்டு வழியோரமிருக்கிற ஒரு மரத்திலேறிப் பறவையைப்போலே தொங்கிக்கொண்டு இருந்தார்கள்.

இவ்விதம் அலிறலியல்லாகு அன்குஎறியிருக்கு மரத்தடியில் அப்துல்லாமிகவும் கேவலமாகிய பிசிக்கின்கள்கோலங்கொண்டு தம்முடையகைவாளை யொளித்துவைத்துக்கொண்டுநின்றார் அப்போது அங்கே வந்தவெழுபது ஒட்டகமும்மொரே தொடுப்பாகப்போனதில் முன்னால் அறுபத்தொன்பது ஒட்டகமும் போயினபின்னர் கடைசியிலே போகிற ஒரு வொட்டகத்தை யலிறலியல்லாகு அன்குஉயர இருந்துக்கொண்டு உற்றுப்பார்க்கும்போது அவ்வொட்டகைமேல் மனுடர்களா

ருமில்லாது கூடாரமொன்று வைத்திருக்கக்கண்டு உடனே வள்ளலாகிய அலிறலியல்லாகு அன்கவர்களிருக்கின்ற மாக்கொம்பைப் பிடித்துத்தூக்கிப் பறவையைப்போலே அவ்வொட்டகையிலிறங்கி இருந்தார்கள். அதுகண்டு அங்கு மாத்தடியில்நின்ற அப்துல்லா அவ்வொட்டகையினுடையநாசி நூற்பிடித்துப்போகிற ஒட்டகைப்பாகனையொரே வெட்டாகச் சத்தம்வெளிக்குவராமல் வெட்டிவிட்டுத் தாங்கள் ஒட்டகையினுசிநூலைப் பிடித்துக்கொண்டுகூட்ட வொட்டகக்காரருடனே கோட்டைவாயிலையடுக்கப் போகும்போது,

முன்போகிற ஒட்டகத்தார் கோட்டை வாயிலடைத்திருப்பதினால் வெளியில்நின்று அங்குநிற்கிறவாசற்காவற்காரரைக்கூவினூர்கள். அவர்கள் யாரென்றுகேட்டார்கள் அதற்கிவர்கள் நாங்கள் இராஜனுடைய பாளையத்திலிருந்து பொன்முதலிய சாமக்கிரிகைகளுடனே இராஜாக்கினியையும் கொண்டுவருகிறோம் ஆதலாற் சீக்கிரங்கதவைத்திறங்களென்று சொன்னூர்கள். அப்போதந்தக்காவலாளர் மகாவிரைவாகக் கதவைத்திறந்தார்கள் திறந்தபோது தடதடென்று மேற்சொல்லிய எழுபது ஒட்டகங்களும் வாயிற்குள் நுழைந்துபோகும்போது நடுவழியில் அலிறலியல்லாகு அன்கவர்களிறங்கி நின்றூர்கள் அதுகண்டு அப்துல்லாவும் ஒட்டகை நாசிநூலைவிட்டுவிட்டு நின்றூர் பிறகு ஒட்டகங்களெல்லாம் அவ்விடத்தைவிட்டுக் கடந்துபோனபோது அலிறலியல்லாகு அன்கவர்களும் அப்துல்லாவும் தண்ணீர்ச்சுனையுள்ள மறைவாகியவோர் மலைச்சருகிலேபோயிருந்தார்கள் அப்போது அங்கே ஒரு காபிரானவன் அவ்வழியாகவந்தான் அவனிவர்கள் இரண்டுபேரையுங்கண்டு கிட்டநெருங்கிச் சலாஞ்சொல்லி மறுஹபாபர்ருசுடைய கிருபை யுங்களுக்குண்டாவதாகவும் இங்கே நீங்கள் நிற்கிற காரியமென்ன? நீங்கள்யாரென்று கேட்டான்.

அதற்கலிறலியல்லாகு அன்கவர்கள் அவனைப்பார்த்து இவனோடேயிப்போது நாம்பர்ருசென்னும் புத்துஹானுடைய பேச்சைக்குறித்துத்தடைசெய்தால் நாமிங்கேவந்திருக்கிறது காபிரீன்களுக்குத்தெரிந்தால் நாம்வந்தயெண்ணம் இலேசாய்முடியாதென்றெண்ணி அதைக்குறித்துப்பேசாமல் மனத்திலடைக்கிக்கொண்டு நாங்கள் வழமையாக இராஜனிடத்திற்கு வருகிறவர்கள் இப்போது வழியிலே படைஞர்கள் எங்களை நோவினைசெய்தார்கள் அந்தப்பயத்தினுலிந்தச்சருகில்வந்தொதுங்கிநிற்கிறோமென்று சொல்லிப்பின்னும் அவனைப்பார்த்து இராஜா

யிடத்தில்நடக்கிற காரியங்களென்னவென்று கேட்டார்கள் அதற்கவன் இராஜாவுடைய காரியங்களிலே தனக்குத் தெரிந்தமட்டிலுஞ் சொல்லி இவர்களைப்பார்த்து எதுவேனும் செய்திகளிராஜாவுக்குச் சொல்லவேண்டுமானாற் சொல்லுங்கள் நான்போய்ச் சொல்லுகிறேனென்று சொன்னார். அதுகேட்டு அலிறலியல்லாகு அன்கு அந்தக் காபிரானவனைப் பார்த்து இராஜாயிடத்தி லெங்களுக் கிப்போது அவசியமாகச் சொல்ல வேண்டிய காரியமில்லை ஆனால் மந்திரிக்குச் சொல்லவேண்டிய பேச்சிருக்கிறதென்று சொன்னார்கள். அதற்கவன் இவர்களைப் பார்த்துச் சொல்லுங்களென்றான். அது கேட்டு அலிறலியல்லாகு அன்குசந்தோஷமாகி யவனைப்பார்த்து நீ முதன் மந்திரியைக் கண்டு முன்னர் விநோத மாகிய வியாபாரிகள் நல்ல விலை பேசிச் சந்திரனை வென்றிலங்கும் வெள்ளைப் பிடவை தந்தவர்கள் இரண்டு பேருமிங்கே இன்னயிடத்தில் வந்திருக்கிறார்களென்று சொல்லென்ற அவன் காபிரானபடியல் ஹிக்குமத்தாகச் சொல்லியனுப்பினார்கள். அவன் மிகவும் நல்லதென்று சீக்கிரம்போய்ச் சிறப்பான முதன்மந்திரியைக் கண்டுஅவருக்கு தாழ்ச்சிசெய்து அலிறலியல்லாகு அன்குசொன்ன சொற்கள் யாவையுஞ்சொல்லிவிட்டுப் போயினான். அப்போதுளட்டுத் திசையு மிருள்படரும் படியாய்ச் சூரியனுமடைந்தான்; அப்படிச் சூரியனடைந்து இருளானபோது மந்திரியானவன் கொடூரமாகிய பாம்பைத் திரும்பினால் வதைத்த முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள், தங்கள்மருக றலியல்லாகு அன்குவை தான் ஒளிப்பாகவனுப்பி யிருக்கும் அவர்களும் உட்கோட்டையில் வந்து விட்டார்கள். ஆதலால் நாம்போய் ஆகுமானவை செய்யவேண்டு மென்றெண்ணி அங்குள்ள குதிரை வீரியர்களை யிடங்களைக்குறித்துக் காவலுக்கு அனுப்விட்டுத் தாங்கள் காவலிடங்களைச் சோதனை செய்ய வருவதுபோலே தனிவழியாக வந்து அலிறலியல்லாகு அன்குவைக் கண்டு அவர்களின் காலில் விழுந்தெழுந்து சலாம் சொல்லி நின்றார்.

அப்படிநின்றமந்திரியை அலிறலியல்லாகு அன்கு நெஞ்சோடணைத்து மகிழ்ச்சிவார்த்தை பேசித்தலையைத்தொட்டு முத்தித்தங்கள்பாரிசத்திலிருக்க வைத்தார்கள். அப்போது மந்திரியலிறலியல்லாகு அன்குவைப் பார்த்து அதபுமரியாதையுடனே தேவரீர் தாங்களிந்தக் கடுங்காவலைக் கடந்தெவ்விதம் உட்கோட்டையில் வந்தீர்களென்று கேட்டதற்கு அலிறலியல்லாகு அன்கவர்கள் தாங்களும் அப்துல்லாவும் வந்ததந்திரத்தைச் சொன்னார்கள். அதுகேட்டு மந்திரிமிகவுமனமகிழ்ந்திருந்தார் அப்போது அலிறலியல்லாகு அன்குமந்திரியைப்பார்த்

துத்தன்னுடற் பிறந்தாரென்று மிரக்கமில்லாது முகல்கீலுடைய தலையை யறுத்துக் கொண்டுவந்த துஹாமாவென்பவ னெங்கேயிருக்கிறு னென்று கேட்டார்கள். அதற்கு மந்திரி அலிறலியல்லாகு அன்குவைப்பார்த்து அந்தப்பாதகன் கோட்டைக்குள்ளே தானிருப்பான் அவனை நான்போய் ஒருபாயதந்திரத்தினல் என்வீட்டுக்கு வரச்செய்கிறேனென்று சொல்லிப்பிறகு அறிறலியல்லாகு அன்கவர்களையும் அப்துல்லா அவர்களையும் அங்குயாருக்குந் தெரியாமற் கூட்டிக்கொண்டு தங்கள்வீடு வந்துசேர்ந்து நன்முகிய ஆசனங்களி லிருக்கவைத்தார்.

அப்போது அலிறலியல்லாகு அன்கவர்கள் மந்திரியைப் பார்த்து நபிநாயகத்தினிடத்தி லிருந்துவந்த அசுஹாபிமார்கள் எட்டுப்பேர்களைக் கோட்டை மதிலுக்குப் புறத்தில் வைத்துவிட்டு வந்தமுறைமையைச் சொன்னூர்கள். அதுகேட்டு உடனே மந்திரி அப்துல்லாவையும் கூட்டிக் கொண்டுபெரிய அமாறுக்கயிறு மெடுத்துக்கொண்டு அப்துல்லாவுடைய சொற்போல் வெளியிலசுஹாபிமார்களெட்டுப் பேருமிருக்கிறமதிலை நாடிவந்து அம்மதிலின்மேலேறிக்கயிற்றைவெளியிலேதொங்கவிட்டு ஒவ்வொருவராக அசுஹாபிமார்கள் எட்டுப்பேரையு முள்ளேயெடுத்தார்கள். அப்போது அவர்கள் மந்திரியைக்கண்டு அன்புடனே சலாம்சொல்லிச் சந்தோஷமாகினூர்கள் உடனே மந்திரியவர்களையெல்லாங் கூட்டிக்கொண்டுவந்து அலிறலியல்லாகு அன்கிடத்தில்விட்டு யெல்லோர்களுக்கும் உபசாணைபேசிச் சத்துருக்களை வெட்டத்திடமிருக்க வேண்டுமென்று நாவுருசிக்க, வாயினிக்க, நெஞ்சுகளிக்கக், கைமணக்க முப்பழாதிகளுடனே; யறுசுவையிண்டி தின்று பதார்த்தம் புசிக்கச்செய்து சந்தனமும்பாளிதமுங் கொடுத்தார்.

அலியார் கோட்டைபுக்கு சருக்க-முற்றிற்று.

---

# துஹாமத்துவதைபடு சருக்கம்

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்

மடவனன் றவுசுல்கூலின் மகன்துஹா மத்துமேன்மைத்
திடமனு மலியார்தங்கள் செங்கைவா ளதனிலைலே
தடமனுந் தலைவெட்டுண்டு தழலவியாம லோங்கி
யிடமனு நரகுசேர்ந்த வியல்புகள் யாவுஞ்சொல்வாம்.

## இதன் பொருள்.

மடமைத்தனமுள்ள இராஜனை இறவுசுல்கூலின் மகனாகிய துஹாமத்தென்பவன் மேன்மைத்திறம் பொருந்திய அலிறலியல் லாகு அன்கு தங்களின் சிவந்த கையிற்பிடிக்குந் துல்புகரென்னும் வாளினால் விசாலமான தலைவெட்டுண்டு நெருப்புத்தழல் அவியாம லோங்கி வெவ்விடங்களிலுமெரியும் நரகத்திற்குப் பாத்திரமாகப்போன செய்திக ளெல்லாவற்றையுஞ் சொல்லுகின்றாம்.

## சரித்திர வசனம்.

இவ்விதம் பால் பழாதியுண்டு மகிழ்ந்திருக்கின்ற அலிறலியல் லாகு அன்கவர்கள் முதலாகிய அசுஹாபியார்களை மந்திரி பார்த்து நீங்களிங்கே சந்தோஷமாக இருங்கள் நான் வருகிறேனென்றுசொல் லித் தமது வீட்டைவிட்டு வெளியிலாகிச் சரேலென்று துஹாமத் துப் படுத்துறங்குகின்ற மண்டபமடுத்து அங்கு நிற்கின்ற காவலா ளர்களுக்குத் தான்மந்திரியென்று தெரியப்படுத்தித் தடையில்லாது அம்மண்டபத்தின் மேன்மாடத்திற் சென்று அங்கே பஞ்சணையிற் படுத்திருக்கிற துஹாமத்தைக்கொண்டு உசுப்பித்திண்ணங்கொண்ட தோட்களையுடைய சத்தவீரியனே இன்னேரத்தில் நாம் சவுக்கியமாக நித்திரை செய்வது நன்மையல்லவே பகைவருடைய வுளவுகளையும் நமது கோட்டைக்காவல்களையும் சோதித்துக் கொண்டல்லோ திரியவேண்டும் ஆதலால் நித்திரையை யொழித்துவிட்டு வாவென்று சொன்னார்.

அதுகேட்டுத் துஹாமத்து மந்திரி சொல்லுகின்றது சரிதானெ ன்று தான் தமையனார் முகல்கீலைக்கொன்றபழிக்கு பதில்பழி கொடுக் கவேண்டி யெழுந்து மந்திரியுடனே கோட்டையைநாடி நடந்தான். அப்போது மந்திரியுங் கூடவே கோட்டையெங்குஞ் சுற்றிக் காவற் காரரி னித்திரையைச் சோதித்து உசாராகி விட்டுத் துஹாமத்து முகல்கீலைக்கொன்ற கொலையாகிய வலையிலெம்பட்டவனைத் தனக் குச் சாகக்கால மடுத்துக்கொண்டு எமன் புரடியைப் பிடித்துத் தள்ள மந்திரியுடைய விசாலமான மாளிகை வாயிலில் வந்தான். அப்போது துஹாமத்துத் தன்றமையனைச்செய்த பாதகப்பழியாகிய யானைப் படையும் அதனால் மிகுதிப்புறவாகிய நபிநாயகமவர்களின் வெறுப் பாகிய குதிரைப்படையும் சல்காநாயகிமனை மெரிவாகிய இரதப்படை யும் அல்லாகுத்தஆலாவுடைய முனிவாகிய காலாட்படையும் மற்ற வுடற்பிறந்தான் மார்களுடைய வருத்தமாகிய விற்படையும் அவன் தீனை மறுத்த வாட்படையும் ஆகிய இவைகளெல்லாங் கூட்டமாகத்

திறண்டு வந்து துஹாமத்தைச்சூழ அவன் மந்திரீயின் மாளிகை வாயிலைக் கடந்தான்.

அப்போது மந்திரி துஹாமத்துடைய காது கேட்கும்படியாய் அங்குநின்ற ஒரு வேலைக்காரனைப்பார்த்து அலி யொருவேளை யுள்ளேவரப் போகிறார் பத்திரம் கதவைப் பூட்டென்று சொன்னார். அது கேட்டுத் துஹாமத்து மந்திரியைப்பார்த்து அப்படியலி யிங்கே வந்தால் வெட்டிப் பருந்திற்கு விருந்து வைக்கலாமென்று சொல்லிக் கொண்டு மாளிகைக்குள்ளே நுழைந்தான். அங்கே அலிறலியல்லாகன்வர்கள் சிங்க மிரைதேடி யிருப்பதைப்போல் வர்ட்பிடித்துக் கொண்டிருக்கவும் அவர்களைச் சூழ ஒன்பது புலிகளைப்போலொன்பது அசுஹாபிமார்க ளிருக்கவுங்கண்டு துஹாமத்து சேற்றுக்குழியில் விழுந்த யானையைப்போலே திடங்கவும் வலையிற்பட்ட கழுகு முதலிய பறவைப்போல் மயங்கவும் காற்றுக் கடலிலெம்பட்டகப்பலைப் போலலைந்தும் ஓடவழி பார்த்தான். அப்போது அலிறலியல்லாகு அன்கு அவனைப்பார்த்து எடா துஹாமாவே நீ தப்பி வெளியிலோடவா நினைக்கிறாய் நரகத்திற்குப்போவென்று பாய்ந்து அவனை வாளால் வெட்டித் தலைவேறு உடல்வேறாக்கினார்கள்.

அதுகண்டு மந்திரி மனமகிழ்ந்தோடிப்போய் அங்கே கோட்டை, கொத்தளம் நிதியறை முதலிய தலங்களிலே காவற் காத்திருக்கும் வீரர்களை யழைத்துவந்து தம்முடைய மண்டபத்தின் புறத்திலவர்களை யெல்லாம் நிறுத்தியவர்களைப் பார்த்துத் தேனிலுமின்பசொற்களாலே பேசி இங்கே யலியார் படையுடனே யெதிர்த்து வந்துவிட்டால் நீங்களெல்லா மென்னவிதஞ் செய்வீர்களென்று கேட்டார். அதற்குப் அவர்களெல்லா மந்திரியைப் பார்த்து புகழ்ந்து மட்டிட வொண்ணாத பலத்தையுடைய அலியாரப்படிவந்து எங்களை வெட்டுமுன்னே நாங்களெல்லாந் தீனில் விசுலாமாகி விடுவோமென்று சொன்னார்கள். அதுகேட்டு மந்திரியுடனே தமது மாளிகையினுட் புகுந்து அங்கே அலிறலியல்லாகு அன்கவர்களால் வெட்டப்பட்ட பாதகன் துஹாமத்துடைய தலையைக் கொண்டு வந்து வெளியில் நிற்கின்ற வீரர்களுக்குக் காட்டியபோது அவர்களெல்லா மிகவும் நடுங்கி இவ்விதஞ்செய்தவர்கள் யாரென்று கேட்டார்கள் அதற்கு மந்திரியவர்களைப் பார்த்து அலிறலியல்லாகு அன்குதானென்று சொன்னார்.

அதுகேட்டு, வீரர்கள் மந்திரியைப்பார்த்து அந்த அலியாரிப்போதெங்கேயிருக்கிறார் முதலிலதைச்சொல்லுங்களென்று கேட்டார்கள்

அதற்கு ஓர்யோசனை யெண்ணி இன்னுமந்திரி, அவ்வீரியர்களைப் பார்த்து அவ்வலியார் ஒட்டகக்கூட்டத்துடனே கோட்டைக்குள்ளே வந்து இவ்விதம் இராஜகுமாரன் தலையை வெட்டினர் அதுகண்டு நான்பயந்து நம்மையுமிப்படிச் செய்யப்போகிருரென்று கலிமாச் சொல்லினேன் இப்போது அலிறலியல்லாகு அவர்கள்கூடத் திறத்த வீரர் ஒன்பதுபேருமிந்தக் கோட்டையைப் பிடித்துக்கொள்ளவேண்டி இதோவெனது மாளிகைக்குள்ளே வந்திருக்கிருர்களென்றும் என்னைப்போல் நீங்கள் யாவருங் கலிமாச்சொல்லாதிருக்கில் இராஜகுமாரனைப் போலாவீர்களென்றுஞ்சொன்னர். அதுகேட்டு வீரர்களெல்லாம் சரேலென்று மந்திரி மாளிகைக்குள் நுழைந்து மலையினடிவாரம் நடுங்க வாங்குசொல்லி வல்லநாயகனைத்தொழுத அலிறலியல்லாகு அன்கவர்களுடைய பாதாம்புயத்தைப் பிடித்து முத்திமிட்டெழுந்து அல்லாகுத்தஆலாவைத்தவிரவேறேயோர் நாயகனில்லை யென்றும், அந்நாயகனுக் குவப்பாகிய தூதர் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமென்றும் உண்மை கொண்டு (லாஇலாக இல்லல்லாகு முகம்மதுர்றசூலுல்லாகி) என்னுங்கலிமாவை வாக்குமனமும் பொருந்திச் சொல்லி அசுஹாபிமார்களாயினர்கள்.

இவ்விதங் கோட்டைக்குள்ளிருந்த சுத்தவீரியர்களெல்லாம் ஈமான்கொண்டிசுலாமானதின் பின்னர்அலிறலியல்லாகு அன்கவர்கள், அந்த முசிலிம்களைம்பார்த்து நீங்களெல்லாருமுன் காவல்நின்றபடிக் கங்கே போய்க்காத்துக் கோட்டைக்கதவுகளை நன்ருகப்பூட்டி யானை முதலான சேனைகள்வந்தாலுந் திறக்காமால் நிற்கவேண்டுமென் றனுப்பினர்கள். அதுகேட்டு அந்த முசிலிமானவர்களெல்லா மகிழ்ச்சியாகி முன்னர் காத்திருந்த இடங்களிற்போய் மிகவும் கெட்டியாகக் காத்திருந்தார்கள். அப்போது சூரியன் அலிறலியல்லாகு அன்கு சமர்த்தாகக் கோட்டைகுட் புகுந்து உடற்பிறந்தார் முகல்கீல் தலையை வெட்டிய சதிமானியகாரன் துஹாமத்துடைய தலையை வெட்டிய வினோதத்தையும் அநேக வீராதி வீரர்களைத் தீனில்லிசுலாத்தி லாக்கினசிறப்பையும் பார்க்க ஆயிரங் கண்களுடனே வருபவர் போல் வந்து தோன்றினன்.

துஹாமத்து வதைபடுசருக்கம் முற்றிற்று

# இறவுசுல்கூல்வதைச் சருக்கம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

தீவினை யாவுமொன்ருய்த் திரண்டுரு வெடுத்துவந்த
பாவனைபோலவந்த பாதகன் றவுசுல்கூலைத்
தேவினைவென்ற வள்ளற் றிருநபி சொற்போலாலி
வேவினை வாளால்வெட்டி வெற்றிகொள் முறைமை சொல்வாம்.

## இதன்பொருள்.

தீவினைகளெல்லா மொன்ருகத்திரண்டு ஓர்மானுடரூபமெடுத்துக்கொண்டுவந்த பாவனைபோல் வந்த மகாபாதகனுன இறவுசுல்கூலென்பவனைத், தேவுகளென்னும் ஜின்ஷைத்தான் கூட்டங்களை வென்ற வள்ளலான அழகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் சொல்லைப்போல் அலிறலியல்லாகு அன்கவர்கள் வெவ்வியகாந்தியையுடைய துல்புகரென்னுந் தங்கள் வாளினுலே வெட்டி வெற்றிகொண்ட முறைமையைச் சொல்லுகின்ரும்

## சரித்திர வசனம்

சூரியனுனவன் தோற்றும்போது அலிறலியல்லாகு அன்கு முதலிய தீனுனவர்கள் யாவரும் அல்லாகுத்தஆலாவை வணங்கிக்கோட்டைக்குள்ளே யிருக்க, மாலேடும் பேசிய நபிநாயகம் கோட்டைக்கு வெளியிலே தங்கள் சேனையினடுவிலிருக்க, அப்போது, தீனுனவர்களோடு, இறவுசுல்கூல் உயுத்தத்திற் காரம்பித்துத் தான் படைஉடுப்புகள் யாவுமணிந்து குதிரைமேற் சவாராகித், தீனுனவர்களை நெருங்கி யவர்களைப்பார்த்து, ஓகே தீனுனவர்களே மேகமடை கிடைக்கின்ற பெரிய கோட்டையென்னுமலையிலடைகிடந்துஇரைதேடி வால் முறுக்கி வெளியில் வந்துலாவுகின்ற புலிக்கு நிகராகிய எனது முன்னிலே வெப்பங்கொண்ட உயுத்தஞ்செய்ய வாருங்கள் வாருங்களென்றழைத்தான். இவ்விதங், குற்றத்தையுடையபாவி றவுசுல்கூலழைத்தது கேட்டு, பெரிய தவத்தையுடைய பனீமகுரூமென்னுங் குலத்திலுள்ள ஒருவீரர்படைஉடுப்புஸ்தணிந்து ஆயுதபாணியாய்க் குதிரைமேலேசவாராகி வந்து இறவுசுல்கூலை யெதித்தார்; எதிர்த்து இரண்டு பேரும் சண்டைசெய்ததில்இறவுசுல்கூல் தண்டத்தால்அந்தத்தீனுனவருடைய நெஞ்சிலிடித்துக்கொன்ருன், அவர்சுவர்க்காவதியாகினர்

இவ்விதமிவர்கள் ஷகீதானது கண்டு இன்னுந் தீனனவர்கள் ஒவ்வொருவராக இருபதுபேர்கள், இறவுசுல்கூலுடனே யெதிர்த்துச் சண்டைசெய்து ஷகீதாகிச் சொர்க்கஞ்சேர்ந்தார்கள். அதனால் இறவுசுல்கூல் சந்தோஷமாகி மதர்த்து அகங்காரமாகி நபிநாயகத்தைக் கூவி வெப்பத்தங்கி யெரியுகின்ற நெருப்பைப்போலே வெட்டுகின்ற முகம்மதே உம்முடைய அக்கியெரிகின்றதோ உமது மருமகன் அகலிகையெங்கே? மருதீக்கரீபு சுபீதியையெங்கே? மிகுதாதையெங்கே? அம்றிபுனுதையானை யெங்கே? காலீதையெங்கே? இன்னுமற்றத் திறத்தபுலிபோன்ற வீரரெல்லாமெங்கே? இவர்களெல்லாமிப்போது என்முன்னில்வருகில் அவர்களை யென்கையிலிருக்கும் வேலாயுதத்திற் கிரைசெய்யாதிருந்தால் நான் கடல்சூழ்ந்த இந்தப்பூமியிலே வாதில் சுகுருவையாளுகின்ற இராஜனில்லையென்று சொன்னான். ஆனவிவ்வளவு வாய்மதம் பேசுகின்ற இறவுசுல்கூலுக்குக் கோட்டைக்குள்ளே அவன்மகன் வெட்டுப்பட்டதும் படைவீரர்கள் தீனனதும் தெரியாததினாலே பலபல சப்தம்பேசித் தானேறிய குதிரையைச் சுழலவிட்டுக்கொண்டு நின்றான்.

அப்போது வள்ளலாகிய நபிநாயகம் புலிக்கொப்பாகிய திறத்த அம்றிபுனு மருதீக்கரீபை யழைத்து அவரைப்பார்த்து அந்தச்சதிமானமாகிய இறவுசுல்கூலுடனே நீரடர்ந்தேறுமென்று சொன்னார்கள். இவ்விதம் மேகங்குடையிடும் நபிநாயகஞ் சொன்னதுகேட்டுச்சத்துருக்களின் ஊன்தசையை யுண்டுண்டுசெழித்திருக்கும் நெடியவேலாயுதத்துடனே ஐந்துகதிகளையுமுடைய கத்தாரென்னும் பெயர்கொண்ட தமது குதிரைமேலேசவாராகி இறவுசுல்கூல் முன்னில்வந்தெதிர்த்து நின்றார். அப்போது இறவுசுல்கூல் அம்றிபுனுமருதீக்கரீபைப்பார்த்து நீயார்? எனக்குச் சொல்லென்றதற்கு இவர் அவனைப்பார்த்துத், துப்புரவாகிய முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மார்க்கத்தைப் புண்மைகொண்டு கலிமாச்சொல்லாத சத்துருக்களை வதைசெய்து நாய் நரி தின்னச்செய்யுகின்றபுலி வாழிவாழியாய் இராஜாராஜாக்களாகவே வருகின்ற மருதீக்கரீபுடைய குமாரன் சுபீதிய்யி தேசத்தையாளுகின்ற இராஜன் மகா கல்வித்திறமையுள்ளபண்டிதன் அம்றுவாமென்றும் அல்லாவுடையவலை மாறினவனே யுன்னை இந்தட்சணத்திலே கொன்று நரகத்திற் கனுப்புவேனென்றும் சொன்னார்.

அதுகேட்டு இறவுசுல்கூல் மிகுந்தகோபமாகி அம்றிபுனு மருதீக்கரீபவர்களுடைய தோளை யிலக்காக்கி வாளாயுதத்தினால் வெட்

டினன். அதையிவர் தட்டினர். மறுபடியும் அவன் குதிரையைச் சுழட்டிவிட்டு முன்வந்தெதிர்த்தான். அப்போதிவருடைய நீண்ட வேலால் அவனைக் குத்தினர். அவனதை விலக்கிக்கொண்டு தன்னுடையவேலை நீட்டிக்கொண்டு வந்தான். இவ்விதமிருவரும் சண்டை கடூரமாகச்செய்வதால் பூமியில்நின் றெழும்புந்தூசி மேகம்போலே சூரியனொளியை மறைக்க அவ்விருளிலே இரண்டுபேர்கள் கையிலிருந்து சுழலுகின்றவாள் மின்னலைப்போலே பிரகாசஞ்செய்ய மலைகள் இரண்டுவந்து தாக்கினலெப்படியோ அப்படிவாள்முதலியஆயுதங்களாற்றாக்கித் தங்கள் தங்கள் குதிரைகளை வலசாரி இடசாரி சுற்றவிட்டார்கள். இப்புதுமையைக்கண்டு பக்கத்தில் நிற்கின்ற இருபடைவீரரும், இதுபோலே சண்டையை நாம்கண்டதில்லையென்று ஆச்சரியப்படும்படி காலையிலிருந்து நடுப்பகல்வரையிலும் சண்டை செய்தார்கள்.

அப்போது அம்றிபுனு மருதீக்கரீபவர்கள் ஒரு தந்திரத்தினல் இறவுசுல்கூலைவெட்ட முன்னில்நெருங்கியபோது அந்தப்பாவி இறவுசுல்கூல் அஃதுணர்ந்து பயங்கொண்டு பின்னடைந்து ஓடினன், அப்படியோடும் இறவுசுல்கூலைச் சிறைசெய்யலாமென்று அம்றிபுனு மருதீக்கரீபவர்கள் அவனுக்குப் பின்றொடர்ந்துபோகச்சே அவனோடிப்போய் தனதுபடைகளி னடுவிலொளித்துக்கொண்டான். அப்படியொளித்த இறவுசுல்கூல் தனது படைஞரையுந் தலைவர்களையும் அழைத்து அவர்களோடும் நீங்களெல்லாம் இங்கேதானிருங்கள். நான் கோட்டைக்குள்ளே போய்வருகிறேனென்று சொல்லிவிட்டுத் தனக்குச்சம்பவித்திருக்குந் துன்பங்களைத், தம்பிரான் பர்றுசிடத்திலேபோய்ச் சொல்லியழுது, நல்வரம்வாங்கிவரலாமென்றெண்ணியோர்காலத்திற் போயிருந்து தான் உடுப்புகளையுடுத்த, ஆரம்பித்தான் அவ்வுடுப்பகளாவதென்னெனில்;

பஞ்சமாபாதகமென்னும் ஓர்மிடவையை யரையிற்கட்டி வஞ்சகமென்னுங் காற்சட்டையைபணிந்து பொய்யென்னுங் கச்சப்பாட்டை முறுக்கி, மிடையிலேகட்டி, வயிராக்கியமென்னும் நீண்டமேற்சட்டையணிந்து நஞ்சொத்த கொடுமையென்னும் நடுக்கட்டுங்கட்டிப், பாவமென்கிற பாதரட்சையணிந்து பலியென்கிற கிரீடமணிந்துமதமென்கிறபோர்வை போர்த்திக், கசடென்னுங் குடைபிடித்து இனிப்பூமி தனக்குவெறுப்பென்னுமாலைகளணிந்து சாவென்னுங்குதிரைமேலேறி அவ்விடத்தை விட்டும் நீங்கினன். அப்போது சூரியனுமறைத்தான்

பின்னர், இறவுசுல்கூல் முன்னர் தன் தகப்பனைக்கொன்றபழி யப்போது அவனை பின்றொடர்ந்ததாலே, அந்த இருளிரவிலே சரேலென்று குதிரையை நடாத்திவந்து கோட்டைவாயிலை நெருங்கிக்கதவைத்தட்டினன், தட்டினவுடனே காவலாளர்வந்து கதவைத்திறந்தார்கள்.

அப்போது, இறவுசுல்கூல் கோட்டைக்குள்ளே சென்று மந்திரியுடைய மாளிகைக்குப்போமென்று நடக்கச்சே, எமன் வந்திவன் புரடியைப்பிடித்துத் தள்ளுவதாலே சல்தியாய் நடந்து புலியிருக்கும் போனுக்குள்ளே, பசுவந்து புகுந்ததுபோல் அலிறலியல்லாகு அன்குவுக்கு எதிரில் மந்திரிவீட்டில் வந்து நுழைந்தான். அங்கே நுழைந்தபோது இறவுசுல்கூல் அலிறலியல்லாகு அன்கவர்களைக்கண்டு திகில்வெறிகொண்டு தியங்கி மரப்பாவையைப்போல் வாய்வார்த்தை பேசாது நின்று பின்னர் தெளிந்துதன் அகங்காரத்துடனே அலிறலியல்லாகு அன்குவைப்பார்த்து வேங்கைப்புலிவாழுகின்ற இடமிஃதென்று கொஞ்சமும் அஞ்சாமல் நரிவந்த தன்மையாய் பெரிய காவல்களையெல்லாந் தாண்டி இம்மந்திரி வீட்டில் வந்திருக்கிற நீயாரென்று கேட்டான். அதற்கிவர்கள் அவனைப்பார்த்து, ஈரேழு பதினன்கு லோகமும், அவைகளிலுள்ள வுயிர்ப்பிணங்களும் வானவர் மனுடர் யாவரும் புகழுகின்ற முகம்மது நபியவர்களின் கலிமாச்சொல்லாத இராஜாதிராஜரையும் வெட்டித் தலைவேறு உடல்வேறாக்கி நரகத்திற்கனுப்பிவைக்கின்ற அறுஷுப்புலியாகிய அலியாக்கும் நானென்றும் இன்னும், இந்தக்கோட்டைக்குள்ளிருப்பவ ரடங்கலும், நபிநாயகத்தின்பேரி லன்பாகிக் கலிமாச்சொன்னார்களென்றுஞ் சொல்லி இனிநீ கலிமாச்சொல்லாதுபோனல், எடா! பாதகா, இதோபார் நீயுமிப்படித்தா னுகுவாயென்று அவன்மகன் துஹாமத்துடையதலையைவாட்கத்தி முனையினலே குற்றியெடுத்துக்காட்டினர்கள்.

அப்போது இறவுசுல்கூல் எங்கெங்குந்தேடினுலும் கிடைக்கஅரிதாகிய சேனைவீரர் தீனிலானதினுலும் தன்னருமைமகன் தலைவெட்டுண்டு போனதினுலும் கடலலையிலகப்பட்ட துரும்புபோலாகியறிவுநீங்கியலங்குலைந்து தட்டுக்கெட்டுத் தடுமாறி இனியிங்கே வாயாடிக்கொண்டு நிற்பதிற்காரியமில்லை வெளியில் ஓடிப்போய் உயிர் பிழைத்துக்கொண்டு யோசிப்போமென்றெண்ணி நின்றுன். இவ்விதம் இறவுசுல்கூல்நிற்கின்ற தன்மையை, அலிறலியல்லாகு அன்கு அறிந்து அவன்கிட்டமுடுகி என்ன இட்போதுதான் தீனில்லிசுலாத்துடைய

பலாபலன் தெரிகின்றதோ? இதோபாரென்று வாள்வீசினார்கள். இறவுசுல்கூல் அந்தவீச்சைத் தடுத்துத்தானும் வாள்வீசினான். அந்தவாள் வீச்சை அலிறலியல்லாகு அன்கவர்கள் தட்டிவிட்டுமறுபடியும் வாள் வீசினார்கள், அப்போதும் இறவுசுல்கூல் கோபங்கொண்டு வாள்வீசினான். இப்படி இறவுசுல்கூல் முப்பதுவெட்டு அலிறலியல்லாகு அன்கவர்களை வெட்டினான் அந்த வெட்டுகளையெல்லாந் தட்டிவிலக்கித் தங்களுக்கோ ரபாயமுமில்லாமல் அவனைத்தளரச்செய்து புலிபாய்ந்தது போலே பாய்ந்து துல்புக்கர்வாளால் ஒரே வெட்டில் இறவுசுல்கூலை யிரண்டுதுண்டமாக்கி அவனுயிரை நரகத்துக்கனுப்பினார்கள்.

அப்போது அங்கிருந்த முசிலிம்கள் யாவரு மகிழ்ச்சியாகி (அல்லாகு அக்பர் அல்லாகு அக்பர் அல்லாகு அக்பர்) என்று தக்குபீறு சொன்னார்கள். பிறகு, அலிறலியல்லாகு அன்கவர்கள் வெட்டுண்டு கீழேகிடக்கின்ற இறவுசுல்கூலுடைய தலையையெடுத்துக் கோட்டைவாசலிலே தூக்கிவைக்கும்படி செய்துவிட்டு இந்தச்செய்திகளை யெல்லாம் நபிநாயகமவர்கள் அறியும்படியாக அப்துல்லா றலியல்லாகு அன்கவர்களிடத்திலே சொல்லிவிட்டார்கள். அவர்களுமகா சீக்கிரத்திலோடிப்போய், முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்குச் சொன்னார்கள். அதுகேட்டு நபிநாயகமவர்கள் மிகவு மகிழ்ச்சியாகி, அல்லாகுத் தஆலாவைப்புகழ்ந்து தொழுதுகொண்டிருந்தார்கள் அப்போது சூரியனானவன், அலிறலியல்லாகு அன்கு இறவுசுல்கூலுடைய மிகவும் பெரியதலையை வெட்டிக் கோட்டை வாசலிலே தூக்கியிருக்கின்றதால் நாம்சீக்கிரம்போய் பார்க்கவேண்டுமென்று வருவதுபோல் உதயகிரிமலையின்பேரில் வந்து தோன்றினான்.

இறவுசுல்கூல் வதைச் சருக்க

முற்றிற்று.

# றசூலுல்லாகோட்டைபுக்கு-சருக்கம்.

(*)

கலி-விருத்தம்.

நாட்டுந் தீனெறி நாதரு மாயருட்
டேட்டின் மிக்க திருவிற சூல்மல
ரேட்டின் மிக்க விணையடி பேர்த்துயர்
கோட்டை புக்குங் குணங்களை யோதுவாம்.

## இதன் பொருள்.

தீனில்லிசுலாமென்னு மார்க்கநெறியை இவ்வுலகத்தில் நாட்டும் நாயகருமாய் அருளான சம்பாத்தியத்தின் மிகுந்தவர்களுமாய் விளங்கும் அழகிய றசூல்நாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் தாமரைப்பூவிதழில் நின்று மிகவுந்திவ்வியமான இரண்டு பாதங்களையும் பெயர்த்து, உயர்த்தியான இறவுசுல்கூலுடைய உட்கோட்டைக்குப்போன குணதிஜெயங்களைச் சொல்லுகின்றோம்.

## சரித்திர வசனம்.

இவ்விதம், சூரியனுதயமானதின் பின்னர், அல்லாகுத் தஆலாவை வணங்கியிருந்த நபிநாகயமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள், அசுஹாபிமார்களை யெல்லாம் உயுத்தலுஸ்துகளணிந்துகொண்டு குதிரைகளிலே சவாராகச் சொன்னார்கள். அதுபோலே, தீனனவர்கள் யாவருங் குதிரைகளேறி ஆயுதங்களிலங்கச் சண்டைகளத்தில்வந்து வேங்கைப் புலிகளைப்போல் நின்றார்கள். அதுகண்டு, சத்துருக்களும், பகலிலுண்டான சந்திரன்போலும், கண்களில்லா முகம்போலும்,மதமற்ற யானைபோலும், வில்லில்லாத அம்புபோலும், தாமரையில்லாக்குளம் போலும், பிள்ளைகளில்லாச்செல்வம்போலும்: தரித்திரர் செய்யும் இல்லறம் போலும், அரசனிழந்த படைகளாகக் குதிரைகளிலேறி வந்தார்கள். அப்போது, முசிலிமானவர்கள்; இறவுசுல்கூல் தலையறிந்த செய்திகளைச் சொல்லிக்கொண்டு சத்துருக்களுக்குமுன்னே, தங்கள் குதிரைகளை நடாத்தி யெதிர்த்தார்கள்.

அப்போது, சத்துருக்களு மெதிர்த்தார்கள்; இவ்விதமிருவகைப் படைஞருமெதிர்த்து அம்புகளைப் பிரயோகித்தார்கள், அதிலே சில முசிலிம்கள் விடுகின்ற அம்புகளானது, மலைகளையுந் துளைத்துக் கொ

ண்டு மேகத்திலிருந்து சொரியு மழையைப்போலே கோட்டைக் கற்சுவர்களையுங் கிழித்துக்கொண்டப்புறம் பாய்ந்தன; இன்னுஞ் சில முசிலிம்கள் விடுகின்ற அம்புகளானது, சத்துருக்களின் குதிரைகளுடைய நெற்றியிற் பாய்ந்து பூமிலேயெழுந்து, அதின் முதுகிலிருக்கின்ற பாவிகளுடைய மலைபோன்ற மார்பிற் பாய்ந்துருவி யப்புறங்களிலிருக்கின்ற மரங்களிலும்போய்த் தைத்துருகுகின்றன; இன்னுஞ் சில முசிலிம்கள் விடுகின்ற அம்பானது, எமனுக்கு ஏவலாட்களைப் போலே கோலங்கொண்டு இறவுசுல்கூலுடைய சொல் இனி பூமியிலில்லையென்றும், நபிநாயகத்தின் சொல்லே கியாமபரியந்திர மாறாமல் நிற்குமென்றும் பேசுவ்துபோல் இறைந்து கடூரமாகப் பாய்கின்றன. இன்னுஞ்சில முசிலிம்கள் விடுகின்ற அம்பானது, சத்துருக்களின் கேடகக்கையையும், விரிந்தமார்பையுந், தோளையும் விலாவையுந் துளைத்துக்கொண்டப்புறம் போவதைப் பார்த்தால் இங்கே யுயிர்போன சத்துருக்களின் பெண்சாதிமார்களிடத்திற் சொல்லித் தாலி வாங்கப்போகின்ற தன்மையாயிருந்தன; இன்னுஞ்சில முசிலிம்கள் அம்பாலும், கவண்கல்லாலும், வளைதடியாலும், கிறீசாலும் சத்துருக்களை வதைப்பதால் இரத்தமழை பெய்த பான்மையாய் எங்கும் பரவியிருந்தன. இவ்விதச் சண்டையிலே சத்துருக்கள் இளைத்தார்கள் அப்போது முசிலிம்கள் அச்சத்துருக்களின் படைக்கடற்குள் நுழைந்து வாளால் வெட்டினார்கள்; அவ்வெட்டினாலே சத்துருக்களனேகர் மடிந்தார்கள் அந்தச்சணடைகளத்தில் நாய், நரி, பருந்து, காக்கை, கழுகு முதலிய ஜெந்தினங்களுடனே பேயும் வந்து சத்துருக்களுடைய பிணத்தைத்தின்று-அசுஹாபிமார்களுடைய புகழைக்கொண்டாடுவது போலே சப்தித்துத் திரிந்தன.

அப்போது அமாவாசையிருளில் மாலிக்கு இராஜனின் மகனார் ஹபீபுஇராஜர் சொன்னபடி சந்திரனையழைத்துப்பேசிய நபியுற்றகுமத்து முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களினசுஹாபிமார்கள் வெட்டுக்காற்றாமற், சத்துருக்கள் தட்டுகெட்டோடினார்கள். அப்படியோடுகின்ற சத்துருக்கள் முசிலிம்கள்தொடர்ந்து, தனித்துத் தனித்துப்போய் அனேகர்களை வெட்டினதுந்தவிர அனேகர்களைச்சிறையும் பிடித்தார்கள் பிறகுஅம்றிபுனு மகுதீக்கரீபுறவியல்லாகு அன்கவர்களும் மற்றும் அசுஹாபிமார்களும், நபிநாயகமவர்களும் இருந்தவிடமிட்டெழுந்து கோட்டைமதிளருகிலாகினபோது அங்கேகோட்டைமேல் நாட்டிய கொடிகள், மடங்கிப் பறக்கிறதையும்; புறாக்கள் கூவுகிறதையும் பார்த்தாற் கோட்டையானது நபிநாயகமவர்களை யாசையா

கக் கதிபெறக் கைநீட்டி யழைப்பது போலிருக்கின்றன. இவ்விதம் சிறப்புற்றிருக்கும் கோட்டையருகில் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் வரக்கண்ட காவலாளர் சீக்கிரத்திலே கதவைத் திறந்தார்கள் அப்போது நபிநாயகமவர்களும் அசுஹாபிமார்களும் தாங்கள் தாங்களேறிய வாகனாதிகளைத் ‘தடதடென்று நடாத்திக்கொண்டு கோட்டைக்குள்ளே நுழைந்தார்கள்.

அப்போது அங்கே அலிறலியல்லாகு அன்கவர்கள் முதலாகிய தீனானவர்கள் யாவரும் நபிநாயகம்வருவது தெரிந்து விரைவாக வந்து அவர்களின் பாதம்பணிந்து சலாம்சொல்லிச் சந்தோஷமாகினார்கள். பிறகு மந்திரிமுதலான பேர்களும் வந்து நபிநாயகத்தின் முட்டுக்கு நீண்டகையைப்பிடித்து முன்னரவர்கள்சொன்ன கலிமாவைப் புதுப்பித்து மறுபடியுஞ்சொல்லிச் சந்தோஷமாகி யோர்பக்கத்தில் நின்றார்கள். இவர்கள் இவ்விதங் கலிமாச்சொன்னதுகண்டு சிறையாகிய காபிரீன்களும் நமக்கிதைவிட வேறுகதியில்லையென்று களிந்தமனத்துடனே கலிமாச்சொன்னார்கள். அதுகண்டு நபிநாயகமிகுந்த சந்தோஷமாகி அந்த வூரைச்சுற்றிப் பார்க்கவேண்டுமென்று நடக்கும்போது அசுஹாபிமார்களெல்லாம் பக்கங்களிலே சூழ்ந்து (அல்லாகு அக்குபர், அல்லாகு அக்குபர், அல்லாகு அக்குபர், லாஇலாக இல்லல்லாகு வல்லாகுஅக்குபர், அல்லாகு அக்குபர், வலில்லாகில்ஹம்து) என்ற இந்தத் தக்குபீர் வாக்கியத்துடனே போகும்போது,

அவ்வூரிலுள்ள பத்தினிப்பெண்கள் பலரும் மேன்மாடக்கூடங்களில் மயில்போலும் அன்னங்கள்போலும் நின்று, மூன்றுலோகத்திற்கும் ஆண்டகையாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை மிகவும் அன்புடனே பார்த்ததில் அவர்களுடற்பிரகாசமும் கிருபைக்கண்ணின் கதிரொளியும் அப்பெண்களினெஞ்சத்தூடுதாவி மனங்குளிர்ந்து அவர்கள் யாவரும் இவர்களே, பிருதவுசென்னுஞ் சொர்க்கப்பதிக்கும் மன்றுட்டத்திற்கும் இணையாகவந்த நபியென்றும், நமக்கிவர்களைவிடக் கெதிவேறில்லையென்றும் நினைத்து உறுதிகொண்டு (லாஇலாக இல்லல்லாகு முகம்மதுர் றசூலுல்லாகி) என்னுங்கலிமாவைச்சொல்லிக் கதிபெற்றவர்களாகினார்கள். அப்போது அல்லாகுத்த ஆலாவினருள்பொருந்திய நபிநாயகமவர்களும் மற்ற அசுஹாபிமார்கள் யாவரும் அவ்வூரின் தெருக்கள், கோட்டைப் புரங்கள் யாவையுஞ் சுற்றிப்பார்த்துத்தகுதியாகிய வோரிடத்திலே சிறப்பாக ஆண்டவனைப்புகழ்ந்து திக்கிறு செய்தவர்களாக இருந்தார்கள்.

றசூலுல்லாகோட்டைபுக்கு சருக்க-முற்றிற்று.

# றசூலுல்லாமதீனம்புக்கு - சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஆதியா மெவைக்கு மேலா யறிவினுக் கெட்டாதெங்கு
சோதியாயிருந்துவாழுந் தூயவனிறசூலுல்லா
கோதுலாம் றவுசுல்கூலைக் கொன்றவன் கோட்டைக்கொண்
டோதுசீர் மதீனநாட்டுக் குற்றவை யாவுஞ்சொல்வாம்.

## இதன் பொருள்.

முதற்காரணமாகிய இவ்வெவைக்குமேலாகி, அறிவுக்கெடாமல் எவ்விடங்களிலுஞ் ஜோதிப்பிரகாசமாக நிலைபெற்றிருக்கின்ற வாழ்வையுடைய தூய்தான அல்லாகுத் தஆலாவின் தூதராகிய றசூல்நாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் குற்றம்பொருந்திய இறவுசுல்கூலைக் கொன்றுபோட்டு, அவனுடைய கோட்டைமுதலிய சம்பத்துகளையெல்லாங் கைக்கொண்டு அங்கே அரசுநாட்டிவிட்டுப் பின்னர் சொல்லுகின்ற சிறப்புப்பொருந்திய திருமதீனமா நகரத்திற்குச் சென்றதோடும் வந்தவைகளைச் சொல்லுகின்றும்.

## சரித்திர வசனம்.

அல்லாகுத் தஆலாவைத் திக்கிறுசெய்து மகிழ்ச்சியாக இருக்கின்ற நபிநாயகமவர்கள் மந்திரியவர்களைச் சங்கையாக அழைத்து அவரைப்பார்த்து, இறவுசுல்கூலுடைய பொற்பொருள் முதலாகிய யாவஸ்தும் இருக்குந் தலங்களெல்லாந்தேடி யெடுத்துக்கொண்டு வாருமென்று, சொன்னார்கள். அதுகேட்டுடனே, மந்திரியானவர் போய், அரண்மனை இராஜமண்டபமுதலிய இடங்களில் வெளிரங்கமாகவும் பதுக்கமாகவும் இறவுசுல்கூல்வைத்த பொருள்களெல்லாவற்றையுமெடுத்துக்கொண்டு நபிநாயகத்தின் முன்னில் மலைகள்போலே குவித்தார். அதுகண்டு நபிநாயகம் சந்தோஷமாய் பொருள்களையெல்லாம் ஐந்தாகப்பங்கிட்டு ஒரு பங்கைப் பைத்துல்மாலென்ற பொக்கிஷத்திற்கு வைத்துவிட்டு மற்ற நான்கு பங்கையும், முறைபோலே பங்கிட்டு அசுஹாபிமார்களுக்கு மனஞ்சந்தோஷங்கொள்ளும்படி கொடுத்தார்கள்.

பிறகு நபிநாயகமவர்கள் தங்கள் சிறப்பாகிய இரண்டு கையையும் அல்லாவுடைய பக்கலிலேந்தி மந்திரி வெற்றியும், வீறும்பெறத் துஆச்செய்து, அம்மந்திரியைக்கிட்ட அழைத்து அவருக்குச்சொர்க்க லோகச்சிறப்பையும் இசுலாத்தின் ஷறுத்துகளையும், நல்லநயமுள்ள தக்குவாக்களையும் சொல்லி, அந்தவாதில் சுகுறுவுக்கு அரசாக்கி வைத்துவிட்டுப் பிறகு நபிநாயகமவர்கள் றவுசுல்கூலுடைய மக்களில் நான்குபேர்களைப்பார்த்து நீங்கள் இங்கிருந்து அரசாட்சிசெய்யமனமா? அல்லது என்னுடனே மதீனமாநகருக்கு வரமனமா? சொல்லுங்களென்றதற்கு அவர்கள் நான்குபேரும் நபிநாயகமவர்களைப் பார்த்துத் தீராதநோயைத் தீரவைத்த நபியே, காய்ந்தமரம், தளிர்த்துப்பூத்துக் காய்த்துக் கனிதரச்செய்தநாயகமே! தேவரீருடனே வந்து உங்களுடைய சந்திரோதயமுகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கவே பிரியமாகினேமென்று சொன்னார்கள்.

அதுகேட்டு நபிநாயகமிகுந்த சந்தோஷங்கொண்டு, அவர்கள் பேரிலே துஆச்செய்து, சல்காநாயகியையும் அன்பாகப்பேசி யாதறவுகூறித் தங்களின் குதிரைமேலே சவாராகினார்கள். பிறகு மாறுதகீர்த்தியையுடைய அபூபக்கர் சித்தீக்குறலியல்லாகு அன்கவர்களும் காளைமாட்டுடனே பேசுகின்ற உமறுகத்தாபுறலியல்லாகு அன்கவர்களும் மகாவெற்றியையுடைய அலியிபுனு அபீத்தாலிபுறலியல்லாகு அன்கவர்களும், தங்கள் தங்கள் வாகனாதிகளிலேறினார்கள். பிறகு அம்றிபுனு மகுதீக்கரீபவர்களும், அறம்மிபுனுஹதையானவர்களும், மற்றும் அசஹாபிமார்களும் புலிகளைப்போலவாவர்கள் குதிரைமேலேறினார்கள். பிறகு றவுசுல்கூலின் மக்கள் மேலாம்பரமாகிய, அஷறபத்துறலியல்லாகு அன்கும், சிலாஜீலு றலியல்லாகு அன்கும்; இக்கிறிமத்துறலியல்லாகு அன்கும், அவரவர்களுடைய குதிரைகளின்மேலேறினார்கள். பிறகு கரும்பின் ரசம்போன்ற பேச்சும், மின்போன்ற இடையும், பூரணச்சந்திரன்போன்ற முகமுடைய கற்புநாயகியாகிய சல்காவும் குதிரைமேலே சவாராகினார்கள்.

இவ்விதம், யாவரும்அவரவர்களுடைய வாகனாதிகளிலேறினதின் பின்னர் சொர்க்கலோகத்தில் வெள்ளையானைமேற் பவனிவந்து ஆசியாமறியமென்ற இரண்டு பெண்களையும் கலியாணஞ்செய்யும் நபியுற்

றகுமத்து முகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள், தாங்களேறிய குதிரையை முன்னாலேநடாத்த மற்றவர்க ளும் பின்னாலே நடந்து கோட்டையைக்கடந்து வெளியாகினார்கள். அப்போது, மந்திரியவர்கள் சிலகாணிக்கைப்பொருளுடனே வந்து நபிநாயகமவர்களின் தாமரைப்புஷ்பம்போன்ற பாதம்பணிந்து அக் காணிக்கைப் பொருளையும் கொடுத்துப் பணமனுப்பிக்கொண்டு, கோட்டைக்குள்ளே போய்த்தமது சிங்காசனத்தில் அல்லாகுத் தஆலாவைத்தொழுது, நபிநாயகத்தைப்புகழ்ந்து நீதிசெலுத்தித் தீன் முறை தவறாது செங்கோல் செலுத்திக்கொண்டிருந்தார்.

பின்பு றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் மற்றுந்தீனா னவர்களும் இறவுசுல்கூலுடைய எழுகோட்டை மதிலையுந்தாண்டிச் சண்டைகளத்திலே, சத்துருக்களுடைய எழுகோட்டை மதிலையுந் தாண்டிச் சண்டைகளத்திலே,சத்துருக்களுடையபிணங்களை, நாய்,நரி, 'பேய், பிசாசு, காகங் கழுகு இவைகள் கூடிக்கூடித் தின்னுஞ்சிறப் பையுங் கண்டு, ஆறு, அருவி, காடு, கரை, மலை,மலையடிவாரம், குளங், குட்டங்கள் யாவையுங்கடந்து, நடந்து அலிறலியல்லாகு அன்கவர்களுக்குச் சின்விருந்து செய்த செந்நிறப்பூமியையும், அலி றலியல்லாகு அன்கவர்கள் முசிலிமானவர்கள் தாகத்திற்காக அல்லா குத் தஆலாவிடத்திலே துஆக்கேட்டு மழையழைத்த இடத்தையுங் கண்டுகொண்டு கொடிகளுங், குடைகளும், சிற்றாலவட்டம், பேரால வட்டங்களும், பல்லக்குகளும், நெருங்க, வாள், வேல், ஒளிவு பிரகா சிக்கத் தக்குபீறுச் சத்தத்துடனே ஜயபேரிகை முழங்க, நபிநாயகம் திருமதீனா முனவ்வறையடுக்க வந்தார்கள்

இவ்விதம், நபிநாயகம், இறவுசுல்கூலுடனே படைவென்று ஜய பேரிகைமுழக்கிக்கொண்டு வருவதையறிந்த மதீனத்தாரார்களெல் லாம், சலவாத்து முழக்கத்துடனே எதிர்வந்து நபிநாயகமவர்களை யழைத்துக்கொண்டு பூரணசந்திரனைச்சூழ்ந்த நட்சத்திரகூட்டம் போலே யூருக்குள்ளே போனபோது நபிநாயகமுகம்மது சல்லல் லாகு அலைகிவசல்லமவர்கள், இரத்தினத்திலே யமைத்தசிங்காசனத் தின்மீது, அவரவர்களுக்கு நல்விடை யருளக்கேட்டு அவர்களைப்புகழ் ந்துகொண்டு படைவீரர்களான அசுஹாபிமார்களெல்லோரும் அவர வர்கள் வீட்டிற்குப்போய் வாழ்ந்திருந்தார்கள்

பிறகு மின்னையொரு பெண்வடிவா யமைத்ததொத்த சல்காபீவிக்கும் அவள் பிறவிகளாகிய இராஜகுமாரர்களும் இருக்கஇடமும், புழக்கத்திற்காகிய சாமக்கிரிகைகளும், நிதிமணி துணிகளும் அனேகங் கொடுத்துச் சிறப்பாக வைத்தார்கள் பிறகு தேசதேசத்தரசர்கள் வந்துநபிநாயகத்தின் பாதம்பணிந்து திறையிடும்படியாக நான்குயார்களும், நாற்பத்தீராயிம் அசுஹாபிமார்களும் சூழவிருந்து எங்குந் தீனிஸ்லிசுலாமென்னும் பயிர் தழைத்தோங்க வாழ்ந்திருந்தார்கள்.

---

இதுபோலே இறவுசுல்கூல் படைப்போர் வசனகாவியத்தைச் சீர்திருத்தினவரும் இதைச்சீர்திருத்தி அச்சிடமுயன்று பொருளுதவினவர்களும் இதைநன்குணர்ந்து கேட்பவர்களும் படிப்பவர்களும் படிக்கத் தவீல்செய்பவர்களும் மற்றநமதுஉடற் பிறப்புகளாகியமூமின் முசிலிமான சகலரும் அல்லாகுத்த ஆலாவுடைய அருளினாலும், நம்மாண்டகை முகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்களி னுத்வியனுக்ரகத்தினாலும், அவர்களுடையஆலவுலாதுகளின் துஆப்போற்றினாலும், அந்த நபிநாயகத்தின் கலிபாக்களாகிய அபூபக்கர் சித்தீக்குறலியல்லாகுஅன்கவர்கள், உமறிபுனு ஹத்தாபு றலியல்லாகு அன்கவர்கள், அலிஇபுனு அபீத்தாலிபு றலியல்லாகு அன்கவர்கள் முதலாகிய நாற்பத்தீராயிரம் அசுஹாபிமார்களுடைய துஆபறக்கத்தினாலும் அந்தநபிநாயகத்தின் பிராட்டிமார்கள் கதீஜத்துல்குபுறு றலியல்லாகு அன்கா, ஆயிஷத்து றலியல்லாகு அன்கா அவர்களுடைய துஆபறக்கத்தினாலும், அந்த நபிநாயத்தின்மகளார் மூமின்முசிலிமான பெண்களினுடைய பாவந்தீர நாளைமகுஷறில் அல்லாகுத்தஆலா இடத்தில் மன்றாடுகிற காத்துனே ஜன்னபீவி பாத்திமத்துஸ் ஸஹுறு அவர்களுடைய துஆப்பறக்கத்தினாலும் இவர்களின் மக்களாகியும் நபிநாயகத்தின் பேராகியும், விளங்கும் இமாம் அசன் குசைன்றலியல்லாகு அன்குமா அவர்களின் துஆபறக்கத்தினாலும் அந்த நபிநாயகத்தின் பதினோராங்கலை முறையிலே பேராகிவந்த, கவுது சமதானி, மகுபூ புசுகானி, குதுபுறப்பானி, அப்துல்காதிரிஜீலானி, காதிறுமுகியித்தீனி, ஆண்டகையவர்களின் துஆபறக்கத்தினாலும், ஹலறத்து மீறுன் சாகிபு நாகூரியாண்டகையவர்கள் துஆபறக்கத்தினாலும், மற்று மூமின் முசிலிம்கள் துவாபறக்கத்தினாலும் இந்த இம்மையிலே நீடித்த ஆயுளும் நெடுநாள் வாழ்வும் பொருந்திப் புத்திர பவுத்திராக வாழ்ந்து, தனகனக வாக

ன சம்பத்தாராகவிருந்து, அந்தநபிநாயகத்தி னும்மத்துகளாகவே மோட்சகதிபெற்று வாழ்வுதவி செய்வானாவும், ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்

## இறவுசுல்கூல் படைப்போர் வசனகாவியம்;

## முற்றிற்று.

ஆகச் சருக்க 39-க்கும் பலவாறாய் ஏற்பட்ட
திருவிருத்தங்கள் - முனாஜாத்துள்பட-59.

இதனடியிலே குஞ்ஞுமூசுலெப்பை யாலிம்புலவர் காஜியாரவர்கள், மேற்படி சரிதையைப் புராணமாகப்பாடிய கவிதைகளின் முடிவில் வருகின்ற முனாஜாத்தாகிய சிலகவிதைகளை யச்சிடுவித்திருக்கின்றனம்; அதனைப்படித்துதங்கள் தங்களுக்கு நிறைவேறவேண்டிய நன்னாட்டங்களை அல்லாகுத் தஆலாவென்னும் வலியகடவுளிடத்தி லிரந்துகேட்டால், அவன் அன்புகூர்ந்து நற்கிருபை றகுமத்துச் செய்வான் ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்

### இச்சரித்திர புராணத்திலுள்ள

# முனாஜாத்துக் கவிதைகள்.

கலி-விருத்தம்.

பன்னரு மறம்பயில் பதாதியட ருத்தந்
தன்னைவிறல் கொண்டுபதி சார்நபி ஷபாஅத்
தென்னிலருள் செய்தரிய வேமநகர் மீதே
நன்னய முறும்படி நடத்துறகு மானே. (1)

பாணிவரு ணத்தைநிகர் பாவவினை யெள்ளின்
காணியி மடாதுமிகு கான்பாவுநன்மை
யேணிகொடு மேறரிய வெற்பென வுயர்த்திச்
சேணிலுயர் பொற்பதியிற் சேர்ப்பைறகு மானே. (2)

அருக்கனயி லவ்வள வடுத்தரிய யுமிழ்ந்தே
பெருக்கனல் பரப்பொளி பிறங்கமலை செய்து

நெருக்கமுறும் வெம்மகுஷ றென்றநில மீதின்
மருக்கொடி நிகழற்கணெனை வைப்பைறகு மானே (3)

ஆலம்விடம் வெம்பனி யடர்ந்தவன மாரும்
பாலமிசை தீனெறி படைத்தவர்க ளூடென்
காலயர்வு றுமலது கரைப்பட விரங்கி
யேலமுறு பொற்பதியி லாக்குறகு மானே. (4)

நிலத்திலிற சூலடி நினைக்குமெனை யந்த
நிலத்தினி லறம்பவ நிறுத்தறி தராசின்
வலத்திலுறு தட்டதனை வண்மையொடு தாழ்த்திப்
பலத்தினர் கணத்திடை படுத்துறகு மானே. (5)

காவிய புராணகதை காதினுற வுண்டோர்
மேவிய முகம்மதென வென்றியிசு முற்றோர்
நாவிலிறை சொன்னசல வாத்துநவில் வோர்செய்
தாவியல் பவத்தையறு சங்கைறகு மானே. (6)

சொற்பிழை பொருட்பிழை தொடர்ச்சி விகிதத்திற்
றப்பிய கதைப்பிழை தளைப்பிழை மறந்தே
செப்பிய தொடைப்பிழையென் சீர்நடைநன் மோனை
யிற்பிழையு நீக்கியரு ளேர்கொள்றகு மானே. (7)

இன்னபடி யென்றறிஞ ரெண்ணினு மடங்கா
மன்னவர்கண் மன்னர்மகு மூலருள் ஷபாஅத்
தென்னிடமு மித்தமி ழிசைப்பவர்கள் கேட்போர்
பன்னிபயன் சொல்பவர்கள் பாலுமருள் லாகி (8)

முன்புறு முகம்மதுற சூல்முதல தாக
வின்புற நிலத்திலுறு மேந்தலன்பி யாக்க
டம்புகழ்கொண் டென்பிழை பொறுத்துயர்வு தங்கி
யன்புலவு பொற்பதி யளித்தருளி லாகி, (9)

தாயனைய வன்புரிமை தந்தினிதி ஞளுந்
தூயநபி சேவடி துதிக்கு மொளி யேன்பா

னீயலது விண்ணினு நிலத்தினுமி லங்கி
காயனலின் பாலமிசை காத்தருளி லாகி. (10)

கற்பக மதிற்கரிய காகமது செல்கிற்
செப்பரு சிறப்பமுது செய்துறு மதபோன்
முப்பதி யுவந்துறு முகம்மதர் பொருட்டா
லெப்பவமு நீக்கியற மீந்தருளி லாகி. (11)

நெல்வய னிரம்பவிடு நீரொழுகி யங்கார்
புல்லினை வளர்த்திடுதல் போல்நபி பொருட்டாற்
சொல்லுமெனின் றந்தையர்கள் துன்பபவ நீக்கி
நல்லிய னலம்பெருக நட்பருளி லாகி. (12)

என்றனச வாபறுதி யம்புமறு ஹாமோர்
வென்றிபிவ ரான்மணம் விரும்புமவர் தாமுந்
துன்றுமெரி செம்புநிலச் சூட்டினி லுருமல்
நின்றிரு வுளத்துநிழ னோரு ளிலாகி. (13)

வள்ளலிற சூல்மதுகை வண்டமிழ தாக
விள்ளவுரை தந்தவர்கண் மிக்கவுல மாக்க
னுள்ளமகி ழும்படி யுவந்துபவ நீக்கு
யொள்ளியபொன் னூர்வள மூவந்தருளி லாகி. (14)

முற்றிற்று.

# தஃகிறத்துல் அவுலியா

## 1-வது பாகம் இதி பதினொரு அவுலியாக்களுடைய சரித்திரங்களடங்கி யிருக்கின்றன.

1-வது ஹஸரத் இமாம் ஜஃபருஸ்ஸாதிகு றஹிமஹுல்லா 2-வது ஹஸரத் உவய்சுல்கறனீ றஹிமஹுல்லா 3-வது ஹஸரத் ஹஸன்பஸரி றஹிமஹுல்லா 4-வதுஹஸரத் மாலிகிபுனு தீனர் றஹிமஹுல்லா 5-வதுஹஸரத் முஹம்மது வாஸிஃ றஹிமஹுல்லா. 6-வது ஹஸரத் ஹபீபு அஜமீறஹிமஹுல்லா. 7-வதுஹஸரத் அபூஹாதிம் பகீர் றஹிமஹுல்லா 8-வது ஹஸரத் அதபதுப்னு குலாம் றஹிமஹுல்லா. 9-வது ஹஸரத் ரூபிஅத்துல் அதவிய்யா றஹிமஹுல்லா. 10-வது ஹஸரத் புலைலுப்னு இயால் றஹிமஹுல்லா. 11-வது ஹஸரத் இபுராஹீமுப்னுஅதஹம் றஹிமஹுல்லா ஆகஇப் பதினொரு நாதாக்களுடைய சரித்திரங்களடங்கி யிருக்கின்றன.

இதன் கிரையம்கிளேஸ் காயிதம் கலிகோ பைண்டு ரூபா. 1 8 0

ஷை அறபுத்தமிழ் 1,2.பாகமும்சேர்ந்ததுகலிகோ பைண்டு ரூ. 1 8 0

ஷை 3-வது பாகம் கலிகோ பைண்டு ரூ. 0 14 0

---

மகா மெய்ஞ்ஞான சொரூபராகிய ஹஸ்ரத்து பீர் முஹம்மதுசாஹிபு ஒலியுல்லா அவர்கள்பாடிய

## ஞானமணிமாலையும் தாற்பறியவுரையும்

அவர்களின் ஜீவியசரித்திரமும் வெளிவந்திருக்கின்றன.

சகலமான நேசர்களுக்கும் தெரியப்படுத்துவதானது ஞானமணிமாலை என்னும் தௌஹீதின் கடலுக்கு அநேக நூற்றாண்டுகளாக உரைசெய்யாமல் இருந்து வந்தது மிகக் குறைவாயிருந்தது. அதற்குத் தற்காலம் அநேகமானபெரியோர்களின் ஆராய்ச்சியைக்கொண்டும் முஹம்மதிய பலஉயர்தர கிரந்தகர்த்தாவைக்கொண்டும் ஷை ஒலியுல்லா அவர்களின் ஜீவிய சத்திரமும் அத்துடன் தாற்பரியஉரையும் எழுதுவித்து உயர்ந்த கிளேஸ் காயிதத்தில் முத்துப்போன்ற அட்சரத்தில் சுத்தமாகவும் வெகு நைசாகவும் அச்சிட்டு உயர்ந்தபைண்டுடன் வெளியாக்கப்பட்டிருக்கின்றது,

கிளேஸ் கலிகோ பைண்டு ரூபா 1 8 0

பெற்றுக்கொள்ளுமிடம்:—

எம். எ. ஷாஹுல். ஹமீது அண்டு சன்ஸ்,
ஹமீதிய்யா பில்டிங்க்ஸ் நெ. 20, ஹைரோட்,
திருவல்லிக்கேணி, மதறாஸ்

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# மெய்ஞ்ஞான மனதலங்காரப் புகழ்ச்சி

இது மிகவும் சிறந்த ஓர் ஞான நூல். மெய்ஞ்ஞான அருள்நிறைந்த ஓர் வித்வானால் பாடப்பட்டது. இதற்கு பிரக்யாதிபெற்ற மஹாவித்வான்களாலும் மேன்மை தங்கிய ஆலிம்களாலும் பல சாற்றுக்கவிகள் கூறப்பட்டிருக்கின்றன. இதில் பலவகை துதிகளும், பதிகங்களும், சிந்துகளும், இன்சானே ஹற்புகளால் உருவெடுத்த கோலப்படமும் பல மெட்டுகளில் மெய்ஞ்ஞான கீர்த்தனங்களும் நிறைந்திருக்கின்றன. அவைகளாவன,

கடவுள்வாழ்த்து, பீடிகை
ஹக்தஆலாவின் துதி
றஸூலுல்லாவின் துதி
கிலுறுநபியின் துதி
முஹிதீன்றலி, துதி
காஜாதுருபொலியின் துதி
ஷேய்கு காஜா முயீனுத்தீன் றலி துதி
றஹ்மான் பதிகம்
சோதிமணிப் பதிகம்
மஹ்பூபுப் பதிகம்
மனோமணிப் பதிகம்
மௌனமணிவெண்பா
மெய்ஞ்ஞான பஞ்சரத்தினம்
மெய்ஞ்ஞான நவரத்தினம்
மெய்ஞ்ஞான உபதேஸம்
மெய்ஞ்ஞான ஆநந்தக்களிப்பு
மன்ஸான் ஹர்பால் உருவெடுத்த கோலப்படம்
மெய்ஞ்ஞானபள்ளிச்சிந்து
மெய்ஞ்ஞானபாம்பாட்டிச்சிந்து
மெய்ஞ்ஞானநொண்டிச்சிந்து
மெய்ஞ்ஞானதெம்மாங்கு
மெய்ஞ்ஞானநெற்குத்தும் றத்தனமணிகும்மி
மெய்ஞ்ஞானதங்கப்பாட்டு
மெய்ஞ்ஞானமயில்பாட்டு
மெய்ஞ்ஞானசிந்து
மனதலங்காரகுறவஞ்சி
மனதலங்காரகும்மிச்சிந்து
மனதலங்காரமதிவிதிசிந்து
எந்நாட்கண்ணி
எக்காலக்கண்ணி
மெய்ஞ்ஞானதவநிலை
மெய்ஞ்ஞானசங்கீதகீர்த்தனைகள்

அடங்கியிருக்கின்றன.

---

இது கிளேஸ் காகிதத்தில் 20-வருடத்திற்கு முன் அச்சிட்டளிதான் புஸ்தகம். இதன் கிரயம். ரூ. 1—0—0.

போஸ்டேஜ் வேறு.

பெற்றுக்கொள்ளுமிடம்:—

எம். எ. ஷாஹுல் ஹமீது அண்ட்சன்ஸ்,
ஹமீதிய்யா பில்டிங்க்ஸ், நெ. 20, ஹைரோட்,
திருவல்லிக்கேணி, மதறாஸ்,

7264